வருடாந்த செயலாற்றல் அறிக்கை – 2011



පර්යේෂණ මගින් නව තාක්ෂණය බිහිකොට,



ගුණාත්මයෙන් යුත් උසස් බීජවහිනිපදවා,



ගොවි ජනතාව වෙත තාක්ෂණ ප්‍රතිඵල ලබාදී,



රට සමෘද්ධිමත් කිරීමට දායක වන වගයි

விவசாயத் திணைக்களம், பேராதனை, இலங்கை

வருடாந்த செயலாற்றல்

அறிக்கை – 2011

விவசாயத் திணைக்களம்

பேராதனை

இலங்கை

பதிப்பு

விவசாயத் திணைக்களம்

பேராதனை
இலங்கை
2011

இந் வருடாந்த செயலாற்றல் அறிக்கை இலங்கை, பேராதனை, விவசாயத் திணைக்களத்தின் முன்னேற்றக் கண்காணிப்பு, மதீப்பீட்டு அலகினால் ஆங்கிலத்தில் தொகுத்து எழுதி, தமிழாக்கம் செய்யப்பட்டு, விரிவாக்கப் பயிற்சிப்பிரிவினால் கணினியில் வடிவமைத்து, எண்மான (டிஜிடல்) முறையில் அச்சிடப்பட்டது.

சிறிய பந்திகளை விமர்சிக்கவும், மதீப்பீடு செய்யவும், மேற்கோள் காட்டுவதையும் தவிர ஏனைய உரிமைகள் யாவும் ஆக்கியோருடையதே. விவசாயப் பணிப்பாளர் நாயகத்திடம் முன் அனுமதியின்றி இவ் அறிக்கையின் எப்பகுதியையும் மீள் பிரசுரிக்கவோ, அல்லது நிழற்படப் பிரதியெடுக்கவோ அல்லது இலத்திரனியல் முறையாக சேமிக்கவோ கூடாது. வர்த்தக நோக்கமற்ற விடயங்களுக்கான அனுமதி சரியான காரணமின்றி நிராகரிக்கப்படமாட்டது. இலங்கை விவசாயத் திணைக்களம் வர்த்தக நோக்கமற்ற விடயங்களுக்கு இவ்அறிக்கையைப் பயன்படுத்துவதற்குக் கட்டணம் அறவிடுவதில்லை. விவசாய ஆராய்ச்சிக்கும், அபிவிருத்திக்கும் எவ்விதமான பாதிப்பையும் ஏற்படுத்தாது என நாம் நம்புகின்றோம்.

தூர நோக்கு

தேசத்தின் சுபீட்சத்துக்காக விவசாயத்தில் உன்னத நிலையை அடைதல்

பணிக்கூற்று

மேம்படுத்தப்பட்ட நவீன தொழில்நுட்பத்தினை அபிவிருத்தி செய்து பரவலாக்குவது தொடர்பான சேவைகளை விவசாயிகளை முன்நிலைப்படுத்தி அதன் சகல பங்குதாரர்களுக்கும் பெற்றுக் கொடுப்பதன் மூலம் தேசத்தின் உணவுப் பாதுகாப்பையும் போஷணைப் பாதுகாப்பையும் உத்தரவாதப்படுத்திய நிலைபேறானதும் சமநிலையானதுமான விவசாய அபிவிருத்தியை எய்துதல்.

பணிப்பாளர் சபை

திரு.கே.ஜீ.சிறியாபால (விவசாயப் பணிப்பாளர் நாயகம்)

திரு.பி.கே.கே.ஆர்.பெரேரா (மேலதிக விவசாயப் பணிப்பாளர், அபிவிருத்தி)

டாக்டர்.ஈ.எம்.தசநாயக்க (மேலதிக விவசாயப் பணிப்பாளர், ஆராய்ச்சி)

திருமதி.எச்.பி.டி.எம்.சரத்சந்ர (மேலதிக விவசாயப் பணிப்பாளர், நிர்வாகம்)

டாக்டர்.டி.எம்.என்.திசாநாயக்க

திரு.கே.வி. வகுன்தெனிய

திரு.டப்ளிவ்.ஜீ.எம்.ஜீ.தயாவன்ச

டாக்டர் ரொஹான் விஜேகோன்

திரு. ரி.எச்.சீ.எஸ்.பெரேரா

டாக்டர்.டப்ளிவ்.எம்.ஏ.டி.பீ.விக்ரமசிங்ஹ

திரு.காமினி த சில்வா

டாக்டர்.டப்ளிவ்.எம்.டப்ளிவ்.வீரகோன்

டாக்டர்.டப்ளிவ்.எம்.சித்ரால்

டாக்டர்.எச்.எம்.எஸ்.ஹீன்கெந்த

பொறியியலாளர்.எம்.எச்.எம்.ஏ.பண்டார

திரு.கே.யு.ரணவக்க

திரு.ஆர்.பி.பிரேமரத்ன

ஆலோசகர்

பீ.கே.கே.ஆர்.பெரேரா

ஒருங்கிணைப்பாளர்

பி.சீ பீரிஸ்

சரிபார்த்தவர்

ஆர்.சிவநேசன்

பக்க வடிவமைப்பு

டி.எஸ் பாரிஸா

மொழி பெயர்ப்பாளர்கள்

எஸ். சிவநேசன்

குமுதினி சந்திரகாந்தன்

சுகந்தனி செந்தில்குமரன்

எம்.ஐ.எம்.றபீக்

எம்.ரவிச்சந்திரன்

எஸ்.ரினூஸ்

சுபாஜினி சஞ்ஜீவன்

சீ.பீ. சத்தியமூர்த்தி

எம்.எப்.எம்.ரிஸ்வான்

உடையார்

கே.சிவகுமார்

யு.முரளிதரன்

ரி.செந்தூரன்

சிபானி

எம்.ரம்சி

ஜீ.நர்மநாதன்

Consultant

P.K.K.R.Perera

Coordinator

P.C.Peris

Editor

R.Sivaneshan

Type Setting

T.S.Farisa

Translators

S.Sivaneshan

Kumuthini Chandrakanthan

Suganthini Senthilkumaran

M.I.M.Rafeek

M.Ravichandran

S.Rinoos

Subajini Sanjeepan

C.P.Sathiyamoorthy

M.F.M.Riswan

Udayar

K.Sivakumar

U.Muralitharan

T.Senthuran

Sifani

S.Ramzi

G.Narmanathan

பொருளடக்கம்

1. வானிலை அறிக்கை 1

2.1 மறுவயற்ப்பயிர் ஆய்வு மற்றும் அபிவிருத்தி நிறுவனம் (FCRDI), மகாஇலுப்பள்ளம 15

2.1.1 தானியப்பயிர் மற்றும் எண்ணெய் வித்துப் பயிர் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம் (GLORDC), அங்குனுகொலபலஸ்ஸ 33

2.1.2 பிராந்திய விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம் (RARDC), அரலகன்வில 41

2.1.3 பிராந்திய விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் (RARDC), கிளிநொச்சி 48

2.2 பூங்கனியியல் பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம் (HORDI), கன்னொறுவை. 55

2.2.1 தாவர வைரஸ் சுட்டியிடல் நிலையம் (PVIC), ஹோமாகம 90

2.2.2. பழப்பயிர்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் (FCRDC), ஹொரணை 98

2.2.3 உணவு ஆராய்ச்சி பிரிவு (FRU), கண்ணொறுவை 113

2.2.4 பிராந்திய விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம் (RARDC), பண்டாரவெல 117

2.2.5 பிராந்திய விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம் (RARDC), மாக்காந்துறை 125

2.2.6 விவசாய ஆராய்ச்சி நிலையம் (ARS), சீதாஎலிய 130

2.2.7 விவசாய ஆராய்ச்சி நிலையம் (ARS), தெலிஜ்ஜவில 136

2.2.8 விவசாய ஆராய்ச்சி நிலையம் (ARS), கிராந்துருகோட்டை 140

2.2.9 பூங்கனியியல் ஆராய்ச்சிப் பகுதி (HRU), கன்னொறுவை 143

2.3 நெல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம் (RRDI), பத்தலகொட 151

2.3.1 பிராந்திய விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம் (RARDC), போம்புவளை 171

3.1 விதை அத்தாட்சிப்படுத்தல் பயிர்ப் பாதுகாப்பு நிலையம் (SCPPC), கன்னொறுவை 177

3.1.1 விதை அத்தாட்சிப்படுத்தல் சேவை (SCS), கன்னொறுவை 183

3.1.2 தாவரப் பாதுகாப்புச் சேவை (PPS), கன்னொறுவை 196

3.1.3 தேசிய தாவரத் தடுப்புக்காப்பு சேவை (NPQS), கட்டுநாயக்க 201

3.1.4 பீடைநாசினிகள் பதிவாளர் அலுவலகம் (ROP), பேராதனை 208

3.1.5 தாவரப் பிறப்புரிமை மூல வள நிலையம் (PGRC), கன்னொறுவை 222

3.2 விதைகள் மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி நிலையம் (SPMDC), பேராதனை 230

3.3 சமூக பொருளாதாரத் திட்டமிடல் நிலையம் (SEPC), பேராதனை 248

3.4 முன்னேற்றக் கண்காணிப்பு மதிப்பீட்டுப் பிரிவு (PMEU), பேராதனை 253

3.5 இயற்கைவள முகாமைத்துவ நிலையம் (NRMC) பேராதனை 261

3.6. விரிவாக்கல் பயிற்சி நிலையம் (ETC), பேராதனை 271

4.1 நிருவாகப் பிரிவு – பேராதனை 287

4.2 பொறியியற் பிரிவு – பேராதனை 295

4.2.1 பண்ணை இயந்திரமயமாக்கல் ஆராய்ச்சி நிலையம் (FMRC), மகாஇலுப்பள்ளம 299

4.3 நிதிப் பிரிவு, பேராதனை 304

5.வெளியீடுகளும், வெளிப்படுத்தல்களும் 308

6 விவசாயத் திணைக்கள சிரேட அலுவலர்கள் 317

7 தொழில்நுட்ப அலுவலர்களின் தகைமைகள் 337

முன்னுரை

ஆறு தொழில்நுட்பப் பிரிவுகளினாலும், மூன்று உதவி வழங்கும் பிரிவுகளினாலும் அமுல் செய்யப்பட்ட திட்டங்களின் ஊடாக 2011 இன் போது இலங்கையின் உணவுத் துறைக்கு விவசாயத் திணைக்களத்தின் அர்ப்பணிப்புகள் யாவும் தொகுக்கப்பட்டு, முக்கிய அம்சங்கள் யாவும் இவ்வருடாந்த செயலாற்றல் அறிக்கையில் தரப்பட்டுள்ளன.

நெல், ஏனைய வயற் பயிர்கள், பழங்கள், மரக்கறிகள், அலங்காரத் தாவரங்கள் என்பன தொடர்பான ஆராய்ச்சி, அபிவிருத்தித் திட்டங்களில் தேசத்தின் சௌபாக்கியத்திற்காக விவசாயத்தில் அதிமேன்மையை அடைதல் என்னும் விவசாயத் திணைக்களத்தின் தொலை இலட்சியம் உள்ளடக்கப்பட்டிருந்ததோடு, உணவு விவசாயத் துறையில் உற்பத்தியையும், உற்பத்தித் திறனையும் அதிகரிப்பதற்காக 2011 இல் இவை அமுல் செய்யப்பட்டன. நெல்லையும், ஏனைய பயிர்களையும் செய்கைபண்ணுவதில் விவசாயிகளிற்குப் பெரும் பிரச்சினைகளாக விளங்கிய தரமான விதை, நடுகைப் பொருட்கள் கிடைக்காமை, வரட்சி, வெள்ளம், உவர்த்தன்மை, பீடைகள், நோய்கள் போன்ற பல விடயங்களிற்கான தீர்வுகள் போதியளவில் அடையப்பட்டிருந்தன. இவை தொடர்பான விபரமான விடயங்களும், ஏனைய சில முக்கிய ஆராய்ச்சி, அபிவிருத்தி நடவடிக்கைகளும் இந்த அறிக்கையில் காட்டப்பட்டுள்ளன.

உணவுப் பயிர்களின் உற்பத்தியையும், உற்பத்தித் திறனையும் மேம்படுத்துவதற்கான வழமையான நடவடிக்கைகளிற்கு மேலதிகமாக தரமான விதை, நடுகைப் பொருட்களை அதிகளவில் வழங்குவதற்கும், இலகுவில் பழுதடையக் கூடிய விளைபொருட்கள் அறுவடைக்குப் பின்னர் இழக்கப்படுவதைக் குறைப்பதற்கும் பல்வேறு நடவடிக்கைகளை விவசாயத் திணைக்களம் மேற்கொண்டது.

இவ்வருடத்தின் போது அரிசியில் நாம் தன்னிறைவை அடையக் கூடியதாக இருந்ததோடு, அரிசியின் தரவியல்புகளை அதிகரிப்பதற்கும், இறக்குமதியைக் கட்டுப்படுத்தும் நோக்கில் ஏனைய உணவுப் பொருட்களின் உற்பத்தியை அதிகரிப்பதற்கும் ஊக்கத்துடன் பணியாற்றினோம். விவசாயத் திணைக்களம் 3$^{வது}$ பருவப் பயிராக (இடைப்போகப் பயிர்) பாசிப்பயறுச் செய்கையை ஊக்குவித்ததுடன் இதன் போது சுமார் 7000 ஹெக்டயர் நிலப்பரப்பில் செய்கைபண்ணப்பட்டு, 4300 தொன் விளைச்சல் பெறப்பட்டது. தொடர்ச்சியாக நான்காவது வருடமாக ''தேசத்திற்கு மகுடம்'' தேசிய கண்காட்சியின் போது விவசாயத் திணைக்களத்தின் கண்காட்சிப் பிரதேசத்திற்கு இவ்வருடமும் முதலிடம் கிடைத்தமை இங்கு முக்கியமாக வலியுறுத்திக் கூறப்பட வேண்டியதொரு அம்சமாகும். விவசாயத் திணைக்களத்தின் இணையத்தளத்திற்கு தகவல் தொடர்பாடற் தொழில்நுட்பத்தில் விவசாயத்திற்கான 2011 ஈ - உலக (e-world) சர்வதேச விருது, ''விக்கிகொவியா'' இணையத் தளத்திற்கு ஐக்கிய நாடுகளுடன் ஒருங்கிணைக்கப்பட்ட டபிள்யுஎஸ்ஏ 2011 சர்வதேச விருது ஆகிய இரண்டு சர்வதேச விருதுகளும் பெறப்பட்டதோடு, இது விவசாயத் திணைக்களத்தின் தகவற் தொழில்நுட்ப நியமங்களிற்கான சான்றாக அமைகின்றது. இலங்கை விவசாயச் சமூகத்திற்கு ஒரே கூரையின் கீழ் அனைத்து சேவைகளையும் வழங்கக் கூடியவாறு நாடெங்கிலும் ஒன்பது விவசாயச் சேவை நிலையங்கள் (''குருசி சேவா பியச'') ஸ்தாபிக்கப்பட்டதன் மூலம் ஆராய்ச்சி – விரிவாக்கம் - விவசாயிகள் - இணைப்பு ஊக்குவிக்கப்பட்டமை இவ்வாண்டின் மிக முக்கியமான குறிப்பிட்டுச் சொல்ல வேண்டியதொரு அம்சமாகும்.

விவசாயத் திணைக்களம் தொடர்ந்தும் வெற்றிகரமாக இயங்குவதோடு, அதன் சாதனைகளைப் படைக்கும் பாரம்பரியத்தைத் தொடர்ந்தும் பேணும் என நான் நம்புகின்றேன். விவசாய உற்பத்தித் திறனை ஊக்குவித்து, அதனூடாக எமது விவசாயச் சமூகத்தின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட வெற்றிகளை அடைவதற்கும், இப்பிரசுரத்தை முழுமையாக்கவும் அலுவலர்களின் அயராத முயற்சியையும் அவர்களது ஒற்றுமையான முயற்சிகளையும் பாராட்டுகின்றேன்.

கே.ஜீ.சிறியாபால

விவசாயப்பணிப்பாளர் நாயகம்

1. வானிலை அறிக்கை

இலங்கையின் பல்வேறு விவசாயச் சூழலியல் பிராந்தியங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் 2010/2011 பெரும்போகத்தின் (செப்ரெம்பர் – பெப்ரவரி) போது 13 விவசாய வானியல் அவதானிப்பு நிலையங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட வானியல் தரவுகள் இவ்வறிக்கை யில் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன. இந்த அறிக்கை விவசாயத் திணைக்களத்தின் இயற்கை வள முகாமைத்துவ நிலையத்தினால் தயாரிக்கப்பட்டதொன்றாகும்.

இரண்டு போகங்களினதும் மொத்தப் பருவ கால மழை வீழ்ச்சி அட்டவணை இல: 1.1 இல் தரப்பட்டுள்ளது. 13 விவசாய வானியல் அவதானிப்பு நிலையங்களிலிருந்தும் மாதாந்த மழை வீழ்ச்சி, பத்து வருட சராசரி பெறுமானம் அட்டவணை இல: 1.2, 1.3 இலும் முறையே காண்பிக்கப்பட்டுள்ளன. ஏனைய முக்கியமான விவசாய வானியல் அளவீடுகளான அழுத்தஆவி ஆவியுயிர்ப்பு (திறந்த பாத்திர ஆவியுயிர்ப்பி லிருந்து மதிப்பிடப்பட்டது) வெப்பநிலை, சார்ீர ப்பதன், சூரியக் கதிர்ப்பு மணித்தியாலங்கள், காற்றின் வேகம் ஆகியவற்றிற்குரிய மாதாந்த சராசரிப் பெறுமானங்கள் முறையே இலக்கம் 1.4, 1.5, 1.6, 1.7, 1.8 ஆகிய அட்டவணைகளில் தரப்பட்டுள்ளன.

தாழ்நாட்டு ஈர வலயம்

போம்புவெல (WL 1b)

2010/2011 பெரும்போகத்தின் போது இந்த வலயத்துக்கு எதிர்பாக்கப்பட்ட அளவில் மழை வீழ்ச்சி கிட்டியது. அது அங்கு நீண்ட கால சராசரியை விடவும் 20% மான அதிகரிப்பாகும். எவ்வாறாயினும், ஒக்டோபர் மாதத்தில் கிடை க்கப் பெற்ற மழைவீழ்ச்சி எதிர்பாக்கப்பட்ட அளவை விடவும் கணிசமான அளவில் குறை ந்துள்ளதுடன் அதன் பின்னர் மாதாந்த மொத்த மழைவீச்சி 100% அதிகரிப்புடன் பதியப்பட்டு அந்தக் குறைபாடு நிரப்பப்பட்டது. மாதாந்தம் சாதகமான விருத்தியொன்றுடன் பொதுவான போக ரீதியான மழைவீழ்ச்சியை விடவும் சுமார் 5% அதிகரித்த 2011 சிறு போக மழை வீழ்ச்சி விருத்தியடைந்த விதம் அதன் வழக்க மான வீதத்திற்கு அண்மித்தது. இது பயிர்களின் நீர்த்தேவையைப் பூர்த்தி செய்யக் கூடியதாக இருந்தது. எவ்வாறாயினும் வலயத்தினுள் குறை வான தென் மேற்குப் பருவப் பெயர்ச்சிக் காற்று நிலவியதன் காரணமாக ஜுன் மாதத்தில் கிடைக்கப் பெற்ற மழைவீழ்ச்சி எதிர்பாக்கப்பட்ட மழை வீழ்ச்சியைவிடவும் கணிசமான அளவில் குறைந்தது. இந்த நிலைமை இந்த வலயத்தில் ஆற்று வெள்ளத்திற்கு உட்படும் மட்டமான பிரதேசங்களில் உள்ள காணிகளில் இருந்த பயிர்கள் மீது சாதகமானதாக இருந்திருக்கலாம். அவ்வாறில்லாவிடில் இந்தப் பிரதேசம் இந்த மாதத்தில் பொதுவாக நிலவும் காலநிலை நிலைமைகளின் கீழ் ஆற்று வெள்ளத்திற்கு உட்படும்.

மத்திய நாட்டு ஈர வலயம்

பேராதெனிய (WM 2b)

2010/2011 பெரும் போகத்தின் போது இந்த வலயத்துக்கு கிடைக்கப் பெற்ற மொத்த மழைவீழ்ச்சி 1951 மி.மீ. அளவாக இருந்ததுடன் அது நீண்ட காலச் சராசரியுடன் ஒப்பிடும் போது 100% க்கு மேலான அதிகரிப்பாகும். இந்த அதிகரிப்புக்குப் பிரதானமான காரணம் நவம்பர் தொடக்கம் பெப்ரவரி வரையிலான காலப் பகுதியில் வழமையான விதத்தில் கிடைக்கப பெற்ற மழையாகும். வழமையான வரண்ட ஜனவரி மற்றும் பெப்ரவரி ஆகிய மாதங்களில் மழைவீழ்ச்சியின் அதிகரிப்பு 300% யும் விஞ்சியதுடன் அக்காரணத்தினால் சில இடங்களில் விபத்துகள் ஏற்பட்டன. விசேடமாக பழப்பயிர்களில் பூக்கள் பூக்கும் போது சாதக மான நிலைமைகள் ஏற்படுவதைத் தவிர்த்து

இந்த அசா தாரண காலநிலை நிலைமைகள் இந்த வலயத்தின் பயிச்செய்கை மீது பாதக மான தாக்கத்தை உண்டுபண்ணியது. அவ்வா றாயினும், 2011 சிறுபோகத்தின் போது இந்த வலயத்துக்குக் கிடைத்த மொத்த மழைவீழ்ச்சி 50% விடவும் குறைவாக இருந்தது. வலயத்தில் நிலவிய தென்மேற்குப் பருவப் பெயர்ச்சி நிலை மைகள் நலிவுற்றதன் காரணமாக மே தொட க்கம் ஜூலை வரையிலான காலப்பகுதியில் எதிர்பார்க்கப்பட்ட மழைவீழ்ச்சி கிடைக்காமல் போனமை இதற்கான காரணமாகும். ஜூன் மற்றும் ஜூலை ஆகிய 02 மாதங்களில் மொத்த மழைவீச்சி வளிமண்டல ஆவியுயிர்ப்பு தேவைப்பாட்டை பூர்த்தி செய்யக் கூடிய அளவிலாவது போதுமானதாக இல்லாதிரு ந்ததுடன் அது இந்த மாதத்தினுள் இந்த வலய த்தில் அனுபவிக்கப்பட வேண்டிய அரிதான விவசாயக் காலநிலை நிகழ்வொன்றாகும். எவ்வாறாயினும் பிரதேசத்தில் வறண்ட காலநிலை நிலைமைகள் இருந்த போதிலும் விசேடமாக உஷ்ண நிலை உட்பட்டதாக பிரதேசத்திலிருந்து பதியப்பட்ட எனைய விவ சாய காலநிலை அளவீடுகள் வரையறுக்கப் பட்ட உயர் பெறுமானங்கள் வரை செல்லாமல் பயிர்களின் வளர்ச்சிக்கு சாதமான மட்டத்தில் நிலவியது.

மலைநாட்டு ஈரவலயம்

சீத்தா எலிய (WU_3)

2010 / 2011 பெரும் போகத்தின் போது இந்த வலயத்துக்குக் கிடைத்த மொத்த மழைவீழ்ச்சி சுமார் 1469 மி.மீ. ஆக இருந்ததுடன் அது நீண்ட கால சராசரியுடன் ஒப்பிடும் போது 37% வீதத்துக்கும் கூடுதலான அதிகரிப்பாகும். இதற்கு பிரதானமான காரணமானது நவம்பர் தொடக்கம் பெப்ரவரி வரையிலான காலப் பகுதியில் மத்திய மலைப்பகுதியின் சராசரி அளவை விட அதிக மழை கிடைக்கப் பெற்றமையாகும். ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் மொத்த மழைவீழ்ச்சியின் அதிகரிப்பு முறையே 100%, 200% ஆக இருந்தது. போகத்தின் பிற்பகுதியில் நிலவிய கூடுதலான மழையைக் கொண்ட காலநிலை நிலைமை இவ் வலயத்தில் செய்கைபண்ண ப்படும் மலைநாட்டு மரக்கறி செய்கையில் அளவு மற்றும் தர மட்டத்தில் தாக்கத்தை ஏற்பட்டிருக்கலாம். போகத்தில் உச்சக் கட்ட வெப்பநிலை 14^0c –23^0c ஆகக் காணப்பட்டது.

2011 சிறு போகத்தின் போது இந்த வலயத்தின் மொத்த மழைவீழ்ச்சி 400 மி.மீ. ஆக இருந்ததுடன் அது நீண்ட கால சராசரியை விடவும் சுமார் 40% குறைவானதாகும். இதற்கு பிரதானமான காரணம் வலயத்தில் தாக்கம் செலுத்திய தென்மேற்குப் பருவப் பெயர்ச்சி நிலைமைகள் குறைந்ததனால் மே மாதம் தொடக்கம் ஆகஸ்ட் வரையிலான காலப் பகுதியில் சாதாரண அளவை விடவும் குறைவான மழை கிடைத்தமையாகும். ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் அழுத்தஆவி ஆவியுயிர்ப்பு, மொத்த மழைவீழச்சியை விஞ்சியதாக இருந்ததுடன் ஆகஸ்ட் மாத்தில் கிடைத்த மழை வீழ்ச்சி அந்த வளிமண்டலத் தேவைப்பாட்டை குறைந்த அளவில் நிறைவு செய்யக் கூடியதாக அமைந்தது. மத்திய நாட்டு ஈரவலயத்தில் போன்றே இவ் வலயத்திலும் மிகவும் அரிதாக அவதானிக்கக் கூடிய விவசாய காலநிலை நிகழ்வொன்றாகும். இந்த வலய த்தில் உச்ச வெப்பநிலை 16^0c – 23^0c இற்கு இடைப்பட்டதாக காணப்பட்டதுடன் ஆகக் குறைந்த வெப்பநிலை 8^0 c – 17^0 c அளவில் நிலவியது. மொத்த அழுத்த ஆவிஆவியுயிர்ப்பு ஏப்ரல் மாதம் தவிர போகத்தின் ஒவ்வொரு மாதத்திலும் சமமான மழைவீச்சியை விடவும் கூடுதலாக இருந்தது. ஆகையால் மானாவா ரியாக பயிரிடப்பட்ட பயிர்கள் உண்மையாகவே மண்ணில் ஈரத்தன்மை பற்றிய பாதகமான நிலைமைகளுக்கு உட்பட்டிருக்கலாம் அதே போன்று வலயத்தின் சிறிய குளங்களில் தங்கியுள்ள நீர் போகம் பூராகவும் உரித்து டைய மொத்தப் பிரதேசத்துக்கு நீரை வழங்கு தவற்கு போதியதாக இல்லாதிருக்காலம். ஆகையால் இந்தப் போகத்தில் சில இடங்க ளில் செய்யப்பட்ட நெற்செய்கைக்கு வறட்சியி னால் பாதிப்பு ஏற்படுதல் அல்லது பயிர் முழு

மையாக நாசமாகிப் போகின்றமை சுலபமான நிலைமை யொன்றாக இருந்திருக்கலாம்.

தாழ்நாட்டு இடை வலயம்

பத்தலகொட ($IL1_a$)

சாதாகமான மாதாந்தப் பரம்பல் ஒன்றுடன் 2010/2011 பெரும்போகத்தில் மொத்த மழை வீழ்ச்சி அதன் நீண்டகாலச் சராசரியுடன் ஒப்பிடும் போது சுமார் 68% அளவிலான அதிகரிப்பைக் காண்பித்ததுடன் போகம் பூராகவும் சாத்தியமான ஆவிஆவியுயிர்ப்பை விஞ்சியது. அவ்வாறு இருந்த போதிலும், டிசம்பர் தொடக்கம் பெப்ரவரி வரையிலான காலப்பகுதியில் வானம் மேகத்தினால் நிறைந்து இருந்ததனால் இந்த வலயத்தில் செய்யப்பட்ட நெற்செய்கையின் தானிய விதை நிரம்பல் (Grain filling) மீது தாக்கம் செலுத்தியது.

2011 சிறுபோகத்தின் போது இந்த வலயத்திற்கு சராசரி அளவுக்குக் கிட்டிய 697 மி.மீ. மொத்த மழைவீழ்ச்சி கிடைத்தது. ஏப்ரல் மாதத்தில் கிடைக்கப் பெற்ற உயர் மழைவீழ்ச்சி இந்த நிலைக்கு பிரதானமான காரணமாய் அமை ந்தது. ஜூன் மற்றும் ஜலை மாதங்களின் இந்த வலயத்திற்கு கிடைத்த பலவீனமான தென்மே ற்குப் பருவப் பெயர்ச்சிக் காற்று காரணமாக கிடைத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்பட்ட அளவை விடவும் குறைவாக இருந்தது.

தாழ்நாட்டு இடை வலயம்

மொனராகலை ($IL1_c$)

2010/2011 பெரும்போகத்தில் மொத்த மழை வீழ்ச்சி அதன் நீண்டகாலச் சராசரியை விடவும் 22% ஆக அதிகரித்தது. எவ்வாறாயினும், ஒக்டோபர் மாதத்தில் கிடைத்த மழைவீழ்ச்சி எதிர்பாக்கப்பட்ட அளவை விடவும் 40% தினால் குறைந்ததுடன் அதன் காரணமாக போகம் தாமதமாகியது. எனினும் நவம்பர் மாதத்தில் சிறந்த மழைவீழ்ச்சி கிடைத்ததன் காரணமாக அந்தக் குறைபாடு ஈடுசெய்யப்படதுடன் போக த்தின் செய்கை நடவடிக்கைகள் நடைபெறக் கூடியதாக இருந்தது. மானாவாரியாக பயிர்ச் செய்கைபண்ணப்படும் மேட்டுநிலப் பயிர்க ளுக்கு சாதகமான மண் ஈரழிப்பு நிலைமைகள் அழுத்தஆவி ஆவியுயிர்ப்பு போகத்தின் சகல மாதத்திலும் மழைவீழ்ச்சியை விடவும் பெருமளவு குறைந்த மட்டத்தில் நிலவியது. போகத்தில் ஏனைய விவசாயக் காலநிலை அளவுகளின் தரமும் சிறந்த பயிர் வளர்ச்சிக்கு சாதகமான மட்டத்தில் நிலவியது. தாழ்நாட்டு இடைவலையம் மற்றும் உலர் வலையத்தின் ஏனைய பிரதேசங்களில் நிலவிய தன்மையுடன் ஒப்பிடும் போது ஒப்பீட்டளவில் குறைந்த பெறுமானமுடைய இரவு நேர குறைந்த வெப்பநிலையானது தோடை, கரும்பு மற்றும் ஏனைய பழப்பயிர்கள் மீது சாதகமான நிலைமை ஒன்றை ஏற்படுத்தியது.

இந்த வலயத்தில் 2011 சிறுபோகத்தின் போது கிடைக்கப் பெற்ற மொத்த மழைவீழ்ச்சி அதன் நீண்டகாலச் சராசரியுடன் ஒப்பிடும் போது 14% மான வளர்ச்சியைக் காண்பித்தது. இந்த வளர்ச்சிக்குப் பிரதானமான காரணமாய் அமைந் தது மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களின் முதா லாவது இடைப்பருவப்பெயர்ச்சி மழை மிகவும் உயர்வாக பெறப்பட்டமையாகும். இந்த நிலை மை இந்த வலயத்தில் குளங்களின் நீர்மட்டம் மீது சாதமான தாக்கத்தை ஏற்படுத்தியிருக் கலாம். போகத்தின் எஞ்சிய பகுதிகளில் கிடை க்கப் பெற்ற மழைவீழ்ச்சி சராசரி அளவை அண்மித்தது. எவ்வாறாயினும் மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்கள் தவிர்ந்ததாக போகத்தின் ஏனைய மாதங்களில் மொத்த அழுத்த ஆவி ஆவியுயிர்ப்பு மழைவீழ்ச்சியை விடவும் அதிகமாக இருந்தது. ஆகையால் மேலதிக நீர்ப்பாசன மொன்று இல்லாமல் மேட்டு நிலப் பயிர்ச் செய்கைபண்ண இயலாமல் இருந்திரு க்கும். எவ்வாறாயினும் சிறுபோகத்தில் பயிரிடப் படும் பயிர்களின் வளர்ச்சியின் போது இந்த வலயத்திற்கு சிறந்த முறையில் பரம்பிய மழைவீழ்ச்சி கிடைப்பது அரிதாக நடைபெறுவ தொன்றாகையால் இது இந்த வலயத்தின் அசாதாரண காலநிலையொன்றாக கவனத்திற் கொள்ள முடியாது.

கிராந்துரு கோட்டை (IL2)

போகத்தின் ஒவ்வொரு மாதத்திலும் 100 மி.மீ க்கும் கூடுதலான மழைவீழ்ச்சி கிடைத்ததன் காரணமாக 2010/2011 பெரும்போகத்தில் மழைவீழ்ச்சியானது சராசரி அளவை விடவும் 33 % வீத்தினால் அதிகரித்தது. ஜனவரி மற்றும் பெப்ரவரி ஆகிய இரண்டு மாதங்களிலும் முறையே 800 மி.மீ, 350 மி.மீ. ஆகக் கிடைக்கப்பெற்ற மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்பட்ட பெறுமானத்தை விடவும் மிகவும் கூடுதாலாக இருந்தது. இந்த நிலைமை நெற்செய்கை முதிர்ச்சியடைவதற்குச் சாதகமாக அமைவதற்கு ஒளித்தொகுப்பை ஏற்படுத்தும் கதிர்வீச்சு கிடைப்பதைத் தடுத்து பின்னர் விளைச்சல் குறைவதற்கு வழிவகுத்திருக்கும்.

2011 சிறுபோகத்தில் மொத்த மழைவீழ்ச்சி 354 மி.மீ. ஆக இருந்ததுடன் நீண்டகாலச் சராசரி யுடன் ஒப்பிடும் போது 24% மான குறைவாகும். மார்ச், ஏப்ரல் மாதங்கள் தவிர்ந்த போகத்தின் ஏனைய சகல மாதங்களில் கிடைக்கப் பெற்ற மழைவீழ்ச்சி சூழலின் நீர் தேவையை விடவும் மிகவும் குறைந்துள்ளதுடன் அதன் காரணமாக மானாவாரியாக செய்கை பண்ணப்பட்ட மேட்டு நிலப் பயிர்கள் மீது மண் ஈரளிப்புத் தன்மையை குறைக்கும் பாதகமான நிலமைகள் ஏற்பட்டன. சராசரிக் காலநிலைமைகளின் கீழ் இந்த வலயத்தில் மானாவாரி சிறுபோகம் ஒன்று பொதுவாக நிலவவில்லை. அது இந்த போகத்திற்கும் பொருத்தம்.

மத்திய நாட்டு இடை வலயம்

குண்டசாலை (IM3a)

2010 / 2011 பெரும்போகத்தின் சிறந்த பரம்பல் ஒன்றுடன் நிலவிய மொத்த மழைவீழ்ச்சி அதன் நீண்டகாலச் சராசரியை விடவும் கூடுதலாக இருந்தது. இந்த வலயத்தில் பதியப்பட்ட அழுத்த ஆவிஆவியுயிர்ப்பு பெறுமதிகளின் ஊடாக இங்கு பயிரிடப்படும் பயிர்கள் மீது பாதகமான மண் ஈரழிப்பு நிலைமைகள் ஏற்படக்கூடிய இடம் இல்லாதிருந்தமை தெரிய வந்துள்ளது. எவ்வாறாயினும் நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் நிலவிய மேகங்களினால் மூடப்பட்ட வானம் ஒப்பீட்டளவில் உயர் அமுக்க நிலைமைகளும் குறைந்த உஷ்ண நிலையும் நோயாக்கிகளின் பரம்பலுக்குரிய சாதகமான சுற்றாடல் ஒன்றை ஏற்படுத்தி இருக்கும்.

மாறாக மே தொடக்கம் ஆகஸ்ட் மாதம் வரையில் மழை குறைந்ததன் காரணமாக 2011 சிறுபோகத்தில் மழைவீழ்ச்சிப் பரம்பலின் தன்மை எந்த ஒரு மானாவாரிப் பயிரையும் செய்கை பண்ணுவதற்கு சாதகமாக இருக்க வில்லை. மொத்த போக ரீதியான மழைவீழ்ச்சி 285 மி.மீ. ஆக இருந்ததுடன் அதில் 40% இற்கு கூடுதலான அளவு கிடைக்கப் பெற்றது ஏப்ரல் மாதத்திலாகும். அழுத்த ஆவிஆவியு யிர்ப்பை விட கிடைக்கப் பெற்ற மழைவீழ்ச் சியின் அதிகம் போகத்தின் மார்ச் மற்றும் ஏப்ரல் ஆகிய இரண்டு மாதங்களில் மட்டுமே ஆகும். அதன் காரணமாக மேலதிக நீர்பாசனம் இல்லாமல் வெற்றிகரமாக மேட்டு நிலப் பயிர் மானாவாரியாக பயிரிட இயலாமல் போயிருக்கலாம்.

மலைநாட்டு இடை வலயம்

பண்டாரவளை (IU3c)

மத்திய மலைநாட்டில் ஏனைய பிரிவுகளை போன்றே இந்த வலயத்திற்கும் 2010 / 2011 பெரும்போகத்தின் போது சராசரி அளவை விட அதிக மழைவீழ்ச்சி கிடைக்கப் பெற்றது. 1545 மி.மீ அளவிலான மொத்த போக ரீதியான மழைவீழ்ச்சி அதன் நீண்டகால சராசரியுடன் ஒப்பிடும் போது 52% வீத அதிகரிப்புடன் காணப்பட்டது. அழுத்தஆவி ஆவியுயிர்ப்பு போக த்தின் ஒவ்வொரு மாதத்திலும் மழைவீழ்ச்சியை விட மிகவும் குறைந்ததாக இருந்தது. இதனி டையே ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் மழைக் காலநிலையுடன் வானம் மேகங்க ளினால் நிரம்பி குறைந்த வெப்பநிலை, உயர் அமுக்கம் என்பன பயிர்நோய்கள் அதிகளவில் ஏற்படுதவற்கு அனுகூலமாக இருந்து இருக்க லாம். இந்தப் போகத்தில் உச்ச வெப்பநிலை

18^0c – 30^0c ஆகவும் ஆகக் குறைந்த வெப்ப நிலை 17^0c – 19^0c ஆகவும் காணப்பட்டது.

2011 சிறுபோகத்தில் மொத்த மழைவீழ்ச்சி அதன் நீண்டகால சராசரியை விடவும் 9% ஆகக் குறைவடைந்தது. பிரதேசத்தில் ஒடுக்கச் செயற்பாடு வளர்ச்சியடைந்ததன் காரணமாக மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் சிறந்த மழை கிடைத்தது. எனினும் மே, ஓகஸ்ட் வரை எதிர்பார்க்கப்பட்ட அளவில் மழைவீழ்ச்சி கிடைக்கவில்லை. போகத்தின் இரண்டாவது அரைப் பகுதி பூராகவும் அழுத்த ஆவிஆவியுயிர்ப்பு பெறுமானங்கள் கிடைக்கப் பெற்ற மழைவீழ்ச்சியை விடவும் பெருமளவில் குறைந்ததுடன் மேலதிக நீர்ப்பாசனம் செய்யப்படாவிட்டால் மண் ஈரழிப்பு போன்ற பாதகமான நிலைமைகள் ஏற்படக் கூடியதாக இருந்தது. எவ்வாறாயினும் இந்த காலப்பகுதியில் நிலவிய சூழலின் நீர்த் தேவை கிடைத்த மழைவீழ்ச்சியின் பிரகாரம் போகத்தின் இக்காலப்பகுதியில் நீர்பாசனத் திற்காக பிரதேசத்தில் உள்ள நீர் ஊற்றுக்களில் இருந்து நீர் கிடைப்பது சிக்கலாக இருந்து இருக்கும். போகத்தின் உயர் வெப்பநிலை 21^0c – 30^0c ஆகவும் குறைந்த வெப்பநிலை 10^0c – 19^0c ஆகவும் காணப்பட்டது.

உலர் வலயம்

மகா இலுப்பள்ளம (DL1b)

DL_{1b} விவசாய சூழல் வலயத்தின் வடமத்திய பகுதியிலேயே பெரும் போகத்தின் போது 1524 மி.மீ மொத்த மழைவீழ்ச்சி கிடைக்கப் பெற்றது அது நீண்டகால சராசரியுடன் ஒப்பிடும் போது 60% மான அதிகரிப்பாகும். ஒக்டோபர் மாதத் தில் இந்த வலயத்திற்கு ஒப்பீட்டளவில் குறை ந்த மழை கிடைத்ததுடன், நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் அந்த நிலை சமப்படுத்தப் பட்டு போகம் தாமதமாக ஆரம்பிக்க முடிந்தது. அழுத்தஆவி ஆவியுயிர்ப்பு பெறுமானம் ஒப்டோ பர் அடங்கலாக போகத்தின் ஒவ்வொரு மாதத் திலும் மழைவீழ்ச்சியை விடவும் மிகக் குறைந்த மட்டத்தில் நிலவியது. அவ்வாறாயினும் டிசம்பர் தொடக்கம் பெப்ரவரி வரையிலான காலப்ப குதியில் கூடிய மழைவீழ்ச்சியுடன் வானம் மேகங்களினால் நிரம்பிய நிலையில் காணப்ப ட்டதால் தாவர நோய்கள் அதிகம் ஏற்படுதவ ற்குக் காரணமாக அமைந்து இருக்கலாம். அதே போன்று வலயத்தில் பயிரிடப்பட்ட நெல் மற்றும் தானியப் பயிர்களின் தானிய நிரம்பல் (Grain filling) மீது தாக்கம் ஒன்றை ஏற்படுத்தி இருக்கவும் கூடும்.

2011 சிறுபோகத்தில் கிடைக்கப் பெற்ற மொத்த மழைவீழ்ச்சி 392 மி.மீ. ஆக இருந்ததுடன் அதன் நீண்டகாலச் சராசரியுடன் ஒப்பிடும் போது 14% குறைவாகக் காணப்படுகின்றது. மார்ச் மாதத்தில் பருவப் பெயர்ச்சி காலநிலை நிலைமைகள் தோன்றுவதற்கு தாமதமாகியமை இந்த குறைபாட்டுக்கு பிரதானமான காரணமாக இருக்கலாம். வழமையான விதத்தில் போகத் தினுல் அழுத்த ஆவிஆவியுயிர்ப்பை விஞ்சிய மழைவீழ்ச்சி கிடைத்தமை எப்ரல் மாத்தில் மட்டுமே ஆகும். போகத்தின் எஞ்சிய பகுதி பூராகவும் வறண்ட உஷ்ணமான காற்று நிலை மைகள் நிலவியதுடன் அது இந்த வலயத்தி ற்குரிய சாதாரண நிலைமை ஆகும்.

அங்குணகொலபெலஸ்ஸ (DL1b)

2010 / 2011 பெரும்போகத்தின் போது DL1b விவசாய சூழலியல் வலயத்தின் தென்பகுதிக்கு கிடைக்கப் பெற்ற மழைவீழ்ச்சி அதன் சராசரி மொத்த மழைவீழ்ச்சியை விட அதிகமானது. இந்த அதிகரிப்புக்கு பிரதானமாக டிசம்பர் தொடக்கம் பெப்ரவரி வரையிலான காலப்பகுதியில் சாதாரண அளவைவிடவும் அதிக மழை கிடைத்தமை ஆகும். ஒப்டோபர் மாதத்தில் கிடைக்கப் பெற்ற மழைவீழ்ச்சி 74 மி.மீ ஆக இருந்ததுடன் அது அதன் நீண்டகால சராசரியுடன் ஒப்பிடும் போது சுமார் 50% குறைவாகும். உலர் வலயத்தில் ஏனைய பகுதிகளில் நடைபெற்றது போன்றே இந்த வலயத்திற்கும் நவம்பர் மாதத்தில் சிறந்த மழை கிடைத்ததாய் பயிர்ச்செய்கைப் போகம் தாமதமாக ஆரம்பமாகியது. நவம்பர் மாதத்தில் போகம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் மொத்த

மாதாந்த அழுத்தஆவி ஆவியுயிர்ப்பு ஒவ்வொரு மாதத்திலும் கிடைத்த மழைவீழ்ச்சியை விடவும் மிகவும் குறைந்த மட்டத்தில் நிலவியது இதனால் இந்த வலயத்தில் செய்கை பண்ண ப்பட்ட குறுகிய கால மேட்டு நிலப் பயிர்கள் பாதகமான மண் ஈரளிப்பு நிலைமைகளினால் பாதிப்படையவில்லை. விசேடமாக பெப்ரவரி மாதம் அடங்கலாக போகத்தின் இறுதிப்பகு தியில் கிடைத்த அதிக மழைவீழ்ச்சியானது உலர்வலயத்தின் வடமத்திய பகுதி போன்று அதிகமாக கிடைக்கவில்லை. DL1b வலயத்தின் எஞ்சிய பகுதியுடன் ஒப்பிடும் போது இந்த வலயத்தில் அதிக பாதக நிலைமைகள் ஏற்படவில்லை.

இந்த வலயத்தில் 2011 சிறுபோகத்தில் மொத்த மழைவீழ்ச்சி 489 மி.மீ அதன் நீண்டாகால சராசரிக்கு பெருமளவில் சமமாக இருந்ததுடன் ஏப்ரல் தொடக்கம் ஆகஸ்ட் மாதங்களில் கிடைத்த மழையில் கணிசமான அளவில் பங்க ளிப்பு செய்தது. எவ்வாறாயினும் போகத்தில் எஞ்சிய மாதங்களில் அழுத்தஆவி ஆவியுயிர்ப்பு மாதாந்த மழை வீழ்ச்சியை விடவும் உயர் மட்டத்தில் நிலவியது. ஆகையால் மேலதிக நீர்ப்பாசனம் செய்யப்படாவிடில் மானாவாரியாக செய்கை பண்ணப்பட்ட மேட்டு நில பயிர்கள் அவற்றின் முதிர்ச்சி நிலையில் பாதகமான மண் ஈரழிப்பு நிலைமைக்கு உள்ளாகி இருக்கும்.

அரலகங்வில (DL2b)

உலர் வலயத்தின் கிழக்கு பகுதியில் அமைந் துள்ள இவ்வலயத்தில் சாதகமான பரம்பலுடன் சராசரி அளவை விட அதிக மழைவீழ்ச்சி கிடைத்தது. வளிமன்டலத்தில் ஆவியுயிர்ப்புத் தேவைப்பாடு போகத்தின் ஒவ்வொரு மாதத் திலும் மொத்த மழை வீழ்ச்சியை விடவும் குறைந்த மட்டத்தில் நிலவியது ஆகையால் மேட்டு நிலங்களில் செய்கைபண்ணப்பட்ட பயிர் களுக்கு பாதகமான மண் ஈரழிப்பு நிலைமை களை அதிகரிக்கக்கூடிய வாய்ப்புகள் பெருமள வில் குறைந்தன.

எவ்வாறாயினும் போகத்தின் இறுதி மூன்று மாதங்களிலும் கிடைக்கப் பெற்ற கூடுதலான மழைவீழ்ச்சி (ஒவ்வொரு மாதத்திலும் 500 மி.மீ லும் அதிகம்) காரணமாக ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு, நீர்பாசனச் சிக்கல், குறைவான சூரிய கதிர்வீச்சு உயர் நோய் பீடைத்தாக்கம் அறுவடை நடவடிக்கைகளுக்கு தடை ஏற்படுதல் போன்றவற்றால் வலயத்தின் பயிர் உற்பத்தி பாதிப்படைந்தது.

வழமை போல், இங்கு சிறுபோகத்தின் போது மழைவீழ்ச்சி பெருமளவில் அதிகரித்தது. போகம் பூராகவும் தீவிர சூரியக் கதிர்வீச்சு மற்றும் அதிவேக காற்றுடனான உயர் வெப்பநிலை நிலவியது. எவ்வாறாயினும் நாட்டின் மிக வறட்சியான பிராந்தியமாக இருப்ப தன் காரணமாக இது இந்த வலயத்தில் நிலவக்கூடிய வழமைக்கு மாற்றமான காலநிலை அல்ல.

அட்டவணை 1.1 (2010 / 2011 பெரும்போகம் , 2011 சிறுபோகத்தில் கிடைத்த மொத்த மழைவீழ்ச்சி

விவசாய வானியல் அவதான நிலையம்	விவசாயச் சூழலியல் வலயம்	2010 / 2011 பெரும்போகம் செப்டம்பர் - பெப்ரவரி	பெரும்போகத்தின் 10 வருட சராசரி (2000-2009	2011 சிறுபோகம் மார்ச் ஆகஸ்ட்	சிறுபோகத்தின் 10 வருட சராசரி 2000 - 2009
போம்புவல	WL_{1b}	1838.1	1516.5	1520.6	1454.8
பேராதனை	WM_{1b}	1951.4	963.4	595.3	928.1
சீத்தாஎலிய	WM_3	1468.8	1070.2	459.9	776.5
பத்தலகொட	IL_{1a}	1739.7	1033.8	697.1	692.3
மாக்கந்துர	IL_{1a}	1279.8	1048.5	705.5	921.4
மொனராகலை	IL_{1c}	1528.2	1250.6	665.6	582.5
கிராந்துருக் கோட்டை	IL_{2c}	2209.8	1657.6	353.6	461.0
குண்ட சாலை	IM_{1a}	1476.7	808.6	284.9	599.7
பண்டாரவலை	DL_{1a}	1545.4	1018.1	560.3	615.8
மகஇலுப்பல்லம	DL_{1b}	1524.0	956.6	337.9	392.2
அங்குகொலபெலஸ	DL_{1b}	855.2	734.2	489.4	438.6
அரலகங்வில	DL_{2b}	2390.1	1478.6	324.4	395.9
வீரவில	DL_5	914.8	772.4	236.3	317.7

அட்டவணை 1.2 மொத்த மாதாந்த மழைவீழ்ச்சி 2011(மி.மீ)

விவசாய வானியல் அவதான நிலையம்	2010				2011							
	செப்	ஒக்	நவம்	டிசம்	ஜன	பெப்	மார்ச்	ஏப்ரல்	மே	ஜூன்	ஜூலை	ஆகஸ்
போம்புவல	390.4	284.6	678.2	259.3	132.2	93.4	237.7	382.4	412.2	155.9	131.4	201.0
பேராதனை	122.8	245.9	560.9	408.9	354.7	258.2	75.7	243.7	87.5	56.1	58.2	74.1
சீத்தாஎலிய	178.0	184.8	329.9	213.0	337.0	226.1	102.5	153.9	78.5	36.6	47.2	41.2
பத்தலகொட	149.3	235.8	574.2	361.9	236.3	180.2	58.6	418.7	84.1	49.4	19.0	67.3
மாக்கந்துர	209.6	162.0	568.8	255.3	46.2	37.9	18.5	217.4	171.0	116.5	33.8	148.3
மொனராகலை	188.6	173.3	491.5	138.7	290.8	245.3	207.9	300.9	67.0	11.8	66.1	11.9
கிராந்துருக் கோட்டை	112.5	161.3	280.2	469.6	807.6	378.6	165.6	125.0	32.2	0.0	5.7	25.1
குண்ட சாலை	88.1	145.6	391.4	308.1	280.8	262.7	15.7	165.0	51.1	15.9	24.4	13.0
பண்டாரவலை	177.1	141.4	345.0	277.9	298.8	305.2	207.5	204.9	90.7	8.0	23.4	25.8
மகஇலுப்பல்லம	204.4	187.7	301.1	254.5	304.3	272.0	42.1	238.1	47.5	4.0	2.4	3.8
அங்குகொலபெலஸ	42.1	73.7	214.0	233.8	191.0	100.6	125.8	135.6	64.0	9.3	17.4	137.3
அரலகங்வில	112.2	127.6	383.0	539.1	660.8	567.4	72.2	142.7	60.3	0.0	9.4	39.8
வீரவில	38.9	40.1	230.7	276.6	235.5	93.0	69.1	61.6	0.0	2.4	0.0	103.2

அட்டவணை 1.3 மாதாந்த சராசரி மழைவீழ்ச்சி மி.மீ (2000 – 2009)

விவசாய வானியல் அவதான நிலையம்	செப்	ஒக்	நவம்	டிசம்	ஜன	பெப்	மார்ச்	ஏப்ரல்	மே	ஜூன்	ஜூலை	ஆகஸ்
போம்புவல	289.6	468.9	339.8	205.3	141.0	107.9	153.6	266.9	415.9	168.9	168.9	189.0
பேராதனை	138.8	254.0	272.5	179.7	80.7	59.2	159.0	284.1	118.0	126.3	126.3	100.6
சீத்தாஎலிய	151.5	232.6	262.9	209.9	176.4	76.7	109.1	166.5	141.9	123.6	123.6	105.9
பத்தலகொட	119.3	325.2	285.1	170.9	86.9	74.1	125.0	248.0	85.2	63.6	63.9	80.7
மாக்கந்துர	186.2	372.5	258.5	102.2	82.9	73.1	153.5	246.9	172.0	83.9	83.9	106.7
மொனராகலை	97.6	288.6	367.4	254.8	180.7	104.0	91.2	246.1	86.8	51.6	51.6	73.8
கிராந்துருக் கோட்டை	78.5	184.3	447.4	469.2	355.6	163.5	124.6	172.2	47.8	33.0	33.0	67.0
குண்ட சாலை	80.6	178.8	224.8	183.9	91.3	69.3	124.2	184.5	74.2	62.0	62.0	73.9
பண்டாரவலை	116.2	285.6	268.3	185.7	132.4	67.4	119.3	215.6	121.0	46.0	46.0	65.6
மகஇலுப்பல்லம	83.9	250.9	280.8	187.4	100.0	87.1	91.9	177.6	51.7	19.5	19.5	29.8
அங்குகொலபெலஸ	96.0	146.1	239.1	133.1	84.5	58.2	109.8	104.2	79.3	44.2	44.2	55.1
அரலகங்வில	55.3	242.7	405.6	395.7	277.7	138.5	92.5	140.3	49.0	35.5	35.5	53.4
வீரவில	45.9	158.0	279.9	157.9	95.2	58.6	80.1	120.3	46.3	16.4	16.4	39.5

அட்டவணை 1.4 : மாதாந்த அழுத்தஆவி ஆவியுயிர்ப்பு (மி.மீ) 2010/2011

விவசாய வானியல் அவதான நிலையம்	2010				2011							
	செப்	ஒக்	நவம்	டிசம்	ஜன	பெப்	மார்ச்	ஏப்ரல்	மே	ஜூன்	ஜூலை	ஆகஸ்
போம்புவல	60.0	76.9	60.0	59.5	62.0	56.0	81.8	88.8	86.8	74.4	69.4	71.9
பேராதனை	62.4	71.9	55.2	52.1	59.5	67.2	104.2	69.6	79.4	67.2	62.0	62.0
சீத்தாஎலிய	55.2	*	*	32.2	57.0	65.0	71.9	76.8	71.9	69.6	*	47.1
பத்தலகொட	74.4	76.9	62.4	52.1	59.5	65.0	96.7	79.2	99.2	93.6	96.7	94.2
மாக்கந்துர	79.2	91.8	74.4	81.8	86.8	80.6	79.4	74.4	81.8	86.4	96.8	94.2
மொனராகலை	76.8	89.3	55.2	52.1	54.6	62.7	84.3	79.2	101.7	115.2	96.7	119.0
கிராந்துருக் கோட்டை	*	84.3	*	*	*	*	81.8	91.2	106.6	*	*	*
குண்ட சாலை	67.2	74.4	55.2	52.1	52.1	65.0	91.8	81.6	96.7	91.2	91.8	79.4
பண்டாரவலை	60.0	74.4	45.6	47.1	47.1	51.5	67.0	72.0	86.8	96.0	76.9	86.8
மகஇலுப்பல்லம	74.4	74.4	45.6	37.2	37.2	60.5	74.4	76.8	99.2	103.2	*	114.1
அங்குகொலபெலஸ	110.4	119.0	79.2	69.4	81.8	78.5	104.2	105.6	124.0	122.4	121.5	111.6
அரலகங்வில	110.4	114.1	67.2	52.1	47.1	62.7	86.8	91.2	121.5	151.2	153.8	156.2
வீரவில	112.8	116.6	69.6	67.0	67.0	56.0	79.4	79.2	119.0	136.9	138.9	124.0

* - தரவுகள் கிடைக்கவில்லை

அட்டவணை 1.5 : உயர் மற்றும் இழிவு வெப்பநிலை (செ) 2010 / 2011

விவசாய வானியல் அவதான நிலையம்	2010								2011															
	செப்		ஒக்		நவம்		டிசம்		ஜன		பெப்		மார்ச்		ஏப்ரல்		மே		ஜூன்		ஜூலை		ஆகஸ்	
	உயர்	இழிவு	உயர்	இழிவு	உயர்	இழிவு	உயர்	இழிவு	உயர்	இழிவு	உயர்	இழிவு	உயர்	இழிவு	உயர்	இழிவு	உயர்	இழிவு	உயர்	இழிவு	உயர்	இழிவு	உயர்	இழிவு
போம்புவல	30.1	24.6	30.5	24.4	30.4	23.5	29.9	23.0	29.9	22.3	30.4	23.1	31.5	23.3	31.4	24.4	31.4	25.6	30.9	25.9	30.3	24.9	30.3	24.7
பேராதனை	29.4	21.1	20.6	29.5	29.5	20.3	27.5	20.0	27.2	18.9	28.8	19.7	19.5	31.4	31.4	20.3	30.6	21.7	29.3	22.1	28.6	22.0	28.6	21.6
சீத்தாஎலிய	*	13.4	19.3	12.8	19.6	12.5	18.0	*	17.7	*	19.3	*	11.7	21.0	21.0	12.0	21.4	13.5	19.5	13.5	18.5	13.5	18.8	13.5
பத்தலகொட	31.2	23.4	30.7	23.2	30.5	22.4	28.1	21.7	27.8	20.1	29.7	21.1	21.6	32.6	32.6	22.6	32.0	23.8	30.9	23.8	30.7	23.2	31.1	23.0
மாக்கந்துர	33.6	21.8	30.9	24.1	30.8	23.6	29.6	*	30.0	22.6	31.0	22.6	23.6	32.6	32.6	23.4	32.0	24.2	31.4	24.2	31.1	24.3	31.3	23.6
மொனராகலை	34.6	23.2	33.0	22.1	31.3	22.1	28.9	21.9	29.5	20.1	30.5	21.7	20.5	33.0	33.0	22.2	34.3	22.9	35.7	22.1	35.0	22.2	35.7	22.7
கிராந்துருக் கோட்டை	34.6	23.2	33.7	23.1	31.6	23.4	28.8	22.8	27.6	21.4	30.2	22.3	23.0	33.9	33.9	22.6	35.6	24.3	36.5	24.0	35.7	24.1	36.3	23.7
குண்ட சாலை	29.4	20.4	29.2	19.6	29.1	21.8	27.2	19.5	26.7	17.9	28.5	18.9	19.3	31.4	31.4	22.2	31.3	21.1	30.9	21.4	29.9	21.5	30.4	21.2
பண்டாரவலை	26.4	16.2	26.7	15.8	24.7	16.0	23.3	16.0	22.6	15.2	24.0	15.2	15.0	26.7	26.7	15.9	27.7	16.4	28.2	15.9	27.4	16.6	27.5	16.7
மகஇலுப் பல்லம	32.1	23.7	31.4	23.5	30.6	22.7	28.2	21.9	28.0	20.7	30.1	21.6	22.0	33.4	33.4	23.2	33.1	24.8	32.9	25.1	32.9	24.8	33.3	24.5
அங்குகொல பெலஸ்ஸ	32.5	24.2	33.0	24.1	31.7	23.4	30.8	22.7	30.3	21.9	30.9	22.6	23.1	32.3	32.3	23.8	33.3	25.2	33.4	25.2	33.4	25.0	32.4	24.3
அரலகங்வில	34.6	22.2	34.1	22.8	32.0	22.7	29.3	21.9	28.3	20.5	30.4	21.1	21.0	35.0	35.0	22.5	36.1	23.2	35.3	23.8	34.5	23.9	35.2	23.0
வீரவில	43.4	24.5	34.0	24.0	32.6	23.5	31.3	23.0	30.0	22.3	31.3	22.8	23.4	33.1	33.1	23.8	34.2	24.9	34.5	24.9	34.7	24.0	33.3	23.4

அட்டவணை 1.6 : சாரீரப்பதன் (%) 2010/2011

விவசாய வானியல் அவதான நிலையம்	2010								2011													
	செப்		ஒக்		நவம்		டிசம்		ஜன		பெப்		மார்ச்		ஏப்ரல்		மே		ஜூன்		ஜூலை		ஆகஸ்	
	M	E	M	E	M	E	M	E	M	E	M	E	M	E	M	E	M	E	M	E	M	E	M	E
போம்புவல	87	80	82	76	84	79	88	77	86	75	89	81	86	74	84	77	85	78	83	78	86	77	85	78
பேராதனை	82	77	81	76	90	94	86	81	87	78	87	71	83	71	84	83	87	83	87	81	88	83	90	84
சீத்தாஎலிய	91	89	85	87	85	89	93	94	91	91	82	87	81	86	82	86	87	85	91	88	95	92	90	90
பத்தலகொட	86	77	85	73	90	79	89	81	88	78	89	67	84	60	84	71	84	70	82	73	83	73	83	73
மாக்கந்துர	81	83	88	84	89	87	90	85	91	83	90	79	85	77	86	79	88	80	85	79	83	76	85	77
மொனராகலை	86	71	84	70	89	88	88	83	88	79	88	74	86	76	88	67	81	74	76	54	81	60	73	58
கிராந்துருக் கோட்டை	80	67	76	64	90	75	92	77	91	84	91	74	88	64	85	69	81	60	71	53	69	*	74	*
குண்ட சாலை	78	72	77	69	85	76	86	79	87	76	87	68	82	55	80	71	77	66	74	65	75	64	74	64
பண்டாரவலை	74	72	68	68	84	83	85	79	89	79	86	73	81	70	77	74	74	72	73	59	69	60	69	61
மகஇலுப்பல்லம	85	66	83	67	91	78	93	82	95	82	93	68	89	55	85	61	82	63	81	62	80	60	77	59
அங்குகொலபெலஸ	79	70	77	91	81	75	85	79	88	78	88	78	85	76	83	78	80	73	79	69	80	60	81	71
அரலகங்வில	71	55	69	62	83	73	87	79	91	79	88	68	83	64	82	69	73	53	61	50	80	68	65	49
வீரவில	70	62	62	62	80	74	86	78	85	76	87	74	72	71	80	71	76	71	76	63	64	51	78	68

M காலை 8.30 க்குரிய வாசிப்பு

E பிற்பகல் 15.30 க்குரிய வாசிப்பு

* - தரவுகள் கிடைக்கவில்லை

அட்டவணை 1.7 : பிரகாசமான சூரியக் கதிர்ப்பு மணித்தியாலங்கள் – 2010 / 2011

விவசாய வானியல் அவதான நிலையம்	2010				2011							
	செப்	ஒக்	நவம்	டிசம்	ஜன	பெப்	மார்ச்	ஏப்ரல்	மே	ஜூன்	ஜூலை	ஆகஸ்
போம்புவல	5.1	7.0	5.6	4.0	5.0	5.6	7.7	6.9	7.4	7.3	6.5	6.7
பேராதனை	4.2	5.3	3.6	2.0	3.5	4.5	7.0	5.3	6.8	6.1	3.6	4.4
சீத்தாஎலிய	3.3	4.6	2.7	1.1	2.5	3.5	5.0	5.1	6.5	7.6	3.6	5.1
பத்தலகொட	5.5	6.1	4.5	2.9	4.3	5.7	8.4	7.1	8.5	7.5	6.1	7.3
மாக்கந்துர	*	*	*	*	*	*	*	*	*	*	*	*
மொனராகலை	*	*	*	*	*	*	*	*	*	*	*	*
கிராந்துருக் கோட்டை	5.0	6.7	4.0	*	2.1	4.2	6.3	6.6	7.5	6.8	5.4	7.5
குண்ட சாலை	4.9	5.2	4.6	4.1	5.0	6.1	7.3	6.3	7.1	5.2	4.7	5.3
பண்டாரவலை	4.6	5.9	2.9	2.5	3.1	4.6	5.7	6.2	7.1	8.3	5.9	6.7
மகஇலுப்பல்லம	6.2	7.1	4.6	2.7	3.3	6.1	8.2	7.5	9.8	9.2	8.3	9.0
அங்குகொலபெலஸ	*	*	*	*	*	*	*	*	*	*	*	*
அரலகங்வில	7.2	7.9	5.0	2.8	3.0	5.1	8.0	7.8	9.4	9.5	8.7	9.0
வீரவில	7.0	8.3	5.4	4.9	5.4	5.6	7.3	7.2	9.1	8.6	7.2	8.1

* - தரவுகள் கிடைக்கவில்லை

அட்டவணை 1.8 : காற்றின் வேகம் மணிக்கு கிலோமீட்டர் (2010 / 2011)

விவசாய வானியல் அவதான நிலையம்	2010				2011							
	செப்	ஒக்	நவம்	டிசம்	ஜன	பெப்	மார்ச்	ஏப்ரல்	மே	ஜூன்	ஜூலை	ஆகஸ்
போம்புவல	*	4.5	3.1	2.6	2.8	3.2	3.1	3.7	4.5	4.1	3.7	3.8
பேராதனை	*	*	*	*	*	*	*	*	*	*	*	*
சீத்தாஎலிய	*	*	*	*	*	*	*	*	*	*	*	*
பத்தலகொட	5.8	6.7	3.6	4.1	4.6	4.4	4.0	3.8	6.9	8.3	8.3	8.5
மாக்கந்துர	5.5	6.3	6.2	4.1	5.2	5.3	4.0	3.9	2.9	4.3	4.2	4.6
மொனராகலை	0.9	1.0	0.9	1.5	1.8	1.8	1.2	1.1	1.4	1.5	1.6	2.8
கிராந்துருக் கோட்டை	*	*	*	*	*	*	*	*	*	*	*	*
குண்டசாலை	*	*	*	*	*	*	*	*	*	*	*	*
பண்டாரவலை	3.3	4.0	2.4	3.3	3.2	3.1	3.2	3.1	3.1	4.6	4.8	5.1
மகஇலுப்பல்லம	5.6	6.1	2.9	3.4	3.9	3.7	3.3	3.3	6.8	8.6	*	*
அங்குகொலபெலஸ	5.8	6.2	4.3	3.9	4.3	3.6	4.8	4.2	6.5	6.5	6.8	5.9
அரலகங்வில	3.7	4.5	2.3	2.4	2.9	2.5	2.3	2.3	3.0	5.8	5.6	4.7
வீரவில	6.8	6.4	2.3	2.5	2.5	2.0	2.0	2.4	5.5	7.5	7.7	7.5

* - தரவுகள் கிடைக்கவில்லை

2.1 மறுவயற்ப்பயிர் ஆய்வு மற்றும் அபிவிருத்தி நிறுவனம் (FCRDI), மகாஇலுப்பள்ளம

மகாஇலுபள்ளம, மறுவயற்பயிர்கள் ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவனமும் அது சார்ந்த நிலையங்களும் பயிர் வர்க்கங்களை விருத்தி செய்தல், இவை தொடர்பான வேறு தொழில்நுட்பங்களை விருத்தி செய்தலுடன் அது சார்ந்தவர்களுக்கு உதவுவதற்கு பரவலாக்கம் செய்தல் என்பவற்றுக்குப் பொறுப்பாகவுள்ளது. மேலும் மறுவயற் பயிர்களான சுவைச்சரக்குப்பயிர் (வெங்காயம், மிளகாய்), அவரைப்பயிர் (பயறு, கௌபீ, உழுந்து) மற்றும் எண்ணெய் பயிர் (நிலக் கடலை, சோயா அவரை, எள்ளு, சூரியகாந்தி) உபதானியப்பயிர் (சோளம், குரக்கன், இறுங்கு, மற்றும் சிறுதானியங்கள்) உள்ளடங்கலாக அதன் எல்லைக்குட்பட்ட எல்லா மறுவயற்ப யிர்களினதும் போதிய பரம்பரை சார்ந்த (Nuclear) விதைகளை உற்பத்தி செய்வதற்கும் பொறுப்பாகவுள்ளது. பிராந்திய முக்கியத்துவம் வாய்ந்த நெல், பழப்பயிர் மற்றும் மரக்கறிகள் என்பவற்றின் உற்பத்தியை அதிகரிப்பதற்கும் உதவுகிறது. FCRDI கட்டமைப்பின் பிராதன ஆராய்ச்சி நிலையம் மகாஇலுப்பள்ளமவிலும் அதனுடன் தொடர்புள்ள அவரைப்பயிர் மற்றும் எண்ணெய வித்துப்பயிர் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம் அங்குனுகொலபலஸவிலும், பிராந்திய விவசாய ஆராய்ச்சி நிலையங்கள் அரலங்கன்வில, கிளிநொச்சி, திருநெல்வேலி, வவுனியா ஆகிய இடங்களிலும் அமைந்துள்ளன.

பாதீடு

செலவுக்கான ஒதுக்கீடுகள் வேறுபட்ட செலவுத் தலைப்புகள் மற்றும் செயற்திட்டங்களின் கீழ் பெறப்பட்ட விபரம் கீழ்வரும் அட்டவணையில் 2.1.1 இல் தரப்பட்டுள்ளது (2.1.1)

செலவு விடயம்	ஒதுக்கீடு	செலவு	செலவு%
மூலதன செலவு	11,943,000	9,691,416	82
மீண்டுவரும் செலவு	27,218,300	24,348,791	90
செயற்றிட்டம்			
நாம் பயிரிடுவோம் நாட்டைக் கட்டியெழுப்புவோம்	7,375,000	6,179,871	83
சேதனப்பசளை உற்பத்தி மற்றும் பாவனைக்கு உதவுதல்	1,740,000	944,570	54
கலப்பின வர்க்கவிருத்தி, உள்ளூர் கலப்பின வர்க்கமான சம்பத்தின் விதையுற்பத்தி	625,000	565,603	90
"NARP" செயற்திட்டம்	7,353,400	5,215,501	71
மாதிரி கிராமம்	200,000	130,185	65
மொத்தம்	**564,54,700**	**47,075,937**	**83**

முன்னேற்றம்

பயிர் மேம்பாடு

சுவைச்சரக்குப் பயிர்

மிளகாய்

- உயர் விளைச்சல், தரமான பழங்கள் நோய்பீடைகளைத் தாங்கி வளரும் தன்மை அல்லது எதிர்ப்புதன்மை போன்றவற்றை மேம்படுத்தும் நோக்கத்துடன் பயிர் மேம்படு த்துகைத் திட்டம் மேற்கொள்ளப்பட்டது.
- MICH -03, MI வரணியா -01 ஆகிய இரு பச்சை மிளகாய் வர்க்கங்கள் தேசிய பயிர்ச்செய்கைக்காக விவசாயத் திணைக்க ளத்தினால் வெளியிடப்பட்டன.
- மேம்படுத்தப்பட்ட மிளகாய் வர்க்கங்களான PC - 01 (மட்டக்களப்பு மாவட்டத்தில் பாரம் பரியமாக செய்கைபண்ணும் மிளகாய் பயிரி லிருந்து தேர்வு செய்யப்பட்டது.) மற்றும் ICPN தேர்வு – 18 - 07 (ICPN – AVRDC மிளகாய்ப்பயிரில் இருந்து தேர்வு செய்யப் பட்டது) என்பன தேசிய ஒருங்கிணைக்கப் பட்ட வர்க்கப் பரிசோதனைக்காக பிரேரிக்க ப்பட்டன.
- மிளகாயில் பன்னிரெண்டு பெற்றோரு க்குரிய உள்முக கலப்புப் பேதங்கள் அவற்றின் விளைவு, மற்றும் பயிராக்க வியல் சிறப்புக்களைக் கருத்தில் கொண்டு கலப்புப் பிறப்பாக்கத் திட்டத்துக்காக தேர்வு செய்யப்பட்டன.
- 140 கலப்புக்கள் பரிசோதிக்கப்பட்டன அவற் றுள் 6 மேலும் மதிப்பீடு செய்யக் கூடிய முன்னேற்றகரமானதாக இனங்காணப்பட்டன.

வெங்காயம்

- உயர் விளைச்சல், சிறந்த விதை உருவாதல், நோய் பீடைகளுக்கு எதிர்ப்பு, சிறந்த சேமிப்புத்தரம் கொண்ட சிறந்த இன ங்களை மேம்படுத்துவதற்காக வெங்காய பயிர் மேம்படுத்துகைத்திட்டம் மேற்கொள்ள ப்பட்டது.
- 2011 சிறுபோகத்தில் இருவெளிநாட்டு வெங்காய வர்க்கங்களான ரெட்ஸ்ரார் F1 மற்றும் ராவணா என்பன பரிசோதிக்கப் பட்டன. விளைச்சலைப் பொறுத்தவரை இவை சிபார்சு செய்யப்பட்ட இனங்களான தம்புள்ள தேர்வு (25t/ha) கலேவல மென்சிவப்புபேதம் (28t/ha) என்பவற்றைவிட ராவணா (18t/ha) விளைச்சல் குறைவாகக் காணப்பட்டது. ரெட்ஸ்ரார் F1 உள்ஞர் காலநிலையில் குமிழ்களை உற்பத்தியாக வில்லை. தொடர்ந்து வரும் 2012 சிறுபோக த்தில் முடிவை உறுதிப்படுத்துவதற்காக பரிசோதனை மீண்டும் செய்யப்படவுள்ளது.
- கடந்த மூன்று வருடங்களில் விதை உருவாக்கும் 7 சின்னவெங்காயப் பேத ங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டன. அவை 2011 சிறுபோகத்தில் குமிழ் விளைவுக்காக மதிப்பீடு செய்யப்பட்டன. MICLO – 09-01, MICLO – 10-03, MICLO- 10-15 ஆகிய மூன்று பேதங்கள் கட்டுப்பாட்டு வர்க்கம் வேதாளத்தை விட உயர் விளைவை (16-17t/ha) தந்தன
- MICLO – 10-13, MICLO – 10-6 என்பன நட்டு 75 நாட்களுள் பௌதீக முதிர்ச்சி நிலையை அடைந்தன. அத்துடன் பௌதீக முதிர்ச்சிநிலையை அடைய 85-95 நாட்களை எடுக்கும் வேதாளம் மற்றும் பரிசீலிக்கப்பட்ட பேதங்களை விட இது முந்தியதாகும். எல்லா பேதங்களும் வரும் 2011/2012 காலபோகத்தில் உண்மை விதை உற்பத்திக்காக மதிப்பீடு செய்யப்பட வுள்ளன.
- கடந்த மூன்று வருடங்களில் 10 புதிய மேம்படுத்தப்பட்ட பெரிய வெங்காய பேதங் கள் தேர்வு செய்யப்பட்டு 2011 சிறு போகத்தில் முன்னேற்றகரமான பேதத்தை தேர்வு செய்வதற்காக மதிப்பீடு செய்யப்ப

ட்டன. பரிசோதிக்கப்பட்ட பேதங்களுக்கி டையே MIBO – 10-02, MIBO – 10- 03 என்பன நட்டு 90-105 நாட்களில் முதிர்வடைந்த தோடு சிபார்சு செய்யப்பட்ட வர்க்கமான தம்புள்ள தேர்வின் விளை ச்சலை (24.5t/ha) விடக்கூடிய விளை ச்சலை (27 – 28t/ha) தந்தன. MIBO – 09 – E1, MIBO – 09 E2 ஆகிய பேதங்கள் நாட்டப்பட்டு 80-82 நாட்களில் பௌதீக முதிர்ச்சி நிலையை அடைந்தன. இது தம்புள்ள தேர்வின் முதிர்ச்சிக்காலத்தை விட 10-12 நாட்கள் முந்தியதாகும். இருந்தபோதும் இவற்றின் விளைவு (19-20t/ha) தம்புள்ள தேர்வைவிட குறைவாக இருந்தது.

- மாத்தளை மாவட்டத்தின் ஆற்றுப்பாறைப் பகுதிகள் குளிர்காலநிலையைக் கொண்டு ள்ளன. இது பெரியளவில் வெங்காயம் பயிர்செய்கை பண்ணப்படும் இடங்களுக்கு அருகில் அமைந்துள்ளது. ஆகவே, பெரியவெங்காய தாய்க்குமிழ்களில் வசந்த கால நிலைப்படுத்தலில் ஆற்றுப்பாறைப் பகுதிகளின் காலநிலையின் தாக்கம் பற்றி அறிவதற்காக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. நவம்பர் கடைசியிலிருந்து ஜனவரி முற்ப குதி வரை வெப்பநிலை 18.5-19.6^{0}c ஆக ஆற்றுப்பாறை பகுதிகளில் இருந்தது. இது வசந்தகால நிலைப்படுத்தலுக்குரிய சாதக மான வெப்பநிலையாக இருந்தது.

பெருந்தானியப்பயிர்

சோளம்

- KH74, KH76 KH157 என்னும் மூன்று முன்னேற்றகரமான தரமான புரதத்தை க்கொண்ட சோள கலப்பினப் பேதங்கள் VAT ல் மதிப்பீடு செய்யப்பட்டன. இம்முன் னேற்றகரமான கலப்பினப் பேதங்கள் ஏறக்குறைய 4% லைசீன் 1% ரைப்ரோ பான் என்பவற்றைக்கொண்டிருந்தன. இது சாதாரண சோளத்தில் உள்ளதைவிட 3 – 4 மடங்கு உயர்வானதாகும் அத்துடன் இவற்றின் சராசரி விளைச்சல் ஏறக்குறைய 4.5 – 5.5t/ha ஆக அறிக்கைப்படுத்த ப்பட்டது.

- உள்ளூர் உள்ளகக் கலப்புப் பேதங்களில் இருந்து ஏழு முன்னேற்றகரமான கலப்பினப் பேதங்கள் விருத்தியாக்கப்பட்டன CIMMYT உள்முக கலப்பு பேதம் தேசிய ஒருங் கிணைக்கப்பட்ட வர்க்கப் பரிசோத னைக்காக தேர்வு செய்யப்பட்டது. கலப்பி னப் பேதங்களின் விளைச்சல் ஏறக்குறைய 4.5 – 5.5t/ha ஆக இருந்தது.

- உள்ளூர் நிலைமைகளின் கீழ் இசைவாக்க இயல்பை அறிவதற்காக வெளியிலிருந்து தருவிக்கப்பட்ட பதினெட்டு கலப்பினப் பேதங்களின் பரிசோதிக்கப்பட்டன. இந்த வெளியிடக் கலப்பினப் பேதங்கள் அனை த்தும் குறிப்பிடக்கூடிய ஒத்த அல்லது உயர்வான விளைவைக் 5.5 – 6.5t/ha காட்டின. இது உள்ளூர் கலப்பின வர்க்கம் "சம்பத்" ஐ விட கூடவாக உள்ளதோடு உளளூர் நிலைமைகளில் சிறந்த முன்னே ற்றகரமாகவும் இருந்தது.

குரக்கன்

- Ac 10326, Ac 11352, Ac 11369, Ac 8630 ஆகிய நான்கு முன்னேற்றகரமான குரக்கன் (3 – 3½ மாதங்கள்) வகைகள் உள்ளூர் மூலவுயிருருக்களிலிருந்து தேர்வுசெய்ய ப்பட்டு NCVT ல் மதிப்பீடு செய்யப்பட்டன.

அவரைப்பயிர்

பயறு

- நோய் பீடைக்கு எதிர்ப்புள்ள அல்லது சகிப்புள்ள, விரும்பப்படும் தரமான விதை யைக்கொண்ட உயர்விளைவு தரும் வர்க்க ங்களை விருத்தி செய்வதற்காக பரிசோத னைகள் முன்னேடுக்கப்பட்டன.

- பின்முகக்கலப்பின் (MIMB101xV2709) x V2709), (MIM B101 x V2709) x MIMB101) F6 பயறு விதைகளின் 100 தனித்தாவரங்கள் அவற்றின் விளைவு மற்றும் விரும்பப்படும் பயிராக்கவியல் நட வடிக்கைகளின் அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டன.
- பயறு வர்க்கங்களான MIMBCP111, MIMBCP113, MIMBCP5913, MIMBCP 539-17 என்பன VATல் விவசாயிகளின் வயலில் பரிசோதிக்கப்பட்டன. வர்க்கங்கள் MIMBCP111, MIMBCP114 என்பன நல்ல முன்னேற்றத்தை காட்டியதுடன் முறையே 15% மற்றும் 12.5% கூடுதல் விளைவை கட்டுப்பாட்டு வர்க்கம் MI – 06 ஐ விட தந்தன. ஏழு முன்னேற்றகரமான பேதங்கள் NCVT ல் பரிசோதிக்கப்பட்டன. தெரிவு 8452 மிக குறைவான வீதத்தில் (<0.01) கடின வித்தைக் கொண்டிருந்தது.

கௌபீ

- பொதுவான பயிர்ச்செய்கைக்காக குறுகிய கால வயதுடைய (70-75 நாட்கள்), கிறீம் நிற வித்துக்கொண்ட, கூடிய விளைச்ச லுடைய (>2t/ha) பெரிய வித்துடைய MICP 01 கௌபீ பேதம் விவசாயத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டது.
- வெள்ளை வித்தில் சிறிய கறுப்பு புள்ளி களைக் கொண்ட, 2t/ha விளைச்சல் தரும் இரண்டு கௌபீ பேதங்கள் DUS பரிசோத னைக்காக விதை அத்தாட்சிப்படுத்தும் சேவையினரிடம் கையளிக்கப்பட்டது.

உழுந்து

- மூன்று உழுந்து பேதங்கள் NCVT ல் பரிசோதிக்கப்பட்டன. இந்த பேதங்கள் கட்டு ப்பாட்டு வர்க்கங்களான அனுராதா, MI – 01 ஐ விட சிறந்ததாக இல்லை.

எண்ணெய் விதைப்பயிர்கள்

சோயாஅவரை

உயர்விளைச்சலும் (>3தொன்/ஹக்) பெரிய (12-13g/100 விதைகள்) கிறீம் நிற வித்துடைய, முதிர்வுக்காலம் 80-90 நாட்களுடைய பேதம் ஒன்று DUS பரிசோதனைக்காக விதை அத்தா ட்சிப்படுத்தும் சேவையினரிடம் கையளிக்கப் பட்டது.

நிலக்கடலை

- பெரிய வித்துக்கொண்ட நடுத்தர வயது டைய பேதங்கள் (ICGV 97045, ICGV 97049, ICGV 98396 மற்றும் ICGV 98704) DUS பரிசோதனைக்காக விதை அத்தாட்சி ப்படுத்தும் சேவையினரிடம் கையளிக்கப் பட்டது. ICGV 98704 அதன் விளைச்சலு க்காகவும் ICGV 97045 அதன் விளைவு, வித்தின் இயல்பு என்பவற்றுக்காகவும் விவசாயிகளினால் கூடுதலாக விரும்பப்படு வதாக அவதானிக்கப்பட்டது.

உலர்வலைய மரக்கறிப்பயிர்கள்

வெண்டி

வெண்டியில் OKS -01 பேதம் தேர்வு செய்ய ப்பட்டு DUS பரிசோதனைக்காக கையளிக்க ப்பட்டது. OKS – 01னினது காய்கள் MI – 5 ன் காய்களின் இயல்பைக்காட்டியது. ஆயினும் MI – 5 உடன் ஒப்பிடும் போது வைரஸ்க்கு உயர் சகிப்புத்தன்மையைக்காட்டியது. ஆகவே OKS – 01 ஐ மஞ்சள் நரம்பு சித்திரவடிவ வைரஸ் நோயால் அதிகம் பாதிக்கப்படும் MI – 05 க்குப் பதிலாக பயிரிடலாம்.

பழப்பயிர்

கொடிமுந்திரிகை

- கொடிமுந்திரிகையில் குறைந்த செலவில் பழக்கப்படுத்தும் முறையை இனம் காணப் பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்பட்டது. நான்கு கொடிமுந்திரிகை வர்க்கங்கள், பந்தல், டபிள்குயொட் (DG), ஜெனிவா இரட்டை திரை (GDC) மற்றும் டடுறா ஆகிய வேறுபட்ட நான்கு முறைகளில் பழக்கப்படுத்தப்பட்டன. இஸ்ரேல் நீலம் எனும் இனம் ஜெனிவா இரட்டை திரை (GDC) முறையில் சிறந்த விளைச்சலைத் (8Kg/கொடிக்கு) தந்தது. இதனுடன் ஒப்பிடும் போது மற்றயப் பழக்கப்படுத்தும் முறைகளான பந்தல், DG, டடுறா என்பவற்றில் முறையே 1.43kg 2.0Kg, 7.4kg/ கொடிக்கு என்ற அளவில் விளைவு தந்தது.
- மஸ்கற் MI ன் சராசரி விளைச்சல் பந்தல் மற்றும் GDC முறைகளில் 4.0Kg/ கொடிக்கு என்ற அளவிலும் டடுறா முறையில் 7.7 Kg/ கொடிக்கு என்ற அளவிலும் இருந்தது. பிரென்ஸ் MI ன் சராசரி விளைச்சல் 41.4 Kg/ கொடிக்கு என்ற அளவில் டடுறா முறையிலும் 11Kg/கொடிக்கு என்ற அளவில் ஏனைய முறைகளிலும் தந்தது.

விவாத்தி

- உலர் வலையத்துக்கு ஏற்ற உயர்விளைச்சலுடைய வர்க்கங்களை இனம்காண்பதற்கான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. உளளூரில் சேகரிக்கப்பட்ட 06 தெரிவுகள் பரிசோதிக்கப்பட்டன. FMRC மகாஇலுபள்ளமவில் இருந்து சேகரிக்கப்பட்ட தெரிவு 06 ஆனது மற்றய எல்லாவற்றையும் விட முன்னேற்றகரமாகக் காணப்பட்டது. ஒரு மரத்தின் சராசரி பழ எண்ணிக்கை 573 ஆக இருந்ததுடன் பழ நிறையின் வீச்சு 180 – 380g/பழம் ஆகவும் இருந்தது. அத்துடன் சிறிய, இடைத்தர, பெரிய பழங்களின் விகிதமானது முறையே 23%, 29% மற்றும் 48% ஆக இருந்தது.

பயிராக்கவியல்

- 30 நாள் மற்றும் 50 நாள் வயதுடைய மிளகாய் நாற்றுக்களில் அலகு பரப்புக்கான பழுக்கும் நிலையை அதிகரிப்பதனூடாக மிளகாய் விளைவை அதிகரிப்பதற்கு முனையரும்பு கத்தரித்தல் தொழில்நுட்ப முயற்சி ஒன்று மேற்கொள்ளப்பட்டது. விளைவில் கத்தரித்தல் எந்த மாற்றத்தையும் காட்டவில்லை. ஆனால் 30 நாள் வயது மிளகாய் நாற்றுடன் ஒப்பிடும் போது 50 நாள் வயதுடைய நாற்று கூடிய விளைவைத் தந்தது.
- மூன்று வேறுபட்ட வயதுடைய (3, 3 ½ மற்றும் 4 - 4 ½ மாதம்) நெல் இனங்கள் நான்கு தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்கப் பரிசோதனையில் அவற்றின் பிரதேச இசைவாக்கத்துக்காக மதிப்பீடு செய்யப்பட்டது. கட்டுப்பாட்டு வர்க்கங்களுடன் ஒப்பிடும் போது கீழ்வரும் பேதங்கள் முன்னேற்றகரமாக இருந்தது.

  மூன்று மாத பிரிவு : AT – 09 – 854 மற்றும் BG – 11 – 139

  மூன்றரை மாத பிரிவு : Bw – 05 – 1805 மற்றும் AT – 08 - 1078

பயிர்பாதுகாப்பு

நோயியல்

- 2010 சிறுபோகத்தில் இலைச்சுருள் வைரஸ் நோயின் தாக்கத்தைக் குறைப்பதற்கான சாத்தியங்களைக் கண்டுபிடிப்பதற்கான பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. மிளகாய்ப் பயிருக்கு நிழல் பரிகரணம் (30%

ஒளியை குறைத்தல்) பிரயோகத்தின் மூலம் காவிகளின் நடமாட்டம் நிழல் நிலைமையில் குறைவதால் மிளகாய் இலைச்சுருள் வைரஸ் தாக்கத்தை குறைக்கலாம் என முடிவு காட்டியது. இது சிறுபோகத்தில் மிளகாயின் விளைவை 160 Kg/ஹெக் ஆல் உயர்த்தியது.

- உள்ளூர் கலப்பின வர்க்கமான சம்பத் (F1 கலப்பு) அதன் பெற்றோர் என்பன நாற்ற ழுகல் மற்றும் நாற்று வளர்ச்சி தாமதிக்கும் நோய் அறிகுறி என்பவற்றை காட்டுகின்றன. நோய் பாதித்த நாற்றுக்களிலிருந்து நோயாக்கிகளின் பிரித்தெடுப்பு வேறாக்கம் பெனிசிலியத்தின் *(Penicilliium)* ஒரு இனத்தில் மேம்பாடுடைய விளைவை காட்டியது. இது முளைதிறனில் பாதிப்பை ஏற்படுத்துவதில்லை ஆனால் நலிந்த நாற்றுக்களின் முளைத்தலுக்கும் முளைத்ததன் பின்னான அழுகலுக்கும் காரணியாக உள்ளது. உயிர் வித்துக்களின் முளையம் பெனிசிலியம் *(Penicilliium spp)* ன் தொற்றலுக்கு ஏதுவான பகுதியாக உள்ளது. ஆரம்ப விதை ஈரலிப்பு அதிகரிப்புடன் நோய் தாக்கமும் அதிகரிக்கின்றது. எனவே சேமிப்பதற்காக <13% விட குறைவான ஈரலிப்புடைய வித்துக்களை கட்டாயம் பாவிக்கவேண்டும்.

- மலேசியாவிலிருந்து பெறப்பட்ட 09 சோள வர்க்கங்களின் விதை மாதிரிகள் பரவக்கூடிய நோயாக்கிகளுக்காக பரிசோதிக்கப்பட்டன. இந்த விதை மாதிரிகள் சோளத்தில் அந்திரக்னோஸ் நோய்க்காரணியான கொலரோறிக்கம் *(Colletotrichum spp)* ன் தொற்றைக் கொண்டிருந்தது. இது இலங்கையில் பதியப்படவில்லை. மேலும் இந்நோய்க்காரணி பரவுவதை தடுப்பதற்காக எல்லா விதைகளும் அழிக்கப்பட்டன.

- பேராதெனிய, கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டு விலங்கு உணவாக செய்கைபண்ணப்பட்டுள்ள பசுந்தீவன இறுங்கு வர்க்கங்கள் தடுப்புக்காப்பு நோய்களுக்காக மதிப்பீடு செய்யப்பட்டது. எந்த தடுப்புக்காப்பு நோய்களும் அவதானிக்கப்படவில்லை. அறுவடைக்குரிய காலத்தில் தங்கியுள்ளமையையும் இப்படியான பசுந்தீவன இறுங்கு வர்க்கங்களின் தேவையையும் கருத்தில் கொண்டு: இந்தப் பேதமானது விவசாயிகளின் வயல்களில் பெரிய அளவில் பரிசோதனை மேற்கொள்ள ஆலோசிக்கப் பட்டுள்ளது.

பூச்சியியல்

- மிளகாய்ப் பயிர்ச்செய்கையில் மிளகாய் இலைச்சுருள் சிக்கல் ஒரு பெரிய பீடைப் பிரச்சினையாகவுள்ளது. இந்தப்பிரச்சினையை கட்டுப்படுத்துவதற்கு வேறுபட்ட செயற்பாட்டுடன் கூடிய மாற்று பூச்சி நாசினிகளை இனம்காண்பதற்கான பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. ஸ்பைனேசட் 45SC மற்றும் இமிடாகுளாப்றிட் 70% WG எனும் பெயர்கொண்ட இரு பூச்சி நாசினிகள் மிளகாயில் இலைசுருள் சிக்கல் பாதிப்பை குறைப்பதற்குச் செயற்திறன் உடையதாக இனம் காணப்பட்டன.

- மிளகாய்ப்பயிர் நட்டு ஆறு கிழமை வரை பாத்தியில் இலைகளுக்குப் பூச்சிநாசினி விசிறலும் விதைப்பரிகரணத்தினதும் சேர்க்கை, இலைச்சுருள் தாக்கத்துக்கு உட்படும் தன்மை குறிப்பிடக் கூடியளவு குறைந்ததாக (தாக்கத்துக்குட்படும் தன்மை சுட்டி 10) காணப்பட்டது. எவ்வாறாயினும் நட்டு 8வது தொடக்கம் 12வது கிழமையின் பின் இந்த பரிகரணத்துக்கு இடையில் குறிப்பிடக்கூடிய எந்த வேறுபாடும் காணப்படவில்லை.

- சோளத்தில் விளைச்சலை அதிகரிப்பதற்காக விவசாயிகள் கூடுதலான நைதரசன் வளமாக்கியை பயன்படுத்துகிறார்கள். எவ்வாறாயினும் இந்தப் பழக்கமானது பயிரின் எல்லா நடவடிக்கையிலும் எதிர்மறை

தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. விசேடமாக பூச்சிநாசினி பாவிக்காத பாத்திகளில் தண்டு துளைப்பானின் தாக்கத்துக்கு உட்படும் தன்மை ஏறக்குறைய 85% ஆல் அதிகரிக்கின்றது. அதேவேளை 80% ஆல் நைதரசனை அதிகரிப்பதால் விளைவு 200Kg/ஹக் என்ற அளவு அதிகரிக்கின்றது.

- அபாமெக்ரின் 1.8Ec மிளகாயில் இலைச்சுருள் சிக்கலை கட்டுப்படுத்துவதற்கு சிபார்சு செய்யப்பட்டுள்ளது. ஒரு புதிய சேர்மானவகை (N – மெதைல் – 2 *பைரோலிடேன் - பீயூறை றோலக்ரோன்*) (NMP இல்லாத அபாமெக்ரின்) ஆனது சிபார்சு செய்யப்பட்ட பூச்சி நாசினியின் அதே பலத்தைக் கொண்டுள்ளது. இந்த புதிய சேர்மானத்தின் உயிரியல் செயற்திறனுக்காக இது பரிசோதிக்கப்பட்டது. NMP இல்லாத *அபாமெக்ரின்*க்கும் *அபாமெக்ரின்* 1.8ES க்குமிடையில், மிளகாய்ப்பயிரில் இலைச்சுருள் சிக்கலை கட்டுப்படுத்துவதில் குறிப்பிடக்கூடிய வேறுபாடு எதுவும் இருக்கவில்லை.

- கத்தரியிலும் வெண்டியிலும் வெண்ஈ மற்றும் இலை தத்திக்கு எதிராக புதிய சேர்மானம் *அசெற்றாமிபிறிட 18 SL* ன் செயற்திறனை பரிசோதிப்பதற்கு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. *அசேற்றமிபிறிட்ன்* புதிய சேர்மான (*அசெற்ற மிபிறிட் 18SL)* மும் வெண்ஈயையும் இலைத்தத்தியையும் வெண்டி மற்றும் கத்தரியில் கட்டுப்படுத்துவதாகக் கண்டறியப்பட்டது.

களை விஞ்ஞானம்

தற்போது மறுவயற்பயிர்களுக்கு மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையான சிபார்சு செய்யப்பட்ட களைநாசினியே கிடைக்கக் கூடியதாகவுள்ளது. எனவே புதிய களைநாசினிகள் தொடர்ந்து ''மகாஇலுப்பளம'' இல் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

- மிளகாயிலும், நிலக்கடலையிலும் குயிசாலொப் - பி - ஈதைல் (*Quizalop – P – ethyl)* 50g/l EC ன் களைகட்டுப்பாட்டு செயற்திறன், நுணுக்கமாக ஆராயப்பட்டுள்ளது. நிலக்கடலையிலும் மிளகாயிலும் 1.0, 1.5 மற்றும் 2.0லீற/ha என்ற விகிதத்தில் பரிசோதிக்கப்பட்டது. இப்புதிய களைநாசினி புல்வகைக் களைகளை மட்டும் கட்டுப்படுத்துவதில் வெற்றிகரமாக இருந்தது.

- சோளப்பயிரில் ஹலோசல்பியூரோன் - மீதைல் (*Halosulfuron – methyl)* 75WG ன் களைகட்டுப்பாட்டு செயற்திறன் பரிசோதனை ஒன்று மெற்கொள்ளப்பட்டது. இப்புதிய களைநாசினி 60, 80 மற்றும் 100g/ ha என்ற விகிதத்தில் சோளப்பயிர் செய்கையில் பரிசோதிக்கப்பட்டது. இந்தக் களைநாசினி செடிகளை மட்டும் கட்டுப்படுத்துவது கண்டு பிடிக்கப்பட்டது.

- ரிக்கர் [காபென்ற்றாசோன் - ஈதைல் 6.5g/l+ கிளைபோசேற் (a.e) 170g/l CS] ன் மழையில் கழுவப்படாமல் தாங்கும் இயல்பை அவதானிப்பதற்கு பரிசோதனை செய்யப்பட்டது. காலபோகத்தில் கடும் மழைகாலத்தில் சர்வகளை நாசினியை பிரயோகிப்பதில் உள்ள பிரச்சினைக்கு இத்தகவல் உதவும். ரிக்கர், கிளைபோசேற் மற்றும் பறக்குவாட் உடன் செயற்கை மழைச் சூழலை பயன்படுத்தி பரிசோதிக்கப்பட்டது. பரிசோதிக்கப்பட்ட எவற்றிலும் நீரில் கழுவப்படாமல் தாங்கும் இயல்பு அவதானிக்கப்படவில்லை.

- அவரைப்பயிர்செய்கையில் இமேஸிதபைர் (Imazethapyr) ன் களைக்கட்டுப்பாட்டு செயற்திறன் ஆராயப்பட்டது. 600, 700, 800ml/`ha என்ற விகிதத்தில் பயறு பயிர்ச் செய்கையில் முளைக்கமுன், முளைத்தபின் பிரயோகிக்கப்பட்டு பரிசோதிக்கப்பட்டது. முளைக்க முன் பிரயோகித்தல் முன்னேற்றகரமான முடிவைத் தந்தது. மேலும் மதிப்பீடு மேற்கொள்ளபடவுள்ளது.

- மேற்குறிப்பிட்டவற்றிற்கு மேலதிகமாக நெற் பயிரில் ஆறு புதிய களைநாசினிகள் 2010/2012 காலபோகத்தில் தேசிய ஒருங் கிணைக்கப்பட்ட வர்க்க பரிசோதனை த்திட்டத்தின் கீழ் மதிப்பீடு செய்யப்பட்டன. சேகரிக்கப்பட்ட தகவல்கள் பத்தலகொட நெல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலைய த்திற்கு கையளிக்கப்பட்டுள்ளன.

மண்வளம்

- பயிர் உற்பத்தியில், பசளையை பயிர் உள் எடுக்கும் அளவை அதிகரிப்பதற்கு மேற் கொள்ளும் முறைகளில் ஒன்று ஒருங்கி ணைந்த தாவர போசணைத் (IPNS) திட்ட மாகும். சோளப்பயிரின் IPNS க்கான பொரு த்தமான சேதனப்பசளையை இனங்காண் பதற்கு பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப் பட்டது. நான்கு வகையான சேதனப் பசளைகள் (கிளிசிறிடீயா இலை, கூட்டுப் பசளை, சணல், கௌபீ) உடன் விவசாயத் திணைக்களத்தால் சிபார்சு செய்யப்பட்ட அசேதனப்பசளையான N, P மற்றும் K யின் அளவை 25% ஆல் குறைத்து பரிசோ தனை மேற்கொள்ளப்பட்டது. கிளிசிறிடீயா அல்லது தரமான கூட்டுப்பசளை 10t/ha என்ற விகிதத்தில் விவசாயத் திணைக்கள அசேதனப்பசளை சிபார்சின் 75% உடன் சேர்த்து பிரயோகத்தில், அல்லது சணலை (விதை அளவு 20Kg/ha) வயலில் விதைத்து அல்லது கௌபீ (விதை அளவு 25 – 30/ha) வயலில் விதைத்து திணை க்கள அசேதனப் பசளை சிபார்சின் 75% ஐ சேர்த்து பிரயோகித்தல் என்ப வற்றில், விவசாய திணைக்கள சிபார்சின் 100% அசேதனப்பசளை பாவித்து பெறப்படும் விளைச்சலை ஒத்த விளைவே பரிசோதனை முடிவாக காணப்பட்டது.

- உயர்தரமான எப்பாவல பாறைப்பொஸ் போற் (HERP) மற்றும் எப்பாவல தனி சுப்பர்பொஸ்பேற் (ESSP) என்பன உள்ஞரில் உற்பத்தி செய்யப்படும் பொஸ்பரசு வளமாக்கிகளாகும். ஆனால் மறுவயல் பயிர்களுக்கு அவற்றின் பொருத்தமான தன்மை அறியப்படவில்லை. எனவே முதற்படியாக இந்த வளமாக்கிகள் சோளப் பயிர்ச் செய்கையின் சாடிப் பரிசோத னையில் பரீட்சிக்கப்பட்டன. சோளப்பயிர் செய்கையில் ESSP ஆனது மும்மை சுப்ப பொஸபேற் (TSP) க்கு பதிலாக பாவிக்கப் பொருத்தமாக காணப்பட்டதோடு HERP பொருத்தமானதாகக் காணப்படவில்லை. இப்பரிசோதனை முடிவை உறுதிப்படுத்தி சிபார்சை வழங்குவதற்காக பரிசோதனை வயல் மட்டத்தில் தொடரப்படவுள்ளது.

நீர் முகாமைத்துவம்

- மிளகாய் பயிருக்காக துளி நீர்ப்பாசன முறையை விருத்திசெய்வதற்கு நுண்நீர்ப்பா சன முறையின் கீழ் RBE மண்ணில் மண்நீர் விநியோக முறையை மதிப்பீடு செய்வதற்கு ஒரு பரிசோதணை மேற்கொள் ளப்பட்டது. பச்சை மிளகாய் விளைவில் குறைவில்லாமல் மிளகாய் தாவரத்தை 25cm குளாய் இடை வெளியில் ஸ்தா பிக்கலாம். என பரிசோதனை காட்டியது. மண் ஈரலிப்பு அளவும் (ஏறக்குறைய 20% - கசிவு ஈர அளவு)ம், உப்புச்செறிவும் (<0.15ds/m) பரிசோதிக்கப்பட்ட தாவர இடை வெளியின் வேர்வலையத்தில் விரும்பக்கூடிய மட்டத்தில் பராம ரிக்கப்பட்டது.

- செங்கபில மண்ணில் வளர்க்கப்படும் கலப்பினச் சோளம் ''சம்பத்தின்'' உத்தம நீர்த் தேவையைக் கண்டுபிடிப்பதற்கான ஒரு ஆய்வு முன்னெடுக்கப்பட்டது. பாசன நீர் (IW)/ திரண் தட்டு ஆவியாதல் *(Cumulative Pan Evaporation)* – CPE) விகிதம் ஆனது பயிரின் நீர்தேவையை அறிவதற்கு ஒரு காட்டியாகப் பயன்படு கின்றது. பதின்மூன்று IW/CPE விகித

சேர்க்கைகள், சோளத்தின் ''சம்பத்''ல் மூன்று மாதகாலமாக பரிசோதிக்கப்பட்டது. பரிசோதிக்கப்பட்ட யாவற்றினதும் முதலா வதற்கான IW/ CPE விகிததொடர்பு 1.15, 1.15 மற்ற 0.70 ஆகும். இரண்டாவது, மூன்றாவது மாத வளர்ச்சிக் காலத்தில் சோளப்பயிரின் வளர்ச்சி அல்லது விளை வில் குறிப்பிடக்கூடிய வேறுபாடு எதனையும் 2011 சிறுபோகத்தில் காண்பிக்கவில்லை. எனவே எந்த ஒரு பரிசோதிக்கப்பட்ட IW/ CPE விகித தொடர்பையும், செங்கபில மண்ணில் கலப்பின சம்பத் சோளத்தின் நீர்த்தேவையை முடிவு செய்யப் பாவிக்க லாம். முடிவை உறுதி செய்வதற்காகவும் தெளிவுபடுத்தவும் மீண்டும் செய்யப்பட வுள்ளது.

உணவு தொழில்நுட்பம்

- நான்கு கௌபீ வர்க்கங்களை அவற்றின் ஊறவிடும் நேரம், அவியும் நேரம், மற்றும் புலன் உணர்வு விருப்புக்காகவும் பரிசோ திக்கப்பட்டன. MI – 35 அவிவதற்கு நீண்ட நேரமும் கூடுதலான நீரும் தேவைப் பட்டது. தவள இனத்தின் மென்மையான கட்டமைப்பும் சுவையும், காரணமாக அதிக விருப்புடைய வர்க்கமாக இருந்தது.

- பண்படா புரத அளவைக் காண்பதற்காக ஐந்து கௌபீ வர்க்கங்கள் பரிசோதிக்கப்ப ட்டன. தவள (19.3%) MI – 35 (19.53%) MICP – 03 (19.53%) என்பவற்றை விட வருணி (21.5%) யும் MICP – 03 (21.9%) ம் உயர் புரத அளவைக்காட்டியது.

- பண்படாப்புரதம் மற்றும் பண்படாக்கொழுப்பு என்பவற்றின் உள்ளடக்கத்தை அறிவத ற்காக நாலு சோயா அவரை வர்க்கப் பேதங்கள் பரிசோதிக்கப்பட்டன. பண்படாக் கொழுப்பு உள்ளடக்கத்தில் (19-20%) குறிப்பிடக்கூடிய வேறுபாடு இருக்கவில்லை. அதே நேரம் இரு புதிய பேதங்கள் பண்படாப்புரத உள்ளடக்க அளவில் 32.7 தொடக்கம் 39.1% வீச்சில் பண்படாப் புரத த்தைக ்கொண்ட PB – 01 க்கு ஒத்ததாக க்காணப்பட்டன.

- கலப்பினச் சோளம் ''சம்பத்'' மற்றும் அதன் பெற்றோர் பேதங்களின் விதையின் உள்ளடக்கத்தைக் காண்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்டது. பண்படாப்புரதம், பண்படாக் கொழுப்பு மற்றும் நார் அல்லது சாம்பல் ஆகியவற்றில் குறிப்பிடக்கூடிய எந்த வேறுபாடும் காணப்படவில்லை.

- அடிப்படை இராசயன பண்பு மற்றும் பழம் பதப்படுத்தல் தரத்துக்காக அண்மையில் விடுவிக்கப்பட்ட தக்காளி இனம் KC – 01 பரிசோதிக்கப்பட்டது. தக்காளியின் குறிப்பிட க்கூடிய அமில நிலை பொதுவாக 4.6PH க்குக்கீழ் ஆக காணப்பட்டாலும், இது எதிர்பார்த்த அளவு PH – 5.63 ஐ கொண்டிருந்தது. எனவே இந்த வர்க்கத்தை வெற்றிகரமாக சோஸ், மற்றும் கெட்செப் தயாரிப்பில் பயன்படுத்தலாம்.

- பௌதிக, இராசயன மற்றும் உணவு சார்ந்த பண்புகளுக்காக அண்மையில் விரு த்தி செய்யப்பட்ட மென்மையான விதை யுடைய கொய்யாப் பேதம் பிரபல்யமான வர்க்கங்களுக்கு நிகராக பரிசோதிக்கப் பட்டது. மென்விதை கொண்ட வர்க்கத்தின் பழங்கள் பெரிதாகவும், குறைந்த வீதத்தில் விதையைக் கொண்டிருப்பதுடன் விதைகள் மென்மையாகவும் இருந்தன. இந்த பேத த்தின் தோல் தடிப்பு அதிகமாக இருந்த துடன் தோலின் நிறம் கூடுதலாக ஒரே மாதிரி (மஞ்சள் குழு: 144B – 144CIN BHS நிற அட்டவணை)யாக இருந்தது.

- ஏழு QPM பெற்றோர் வர்க்கங்கள், 9 மேம்படுத்தப்பட்ட QPM கலப்பின வர்க்க ங்கள், 02 சாதாரண சோள கலப்பினங்கள் (பசுபிக் 984 மற்றும் சம்பத்) என்பன அவற்றின வித்திலுள்ள பண்படாப் புரதம் மற்றும் றைப்ரோபான் உள்ளடக்கத்து க்காக பரிசோதிக்கப்பட்டன. விதையி

லுள்ள வழமையான புரதம் மற்றும் கொழுப்பின் வீச்சு முறையே 7.2 – 9.7% மற்றும் 3.4– 6.4% இருப்பதில் குறிப்பிடக்கூடிய வேறுபாடு எதுவும் இருக்கவில்லை. *''றைப் ரோபான்''* உள்ளடக்கமானது உள்முக கலப்பு பேதங்களில் 1.09 – 0.84% ஆக இருக்கின்ற போதும் QPM கலப்பில் இது 1.62 – 0.92 % க்கும் இடையில் இருந்தது. கூடுதலான QPM உள்முக கலப்புப் பேதங்கள், QPM ஏனைய கலப்பினங்களை விட சம்பத் மற்றும் பசுபிக் 984 என்பவற்றில் குறிப்பிடக்கூடிய அளவு குறைவாக றைப்ரோபான் இருந்தது. கலப்பினங்களான KH 156, KH74, KH76, KH157 என்பவற்றில் றைப்ரோபான் 1% க்கு மேல் காட்டியது.

- மூன்று அலோவேரா உற்பத்திகள் (பானம், ஜெலி, பிரசாரணமூலம் உலர்த்தப்பட்ட ஸ்னெக்) விருத்தி செய்யப்பட்டு சுவைத் தரங்களுக்காகப் பரிசோதிக்கப்பட்டது. மேற்கூறப்பட்ட எல்லா உற்பத்திகளும் எல்லா வகையிலும் ஏற்கக்கூடியதாகவும் அதிக விருப்பு உடையதாகவும் இருந்தன.

- அலோவேரா ஜெலியின் பேணும் காலத்தை அதிகரிப்பதற்காக பொருத்தமான முன் பரிகரணத்தை இனங் காண்பதற்கு பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்பட்டது. 120 PPM பொட்டாசியம் மெற்றாபைசல்பைட்டை கொதிக்க வைக்க முன் சேர்ப்பதன் மூலமும், மற்றும் குளிரூட்டியில் வைப்பதன் மூலமும் 36 நாட்கள். பழுத டையாமல் பேணலாம் என பரிசோதனை முடிவு காட்டியது.

- உபதானியங்களின் மா (சோளம், குரக்கன், இறுங்கு) மற்றும் கோதுமை மா என்பவற்றில் இருக்கக்கூடிய இராசயன சேர்மானங்கள் மதிப்பீடு செய்யப்பட்டன. கோதுமை மாவில் உள்ள புரதம், கொழுப்பு, சாம்பல் சத்து என்பவை முறையே 3.2%, 0.6%, 1.4% ஆக இருந்தது. இதனுடன் ஒப்பிடும் போது உபதானியங்களின் மா உயர்ந்தளவில் புரதம் (6.6 – 6.3%) கொழுப்பு (2.7 – 5.7%) நார் (0.3 – 2.0%) சாம்பல்சத்து (1.6 – 2.5%) என்பவற்றைக் கொண்டிருந்தது. கோதுமை மாவில் நாரின் உள்ளடக்கம் சிறிதளவாக மட்டுமே காணப்பட்டது. உபதானியப் பயிர் மாவிலிருந்து தயாரிக்கப்படும் பிஸ்கட், கேக் ஏற்கக்கூடிய சுவைத் தரத்தைக் கொண்டிருந்தது, ஆனால் கோதுமைமா உற்பத்திகளை விட குறைந்தளவு விருப்பே காணப்பட்டது.

- கோதுமைப்பாணுக்கு 20% வரை மட்டுமே சோளமா சேர்க்கக்கூடியதாக இருந்தது. சோள மாவின் ஆரம்ப இழுபடும் தன்மையாக்கத்தின் மூலம் அதன் கட்டமைப்பு இயல்புகள் அதிகரிக்கப்பட்டது.

- உலக அளவில் ஊறுகாய் போட பாவிக்கப்படும் வெள்ளி தோல் வெங்காயம், சமையலில் அதன் குறைந்த காரத்தன்மை காரணமாக குறைந்த விரும்புந்தன்மையே காணப்பட்டது. வெள்ளித்தோல் வெங்காயத்தினதும், சின்னவெங்காயத்தினதும் ஊறுகாய் தயாரிக்கும் சாத்தியங்கள் 05 பதப்படுத்தும் முறையுடன் பரீட்சிக்கப்பட்டன. 2% மற்றும் 5% உப்பு கலவையில் போடப்பட்ட வெங்காய ஊறுகாயானது விரும்பக்கூடிய சுவையுடைய தரத்தைக் கொண்டிருந்தது.

விதை உற்பத்தி

உற்பத்தியாளர், அத்தாட்சிப்படுத்தப்பட்ட, வர்த்தக விதை உற்பத்தி

- கீழ்வரும் அளவு உற்பத்தியாளர், அத்தாட்சிப்படுத்தப்பட்ட, வர்த்தக விதை உற்பத்தி செய்யப்பட்டு SPMDCக்கு வழங்கப்பட்டதுடன் ஏனைய தொடர்பான நிறுவனங்களுக்கும் FCRDI மகாஇலுபள்ளமவினால் வழங்கப்பட்டது.

அட்டவணை 2.1.2 2011ல் FCRDI னால் உற்பத்தி செய்யப்பட்ட உற்பத்தியாளர் விதை, அத்தாட்சிப்படுத்தப்பட்ட/வர்த்தக விதைகளின் அளவு

பயிர்	வர்க்கம்	உற்பத்தியாளர் விதை உற்பத்தி (Kg)	அத்தாட்சிப்படுத்தப்பட்ட வர்த்தக/ விதை உற்பத்தி (Kg)
சோளம்	கலப்பினச் சம்பத் சோள ஆண் வர்க்கத்தின் பெற்றோருக்குரிய பேதங்கள் பெண்	288.0 438.0	- -
	ரூவான்	89.0	-
குரக்கன்	ராவணா	9.5	
	ஓசாடா	5.5	-
மிளகாய்	எம்.ஐ - பச்சை	-	110.00
	கல்கிரியாகம தெரிவு	8.0	-
	M.I – 2	1.2	-
பயறு	ஆரி	24.0	232.0
	எம்.ஐ – 5	47.5	-
	எம்.ஐ – 6	39.5	-
			-
பெரிய வெங்காயம்	தம்புள்ள தேர்வு தாய்குமிழ் உண்மை விதை	280 0.7	790.0
உழுந்து	எம்.ஐ 1	33.8	-
	அனுராதா	28.5	-
சோளம்	P-b 1	113.0	-
கொளபீ	தவள	27.0	-
	எம்.ஐ -35	11.0	-
	வரூணி	14.5	-
	பொம்பே	22.0	-
வெண்டி	ஹரிதா	58.5	-
	எம்.ஐ - 5	7.5	-
பாகல்	எம். சி 43	3.5	-
முருங்கை	கட்டை இனம்	11.0*	-

- 25ha செய்கைபண்ணுவதற்குரிய நாற்றுக்களை உற்பத்தி செய்ய போதுமானது

தொழில்நுட்ப பரவலாக்கம்

பயிற்சித்திட்டம், வீரிவுரை, பயிற்சிப் பட்டறை வயல்செய்துகாட்டல், பயிர்ச்சிகிச்சை, வயல்விழா, கண்காட்சி, தொழில்நுட்ப ஆலோசனை

இந்த வருடம் மேற்கொள்ளப்பட்ட திட்டங்களின் விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

- மறுவயற்பயிர் உற்பத்தியில் 120க்கு மேற்பட்ட பயிற்சித்திட்டங்கள் விவசாயிகள், மற்றும் பாட சாலை, பல்கலைக்கழகம், தொழில்நுட்பக் கல் லூரி போன்றவற்றின் மாணவர்கள் போன் றோருக்கு வழங்கப்பட்டன. மொத்தமாக 3000 க்கு மேற்பட்டவர்கள் பங்குபற்றினார்கள்.
- வளவாளர்களாக FCRDI விஞ்ஞானிகள் பல்வேறுபட்ட திட்டங்களில் பங்குபற்றினார்கள்
  - 40க்கு மேற்பட்ட வயல் செய்து காட்டல்கள்
  - 02 வயல் விழா
  - 07 பயிர்ச் சிகிச்சை
  - 02 தேசிய கண்காட்சி ''கொவிசத்திய'' மற்றும் 'றயட்ட கிருல'
- தொலைபேசி மூலமும், நிறுவனத்துக்கு வருகை தந்தவர்களுக்குமாக 600 மேற்பட்ட வாடிக்கை யாளருக்கு தொழில்நுட்ப ஆலோசனை வழங்க ப்பட்டது.
- ஏறக்குறைய 1500 தொழில்நுட்ப தகவலட ங்கிய துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்க ப்பட்டன
- ஏறத்தாழ 1500 மறுவயற் பயிர்களின் விதை மாதிரிகள் விவசாயிகளுக்கும் வேறு நிறுவன ங்களுக்கும் இலவசமாக விநியோகிக்கப்பட்டன.
- மூன்று தொழில்நுட்பக்கல்லூரி மாணவர்களும், ஒரு பல்கலைக்கழக மாணவனும் நிறுவனத்தில் தங்களது தாவரப் பயிற்சியை பூர்த்தி செய்தனர்.
- ஒரு பல்கலைக்கழக மாணவன் தனது இறுதி வருட ஆராய்ச்சித் திட்டத்தை நிறுவனத்தில் பூர்த்தி செய்தார்.

தொலைக்காட்சி/வானொலி நிகழ்ச்சி

- FCRDI ன் ஆராய்ச்சியாளர்களின் பங்கு பற்றுத லுடன் நாலு வானொலி நிகழ்ச்சிகள் ஒலிபரப் பப்பட்டன.

புதினப்பத்திரிகைக் கட்டுரைகள்

- இந்த வருடம் புதினப்பத்திரிகையில் இரண்டு கட்டுரைகள் வெளியிடப்பட்டன.

வேறுசெயற்திட்டங்கள்/சேவைகள்

சேதனப்பசளை உற்பத்தி மற்றும் பாவனையை உயர்த்துதல்

- எண்பது தொன் சேதனப் பசளையும் 1500Kg கூட்டெரு புகுத்தியும் உற்பத்தி செய்து விநியோகிக்கப்பட்டது. சணலின் (*Crotalaria juncea)* விதையும் உற்பத்தி செய்யப்பட்டது. இது நிறுவனத்தின் விதை பெருக்க செயற்பாடு மற்றும் பசுந்தாட் பசளையாக்கம் போன்ற வற்றுக்கு பாவிக்கப்படவுள்ளது.

மாதிரி கிராம திட்டம்

- கூட்டெரு தயாரித்தல் மற்றும் பழப்பயிர் கத்தரித்தல் என்பவற்றில் செய்முறைப்பயிற்சித் திட்டமும் விசேடமாக வயல்விழா திட்டமும் எப்பாவல, நல்லாமுடாவ கிராமங்களில் மேற்கொள்ளப்பட்டது. 44பேர் பங்கு பற்றிய ஒரு விசேட வயல்விழாவும் நடாத்தப்பட்டது.
- காலபோகம் 2011/2012ல் விதைப்பெரு க்கத்துக்காக 4 விவசாயிகளுக்கிடையே 15 வர்க்கங்களின் தரமான விதைகள் விநியோ கிக்கப்பட்டது.
- நல்லமடாவ கிராமத்தில் ஐநூறு கட்டை இனமுருங்கைத்தாவரம், 1250Kg கூட்டெரு உட்புகுத்தி, 250 குப்பைவாரி என்பன விவ சாயக் குடும்பங்களுக்கிடையே பகிர்ந்தளி க்கப்பட்டன.

மண் பரிசோதனை

- ஐம்பத்தாறு (56) மண்மாதிரிகள் அனுராதபுரம், மற்றும் மகாவலி H வலயம் அடங்கும் மாகாண மற்றும் மாகாணங்களுக்கிடைப்பட்ட பகுதிக ளின் மேட்டு மற்றும் வயல் நிலங்களிலிருந்து பெறப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்டது. அத்துடன் மண் பரிசோதனை அடிப்படையில் இடவேண்டிய வளமாக்கி மற்றும் சேதனப்பொருள் சிபார்சுக ளும் வழங்கப்பட்டன.

வேறுதிட்டங்கள்

- சல்வீனியா, ஆற்றுவாளை என்பவற்றின் உயிரி யல் கட்டுப்பாட்டுக் காரணி விவசாயிகள், கமக் கார அமைப்புக்கள் மற்றும் அரச அதிகாரிகளு க்கு வழங்கப்பட்டது.

2012ஆண்டுக்கான திட்டம்

ஆராய்ச்சி

சுவைசரக்குப்பயிர்கள்

மிளகாய்

- மானாவாரி மற்றும் நீர்பாசன நிலைமை களுக்குரிய அயன் மகரந்தச் சேர்க்கை செய்ய ப்பட்ட கலப்பின (இருநோக்கம்) வர்க்கங்களின் அபிவிருத்தி.

- கலப்பின அல்லது அயன் மகரந்த ச்சேர்க்கை செய்யப்பட்ட மிளகாய் வர்க்கங்களை புதிய கலப்பின் மூலம் உற்பத்தி செய்தல் மற்றும் புதிதாக அபிவிருத்தி செய்யப்பட்ட கலப்பினங்க ளின் மதிப்பீடும்.

- மிளகாயின் மேம்படுத்தப்பட்ட பேதங்களினதும் பிராந்திய முக்கியத்துவம் வாய்ந்த நாட்டுப்புறப் பேதங்களினதும் மூலவுயிருருக்களை தேர்வு செய்தல், தூய்மைப்படுத்தல், விதைப்பெருக்கம் என்பவற்றினை மதிப்பீடு செய்தல்

- மேம்படுத்தப்பட்ட மிளகாய் இனக்கலப்பு பேதங்க ளுக்கான தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்கப் பரிசோதனையை மேற்கொள்ளல்

- மேம்படுத்தப்பட்ட மிளகாய் பேதங்களுக்கான வர்க்க இசைவாக்க பரிசோதனையை மேற்கொள்ளல்

- வெளிநாட்டிலிருந்து தருவிக்கப்பட்ட மிளகாய் கலப்பின வர்க்கங்களினை மதிப்பீடு செய்தல்

வெங்காயம்

- மேம்படுத்தப்பட்ட பெரிய வெங்காய பேதங் களின் குமிழ் பயிருக்கான தேர்வும் மதிப்பீடும்

- மேம்படுத்தப்பட்ட விதையைத் தருகின்ற பெரிய வெங்காய பேதங்களின் தெரிவும் மதிப்பீடும்

- பருவமல்லாத காலத்துப் பயிர்ச்செய்கைக்கு வெளிநாட்டு பெரிய வெங்காய வர்க்கங் களை மதிப்பீடு செய்தல்

- காலபோகத்தில் குறைந்த வெப்பநிலையின் கீழ் உண்மை விதை உற்பத்திக்குப் பொருத்தமான புதிய பெரிய வெங்காய பேதத்தை மேம்படு த்தல்

- வெங்காயப்பயிரின் கலப்பினப் பிறப்பாக்கமும் தேர்வும்

- நாற்றிலிருந்து உருவான மேம்படுத்தப்பட்ட சின்ன வெங்காய பேதங்களின் மதிப்பீடு

- முன்னேற்றகரமான வெங்காய பேதங்களினதும் தெரிவு செய்யப்பட்ட வகைகளினதும் விதை மற்றும் குமிழ் உற்பத்தி

அவரைப்பயிர்

பயறு

- பயறுக்குரிய கலப்பினப்பிறப்பாக்கம் மற்றும் தேர்வுத் திட்டம்

- பயறு மூலவுயிருருத் தேர்வும் மதிப்பீடும்

- முன்னேற்றகரமான கலப்பின பேதங்களில் தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்கப்பரி சோதனை

- முன்னேற்றகரமான பயறு பேதங்களில் வர்க்க இசைவாக்க பரிசோதனை

உழுந்து

- உழுந்து மூலவுயிருக்களின் மதிப்பீடு
- உழுந்தில் கலப்பினப் பிறப்பாக்கமும் தேர்வும்

கௌபீ

- கௌபீப் பயிரில் கலப்பினப் பிறப்பாக்கமும் தேர்வும்
- கௌபீப் பயிரின் வர்க்க இசைவாக்கப் பரிசோ தனை
- கௌபீப் பயிரில் தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்கப் பரிசோதனை

சோயா அவரை

- AVRDC ல் இருந்து பெறப்பட்ட மரக்கறிச் சோயா அவரையின் மூலவுயிருக்களை மதிப்பீடு செய்தல்
- மேம்படுத்தப்பட்ட சோயா அவரை பேதங்களின் விதைப் பெருக்கம்
- மேம்படுத்தப்பட்ட கொண்டைக்கடலை பேதங்க ளின் விதைப் பெருக்கம்

எண்ணெய் வித்துப் பயிர்கள்

நிலக்கடலை

- மேம்படுத்தப்பட்ட நிலக்கடலை பேதங்களின் விதைப்பெருக்கம்
- நடுத்தர வயதுடைய நிலக்கடலை வர்க்கங்க ளின் வர்க்க இசைவாக்கப் பரிசோதனை
- ''முனை நெக்றோசிஸ்'' நோய்க்கான வர்க்க இசைவாக்கப் பரிசோதனை

கடுகு

- கடுகுப் பயிரின் தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்கப் பரிசோதனை
- கடுகுப் பயிரில் வர்க்க இசைவாக்கப் பரிசோதனை

பெருந் தானியப்பயிர்கள்

சோளம்

- கலப்பின மிக்ஸ் (Hybrid Mix) குடித் தொகையிலிருந்து பெறப்பட்ட சோளத்தின் உள்ளகக் கலப்புகளை அபிவிருத்தி செய்தல், பரம்பரை முன்னேற்றம்
- தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்க பரிசோத னையில் உள்ளூர் உள்ளகக் கலப்பின் மூலம் விருத்திசெய்யப்பட்ட முன்னேற்றகரமான கலப்பி னங்களை மதிப்பீடுசெய்தல்
- வர்க்க இசைவாக்க பரிசோதனையில் QPM கலப்பின சோளத்தின் மதிப்பீடு
- வெளிநாட்டு இனிப்புச் சோளம் மற்றும் கலப்பினச் சோளத்தினது மதிப்பீடு
- முன்னேற்றகரமான கலப்பின மற்றும் பெற்றோர் பேதங்களின் விதை உற்பத்தி
- AYT ல் இந்தோனிசிய OPV சோளத்தின் மதிப்பீடு
- இந்தோனிசிய OPV சோளவர்க்கத்தின் விதை பெருக்கம்
- சோளத்தில் மடல் அழுகல் நோய்க்கான வர்க்க தேர்வுத் தொழில்நுட்பத்தை விருத்தி செய்தல்

குரக்கன்

- தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்க பரிசோத னையிலும், வர்க்க இசைவாக்க பரிசோத னையிலும் குரக்கன் பேதங்களை மதிப்பீடு செய்தல்
- AYT ல் புதிய குரக்கன் பேதங்களின் மதிப்பீடு

ஏனைய உலர் வலையபயிர்கள்

- முன்னேற்றகரமான மினெறி (Meneri) மூவுபிருருக்களைப் பராமரித்தல்
- முன்னேற்றகரமான தினை மூலவுயிருக்களைப் பாதுகாத்தல்
- தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்கப் பரிசோதனை

மரக்கறி

- வெண்டியில் மஞ்சள் நரம்பு சித்திர வடிவ வைரஸ் (YVMV) நோய்க்கு எதிர்ப்பு அல்லது சகிப்புத்தன்மை உள்ளதும், கூடிய விளைவு தரக்கூடிய, விரும்பக்கூடிய காயின் தரம் கொண்ட வர்க்கங்களை மேம்படுத்தல்.
- PGRC ல் இருந்து பெறப்பட்ட வெண்டி மூலவுயிருருக்களை மதிப்பீடு செய்தல்
- முன்னேற்றகரமான வெண்டி பேதங்களில் வர்க்க இசைவாக்கப் பரிசோதனை

பயற்றை/மரக்கறிக் கௌபீ

- PGRC ல் இருந்து பெறப்பட்ட மரக்கறிக் கௌபீ மூலவுருருக்களை மதிப்பீடு செய்தலும், இனக்கலப்பு மற்றும் வர்க்க மேம்பாட்டுக்கான சிறந்த பேதங்களை தேர்வு செய்தலும்
- பயற்றைப் பயிருக்கான தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்கப் பரிசோதனை
- கத்தரிப் பயிருக்கான தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்கப் பரிசோதனை.

பழங்கள்

- கிரேப்ஸ் மற்றும் மா என்பவற்றின் மூல வுயிருருக்களைப் பராமரித்தல்
- ‘‘விளாத்தி’’ மூலவுயிருருக்களை மதிப்பீடு செய்தல்
- மென் விதையுள்ள கொய்யா வர்க்கங்களின் மதிப்பீடு
- மூன்று திராட்சை வர்க்கங்களின் தாய்த் தாவரங்களைப் பராமரித்தல்
- திராட்சைக் கொடி பழக்கப்படுத்தும் முறை யினை மதிப்பீடு செய்தல்
- ட்றகன் பழம் செய்துகாட்டல் துண்டத்தை பராமரித்தல்
- கத்தரிக்கும் காலம் திராட்சைப் பழத்தின் தரம் மற்றும் விளைவில் ஏற்படுத்தும் தாக்கத்தை மதிப்பீடு செய்தல்
- திராட்சைப் பழத்தின் தரத்தை மேம்படுத்துவ தற்காக ஜிபரெலிக் அமிலப் பிரயோகம்
- கறிமுருங்கை செய்துகாட்டல் துண்டத்தை பராமரித்தல்.

பூச்சியல்

- மிளகாய் விளைவிலும், இலைச்சுருள் சிக்கல் நோய் தாக்கத்திலும் வித்தியாசமான நைதரசன் பசளையின் தாக்கத்தை மதிப்பீடு செய்தல்
- மிளகாய் இலைச்சுருள் நோய்க்கு எதிரான பூச்சிநாசினியை தேர்வு செய்தல்
- வெங்காயத்தில் பனிப்பூச்சி தாக்கத்தைக் கட்டுப் படுத்துவதற்கான பூச்சிநாசினியை தேர்வு செய்தல்
- வெங்காயப் பனிப்பூச்சியை கட்டுப்படுத்துவதில் விதை பரிகரணத்தின் தாக்கம்
- கௌபீயில் இலைச்சுரங்க மறுப்பான் தாக்கம் விளைச்சலில் ஏற்படும் குறைவை அறிதல்
- சோளப்பயிரில் பீடையைக் கட்டுப்படுத்துவதற்கு பீடை கொல்லியால் விதைப்பரிகரணம் செய் தலை பரிசோதித்தல்

நோயியல்

- மிளகாய் இலைச்சுருள் வைரஸ் தாக்கத்தினை குறைப்பதில் நிழலின் தாக்கம் பற்றிய ஆய்வு
- காறை அழுகல் நோய்க்கு எதிரான கௌபீ மூலவுயிருருக்களைத் தேர்வு செய்தல்

- கௌபீயில் காறை அழுகல் நோயை முகாமை செய்வதில் உழவின் ஆழம், சூரிய ஒளிக்கு திறந்துவிடல் சேதனப்பசளை சேர்த்தல் என்பவற்றின் கூட்டுத்தாக்கம் பற்றிய ஆய்வு
- அவரைப்பயிரில் அஸ்கோசைற்றா வெளிறல்களை முகாமை செய்யும் நடைமுறையை இனங்காணல்.
- சோளத்தில் பெரிய அளவில் தாக்கும் பங்கஸ் நோய்க்கான பங்கஸ் நாசினியை தேர்வு செய்தல்
- சோளத்தின் நாற்று வெளிறல் நோயை முகாமை செய்தல்

பயிராக்கவியல்

- மிளகாயில் வளர்ச்சி மற்றும் விளைச்சலை உயர்த்துவதற்கு ஒருங்கிணைந்த மண் முகாமைத்துவத்தைப் பரிசோதித்தல்
- மானாவாரி நிலைமையின் கீழ் அவரைப்பயிர் வளர்ப்பதற்குரிய கொத்தணி விதை முறையை அபிவிருத்தி செய்தல்
- பெரிய அளவில் வெங்காயப் பயிர்செய்யும் பகுதிகளில் பெரிய வெங்காயத்தில் நுனிகருகலுக்கான காரணத்தை இனங் காணல்.
- பருவமற்ற காலத்தில் தாய்க்குமிழ் உற்பத்தியின் சாத்தியப்பாடு: முதற்கட்ட ஆய்வினை மேற்கொள்ளல்
- யூரியா, பொட்டாசியம், மற்றும் சலிசிலிக் அமிலம் என்பவற்றினை தூவல் மூலம் பிரயோகிப்பதனால் பயறின் வளர்ச்சி, விளைவு என்பவற்றின் தாக்கம் பற்றிய ஆய்வு

களை முகாமைத்துவம்

- மிளகாய் மற்றும் நிலக்கடலையில் களை கட்டுப்படுத்துவதில் குயிஸலோப் ஈதையில் (Quizalop – p - ethyl) 50g/l EC ன் களை கட்டுப்படுத்தும் திறன் பற்றிய ஆய்வு
- சோளத்தில் ஹலோசல்பியூரொன் - மீதைல் 75WG ன் களையை கட்டுப்படுத்தும் திறன் பற்றிய ஆய்வு
- அவரைப்பயிரில் ''இமேஸிதபைர்'' ன் களை கட்டுப்படுத்தும் திறன்
- சல்.ப்லுபெனசில் (Saflufenacil) 70% WG களை கட்டுப்படுத்தும் திறன்
- சல்.ப்லுபெனசில் 70% WG ன் களைநாசினியின் மீதியாகும் இயல்பின் தாக்கம் பற்றிய ஆய்வு
- சோளத்தில் நிகோசல்பியூரானின் களை கட்டுப்படுத்தும் திறன்
- வெங்காயத்தில் ஒட்சிபுளோபென் 480g/l (a.e) களைநாசினியின் செயற்திறன்

மண்வளம், வளமாக்கி, சுற்றாடல்

- HERP மற்றும் ESSPன் பிரயோகத்தில் சோளப்பயிரின் துலங்கள் தொடர்பு பற்றிய ஆய்வு
- சோளப்பயிரில் ஒருங்கிணைந்த போசணை முகாமைத்துவ முறைக்கு பொருத்தமான சேதனப் பசளையை இனங்காணல்
- மிளகாய்ப் பயிரின் வளர்ச்சியிலும் விளைவிலும் குறுணலாக்கப்பட்ட மற்றும் குறுணலல்லாத யூரியா பிரயோகத்தினது தாக்கம் பற்றிய ஆய்வு
- சோளத்துக்குரிய K வளமாக்கி பிரயோக காலத்தை கண்டறிதல் சோளப்பயிரில் இலை நிற அட்டவணை மூலம் நீண்டகால நைதரசன் தேவையை உறுதிப்படுத்தல்.

மண் பரிசோதனைத்திட்டம்

- உயிர்ப்படல உயிர்வளமாக்கிக்கு சோளப் பயிர் காட்டும் துலங்கல் பற்றிய ஆய்வு

நீர் முகாமைத்துவம்

- செங்கபில மண்ணில் மேற்பரப்பு நீர்பாசனத்தின்கீழ் மேடைப் பாத்திக்குரிய உத்தம பாத்தியின் அளவைத் தீர்மானித்தல் (NARP செயற்திட்டம்)
- செங்கபில மண்ணில் மேற்பரப்பு நீர்பாசன வடிவமைப்பில் மண் ஈரலிப்பு குறையும் விதத்தை உறுதிப்படுத்தல் (NARP செயற்திட்டம்)
- DLIb விவசாயச் சூழலியல் வலையத்தில் நன்கு நீர்வடிப்புள்ள வகுப்பு ''றோடஸ் ரல்ப்ஸ்'' மண்ணில் மிளகாயின் வளர்ச்சியிலும் விளைவிலும் நீர்பாசன இடைவெளி ஏற்படுத்தும் தாக்கம்

உணவு தொழில்நுட்பம்

- இனவிருத்தியாளர்களினால் கையளிக்கப் பட்ட மறுவயற்பயிர்கள், பழங்கள் மரக்கறிப்பயிர்கள் என்பவற்றின் வர்க்கங்கள் மற்றும் இனக்கலப்புப் பேதங்களின் தரத்தை மதிப்பீடு செய்தல்.
- பெறுமதி சேர்க்கப்பட்ட மாவைப் பெறுவதற்கு தானியம் மற்றும் அவரை விதைகளை பாவித்தல்
- தானியப்பயிர்கள் மற்றும் அவரைப்பயிர்களின் அறுவடையின் பின்னான இழப்பின் அளவினை உறுதிசெய்தல்.
- தானியங்கள் மற்றும் அவரையை பயன்படுத்தி தயாரிக்கப்படும் ''ப்றைட்ஸ்னக்ஸ்'' (Fried snaks)ன் தரத்தை மதிப்பீடு செய்தல்.
- மிளகாய் வர்க்கங்களில் பச்சை மிளகாயின் தரத்தை மதிப்பீடு செய்தல்
- சிபார்சு செய்யப்பட்ட மறுவயற்பயிர்களில் அண்ணளவான கூறுகளை மதிப்பீடு செய்தல்.

உற்பத்தியாளர் விதை உற்பத்தி

- சிபார்சு செய்யப்பட்ட வர்க்கங்களில் உற்பத்தியாளர் விதை உற்பத்தி: மிளகாயில் (MI – கிறீன் மற்றும் MI – 2), சோளத்தில் (பத்ரா, ரூவான், சமபத்x சம்பத் பெற்றோர் பேதங்கள்), குரக்கனில் (ஒசாடா, ராவணா), பயறில் (MI – 5, MI – 6, மற்றும் ஆரி) உழுந்தில் (MI – 1, அனுராதா) கௌபீல் (தவள, MI – 35, வருணி மற்றும் பொம்பே), சோய அவரையில் (PB – 1), மரக்கறி பயிற்றையில் (BS 1), தக்காளி (KC-1), வெண்டியில் (ஹரிதா), பாகலில் (MC-43) மேற்கொள்ளல்.
- சிபார்சு செய்யப்படட வெங்காய வர்க்கங்களில் இனவிருத்தித் தாய்க்குமிழ் மற்றும் விதை உற்பத்தி மேற்கொள்ளல்.

தொழில்நுட்பப் பரவலாக்கம்

- ஆராய்ச்சி கண்டுபிடிப்புக்களின் ஆராய்ச்சி கட்டுரை வெளியீடு
- மாகாண தொழில்நுட்ப வேலை குழுக் கூட்டம் மற்றும் பருவகால மீளாய்வு கூட்டம் எனபவற்றுக்கூடான தகவல் பரிமாற்றம்
- பயிற்சிதிட்டம், விரிவுரை, பயிற்சிப்பட்டறை, வயல் செய்துகாட்டல், பயிர்சிகிச்சை, வயல் விழா, கண்காட்சி, தொழில்நுட்ப ஆலோசனை, என்பவற்றின் மூலமும் பொதுசன ஊடகங்களான, தினசரிகளில் கட்டுரை, தொலைக் காட்சி, வானொலி நிகழ்ச்சிகள் என்பவற்றின் மூலமும் தொழில்நுட்பத்தை விஸ்தரித்தல்.

உத்தியோகத்தர் பட்டியல்

பதவியணி	**எண்ணிக்கை**
பணிப்பாளர்	01
பிரதிப்பணிப்பாளர்	02
ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள்	30
விவசாயப் பொருளியலாளர்	01
நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்	04
ஆராய்ச்சி உதவியாளர்	16
விவசாயப் போதனாசிரியர்	01
ஆராய்ச்சி உப உதவியாளர்	09
பொது முகாமைத்துவ உதவியாளர் சேவை	16
அலுவலக ஊழியர்	01
சாரதி	01
தாவர ஒட்டுனர்	05
களஞ்சியக் காப்பாளர்	01
அரச விடுதிக் காப்பாளர்	01
உழவு இயந்திர இயக்குநர்	04
காவலாளி	08
தொழிலாளி	142
ஒப்பந்த அடிப்படைத் தொழிலாளி	224
மொத்தம்	**467**

2.1.1 தானியப்பயிர் மற்றும் எண்ணெய் வித்துப் பயிர் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம் (GLORDC), அங்குனுகொலபலஸ்ஸ

அம்பாந்தோட்ட மாவட்டத்தில் அமைந்துள்ள தானிய ப்பயிர் மற்றும் எண்ணெய் வித்துப்பயிர் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையமானது எண்ணெய்ப்பயிர் மற்றும் தானியப்பயிர்களுக்கான தொழில்நுட்பத்தை அபிவிரு த்தி செய்வதோடு பிராந்தியத்தின் கீழ் உள்ள பழப் பயிர், மரக்கறிப்பயிர்களின் தொழில்நுட்பத்தையும் அபிவிருத்தி செய்கின்றது. சிறீலங்காவின் உலர்வ லையத்தில் மானாவாரி மற்றும் நீர்ப்பாய்ச்சல் சுற்றாடல் நிலைமைகளின் கீழ் கூடிய விளைச்சலும், இசைவாக்கமும், ஏற்றுக்கொள்ளக்கூடிய இயல்பும் கொண்ட மறுவயற்பயிர்களை, விசேடமாக எண் ணெய் வித்துப்பயிர் மற்றும் தானியப் பயிர்களை அபிவிருத்தி செய்தல், பீடை, நோய், களை என்பவ ற்றால் ஏற்படும் பயிர் நட்டத்தை குறைப்பதற்கான பயிர்பாதுகாப்பு உத்தியை அபிவிருத்தி செய்தல், முன்னேற்றகரமான பயிராக்கவியல் நடவடிக்கைக ளின் மூலம் நிலம், பயிர், என்பவற்றின் உற்பத்தி திறனை அபிவிருத்தி செய்தல், உற்பத்திச் செலவைக் குறைத்தல், உலர்வலய பயிர் வளரும் சுற்றாடலில் முன்னேற்றகரமான மண் மற்றும் நீர்முகாமைத்துவத்துடன் மண்பாதுகாப்பு முறையை யும் அபிவிருத்தி செய்தல், புதிய மேம்படுத்தப்பட வர்க்கங்களினும், தொழில்நுட்பத்தினதும் இசைவா க்கப் பரிசோதனை செய்தல் என்பன இந்நிலைய த்தின் நோக்கமாகும்.

பாதீடு

அட்டவணை 2.1.2.1: பாதீடு 2011 (ரூபா)

செலவு விடயம்	ஒதுக்கீடு	செலவு	செலவு %
மூலதன செலவு	10,980,000	8,786,669	80
மீண்டுவரும் செலவு	14,001,200	13,593,178	97
செயற்திட்டம்			
• ஈரலிப்பு நெருக்கடிக்கு சகிப்புள்ள கௌபீ வர்க் கங்களின் மேம்பாடு	755,000	78,608	100
• தென் மற்றும் ஊவா மாகாணங்களின் நிலக்கடலை பயிரிடும் இடங்களின் மண்ணின் தற்போதைய நிலை	460,000	234,817	51
• பிடிப்புள்ள பயிராக பொருத்தமான பயறு வர்க்கங் களை அபிவிருத்தி செய்தல்.	315,000	305,198	97
• பயிரில் மஞ்சள் சித்திரவடிவ வைரஸ் நோயைத் தடுப்பதற்கு காத்திரமான முறையை ஆய்வு மூலம் இனங்காணல்	613,800	611,661	100
• வெள்ளை வித்தும் உயர் விளைவும் கொண்ட எள் வர்க்கத்தை விருத்தி செய்தல்	609,500	46,703	77
• பெரியவித்தும் உயர் விளைவுமுடைய நிலக்கடலை வர்க்கத்தை விருத்தி செய்தல்	348,000	328,592	94
• கடுகு பயிரில் வர்க்க மேம்பாட்டுத் திட்டம்	1,420,000	1,112,750	78
• சித்திரஸ் வர்க்கங்களின் மதிப்பீடு	100,000	80,888	81
• மரக்கறிக் கௌபீ திட்டம்	75,000	75,000	100
• பூசணி அபிவிருத்தித் திட்டம்	400,000	360,659	90
• உள்ளூர் கலப்பினச் சோளம் சம்பத்தின் வர்க்க விருத்தி, விதை உற்பத்தி மேம்படுத்தல்	300,000	305,106	102
• சேதனப்பயிர் உற்பத்தி	1,000,000	906,744	91
• கலப்பின வர்க்க விதை உற்பத்தி	228,350	214,013	94
• மாதிரிக் கிராமத் திட்டம்	100,000	48,780	49
• காணி அபிவிருத்தித் திட்டம் (AWRN)	7,000,000	6,958,835	
மொத்தம்	**38,705,850**	**35,143,511**	**91**

முன்னேற்றம்

ஆராய்ச்சி

தாவர இனங்கலப்பு (பயிர் மேம்பாடு)

எண்ணெய்ப்பயிர்

- முனை நொக்ரோசிஸ் நோய்க்கு சகிப்புத்தன் மையுள்ள வர்க்கங்களில் இசைவாக்க பரிசோ தனை – 02 பேதங்கள் இசைவாக்க பரிசோத னைக்காக தேர்வு செய்யப்பட்டன 06 இடங்க ளில் 02 பரிசோதனைகள் முழுமையாக்கப் பட்டன.
- நடுத்தர வயதுடைய நிலக்கடலை வர்க்க ங்களின் வர்க்க இசைவாக்க பரிசோதனை – VATக்காக இரண்டு பேதங்கள் தேர்வு செய்யப்பட்டன. 05 இடங்களில் 02 பரிசோத னைகள் முழுமையாக்கப்பட்டன.
- சிவப்பு நிற வித்துக்களை கொண்ட நிலக்க டலை வர்க்கங்களில் வர்க்க இசைவாக்கப் பரிசோதனை – 06 இடங்களில் 02 பரிசோத னைகள் முழுமையாக்கப்பட்டன.
- வளவ, இந்தி, டிகிரி, திஸ்ஸ போன்ற நிலக் கடலை வர்க்கங்கள் ஒவ்வொன்றிலும் 20Kg அடிப்படை விதை உற்பத்தி செய்யப்பட்டது.
- பெரிய விதையுடைய நிலக்கடலை வர்க்க ங்களில் பேதமதிப்பீடு – 15 பேதங்கள் இயல்பு படுத்தப்பட்டன அவற்றின் 07 பேதங்கள் தேர்வு செய்யப்பட்டன.
- நடுத்தர வயதுடைய நிலக்கடலையில் பேத மதிப்பீடு - 10 பேதங்கள் தேர்வு செய்யப்பட்டன
- வளவ, இந்தி, டிகிரி, திஸ்ஸ நிலக்கடலை வர்க்கங்களில் உற்பத்தியாளர் விதை உற்பத்தி – வளவ 101.7kg, டிகிரி 130kg, இந்தி 139kg, திஸ்ஸ 190.3kg உற்பத்தி செய்யப்பட்டது.
- 04 நிலக்கடலை பேதங்களில் எதிர்கால தேவைக்காக விதை பெருக்கம் - ஒவ்வொரு பேதத்திலும் 20kg உற்பத்தி செய்யப்பட்டது.
- கறுப்பு விதை எள்ளின் பேத மதிப்பீடு- 6 பேதங்கள் தேர்வு செய்யப்பட்டன.
- உமா எள்ளு வர்க்கத்தில் உற்பத்தியாளர் விதை உற்பத்தி – உமா வர்க்கத்தில் 12.7Kg விதை உற்பத்தி செய்யப்பட்டது.
- தேர்வு செய்யப்பட்ட 07 கடுகு பேதங்களின் விதைப் பெருக்கம் - ஒவ்வொரு பேதத்திலும் 02 Kg விதை உற்பத்தி செய்யப்பட்டது.

அவரைப்பயிர்கள்

- $16F_1$ சந்ததியின் கலப்பின மேம்பாடு - 16 பேதங்கள் F2 சந்ததிக்காக தேர்வு செய்யப்பட்டன.
- தேர்வு செய்யப்பட்ட ஏககால முதிர்வுடைய பயறு பேதங்களின் PYT -07 பேதங்கள் தேர்வு செய்யப்பட்டன.
- தேர்வு செய்யப்பட்ட பயறு பேதங்களின் MYT – 07 பேதங்கள் தேர்வு செய்யப்பட்டன.
- வெளியிடப்பட்ட வர்க்கங்களின் விதைப்பெரு க்கம்; பயிர்த் துண்டங்கள் தாபிக்கப்பட்டுள்ளன.
- கலப்பினத் திட்டம் II – (தேர்வு செய்யப்பட்ட பயறு கலப்பினப் பரம்பரை இயல்பு மற்றும் வேறுபாடான இயல்பு) – பரிசோதனை தாபிக்கப்பட்டுள்ளது.
- தரமான புரதத்துக்கான பின்னாமுங் (Pinnamung) ன் மூலவுயிருருவை அடையாளம் காணல் - பரிசோதனை நடைபெறுகின்றது.
- நோய் பீடைகளுக்கு எதிர்ப்புடைய கௌபீ மூலவுயிருருக்களை வயல் நிலைமையில் மதிப்பீடு செய்தல் - 03 பேதங்கள் தெரிவு செய்யப்பட்டன
- சிறந்த முன்னேற்றகரமான நடுத்தர வயது டைய கௌபீ வர்க்கங்களின் தேர்வு (MYT) வயல் நிலமையின் கீழ் 10 பேதங்கள் தேர்வு செய்யப்பட்டன.

- நல்ல பயிர்கட்டமைப்புடன் உயர்விளைவுடைய குறுகிய/நடுத்தர (60-75 நாள்கள்) வயது வர்க்கத்தின் அபிவிருத்தி (F_3 சந்ததியின் மதிப்பீடு) வயல் மதிப்பீட்டின் கீழ் 10 இனங் கலப்புக்களின் F_3 சந்ததிகள் உள்ளன.
- பெரும்போக மானாவாரிக்கு ஏற்ற நடுத்தர வயதுடைய கௌபீ வர்க்கத்தை விருத்தி செய்தல் - கலப்பினப் பிறப்பாக்கத் திட்டம் - பத்து இனங்கலப்புகள் நடைபெற்றது.
- NCVTக்கு பிரேரிக்கப்பட்ட கௌபீ பேதங்களின் விதை பெருக்கம் - தேர்வு செய்யப்பட்ட 06 பேதங்கள் 07 இடங்களில் கள மதிப்பீட்டின் கீழ் உள்ளன. மேலும் 14 பேதங்கள் கள மதிப்பீட்டின் கீழ் உள்ளன.
- கொள்ளுப்பயிரில் மூலவுயிருரு மதிப்பீடு – தேர்வு செய்யப்பட்ட 05 பேதங்கள் 07 இடங்களில் கள மதிப்பீட்டின் கீழ் உள்ளன.
- NCVTக்கு குறிப்பிட்ட கொள்ளு பேதங்களின் விதைப்பெருக்கம்

பயிராக்கவியல்

- "பம்பரா" நிலக்கடலையில் பயிர்ச்செறிவின் தாக்கத்தை மதிப்பீடு செய்தல் - உத்தம நடுகை இடைவெளி கண்டுபிடிக்கப்பட்டது.
- கௌபீ புதிய வர்க்கங்களின் பயிர் இடைவெளியின் சிபார்சை உறுதிப்படுத்தல் - உத்தம பயிர் இடைவெளி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. முடிவு அடுத்த வருடம் உறுதிப்படுத்தப்படும்.
- கடுகுப் பயிர்செய்கையில் பயிர் இடைவெளியின் தாக்கத்தை மதிப்பீடு செய்தல் - ஒரு பருவத்துக்கான பரிசோதனை முழுமையாக்கப்பட்டுள்ளது. முடிவு அடுத்த வருடம் உறுதி செய்யப்படும்.
- கௌபீ வர்க்கங்களின் மதிப்பீடு (NCVT) – ஒரு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- வர்க்க மதிப்பீடு – குரக்கன் (NCVT) – 1வது பரிசோதனை முழுமையாக்கப்பட்டுள்ளது. 2வது பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- வர்க்க மதிப்பீடு – கொள்ளு (NCVT) – ஒரு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- வர்க்க மதிப்பீடு – மிளகாய் (NCVT) – 1வது பரிசோதனை முழுமையாக்கப்பட்டுள்ளது. 2வது பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

உயிர் தொழில்நுட்பம்

- தாவரவியல் பூச்சி நாசினியாக பயன்படுத்துவதற்காக உள்ளூர் மூலிகைகளைப் பயன்படுத்தல்; 13 தாவர சாதிகளிலிருந்து (ஆத் தோறா, எகெல, போகன்வில, கும்பக்) ஆகிய 04 தேர்வு செய்யப்பட்டு மதிப்பீட்டின் கீழ் உள்ளன.
- நிலக்கடலையில் செலறோடியம் ரொப்சி (*Selerotium rolfsii*) ஐ கட்டுப்படுத்துவதில் தாவர உற்பத்திகளின் பங்கு பற்றிய ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.
- மேற்குறித்த தேர்வு செய்யப்பட்ட தாவர மூலிகைகளின் பங்கசை அழிக்கும் செயற் பாட்டை மதிப்பீடு செய்தல்.
- பப்பாசி வளையப்புள்ளி வைரஸ் நோய்க்கு எதிர்ப்புள்ளதும் சிறந்த தரமான பழங்களுடன், கூடிய அளவு விளைச்சல் பண்புகளும் கொண்ட பப்பாசி இனம்/இனங்களை விருத்தி செய்தல்.
- வளையப்புள்ளி வைரஸ் நோய்க்கு எதிர்ப்பு இயல்புடன் கூடிய உள்ளூரில் கிடைக்கக்கூடிய பப்பாசி பேதங்கள் சேகரிக்கப்பட்டு மதிப்பீட்டுக்காக தாபிக்கப்பட்டது.
- தும்பை மற்றும் வாழை பயிர்களின் வைரஸ்க்கு சகிப்புத்தன்மையுள்ள நுன் இனப்பெருக்க வழி முறைகளை அபிவிருத்தி செய்தல் - பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது

நோயியல்

- ''றைகோடேர்மா ஹார்சினா'' வை பயன்படுத்தி ஸ்கெலறோரியம் றொல்ப்சி'' ஐ கட்டுப்படுத்துவதற்கு சிறந்த முறையை அடையாளம்

காணுதல் - முடிவுகளை உறுதிப்படுத்துவதற் காக ஆராய்ச்சி தொடரப்படவுள்ளது.

- நிலக்கடலையில் "ஸ்கெலறேரிக்கம் றொல்பசி" யை கட்டுப்படுத்துவதில் தாவர பகுதிகளின் செயற்றிறன் ஆய்வு. முடிவை உறுதிப்படுத்துவ தற்காக ஆராய்ச்சி தொடரப்படவுள்ளது.
- தண்டு வேர் அழுகல் நோயிக்குரிய எள்ளு பேதங்களின் தேர்வு – ஆராய்ச்சி தொடர்கிறது. சகிப்புத்தன்மையுள்ள ஆறு பேதங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

பூச்சியியல்

- கடுகுப் பயிர்ச் செய்கையுடன் தொடர்புடைய முக்கிய பீடைகளை இனம்காணலும் முகாமை செய்தலும்.
- நாசினிகள் விசிறப்படாத நிலையின்கீழ் பங்கசுக்களின் பல்லினத் தன்மை பற்றிய தகவல் சேகரிப்பு ஆய்வு
- களஞ்சியத்தில் *கலேசோவுனூாக்ஸ் மாகுலேற்ஸ்* ஐ கட்டுப்படுத்துவதற்கான வெப்பம் அல்லது குளிர் நிலையின் உத்தம அளவை அடையா ளம் காணல் - ஆராய்ச்சி நடைபெறுகிறது.
- மஞ்சள் சித்திரவடிவ வைரஸின் தாக்கத்தினை குறைப்பதில் வேறு பயிர்செய்கை நடை முறைகள் செலுத்தும் செல்வாக்கை மதிப்பீடு செய்தல்
- பயறில் இலைச் சித்திரவடிவ நோய்யை கட்டுப்ப டுத்துவதற்கான வினைத்திறனான பராமரிப்பு முறையை இனங்காணல் - 07 முறைகள் தெரிவு செய்யப்பட்டன. இரு இணைந்த முறை கள் தெரிவுசெய்யப்பட்டன.
- இலைச்சித்திரவடிவ வைரஸ் நோய்க்கு எதிர்பு ள்ள பயறு மூலவுயிருருக்களை மதிப்பீடு செய் தல். 06 தொடர்புகள் இனங்காணப்பட்டன.

மண் விஞ்ஞானம்

- தற்போதய கந்தகத்தின் அளவு மற்றும் கந்தக த்தின் சிபார்சின் அளவை இனம் காணல் - இரு பரிசோதனைகள் நடைபெற்று 350 மாதிரிகள் பரீசிலிக்கப்பட்டுள்ளன.
- பல்வேறு பயிர்செய்கை நிலைமையின் கீழ் மறுவயற்பயிர்களின் போசணைத் தேவை – 05 வெவ்வேறு மட்டங்களில் Zn தேவை பரிசோ திக்கப்பட்டது. இதன் தேவை 20Kg/ஹக் என்ற அளவில் இருந்தது.

மரக்கறிப்பயிர் மேம்படுத்தல்

- தும்பை பயிர் மேம்பாடும் உற்பத்தித் திட்டமும்
- கலப்பின வெண்டி வர்க்க அபிவிருத்தித் திட்டம் 72 கலப்பினங்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.
- கலப்பினப் பூசணி வர்க்க அபிவிருத்தித் திட்டம் 46 மூலவுயிருருக்கள் சேகரிக்கப்பட்டுள்ளன.
- "பம்பரா" நிலக்கடலை அபிவிருத்தித்திட்டம் 650 Kg/ஹெக் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.
- மரக்கறிப் பயிரில் வர்க்க அபிவிருத்தித் திட்டம் - மூன்று பேதங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.
- கத்தரியில் வர்க்க அபிவிருத்தி திட்டம் - இரண்டு பேதங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

2012 க்கான திட்டம்

தாவரஇனங்கலப்பு – எண்ணெய்ப்பயிர்

- நிலக்கடலை 'முனை நெக்றோசிஸ்' நோய்க்கு எதிர்ப்புள்ள வர்க்கங்களில் வர்க்க இசைவாக்கப் பரிசோதனை.
- நடுத்தர வயதுடைய நிலக்கடலை வர்க்க ங்களின் வர்க்க இசைவாக்கப் பரிசோதனை
- சிவப்பு நிற விதையுடைய நிலக்கடலை வர்க்க ங்களின் வர்க்க அனுசரணைப் பரிசோதனை
- பெரிய வித்துள்ள நிலக்கடலை வர்க்கங்களில் ஆரம்ப விளைவுப் பரிசோதனை
- திஸ்ஸ, இந்தி, வளவ, டிக்ரி ஆகிய நிலக் கடலை வர்க்கங்களின் அடிப்படை விதை உற்பத்தி

- எதிர்கால விதைத்தேவைக்காக 04 நிலக்கடலை தெரிவுகளின் விதைப் பெருக்கம்.
- கறுப்பு விதை கொண்ட எள்ளில் ஆரம்ப விளைவுப் பரிசோதனை
- எள்ளின் மாலி மற்றும் உமா வர்க்கங்களின் உற்பத்தியாளர் விதை உற்பத்தி
- தேர்வு செய்யப்பட்ட கடுகு பேதங்களின் விதை பெருக்கம்

அவரைப்பயிர்

- பயறில் 16 F_1 சந்ததியின் கலப்பினப் பிறப்பாக்கமும் மேம்பாடும்
- தேர்வு செய்யப்பட்ட ஏககால முதிர்வுடைய பயறுப் பேதங்களில் ஆரம்ப விளைவுப் பரிசோதனை
- தேர்வு செய்யப்பட்ட பயறுப் பேதங்களில் பெரிய அளவிலான விளைவுப் பரிசோதனை
- விதைப் பெருக்கம் (சிபார்சு செய்யப்பட்ட பயறு வர்க்கங்களில்)
- கலப்பினப் பிறப்பாக்கத் திட்டம் (தேர்வு செய்யப்பட்ட பயறு கலப்புக்களில் பல்லினங்கத் தன்மையும், பிறப்புரிமைத் தன்மையும்.)
- தரமான புரத்துக்கான ''பின்னாமுங்'' மூல வுயிருருக்களை இனங்காணல்
- தேர்வு செய்யப்பட்ட பேதங்களில் தேசிய ஒருங் கிணைக்கப்பட்ட வர்க்கப் பரிசோதனை
- தேர்வு செய்யப்பட்ட பயறு பேதங்களின் வர்க்க இசைவாக்க பரிசோதனை
- நோய் பீடை எதிர்ப்பு மற்றும் விளைவுக்காக கௌபீயின் மூலவுயிருருக்களை இனங் காணல்
- தேர்வு செய்யப்பட்ட நடுத்தர வயதுடைய கௌபீ பேதங்களின் பெரிய அளவிலான விளைவுப் பரிசோதனை
- நடுத்தர கௌபீ பேதங்களின் ஆரம்ப விளைவுப் பரிசோதனை.
- சிறந்த தாவரக்கட்டமைப்புடைய, கூடிய விளை வுடைய குறுகிய/நடுத்தர வயதுடைய கௌபீ வர்க்கங்களினை (65-75 நாள்கள்) அபிவிருத்தி செய்தல். (F3 பரம்பரை மதிப்பீடு).
- காலபோக மானாவரிக்காக நடுத்தர வயது டைய கௌபீ வர்க்கங்களின் கலப்பினப் பிறப்பாக்கம்.
- தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்க பரிசோத னையில் உட்படுத்தப்படும் கௌபீ பேதங்களின் விதைப்பெருக்கம்
- கொள்ளின் மூலவுயிருருவின் மதிப்பீடு
- தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்க பரிசோத னைக்கு உட்படுத்தப்படும் கொள்ளு பேதங்க ளின் விதைபெருக்கம்

பயிராக்கவியல்

- பம்பரா நிலக்கடலையின் பயிர் அடர்த்தியானது பயரின் விளைவில் ஏற்படுத்தும் தாக்கத்தை மதிப்பீடு செய்தல்
- புதிய கௌபீ வர்க்கங்களில் பயிர் இடைவெளி சிபார்சினை உறுதிப்படுத்தல்.
- கடுகுப் பயிர்செய்தலில் பயிர்செறிவின் தாக்க த்தை மதிப்பீடு செய்தல்
- தேர்வு செய்யப்பட்ட கௌபீ பேதங்களில் தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்க பரிசோத னையை மேற்கொள்ளல்
- தேர்வு செய்யப்பட்ட குரக்கன் பேதங்களின் தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்க பரிசோத னையை மேற்கொள்ளல்
- தேர்வு செய்யப்பட்ட மிளகாய் பேதங்களில் தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்க பரிசோதனை
- தேர்வு செய்யப்பட்ட கொள்ளு பேதங்களில் தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்கப் பரிசோ தனை.

- மானாவாரி கௌபீ செய்கையின் நிலைபேறான தன்மையில், உள்ளக மழை நீர் அறுவடையின் தாக்கம்
- தென்பகுதி உலர்வலயத்தில் (DLIb, DL5) மானாவரி விவசாய பயிர்செய்கை முறை பற்றிய ஆய்வு
- மானாவாரியாக பயிர்செய்யப்படும் பயறில் வரட்சிதாக்கத்துக்கு ஈடுகொடுக்கும் தன்மையில் குறைநிரப்பு நீர்பாசனத்தின் தாக்கம் பற்றிய ஆய்வு
- எள்ளுக்கான உத்தம நடுகைக்காலத்தைக் காணுதல்
- நிலக்கடலையில் (*அரக்கிஸ் கைபோஜியா L*) நீர்பற்றாக்குறை வேறுபட்ட வளர்ச்சி நிலைக ளில், விளைவில், போசணைக் கட்டமைப்பில் ஏற்படுத்தும் தாக்கம் பற்றிய ஆய்வு.

களை விஞ்ஞானம்

- நிலக்கடலையின் விளைவில் பாதிப்பை ஏற்படு த்துகின்ற பயிருக்கும் களைக்கும் இடையிலான ஆபத்தான போட்டிக்காலத்தை உறுதிப்படுத்து வதற்கான ஆய்வு

மண் விஞ்ஞானம்

- கலப்பினச் சோளத்தின் (வர்க்கம் - சம்பத்) வளர்ச்சியிலும் விளைவிலும் நைதரசன், நாகத் தினது தாக்கம் பற்றிய ஆய்வு
- வேறுபட்ட சேதனப்பொருட்களின் மொத்த மற்றும் மண்ணில் கிடைக்கூடிய நைதரசின் ஆய்வு
- பம்பரா நிலக்கடலைக்கான பசளைச் சிபார்சு
- தும்பைப் பயிர்ச் செய்கைக்கான் பசளைச் சிபார்சு

நீர் முகாமைத்துவம்

- இலங்கையின் வெவ்வேறு உலர்வலைய மண்ணின், வேறுபட்ட மேற்பரப்பு நீர்பாசனத் திட்டமிடலுக்கான உத்தம பாத்தி அளவை உறுதி செய்தல் (NARP திட்டம்)
- இலங்கையின் DLIb மற்றும் DL5 விவசாய சூழலியல் வலயங்களில் பயறின் பயிர்குணகம் மற்றும் நீர்த்தேவையை உறுதி செய்தல்
- அங்குணகொலபலஸ பண்ணை நிலத்தின் உவர்த்தன்மை மண் படத்தை அபிவிருத்தி செய்தல்

உயிர் தொழிநுட்பம்

- உள்ளூர் மூலிகைச் செடிகளை, தாவர பீடை கொல்லியாக பயன்படுத்துவதற்காக மதிப்பீடு செய்தல்
- நிலக்கடலையில் *''ஸ்கெலரோறியம் றொல்ப்சி''* ஐ கட்டுப்படுத்திவதில் தாவர உற்பத்திகளின் செயற்திறன் பற்றிய ஆய்வு
- பப்பாசி வளையப்புள்ளி நோய்க்கு எதிர்ப்புள்ள தும் சிறந்த தரமுள்ள பழம், தருவதுமான பப்பாசி இனம் அல்லது இனங்களை விருத்தி செய்தல்
- வாழையில் பியூசாரியம் வாடல் நோய்க்கு எதிர்பு அல்லது சகிப்புத்தன்மையுள்ள விகார ங்களை தோற்றுவித்தல்
- தும்பை (மெமேடிக்கா டியோகா) பயிருக்கு ஏற்ற நுண் இனப்பெருக்க தொழில்நுட்பத்தை அபிவிரு த்தி செய்தல் - பரிசோதனை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

நோயியல்

- *றைக்கோடோமா ஹர்சியானா* வை பயன்படுத்தி *ஸ்கெலரோறியம் றொல்ப்சி* யைக் கட்டுப்படுத்து வதற்கான சிறந்த முறையை இனங்காணல்
- நிலக்கடலையில் *ஸ்கெலரோறியம் றொல்ப்சி ஐ* கட்டுப்படுத்துவதில் தாவர பிரித்தெடுப்பின் உயிர் செயற்திறன் பற்றிய ஆய்வு
- எள்ளின் தண்டுவேர் அழுகல் நோய்க்கான பேதங்களை கண்டறிதல்

பூச்சியல்

- பயறில் மஞ்சள் சித்திரவடிவ வைரஸ் தொற்றலை தடுப்பதற்கு, சாத்தியமான முகாமைத்துவ முறையை இனம் காணல்
- பயறில் மஞ்சள் சித்திரவடிவ வைரஸ் தாக்கத்தின் தன்மையில் ஒருங்கிணைந்த தொழில்நுட்பத்தின் தாக்கம் பற்றி ஒப்பிடுதல்
- மஞ்சள் சித்திரவடிவ வைரஸ்க்கு சகிப்புத்தன்மையைக் கொண்ட பயறு மூலவுயிருருக்களை தேர்வு செய்தல்
- கடுகு பயிர்ச் செய்கையில் கூடுதல் தேசம் விளைவிக்கும் பீடைகளை கட்டுப்படுத்த வினைத்திறனான கட்டுப்பாட்டு முறையை அபிவிருத்தி செய்தலும், பிரதேசத்துக்குரிய தாவரப் பல்வகைமையை இனம்காணலும்
- களஞ்சிய நிலைமையின் கீழ் *கலோசோவு றூசஸ் மக்குலேறஸ்* ஐ கட்டுப்படுத்துவதற்குரிய உத்தம வெப்பம் அல்லது குளிர் நிலையை கண்டறிதல்

உணவு விஞ்ஞானமும், தொழிநுட்பமும்

- இலங்கையில் பயிர்செய்யப்படும் பயறு இனங்களின் போசணை நிலையின் மதிப்பீடு.

பூங்கனியியல் பிரிவு

மரக்கறிப்பிரிவு

- சிபார்சு செய்யப்பட்ட தும்பை இனங்களில் பெண் தாவரங்களை ஸ்தாபித்தலும் பராமரித்தலும்
- தும்பை மூலவுயிருருக்களை பராமரித்தலும் பாதுகாத்தலும்
- சிபார்சு செய்யப்பட்ட தும்பை இனங்களின் நடுகைப்பொருள் உற்பத்தி
- பூசணியில் மூலவுயிருருக்களை சேகரித்தல், மதிப்பீடு செய்தல், மற்றும் தேர்வு செய்தல்
- கலப்பின வெண்டியின் வர்க்க அபிவிருத்தித்திட்டம்
- பூசணியில் கலப்பினப் பிறப்பாக்கம்
- பம்பரா நிலக்கடலையில் செய்யக்கூடிய ஆய்வுகள்
- மரக்கறிகௌபீயில் தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்கப் பரிசோதனை
- கலப்பினக் கத்தரியின் தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்கப் பரிசோதனை

பழமரப் பிரிவு

- இலங்கையின் உலர்வலயம், இடைவலையம் என்பவற்றிலிருந்து விளாத்தி மூலவுயிருருக்களை சேகரித்தல், ஸ்தாபித்தல், மதிப்பீடு செய்தல்.
- இலங்கையின் உலர்வலயம், இடைவலையம் என்பவற்றிலிருந்து தேசி மூலவுயிருருக்களை சேகரித்தல், ஸ்தாபித்தல், மதிப்பீடு செய்தல்.
- இலங்கையின் வலயங்களில் கிடைக்கக்கூடிய மாதுளை மூலவுயிருருக்களை சேகரித்தல், ஸ்தாபித்தல், மதிப்பீடு செய்தல்.
- ''ரத்னா'' பப்பாசி வர்க்கத்தின் உற்பத்தியாளர் விதை உற்பத்தி
- இலங்கையின் வலயங்களில் கிடைக்கக்கூடிய புளி வாழை மூலவுயிருருக்களை ஸ்தாபித்தலும், மதிப்பிடுதலும்
- நாடு தழுவிய இழைய வளர்ப்புத் திட்டத்துக்கு நோயற்ற தாய்த்தாவரத்தை பெறுவதற்காக வாழைத் தோட்டத்தை தனிமைப்படுத்தல்.
- இலங்கையின் வலயங்களில் பெறக்கூடிய கொய்யா மூலவுயிருருக்களை சேகரித்தல், ஸ்தாபித்தல், மதிப்பீடு செய்தல்.
- இலங்கையின் வெவ்வேறு வலயங்களில் பெறக்கூடிய வத்தகை மூலவுயிருருக்களை சேகரித்தல், ஸ்தாபித்தல், மதிப்பீடு செய்தல்.

உத்தியோகத்தர் பட்டியல்	
பதவியணி	**எண்ணிக்கை**
1. மேலதிகப்பணிப்பாளர்	01
2. ஆராய்ச்சி உத்தியோகத்தர்	17
3. நிர்வாக உத்தியோகத்தர்	01
4. நிகழ்ச்சி திட்ட உதவியாளர்	01
5. விவசாயப் போதனாசிரியர்	07
6. பொதுமுகாமைத்துவ உதவியாளர் சேவை	06
7. பண்ணை லிகிதர்	01
8. ஆராய்ச்சி உதவியாளர் (விசேட தரம்)	01
9. ஆராய்ச்சி உதவியாயளர்	11
10. ஆராய்ச்சி உப உதவியாளர்	03
11. அலுவலக ஊழியர்	01
12. சாரதி	08
13. புல் வெட்டும் இயந்திர இயக்குனர்	02
14. களஞ்சிய காரர்	01
15. மின் ஓட்டுனர்	01
16. சுற்றுலா விடுதிக் காப்பாளார்	01
17. காப்பாளர்	01
18. காவலாளி	10
19. தொழிலாளி	60
மொத்தம்	**133**

2.1.2 பிராந்திய விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம் (RARDC), அரலகன்வில

அரலகன்வில பிராந்திய விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையமானது இப்பிராந்தியத்திலுள்ள மகாவலி வலையங்களான B,C,D மற்றும் G யுடன் கிழக்கு மாகாணம், மாகாணங்களுக்கிடைப்பட்ட பகுதிகளுக்கு பொருத்தமான தொழில்நுட்பங்களை விருத்தி செய்வதுடன், அவற்றை செயன்முறை ரீதியில் முன்னேடுத்துச் செல்வதற்கும் பொறுப்பாக உள்ளது. அத்துடன் பயிராக்கவியல், தாவர இனங்கலப்பு பிறப்புரிமையியல், தாவர நோயியல், பூச்சியியல் மற்றும் மண் நீர் முகாமைத்துவம் போன்ற வேறுபட்ட துறைகளில் ஆராய்ச்சியை மேற்கொள்கின்றது.

பாதீடு

அட்டவணை 2.1.2.1: வருடாந்தப் பாதீடு – 2011 (Rs.)

செலவு விடயம்	ஒதுக்கீடு	செலவு	செலவு%
மீண்டு வரும் செலவு	9,896,710	8,735,482	88
மூலதன செலவு	3,775,000	2,553,098	68
செயற்திட்டம்			
உலர் வலய மண்ணில் வெங்காயம், மிளகாய் பயிர்ச் செய்கையில் வினைத்திறனான நீர்முகாமைத்துவத் திட்டம் NARP	701,990	651,891	93
NARP 2011 திட்டத்தின் கீழ் வாழை NCVT செயற்திட்டம்	40,000	40,000	100
மாதிரிக்கிராமம் ஸ்தாபித்தல் திட்டம்	100,000	74,920	75
கலப்பினச் சோள விதை உற்பத்தி	250,000	221,493	89
மானியப் பயிர் விதை உற்பத்தித் திட்டம்	202,460	190,885	94
பழப்பயிர் உற்பத்தி (பப்பாசி)	400,000	337,992	84
பயிர் செய்யும் பகுதிக்கருகில் பெரிய வெங்காயம், சின்ன வெங்காயத்தை பருவ இல்லாத காலத்தில் ஸ்தாபித்தல்	650,000	586,630	94
கூட்டெரு உற்பத்தியும் பாவனையும் பரிசோதனை	1000,000	959,352	96
மொத்தம்	**17,384,220**	**14,351,742**	**83**

முன்னேற்றம்

ஆராய்ச்சி

பயிராக்கவியல்

நெல்

- ஐந்து 2.5 மாத வயதுடைய நெல் பேதங்கள் பரீட்சிக்கப்பட்டதுடன், 3மாத கால நெற்பேதங்கள் 6 மதிப்பீடு செய்யப்பட்டன அத்துடன் 3.5 மாத வயதுடைய 7 பேதங்களும் தேசிய ஒருங்கிணைந்த வர்க்கப்பரிசோதனையின் கீழ் மதிப்பீடு செய்யப்பட்டன.

கத்தரி

- அமந்தா மற்றும் BW - 11 உடன் ஆறு பேதங்கள் வெற்றிகரமாக மதிப்பீடு செய்து முடிக்கப்பட்டது.

கௌபீ

- ஏழு பேதங்கள் நிலையான கட்டுப்பாட்டு வர்க்கங்களான டவள மற்றும் வருணியுடன் மதிப்பீடு செய்யப்பட்டன.

மிளகாய்

- நாலு மிளகாய் பேதங்கள் நிலையான கட்டுப்பாட்டு வர்க்கங்களான KA 2 மற்றும் MI பச்சை உடன் மதிப்பீடு செய்யப்பட்டன.

சுண்டைக்காய்

- வித்தியாசமான பயிர்செய்கை முறைகள் தண்டு துளைப்பானைக் கட்டுப்படுத்துவதற்காக பரீட்சிக்கப்பட்டன. எப்படியாயினும் எந்த பரிகரணமும் முன்னேற்றகரமான முடிவைக்காட்டவில்லை.

சோளம்

- சோளத்தை அடிப்படையாகக் கொண்ட இடைப்பயிராக்கல் பரிசோதனை வெற்றிகரமாக செய்யப்பட்டது. பரிசோதனைகளில் சோளம் வெண்டி கலப்புப் பயிர்ச்செய்கைக்காக உயர் வருவாய் உடையதாகப் பதிவாகியது.

- F1 கலபபினப் பிறப்பாக்க விதை (சம்பத்) 300Kg உற்பத்தி செய்யப்பட்டது.

பிறப்புரிமையியலும் தாவர இனங்கலப்பும்

வெங்காயம்

- 04 புதிய பேதங்கள் உள்ளடங்கலாக உருவவியல் பண்புகளின் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்ட 119 பேதங்களில் 06 பேதங்கள் ஆரம்ப கட்ட விளைவுப் பரிசோதனைக்காக தேர்வு செய்யப்பட்டன. 2008 ஆம் ஆண்டு 4 பேதங்கள் விளைவு மற்றும் உருவவவியல் பண்புகளின் தரவுகளின் அடிப்படையின் முன்னேற்றகரமாக இருந்தது. 19 வர்க்கங்களிலிருந்து 2 பேதங்கள் F2 சந்ததிக்கு முன்னேற்றப்பட்டது. உற்பத்தியாளர் விதை 119 பேதங்களில் ஆராய்ச்சி நோக்கங்களுக்காக உற்பத்தி செய்யப்பட்டது.

சின்னவெங்காயம்

- பதினெரு பேதங்கள் ஆரம்ப விளைச்சல் பரிசோதனைக்காகவும் 05 அதிக விளைச்சல் பரிசோதனைக்காகவும் தேர்வு செய்யப்பட்டன. நாற்று வர்க்கம், மற்றும் நாற்று இல்லா வர்க்கங்களின் 8 பேதங்கள் NCVT பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

வேறு

- மிளகாய், கௌபீ, பயறு, உழுந்து, துவரை, கத்தரி, தக்காளி, கீரை, கெக்கரி, பாகல், பீர்க்கு, சிறகவரை, கோதுமை மற்றும் பார்லி போன்ற வெளிநாட்டு பயிர் வர்க்கங்கள் பல அறிமுகப்படுத்தப்பட்டதோடு இசைவாக்கப்பட்டது.

குறைவான பயன்பாடுடைய பயிர்கள்

- அவரை, பம்பராநிலக்கடலை, கௌபீ, இலை மரக்கறி என்பன மதிப்பீட்டுக்காக சேகரிக்கப்பட்டு விதைப்பெருக்கம் செய்யப்பட்டன.

சுண்டைக்காய்

- திப்வட்டுவின் மூலவுயிருரு வயலில் பராமரிக்க ப்பட்டதோடு உற்பத்தியாளர் விதையும் உற்ப த்தி செய்யப்பட்டது.

தும்பை (Spine gourd)

- உற்பத்தியாளர் விதை (நடுகைப்பொருள்) உற்பத்தி, தாய்கொடியை ஸதாபிப்பதற்காகவும் தரமான நடுகைப்பொருளை உறுதிப்படுத்துவ தற்காகவும் தொடரப்பட்டது.

பூங்கனியியல்

வாழை

- தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்கப்பரிசோத னையின் கீழ் 04 வாழை பேதங்கள், "பரகும்" பேதத்தை கட்டுப்பாட்டுப் பேதமாகக் கொண்டு NCVT ல் மதிப்பீடு செய்யப்பட்டது. ரத் வாழை குலவகை NCVTக்காக தேர்வு செய்யப்பட்டது.

பப்பாசி

- 1Kg உற்பத்தியாளர் விதையை உற்பத்தி செய்வதற்காக ரத்னா பப்பாசி வர்க்கம் வயலில் ஸ்தாபிக்கப்பட்டது.

ட்ரகன் பழம்

- பல்முனை தொழிநுட்பத்தின் இருமுறைகள், மிகவிரைவான இனப்பெருக்கத்துக்காக பரிசோ திக்கபட்டு அபிவிருத்தி செய்யப்பட்டன.

கொய்யா

- நான்கு கலப்பினங்கள் NCVT ன் கீழ் மதிப்பீடு செய்யப்பட்டன.

மா

- பரம்பரையை பேண வயலில் 10 குலவகைகள் பேணப்படுவதோடு தேர்வு செய்த 10 குலவகை NCVT க்காக பெருக்கம் செய்யப்பட்டன.

தாவர நோயியல்

வெங்காயம்

- குமிழ் அழுகல், நுனிகருகல், ஊதா இலைப்பு ள்ளி போன்ற நோய்களுக்கு எதிர்ப்பு தன்மை க்குரிய மூலம் இனம் காணப்பட்டது.

நெல்

- நெல்லில் மணி நிறமாற்றத்துக்கான பொருத்த மான பங்கஸ் நாசினிகள் தெரிவு செய்யப் பட்டன.

மண் மற்றும் நீர் முகாமைத்துவம்

- மகாவலி வலையம் B ன் வயல்களில் வடிகால் அணை கட்டமைப்பில்; அணையில் மரக்கறிக ளும் வடிகாலில் நெல்லும் பயிரிடுதல் நீர்வடிப்பு குறைவான நிலத்துக்கும், நீர்பாசன மேட்டுநில த்துக்கும் ஏற்ற சிறந்த நிலமுகாமைத்துவ தொழிநுட்பமாகக் காணப்பட்டது.

- மண் அரிப்பை தீர்மானிப்பதற்காக கல்சியமற்ற கபில மண்ணில் (NCB) களப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. நீர்ப்பாசன நிலைமை யில் மண் அரிப்பு விரும்பதகாத அளவு உயர்வாகக் காணப்பட்டது. இருப்பினும் மூடு படை இடுவதால் மண் அரிப்பு குறைவாகக் காணப்பட்டதாகக் பதிவாகியது.

- சின்ன வெங்காயத்தில் நீர்பாசன நீரின் அள வைத் தீர்மானிப்பதற்காக வேறுபட்ட IW/ CPE விகிதத்தில் மூடுபடையும் சேதனப்பசளையும் பாவித்து களத்தில் பரிசோதனை செய்யப்பட்டது.

களை விஞ்ஞானம்

- மகாவலி வலையம் Bல் குதிரைவால்புல் (*Leptochloa chinensis*) களையின் செறிவு நெல் வயலில் ஏற்படுத்தும் தாக்கம் பற்றி மதிப்பீடு செய்யப்பட்டது.

செயற்திட்டம்

NARP

- உலர் வலையத்தில் மிளகாய் மற்றும் வெங்கா யப்பயிரில் வினைத்திறனான நீர் முகாமைத்து வத்தை மேம்படுத்துதல்
- NARP ன் கீழ் வாழையின் தேசிய ஒருங்கிணை க்கப்பட்ட வர்க்கப் பரிசோதனைத்திட்டம் 2012ல் மேற்கொள்ளல்.

சேதனப் பசளை தயாரிப்பு பாவனை, அபிவிருத்தி

- கிடைக்கக்கூடிய சேதனப்பொருள்களின் வினை த்திறனும் அவற்றின் மூலம் பெறப்படும் உற்ப த்தியின் வினைத்திறனும் மதிப்பீடு செய்ய ப்பட்டது. மொத்தமாக 56 தொன் கூட்டெரு 2011ல் உற்பத்தி செய்யப்பட்டது.

வேறு செயற்பாடுகள்

- மாதிரிக் கிராமம் ஸ்தாபித்தல் திட்டம்
- துணையான பயிர்களின் விதை உற்பத்தி
- பழப்பயிர் உற்பத்தி (பப்பாசி)
- பருவமற்ற காலத்தில் பெரிய வெங்காயம் மற்றும் சின்னவெங்காயம் போன்றவற்றை புதிய பிரதேசத்தில் ஸ்தாபித்தல்
- கூட்டெரு உற்பத்தி மற்றும் பாவனைப் பரிசோதனை
- வாழை நடுகைப்பொருட்கள் உற்பத்தித்திட்டம் சீனிக்கதலி மற்றும் புளிக்கதலி இனங்களில் மேற்கொள்ளப்பட்டது.
- வெள்ளைச் சதை வர்க்க ட்றகன்பழ நடுகைப் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டது.
- சுண்டங்கத்தரி (வின்டு வர்க்கம்) விதை 4350g உற்பத்தியாளர் விதை விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டது.

தொழில்நுட்பப் பரவலாக்கம்

துண்டுப்பிரசுரம்

- பப்பாசியில் பராமரிப்பு முறைபற்றிய 542 துண்டுப்பிரசுங்களும், சுண்டங்கத்தரி பயிர்ச் செய்கை, தும்பைப் பயிர்ச்செய்கை என்பவற்றின் துண்டுப் பிரசுரங்களும் தயாரிக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டன.

வயல் விழாவும் பயிற்சியும்

- விவசாய அமைச்சர் கௌரவ மகிந்த யாப்பா அவர்களும், விவசாயப் பணிப்பாளர் நாயகமும் கள விஜயமாக ஆராய்ச்சி நிலையம் அரலன்கன்விலவுக்கு வருகை தந்தனர்.

வயல்விழா

- மூன்று வயல்விழா விவசாயிகளுக்கும், விவசாய அலுவலர்களுக்குமாக மகாவலி அதிகாரச பையும் விவசாய திணைக்களமும் இணைந்து நடத்தப்பட்டது. 300 விவசாயிகளும் அலுவலர்க ளும் பங்குபற்றினர்.

பயிற்சித்திட்டம்

- AOs, FAs, விவசாயிகள், பாடசாலை மாணவர் ஆகியோருக்கு பயிற்சிதிட்டம் மேற்கொள்ள ப்பட்டது.

பயிர்சிகிச்சை

- 08 பயிர்சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன. கள விஜயம் மற்றும் மாதிரியின் மதிப்பீட்டின் அடிப் படையில் பிரச்சினை இனங்காணப்பட்டு பயிர்பா துகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

மண் பரிசோதனை

- 632 மண் மாதிரிகள் மதிப்பீடு செய்யப்பட்டு அதன்படி சிபார்சுகள் வழங்கப்பட்டன.

2012 வருடத்துக்கான திட்டம்

பயிராக்கவியல்

நெல்

- களையுடன் உயர் போட்டி போடக்கூடிய நெல் இனத்தை மேம்படுத்தும் நோக்குடனும் காட்டு நெல் வர்க்கத்தின் பிரச்சினையை கட்டுப்படு த்துவதற்காகவும், தனிமைப்படுத்தும் தூரத்துடன் அயன்மகரந்த சேர்க்கையின் விகிதத்தைக் கண்டறிதல் .

மா

- அறுவடை மேற்கொள்ளும் போது இலகுவான அறுவடையை மேற்கொள்ளதக்கதாக விதானப் பராமரிப்பை மேம்படுத்தல்.

ட்றகன் பழம்

- கல்சியமற்ற கபில மண்ணில் உலர், நடுத்தர, ஈர நிலையில் முன்னேற்றத்தை மதிப்பீடு செய்தல்.
- அரலகன்வில ஆராய்ச்சி நிலையத்தால் இன ங்காணப்பட்ட பெரிய அளவிலான நடுகைப் பொருள் உற்பத்தித் தொழிநுட்பத்தை விருத்தி செய்தல்

கொய்யா

- உலர், நீர்ப்பாசன நிலைமைகளின் கீழ் கலப்பினப் பிறப்பாக்க கொய்யாவில் கத்தரித்தல் மற்றும் பழக்கப்படுத்தலினை மதிப்பீடு செய்தல்.

பப்பாசி

- பப்பாசியில் வடிகால் தொகுதியை மேலும் மதிப்பீடு செய்தல்.

வெங்காயம்

- கல்சியமற்ற கபிலமண்ணில் சின்ன வெங்காய த்தின் பசளைத் தேவையை மதிப்பீடு செய்தல்.
- வெங்காய விதை உற்பத்தியில் மாற்றீடான ஏற்ற முறையை அபிவிருத்தி செய்தல்

தும்பை

- தும்பையில் வேறுபட்ட நிழல் அளவுகளில் அதன் வளர்ச்சி மற்றும் விளைவை மதிப்பீடு செய்தல்.

பூச்சியியல்

கத்தரி

- மகாவலி B வலையத்தின் கீழ் காய்த் தண்டு துளைப்பானுக்கு எதிர்ப்புள்ள கத்தரி இன ங்களின் மதிப்பீடு.

மிளகாய்

- மகாவலி B வலையத்தின் குத்தி உறிஞ்சும் பீடையான மிளகாய் பனிப்பூச்சியை முகாமை செய்தல்

வெங்காயம்

- மகாவலி B வலையத்தில் வெங்காயப் பனிப்பூச்சியை முகாமை செய்தல்
- பனிப்பூச்சிக்கான எதிர்ப்பு வர்க்கம்.

பிறப்புரிமையியலும் இனங்கலப்பும்

தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்கப் பரிசோதனை

- சோளம், கடுகு, மிளகாய், கௌபீ, கொள்ளு, வாழை, என்பவற்றில் மேற்கொள்ளல்
- நிலக்கடலையில் வர்க்க இசைவாக்க பரிசோ தனையை மேற்கொள்ளல்

வெங்காயம்

- மூலவுயிருருப் (Germplasm) பண்புகளை வகைப்படுத்தல்.

- மரக்கறிக்குப் பொருத்தமான சின்ன வெங்காய இனத்தை மேம்படுத்ததுலும் அபிவிருத்தி செய்தலும்
- சின்ன வெங்காயத்தில் தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்கப் பரிசோதனை.
- உயர் விளைவுடைய, பூச்சி நோய் தாக்கத்துக்கு எதிர்புடைய சின்ன வெங்காயத்தை அறிமுகப்படுத்தல்
- கலப்புப் பிறப்பாக்க சின்ன வெங்காய அபிவிருத்தி.
- சலட் வகை வெள்ளை நிற சின்ன வெங்காயத்தை அபிவிருத்தி செய்தல

பப்பாசி

- ரத்னா வர்க்க உற்பத்தியாளர் விதை உற்பத்தி

வாழை

- தற்போதுள்ள வாழை மூலவுயிருருக்களை (Germplasm) மதிப்பீடு செய்தல்

மா

- தற்போதுள்ள மா மூலவுயிருருக்களை (Germplasm) மதிப்பீடு செய்தல்

பழப்பயிர்கள்

- பழப்பயிர்களுக்காக பெரிய அளவிலான நாற்று உற்பத்தித் தொழில்நுட்பத்தை விருத்தி செய்தல்
- பருவகாலமல்லாத காலங்களில் பழங்களைப் பெறுவதற்கான செயல்முறையினை மதிப்பீடு செய்தல்

நெல்

RRDI னால் மேற்கொள்ளப்படும் NCVT, NCHST மற்றும் NCHSTS ல் ஒருங்கிணைந்து செயல்படல்.

தும்பை

- உற்பத்தியாளர் விதை (நடுகைப்பொருள்) உற்பத்தி

சோயாஅவரை

- முன்னேற்றகரமான கலப்புப் பேதங்களின் NCVT க்கான மதிப்பீடு

சுண்டங்கத்தரி

- உற்பத்தியாளர் விதை உற்பத்தி

கௌபீ

- தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்கப் பரிசோதனையில் காயின்தரம், விளைவு, பீடைநோய் மற்றும் விரும்பத்தகும் பயிராக்கவியல் பண்புகளுக்காக மதிப்பீடு.

தாவரநோயியல்

சின்னவெங்காயம்

- வர்க்க எதிர்ப்புத்தன்மைக்கான மதிப்பீடு

வெங்காயம்

- குமிழ் அழுகலுக்கான பங்கஸ் நாசினியைத் தேர்வு செய்தல்
- சின்னவெங்காயத்தில் நோய்கட்டுப்பாட்டு நடவடிக்கையை அபிவிருத்தி செய்தல்

நெல்

- நெல்லில் மணி நிறமாற்றத்தை தடுப்பதற்கான கட்டுப்பாட்டு நடவடிக்கையை அபிவிருத்தி செய்தல்

தும்பை

- பெரிய அளவிலான உற்பத்திக்கான தொழில் நுட்பத்தை அபிவிருத்தி செய்தல்
- பங்கஸ்னால் ஏற்படும் வாடலுக்கு வயலில் சகிப்புத்தன்மையை அபிவிருத்தி செய்தல்.

மண் மற்றும் நீர் முகாமைத்துவம்

நெல்

- நீண்ட கால இரசாயன பசளை மற்றும் சேதனப்பொருள் பாவனை பயிர் உற்பத்தி யிலும், மண்வளத்திலும் ஏற்படுத்தும் பாதிப்பை களங்களில் மதிப்பிடுதல் (Ex – Situ)
- நீண்ட கால இரசாயன பசளை மற்றும் சேதனப் பொருள் பாவனை; நெல், - அவரைப்பயிர் சுழச்சி முறையில்; பயிர் உற்பத்தி, மண்வளம் என்பவற்றில் ஏற்படுத்தும் தாக்கம் (In – Situ)
- நெல்லில் வேறுபட்ட சேதனப்பொருட்களுடன் N.P.K யை குறைத்து பாவிப்பதால் பயிர் வளர் ச்சியிலும் விளைவிலும் ஏற்படும் தாக்கத்தை மதிப்பீடு செய்தல்
- மகாவலி வலயத்திலுள்ள நெல்வயல்களில் வேறுபட்ட வகைகளில் பொருத்தமான நீர் வடிகால், நீர் முகாமைத்துவத்தை அபிவிருத்தி செய்தல்

கொய்யா

- கல்சியமற்ற கபில மண்ணிற்கு ஏற்ற நீர்ப்பாசன முறையை அபிவிருத்தி செய்தல்.

வேறு

- கல்சியமற்ற கபில மண்ணிற்கு வேறுபட்ட மண்பாதுகாப்பு நடவடிக்கையின் மூலம் (வெட்டி வேர் கீற்றாக நடல், சமயவுயரக்கோடு, வரம்பு சால், பயிரிடப்பட்ட நிலம்) மண் அரிப்பையும் நீரோட்டத்தையும் மதிப்பீடு செய்தல்.
- கல்சியமற்ற கபில மண்ணிற்கு பொருத்தமான நீர்முகாமைத்துவத்தை அறிமுகம் செய்தல்.

உத்தியோகத்தர் பட்டியல்

பதவியணி	**எண்ணிக்கை**
1. விவசாய பிரதிப்பணிப்பாளர் (ஆராய்ச்சி)	01
2. ஆராய்ச்சி உத்தியோகத்தர்	08
3. ஆராய்ச்சி உதவியாளர்	03
4. விவசாய போதனாசிரியர்	04
5. ஆராய்ச்சி ஆய்வு கூட உதவியாளர்	01
6. நிர்வாக உத்தியோகத்தர் (Acting)	01
7. முகாமைத்துவ உதவியாளர்	02
8. களஞ்சியப் பொறுப்பாளர்	01
9. சாரதி	04
10. மின்னிணைப்பாளர்	01
11. காவலாளி	10
12. உழுவு இயந்திரம் திருத்துனர்	03
13. தச்சர்	02
14. கொல்லர்	01
15. கட்டிடதொழிலாளர்	01
16. சுற்றுலா விடுதிக் காப்பாளர்	01
17. தாவரஒட்டுனர்	01
18. தொழிலாளி	50
19. தொழிலாளி (ஒப்பந்த அடிப்படை)	39
மொத்தம்	**134**

2.1.3 பிராந்திய விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் (RARDC), கிளிநொச்சி

பிராந்திய விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தின் கீழ் அமைந்துள்ள தின்னவேலி, வவுனியா, முருங்கன், மற்றும் பரந்தன் ஆகிய நிலையங்களினால் ஆராய்ச்சி அபிவிருத்தி செயற்பாடுகள் விசேடமாக மறுவயற்பயிர்களில் பிராந்தியத்தின் (DLI,DL3& DL4) பொருளாதார முக்கியத்துவம் கருதியும் விவசாயிகளின் தேவையை கருத்திற் கொண்டும் மேற் கொள்ளப்பட்டன. இது மறுவயற்பயிர்கள் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம் மகாஇலுப்பள்ளமவின் கீழ் இணைக்கப்பட்ட நிலையமாகும். தற்போதைய நிலையில் இதன் கீழ் உள்ள முல்லைத்தீவு அனுசரணை ஆராய்ச்சி நிலையம் தவிர்ந்த ஏனைய நிலையங்கள் இயங்குகின்றன. ஆராய்ச்சி அபிவிருத்தி நடவடிக்கைகள் பிராந்திய ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம் கிளிநொச்சி மற்றும் நெல் ஆராய்ச்சி நிலையம் பரந்தன் என்பவற்றில் தொடக்கப்பட்டுள்ளன. இந்த அறிக்கையில் குறிப்பிடப்படும் நடவடிக்கைகள் கூடுதலாக அனுசரணை ஆராய்ச்சி நிலையம் வவுனியா, விவசாய ஆராய்ச்சி நிலையம் தின்னவேலி, விவசாய ஆராய்ச்சி நிலையம் முருங்கன், பிராந்திய விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம் கிளிநொச்சி, நெல் ஆராய்ச்சி நிலையம் பரந்தன் என்பவற்றினால் மேற்கொள்ளப்பட்டவையாகும்.

பாதீடு

அட்டவணை 2.13.1 வருடாந்தப் பாதீடு – 2011 (ரூபா)

செலவு விடயம்	ஒதுக்கீடு	செலவு	செலவு%
மீண்டுவரும் செலவு	3,350,000	3,328,038	99
மூலதனச் செலவு	1,875,000	728,770	39
சேதனப்பசளை உற்பத்தியும் பயன்பாடும்	1,250,000	80,000	06
மொத்தம்	**6,475,000**	**4,136,808**	**64**

முன்னேற்றம்

பயிர் மேம்படுத்தல்

சின்னவெங்காயம்

சின்னவெங்காயம் சலட் வகை வர்க்கம் - தின்னவேலி சிவப்பு 320Kg விதைக்குமிழ் பரவலுக்காக உற்பத்தி செய்யப்பட்டது. தேர்வு செய்யப்பட்ட 3 கலப்பின வெங்காயப் பேதங்கள் (MH) உயர் விளைவுக்காகவும் வேறு அம்சங்களுக்காகவும் பராமரிக்கப்பட்ட.ன. TMV–1, TMV–2, TMV– 4 என்னும் பெயருடைய தேர்வு செய்யப்பட்ட பேதங்கள் NCVT திட்டத்தில் உள்ளன.

மிளகாய்

பனிப்பூச்சித் தாக்கத்திற்கு எதிராக விருத்தி செய்வதற்கு எட்டு மிளகாய் பேதங்கள் KA2, மற்றும் MI-2 ஆகியவற்றைக் கட்டுப்பாட்டு வர்க்கமாகக் கொண்டு மதிப்பீடு செய்யப்பட்டன. TVC – 5 பேதமானது 5.9 - 6.0 தொன்/ஹெக் என்ற உயர் விளைச்சலைத் தந்தது. TVC-1, TVC-3, TVC-5 மற்றும் TVC-9 என்பன யாழ்பாண மாவட்டத்தில் முன்னேற்றகரமாக இருந்ததுடன் இது தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்கப் பரிசேதனைக்கு மேம்படுத்தக் கூடியதாக வும் இருந்தது.

நிலக்கடலை

ஆறு நிலக்கடலை பேதங்கள் மேம்படுத்தப்பட்ட பேதங்களிலிருந்து தெரிவு செய்து வேறுபட்ட விவசாய காலநிலை வலையங்களுக்காக பரிசோதிக்கப்பட்டன. ICGV 97049, ICGV 98396 என்பன 2010/2011 கால போகத்தில் நல்ல முன்னேற்றகரமாக இருந்தது.

உழுந்து

ஐந்து உழுந்து வர்க்கங்கள் 2010/2011 கால போகப்பகுதியில் பரிசோதிக்கப்பட்டன. மற்றய வர்க்கங்களை விட அனுராதா மட்டும் முன்னேற்றகரமாக இருந்தது.

கடுகு

2010/2011 காலபோகத்தில் AP 26 ஐ கட்டுபாட்டு வர்க்கமாகக் கொண்டு ஆறு பேதங்கள் பரீட்சிக்கப்பட்டன. கட்டுப்பாட்டு வர்க்கம் மற்றய வர்க்கங்களுடன் ஒப்பிடும் போது நல்ல முன்னே ற்றகரமாக இருந்தது.

நெல்

- **வர்க்க இசைவாக்கப் பரிசோதனை, தேசிய ஒருங்கிணைந்த வர்க்கப் பரிசோதனை பல் துண்ட தொழில்நுட்ப இசைவுப் பரிசோதனை** 2½ மாதம், 3 மாதம், 3½ மாத வயதுடைய நெல் இனங்கள் நெல் ஆராய்ச்சி நிலையம் பரந்தன், அனுசரணை ஆராய்ச்சி நிலையம் வவுனியா, அனுசரணை ஆராய்ச்சி நிலையம் முருங்கன் ஆகிய இடங்களில் மானாவாரி மற்றும் நீர்பாசனத்தின் கீழ் பரீட்சிக்கப்பட்டன. மேலும் ''ஆட்டக்காரி'' என்றழைக்கப்படும் உள்ளூர் இனமும் அதன் முன்னேற்றகரமான இயல்பை காண்பதற் காகப் பரீட்சிக்கப்பட்டது.

இனத்தூய்மைப் பேணல்

பதினேழு உள்ளூர் குலவகைகளும் பேதங்க ளுமாக சலட் மற்றும் பலநோக்கு வகை வெங்காயங்கள் பேணப்பட்டன. கீழ்வரும் பயிர்களும் அவற்றின் இனத்தூய்மையைப் பேணுவதற்காக செய்கை பண்ணப்பட்டன.

அட்டவணை 2.1.3.2 பயிர்களின் இனத்தூய்மைப் பேணல்

பயிர்	வர்க்கம்
கத்தரி	தின்னவேலி ஊதா
பாகல்	தின்னவேலி வெள்ளை
புடோல்	தின்னவேலி நீளம்
தக்காளி	KC – 1
பயிற்றை	கவரிமா
உழுந்து	அனுராதா

விதை உற்பத்தி

கீழ்வரும் அளவுகளில் விதைகள் நாம் பயிரிடுவோம் நாட்டைக் கட்டியெழுப்புவோம் செயற்திட்டத்தின் கீழ் உற்பத்தி செய்யப்பட்டன.

அட்டவணை 2.1.3..3 விதை உற்பத்தி 2011

பயிர்	வர்க்கம்	அளவு
சோளம்	ரூவான்	250kg
குரக்கன்	ஒசாடா	300 kg
பயற்றுப் பேதம்	MIMB	65 kg

உற்பத்தியாளர் விதை

கீழ்வரும் அளவுகளில் உற்பத்தியாளர் விதை உற்பத்தி செய்யப்பட்டது.

அட்டவணை 2.1.3.4 உற்பத்தியாளர் விதை உற்பத்தி 2011

பயிர்	வர்க்கம்	அளவு
பாகல்	தின்னவேலி வெள்ளை	5.6 kg
தக்காளி	KC – 1	100 kg

நெல்லில் அத்தாட்சிப்படுத்திய விதை

Bg 300 வர்க்க அத்தாட்சிப்படுத்திய விதை நெல் 4387Kg உற்பத்தி செய்யப்பட்டது.

பயிராக்கவியல்

நெல்

மூன்று மாத நெல் வர்க்கங்கள் விவசாயிகளின் வயல்களில் பரீட்சிக்கப்பட்டன. At -07-800 மற்றும் At 307 என்பன முறையே 4.5 தொன்/ஹெக், 4.4 தொன்/ஹெக் என்ற அளவில் விளைவைத் தந்தன. விவசாயிகளின் முன்னு ரிமை சிவப்பு அரிசி நெல்லுக்கே இருந்தது. உவர் நிலத்தில் சகித்து வளரும் இரண்டு பேதங்கள் 11 - 139, 5 - 110 என்பன At – 362 ஐ கட்டுப்பாட்டு வர்க்கமாகக் கொண்டு பரீட்சிக்க ப்பட்டன. உவர்தன்மை 2.67ds/m ஆக உயர் வாக இருந்த போதும் இப்பேதங்கள் முன்னேற்ற கரமான இருந்ததுடன் 2 - 2.5 தொன்/ஹெக் விளைவைத் தந்தன.

மரக்கறிபயிர்

பயற்றை, பீர்க்கு, கீரை, கெக்கரி, உருளைக் கிழங்கு என்பவற்றில் தேசிய ஒருங்கிணைக்கப் பட்ட பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

பயற்றை

CM 1, CM2, TVU 2852, பொலன்பயிற்றை, கவரி பயற்றை எனும் ஐந்து பயற்றை இனங்கள் பரீட்சிக்கப்பட்டன. CM 1 ஆனது 15.5 தொன்/ ஹெக் என்ற உயர் விளைவைத் தந்ததோடு காய்களின் நீளம் 67cm ஆக இருந்தது. நுகர்வோரின் விருப்பும் கூடுதாக இருந்தது.

பீர்க்கு

10020 X In17, 10656 X 9895, In192338 X 10014, LA 33 X TD, நாகா, LA33 என்ற ஏழு பேதங்கள் பரீட்சிக்கப்பட்டன. நாகா 69 தொன்/ஹெக் என்ற உயர் விளைவைத் தந்ததாக பதிவாகியது.

கீரை

சிவப்புகீரை, டயபலகொட, துாயபச்சை, DOA பச்சை எனும் நான்கு கீரைப்பேதங்கள் பரீட்சிக்க ப்பட்டன. 32 தொன்/ஹெக் என்ற உயர் விளைவை நட்டு 4 கிழமையின் பின் டயபலகொட என்ற பேதம் தந்தது. இது 3:2 என்ற உயர் இலை : தண்டு விகிதத்தைக் கொண்டிருந்தது.

கெக்கரி

H31, H41, H18, E2 எனும் நான்கு பேதங்கள் KW மற்றும் சம்பியன் வர்க்கங்களை கட்டுப் பாட்டு வர்க்கமாகக் கொண்டு பரீட்சிக்கப்பட்டன. 25 தொன்/ஹெக் என்ற உயர் விளைச்சலை

H41 என்ற பேதம் தந்தாலும் நுகர்வோர் விருப்பு H31 க்கே அதிகமாக இருந்தது.

உருளைக்கிழங்கு

அர்னேவா, கோல்டன்ஸ்ரார், AIDA, அற்லஸ், கல்வைற், ரெட் லசோடா ரெட், YP-03-107, ரொசானா, அர்னோவா (உள்ளூர்) எனும் வர்க்கங்கள் பரீட்சிக்கப்பட்டன. கல்வைற் மற்றும் ரெட்லசோடா என்பவை உயர் விளைச்சலுடைய வையாகக் காணப்பட்டது. கல்வைற் 456g/ தாவரம் என்ற உயர்விளைவைத் தந்தது.

பயிர்ப் பாதுகாப்பு

யாழ் மாவட்டத்தில் வெப்பத்தை சகிக்கக்கூடிய உருளைக்கிழங்கு வர்க்கங்களில் நோய் தாக்கத்துக்கான மதிப்பீடு

உருளைக்கிழங்கு வர்க்கங்கள் அர்னோமா, கோல்டன்ஸ்ரார், AIDA, அற்லஸ், கல்வைற், ரெட்லசோடா, YP-03-107, ரொசானா என்பன பரீட்சிக்கப்பட்டன. கல்வைற் மற்றும் ரெட்லசோ டாவில் பிற்கூற்று வெளிறல் நோயின் தாக்கம் குறைவாக இருந்தது.

சேதனப் பசளையைப் பாவிப்பதன் மூலம் சின்ன வெங்காயத்தின் நோயை முகாமை செய்தல்

கோழி எரு, ஆட்டெரு, மாட்டெரு, கிளிசிறீடியா இலை, என்பன கோமை (Homai) எனும் அசேதன பங்கஸ் நாசினியை கட்டுப்பாட்டு பரிகர ணமாகக் கொண்டு பரீட்சிக்கப்பட்டன. கோழி எரு பாவிக்கப்பட்டதில் மிகவும் குறைந்த அளவு எண்ணிக்கையான குமிழ்களே நோய் பாதிப்பைக் காட்டியதோடு கூடிய சந்தைமானமுடைய குமிழ்களும் விளைவாகப் பெறப்பட்டன.

சேதனப் பசளை பாவனை மூலம் கத்தரியில் இலை சிறிதாதல் நோயை கிளிசிறிடியா வேலிப்பயிர்ச் செய்கையின் கீழ் மதிப்பீடு செய்தல்

கோழி எரு, ஆட்டெரு, கூட்டுப்பசளை, மாட்டெரு என்பன கிளிசிறிடியா வேலிப்பயிர்செய்கையின் கீழ் மதிப்பீடு செய்யப்பட்டது. இலை சிறிதாதல் நோய் சாதாரண பயிர்ச்செய்கையுடன் ஒப்பிடும் போது குறைவாக இருந்தது. கோழி எரு பரிகரணத்தில் இலை சிறிதாதல் குறைவாகவும் சேதனப்பசளை இடாததில் இலை சிறிதாதல் அதிகமாகவும் இருந்தது.

மண் விஞ்ஞானம்

கத்தரியில் உயிரியல் பொஸ் (Bio phos) ன் செயலாற்றுகை

சேதனப்பசளையான உயிரியல் பொஸ் ஆனது அசேதன பசளையுடன் ஒப்பிடப்பட்டது. 50% உயர் விளைவுடன் எல்லாவகையிலும் உயிரியல் பொஸ் முன்னேற்றகரமாகக் காணப்பட்டது. அசேதன பொஸ்பேற் பசளைக்கு மாற்றீடாக சேதன பொஸ்பேற் பசளையை பயன்படுத்த முடியும்.

மிளகாயில் IPNS

கிளிசிறிடியா வேலிப்பயிர்ச்செய்கையின் கீழ் மிளகாய்ப் பயிர் நடப்பட்டு, 25தொன் / ஹெக், 18.75 தொன்/ஹெக், 12.5 தொன்/ஹெக், என்ற அளவில் கிளிசிறிடியா பசுந்தாட் பசளை இடப்பட்டதோடு 50% மற்றும் 75% அசேதன பசளை பாவிக்கப்பட்டது. சிபார்சு செய்யப்பட்ட அசேதன பசளையின் 50% - 75% வீதத்துடன் 50% - 75% பசுந்தாட் பசளையும் சேர்த்து இடப்படும் போது காய் விளைவும் பயிர் வளர்ச்சியும் முன்னேற்றகரமாகக் காணப்பட்டது.

சேதனப்பசளைத் தயாரிப்பும் பாவனையும்

20 தொன் கூட்டெரு உற்பத்தி செய்யப்பட்டதுடன் யாழ் தீவகற்ப விவசாயிகளுக்கு வளர்ப்பு உட்புகுத்தியாக 10Kg பொதி இலவசமாக

வழங்கப்பட்டது. 30% கூட்டெரு ஆராய்ச்சி நோக்கங்களுக்கு பயன்படுத்தப்பட்டது. 20Kg சணல் விதை உற்பத்தி செய்யப்பட்டது.

கிளிசிறீடியா, இப்பில் இப்பில் என்பன பசுந்தாட் பசளை மற்றும் கூட்டெரு உற்பத்திக்காக ஸ்தாபிக்கப்பட்டது.

மண் மற்றும் நீர் மாதிரிகள் பரிசோதனை

உவர்த் தன்மையுள்ள பகுதிகளில் இருந்து நீர் மற்றும் மண் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு pH, EC என்பவற்றுக்காக பரிசோதிக்கப்பட்டன. உப்பின் அளவின் அடிப்படையில் தீர்வுகள் விவசாயி களுக்கு வழங்கப்பட்டன.

மண் மாதிரிகள் கமநல சேவை நிலைய பிரதேசத்தின் அடிப்படையில் மண்வள பரிசோதனைக்காக சேகரிக்கப்பட்டன.

நீர்மாதிரிகள் வட்டக்கச்சி விவசாயிகளின் குழாய் கிணறுகளிலும், DATC கிளிநொச்சியிலும் எடுக்கப்பட்டு நீர்பாசனத்துக்கு உகந்ததா என மதிப்பீடு செய்யப்பட்டது.

மண் நீர் முகாமைத்துவம்

செங்கபில கல்சிக் லற்றசோல் மண்ணில் உத்தம பாத்தி (Basin) அளவை தீர்மானிப்பதற்கான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. 0-20cm ஆழ 2m X 1m பாத்தி 12% உயர் ஈரலிப்பைக் காட்டியது. 30 - 40cm மற்றும் 40-60cm ஆழ 3mx2m பாத்தி உயர் ஈரலிப்பாக முறையே 11% மற்றும் 13.3% ஐ காட்டியது.

உள்ளூர் மரக்கறிகளின் தூய்மை பேணல்

கத்தரி (தின்னவேலி ஊதா), பாகல் (தின்னவேலி வெள்ளை), புடோல் (தின்னவேலி நீளம்), தக்காளி (KC – 1) மற்றும் பயற்றை (உள்ளூர்) ஆகிய மரக்கறிகள் இனத்தூய்மையைப் பேணுவதற்காக பராமரிக்கப்பட்டன.

பழ மூலவுயிருருக்களைப் பேணல்

மா (03 கறுத்தக்கொழும்பான், 3விலாட்), 14 பலா (உள்ளூர் சேகரிப்பு) 20 வாழை (கதலி, கப்பல், மொந்தன், எம்பன் (சாம்பல், பச்சை,) இதரை, கவன்டீஸ்), எலுமிச்சை (உள்ளூர்) இனிப்புத்தோடை (பிபில) போன்ற பழதாய்த் தாவரங்கள் பேணப்பட்டன.

மாதுளை (மென் விதை வர்க்கம் - நிமாலி, தயா) பராமரிக்கப்பட்டது.

500 மாதுளை நாற்றுக்கள் உற்பத்தி செய்யப்பட்டு கிளிநொச்சியில் மீள்குடியேறிய மக்களுக்கு வழங்குவதற்காக பிரதிப்பணிப்பாளர் (விரி) க்கு கையளிக்கப்பட்டது.

ஆலோசனைச் சேவை

நோய் பீடை தாக்கத்துக்கு உட்பட்ட பயிர் மாதிரிகள் விவசாயிகளிடமிருந்து பெறப்பட்டு அவை இனங்காணப்பட்டு அவற்றுக்கான தீர்வுகள் வழங்கப்பட்டன. வயல் பிரச்சினை உள்ள இடங்களுக்கு சென்று பிரச்சினைகளை அவ்விடத்திலேயே அடையாளம் கண்டு தீர்வுகள் வழங்கப்பட்டன.

25 பாடசாலைகளைச் சேர்ந்த 250 ஆசிரியர்களும் 3000 மாணவர்களும் நிலையத்துக்கு வருகை தந்து விவசாய ஆராய்ச்சி நடவடிக்கைகள் பற்றிய அறிவைப் பெற்றனர்.

திணைக்கள வெளியீட்டு விற்பனை அலகு ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது.

மலையகப் பாடசாலையிலிருந்து வருகைதந்த மாணவர்கள் மண் பரிசோதனை மற்றும் ஆய்வு கூட வேலைகள் பற்றிய தகவல்களைப் பெற்றுக் கொண்டனர்.

கண்காட்சி

விவசாய விரிவாக்கப் பகுதியினருடன் இணைந்து ஒரு வாரம் தின்னவேலி விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் கண்காட்சி நடத்தப்பட்டது.

ஆராய்ச்சி நோக்கத்துக்காகவும், வேறு நிறுவனங்களுக்கும், விவசாயிகளுக்கும் விதைகள் வழங்கப்பட்டன.

மிளகாய்	MI கிரீன்	- 03Kg
வெண்டி	TV 8	- 03 Kg
வெங்காயம்	TV Red	- 75 Kg

சேதனப்பசளை உற்பத்தி, பாவனைத் திட்டம்

நேரடியாக விவசாய அபிவிருத்தி கமநல சேவைகள் அமைச்சிடம் இருந்து கீழ்வரும் உபகரணங்கள் வவுனியா விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தின் மண் ஆய்வு கூட அபிவிருத்திக்காக மேற்படி திட்டத்தின் கீழ் 2011ம் ஆண்டு பெற்றுக்கொள்ளப்பட்டது. அவை: சுடுகலன், ஒபிற்றல்சேக்கர், கெஜ்டால்யுனிட், வோட்டவாத் pH மீற்றர், UV ஸ்பெக்ரோ போட்டோ மீற்றர் என்பனவாகும்.

2012ம் ஆண்டுக்கான திட்டம்

- மிளகாய்ப் பயிரை அதிகளவில் தாக்கும் பீடைகளின் குடித்தொகைச் செறிவினை மதிப்பீடு செய்தல்.
- வீதிமுறைப் பயிர்ச் செய்கையின் கீழ் மிளகாய்ப் பயிரின் முன்னேற்றம்
- உழுந்து வர்க்கங்களில் பிறப்புரிமையியல் வேறுபாடும் தொடர்பும் பற்றிய ஆய்வு
- மானாவாரி மற்றும் நீர்ப்பாசன நிலைமை களின் கீழ் உழுந்து வர்க்கங்களின் மதிப்பீடு
- தக்காளி KC 1 ல் உற்பத்தியாளர் விதை உற்பத்தி
- பாகலில் தின்னவேலி வெள்ளை உற்பத்தி யாளர் விதை உற்பத்தி
- வித்தியாசமான பயிர்ச்செறிவில் கோவா தக்காளி ஊடுப்பயிராக்கத்தின் முன்னேற்றம்.
- வீதிப்பயிர் செய்கையின் கீழ் தக்காளிப் பயிரின் முன்னேற்றம்
- வெங்காய மூலவுயிருருக்களை களத்தில் பாதுகாத்தல்
- வெங்காயப் பயிர்செய்கையில் நெமெற்றேட் ஐ கட்டுபடுத்துவதற்கு உகந்த தொழில்நுட்ப த்தை விருத்தி செய்தல்
- பாகலில் பீடைக்கெதிராக தாவர பீடை நாசினிகளை மதிப்பீடு செய்தல்
- பயிற்றையில் பீடைக்கெதிராக தாவர பீடை நாசினிகளை மதிப்பீடு செய்தல்
- உள்ளூர் நெல் பேதங்களை தூய்மைப் படுத்தல்
- நெல் வயல்களில் உவர் பிரச்சினையைப் பரிசோதித்தல்
- விவசாயிகள் பயிர்செய்யும் பிரச்சினைக் குரிய இடங்களில் சேகரிக்கப்பட்ட மண் மற்றும் நீரை பரிசோதித்தல்
- யாழ் தீவகற்பத்தின் விவசாயிகளின் வயல் நிலைமைகளில் உயர்விளைவும், காய் தண்டு துளைப்பானுக்கு எதிர்ப்புடையதுமான கத்தரி உள்ளூர் பேதங்களை தேர்வு செய்வதற்காக உள்ளூர் பேதங்களை பரிசோதித்தல்.
- வீதிப்பயிர்ச் செய்கையின் கீழ் கத்தரி பயிர்முன்னேற்றம்
- கத்தரிப்பயிர்ச் செய்கையின் கீழ் மூலிகை பொஸ்பேற்றை TSP உடன் ஒப்பிடுதல்
- மிளகாய் பேதங்களில் பனிப்பூச்சி எதிர்ப் பிற்குரிய PYT
- மிளகாய் பயிரில் பனிப்பூச்சிகுரிய தாவரபீடை நாசினியின் செயற்திறன் ஆய்வு
- உள்ளூர் மெலனுடன் வத்தைகை இடைப்பயிராக்கம்
- வீதிப்பயிர்செய்கையின் கீழ் கெக்கரி பயிரின் முன்னேற்றம்

- வீதிப் பயிர்ச்செய்கையின் கீழ் சின்ன வெங்காயம் பயிரின் முன்னேற்றம்
- விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் / அல்லது தோட்டத்தில் களைகள் பரவுதல் பற்றிய ஆய்வு மேற்கொள்ளல்.

உத்தியோகத்தர் பட்டியல்

பதவியணி	**எண்ணிக்கை**
பிரதிப்பணிப்பாளர் (ஆராய்ச்சி)	01
ஆராய்ச்சி உத்தியோகத்தர் (Act.DDR)	02
ஆராய்ச்சி உத்தியோகத்தர் (பொறுப்பதிகாரி)	01
ஆராய்ச்சி உத்தியோகத்தர்	04
விவசாய போதனாசிரியர்	10
ஆராய்ச்சி உப உதவியாளர்	02
நீர் இறைக்கும் இயந்திர இயக்குனர்	01
காவலாளி	02
தொழிலாளி	40
மொத்தம்	**63**

2.2 பூங்கனியியல் பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம் (HORDI), கன்னொறுவை.

பூங்கனியியல் பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனமானது ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சிகளினூடாக தேசிய ரீதியில் பூங்கனியியல் பயிருற்பத்தியினை மேம்படுத்து வதற்கான அதிகாரம் பெற்றுள்ளது. இதன் அதிகாரத்திற்குட்பட்ட பயிர்கள் மரக்கறி, பழவகை, காளான் கிழங்குப் பயிர்கள் மற்றும் அலங்காரப் பயிர்கள் என்பனவாகும். ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டமானது பிரதானமாக மேம் படுத்தப்பட்ட பூங்கனியியல் பயிர் வர்க்கங்கள், மேம்படுத்திய பயிருற்பத்தி மற்றும் முகாமை த்துவ நுட்பங்கள், தாவரப் போசணை முகாமை த்துவ நுட்பங்கள், நோய் பீடை முகாமைத்துவம், அறுவடைக்குப் பின்னான மற்றும் உணவுப் பதப்படுத்தும் முறைகள் நடுகைப் பொருளுற்பத்தி மற்றும் வீட்டுத் தோட்டம் ஆகியவற்றை நோக்காகக் கொண்டது.

பூங்கனியியல் பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரமானது பூங்கனியியல் பயிர்களில் உயரு ற்பத்தியுடைய, சூழல் நேயமான நிலைத்திரு க்கக் கூடிய பொருளாதார உறுதிப்பாடுடைய மற்றும் சமூக சமநிலைத் தன்மையானதும் உயர் கேள்வியுடையதுமான ஆராய்ச்சிகளை மேற்கொ ள்வதாகும். இதனால் பூங்கனியியல் பயிர் ஆரா ய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தினால் மேற் கொள்ளப்படும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சிகளானது மேலுள்ள விடயங்களை நிறைவேற்றுதலைக் குறிக்கோளாகக் கொண் டவை. இவற்றுடன் வேறு பொறுப்புக்களாக விவசாயிகளுக்கான பயிற்சிகள், விவசாயப் பட்ட தாரி மற்றும் டிப்ளோமா மாணவர்களுக்கான பயிற்சி, விவசாயிகளிடத்திலும் ஏனைய பங்குதார ர்களிடமும் புதிதாக விருத்தி செய்த நுட்பங் களை பரம்பலடையச் செய்வதற்கான விழிப்பூ ட்டல் நிகழ்ச்சிகள் என்பவற்றையும் கொண்டு ள்ளது.

பாதீடு

அட்டவணை 2.2.1 – வருடாந்தப் பாதீடு – 2011 (ரூ)

செலவு விடயம்	ஒதுக்கீடு	செலவு	செலவு%
மூலதனம்	13,072,765	13,131,601	100
மீண்டுவரும் செலவு	60,572,700	57,442,972	95
திட்டம்			
நடுகைப் பொருள் உற்பத்தி நிகழ்ச்சி	10,000,000	8,761,716	88
பழவகை, மரக்கறிகளுக்கான கலப்பின விதை உற்பத்தி	4,100,000	3,449,911	85
சேதனப் பசளை பாவனை உற்பத்தியும் ஊக்குவிப்பும்	7,527,470	9,737,587	129
ANSOFT	840,000	635,719	76
துரித மரக்கறி உற்பத்தி (FTF நிதி)	1,108,600	918,082	83
உட்கட்டுமான அபிவிருத்தி	5,000,000	3,036,159	61
தேசிய விவசாய ஆராய்ச்சித் திட்டம் (NARP)	10,000,000	7,483,425	75
மாதிரிக்கிராம நிகழ்ச்சி	4,100,000	2,860,091	70
மொத்தம்	**116,321,535**	**107,507,263**	**92**

முன்னேற்றம்

செயற்றிட்டங்கள்

- **மரக்கறி மற்றும் பழங்களினது கலப்பின விதை உற்பத்தி**

  இந்நிகழ்ச்சியின் பிரதான செயற்பாடுகளாக உயர் தரமான மரக்கறி மற்றும் பழப்பயிர்க ளுக்கான கலப்பின விருத்திக்கான ஆராய்ச்சி, சிபாரிசு செய்யப்பட்ட பேதங்களுக்கான பெற் றார் தாவரங்களை முகாமை செய்தல், அத் துடன் கலப்பின விதை உற்பத்தி என்பன ஆகும். ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்ட மரக் கறி பயிர்களாக தக்காளி, கத்தரி, பீர்க்கு, கறிமிளகாய் கெக்கரி, பயற்றை பாகல், மற் றும் பழப்பயிர்கள் (பப்பாசி) என்பன காணப் படுகின்றன.

- **நடுகைப்பொருள் உற்பத்தி**

  பூங்கனியியல் பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனமானது தனக்குச் சொந் தமான பண்ணைகளில் தாய்த் தாவர பழச் சோலைகளை சிபாரிசு செய்யப்பட்ட பழப்ப யிர்களுகென கொண்டுள்ளது. இத்திட்டத்தில் கிழங்குப் பயிர்களுக்கு மேலதிகமாக இலை மரக்கறி மற்றும் வீட்டுத் தோட்ட விதையுற்ப த்தியும் மேற்கொள்ளப்பட்டன.

அட்டவணை 2.2.2 2011ம் ஆண்டில் நடுகைப் பொருள் உற்பத்தி

பழவகை	அளவு (எண்ணிக்கை)
ரம்புட்டான்	36,750
இனிப்புத் தோடை	21,154
தூரியன்	4,150
மா	10,884
அன்னாசி	112,000
பேரிக்காய்	3,240
நாரத்தை	6,500
திராட்சை	1,978
மாதுளை	15,350
மொத்தம்	**212,000**

- **சேதனப் பசளை உற்பத்தியும் மேம்படுத்த லும்**

  இத்திட்டத்தின் பிரதான நோக்கம் இலங்கை விவசாயிகளிடத்தே சேதனப் பசளைப் பிரயோகத்தை மேம்படுத்துத லாகும். இத்திட்டத்தின் பிரதான செயற்பா டாக "முகுன்" இனை பெருமளவில் உற்ப த்தி செய்வதும் அதனை பகிர்ந்தளிப்ப துமாகும். இதன் மூலம் விவசாயிகள் தம் களத்தினில் சுயமாக சேதனப்பசளை உற்ப த்தியில் ஈடுபட முடியும். இந்தத் திட்ட த்திலே சேதனப் பசளை மாதிரி மற்றும் மூலப்பொருட்கள் பகுப்பாய்வும் செய்யப் பட்டன. அதே வேளையில் வெவ்வேறு பயிர்களில் வினைத்திறனான சேதனப் பசளை பிரயோகத்துக்கான மாதிரிகளை விருத்தி செய்வதற்கான ஒருங்கிணைந்த தாவர போசணைத் தொகுதிகளின் சோத னைகளும் மேற்கொள்ளப்பட்டன.

அட்டவணை 2.2.3 சேதனப்பசளை திட்டத்தின் பௌதீகச் செயற்பாடுகள்

செயற்பாடு	முன்னேற்றம்
பயிற்சி பெற்றோர்	6178
சேதனப் பசளை உற்பத்தி	445மெற் தொன்
ஒருங்கிணைந்த தாவர போசணைத் தொகுதி	16
மண்மாதிரிப் பகுப்பாய்வு	1372
பசுந்தாட் பசளை பயிராக்கம்	3

- **மாதிரி கிராம நிகழ்ச்சி**

  இந்நிகழ்ச்சியின் பிரதான நோக்கம் விவசாயிகளினது வாழ்வாதாரத்தை மேம்படு த்தலாகும். இதற்கென விவசாயிகளுக்கு சிபாரிசு செய்யப்பட்ட பயிர்களில் சிறந்த முகாமைத்துவ செயற்பாடுகள், நோய் பீடைகளை அடையாளம் காணல், முகாமை செய்தல் என்பவற்றில் அதிகளவு விழிப்பு ணர்வு ஏற்படுத்தப்பட்டது.

கண்டி, குருணாகல், மாத்தளை, கொழும்பு, களுத்துறை, மொனராகலை, நுவரெலியா, கேகாலை, மற்றும் மாத்தறை ஆகிய மாவ ட்டங்களைச் சேர்ந்த 41 கிராம விவசா யிகளுக்கு மரக்கறி, பழப்பயிர்களினது விதை, நடுகைப் பொருட்கள் மானிய முறையில் வழங்கப்பட்டன. இக்கிராம விவசாயிகள் மரக்கறி பழவகையின் பயிருற்பத்தி தொழில்நுட்ப விழிப்புணர்வு நிகழ்ச்சிகளில் உள்வாங்கப்பட்டனர்.

ANSOFT செயற்திட்டம்

இது பாரம்பரிய, நிலைபேறான சிறியளவிலான சேதன பண்ணைகளை ஆசியாவில் மேம்படு த்தும் திட்டமாகும். இத்திட்டத்தில் சேதனப் பயிர் செய்கையை இலங்கையில் வலுவூட்டவென ஏற்கனவே பணிக்குழுவொன்று அடையாளம் காணப்பட்டிருந்தது. இதனை முன்னெடுத்துச் செல்லவும் விவசரியகளிடத்தில் மிகச் சிறந்த வொரு சேதனப் பயிராக்க தொழிநுட்பங்களை சேர்த்து எடுக்கவுமான ஏற்பாடுகள் மேற்கொள்ள ப்பட்டன. அத்துடன் பிரதானமாக பயிருணவு முகாமை, நோய் பீடை முகாமை என்பனவ ற்றுடன் தொடர்பான புதிய தொழில்நுட்ப விருத்தி யானது தற்போது முன்னேற்றத்திலுள்ளது.

- **துரித மரக்கறி உற்பத்தி (FTF நிதி)**

  மரக்கறி உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் விவசாயியின் வாழ்வாதாரத்தை அதிகரிப் பதே இத்திட்டத்தின் பிரதான நோக்காகும். உண்மையில் பூங்கனியியல் பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின் கீழுள்ள ஆராய்ச்சி நிலையங்களில் செய்கை பண்ணப்படாத நிலங்களில் மரக்கறி விதை உற்பத்தியை மேற்கொள்ளவே இந்நிதி பயன்படுத்தப்பட்டது.

- **பண்ணை அபிவித்தி திட்டம்**

  தற்போதுள்ள பயிர்ச் செய்கையும், உட் கட்டுமான வசதிகளையும் விருத்தி செய்வதற்கென பசியால, மற்றும் வல்பிட்ட ஆராய்ச்சிப் பண்ணைகளில் அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

வல்பிட்ட ஆராய்ச்சிப் பண்ணை

2ha மாந்தோட்டம் புனருத்தாபனம், 3ha தென்னந்தோட்டம் பசளையிடப்பட்டது. ஏலவே இருந்த 2 வலையில்லங்கள் பழுது பார்ப்பு, புதிதாக ஒரு வலையில்லம் அமை ப்பு, இரு நீர்பாசன தொகுதி உருவாக்கம் (ஒன்று வீட்டுத் தோட்டத்திற்கும் இன்னொ ன்று கிழங்குப் பயிருக்கும்) 2ha றம்புட்டான் மற்றும் மா கத்தரித்தல் செய்யப்பட்டது. தென்கைக்குப் பசளையிடப்பட்டதுடன் பண் ணைக் கருவிகள் கொள்முதல் செய்யப் பட்டன.

மரக்கறிப் பிரிவு

பீடை எதிர்ப்பினை உறுதி செய்த வண்ணம், மரக்கறிப் பேதங்களை இனக்கலப்பு செய்து உயர் தரமும் விளைச்சலையும் ஒரு முகப்படுத்திய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டன. கலப்பின விருத்திக்கு முன்னிலை கொடுக்கப்படினும், மரபு ரீதியான இனக்கலப்பு முறைமைகளும் பயன்படுத்தப்பட்டன. புதிய பரம்பரை அமைப்புகளில் இருந்து நன்மை களை அதிகம் பெறும் பொருட்டு பயிராக்க வியல் கற்கை நடவடிக்கைகளும் மேற்கொ ள்ளப்பட்டன. பல்வேறு வழிகளிலும் தொழில் நுட்பப் பரம்பலை மேற்கொள்ளப்பட்டதுடன் அடிப்படை விதை உற்பத்தி, விருத்தி நடவடி க்கைகளும் இடம் பெற்றன.

பீர்க்கு:~

- இரண்டு சிறந்த கலப்பினங்கள் அடையாளம் காணப்பட்டன.
- ஆறு பெற்றோர் குலவகையின் பரம்பரைத் தூய்மை பேணப்பட்டது.
- பத்து கலப்பினங்கள் உருவாக்கப்பட்டதுடன் விதைகளும் பெறப்பட்டன.
- தேசிய ஒருங்கிணைந்த வர்க்கச் சோதனை ஆனது 04 இடங்களில் மேற்கொள்ளப் பட்டது.

- வர்க்க இசைவாக்க சோதனை ஆனது 03 மாவட்டங்களில் மேற் கொள்ளப்பட்டது.

போஞ்சி மற்றும் சிறகவரை

- தேசிய ஒருங்கிணைந்த வர்க்கச் சோதனை மூன்று இடங்களில் மேற்கொள்ளப்பட்டது.
- வர்க்க இசைவாக்க சோதனை 04 மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டது.
- உற்பத்தியாளர் விதை 8Kg Krishna , SLS 44 - சிறகவரை 4Kg உற்பத்தி செய்யப் பட்டது.
- சிறகவரை 'M தெரிவு" ஆனது தூய்மைப் படுத்தப்பட்டது.
- வர்க்க வெளியீட்டுக்காக ஒரு அவரைப் பேதமானது "கன்னொறுவை பச்சை" எனப் பெயர் குறிப்பிடப்பட்டது.

பயற்றை

- வர்க்க வெளியீட்டுக்காக ஒரு பயற்றைப் பேதமானது "கன்னொறுவை ஹவரி மே" எனப் பெயர் குறிப்பிடப்பட்டது.
- உள்ளூரில் விருத்தி செய்யப்பட்ட குலவகை கள் 5, பொருத்தபாடுக் கற்கைகளுக்காக தெரியப்பட்டன.
- 13 கலப்பினங்கள் பாரிய விளைச்சல் சோதனைகளுக்கு முன்னேறியதோடு, அவற் றுள் 03 உயர் விளைச்சலுடையனவாக அடையாளம் காணப்பட்டன.

கத்தரி

- உயர் விளைச்சல் தரும் கலப்பினமான லேனாரியானது வர்க்க வெளியீட்டுக்காக பெயர் குறிப்பிடப்பட்டதோடு அது "லேனா இரி 1" எனும் பெயரில் வெளியீடு செய்ய ப்பட்டது.
- 03 கலப்பினங்கள் இசைவாக்கக் கற்கை களுக்காக தெரிவு செய்யப்பட்டன.

தக்காளி

- அண்மையில் வெளியிடப்பட்ட தக்காளிப் பேதமான "இலங்கை செர்ரி" யின் விதையு ற்பத்தி அதிகரிக்கப்பட்டு ஆர்வமுடைய விவசாயிகளின் மத்தியில் பகிர்ந்தளிக்கப் பட்டது. இது மேலதிக பெருக்கத்துக்காக உற்பத்தியாளர் விதையாகவே பகிர்ந்த ளிக்கப்படுகின்றது.
- இசைவாக்கப் பரிசோதனைக்காக கலப்பின பேதம் HF3 மற்றும் விகாரிப் பேதம் M127 ஆகியன தெரிவு செய்யப்பட்டன.
- வர்த்தக ரீதியிலான பயிர்ச் செய்கைக்காக வெளிநாட்டுக்குரிய தக்காளிப் பேதங்களான மொங்கல், Tm701, FI15043, ஸ்டார் 9062 மற்றும் ஸ்டார் 9064 என்பன அடையாளப் படுத்தப்பட்டு அதன் இசைவாக்கமும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. களப்பரிசோதனைகளு க்கு அமைவாக இரண்டு தக்காளிப் பேதங்கள் தகுதியற்றன எனக் கண்டு அதன் வர்த்தக ரீதியிலான இறக்குமதி நிறுத்தப்ப ட்டுள்ளது.
- உயர்தர உள்ளக விருத்தியினங்களை விருத்தி செய்வதற்கு 4 தனிப்படுத்தப்பட்ட குடித்தொகையில் இருந்து தெரிவு செய்தலானது நடைமுறையிலுள்ளது. இதன் போது உயர் விளைச்சல், நோய் பீடை க்கான எதிர்ப்பு, விருப்பான பழப்பண்புகள் என்பன கருத்திற் கொள்ளப்படுகின்றன.

கறிமிளகாய்

- கலப்பின வர்க்கமான HCAI இனது இசைவாக்கத்தினை அறிந்து கொள்வ தற்கான மேலதிக சோதனைகள் மேற் கொள்ளப்பட்டன.
- வெளிநாட்டுப் பேதங்களினது மதிப்பீடு; அறிமுகப்படுத்தப்பட்ட வர்க்கங்களான 21348, Hp210, FST403, ஜலபெனோ வகைக்குரிய பேர்பெக்டோ மற்றும் மக்னிபிசியோ என்பன வர்த்தக ரீதியிலான

அறிமுகத்துக்கு உகந்தனவாக அடையாளப் படுத்தப்பட்டன.

- களப்பரிசோதனைகளுக்கு இணங்க 05 கறிமிளகாய் வர்க்கங்கள் தகுதியற்றன வென வர்த்தக ரீயிலான இறக்குமதி நிறுத்தப்பட்டுள்ளது.

கெக்கரி

- இரண்டு கெக்கரி வர்க்கங்கள் DUS பரிசோதனைக்காக பரிந்துரைக்கப்பட்டன.
- 7 பெற்றோர் குலவகையின் மரபுரிமை தூய்மை பேணப்பட்டது.
- F_1 தனிக்கலப்பினங்கள் 8 உற்பத்தி செய்ய ப்பட்டு விதைகள் பெறப்பட்டுள்ளன.
- கீழ்வரும் பண்புகள் முதிர்ச்சி சுட்டிகளாக நேரடியாக உண்ணும் கெக்கரியில் அடையாளம் காணப்பட்டது.
  - பழத்தின் நிறம் பச்சையிலிருந்து மஞ்சளாக மாறுதல்
  - பழத்தின் சுற்றளவும் பழநிறையும் சரியானதாக காணப்படல்
  - பூத்தலில் இருந்த 11-14 நாட்களுள் அறுவடை
  - முட்களினது கூர்மை குறைந்து செல்லல்

பாகல்

- இரண்டு பாகல் பேதங்களின் F_1 சந்ததி கள் தேசிய ஒருங்கிணைந்த வர்க்கச் சோதனைப் பரிசோதனையில் உள்ளன.
- ஏழு பெற்றோர் குலவகையின் பாரம்பரிய தூய்மை பேணப்பட்டது.
- தனிக் குறுக்கு கலப்பின 11 F_1 சந்ததியி லிருந்து விதைகள் பெறப்பட்டன
- 8 வெளிநாட்டுக்குரிய F_1 சந்ததி பாகல் வர்க்கங்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

பழங்கள் மற்றும் இழையவளர்ப்பு பிரிவு

பழங்கள்

வாழை

உயர் விளைச்சலுக்கெனவும், பனாமா சகிப்புத் தன்மைக்கெனவும் மதிப்பீடு:-

வாழைகளிலிருந்து மூன்று சீனிவாழை, ஒரு சாம்பல் வாழை வகையும் மேலதிக மதிப்பீடுகளுக்காக தெரிவு செய்யப்பட்டன. ஒரு புளி வாழை வகையும் ஒரு சீனி வாழை வகையும் தேசிய ஒருங்கிணைந்த வர்க்கச் சோதனை மதிப்பீட்டு நிலையில் உள்ளன. ஒன்று சேர்க்கப்பட்ட 37 எம்பன் வாழை வகைகள் இந்த வருடத்தினுள் மதிப்பீடு செய்யப்பட்டன. வளர்ச்சி, விளைச்சல் பண்புகள் பதியப்பட்டுள்ளன. மதிப்பீடு இன்னும் தொடர்கிறது.

பப்பாசி

தெரிவு செய்யப்பட்ட 3வது பப்பாசி சந்ததி மதிப்பீடு செய்யப்பட்டது. 12 நல்லியல்பு கொண்ட தாவரங்கள் உள்ளகக் கலப்பு உற்ப த்திக்கென தெரியப்பட்டன. உலர், இடைவலய ங்களில் செயற்பாட்டு மதிப்பீடு நடாத்துவதற்குக் கலப்புப்பிறப்பு விதைகள் உற்பத்தி செய்யப் பட்டன. அதிக மழை காரணமாக பயிர் அதிகள வில் பாதிக்கப்பட்டது. 2012ம் ஆண்டில் மதிப்பீடு செய்யப்படுவதற்கென நடுகைப் பொருள் உற்ப த்தி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சித்திரசு/எலுமிச்சை

15 உள்ளூர் மற்றும் வெளிநாட்டு பேதங்கள் மதிப்பீடு செய்யப்பட்டன. இவற்றுள் நல்லியல்பு கொண்டவை 2 மேலதிக மதிப்பீட்டுக்கென அடையாளப்படுத்தப்பட்டன.

ரம்புட்டான்

ரம்புட்டானில் பழங்கள் விழுவதைக் குறைப்பதில் கல்சியத்தின் தாக்கம் பற்றிய கற்கை மேற்கொள்ளப்பட்டது. பூக்கும் பருவத்தில் கல்சியத்தைச் சல்பருடன் கலந்து பிரயோகிக்கும் போது பழங்கள் விழுவதைக் குறைக்கலாம்

எனக் கண்டறியப்பட்டது. இக்கற்கைகள் தொடர்ந்த வண்ணமுள்ளன.

தூரியன்

தொடர்ச்சியாக தூரியன் பேதங்களின் மதிப்பீடு நடைபெற்றது. 14 குலவகை மதிப்பிடப்பட்டன. இரண்டு குலவகையில் பதிய இயல்புகள் மதிப்பீடு செய்யப்பட்டன. 5 குலவகையில் பூக்கள் பெறப்பட்டன. 5 வித்தியாசமான கலப்புக்களில் சிறந்த கலப்புச் சேர்க்கை மற்றும் பழத்தரம் என்பவற்றை கண்டறிய மேற் கொள்ளப்பட்டது.

பழத்தரம் தொடர்பான தரவுகள் இக் கலப்புச் சேர்க்கைகளில் இருந்து பதியப்பட்டன. அத்துடன் மதிப்பீட்டு வேலைகள் தொடர்ச்சியான நடைபெறுகின்றன.

உக்குரஸ்ஸ

தெரிந்தெடுக்கப்பட்ட குலவகைகளின் மதிப்பீடு இவ்வாண்டில் தொடராக நடைபெற்றன. இதன் போது ஒரு குலவகை சிறிதளவு பழங்களை உற்பத்தி செய்தது. ஏனைய குலவகை இன்னும் பூக்க ஆரம்பிக்கவில்லை. தரவுகள் பதியப் படுகின்றன. மதிப்பீடுகள் தொடர்ச்சியாக நடைப் பெற்றுக் கொண்டிருக்கின்றன.

மா

உல்பெதகம பண்ணையில் வேறுப்பட்ட சேர்க்கை களையுடைய ஒட்டுக்கட்டைகளின் மதிப்பீடு நடைபெறுகின்றது. இவற்றின் பதிய இயல்புக ளுக்கான தரவுகள் பதியப்பட்டுள்ளன. முதலா வது காய்த்தலின் போது சில மரங்கள் சிறிதளவு பழத்தினை தந்தன. இவற்றின் தரவு கேரிப்பானது முன்னேற்றத்தில் உள்ளது.

டிராகன் பழம்

பலதரப்பட்ட எண்ணிக்கையான சிவப்பு மற்றும் வெள்ளைச் சதையைக் கொண்ட தாவரங்களின் மதிப்பீடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சில தாவர ங்கள் இவ்வாண்டில் சிறிதளவு பழம் உற்பத்தி செய்தன. வளர்ச்சி, விளைச்சல், செயற்பாட்டுத் தரவுகள் பதியப்பட்டுள்ளன. மதிப்பீடானது தொட ர்ச்சியாக நடைப்பெற்றுக் கொண்டிருக்கிறது.

இழைய வளர்ப்பு

தாவர மீள் பிறப்பாக்கத் தொகுதிகள்

மரக்கறி

தக்காளி

மகரந்த வளர்ப்புக்கான புதிய கலக்கூட்டு உருவாக்க ஊடகமானது பரீட்சிக்கப்பட்டுகின்றது மகரந்தத்திலிருந்து பெறப்படுகின்ற கலக்கூட்டு மூலம் ஒரு மடிய தாவர மீள் பிறப்பாக்கம் தொடர்பான பரிசோதனைகள் தொடராக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

பழவகை

வாழை

வாழைக்கான ஆய்வுகூட வளர்ப்பு நுட்பவிருத்தி

- ஆய்வுகூட நிபந்தனைகளின் கீழ் கோழிக்குட்டு வாழையின் இனப்பெருக்க வீதத்தினை அதிகரிப்பதற்கான சோதனை மேற்கொள்ளப் பட்டது. ஒரு Explant இலிருந்து 500க்கு மேற்ப்பட்ட சிறு வாழைகள் உற்பத்தி செய்யலாமென முடிவுகள் காட்டுகின்றன.

முனையரும்பு வளர்த்தல் மூலம் நோய்க் காரணியற்ற வாழையின் ஆய்வுகூட நுட்ப விருத்தி

- வாழையின் முனையரும்பு இம்முறைக்கென பயன்படுத்தப்பட முடியும். எனினும் இவற்றின் மீள் பிறப்பாக்க வீதக் குறைவானது இவற்றை பாரிய உற்பத்தி தொகுதிக்கு அனுமதிப்பதில் தடையாக உள்ளது. முனையரும்பினது மீள் பிறப்பாக்கத்தினை அதிகரிப்பது தொடர்பான மேலதிக பரிசோதனைகள் அவசியமாக உள்ளது.

திராட்சை

திராட்சியில் விதையற்ற தொம்சன் பேதத்தினது ஆய்வுகூட வளர்ப்புப் பெருக்கமானது அறிமுகப் படுத்தப்பட்டது. சரியான ஓமோன் இணைப்பினை

கண்டறிய பல வகை ஓமோன்கள் பரீட்சிக்கப் பட்டன. பெருக்கப்பட்ட தண்டுகள் வேர் விட வைக்கும் ஊடகத்துக்கு மாற்றப்பட்டன. இவற்றி லிருந்து நிறைவான சிறுதாவரங்கள் பெறப் பட்டன.

சித்திரசு/எலுமிச்சை

இதன் ஆய்வுகூட வளர்ப்பின் பெருக்கமானது வர்க்கம் ஆரோக்கியாவின் தண்டு நுனி மற்றும் கணு வெட்டுத் துண்டம் மூலம் சாத்தியப்பாடு டையதென பரிசோதனைகள் தெரிவிக்கின்றன. எனினும் தண்டுற்பத்தி வீதமானது மிக குறைவாக காணப்பட்டது. பரிசோதனைகள் தொடர்ச்சியாக நடைபெறுகின்றன.

பெல்லி (Belli)

சுபுன் வர்க்கத்தினது ஆய்வுகூட வளர்ப்பின் போதான வேர் விடும் ஆற்றலை அதிகரிப்பதற் கான பரிசோதனைகள் தொடர்ந்தும் நடை பெற்றுக் கொண்டிருக்கின்றன.

இழையவளர்ப்பில் பெற்ற சிறு தாவரங்க ளினது களமதிப்பீடு

- இழைய வளர்ப்பினால் உற்பத்தி செய்யப் பட்ட நேத்திரம் பழம் தாவரங்கள் களத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. இவற்றின் மதிப்பீடு நடைபெற்றுக் கொண்டிருகிறது.

- இழைய வளர்ப்பினால் உருவாக்கப்பட்ட அன்னாசியில் சுவை மற்றும் தரம் தொடர் பான பிரச்சினைகள் எழுந்ததால் மொரிசி யஸ் மற்றும் கியு பேதங்களினது இழைய வளர்ப்பில் பெறப்பட்ட சிறு தாவரங்கள் கள த்தில் ஸ்தாபிக்கப்பட்டு மதிப்பீடு செய்யப் படுகின்றன.

பூச்சியியல் பிரிவு

கோவாவில் இலையுண்ணும் மயிர்க் தொட்டிகளுக் கெதிராக உள்ளூரில் தொகுக்கப்பட்ட வேம்பு பூச்சி நாசினியினது செயலாற்றல்

- உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட வேம்பு உற்பத்தியான சித்துமின எனும் வியாபாரப் பெயருடைய பூச்சி நாசினியானது கோவா இலையரிப்புழுச் சிக்கலுக்கெதிராகப் பரீட்சி க்கப்பட்டது. இதன் போது கட்டுப்பாட்டு தொகுதியான பூச்சி நாசினி பாவனையற்ற பகுதியும், அத்தோடு நடைமுறை சிபாரிசு கமைவான ஏனைய பூச்சி நாசினிகளும் ஒப்பீடு செய்யப்பட்டன. இலையரிப்புழுக்க ளினது எண்ணிக்கையை கட்டுப்படுத்து வதில் வேம்புற்பத்தி பூச்சி நாசினியானது மிகுந்த முக்கியமுடையதாயும் இதன் செயற்பாடானது நடைமுறையில் சிபாரிசி லுள்ள பூச்சி நாசினிகளுடன் ஒப்பிடுகையில் எவ்விதத்திலும் குறைவற்றது என்பதும் அறியப்பட்டது. (அதாவது குளோர்புளோரு ரோன் மற்றும் வேப்பம் விதை பிளிந் தெடுப்பு)

- **விளையும் ஆற்றல் மற்றும் நோய் பீடை எதிர்ப்பிற்கென வெளிநாட்டு பீர்க்கு வர்க்கங்களினது மதிப்பீடு**

  எட்டு வெளிநாட்டுக்குரிய பீர்க்குப் பேதங்கள் விவசாய திணைக்கள சிபாரிசு வர்க்கமான LA 33 உடனும், பிரபல்யமான வெளிநாட்டு வர்க்கமான "நாகா" உடனும் சேர்த்து மதிப்பீடு செய்யப்பட்டன. இவற்றுள் சில இரு போகங்களின் போதும், வேறு சில புது வரவாக இருந்தமையினால் ஒரு போகத்தின் போதும் மதிப்பீடு செய்யப்பட்டன. வர்க்க ங்கள் பொனான்சா, சன்னி, 641044 என்பன இரு போகங்களிலும் மதிப்பிடப்பட்டன. இவை இரு போகங்களிலும் உயர் விளை ச்சல் தருபவனாகக் காணப்பட்டன. அத்துடன் LA33 உடன் ஒப்பிடும் போது இவை வைரசு நோய் எதிர்ப்பாற்றலும், பழ ஈயின் தாக்க

த்திற்கு அதிக எதிர்புடையதாகவும் காணப் பட்டன. இவற்றினது செயலாற்றலை "நாகா" வர்க்கத்துடன் ஒப்பிடும் போது குறிப்பிட த்தக்க எந்தவித மாற்றமும் தென்பட வில்லை. இதனால் இம்மூன்று வர்க்கங்க ளும் வியாபார விதை இறக்குமதிக் கான அனுமதியை பெறவென சிபாரிசு செய்யப்ப ட்டுள்ளன.

HGYMV வைரசு நோய்க்கான விருந்து வழங்கிகளை அடையாளம் காணல்

இலங்கையர் உணவில் முக்கிய இடம்பிடி க்கும் 4 மரக்கறி அவரைகளும் 6 பருப்பு அவரைகளும் இக்கற்கைகென தெரிவு செய்யப்பட்டன. தெரிவு செய்யப்பட்ட மரக்கறி அவரையினங்கள் பொது அவரை, yard Long bean, புசிற்றாவோ சிறகவரை என்பனவாகும். பருப்பு அவரையினங்கள் பயறு, உழுந்து, கௌபீ, கொள்ளு, சோயா அவரை, நிலக்கடலை, என்பனவாகும். சாடிகளில் வளர்க்கப்பட்ட இத்தாவரங்கள் பூச்சிகள் உட்புகா வண்ணம் வலையினால் காவலிடப்பட்டிருந்தன. இவற்றிற்கு வைர சினை காவ, ஆய்வு கூடத்தினுள் வளர்க்கப்பட்ட வெண்ஈ, பயன்படுத்தப்பட்டது. இக்கற்கையின் பெறுபேறாக. பொது அவரை சோயா அவரை, கொள்ளு, என்பன HGYMV க்கு மிகுந்த தொற்று அடையக் கூடியன வாகவும், பொது அவரை ஆனது வைரசு இனால் மிகவும் விரும்பப் பெற்ற அவரை யினமாகவும் காணப்பட்டதுடன், தாக்க வரிசைக் கிரமப்படி பொது அவரை சோயா அவரை, கொள்ளு என்பனவும் காணப்பட்டன.

உறிஞ்சும் பீடைகளுக்கெதிரான பூச்சி நாசினியை தெரிந்தறிதல் (முறையே கத்தரி, வெண்டியை தாக்கும் வெண்ஈ மற்றும் இலைத் தத்திகள்)

ஏற்கனவே சிபாரிசில் உள்ளவையும் புதிய திடநிலைத் தொகுப்புக்களாகவுமுள்ள பூச்சி நாசினிகளானது தற்போது சிபாரிசிலுள்ள பூச்சி நாசினியான அசட்றாமிபிரிட் 20 SP யுடன் மதிப்பிடப்பட்டது. இதன் போது இரு வெவ்வேறான பரிசோதனைகளாக எதுவும் பிரயோகிக்காத கட்டுபாட்டு நிலமையும், விவசாயிகளினது சாதாரண பிரயோகக் களமும் கத்தரி, வெண்டிக்கு தனித்தனியாக பரிசோதிக்கப்பட்டன. அவதானிப்புக்களின் படி இம்மூன்று பூச்சி நாசினிகளும் முறையே அசட்றாமிப்றிட் 20SL, தயோமெதொக்சாம் 75 SG, மற்றும் இமிடா குளோபிறிட் 70WG வெண்ஈ மற்றும் இலைத்தத்திகளை கட்டுப்படுத்துவதில் மிகுந்த முக்கியத்து வடையதாகவும் வினைத்திறனுடையதாகவும் காணப்பட்டன (கட்டுப்பாட்டுடன் ஒப்பிடுகையில்)

இந்நிலையில் தயோமெதொக்சாம் 75 SG மற்றும் இமிடா குளோபிறிட் 70WG என்பன சிறு போகத்தில் மட்டுமே பரீட்சிக்கப்பட்டன. இவை பெரும் போகத்திலும் பரீட்சிக்கப்பட வேண்டி யுள்ளது. இருப்பினும் இருபோகத்திலும் பரீட்சிக்கப்பட்ட அசட்றாமிப்றிட் 20SL ஆனது வெண்ஈ, இலைதத்தி என்பவற்றை கட்டுபடுத்த சிபாரிசு செய்யப்பட முடியும்.

கொள்ளுப் பயிரில் மஞ்சளாதலை ஏற்படுத்தும் HGYMV யினை கட்டுபடுத்த இயற்கையான ஆயுர்வேத பூச்சி நாசினி / பசளையினை தெரிந்தறிதல்

- இதன் போது சோதனையில் பயன்படுத்திய எந்தவொரு சேர்வையும் வினைத்திறனு டையதாக காணப்படவில்லை அத்தோடு எந்தவொரு சோதனையிலும் குறிப்பிடதக் களவு விளைச்சல் வித்தியாசம் காணப்பட வுமில்லை. (கட்டுபாட்டு பரிசோதனை உள்ளங்கலாக)
- **திராட்சையின் விதையற்ற தொம்சன் வர்க்கத்தின் நோய் பீடை முகாமையும் பழத்தினது பருமனும்**
- திராட்சையில் காணப்படுகின்ற நோய் மற்றும் பீடை தொடர்பான ஆய்வொன்று நடாத்தப்பட்டது, நோய் தொடர்பான விடயங்கள் நோயியல் பகுதியில் அறிக்கை யிடப்பட்டிருக்கின்றன.

- பிரதான பீடைகளாக சிவப்பு பட்டியுள்ள பனிப்பூச்சி மற்றும் சிவப்பு சிலந்தி சிற்றுண்ணி என்பன காணப்படுகின்றன. இவற்றை கட்டுப்படுத்த வினைத்திறனான பூச்சி நாசினிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

- கல்பிட்டிய பகுதியில் பாதிக்கப்பட்ட திராட்சைப் பழத்திலிருந்து லெபிடொப்டரா வருணத்தை சார்ந்த அந்து ஒன்று இணங் காணப்பட்டுள்ளது. இவ் அந்தினது சாதி, இனம் என்பன அடையாளம் காணப்பட வேண்டியுள்ளது. இதனுடன் விவசாயிகள் மைனா, பொலஸ் கொட்டுருவா என்பனவும் பறவைப் பீடைகளாக காணப்பட்டதாக தெரிவிக்கின்றனர்.

  கலிப்பினிய பிராந்திய ஆராய்ச்சி நிலையமானது இனங்காணப்படாத காரணிகளினால் 10 திராட்சைச் செடிகள் இறந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளது. இதனுடன் தொடர்பான எதுவித நோய் பீடை அடையாளங்களும் காணப்படாததனால் இதனை கண்டறியவென சோதனை நடாத்தப்பட வேண்டும். எனினும் மண் பரிகரிப்பு செய்யப்பட்ட திராட்சை செடிகள் மீள் வளர்ச்சி அடைவது அறிக்கையிடப்பட்டுள்ளது. விவசாய ஆராய்ச்சி நிலையம் கல்பிட்டியில் மேற்குறித்த திட்டத்தில் ஒரு புதிய பயிர் ஸ்தாபிக்கப்படவென விதையற்ற தொம்சன் வர்க்கத்தினது நடுகைப் பொருட்களினது இனப்பெருக்கமானது பூங்கனியியல் பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் கன்னொறுவையில் இடம் பெறுகின்றது.

கொடித் தோடையில் தண்டு வீக்க முகாமைத்துவமும் நோய்க் காரணியை அடையாளம் காணலும்

நெசிடியோகோரிஸ் மற்றும் இரு தாவரவுண்ணி கோலம்பொலாக்கள், கொடித்தோடை தாவர பாகங்களுடன் இணைந்து காணப்பட்டமையானது இவ்வாய்வின் போது அடையாளம் காணப்பட்டது. நோயாக்கி பங்கசுவான பியுசாரியமும் நோயற்ற வேறுப்பிரித்தெடுக்கப்பட்ட பியுசாரியத்தினை நோயற்ற தாவரத்தினுள் உட்புகுத்திய போது நோய் அறிகுறிகளை அவதானிக்க முடியவில்லை. அத்துடன் பாதிக்கப்பட்ட தாவரங்கள் பிரயோகிக்கப்பட்ட இரசாயனங்கள் எதனாலும் குணப்படுத்தப்பட முடியவில்லை.

சில சேதன தயாரிப்புக்களினதும் தாவர பிரித்தெடுப்புக்களினதும் ஆய்வுகூட மதிப்பீடு

இத்திட்டத்தின் கீழ் 20 தாவர பிரித்தெடுப்புக்களையும் சேதன தயாரிப்புக்களையும் பயன்படுத்தி 21 ஆய்வு கூட உயிர்ச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. (ஏபிட்டு -4, டயமன்ட் முதுகு அந்து -14, குரோசிடோலோமியா-3) வேப்பம் இலை, ஜபலா விதைப்பருப்பு, இனிப்பு பிளக் வேர்த்தண்டுக் கிழங்கு என்பவற்றின் திரவ கரைசல்களானது டயமன்ட் முதுகு அந்துவில் உணவில் நாட்டமின்மையையும் இறப்பை ஏற்படுத்துவதும் கண்டறியப்பட்டது.

ஒருங்கிணைந்த பீடை முகாமையுடன் இசைவான பூச்சி நாசினிகளும் ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவ திரட்டுக்களும்

பூச்சி நாசினிகளின் உயிரியல் செயல்திறன் தன்மையிலமைந்த பரிசோதனைகளின் முடிவுகளின் அடிப்படையில் கீழ்வரும் ஒருங்கிணைந்த பீடை முகாமைக்கு இசைவான பூச்சி நாசினிகள் சிபாரிசுக்கென முன்மொழியப்பட்டுள்ளன.

- Rynaxypyr (Coragen 18.5SC) யானது 19ml / l0 l எனும் அளவில் கத்தரிக்காய் தண்டு துளைப்பானுக்கு, இதனை சாதாரண விவசாய திணைக்கள சிபாரிசுக்கமைவாக கட்டுப்படுத்த முடியாதுள்ளது.

- Rynaxypyr (Coragen 18.5SC) யானது 1.5ml / l0 l எனும் அளவிலும் Bristifuran 10EC யானது 15ml /l0 l எனும் அளவிலும் டயமன்

முதுகு அந்து கட்டுபாட்டுக்கு பயன்படுத்தப் பட்டுள்ளது.

- Rynaxypyr (Coragen 18.5SC) யானது 1.9ml/10l எனும் அளவிலும் Vertaro(69-108 g/ ha 1.5g 10 l ˙ அளவிலும் spinosad 137-216 ml/ ha 3 ml/10 l அளவிலும் அவரைய காய் துளை புழுக்களுக்கான சிபாரிசு

- Tracer 45EC (Spinosad, 450EC யானது 3ml/ 10 l அளவிலும் Bristifuron 10EC, 15ml / 10c அளவிலும் Virtaro 40WG 1.2g / 10 l அளவிலும் Flutendiamide WG (Belt) 2g / 10 l அளவிலும் Rynaxypyr (Coragen 18.5SC) யானது 3me//10 l அளவிலும் தக்காளி காய் துளைபுழுவுக்கென சிபாரிசு செய்ய பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

சித்திரசு பீடைகளுக்கான ஒருங்கிணைந்த பீடை முகாமைக்காக ஆரம்பக்கட்ட ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன் போது பொருளாதார முக்கியத்துவமுடைய பீடைகளாக இலைச் சுருங்கமறுப்பி இலையுண்ணும் புழுக்கள், அழுக்கணவன், பழஈக்கள், ஆகியன இனங்காணப்பட்டுள்ளன. எனினும் சில பகுதிகளில் பழம் துளைப்பான் அந்து, செதில் பூச்சி, சிற்றுண்ணி, என்பன முக்கியமான பீடைகளாகக் காணப்படுகின்றன. முக்கிய பீடைகளான அழுக்கணவன், இலைச் சுரங்கமறுப்பி, இலைப்யுண்ணும் புழுக்கள், என்பவற்றுக்கு பரிசோதிக்கப்பட்ட எந்தவொரு வர்க்கமும் எதிர்ப்புடையதாகக் காணப்பட வில்லை.

பழஈக்கள் எந்த வயதுப்பருவத்தில் அதிகளவில் புரதப் பொறியினால் கவரப்படுகின்றன என்பதை கண்டறிய நடாத்திய சோதனையின் போது Lak Gro பொறியானது பழஈயினது 4-10 நாள் வயதுடைய முதிர் நிலை ஈக்கள் அதிகளவு கவரப்படுவதையும், 13 நாட்களிலும் அதிக வயதுடையவை கவரப்படுவதில்லை எனவும் தெரிவிக்கிறது. இதனடிப்படையில், பழ ஈக்களுக்கான விவசாயத் திணைக்களத்தினது சிபாரிசுக்கமைவான ஒருங்கிணைந்த பீடை முகாமையின் புரதப் பொறியானது பூக்கள் பூக்கும் ஆரம்ப நாட்களில் பயன்படுத்தப்படின் மிகுந்த வெற்றியளிக்கின்றது.

இயற்கையான வியாபார பூச்சி நாசினியான "கன்னொறுவை பலிபோத பலகாய" ஆனது காளானில் சிற்றுண்ணியை கட்டுப்படுத்தப் பயன் படுத்தப்பட்ட போது இதனது வினைத்திறன் மிக குறைவாக இருப்பது கண்டறியப்பட்டது.

பூசணி வைரசு நோய்க்கான கட்டுப்பாட்டு முறைகளின் விருத்தியும் காரணியைக் கண்டறிதலும்.

வாரியபொல, மாகாந்துர ஆகிய இடங்களில் இருந்து பெறப்பட்ட பூசணி இலைமாதிரிகளில் பின்வரும் 5 வகையான வைரசுக்கள் காணப்பட வில்லை. அவையாவன PRSV, ZYMV,TRSV, TORSV மற்றும் CGMMV என்பனவாகும். கன்னொறுவையில் இருந்து பெறப்பட்ட பூசணி இலையில் PRSV காணப்பட்டது. CMV, WMV, ZYMV, TRSV, TORSV மற்றும் CGMMV ஆகிய 6 வைரசுக்களுக்கு காணப்படவில்லை. ஏனைய வைரசுக்களுக்கான சோதனைகள் 2012 ல் நடைபெறும்.

பூசணியில் நோய் பீடைகளுக்கான தற்போதுள்ள ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவத் திரட்டுக் களை சோதித்தறிய மாகாந்துற பிராந்திய விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தில் ஒரு பரிசோதனை நடாத்தப்பட்டது. இதன் போது கட்டுப்பாட்டு பரிசோதனைகள், விவசாயத் திணைக்கள சிபாரிசுக்கமைய விவசாயின் சாதாரண பயிர்ச் செய்கை முறைகள் என்பன உள்வாங்கப்பட்டிருந்தன. இதன் போது பயிரானது வெண் ஈயினால் மிக அதிகமாக பாதிக்கப்பட்டிருந்தது ஆனால் பனிப்பூச்சி, அமுக்கணவன் பூசணி வண்டு என்பவற்றின் தாக்கம் மிக குறைவாக இருந்தது. அத்துடன் நடைமுறையிலுள்ள ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவ முறைகள் வைரசுத் தொற்றைக்

குறைப்பதில் மிகவும் வினைத்திறனற்றதாக காணப்பட்டன.

பூசணிச் செய்கையில் ஒளித்தெறிப்பு செய்யக் கூடிய பொலித்தீன் பாவனையானது வெண்ஈ பரவலையும் வைரசுத் தொற்றயையும் கட்டுப்படுத்துவதில் மிகவும் வினைத்திறனா யுள்ளது. அதே வேளை இவ்வகை ஒளித்தெறிப்பு செய்யும் பொலித்தீன் மூடுபடையானது வைரசுத் தொற்றலை தாமதிக்கக் செய்யும். ஒட்டும் தன்மையான மஞ்சள் நிற பொலித்தீன் பொறிகளின் பாவனை மட்டும் குறைந்த வினைத்திறனுடையதாக காணப்படுகின்றது.

பூசணியில் வெண்ஈ, அழுக்கணவன், பனிப்பூச்சி, இலை தத்தி என்பவற்றின் ஆரம்ப கால பரவுதலை தடுக்க பூசணி விதைகளை இமிடாகுளோபிரிட் 70% WS இனால் விதைப் பரிகரணம் செய்வதனாது மிகவும் வினைத் திறனான மாற்றுவழியாக காணப்படுகின்றது. இதனை உறுதிப்படுத்துவதற்கான பரிசோதனை கள் 2012ல் நடாத்தப்படும்.

பதிவு நோக்கங்களுக்காக பரீட்சார்த்தம் பூச்சி நாசினிப் பரிசோதனை

ஒரு புதிய மூலத்திலிருந்தான தயோமெதொ க்சாம் 25% WDG ஆனது அமுக்கணவன், வெண்ஈ, மற்றும் கறிமிளகாயில் இலைச்சுருள் சிக்கலை கட்டுப்படுத்த மிகவும் வினைத்திறனா னதாக காணப்படுகின்றது. அசிபேட் 75% sp ஆனது இலைத்தத்திகளுக்கு எதிராக பயன் படுத்திய போது மிக குறைந்த வினைத்திறனாக அமைந்த தோடு இலக்கு வைக்காத பூச்சிப்பீடை குடித் தொகை அதிகரிப்பையும் ஏற்படுத்துகிறது. இதனை உறுதி செய்வதற்கான மேலதிக சோதனைகள் 2012ல் நடாத்தப்படும்.

வாழை நீள்மூச்சு வண்டுக்கு எதிர்ப்பைக் காட்டும் வாழை வர்க்கங்களை கண்டறிவ தற்கான ஆய்வுகூட பரிசோதனை ஒன்று நடாத்த ப்பட்டது. பரிசோதனையானது இன்னமும் தொடர் கிறது.

இஞ்சியில் புதிய பீடைக்கான கட்டுப்பாட்டு முறைகளை விருத்தி செய்தலும், உருவாக்க காரணியை கண்டறிதலும்.

இலங்கையில் இஞ்சியில் ஒரு புதிய பீடையான வேர்த்தண்டுக் கிழங்கு ஈயானது பாரிய சேதம் ஏற்படுத்துவதாக அடையாளம் காணப்பட்டுள்ளது. இதன் போது ஒரு சிக்கலான நிலையாக பாதிக்கப்பட்ட கிழங்குகளில் பங்கசு, நெமற்றோடு, சிற்றுண்ணி என்பனவற்றின் தாக்கமும் காணப்பட்டதுடன் இறுதியில் கிழங்கில் அழுகல் நிலையும் உருவானது. இதற்கென 5 வகை பூச்சி நாசினிகளான இமிடாகுளோமிரிட், காபோசல்பான், குளோரோபைரிபொசு, நொவலிரோன், மற்றும் எதோ பொன்புரோக்ஸ் விவசாயிகளின் களத்தில் பரீட்சிக்கப்பட்டன எனினும் எதுவும் இப்பீடைக்கெதிராக வினைத்திறனுடையதாக காணப்படவில்லை.

இனங்காணப்பட்டுள்ள புதிய பீடைச் சேதங்கள்

- இஞ்சியில் புதிய பீடையாக - இஞ்சி வேர்த்தண்டுக்கிழங்கு ஈ mimegralla Coeruleitf rons எனும் பீடை இலங்கையில் முதன் முதலாக இஞ்சிப் பயிரில் சேதம் விளைவிப்பது கண்டறியப்பட்டது.

- காளானில் புதிய பனிப்பூச்சி இனமொன்றின் தாக்கமானது பம்பரதெனியவில் அவதானிக் கப்பட்டுள்ளது. இதுவே பனிப்பூச்சியினால் காளானில் சேதமேற்படுத்தப்பட்டதாக இலங் கையில் அறியக்கிடைத்த முதல் அறிக்கை யாகும்.

தாவர நோயியல், நுண்ணுயிரினவியல் மற்றும் காளான் பிரிவு

இப்பிரிவினது பிரதான நடவடிக்கைகளாக தாவர நோய்களை அடையாளம் காணல், ஒருங்கிணைந்த நோய் முகாமைத்துவ திரட்டுக்களின் விருத்தி, பங்கசு, நாசினிகளின் தரப்பிரிப்பு, விதை மற்றும் தாவர சுகாதார சோதனை, காளான் வளர்ப்பில் புதிதாக விருத்தி செய்யப்பட்ட மேம்படுத்திய நுட்பங்களான சிப்பி,

வைக்கோல், பால் காளான் வளர்ப்புக்கான ஆலோசனை சேவைகள் மற்றும் நோய்முகாமை தொடர்பான ஆலோசனை சேவைகள் என்பனவாகும். புதிய தொழில்நுட்ப பரம்பலானது பயிற்சி வகுப்புக்கள், தாவர சிகிச்சை முகாம், துண்டுபிரசுரம், ஆய்வறிக்கைகளின் வெளியீடு களின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.

பக்ரீரியா வாடலுக்கு எதிர்புடைய வெளிநாட்டுக்குரிய கலப்பினத் தெரிவு

றல்ஸ்டோனியா சொலனேசியாரம் எனும் பக்ரீரியாவினால் ஏற்படுத்தப்படும் வாடல் நோய்க்கு எதிர்ப்புக் காட்டும் 21 தக்காளி, 12 கத்தரி, 3 கறிமிளகாய், வர்க்கங்கள் வேறுபிரித்து அறியப்பட்டன. இவை பல்வேறு நாடுகளிலும் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட கலப்பின பயிர்களாகும்.

மேலும் சில கலப்பின தக்காளி, கத்தரி, கறிமிளகாய் வர்க்கங்கள் நடுத்தரமான எதிர்ப்பைக் காட்டுவனவாக காணப்படுகின்றன. இவை உள்ளூரில் பயிர்ச் செய்கைக்காக சிபாரிசு செய்யப்பட முன்னர் அவற்றின் விளைச்சல், இசைவாக்கம் பெறுபேறுகளுக்காக மேலும் பரிசோதிக்கப்படுகின்றன.

இறக்குமதி செய்யப்பட்ட விதை உருளைக்கிழங்கு தொகைகளின் ஆய்வுகூட பரிசோதனையும் பரீட்சிப்பும்

விதை உருளைக்கிழங்கு தொகுதியில் ரைசோ க்ரோனியா சொலனியால் ஏற்படுத்தப்படும் கறுப்பு ஸ்கேர்ப், ஹெல்மின் தோஸ் போர்யத்தினால் ஏற்படுத்தப்படும் வெள்ளி ஸ்கேர்ப், ஸ்டெப்ரோ மைசிஸ் இனால் ஏற்படுத்தப்படும் பொதுவான வலையமைப்புடைய பொருக்கு நோய்கள் பெரு வாரியாக அவதானிக்கப்பட்டதுடன் ஜபோனிகம் இனால் ஏற்படுத்தப்படும் இறப்பர் அழுகலானது அரிதாகவே அவதானிக்கப்பட்டது.

எவ்வாறாயிருப்பினும் எல்லா விதை உருளைக் கிழங்கு தொகைகளும் இவற்றினால் ஏற்படுத்த ப்படும் நோயின் தாக்கம் அனுமதிக்கப்பட்ட அளவைவிட அதிகரித்து காணப்படாததனால் விவசாயிகளின் பயிர்ச் செய்கைக்காக அனுமதி க்கப்பட்டன.

பயிர்களில் நோய்களை இனங்காணலும் நோய் முகாமைத்துவத்துக்கான ஆலோச னைச் சேவையும்.

விவசாயிகளிடமிருந்தும், ஏனைய தனியார் பண் ணைகளிடமிருந்தும் பெறப்பட்ட நோயுடைய தாவர மாதிரிகளான பழப்பயிர், மரக்கறிகள், கிழங்குப் பயிர்கள், சுவைச்சரக்குப் பயிர்கள், அலங்காரத் தாவரங்கள், மறுவயற் பயிர்கள் என்பவற்றின் 375 இற்கும் மேற்ப்பட்ட மாதிரிகள் நோய்களை அடையாளம் காணவென சோதிக்கப்பட்டன. இவற்றுள் வேர் அழுகல், இலைப்புள்ளி, தூள் பூஞ்சணம், அந்திரனோசு, போன்ற பங்கசு நோய்கள் மரக்கறி, பழப்பயிர்களில் பெரும்பாலான இடங்களில் அவதானிக்கப்பட்டன. ஏர்வினியா பக்ரீரியா வினால் பாகலில் ஏற்ப்படுத்தப்படும் வாடல் பல இடங்களிலும், கோவாவில் சாந்தோமொனசு எனும் பக்ரீரியாவினால் ஏற்படுத்தப்படும் வெளிறல் நோயும், உருளைக்கிழங்கில் தூள் பொருக்கு நோயானது நுவரெலியாவிலும் அவதானிக்கப்பட்டுள்ளது. வைரசு நோய்களான பூசணி வைரசு சிக்கல் (CMV,PRSV,CGMMV) போஞ்சி சித்திர வைரசு, பப்பாசி வளையப்புள்ளி நோய் போன்றன பொதுவாக பல இடங்களிலும் அவதானிக்கப் பட்டுள்ளது. வெளிநாட்டுக்குரிய பாகல், பீரக்கு கலப்பின வர்க்கங்கள் மிகவும் கடுமையாக CMV, CGMMV இலைச் சுருல் வைரசுக்களால் பாதிக்கப்பட்டமையானது ஹம்பாந்தொட்டை மாவட்டத்தில் அவதானிக்கப் பட்டது.

ELISA பரிசோதனை முலம் வைரசினை கண்டறிதல்

மிகத் திருத்தமாக வைரசுக்களை கண்டறியும் ELISA பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது. இறக்குமதி செய்யப்பட்ட கலப்பின விதை, நடுகைப் பொருட்கள் என்பவற்றின் விதைச் சுகாதாரத்திற்கும், வைரசு கட்டுப்பாட்டுக்குமாக இப்பரிசோதனை செய்யப்பட்டது. 75 ELISA

பரிசோதனை நடாத்தப்பட்ட போது அதில் 02 பரிசோதனைகள் பூசணியில் CGMMV க்கான நேர் முடிவுகளை தந்தன.

வாழையில் சிகாரோகா நோய்க்கெதிராக புதிய பங்கசு நாசினிகளின் உயிரியல் செயற்றிறன் மதிப்பீடு

தற்போது பாவனையிலுள்ள குளோரோதலோனில் 500g/L SC மற்றும் ரெபுகோனசோல் என்பவ ற்றுடன் ஒப்பிட்டு புதிய 03 பங்கசு நாசினிகள், வாழையில் சிகாடோகா நோய்க்கெதிராக மதிப்பீடு செய்யப்பட்டன.

இம்மூன்று பங்கசு நாசினிகளுள் புளுற்றிபோல் 25SC ஆனது 10ml/10 l அளவிலும், கலிகீரின் ஆனது 40g/10 l அளவிலும், அம்ஸ்டர் அனது 10ml/10L அளவிலும், சிகாரோகா நோய்க் கெதிராக வினைத்திறனுடையவையாக காணப்பட்டன.

தக்காளியில் வெளிறல் நோய்க்கெதிரான பங்கசு நாசினிகளின் உயிரியல் செயற்றிறன் மதிப்பீடு

தற்போது பாவனையிலுள்ளதும் சிபாரிசுக்கமை வானதுமான றிடோமில் MZ72Wp பங்கசு நாசினியுடன் புதிய 02 தொகுதி பங்கசு நாசினிகள் ஒப்பிட்டு மதிப்பீடு செய்யப்பட்டன. அவ்விரு பங்கசு நாசினிகளான மொல்டொவின் (றைவேசிக் செப்பு சல்பேற்று 345g/L+ சைமொ க்சனல் 35g/L) மற்றும் டொப்சின் (தயோபனேற் மீதைல் 70%WP) என்பன தக்காளி வெளிறல் நோய்க்கெதிராக வினைத்திறனுடையனவாகக் காணப்படுகிறன.

கறிமிளகாயில் அந்திரிக்னோசு நோய்க்கெதிரான பங்கசு நாசினியின் உயிரியல் செயற்றிறன் மதிப்பீடு

தற்போது பாவனையிலுள்ள தயோபனேட் மெதைல்70% WP உடன் புதிய 6 பங்கசு நாசினிகள் இயற்கையான தொற்று நிலையில் ஒப்பிட்டு மதிப்பீடு செய்யப்பட்டன. நான்கு பங்கசு நாசினிகளான அம்ஸ்டர் (10ml / 10 l).], நேடீவோ 70WG(6g/l), கப்ரிடொப் (29g/wl) மற்றும் புளுசினம் 500g/lSC (10ml/10l) என்பன கறிமிளகாய் அந்திரக்னோ சுக்கெதிராக வினைத் திறனுடையன என மதிப்பீடு செய்யப்பட்டன. இவற்றை மேலதிக மதிப்பீடுகளுக்கான பரீட்சார்த்த சோதனைகளுக்காக சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

பூசணி கீழ் பூஞ்சண நோய்க்கெதிராக பங்கசு நாசினிகளின் உயிரியல் செயற்றிறன் மதிப்பீடு

2011ம் ஆண்டு ஒக்டோபர்-நவம்பர் காலப்பகு தியில் மாத்தளை,வெலவெல பகுதிகளில் புதிய இரண்டு பங்கசு நாசினிகள் தற்போது பாவனையிலுள்ள றிடோமில் MZ 72 WP உடன் ஒப்பிட்டு மதிப்பீடு செய்யப்பட்டன. இவ்விரு பங்கசு நாசினிகளான கப்ரிடொப், (மெற்றிறாம் 55% + பைறோகுளோஸ் றொபின் 5%) அட்ஸ்டர் (மங்கொசெப் 64%WP + மெற்றாலக்சிஸ் 8%) ஆகியன கீழ்பூஞ்சண நோய்க்கெதிரான சம வினைத்திறனுடையவாக காணப்படுகின்றன.

திராட்சையில் நோய் முகாமைத்துவம்

களப்பரிசோதனை, ஆய்வு கூடப்பரிசோதனை களிலிருந்து கொலிரோரிகம் இனால் ஏற்படுத்தப் படும் அந்திரக்சு நோய், பிளாஸ்மோபோரா வினால் ஏற்படுத்தப்படும் கீழ்பூஞ்சணம், அன்சி னியூலா வினால் ஏற்படுத்தப்படும் தூள்பூஞ்சணம், பக்சீனியாவினால் ஏற்படுத்தப்படும் துருநோய், போமொப்சிக் இனால் ஏற்படுத்தப்படும் தண்டு வெளிறல், பியுசாரியம் இனால் ஏற்படுத்தப்படும் வேர் அழுகல் என்பனவே பிரதானமாக திராட்சை செய்கையினை இலங்கையின் உலர் வலயத்தில் தாக்குகின்ற நோய்களாகக் காணப்பட்டன.

கொடித்தோடையில் தண்டு வீக்க நோயின் முகாமைத்துவம்

களப்பரிசோதனை மற்றும் ஆய்வுகூடப் பரிசோத னைகளிலிருந்து பியுசாரியம் இனப் பங்கசுவே

கொடித்தோடை தண்டு வீக்க நோயுடன் தொடர் புடையதாக அறியப்பட்டது.

குறைந்த செலவுடனான காளான்வித்தி உற்பத்திகான தொழில்நுட்பம்

காளான் வித்தி உற்பத்தியில் குளுக்கோசுவிக்கு பதிலாக சீனியையும், அரிசுக்குப் பதில் அரிசித் தவிட்டையும் குறைந்த செலவுடனான உற்பத்தி க்குப் பயன்படுத்த முடியும் என அறியப்பட்டது. இவை காளான்வித்தி உற்பத்தியாளருக்கு அறிமுகப்படுத்தப்பட்டன. தொழில்நுட்பத் துண்டுப் பிரசுர வேலைகளும் நிறைவுற்றுள்ளன.

வைக்கோலை அடிப்படைத்தீவனமாக பயன்படுத்தி சிப்பி காளான் வளர்ப்பதற்கான தொழில் நுட்பம்

இலகுவில் கிடைக்கக் கூடியதும் மலிவானதுமான வைக்கோலைப் பயன்படுத்தி சிப்பி காளான் வளர்ப்பதற்கான தொழில் நுட்பம் விருத்தி செய்யப்பட்டுள்ளது. இத்தொழில்நுட்பமானது 642 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

புதிய நோய் அறிக்கை

இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட ரகன் பழத் தாவரம் மூலம் புதிய நோய் பரவல்

விசேட தொழில்நுட்பக் குழுவானது மேற்சொன்ன பிரச்சினையைப் பரீட்சித்ததுடன் நோயை கட்டுப்பத்துவதற்கான அவசிய சிபாரிசுகள் அடங்கிய அறிக்கை தயாரித்து ஒப்படைத்துள்ளது. இப்புதிய நோயானது பங்கசுவினால் ஏற்படுத்தப்படும் தண்டுப் புள்ளி நோய் என, சோதனைக்குட்படுத்தப்பட்ட எல்லா மாதிரிகளிலும் இருந்து கண்டறியப்பட்டது. இப் பங்கசைத் தற்போது பாவனையில் உள்ள சிபாரிசுக்கு அமைவான பங்கசு நாசினிகள் மூலம் கட்டுப்படுத்தப்படுவது மிகக் கடினமாகும். இதே வேளை பல நோய் ஏற்பட்ட தாவரங்கள் சாந்தோமோனசுவினால் ஏற்படுத்தப்படும் பற்றீரியா நோய் அறிகுறிகளையும் கொலிறோறிகம் பங்கசுவினால் ஏற்படுத்தப்படும் நோய் அறிகுறிகளையும் வெளிக்காட்டின. இந்நோயின் தீவிரமானது மிகக் கடினமானதாக வும் நூறுவீத தொற்றலை ஏற்படுத்துவதாகவும்

பெரும்பாலான பயிர் செய்கையாளர்களிடத்தில் அவதானிக்கப்பட்டது. இந்நோயானது குறித்த ஒரு தனியார் கம்பனியினால் தாய்லாந்தில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட நடுகை பொருட்களுடன் கொண்டு வரப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது. ஆகையால் அதிகாரமளிக்கப்படாத இறக்குமதியாளருக்கு எதிராக தாவர தடுப்புக் காப்பு நடவடிக்கைகளை மிகக் கடுமையாக நடை முறைப்படுத்த வேண்டியது அவசியமாகிறது.

பூசணியில் பற்றீரியா வாடல்

பாகல் பயிர்ச் செய்கையில் ஏர்வினியாவினால் ஏற்படுத்தக்டும் பற்றீரியா வாடல் பல இடங்களில் அறிக்கையிடப்பட்டது. இந்நோய் பலவகை பூசணி வண்டுகளினால் பரப்பப்படுகிறது. அத்துடன் இது மிகக் கூடுதலாக பரம்பலடையும் சாத்தியப்பாடு உள்ளதுடன் எதிர்காலத்தில் பாரிய அளவில் நோய்த் தாக்கம் ஏற்படுத்தப்படலாம்.

2011ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டங்கள்

நோயாக்கி பங்கசுகளின் வளர்ச்சி மீது கதிர் வீச்சுக்குட்படுத்தப்பட்ட கையிற்றின் (சிற்றோனன்) இனது விளைவு:-

சிற்றோசானானது இயற்கையான கைற்றின் பல்பகுதியத்தில் இருந்து பெறப்படுவதாகும். இது பூச்சிகள், பங்கசுகள், கிறஸ்ட்டேசியாக்களினது ஒரு கட்டமைப்பு கூறாகும். சில சிற்றோசன் மூலக்கூறுகள் 70-250KDa மூலக்கூற்று நிறை யுடைன. இவை சில நோயாக்கி பங்கசுகக்களின் மீது பங்கசு எதிர்ப்பு செயற்பாட்டையும், தாவர வளர்ச்சியை தூண்டும் செயற்பாட்டையும் கொண்டுள்ளது. இக்கற்கையின் பிரதான நோக்கமாக உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட கைற்றோசன் சேர்வைகளின் நோய் கட்டுப்ப டுத்தும் திறனையும், விளைச்சலை அதிகரிக்கச்

செய்யும் ஆற்றலையும் கண்டறிவதாய் அமை ந்தது. ஆராய்ச்சியின் விளைவாக கைற்றோசன் மூலக்கூறுகளின் பிரயோகமானது பெரும்பாலான நோயாக்கி பங்கசுகளினை கட்டுப்படுத்தியது அவதானிக்கப்பட்டது. விதைப்பரிகரணம், ஒன்று விட்ட விசிறல் என்பன மூலம் இலைப்புள்ளி நோய் கட்டுப்படுத்தப்பட்டதுடன் விளைச்சல் அதிகரிப்பும் தக்காளி செய்கையில் அவதானிக்க ப்பட்டது.

உயிரியல் கட்டுபாட்டு மூலமாக ரைக்கோடேமாவினது வினைத்திறனும் , உட்புகுத்தி உற்பத்தியும்

இந் நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான நோக்கமாக சேதன விவசாயத் தொகுதிகளில் பங்கசு நோய்களை கட்டுப்படுத்துவதற்காக வர்த்தக ரீதியில் ரைக்கோடேமா உட்புகுத்தல் காரணியினை உற்பத்தி செய்யும் தொழில் நுட்பத்தை விருத்தி செய்தலும் வினைத்திறனான உயிரியல் கட்டுபாட்டு மூலமான ரைக்கோடேமாவை அடையாளம் காணலுமாகும். இரண்டு வேறுபடுத்தப்பட்ட ரைக்கோடேமாவானது வினைத்திறனான உயிரியல் கட்டுபாட்டு மூலமென மண்வாழ், இலைக்குரிய நோயாக்கி பங்கவுசுகளுக்கு எதிராக வினைத்திறனுடையது எனவும் அடையாளம் காணப்பட்டது. அத்துடன் இக்கற்கையினை 2012ம் ஆண்டில் தொடர்வதற்கான நூறு பொதிகள் கொண்ட ரைக்கோடேமா உட்புகுத்தல் காரணியை ரல்கினை அடிப்படையாகக் கொண்ட ஊடகத்தில் தயார் செய்யப்பட்டது.

விவசாய இரசாயனவியல் பிரிவு

இப்பிரிவினது பிரதான செயற்பாடுகளாக மண்வளம், தாவரப் போசணை முகாமைத்துவம், சேதனவிவசாயம் ஆகிய பிரிவுகளில் ஆராய்ச்சி களை நடத்துவதாகும். அத்துடன் இப்பிரிவானது விவசாயிகளை மண் பரிசோதனைகளின் அடிப்படையில் பூங்கனியியல் பயிர்களுக்குப் பசளைப் பிரயோகம் மேற்கொள்ளவும் ஊக்கு விக்கிறது. மேலும் மண், தாவரம், நீர், இரசாயனப் பசளைகள் என்பவற்றின் ஆய்வுச் சேவைகளை வேண்டுகோள் விடுக்கப்படுமிடத்து வழங்குவதுடன் அவற்றின் பிரயோகம் தொடர் பான ஆலோசனைச் சேவைகளையும் வழங்கு கிறது. இப்பிரிவு மண், பசளைகள், சேதன விவசாயம் மற்றும் மண் போசணை தொடர்பான தலைப்புக்களில் பயிற்சி நிகழ்ச்சிகளை விவசாயிகள், விரிவாக்க உத்தியோகத்தர்கள், ஆர்வமுடைய பொதுமக்கள் ஆகியோருக்கு வழங்குகிறது.

சேதன மரக்கறிப் பயிர்களின் போசணை முகாமைத்துவம்

சேதன மரக்கறி பயிர்களின் விளைச்சலில் வித்தியாசமான போசணை முகாமைத்துவ நடவடிக்கைகளின் தாக்கம் சோதிக்கப்பட்டது. கறிமிளகாயில் உயர் விளைச்சலானது (10.7 t/ha) பசுந்தாட் பசளை, கூட்டெரு, தேயிலைக் கூட்டெரு பிரயோகிக்கப்பட்ட பரிசோதனையிலும் அதனைத் தொடர்ந்து பசுந்தாள் பசளை, கூட்டெரு பிரயோகிக்கப்பட்ட பரிசோதனையிலும் பெறப்ப ட்டது. சிறுபோகத்தில் கோவாவில் அதிக விளைச்சலானது (49.6t/ha) பசுந்தாள் பசளை, கூட்டெரு பிரயோகிக்கப்பட்ட பரிசோதனையில் காணப்பட்டது. பசுந்தாட் பசளையை கூட்டெருவுடன் ஹெக்டேயருக்கு 21தொன் என்ற அளவில் பிரயோகிப்பதானது சேதன விவசாயத்தில் மேலதிக நன்மை பயக்கக் கூடியதாக உள்ளது. கூட்டெரு மற்றும் பசுந்தாள் பசளை பிரயோகத்திற்கு மேலதிகமாக கருக்கிய உமி பிரயோக மானது பயிர் விளைச்சலில் மேலதிக அதிகரிப்பினை தரவில்லை.

கூட்டெருவின் தொடர்ச்சியான பிரயோகம்

வேறுப்பட்ட மரக்கறிப் பயிர்கள் பயிரிடப்பட்ட பெரிய காணித் துண்டங்கள் முறையே சிபார்சு செய்யப்பட்ட NPK பசளை, ஹெக்டேயருக்கு 40 தொன் கூட்டெரு, மற்றும் சிபார்சு செய்யப்பட்ட NPK யுடன் ஹெக்டேயருக்கு 40 தொன் கூட்டெரு என்பன 23 பருவங்களில் பிரயோகிக்கப்பட்டன. ஒன்றிணைந்த ரீதியில் கூட்டெரு, NPK பசளை பிரயோகிக்கப்பட்ட துண்டமானது தனியே கூட்டெரு மாத்திரம் பிரயோகிக்கப்பட்ட துண்டத்திலும் பார்க்க அதிக

விளைச்சலைத் தந்தது. தனியே அசேதனப் பசளைகள் பிரயோகிக்கப்பட்ட துண்டத்தில் விளைவு குறைவாக இருந்தது. இது அசேதனப் பசளையுடன் சேர்த்து சேதனப் பசளை பிரயோகம் எவ்வாளவு பெறுமதி வாய்ந்ததென சுட்டிக்காட்டுகிறது. ஒருங்கிணைந்த ரீதியில் சேதன, அசேதன பசளைப் பிரயோகமானது போசணை வழங்கலை மாத்திரமின்றி மேலும் பல நன்மை பயக்ககூடிய விளைவுகளை மண் தாவரத் தொகுதிகளுக்கு வழங்குகிறது.

சேதன மரக்கறிகளின் விளைச்சலில் வேறுப்பட்ட போசணை மூலகங்கள்

மரக்கறிகளில் கலப்பு பயிர்ச் செய்கையில் (கோவா, கொடிப்பயற்றை, பீற்றூட்) வேறுபட்ட போசணை மூலங்களின் (மாட்டெரு. கோழியெரு, மண்புழுக் கூட்டெரு, கூட்டெரு, விவசாயத் திணைக்களத்தின் சிபார்சுக்கமைவான NPK) வினைத்திறனானது பரிசோதிக்கப்பட்டது. ஹெக்டேயருக்கு 20 தொன் கோழியெரு பாவனையானது மரக்கறி விளைச்சலுக்கு மிக வினைத் திறனான போசணை மூலமாக காணப்பட்டது. அத்துடன் ஹெக்டேயருக்கு 40 தொன் கூட்டெரு பிரயோகிக்கப்பட்ட மரக்கறி விளைச்சலும் இதற்குச் சமமாக காணப்பட்டது. ஹெக்டேயருக்கு 20 தொன் மண்புழுக் கூட்டெரு பிரயோகிக்கப்பட்ட சோதனையில் பெறப்பட்ட பயிர் விளைச்சலானது சிபார்சிற்கு அமைவாக NPK பிரயோகிக்கப்பட்ட சோதனையின் விளைச்சலிலும் பார்க்க குறைவாகக் காணப்பட்டது.

சேதன ரீதியாகவும் பாரம்பரிய முறைபடியும் வளர்க்கப்படும் இலைமரக்கறிகளில் உள்ள நைத்திரேற்று உள்ளடக்கத்தின் ஒப்பீடு

சேதன முறைப்படியும் பாரம்பரிய முறைப்படியும் வளர்க்கப்படும் சில இலைமரக்கறிகளில் உள்ள நைத்திரேற்று உள்ளடக்கமானது, சோதிக்கப் பட்டது. விளைவாக வல்லாரையிலுள்ள நைத்தி ரேற்று உள்ளடக்கமானது. இவ்விரு முறைகளி லும் புள்ளிவிபரவியலின் படி ஈர, உலர் நிறை அடிப்படையில் ஒப்பிடக்கூடியதாக உள்ளது. எனினும் கங்குன் மற்றும் பொன்னாங்கனி ஆகியவை பாரம்பரிய முறையில் வளர்க்கப்படும் போது அதிகளவு நைத்திரேற்று உள்ளடக்கத்தை யும் சேதன முறையில் குறைந்த நைத்திரேற்று உள்ளடக்கத்தையும் கொண்டு காணப்படுகின்றது. எனினும் இவ்எல்லா மட்டங்களும் ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய எல்லைகளுக்குள் அமைந்திருந்தன. தொடர்ச்சியான கண்காணிப்பு ஆலோசனைகள் விவசாயிகளுக்கு வழங்கப் படுவதன் மூலம் இலை மரக்கறிகளில் உள்ள நைததிரேற்றினது உள்ளடக்கத்தினை ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய எல்லைகளுக்குள் பேண உதவியாக இருக்கும்

இலங்கையில் பிரயோகத்தில் உள்ள பொசுபரசு பசளைகளில் பார உலோகங் களின் நிலை பற்றிய கற்கை

பலதரப்பட்ட நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொசுபரசு பசளையில் உள்ள பார உலோகங்களின் உள்ளடக்கம் சோதித்தறியப் பட்டது. பல நாடுகளில் இருந்தும் இறக்குமதி செய்யப்படும் பொசுபரசு பசளையில் பார உலோகங்கள் குறிப்பிடத்தக்க அளவு மாசுக்க ளாக காணப்பட்டன. இரும்பு, செம்பு, என்பன அதிக செறிவில் எமிரேற்றில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட பசளை மாதிரிகளில் காணப்பட்டன. லெபனானில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட பசளை மாதிரி அதிகளவு நாகத்தினை கொண்டி ருந்தது. அத்தோடு எகிப்தில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட TSP உயர்ந்தளவு மங்கனிசு உள்ள டகத்தை கொண்டிருந்தது. கட்மியம், ஈயம், குறோமியம், என்பன உயர்ந்த செறிவில் லெபனானில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட பசளை மாதிரிகளில் காணப்பட்டதோடு, இவை எமிரேற்றில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட பசளை மாதிரிகளில் குறைந்த செறிவில் காணப்பட்டது. இக் கற்கையானது தொடரப்படும்

பசுந்தாள் பசளையில் துணையான மற்றும் நுண்போசனை மூலகங்களினது நிலை பற்றிய கற்கை

இலங்கையில் பொதுவாகப் பயன்படுத்தப்படும் பசுந்தாள் பசளைகளில் துணையான மற்றும் நுண் போசணைகளின் உள்ளடக்கத்தை தீர்மானிக்கவென இக்கற்கை மேற்கொள்ளப் பட்டது. இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள வித்தியாசமான பசுந்தாள் பசளை மாதிரிகள் சோதனைக்குட்படுத்தப்பட்டன. பெறு பேறுகளிலிருந்து உயர்ந்தளவு இரும்பு உள்ளட க்கமானது கிரித்தில்ல இலைகளிலும் அதற்கடுத்தாக மாறா இலைகளிலும் காணப் பட்டது. செம்பு உள்ளடக்கமானது கெக்குண தாவரத்தண்டில் உயர் செறிவிலும் ஆமணக்கு இலையில் அதற்கு அடுத்த நிலையிலும் காணப்பட்டது. கெப்பிற்றிய இலைகள் உயர்ந் தளவு மங்கனீசு செறிவைக் கொண்டிருந்தன. அதற்கடுத்ததாக ககெல இலையில் காணப் பட்டது. நந்தைச்சூரி இலைகள் உயர்ந்தளவு நாகத்தை கொண்டிருந்தது. மேலதிகமான மாதிரி களை சேகரிப்பதற்காகவும் அதிகளவு மாதிரி களை பகுப்பாய்வு செய்வதற்குமாக இவ்வாய்வு தொடரப்படும்

வேறுபட்ட பயிர்ச் செய்கை தொகுதிகளில் மண்ணிலுள்ள நுண் போசணை நிலைமையைக் காட்டும் கற்கை

மண்ணிலுள்ள நுண் போசணைகளின் அளவு வெவ்வேறு பயிர்ச் செய்கைத் தொகுதிகளில் சோதித்தறியப்பட்டது. பெறுபேறுகளின் அடிப்ப டையில் மாரஸ்சன பகுதியில் உள்ள மண் உயர்ந்த அளவு கிடைக்கக்கூடிய நுண் போசணை மூலங்களைக் கொண்டிருந்தது (நெல்-மரக்கறி) அதேவேளை மாத்தளை பகுதி யில் இவை குறைந்தளவு உள்ளடக்கத்தினை கொண்டிருந்தது. (நெல்- மரக்கறி) இக்கற்கை தொடரும்.

கிழங்குப் பயிர்கள் அலங்காரத் தாவரம் மற்றும் வீட்டுத் தோட்ட பிரிவு

கிழங்குப்பயிர்

வற்றாளை

1. தெரிவு செய்யப்படட்ட வற்றாளை வர்க்கங் களின் விளைச்சல் பெறுபேறு அடுத்தடுத்த இருபோகங்களில் மதிப்பீடு செய்யப் பட்டது. புதிய வர்க்கமான மலேசியன் HORDI C-5, மற்றைய எல்லா வர்க்கங்களை யும் விட அதிகளவு விளைச்சலைக் காட்டியது. அத்து டன் உயர்த் தரத்துடனும் கவர்ச்சிகரமான சிவப்புத் தோல் வெண்ணிற சதைப்புகதியு டைய கிழங்குகளை குறைந்த வயதில் தந் தது. இவ்வர்க்கத்தினது தேசிய ஒருங்கிணை க்கப்பட்ட வர்க்கச் சோதனை நிகழ்ச்சி (NCVT) ஆறு வெவ்வேறு இடங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
2. CIP குல வகையானது உயர்ந்தளவு உலர் பொருள் உள்ளடக்கத்திற்காக மதிப்பீடு செய்யப்பட்டது. இதன் போது CIP 440186 ஆனது உயர் விளைச்சலை உயர்தரத்துடன் தந்தது.
3. உப்புசகிப்புத் தன்மைக்கான வர்க்கத் தெரி வுச் சேதனையில் CIP இன் மூன்று குலவ கைகள் முறையே 199076-1, 440262-1, 440183 ஆகியன உயர் விளைவைத் தந் தன. இக்குலவகை பல்வேறுபட்ட உவர் நிலப்பகுதிகளில் விளைச்சல் சோதனைக்கு ட்படுத்தப்பட்டு, மதிப்பீடு செய்யப்பட்டு உவர் நிலப் பகுதிகளுக்கு பொருத்தமான உயர் விளைச்சல் தரக் கூடிய குலவகை தேர்ந் தெடுக்கப்படும்.

மரவள்ளி

ஒரு புதிய வர்க்கமாக HORDI-6 உயர் விளை ச்சலை தருவதோடு நல்ல சந்தைப்படுத்தல் குணங்களான நன்கு விருத்தியடைந்த கிழங்கு, நீண்ட காம்பு, அத்துடன் கவர்ச்சிகரமான தோல்

நிறம் என்பவற்றையும் கொண்டிருந்தது. இவ்வ ர்க்கமானது HORDI MU-1 எனப் பெயரிடப்பட்டு உத்தியோக பூர்வமாக ஜனவரி 2012 வர்க்க வெளியீட்டுக்குழு (VRC) இனால் வெளியிடப் பட்டது.

அலங்காரத் தாவரம் மற்றும் வீட்டுத் தோட்டம்

பூங்கனியியல் பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தினது அலங்காரத் தாவர நிகழ்ச்சித் திட்டமானது அதனுடன் தொடர்புடைய பல்வேறுப்பட்ட பகுதிக்குரிய பிரச்சினைகளை வெளிக்கொண்டு வருவதனை குறிக்கோளாகக் கொண்டது. வீட்டுத் தோட்ட ஆராய்ச்சி அபிவி ருத்தி நிகழ்ச்சியானது வீட்டுத் தோட்ட நிபந்த னைகளுக்குப் பொருத்தமான பயிர் வகைகளை அடையாளம் காண்பதற்கும் பொதுமக்களால் இசைவாக்கப்படுத்தக்கூடிய பயிர்ச் செய்கை நுட்பங்களை விருத்தி செய்வதற்குமாக மேற்கொ ள்ளப்படுகிறது. அத்தோடு வீட்டுத் தோட்டத் துக்குரிய பயிர்களைக் கூடியளவு உற்பத்தி செய்தல், பாதுகாத்தல், வீட்டுத் தோட்டத்துடன் தொடர்பான அறிவை பெருக்குதல், பரப்புதல் வீட்டுத்தோட்டத்துக்குரிய நடுகைப் பொருட்களை பகிர்ந்தளித்தல் என்பனவும் பூங்கனியியல் பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தினதும் வீட்டுத்தோட்ட நிகழ்ச்சியினதும் நோக்கங்கள் ஆகும்.

- அலங்காரத் தாவரங்களுக்கு சாத்தியப்பா டுடைய காட்டுத் தாவரங்கள் சில சேகரிக்க ப்பட்டு பேணப்பட்டன. புதிய இரண்டு காட்டு அலங்காரத் தாவரங்களும் நான்கு வெளிநா ட்டுக்குரிய ஜர்பேரா கலப்பினங்களும் சேகரிப்பிற்குள் உள்ளடக்கப்பட்டன.
- பைனஸ் இலைகளில் இருந்து விருத்தி செய்யப்பட்ட வளர்ப்பு ஊடகம் ஜர்பேரா, மற்றும் தக்காளி ஆகியவற்றை பொலித்தீன் இல்லங்களிலான பயிர்ச் செய்கையில் தொடர்ந்து மூன்று வருடங்களாக பயன்படு த்தப்படுகின்றன. இக்கண்டுபிடிப்புகள் 2012ம் ஆண்டில் வெளியிட தயாராக உள்ளன.
- ஏற்கனவே வீட்டுத் தோட்டத்திற்கு பொருத்த மானவையென அடையாளப்படுத்தப் பட்ட 15 வகையான பயிர்கள் பகிர்ந்தளிக்கப்படுவ தற்காக களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன. பயிர் களும் உற்பத்தி செய்யப்பட்ட விதைகளின் அளவும் கீழ்வருமாறு:

அட்டவணை 2.2.4 2011ல் உற்பத்தி செய்யப்பட்ட விதைகளின் அளவு

பயிர்	விதையின் அளவு (Kg)
பெரியபசளிக்கீரை	4.5
கத்தரி (அக்குரஸ்ஸ பட்டு)	2
கத்தரி (பித்தர பட்டு)	3.4
கத்தரி (சுதுதலன பட்டு)	2.5
கத்தரி (அகஸ் பட்டு)	1.6
சிறகவரை - நாவல்	4.5
அலங்க	2.5
சிறகவரை பச்சை	1.25
சிறகவரை ஒக்ரோபர்	0.5
வெண்டி (கெவத்து அத்தல)	4.0
வெண்டி சிவப்பு	6.5
கொச்சி கறிமிளகாய் வெள்ளை பெரியது	2.2
கொச்சி கறிமிளகாய் பச்சை பெரியது	1.75
இலைக்கீரை	2.5
வீட்டுத் தோட்டமிளகாய்	1.1

- சவேந்திரா வேரினை தலைக்கு தேய்கும் எண்ணெய் உற்பத்தி செய்யும் நீரியல் ஊடக வளர்ப்பு முறை நுட்பமானது விருத்தி செய்யப் பட்டு ASDA 2011ல் வெளியிடப்பட்டுள்ளது.

- தீர்மானிக்கப்பட்ட, அரை- தீர்மானிக்கப்பட்ட முறையில் வளரும் தக்காளி வர்க்கங்களில் தாவர வளர்ச்சிச் சீராக்கியின் தாக்கத்தினை விளைச்சல் வித்து எண்ணிக்கையில் ஏற்படும் மாற்றம் என்பவற்றை அறியும் கற்கை மேற்கொள்ளப்பட்டது. பெறுபேறுகளின் அடிப்படையில் அரை தீர்மானிக்கப்பட்ட வளர்ச்சியுடைய தக்காளி (திலின) யின் விளைச்சலானது 8-10% அதிகரித்ததோடு வித்துக்களின் எண்ணிக்கையில் எதுவித குறிப்பிடத்தக்க மாற்றங்களும் ஏற்படவில்லை.

- வீட்டுத் தோட்ட நிலைமைகளில் பொலித்தீன் பைகளில் வற்றாளைச் செய்கை முறை பற்றி பரிசோதிக்கப்பட்டது. பொலித்தீன் பைகளில் (பற்றி ஏறுவதற்கான ஆதாரம் வழங்கப் பட்டது) வற்றாளையினது விளைச்சலானது பாரம்பரிய வரம்புசால் பயிற்சி செய்கை முறையோடு ஒப்பிடுகையில் ஆறுமடங்கு அதிகமாக காணப்படுகிறது.

- ஐந்து புதிய பயிர் வகைகள் வீட்டுத் தோட்ட பயிர் சேகரிப்புக்குள் அறிமுகப்படுத்தப்பட்டன. இவற்றில் இரண்டு பயற்றை வர்க்கங்கள், இரண்டு லிமா போஞ்சி வர்க்கங்கள், மற்றும் ஒரு கனவாலியா இனம் என்பன அடங்கும்

- வர்த்தக ரீதியான விதை இறக்குமதியாளர் ஒருவரால் வழங்கப்பட்ட புதிய மிளகாய் கலப்பின வர்க்கத்தின் பொலித்தீன் இல்லங்க ளிலான பயிர்ச் செய்கைப் பொருத்தபாடு பற்றி மதிப்பீடு செய்யப்பட்டது. மேற்குறித்த வர்க்கமானது ஒரு தாவரத்தில் இருந்து ஒரு மாதத்திற்கு 310g விளைச்சலைத் தந்தது. எனினும் 40% மான தாவரங்கள் பற்றீரியா வாடல் தொற்றலுக்கு உள்ளாகின.

விரிவாக்கம், பொருளியல் மற்றும் தரவு முகாமைத்துவப் பிரிவு

- தகவல் தொழில்நுட்பம், தரவு முகாமைத்து வம், பொருளியல், பூகோள தரவுத் தொகுதி என்பவற்றுடன் தொடர்பான தொழில்நுட்ப பரம்பல் நடவடிக்கைகள் மற்றும் ஆராய்ச்சி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு இப்பிரிவு பொறுப்பான தாகும்.

ஆராய்ச்சி நடவடிக்கைகள்

இலங்கையில் குறைந்தளவு நுகர்ச்சியுடைய பழங்களை கண்டறியவும் பேணுவதற்குமான பூகோள தகவற் தொகுதி

இலங்கையில் உயர் விவசாயத் சூழல் பல்வகைமையானது தாவர, விலங்குகளினுடைய உயர்ந்தளவு உயிரியல் பல்வகைமைக்கு தன்மை வழிகோலியது. குறித்த ஒரு புவியியல் பரப்பானது தனக்கேயுரிய சுற்றாடல் புவியில் தனித்தன்மையைக் கொண்டிருப்பதுடன் அதனு டன் இணைந்த பரம்பரையியல் பல்வகைமையை யும் கொண்டிருக்கும். குறைந்தளவு நுகர்ச்சி யுடைய பழ இனங்களினது தற்போதைய நிலை மற்றும் வரைபடமாக்குவதற்கான சாத்தியப்பாடு என்பவற்றை மதிப்பீடு செய்ய 3219 நிலையங்களில் 30 பழ இனங்கள், சோதனைகளினூடாகவும் பல் வேறு மூலங்களில் இருந்து பதியப்பட்ட தரவுகள் மூலமும், தாவரவியல் தரவுகள் மூலமும் சேகரிக்கப்பட்டன. சாத்தியப்பாடான தேசப்பட்ட விருத்திக்கு BIOCLIM மாதிரி சூழலியல் பிறை மாதிரியாக்கலூடாக நிறைவேற்றப்பட்ட துடன் DIVA GIS மற்றும் தாவர தேசப்பட்ட நுண் பொருள் என்பன பயன்படுத்தப்பட்டன. இந்த சாத்தியப்பாட்டு தேசப்படமானது ஒவ்வொரு பழ இனங்களினது பரம்பலிற்கான நிகழ்தகவை நிகழ்தகவு மதிப்பெண் மூலமாக வழங்குகின்றது. இத்தகவல்களானது மேலதிக ஆராய்ச்சிகளின் போது முதன்மையான பிரதேசங்களைக் கண்டறியவும், பாதுகாக்கவும், பாவனை தொடர்பாக திட்டமிடவும், இலங்கையில் குறைந்தளவு நுகர்ச்சியுடைய பழங்களின்

எதிர்கால மேம்பாட்டு நிகழ்ச்சிகளுக்கு ஒரு உள்ளீடாகவும் பயன்படுத்தப்பட முடியும்.

நுவரெலியா மாவட்டத்தில் உருளைக் கிழங்கு பயிர்ச் செய்கையின் இலாபகரமும் தொழில் நுட்ப இசைவாக்கமும்: கூட்டி அடிப்படையிலான அணுகுமுறை

இக்கற்கையானது நுவரெலியாவில் உருளைக் கிழங்குடன் தொடர்புபட்ட பிரச்சினைகளையும், பண்ணை மட்டத்தில் தொழில்நுட்ப இசைவாக்க த்தையும் மதிப்பீடு செய்வதற்காக திட்டமிடப் பட்டது. அத்துடன் உருளைக்கிழங்கு செய்கை யில் இலாபத்தினை மதிப்பீடு செய்யவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கென 55 விவசாயிகளிடமும் இருந்தும் 13 விரிவாக்க உத்தியோகத்தர்களிடமும் இருந்தும் வெவ்வே றான இரு வினாக்கொத்துக்களைப் பயன்படுத்தி 2011 வைகாசி ஆனி மாதங்களில் தகவல் திரட்டப்பட்டது.

தரவுகளானது இருவகையான புள்ளிவிபரவியல் கருவிகளைப் பயன்படுத்தி பகுப்பாய்வு செய்யப பட்டது. தொழில் நுட்ப இசைவாக்க மட்டத்தினை மதிப்பீடு செய்ய CRTAI பயன்படுத்தப்பட்டது. இது 0.58 தொடக்கம் 0.79 வரை வியாபித்து காணப்பட்டது. இதன் படி தொழில்நுட்ப இசைவா க்கமானது 50% மேற்க்குபட்ட உருளைக்கிழங்கு செய்கையாளர்களிடம் காணப்படுவதோடு மேலும் இதனை விரிவாக்குவதற்கு இடமுண்டு எனவும் காட்டியது. நுவரெலியா மாவட்டத்தில் உருளைக் கிழங்குப் பயிர்ச் செய்கையின் இலாபமட்டத்தை தீர்மானிப்பதற்கு வருமான செலவு விகிதம் (BCR) மதிப்பிடப்பட்டது. இதன் படி 48 சதவீத மான விவசாயிகளுக்கு இத்தொழில் இலாபகர மற்றதாக காணப்பட்டது. இக்கற்கை மூலம் தொழில்நுட்ப இசைவாக்க மட்டத்திற்கும் உரு ளைக்கிழங்கு விளைச்சலுக்குமிடையே முக்கிய த்துவமான தொடர்புடமை இருப்பது கண்டறிய ப்பட்டது.

இலங்கையில் நுவரெலியா மாவட்டத்தில் மரக்கறி பயிர்ச்செய்கை சிபார்சிற்கு அமைவாக விவசாய நடவடிக்கைகளை இசைவாக்குதலோடு தொடர்புடைய பிரச்சினைகள்

பல சிபார்சிற்கு அமைவான தொழில்நுட்பங்கள் உள்ளபோதிலும் இன்னமும் சாத்தியமான விளைச்சலுக்கும் சராசரி விளைச்சலுக்கு மிடையில் குறிப்பிடத்தக்கவான இடைவெளி காணப்படுகிறது. இந்த விளைச்சல் இடை வெளிக்கு ஒரு பிரதான காரணமாக சிபார்சுக்கு அமைவான தொழில்நுட்பங்களில் குறைவான இசைவாக்கம் என்பது கருத்திற் கொள்ளப்பட்டது. இக்கற்கையானது நுவரெலியா மாவட்டத்தில் நடாத்தப்பட்டது. இது மூன்று விவசாய சூழல் வலையங்களை உள்ளடக்கிறது. இதன் போது சிபார்சிற்கு அமைவான விவசாய நடவடிக்கை களில் இசைவாக்க மட்டத்தைக் கண்டறியும் மரக்கறி செய்கையுடன் தொடர்புடைய தொழில் நுட்ப பொருளியல் சமூக பிரச்சினைகளையும் கண்டறிய இக்கற்கை மேற்கொள்ளப்பட்டது. தொழில்நுட்ப இசைவாக்க மட்டத்தினை மதிப்பிட RTAI விருத்தி செய்யப்பட்டது. இக்கற்கை கரட், பீற்றூட், லீக்ஸ், கோவா ஆகியவற்றின் செய்கையில் கூடியளவு கவனம் செலுத்தியது. இதற்கமைவாக சராசரி தொழில்நுட்ப இசை வாக்க மட்டமானது. முறையே 0.56 0.59, 0.61,0.59 என கரட், பீற்றூட், லீக்ஸ் மற்றும் கோவாவிற்கு காணப்பட்டது. இதன் அடிப்படை யில் மலை நாட்டு ஈரவலயம் உயர்ந்த தொழில் நுட்ப இசைவாக்க மட்டத்தைக் கொண்டிருந்தது. RTAI க்கும் விவசாயிகளின் விளைச்சலுக்கும் இடையில் நேர்முக்கியத்துவமுடைய தொடர்புட மை காணப்பட்டது. சரியான தலையீடுகள் மூலம் விருத்தி செய்த தொழில்நுட்ப அறிவைக் கூட்டி விவசாயிகளின் மரக்கறி உற்பத்தியை அதிகரிப்ப துடன் நுவரெலியா மாவட்டத்தில் விவசாயிகளின் வாழ்வாதாரத்தையும் அதிகரிக்கவும் முடியும்.

மாத்தளை மாவட்ட விவசாயிகளிடத்தில் மரக்கறிச் செய்கையில் விவசாய இரசாயன பயன்பாடு தொடர்பான மதிப்பீடு

அண்மைக் காலமாய் இலங்கை மற்றும் ஏனைய நாடுகளில் பீடைநாசினிகளினது அதிகரித்த பாவனை தொடர்பாக அறிக்கையிடப்பட்டுள்ளது. எனினும் மரக்கறிச் செய்கையின் போதான இரசாயனப் பசளைப் பிரயோகத்தின் அளவு தொடர்பான தகவல்கள் மிக அரிதாகும். இக்கற்கையானது விவசாயத் திணைக்களத்தினது சிபார்சிகளை ஒரு அளவு கோலாகக் கொண்டு விவசாய இரசாயனங்களின் பாவனை மட்டத்தினை மதிப்பீடு செய்யவெனத் திட்டமிடப் பட்டது. இக்கற்கையானது முற்சோதனை செய்ய ப்பட்ட வினாக்கொத்தினைப் பயன்படுத்தி 8 கமநல கேந்திர பிரிவுக்குட்ப்பட்ட 140 மரக்கறிச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளிடம் மேற்கொள்ளப்பட்டது. பெறுபேறுகளினடிப்படை யில் சிபாரிசு செய்யப்பட்ட அளவைவிட அதிகளவில் விவசாய இரசாயனங்களை பயன்படுத்துவது அடையாளம் காணப்பட்டது. யூரியாவினது பயன்பாடு, மும்மை பொசு பேற்றையும், மியுரியேற்று ஒப் பொட்டாசையும் விட அதிகமாயிருந்தது. குறிப்பாக விவசாயிகள் அதிகரித்த பசளைப் பிரயோகத்தை இறக்குமதி செய்யப்பட்ட வர்க்கங்களுக்கே மேற் கொண்டனர். விவசாயிகள் இறக்குமதி செய்யப் பட்ட வர்க்கங்களுக்கு அதிகரித்த பீடை நாசினிப் பிரயோகத்தை மேற்கொள்ளப்பட்ட போதிலும் அதிக விலையுள்ள பீடை நாசினிகளை தொடர்ச்சியாக மேற்கொள்ள முடிய வில்லை. அதிக விவசாய இரசாயனப் பாவனையானது பாரியளவில் செய்கையிலீடுபடும் விவசாயிகளிட த்தில் குறைவாகவே அவதானிக்கப்பட்டது. இது குறிப்பாக 1Ha லும் கூடுதலான பரப்பில் செய்கை பண்ணுவோரிடத்தில் அவதானிக்கப் பட்டது.

பட்டதாரி மாணவர்களினது ஆராய்ச்சி திட்டங்கள்

வயம்ப பல்கலைகழகத்தினது இரு பட்டதாரி மாணவர்கள் தமது இறுதியாண்டு ஆராய்ச்சித் திட்டங்களைப் பூர்த்தி செய்தனர்.

விவசாய அருங்காட்சியகம்

விவசாய அருங்காட்சியமானது எல்லா அலுவலக நாட்களிலும் காலை 8.00 மணி தொடக்கம் மாலை 4.15 மணி வரை திறந்திருப்பதோடு அரசாங்க விடுமுறை தினங்களிலும் வேண்டு கோள் விடுக்கப்படின் திறக்கப்படும்

கண்காட்சிப் பொருட்களாக பாரம்பரிய விவசாய உபகரணங்கள், கருவிகள், பாரம்பாரிய களஞ்சியக் கட்மைப்பு மாதிரிகள் என்பன வைக்கப் பட்டுள்ளது.

காட்சிப்படுத்தப்படும் பொருட்களுக்கு மேலதிக மாக அருங்காட்சியகம் பாரம்பரிய விவசாயம் தொடர்பாக தகவல்களை வழங்குகிறது. 2011ம் ஆண்டில் 2113 துண்டுப் பிரசுரங்கள் "கமபசுவ" மற்றும் இலங்கையின் பாரம்பரிய விவசாய வாசகங்கள் ஆகியன பகிர்ந்தளிக்கப்பட்டன. பரந்துபட்ட ஆர்வமுடைய வருகையாளர் கள் தினமும் அருங்காட்சியகத்துக்கு வந்து செல்கின்றனர்.

விவசாய அருங்காட்சியகத்துக்கு விஜயம் செய்தவர்கள் எண்ணிக்கைகள்

பாடசாலை பிள்ளைகள்	- 53165
பாடசாலை ஆசிரியர்கள்	- 4218
விவசாயிகள்	- 15017
அரச அலுவலர்கள்	- 1824
பல்கலைகழக மாணவர்கள்	- 817
வெளிநாட்டவர்கள்	- 51
ஏனையவர்கள்	- 1953

மத்திய வாசிகசாலை / நூலகம்

இலங்கையின் பிரதான விவசாய நூலகமான இது விவசாயத்துடன் தொடர்பான புதிய பழைய வெளியீடுகளையும் வெளிநாட்டு சஞ்சிகைகளை யும் கொண்டிருப்பதுடன் இறுவெட்டுகளின் மூலம் சார்பிலக்கியங்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வசதிகளையும் கொண்டது.

- பரிமாற்ற அடிப்படையிலும் நன்கொடையாகவும் 251 இற்கும் அதிகமான வெளிநாட்டில் பதிக்கப்பட்ட நூல்கள் மற்றும் பத்திரிக்கைகள் ஆண்டு பூராகவும் பெறப்பட்டன. இதனுடன் சேர்த்து இந்நூலகமானது வருடாந்த சந்தாப் பணமாக 5000 ஸ்ரோலிங் பவுண்களை பொது நலவாய சர்வதேச விவசாய நிறுவகத்திற்கு (CABI) செலுத்தியுள்ளது.
- தகவல்களை பெறுவதற்காக 980 க்கும் மேற்பட்டவர்கள் நூலகத்துக்கு விஜயம் செய்துள்ளனர். நூலக அங்கத்தவர்களுக்கிடை யில் 810 நூல்கள் சுழற்சி முறையில் பயன்படுத்தப்பட்டுள்ளன. வழமையான வாசிப்பு ச்சேவை மற்றும் நூலகங்களுக்கிடைலான 25 கடன் திட்டங்களும் வழங்கப்பட்டுள்ளது.
- ஆராய்ச்சி அலுவலர்களின் வேண்டுகோளுக் கிணங்க 48 க்கும் மேற்ப்பட்ட பெறுமதி வாய்ந்த தேடல்கள் மேற்கொள்ளப்பட்டது. ஏறத்தாழ 28 தேடல்கள் CARP இன் உதவியினூடாக நடாத்தப்பட்டது. திணைக்கள த்தின் ஆராய்ச்சி உத்தியோகத்தர்களுக்கென பயன்பாட்டு கருத்தரங்குகளும் நடாத்தப்பட்டது.
- இணைய வசதியை பயன்படுத்தி ஏறத்தாழ 150 ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் தகவல்களைப் பெற்றுள்ளனர். AGRIS இறுவெட்டுத் தொகுதியும் தற்போதைய தகவல்களை பெறுவதில் மிகுந்த பயனுள்ளதாக காணப் பட்டது. விவசாயத் திணைக்களப் பிரசுரங்கள், அயன மண்டல விவசாயப் பிரசுர வெளியீடு (Tropical Agriculturist Journels) என்பவற்றின் தற்கால தகவல்களை கொண்டு WEBAGRIS எனும் இணையத்தளம் மேம்படுத்தப்பட்டுள்ளது. தேசிய விவசாய Bibiliography 2011 க்கு எமது விவசாயத் தகவல்களை ஏற்றுமதி செய்யவும் இயலுமாயிருந்தோம்.

AGRNET இன் பக்க உள்ளடக்க சேவை (SDCP) ஆனது தொடர்ச்சியாக செயற்பட்டதுடன் 120 மேற்பட்ட பக்க உள்ளடக்க சேவைகளானது திணைக்களப் பாவனையாளர்களுக்கு வழங்க பட்டது.

- மத்திய நூலகமானது 2011 ம் ஆண்டில் அயன மண்டல விவசாய பிரசுரத்தை (Tropical Agriculturist Journels) உள்நாட்டவருக்கும், வெளிநாட்டவருக்கும் பகிர்ந்தளித்து. அத்துடன் PURNA தகவல் தளத்துக்கு உள்ளீடாக 800 மேற்பட்ட கட்டுரைகளையும் 2800 புத்தகங்க ளையும் வழங்கியது.

அட்டவணை 2.2.5 மதிப்பிடப்பட்ட வெளிநாட்டு மரக்கறி பயிர் வர்க்கங்கள்

பயிர்	ஏற்றுக் கொள்ளப்பட்ட எண்ணிக்கை	மறுக்கப்பட்ட எண்ணிக்கை
கத்திரி	2	2
கறிமிளகாய்	8	5
தக்காளி	5	2
பீர்க்கு	4	1
கெக்கரி	3	7
வத்தகை	-	3
வெள்ளரி	-	1
பாகல்	4	-
பூசணி	1	-
கொடிப் பயற்றை	1	1
செடிப் பயற்றை	1	-
கரட்	-	2
கோவா	4	1
சாலாது	4	-
முள்ளங்கி	2	-
பீற்றூட்	1	-

வர்த்தக ரீதியிலான அறிமுகப்படுத்தலுக்கென பெருந்தொகுதி மரக்கறி வர்க்கங்கள் விதை இறக்குமதியாளர்களினால் தரப்பட்டவைகள் மதிப்பீடு செய்யப்பட்டன. கீழே தரப்பட்ட வர்க்கங்களானது நோய் பீடைக்கு சகிப்புத் தன்மை விளைச்சலின் தரம், அளவு என்பவற்றின் அடிப்படையில் ஏற்றுக் கொள்ளப்பட மறுக்கப் பட்டவை ஆகும்.

உற்பத்தியாளர் விதையுற்பத்தி

இனவிருத்தியாளர் தக்காளி வர்க்கங்கமான ரவி, இலங்கை செரி மற்றும் முள்ளங்கி வர்கமான பீரலு என்பவற்றின் உற்பத்தியாளர் விதை உற்பத்தி செய்யப்பட்டது. கலப்பினத் தக்காளி வர்க்கங்களான மகேசி மற்றும் பாத்திய ஆகியவற்றின் பெற்றோர் விதைகள் தனியார் விதையுற்பத்திக் கம்பனிகளுக்கு வழங்கப்பட்டது.

விதை உற்பத்தி பிரிவுக்கு பொலன் பயற்றை மற்றும் ஹவரிப் பயற்றையின் தூய விதைகள் முறையே 20.5Kg 4.25 Kg கையளிக்கப்பட்டது.

ஏனைய செயற்பாடுகள்

- மாதிரி கிராம நிகழ்ச்சி – களச் செய்து காட்டல்கள் மேம்படுத்திய வர்க்கங்களினது விதை வழங்கல், இசைவாக்கப் பரிசோதனை களை நடாத்தல் மற்றும் விவசாயிகளுக்கான பயிற்சிகள் வழங்கல் போன்ற செயற்பாடு களை கம்பிலிவெவ, மரசான, கலேவல ஆகிய கிராமங்களில் மேற்கொள்ளப்பட்டது.

- பயிற்சி - எட்டு அலுவலர்கள் மரக்கறி உற்பத்தி பயிற்சி நெறிகளில் வளவாளர்க ளாக் கலந்துக் கொண்டனர். உள்ளூர், வெளிநாட்டு வருகை தருவோருக்கான பயிற் சிக்கு மேலதிகமாக ஆங்கிலத்தில் உயர் தேசிய டிப்ளோமா பயிலும் 2 மாணவர்களு க்கும் In-plant பயற்சி வழங்கப்பட்டது.

ஏனைய தொடர்பாடல் நடவடிக்கைகளாக செய்து காட்டல்கள், விவசாயிகளின் வயலிற்கு விஜயம் செய்தல், சிறந்த பயிராக்க செயற்பாட்டுக்கென ஆலோசனை வழங்கல் (100 பயனாளிகள்), விவசாயிகளின் சந்தேகங்களுக்கு பதில்களை தொலைபேசி மூலம் அல்லது கடிதம் மூலம் வழங்கல் (100 பயனாளிகள்), துண்டு பிரசுரம் வெளியீடு (2) விவசாயக் கண்காட்சிகளுக்கான பங்களிப்பு செய்தல் (2) என்பன நிறை வேற்றப்பட்டது. புதிதாக வெளியிடப்பட்ட தக்காளி, கறிமிளகாய், வர்க்கங்களினது விதை கள் 150 விவசாயிகளுக்கும் பகிர்ந்தளிக்கப் பட்டது.

நிரந்தர பயிர்ச் சிகிச்சை குழு நிகழ்ச்சி

- 03 மாவட்டங்களில் 36 பயிர்ச்சிகிச்சை குழுக்களுடன் நிரந்தர பயிர்ச் சிகிச்சை குழு அமைக்கப்பட்டது.
- ஏறத்தாழ 200 பயிர்ச்சிகிச்சைகள் மேற்கொ ள்ளப்பட்டன.
- இளமானி பட்டதாரிகளினது ஆய்வு நிகழ்ச்சி திட்டம் (7)
- விவசாய டிப்ளோமா மாணவர்களினது பயிற்சி (09)

தொழில் நுட்பப் பரம்பல் செய்றபாடுகள்

- 02 ஆராய்ச்சி வெளியீடுகள்
- 10 செய்தித்தாள் கட்டுரைகள்
- 57 விவசாயிகள், அலுவலர்கள் பயிற்சி
- 12 விசேட வெளிப்படுத்தல்கள் (Presentation)
- 75 விவசாயிகளின் பிரச்சினைகள் தீர்த்து வைப்பு
- 01 வயல் விழா
- 02 கண்காட்சி நிகழ்வுகளின் பங்கேற்பு
- 04 மாதிரி கிராமங்கள் உருவாக்கம் - கம்பஹா மாவட்டத்தில் பிந்திய கம, தியகம, வல்பிட, மீவித்தில, அரகில கிராமங்கள்

பூங்கனியியல் பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் பண்ணைகளில் நடுகைப் பொருட்கள் உற்பத்தி நிகழ்ச்சி

- 100 அலுவலர்களுக்கான 05 பயிற்சி நிகழ்ச்சிகள், மாணவர்களுக்கான 04 பயிற்சி நிகழ்ச்சிகள், 500 விவசாயிகளுக்கான 10 பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.
- 02 பல்கலைகழக மாணவர்களினதும், ஒரு டிப்ளோமா மாணவரதும் ஆராய்ச்சி நிகழ் ச்சித் திட்டம் மேற்பார்வை செய்யப்பட்டது.
- ஒரு வானொலி நிகழ்ச்சி நடாத்தப் பட்டது – கந்துரட்ட Fm

அபிவிருத்தி நடவடிக்கைகள் :~

- பாரியளவிலான நடுகைப் பொருட்கள் உற்பத்திக்கான ஆய்வு கூட உபகரணங்கள் கொள்வனவு செய்யப் பட்டன.
- இழைய வளர்ப்பு - ஆய்வு கூட புனருத்தாபனம், சகல வசதிகளுடனான புதிய வளர்ப்பு அறை உருவாக்கம்.
- நடுகைப் பொருட்களின் உற்பத்திக்கென புதிய வலையில்லம் நிருமாணிக்கப்பட்டது

பழங்கள் மற்றும் இழைய வளர்ப்புப் பிரிவு

உள்ளக இனப்பெருக்க மூலமான அடிப்படை நடுகைப் பொருள் உற்பத்தி

பயிர்	வர்க்கம்	தாவரம்		மொத்தம்
		உள்வளர்ப்பு	தாவர இல்லம்	
வாழை	எம்பன்	246	305	551
	குறள் எம்பன்	87	-	87
	புலதிசி	12	27	39
	ரதம்பல	200	46	246
	சீனி வாழை	-	05 (தாய் தாவரம்)	05
	நேத்திரம் பழம்	1000	67	1067
	கோழி கூட்டு	800	-	800
அன்னாசி	மொறிசியஸ்	1500	2000	3500
	கியு	160	106	266
பெலி	சுபுன்	420	-	420

பயிற்சி

- மேற்பார்வை செய்யப்பட்ட திட்டங்கள் 04 (01 பல்கலை கழக மாணவர், 03 தேசிய தொழில் நுட்ப டிப்ளோமா)
- விவசாயிகளின் பயிற்சி - 300 விவசாயிகள்
- ஆலோசனை சேவைகள் - 152 பேருக்கு
- 150 க்கும் மேற்பட்ட பயிர்ச் செய்கைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கப்பட்டது. விஜயம் செய்த விவசாயிகளுக்குத் தேவையான ஆலோசனை வழங்கியதுடன் தொலைபேசி மூலமாகவும் ஆலோசனை வழங்கப்பட்டது.

விரிவாக்க வேலைகள்

- ஒரு நாள் பயிற்சி நிகழ்ச்சியும் ஆலோசனை சேவையும் (40 பேருக்கு)
- விரிவுரை – பல்கலைகழக மாணவர்களுக்கான 02 விரிவுரை
- ஆலோசனைச் சேவை- 52 பேருக்கு
- மேற்பார்வை செய்யப்பட்ட திட்டங்கள் - 01 நிறைவு செய்யப்பட்டது. (பல்கலைகழக மாணவர்கள்) கோழிக்கூட்டு வர்க்க வாழையின் நுண்முறை இனப்பெருக்கம் எனும் தலைப்பில் ஒரு கட்டுரை ஊவா வெல்லஸ்ஸ பல்கலை கழகத்தின் 2011ம் ஆண்டு ஆராய்ச்சி மாநாட்டில் (Symposium) வெளியிடப்பட்டது.

- உயர் தேசிய டிப்ளோமா மாணவர்களுக்கு 02 மாத கால பயிற்சி
- கண்காட்சிகள்- புத்தலயில் நடைபெற்ற தேசத்துக்கு மகுடம் 2011 கண்காட்சி மற்றும் குண்டசாலையில் நடைபெற்ற கண்காட்சி என்பவற்றுக்கு கண்காட்சிப் பொருட்கள் வழங்கப்பட்டன.

கிழங்குப் பயிர் மற்றும்அலங்காரப் பயிர்

நடுகைப் பொருட்கள் உற்பத்தி திட்டம் - கிழங்குப் பயிர்

இதன் பிரதான நோக்கம் புதிய சிபாரிசு செய்யப்பட்ட (மேம்படுத்திய) கிழங்குப் பயிர் களின் உயர் தரமான நடுகைப் பொருட்களின் கிடைப்புத் தன்மையை அதிகரிப்பதாகும்.

இத்திட்டத்தின் கீழ் கிழங்குப் பயிர்கள் உரிய இலக்கை அடையும் வண்ணம் பயிரடப்பட்டன. ஏற்கனவே 35,000 க்கும் மேற்பட்ட அடிப்படை நடுகைப் பொருட்கள் பலதரப்பட்ட நடுகை யாளர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

மாதிரிக் கிராம திட்டம்

உள்ளீடுகளை வழங்குவதன் மூலமும், விவசா யிகளுக்கு பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்துவதன் மூலமும் கேகாலையில் 05, முன்மாதிரி துண்ட செய்கைக்கும், தம்புள்ளயில் 05 செய்து காட்டல் துண்டங்களுக்கு பங்களிப்பு வழங்கப்பட்டது.

இரண்டு கண்காட்சிகள் நடாத்தப்பட்டன.

தேசத்துக்கு மகுடம் - புத்தல

தேசிய விவசாயிகள் வாரம் - வவுனியா

வானொலி நிகழ்ச்சிகள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சிகள்

2011 ஒக்டோபர் 14ம் திகதியன்று இலங்கை ஒலிபரப்பு கூட்டுத் தாபன தேசிய சேவையின் தமிழ் நிகழ்ச்சிப் பிரிவில் கிழங்கு பயிர்ச் செய்கை தொடர்பான ஒரு வானொலி நிகழ்ச்சி ஒலிபரப்பப்பட்டது. இரு போகங்களுக்கு முன்பு பயிற்சி நிகழ்ச்சிகள் கன்னொறுவை சேவைக் கால பயிற்சி நிலையத்திலும், ரகவக்க சேவைக்கால பயிற்சி நிலையத்திலும் நடைபெற்றன.

விவசாயிகளின் களங்களுக்கு விஜயம் செய்தல், சிறந்த பயிர்ச் செய்கைக்கான ஆலோசனை வழங்கல், விவசாயிகளின் சந்தேகங்களுக்கு கடிதம் அல்லது தொலை பேசி மூலம் பதிலளித்தல் போன்ற பலதரப்பட்ட தொடர்பாடல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன (200 பயனாளிகள்).

கிழங்குப் பயிர்ச் செய்கை (மரவள்ளி, வற்றாளை, கிரிஅல, இராசவள்ளி, இன்னல) தொடர்பான அண்மைக் கால தகவல்களடங்கிய வழிகாட்டி கையேடானது தயாரிக்கப் பட்டுள்ளது. இது மீளமைக்கப்பட்டு தொழில்நுட்பவியல் வழி காட்டியாக பிரசுரிக்கப்படவுள்ளது.

பூச்சியியல்

அட்டவணை 2.2.7: 2011ம் ஆண்டில் செயற்படுத்தப்பட்ட நடவடிக்கைகளின் முன்னேற்றம்.

செயற்பாடு	மொத்த எண்ணிக்கை
ஆய்வு கூடங்களில் அடையாளம் காணுதல்	147
அடையாளம் காணப்பட்ட புதிய பீடை பிரச்சினைகளின் எண்ணிக்கை	06
விசேட களப்பரீட்சிப்பு விஜயம்	11
விவசாயிகளுக்கான பயிற்சி வகுப்பு	22
அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்பு	21
பயிர்ச் சிகிச்சைகளில் வளவாளர்களாகப் பங்கேற்ற நிகழ்வு எண்ணிக்கை	04
பிரச்சினைகளுக்குத் தீர்வு அனுப்பபட்ட கடிதங்களின் எண்ணிக்கை	06
பிரச்சினைகளுக்குப் பதிலளிக்கப்பட்ட தொலைபேசி அழைப்புக்கள்	89
ஒன்றிணைந்த பீடை முகாமைத்துவ கருத்தரங்குகள்	05
தேனீ வளர்ப்பு	
பதிலளிக்கப்பட்ட கடிதங்களின் எண்ணிக்கை	21
உருவாக்கபட்ட தேனீ சமுதாயங்களின் எண்ணிக்கை	45
நடாத்தப்பட்ட பயிற்சிப் பட்டறை நிகழ்வுகளின் எண்ணிக்கை	01
புதிய தேனீ சமுதாயம் உருவாக்குவதில் உதவி புரிந்த விவசாயிகளின் எண்ணிக்கை	52
புதினப் பத்திரிகை கட்டுரைகள் மற்றும் துண்டுப் பிரசுரங்களின் எண்ணிக்கை	03
பூச்சி நூதனசாலைக்கு விஜயம் செய்தவர்களின் எண்ணிக்கை	18,534

நோயியல் மற்றும் காளான்

- 1081 பேருக்கு சிப்பிக் காளான் வளர்ப்பு தொடர்பாகப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளதோடு சிறியளவில் காளான் உற்பத்தி செய்வோர் எனப் பதிவு செய்யப்படுவதற்காக 190 சான்றிதழ்களும் வழங்கபட்டன.
- 70 பேர் வைக்கோலை அடிப்பொருளாக கொண்டு காளான் வளர்ப்பிற்கும், 62 பேர் காளான் வித்துக்கள் உற்பத்தி செய்வத ற்கும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளனர்.
- 28 பேருக்கு கடித மூலமும், 984 பேருக்கு தொலைபேசி மூலமும், பூங்கனியியல் பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் விஜயம் செய்த 649 விவசாயிகளுக்கு நேரடியாகவும் ஆலோசனைச் சேவைகள் வழங்கப்பட்டன. (மொத்தமாக 1661)
- 20 க.பொ.த (உ/த) வகுப்பு மாணவர்க ளுக்கு காளான் வளர்ப்புத் தொழில்நுட்பம் அவர்களது "கெவல திட்டம்" மூலம் பரம்பலடையச் செய்யப்பட்டது.

- 82 பல்கலைக்கழக மாணவர்களுக்கு காளான் வளர்ப்பு காளான் வித்தி உற்பத்தி தொடர்பாக பயிற்சியளிக்கப்பட்டது. (யாழ்ப்பாணம், களனி பல்கலைகழக மாணவர்கள்)
- டிப்ளோமா மாணவர் ஒருவரின் செயற்றிட்டத்துக்கு உதவி வழங்கப்பட்டது. (அம்பாறை)
- இரண்டு கண்காட்சி நடாத்தப்பட்டன.
- தேசத்துக்க மகுடம் - பத்தல
- தேசிய விவசாயிகள் வாரம்- வவுனியா
- மன்னாரில் விவசாய விரிவாக்கல் பணிப்பாள ரினால் நடாத்தப்பட்ட மற்றும் கம்பஹா, குளியாப்பிட்டிய உயர் கல்வி நிறுவகம் நடாத்திய மூன்று கண்காட்சிகளுக்கு பதாதைகளும் கண்காட்சிப் பொருட்களும் வழங்கபட்டன.

அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்க ளினது ஈடுபாட்டுடன் காளான் வளர்ப்பு மற்றும் காளான் வித்தியற்பத்தி தொடர்பில் நடாத்தப்பட்ட பிரயோக ரீதியான பயிற்சிப் பட்டறை தொடர்பான விபரங்கள் பின்வரு மாறு

- விவசாய வணிகத்துறை விருத்தி மற்றும் விவசாய திணைக்களத் தகவல் சேவைப் பிரிவினால் - 30 பேருக்கு பயிற்சி வழங்கப்பட்டது.
- மகாஇலுப்பள்ளம சேவைக்காலப் பயிற்சி நிலையத்தில் - 30 உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டது.
- உதவி விவசாயப் பணிப்பாளர் அலுவலகம் கேகாலையில் - 41 பேருக்கு பயிற்சி வழங்கப்பட்டது.
- இபாட் (IFAD) – 87 பேருக்கு பயிற்சி வழங்கினர்
- உதவி அரசாங்க அதிபர் மில்லெனிய காரியாலயம் - 31 பேருக்கும் பயிற்சியளிக் கப்பட்டது.
- ஹதபிமவில் - 34 பேருக்குப் பயிற்சியளிக் கப்பட்டது.
- உனவட்டுவ ஆசிரியர் பயிற்சி நிலைத்தில் - 38 பேருக்குப் பயிற்சியளிக்கப்பட்டது.
- இலத்திரனியல் ஊடகங்கள் மூலமாக தொழில்நுட்ப பரவலாக்கம் மேற்கொள்ளப் பட்டது.
- மூன்று வானொலி நிகழ்ச்சிகள்- சிப்பிக் காளான் வளர்ப்பு, வைக்கோல் காளான் வளர்ப்பு, உலர்ந்த காளானிலிருந்து பெறுமதி சேர் பொருட்களுற்பத்தி (கந்துரட்ட சேவை, அறுவடை நிகழ்ச்சி, நேரடி ஒலிபரப்பு மற்றும் சந்திய சேவை ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சி – (ரணடுவ) என்பன நடாத்தபட்டன. ரெகன செய்திப் பத்திரிகையில் ஒரு கட்டுரை பிரசுரிக்கப் பட்டது. (சிப்பி காளான் உற்பத்தி)
- வவுனியா விவசாய பாடசாலையில் காளான் உற்பத்தி பிரிவு உருவாக்கபட்டது.
- விவசாயிகள் மத்தியில் சிப்பிக் காளான் மற்றும் வைக்கோல் காளான் செய்கையை வலுப்படுத்துவதற்கென 294 பொதிகள் வைக்கோல் காளான் வித்தித் தொகுதியும், 32 பொதி சிப்பிக் காளான் வித்திக் தொகுதியும் பகிர்ந்தளிக்கப்பட்டன.

விவசாய இரசாயனவியல்

இலங்கையில் மேற்கொள்ளப்படும் பல்வேறு பயிர்ச் செய்கை முறைகளில் மண் போசணை மதிப்பீட்டு நிகழ்ச்சிகள்

இக்கற்கையானது இலங்கையில் அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கியதாக தெரிவு செய்யப்பட்ட கமநல கேந்திரப் பிரிவுகளில் வித்தியாசமான பயிர்ச் செய்கைத் தொகுதியின் மண்வளத்தினை மதிப்பீடு செய்யவென மேற்கொள்ளப்பட்டது. மாதிரிகளின் சேகரிப்பானது

நிறைவடையும் நிலையிலுள்ளதுடன் பகுப்பாய்வுகள் விரைவில் தொடங்கும். இக்கற்கையானது பூங்கனியியல் பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் மண்ணிரசாயன பிரிவினால் ஒருங்கிணைக் கப்படுகிறது. மண் மாதிரிச் சேகரிப்பும் மண் பகுப்பாய்வும் விவசாய திணைக்களத்தினது எல்லா நிறுவனங்களினாலும் மேற்கொள்ளப் படுகிறது.

பகுப்பாய்வுச் சேவை

2011ம் ஆண்டுக் காலப்பகுதியில் 2000 மண் மாதிரிகள், 200 நீர் மாதிரிகள், 27 தாவர மாதிரிகள், 100 கூட்டெரு மாதிரிகள், என்பன பகுப்பாய்வு செய்யப்பட்டு அறிக்கைகளும் வழங்கப்பட்டன. இதில் குறிப்பிடத்தக்க விடயமாக கிடைக்கப் பெற்ற மண் மாதிரிகளின் எண்ணிக்கையானது ஏனைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் 2011ம் ஆண்டு அதிகமாக காணப்பட்டது. இவ்வாண்டில் மேற்படி மண் பகுப்பாய்வு மூலம் கிடைக்கப் பெற்ற வருமானம் 168,830.00 ரூபாவாகும்

மாணவர்களுடைய செயற்றிட்டம்

பேராதனை பல்கலைகழக மாணவர்கள் இருவரும், சப்பிரகமுவ பல்கலைகழக மாணவர் கள் ஒருவரும் இறுதியாண்டு செயற்றிட்டங்களை நிறைவு செய்துள்ளனர். இவற்றுடன் அம்பாறை விவசாய உயர் தொழில்நுட்ப பாடசாலை மாணவர்கள் மூவர் மற்றும் தேசிய தொழிற் பயிற்சி அதிகார சபையின் பயிலுனர் (NAITA) நால்வரும் தமது In- plant பயிற்சியை நிறைவ செய்துள்ளனர்.

மலரியல்

- இப்பிரிவினால் பயிற்றுவிக்கப்பட்ட விவசா யிகள் மற்றும் அலுவலர்களுக்கு வீட்டுத் தோட்டச் செய்கைக்கென 4500 விதைப் பொதிகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.
- பொதுமக்களுக்குப் பகிர்ந்தளிக்கபடவென 4500 வீட்டுத் தோட்டச் விதைப் பொதிகள் இப்பிரிவில் களஞ்சியப்படுத்த ப்பட்டுள்ளது.
- திவி நெகும நிகழ்ச்சித் திட்டத்தினது பயனாளிகளை வசதிப்படுத்தும் நோக்குடன் 42 வீட்டுத் தோட்டப் பயிற்சிப் பட்டறைகள் நடாத்தப்பட்டனர்.
- ஆண்டு பூராகவும் HORDI ல் அமையப் பெற்றுள்ள மாதிரி வீட்டுத் தோட்டமானது கவர்ச்சிகரமான முறையில் பராமரிக்கப் பட்டது.

விரிவாக்கம், பொருளியல் மற்றும் தகவல் முகாமைத்துவ பிரிவு

- **தொழில்நுட்ப பரவலாக்கல் செயற்பாடுகள்**
  - வருகை தந்த 75340 பேரை ஒருங்கிணைத்தமை.
  - தொழில்நுட்பச் சந்தேகங்களுக்கு எழுத்து மூலமான பதிலளிப்பு – 5982
  - பாடசாலை மாணவர்கள் - 28317
  - விவசாயிகள் - 5982
  - விவசாயிகள் குழு பயிற்சி நிகழ்ச்சி – 02
  - ஏனைய நிறுவனங்களுக்கான குழு நிகழ்ச்சிகளின் ஒருங்கிணைப்பு 05
  - வெளிநாட்டவருக்கான குழு நிலை பதிலளிப்பு நிகழ்ச்சிகள் - 2
  - பாடசாலை ஆசிரியர்கள் - 110
  - அரச உத்தியோகத்தர்கள் - 60
  - உயர் கல்வி கற்கும் மாணவர்கள் - 205
  - தனிப்பட்டவர்கள் - 395
  - கடிதங்களுக்கு பதிலளிப்பு – 4
  - ஆலோசனை துண்டு பிரசுரம் மூலம் புதிய தொழில்நுட்ப பரவலாக்கம் - 5345
  - தொலைபேசி மூலமான சந்தேகங்களுக்கு தொழில்நுட்ப ஆலோசனை – 903
  - பூங்கனியியல் பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தினது ஆராய்ச்சி சுருக்க வடிவ புத்தக உருவாக்கம்

- தொழில்நுட்ப துண்டுப் பிரசுர, கையேடு களின் வடிவமைப்பும் உருவாக்கமும் - 04

2011க்கான திட்டம்

மரக்கறிகள்

தக்காளி –

பல்லின நுக இனவிருத்தி மூலமான தக்காளி வர்க்க விருத்தி

- F_1 சந்ததி கலப்பின உற்பத்தி
- F_1 கலப்பின சந்ததியினை வர்க்கச் சோதனைகளில் பரீட்சிப்பு
- பெற்றோர் குலவகையை பேணுதல்

உள்ளக இன விருத்தி மூலமான தக்காளி வர்க்க விருத்தி

- தெரிவும் மதிப்பீடும்
- அறிமுகப்படுத்தப்பட்ட தக்காளி வர்க்க மதிப்பீடு
- வெளிநாட்டுக்குரிய வர்க்க மதிப்பீடு
- தக்காளி வர்க்கங்களின் உற்பத்தியாளர் விதை உற்பத்தி
- புதிதாக வெளியிடப்பட்ட வர்க்கங்களை மேம்படுத்தல்
- புதிய வர்க்கங்கள் தொடர்பான விழிப்பு ணர்வு நிகழ்ச்சிகள்

கறிமிளகாய்

- பல்லின நுக இனவிருத்தி மூலமான கறிமிளகாய் வர்க்க விருத்தி
- F_1 சந்ததி கலப்பின உற்பத்தி
- வர்க்க சோதனைகளில் F_1 கலப்பின சந்ததியை பரீட்சிப்பு
- பெற்றோர் குலவகையைப் பேணுதல்
- அறிமுகப்படுத்தப்பட்ட கறிமிளகாய் வர்க்க மதிப்பீடு
- வெளிநாட்டுக்குரிய வர்க்கங்களின் மதிப்பீடு
- கறிமிளகாய் வர்க்கங்களின் உற்பத்தியாளர் விதையுற்பத்தி
- சிறந்த செயற்றிறன் கொண்ட "நய் மிரிஸ்" வகையினை தூய்மைப்ப டுத்தலும் விதையுற்பத்தியும்.

Yard long bean –

- விருப்பப்படுகின்ற அயன் மகரந்தச் சேர்க்கை யுடைய வர்க்கங்களின் விருத்தி
- விரும்பப்படுகின்ற கலப்பினங்களின் விருத்தி

கத்தரி

- விரும்பப்படுகின்ற கத்தரி கலப்பின விருத்தி
- விடுவிக்கப்பட்ட, சிறப்பான செயற்பாடுடைய கலப்பினங்களினது பெற்றோர்க் குலவகை களில் விதையுற்பத்தி

இலை மரக்கறிகள்

பல்வேறுப்பட்ட இலை மரக்கறிகளின் விதை நடுகைப் பொருட்களின் உற்பத்தி

- பாகல், கெக்கரியின் மூலவுயிருருத் தூய்மையாக்கம்.
- பாகல், கெக்கரியினது கலப்பின உருவாக்கம்
- பாகல், கெக்கரியினது கலப்பினத் தேர்வு
- பல்வேறுப்பட்ட சூழல்களில் சிறப்பான செயற்பாடுடைய வர்க்கங்களின் பரீட்சிப்பு (NCVT, VAT)
- வெளிநாட்டுக்குரிய பாகல் F_1 சந்ததியின் மதிப்பீடு
- பூசணி வர்க்கத்தினது தூய்மையாக்கம்

- வர்க்க வெளியீட்டுக் குழுவுக்கு பூசணி வர்க்கமொன்றின் விதைப் பெருக்கமும் கையளிப்பும்
- மாத்தளைப்பச்சை, பொலன் பயற்றை, ஹவரிப் பயற்றை, சேதன, பந்துரு வர்க்கங்களின் உற்பத்தியாளர் விதை யுற்பத்தி
- பீர்க்கு மூலவுயிருரு தூய்மையாக்கமும் மதிப்பீடும்
- பீர்க்கு கலப்பினப் பிறப்பாக்கம்
- பீர்க்கு கலப்பினத் தேர்வு
- பீர்க்கினது சிறந்த செயற்பாடுடைய கலப்பின வர்க்கங்களைப் பல்வேறு சூழல் நிலமை களில் பரீட்சிப்பு (NCVT, VAT)
- கலப்பின போஞ்சிகளின் குடித்தொகை களைப் பேணுதல்
- பயற்றையினது சிறந்த செயற்பாடுடைய வர்க்கங்களை வித்தியாசமான சூழல் நிலமைகளில் பரீட்சித்தல் (NCVT , bole bear)
- சிறகவரையின் மூலவுயிருருத் தேர்வு
- சிறகவரையின் மூலவுயிருருவின் மூலக்கூற்று பண்புபடுத்தலும், துரு நோய் எதிர்ப்புக்குரிய பரம்பரையலகு குறிப்பினை அடையாளம் காணலும்
- தக்காளியில் பக்ரீயா வாடலுக்கு எதிர்புடைய பரம்பரையலகு குறிப்பினை அடையாளம் காணல் (வர்க்கம் KWR)
- உற்பத்தியாளர் விதையுற்பத்தி (இரு சிறகவரை வர்க்கங்கள்)

பழவகை மற்றும் இலைய வளர்ப்பு

- இலங்கையில் "உக்குரஸ்ஸ" வினது தேடல், பாதுகாத்தல் மற்றும் பெருக்கம் தொடர்பான கற்கைகள்
- உயர் தரம், உயர் விளைச்சல் இணைப்பினை இனம் காண "தூரியன்" வர்க்கங்களினது கலப்புப் பிறப்பாக்கம்
- உயர் தரம், உயர் விளைச்சலுக்குரிய பலா மரங்களுக்கான தேடல், பாதுகாத்தல் மதிப்பிடல்
- தரமான உயர் விளைச்சல் தரும் டிராகன் பழ வர்க்க விருத்திக்கான கலப்புப் பிறப்பாக்கமும் தெரிவும்
- மாவில் குட்டைத் தாவரங்கள் பெறப்படுவதில் ஒட்டுக்கட்டை இடைக் கட்டையினது விளைவுகள்
- உயர் தர, உயர் விளைச்சலுடைய என்பன் வாழை வர்க்கங்களை அடையாளம் காண தேடல், பாதுகாத்தல் மற்றும் மதிப்பிடல்
- கிடைக்கக்கூடிய உள்ளக இனவிருத்தி குலவகைகளைப் பயன்படுத்தி பப்பாசி கலப்பின விருத்தியும் கலப்பினங்களை உயர் விளைச்சல், ஏனைய தரங்களுக்காக மதிப்பீடு செய்தலும்
- ஒரு மாதிரிக் கிராமம் உருவாக்குதல்
- இரு ஆராய்ச்சிப் பண்ணைகளை விருத்தி செய்தலும் நடுகைப் பொருட்கள் உற்பத்தியும்
- தூண்டப்பட்ட விகாரத்தின் ஊடாக உயர் விளைச்சல், உயர் தரமுடைய நோயெதி ர்ப்புத் தன்மையுடைய வாழை வர்க்கங்களின் விருத்தி
- உயர் விளைச்சல், சிறந்த தரம், நோயெதிர் ப்புடைய வாழை வர்க்கங்களினது மூலவுயிருருத் தெரிவு
- தூண்டப்பட்ட விகாரத்தினூடாக உயர் விளைச்சல், உயர் தரம், நோயெதிர்ப்பு தன்மையுடை ரம்புட்டான் வர்க்கங்களின் விருத்தி
- பலாவின் "பாதர்லோங்" வர்க்கத்தினது ஒட்டு மேற்கொள்ளப்பட்ட தாவரங்களினது ஒட்டுக்

கட்டை வளர்ப்பூடகத்துக்கும் வித்துப் பருமனுக்குமிடையிலான விளைவை அறிதல்

- 4 மாதிரிக் கிராமங்களின் உருவாக்கம்
- 4 ஆராய்ச்சி பண்ணைகளின் விருத்தியும் நடுகைப் பொருட்கள் உற்பத்தியும்.

கிழங்கு பயிர்கள், அலங்காரப் பயிர்கள்

- மரவள்ளி, வற்றாளை என்பவற்றினது வர்க்க விருத்தி நிகழ்ச்சிகள் தொடர்கின்றன.
- வற்றாளையின் CIP குலவகையின் உயர் உப்புச் சகிப்பு, உயர் கரோட்டின் உள்ள டக்கம் உலர் பதார்த்த உள்ளடக்கம் என்பவற்றுக்கான வர்க்க மதிப்பீடு
- சிபார்சு செய்யப்பட்ட வற்றாளை, மரவள்ளி, கிரிஅல, சேம்பு, இராசவள்ளி, மற்றும் இன்னல வர்கக்ங்களினது அடிப்படை நடுகைப் பொருள் உற்பத்தியும், நாடு பூராகவும் உள்ள வேண்டுகோளின் அடிப்படையில் பலதரப்பட்ட இலக்குப் பயனாளிகள் மத்தியில் பகிர்ந்தளித்தலும்.
- எல்லா வகையான கிழங்குப் பயிர்களினதும் மூலவுயிருரு முகாமைத்துவம்
- கருப்பிரிவு உருவாக்கம், செய்து காட்டல் துண்டம், மாதிரிக் கிராமம் மற்றும் பயிற்சி நிகழ்ச்சிகள் மூலம் கிழங்குப் பயிர்களின் புதிய மேம்படுத்திய வர்க்கங்களின் உற்பத்தி பொதிகள் என்பவற்றைப் பரப்புதல்
- ஜேர்பரா கலப்பினத்தின் பயிர்ச் செய்கைப் பொதிகள் விருத்தி
- வீட்டுத் தோட்டச் செய்கையில் பயன்படுத்துவதற்குரிய நவீன தொழில்நுட்ப விருத்தி
- வீட்டுத் தோட்டச் செய்கைக்குரிய சிறந்த பயிர்ச் செய்கைகளையும் பயிர்ச் செய்கை தொகுதிகளையும் அடையாளம் காணல்.
- வீட்டுத் தோட்டச் செய்கைக்குரிய மிகப் பொருத்தமான பயிர்களை அடையாளப் படுத்தலும் அறிமுகப்படுத்தலும்.
- பொலித்தீன் இல்லங்களுள் வளர்ப்பதற் குரிய 5 பயிர்களின் விருத்தி
- மாதிரி வீட்டுத் தோட்டத்தினை பூங்கனியியல் பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தில் பேணல்

பூச்சியியல்

- பூசணியில் ஒருங்கிணைந்த நோய் பீடை முகாமைத்துவத்துக்கான பொதி விருத்தி (NARP திட்டம்)
- பூசணியில் வைரசு காவிகளைக் கட்டுப்படு த்துவதற்கான மாறுப்பட்ட பூச்சி நாசினி பரிக ரங்களை சோதித்தறிதல்
- பூசணியில் நோய் பீடை கட்டுப்பாட்டுக்கென தற்போதுள்ள ஒருங்கிணைந்த பீடை முகா மைத்துவ பொதிகளை மேம்படுத்துவத ற்குரிய மாறுபட்ட கட்டுபாட்டு நுட்பங்களைச் சோதித்தறிதல்
- விவசாயிகளின் களத்திலும், ஆராய்ச்சிக் களத்திலும் பூசணி வைரசு நோய்களை கட்டுப்படுத்துவதற்காக உள்ள மேம்படுத்திய ஒருங்கிணைந்த பீடைக் கட்டுபாட்டு பொதிகளை சோதனைச் செய்தல்
- விவசாயிகளுக்கும், விரிவாக்க உத்தியோக த்தர்களுக்கும் மேம்படுத்திய ஒருங்கிணைந்த பீடை கட்டுபாட்டு நுட்பங்களை பரவல டையச் செய்வதற்கான செய்து காட்டல் களத் துண்டங்கள்
- பனிப்பூச்சியில் எதிர்ப்பு விருத்தியடைவதில் அசிபேட் 75 SP இனது தாக்கம் பற்றிய கற்கை
- வாழை நீள்முஞ்சிவண்டுகளை கட்டுப்படுத்த தகுதியான பீடை நாசினித் தேர்வு

- இவ்ஆராய்ச்சி திட்டங்களை உரிய குறிக்கோள்களை நிவர்த்தி செய்யவென தொடர்ந்து முன்னெடுத்தல்

தாவர நோயியல் நுண்ணுயிரினவியல், காளான்.

- வாடலுக்கும், கழுத்தழுகலுக்கும் எதிர்ப் புடைய கத்தரி, தக்காளி, கறிமிளகாய் பயிர் களின் மூலவுயிருருத் தேர்வு
- பியுசாரியம் வாடலுக்கான கட்டுபாட்டு முறைகளை விருத்தி செய்தல்
- நோய் அடையாளம் காணலும் ஆலோசனை சேவையும்.
- தக்காளி மற்றும் கறிமிளகாய்களில் பீடைக்கு எதிர்ப்புருவாவதில் கதிர்வீசப்பட்ட கைற்றின் இனது தாக்கம்.
- கதிர் வீசப்பட்ட கைற்றோசன் இனைப் பயன்படுத்தி றம்புட்டானில் தூள் பூஞ்சண நோய் முகாமைத்துவம்.
- இஞ்சி வேர்த்தண்டு கிழங்கு அழுகலின் கட்டுபாட்டு முறைகளின் விருத்தி
- நாற்று மேடை நோய்களின் உயிரினவியல் முறைக் கட்டுபாட்டு முறைகள்
- பூசணியில் ஏற்படும் வைரசு இலைச் சுருள் பிரச்சினை தொடர்பான கற்கை
- நோய் அடையாளம் காணவென இறக்குமதி செய்யப்பட்ட விதை மற்றும் நடுகைப் பொருட்களைச் சோதித்தல்
- நோயாக்கிப் பங்கசு வளர்ச்சிக்கு எதிரான கைற்றோசன் சேர்வைகளைத் தெரிதல் (ஆய்வுகூட வளர்ப்பு முறையில்)
- திராட்சையில் நோய்க் கட்டுபாட்டு தொடர் பான கற்கைகள்
- பூசணியில் நோய்களை அடையாளம் காண லும் அவற்றுக்குரிய ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவ பொதிகளை விருத்தி செய்தலும்.
- சித்திரசுப் பழப்பயிரில் பிரதான நோய்களு க்கான ஒருங்கிணைந்த பீடை முகாமைத் துவப் பொதிகளை விருத்தி செய்தல்
- கொடித் தோடையில் தண்டு வீக்கம் தொடர்பான கற்கை
- கெக்கரியில் சுசினி மஞ்சள் சித்திரசு வடிவ வைரசுக்கான மூலவுயிருருவைத் தெரிதல்
- டிகாரன் பழச் செய்கையிலுள்ள நோய்களை அடையாளம் காணல்
- தக்காளியில் வெளிறலுக்கு எதிரான பங்கசு நாசினியை தெரிதல்
- கறிமிளகாய் அந்திரநோசுவுக்கு எதிரான பங்கசு நாசினித் தேர்வு
- வாழையில் சிகாடோகாவுக்கு எதிரான பங்கசு நாசினித் தேர்வு
- கெக்கரியில் தூள் பூஞ்சண, கீழ்பூஞ்ண நோய்களுக்கு எதிரான பங்கசு நாசினித் தேர்வு
- பால் காளான் செய்கைக்கான இறுதிய றிக்கை சுருக்க குறிப்பு விருத்தி
- இரண்டு புதிய சிப்பிக் காளான் வர்க்க ங்களின் பயிர்ச் செய்கை முறைகளைச் சோதித்தறிதல்
- காளான் விதையுற்பத்தியில் குறைந்த செலவு முறையை விருத்தி செய்தல்
- மரக்கறி, பழங்களின் வேர்களில் மைகோரைசாவின் மதிப்பீடு

மண் போசணை முகாமைத்துவம்

- சேதன விவசாயத்தில் வித்தியாசமான சேதனப் பசளை மூலங்கள் மரக்கறிகளின் விளைச்சலில் காண்பிக்கும் தாக்கம்

- சேதன மரக்கறி செய்கையில் போசணை முகாமைத்துவம் விசேடமாக N முகாமை த்துவம்
- சேதன முறை மரக்கறிச் செய்கையில் பல்வேறு சேர்க்கையிலமைந்த போசணை மூலங்களினது தாக்கம்
- சேதன மரக்கறி செய்கையின் விளைச்சலில் இயற்கை முறையான பயிர்ச் செய்கை முறையினது நீண்டகாலத் தாக்கம் (பூச்சியப் பண்படுத்தல் + பத்திரக்கலவையிடல்)
- நீண்ட கால கூட்டெருப் பாவனை மரக்கறி விளைச்சல், மண்ணின் தரம் என்பவற்றில் ஏற்படுத்தும் தாக்கம்
- வாழையில் பொற்றாசியத்தினது முகாமை த்துவம்
- அன்னாசியில் பசளை முகாமைத்துவம்
- இலங்கையிலுள்ள பல்வேறுப்பட்ட கமநல கேந்திர நிலைய பிரிவுகளில் மண் போசணை நிலை மதிப்பீட்டுக் கற்கை
- மரக்கறி விளைச்சலின் மீது நனோ பசளைப் பிரயோகத்தினது தாக்கம்
- பல்வேறுப்பட்ட பயிர்ச் செய்கைத் தொகுதிகளில் மண்ணிலுள்ள நுண் போசணை மூலங்களின் நிலமை பற்றிய கற்கை
- இலங்கையில் பிரயோகிக்கப்படும் பொசுபரசு பசளைகளில் மூலங்களின் பார உலோகங்களின் நிலமை தொடர்பான ஆய்வு
- பல்வேறுப்பட்ட விலங்குக் கழிவுகளில் பார உலோகங்களின் நிலமை தொடர்பான கற்கை
- பசுந்தாட் பசளைகளில் துணையான மற்றும் நுண் போசணை மூலங்களின் நிலமை பற்றிய கற்கை
- இலங்கையில் பொதுவாக உணவாகக் கொள்ளப்படும் நீர் வாழ் தாவரப் பாகங்களில் பார உலோக உள்ளடக்கம் தொடர்பான கற்கை

மத்திய நூலகம்

- நூலகத்திலுள்ள அரிய புத்தக தொகுப்பினை இலத்திரனியல் மயமாக்கிப் பாதுகாக்கும் திட்டம்
- இணையத் தளப் பக்கம் ஒன்றில் மத்திய நூலக Catalogue ஒன்றை பதிப்பிட தீர்மானம்
- புதிதாக வந்துசேரும் புத்தகங்களுக்கான Catalogue அட்டைகளை அச்சிடத் திட்டம்
- அயன மண்டல விவசாயி (Tropical Agriclturist) இனை கணணிமயமாக்கல்
- அயன மண்டல விவசாயி ((Tropical Agriclturist) இனை இலத்திர னியல் மயப்படுத்தி பின்னர் சர்வதேச வலைப் பின்னலுடன் இணைத்தல்
- நூலகத்தின் அனைத்துப் புத்தகங்களையும் கணிணிமயப்படுத்தல்

உத்தியோகத்தர் பட்டியல்

பதவியணி	எண்ணிக்கை
பணிப்பாளர் (பதில்)	01
மேலதிக பணிப்பாளர் (பதில்)	01
ஆராய்ச்சி உத்தியோகத்தர்	23
நிருவாக உத்தியோகத்தர்	02
முதுநிலை நூலகர்	01
நூலகம்	02
நிகழ்ச்சி திட்ட உதவியாளர்	09
பொது முகாமைத்துவ உதவியாளர்	18
பண்ணை எழுதுவினைஞர்	35
விவசாய போதனாசிரியர்	35
ஆராய்ச்சி உதவியாளர்	13
ஆராய்ச்சி உப உதவியாளர்	09
காரியாலய சிற்றுழியர்	02
சாரதி	07
களஞ்சியப் பொறுப்பாளர்	02
பழுது பார்ப்பவர்	02
இயந்திர இயக்குபவர்	01
தச்சன்	01
மின் வேலையாளர்	01
ஒட்டு வேலையாளர்	02
சமதரை புல் வெட்டுபவர் / புல் வெட்டி இயக்குனர்	01
சமதரை புல் வெட்டுபவர் உழவியந்திரம்	03
நீர்பம்பி இயக்குபவர்	01
தேனீ வளர்ப்பு (செய்து காட்டுபவர்)	01
தாவர ஒட்டு வேலை செய்பவர்	01
சுற்றுலா விடுதிக் காப்பாளர்	01
நாற்று மேடையாளர்	01
துப்பரவு தொழிலாளி	02
திறனற்ற தொழிலாளி	110
காவலாளி	25
மொத்தம்	**282**

2.2.1 தாவர வைரஸ் சுட்டியிடல் நிலையம் (PVIC), ஹோமாகம

ஹோமாகமவில் அமைந்துள்ள தாவர வைரஸ் சுட்டியிடும் நிலையமானது கன்னொறுவையில் அமைந்துள்ள பூங்கனியியல் பயிர்களுக்குரிய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் கீழ் இயங்குகிறது (HORDI). இந்த நிலையத்தின் அடிப்படை நோக்கம் தாவர வைரஸ், வைரஸை ஒத்த அங்கிகளை இனங்காணல், வைரசு சோதனைக்குரிய உபகரணத் தொகுதிகளின் உற்பத்தி, ஏனைய அங்கிகளை ஆய்வு கூடடத்தில் இனங்காணல், களநிலமைகளில் சுட்டியிடல், தடுப்புக் காப்புச் சேவைகள், சாத்திய மான கட்டுப்பாட்டு முறைகளை மதிப்பிடல், வைரஸ் அற்ற அடிப்படை அத்திவாரத் தொகுதி களை விருத்தி செய்தல், வைரசினுடைய கவசத்திலுள்ள புரதம், அதன் இடைப்பட்ட எதிர்ப்புத் தன்மை என்பவற்றை அறிதல், அத்துடன் ஏனைய நோய் விளைவிக்கும் அங்கிகளை இனங்காணல், (பங்கசு, பற்றீரியா, நிமற்றோடா, வைரொயிட், பைற்றோபிளாஸ்மா) போன்றனவாகும்.

பாதீடு

அட்டவணை 2.2.1.1 வருடாந்தப் பாதீடு – 2011 (ரூபா)

செலவு விடயம்	ஒதுக்கீடு	செலவு	செலவு%
மீண்டுவரும் செலவு	2,856,013	2,694,948	94
மூலதனச் செலவு	2,380,615	2,046,483	86
NARPP – பப்பாசி செயற்திட்டம்	1,000,000	959,280	96
இழைய வளர்ப்பு செயற்திட்டம்	3,300,000	2,412,000	73
மஹிந்த ராஜபக்ச விளையாட்டு கட்டடத் தொகுதி - விவசாய செயற்திட்டம்	150,000	131,275	88
மாதிரிக் கிராம செயற்திட்டம் ((முல்லேகம)	100,000	10,639	11
மொத்தம்	**9,786,628**	**8,254,625**	**84**

முன்னேற்றம்

பாரம்பரிய முறையிலான தாவர வைரசியல்

- உள்ளூரில் தயாரிக்கப்பட்ட வெலிகம இலை வாடல் நோய்க்காரணியின் பல்முளை வகை எதிர் திரவ இழையத்தினைப் பயன்படுத்தி வெவ்வேறு தாவரங்களில் ELISA சோதனை மூலம் பைற்றோபிளாஸ்மா நோய்களை அடையாளம் காணல்.
- அந்தூரியம் வெளிறல் நோயினை இனங் காண்பதற்கான உள்ளூரில் தயாரிக்கப்பட்ட பல்முளை வகை எதிர்திரவ இழையத்தி னது (Polyclonal anti serum) வினைத்திறனை மதிப்பீடு செய்தல். உள்ளூரில் தயாரிக்கப் பட்ட அந்தூரியம் வெளிறல் எதிர்திரவ இழையமானது *Xanthomonas axonopodis* pv
- *diffenbachae* ன் தொற்றலை அடையாளப்படு த்துவதற்கு பயன்படுத்தப்படுகின்றது. இந்தக் கற்கை தொடரப்படும்.

- உள்ளூரில் தயாரிக்கப்பட்ட தென்னையின் வெலிகம இலைவாடல் (WCLW) எதிர் திரவ இழையத்திற்கான இறுதிச் சுருக்க அறிக்கையை (Protocol) சிறப்பான நிலைக்கு ஆக்கல். இந்தக் கற்கை தொடரப்படும்.

- வெலிகம இலைவாடலுக்குரிய நோய்க் காரணியான பைற்றோபிளாஸ்மாவிற்குரிய பரந்து பட்ட விருந்து வழங்கிகளை ELISA சோதனை மூலம் இனங்காணல்.

- இறக்குமதி செய்யப்பட்ட கலப்பின பூசணி விதைகளின் வித்தில் பிறந்த வைரஸ் நோய் களை இனங்காணல். பரிசோதிக்கப்பட்ட கலப்பின வித்துக்கள், கெக்கரி பச்சை திட்டுத் திட்டான சித்திர வடிவ வைரஸ், கெக்கரி சித்திர வடிவ வைரஸ் அற்றதாகக் காணப்பட்டது. இந்தக் கற்கை தொடரப்படும்.

- திரவ இழையவியல் முறைகளைப் பயன்படுத்தி கிரம முறையில் சுட்டியிடும் நிகழ்ச்சி: மொத்தமாக 3550 மாதிரிகள் சுட்டியிடப்பட்டுள்ளன.

  பிரயோகம்:- நோய்களற்ற நடுகைப்பொருள் உற்பத்தியை ஊக்குவித்தலும் நோயின் மேலதிக பரவலைச் சரியான நோயாக்கியை இனங்காண்பதன் மூலம் கட்டுப்படுத்தலும்.

மூலக்கூற்று வைரசியல்

- உருளைக்கிழங்கு வைரஸ் x (PVX) ஐ, உருளைக்கிழங்கு இலைச்சுருளல் வைரஸ் (PLRV) ஆகியவற்றை மீள் மொழிபெயர்ப்பு பொலிமரேசு சங்கிலித் தாக்கத்தின் மூலம் (RT-PCR) அடையாளப்படுத்தல்.

பிரயோகம்:- இந்தத் தொழில்நுட்பத்தை கிரம முறையில் வைரஸ் சுட்டியிடலுக்குப் பயன் படுத்தலாம். அத்துடன் வைரஸ் அற்ற நடுகைப் பொருள் உற்பத்தியை ஊக்குவிப்பதற்கும் (விஷேடமாக தனியார் நிறுவனங்கள்) தடுப்புக் காப்புத் தேவைகளுக்கும் பயன்படுத்தல்.

- சித்திரசுத் தாவரங்களில் வைரசு, வைரொயிட் நோய்களை மீள் மொழி பெயர்ப்பு பொலிமரேசு சங்கிலித் தாக்கத்தின் மூலம் கண்டு பிடித்தலும் இரட்டை, பல் மொழி பெயர்ப்பு பல்பகுதிய சங்கிலித் தாக்கத்தினை விருத்தி செய்தலும்.

  இரண்டு வைரொயிட்டுக்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. இருப்பினும் இறுதிச் சுருக்க அறிக்கையானது மேலும் தெரிவுப்படுத்தப் படல் வேண்டும்.

- பொலிமரேசு சங்கிலித் தாக்கத்தை அடிப்படையாகக் கொண்ட செயன்முறை மூலம் தென்னையின் இலைவாடல் நோய்க் காரணியான பைற்றோபிளாஸ்மாவின் பரந்து பட்ட விருந்து வழங்கிகள் பற்றிய கற்கை. இக்கற்கையானது வெலிகம இலை வாடல் நோய்க்காரணியான பைற்றோபிளாஸ்மாவின் குறிப்பிட்ட முதன்மையான காரணியைப் பயன்படுத்தித் தொடரப்படுகின்றது. அத்துடன் பரம்பரையலகுத் தொடராக்கல் முறையும் மேலதிக உறுதிப்படுத்தலுக்கும் பயன் படுத்தப்படும்.

பிரயோகம்:- நோய் பரவாமல் தடுப்பதற்கு நோய்த்தாக்கம் ஏற்பட்ட தாவரங்கள் தவிர்ந்த தாக்கம் ஏற்படாத ஏனைய தாவரங்கள் உள்ள பிரதேசங்களில் மாற்று விருந்து வழங்கிகளின் அளவைக் கட்டுப்படுத்தல்.

- ஏற்கனவே கண்டுபிடிக்கப்பட்ட வைரஸை (பொலிமரேசு சங்கிலித் தாக்கத்தின் மூலம்) பரம்பரையலகுத் தொடராக்கல் மூலம் உறுதிப்படுத்தலும்: தென்னை இலைவாடல் நோய்க்காரணியான பைற்றோபிளாஸ்மாவை உறுதிப்படுத்தலும். இவ்வகையான கற்கை தொடரப்படும்.

- கிரமமுறையில் வைரஸ் சுட்டியிடல் திட்டமானது DNA ஐ அடிப்படையாகக் கொண்ட தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படுகின்றது. இம்முறை மூலம் மொத்தமாக 876 மாதிரிகள் சுட்டியிடப் பட்டுள்ளன.

பிரயோகம்:- இந்தத் தொழில்நுட்பத்தை தொடர்ச்சியாக வைரஸ் சுட்டியிடலுக்குப் பயன்படுத்தலாம். அத்துடன் வைரஸ் அற்ற நடுகைப் பொருள் உற்பத்தியை ஊக்குவிப் பதற்கும் (விஷேடமாக தனியார் நிறுவனங் களினால்) தடுப்புக்காப்புத் தேவைகளுக்கும் பயன்படுத்தப்படும்.

- விவசாய அமைச்சினால் நிதியளிக்கப்பட்ட விசேட திட்டங்கள் (NARPP)

  பப்பாசியில் நோயாக்கிகளால் ஏற்படுத்தப் படும் நோய்களை இனங்காணலும் உணர் திறன் மிக்க கண்டுபிடிப்பு நுட்பங்களை விருத்தி செய்தலும்

வைரஸ் புறக்கவசவியல் (Epidemiology)

- வெப்பப் பரிகரிப்பு மூலம் அன்னாசி வாடல் வைரசினை முற்றாக அழித்தல். இந்தப் பரிசோதனைக்கு 60°C நீரில் 30 நிமிடங்கள் வரை அமிழ்த்தி வெப்பப் பரிகரிப்பு அளித்தலே மிகவும் பொருத்தமானதாகும். இந்த நுட்பத்தைப் பயன்படுத்தி ஏறத்தாள 6000 வைரஸ் அற்ற இழைய வளர்ப்பு அன்னாசித் தாவரங்கள் உற்பத்தி செய்யப் பட்டுள்ளன.

- வெப்பப் பரிகரிப்பிற்குட்பட்ட அன்னாசித் தாவரங்களின் கள மதிப்பீடு வைரஸ் சுட்டி யிடலின் பெறுபேறுகளின் பிரகாரம் எல்லாத் தாவரங்களும் வெளிக்கள நடுகையின் பின்னர் 1 – 1 ½ ஆண்டுகள் வரை வைரஸ் அற்றதாகக் காணப்பட்டன. இந்தப் பரிசோதனைக் காலத்தில் தாவரங்கள் நன்றாக வளர்வது அவதானிக்கப்பட்டது.

  பிரயோகம்: பரிகரிக்கப்பட்ட அன்னாசி உறிஞ்சிகள் விவசாயிகளின் வயல் நிலைமைகளில் சோதிக்கப்படும்.

- வர்த்தக ரீதியான பயிர்ச்செய்கைக்கு அன்னாசி இனம் மரியன்கோல்ட் 3 (Marian Gold 3 – MG3) ன் ஏற்றுக் கொள்ளும் தன்மை. MG3 – கியூ இனமானது, உள்ஞர் நிலைமைகளில் அதன் வளர்ச்சி இயல்புகள், பழத்தின் தரம் ஆகியவற்றின் சிறப்பு தன்மையின் காரணமாக வர்த்தக ரீதியான பயிர்ச்செய்கைக்கு வெற்றிகரமாகப் பயன் படுத்தப்படலாம்.

  பிரயோகம்: புதிய அன்னாசி இனத்தை பிரபல்யப்படுத்தலும் அதன் இசைவாக்கத்தை சோதித்தலும் ஆகும்.

- பப்பாசியில் தாக்கத்தையேற்படுத்தும் பப்பாசி வளையப்புள்ளி வைரஸை (PRSV) கட்டுப்படுத்துவதற்கு இஞ்சியுடன் கலப்புப் பயிர்ச்செய்கை மேற்கொள்வதுடன் வேப் பெண்ணையும் (2ml வேப்பெண்ணெய், 2ml சவர்க்காரக் கரைசல் (Tepol) / 1 l நீர்) பிரயோகிக்க முடியும். ஏனைய பரிகரிப்புகளை விட பப்பாசியை இஞ்சியுடன் கலப்புப் பயிராகப் பயிரிடும் போது குறைந்த அளவிலான நோய்த் தாக்கம் அவதானிக்கப் பட்டது. கட்டுப்பாட்டுடன் ஒப்பிடும் போது இஞ்சியுடன் கலப்புப் பயிராக உள்ள தாவரங்களிலும் வேப்பெண்ணெய் தெளிக்கப் பட்டவற்றிலும் நோய் அறிகுறிகள் தோன்றுவது தாமதமானது.

  பிரயோகம்: இந்தத் தொழில்நுட்பத்தை விவசாயிகளுக்கு வழங்குவதன் மூலம் அவர் களுடைய பப்பாசிச் செய்கையை PRSV ன் தாக்கத்திலிருந்து பாதுகாக்கலாம்.

- பப்பாசி வளையப்புள்ளி வைரசின் வெவ்வேறு கடத்தல் முறைகளையும் தெரிவு செய்யப்பட்ட பப்பாசி இனங்களில் பைற்றோ பிளாஸ்மா நோய்பற்றியதுமான கற்கை. பொறிமுறையான, ஒப்பீடுகள் மூலமான கடத்தலினால் பப்பாசி வளையப்புள்ளி வைரஸ் MS 100, சின்தா, ரத்னா, ரெட்லேடி, மற்றும் உள்ஞர் வர்க்கங்களுக்கும் கடத்த ப்படுகின்றது என்பது கற்கை மூலம் தெரிவி க்கப்படுகின்றது. மேலும் பப்பாசித் தாவர த்தின் அடித்தண்டில் காயம் ஏற்படுத்தப்பட்டு அதனூடாக பைற்றோபிளாஸ்மா வெற்றிக ரமாக உட்செலுத்தப்படலாம்.

ஏனைய நோய் விளைவிக்கும் அங்கிகள்

முளைக் கீரையில் (Thampala) மூலிகைச் சாற்றைப் பயன்படுத்தி Cercospora spp. இலைப்புள்ளி நோய்க்கான கட்டுப்பாட்டு முறை விருத்தி செய்யப்பட்டுள்ளது. தட்டுப்பரிசோதனை (Plate test) மீண்டும் மீண்டும் மேற்கொள்ளப்பட்டு பெறுபேற்றை உறுதி செய்து கொள்ள முடியும். இதனைத் தொடர்ந்து களப்பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும்.

பிரயோகம்: இரசாயனம் அற்ற இலை மரக்கறி உற்பத்தியை விவசாயிகள் மத்தியில் ஊக்கு வித்தல்.

- கறிமிளகாயில் ஏற்படும் அந்திரக்நோஸ் நோயை (Colletotrichum spp)மூலிகைச்சாறு மூலம் கட்டுப்படுத்தல். Colleto trichum spp ஐ 20% செறிவுள்ள இஞ்சிச் சாறு மிகவும் வினைத்திறனாகக் கட்டுப்படுத்தும் தட்டுப் பரிசோதனையை மீண்டும் மீண்டும் மேற்கொள்வதன் மூலம் பெறுபேற்றை உறுதிசெய்து கொள்ள முடியும். இதனைத் தொடர்ந்து களப் பரிசோதனை மேற்கொள்ளப்படும்.

  பிரயோகம்:- இரசாயனப் பாவனையை குறைப்பதற்கு விவசாயிகளை ஊக்குவித்தல்

- பல்லாண்டுத் தாவரங்களில் நோய், பீடையை கட்டுப்படுத்த மர உட்செலுத்திகள் பற்றி சோதனை மேற்கொள்ளல்.
  பிரயோகம்: சூழலுடன் நட்புறவான முறை களைப் பயன்படுத்தி நோய் பீடைகளைக் கட்டுப்படுத்தலாம் என்பதை அறிமுகப் படுத்தல்.

- கிரம முறையில் நோய்களைக் கண்டு பிடிக்கும் நிகழ்ச்சி;

  2011ம் ஆண்டு 143 ற்கும் அதிகமான நோய் மாதிரிகள் ஆராயப்பட்டு நோய்கள் கண்டு பிடிக்கப்பட்டு விவசாயிகளுக்கு வினைத் திறனான ஒன்றிணைந்த பீடை முகாமைத்துவம் (IPM) சார்ந்த தீர்வுத் திட்டம் வழங்கப்பட்டுள்ளது. மொத்தமாக சோதிக்கப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை 145 ஆகும்.

  பிரயோகம்: நோயைக் கண்டுபிடித்து கட்டுப் பாட்டு முறைகளை வழங்கல்.

இழைய வளர்ப்புப் பிரிவு

- விருத்தி செய்யப்பட்ட அந்தூரிய இனங்களை (Lady Jane) நுண் இனப்பெருக்க முறை மூலம் உற்பத்தி செய்வதற்கு இறுதிச் சுருக்க அறிக்கையை விருத்தி செய்தல். இந்தப் பரிசோதனை தொடரப்படும்.

- பப்பாசியை நுண் இனப்பெருக்க முறை மூலம் உற்பத்தி செய்வதற்காக பொருத்தமான இறுதிச் சுருக்க அறிக்கையினை அபிவிருத்தி செய்தல். இப்பரிசோதனை தொடரப்படும்.

- நாரத்தை இனமான "இந்து" (Indu) ல் பகுதி நுண் ஒட்டு முறை, (Semi Micro grafting) அத்துடன் வைரஸ், வைரஸ் சார்ந்த நோய்களைச் சுட்டியிடல். ஒட்டப்பட்ட தாவரங்கள் சோதனைக்குட்படுத்தப்பட்ட போது வைரஸ் அற்றவையாகக் காணப்பட்டன.

- MG3 அன்னாசி இனத்தின் வெவ்வேறு இழையங்களிலிருந்து (இலைகள், தாவரத் துண்டம்) இழைய வளர்ப்பு மூலம் வளர்க்கப்பட்ட தாவரங்களின் களநிலையில் வளர்ச்சி, விளைச்சல் மதிப்பீடு.
  இரண்டு வகையான தாவரங்களும் விரும்பத்தக்க வளர்ச்சியை காண்பித்ததுடன் 9 மாதங்களின் பின்னர் எவ்விதமான பரிகரிப்பும் இன்றி பூக்களைத் தோற்று வித்தன. மேலும் எவ்விதமான அசாதாரண பழங்களும் அவதானிக்கப்படவில்லை. இந்த ஆராய்ச்சி தொடரப்படும்.

- நுண் இனப்பெருக்கம் மூலம் கோழிக்கூடு வாழை இனத்தை இனப்பெருக்குவதற்கான பொருத்தமான இறுதி அறிக்கையின் சுருக்கத்தை கண்டறிதல். இந்தக் கற்கை தொடரப்படும்.

- இழைய வளர்ப்பின் மூலம் இனப்பெருக்கப் பட்ட வாழை, அன்னாசி என்பன வற்றுக்கான கள மதிப்பீடு.

  இந்தக் கற்கையானது நுண் இனப் பெருக்கத்தின் மூலம் உற்பத்தியாக்கப்பட்ட வாழை, அன்னாசி தாவரங்களின் வளர்ச்சி, விளைச்சல் என்பவற்றினை மதிப்பீடு செய்வதற்காக மேற்கொள்ளப்பட்டது. வாழையின் வளர்ச்சி, விளைச்சல் குறிகாட்டிகள் வாழை வர்க்க ங்களான ஸ்கவண்டிஸ் குள்ளம், புளிக்கதலி, ஆனைவாழை, Binkesel, சீனி வாழை, புளதிசி, சாம்பல் வாழை, கோழிக் கூடு அம்பன் என்பன சிறந்த வளர்ச்சி, விளைச்சல் செயற்திறனையும் BSV இன் அறிமுகம் அற்றதாகவும் காணப்பட்டன.

- இழைய வளர்ப்பின் மூலம் இனவிருத்தி செய்யப்பட்ட மொறிசியஸ் அன்னாசி இனத்தின் வளர்ச்சி, விளைச்சல் குறிகாட்டிகள்.

  - இப்பரிசோதனைக் காலத்தினுள் தாவரங்கள் சிறந்த வளர்ச்சியை காண்பித்தன.

  - கள நடுகை இடம்பெற்று 10 மாதங்களின் பின்னர் பூக்களைத் தோற்றுவித்தது.

  - பழமொன்றின் சராசரி நிறை 1.78Kg.

  - எவ்விதமான உருபவியல் வேறு பாடுகளும் வெளிக்காட்டப்படவில்லை.

  - இவ்வகையான பரிசோதனை தொடரப் படும்.

  - நுண் இனவிருத்தி முறை மூலம் வாழை, அன்னாசி நடுகைப் பொருட்களின் உற்பத்தி.

அம்பன், புளிக்கதலி, சீனிக்கதலி ஆகிய வாழை இனங்களின் தனித் தாய்த்தாவரம் ஒன்றிலிருந்து 400-500 தாவரங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டன. மேலும் அங்கவியாறு, நேத்ரம்பழம் இனங்களின் தனித்தாய்த்தாவரம் ஒன்றிலிருந்து 500-600 தாவரங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டது. எனினும் கோழிமுத்து இனத்தின் பல்மடங்காகும் வீதம் ஏனைய இனங்களுடன் ஒப்பிடும் போது குறைவானது. அன்னாசி இனம் மெறிசியஸில் இருந்து சராசரியாக 1000 தாவரங்கள் உற்பத்தி செய்யப்பட்டன.

தொழில்நுட்பப் பரிமாற்றம் (Technology Transfer)

புதிய தொழில்நுட்பத்தை பரப்புவதற்காக 17 பயிற்சி வகுப்புக்கள் விவசாயிகள், விவசாய சம்மேளனங்கள், ஆசிரியர்கள், இளைஞர் களகங்களில் உள்ள மாணவர்கள், பாடசாலைச் சிறார்கள், பல்கலைகழக மாணவர்கள் ஆகியோருக்கு நடாத்தப்பட்டது. இந்த வருடம் 03 வானொலி நிகழ்ச்சிகள், ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சி, 08 புதினப் பத்திரிக்கைக் கட்டுரைகள், 03 பாடசாலை வீட்டுத் தோட்டங்கள், முல்லே கமவில் ஒரு மாதிரிக்கிராமம், 50 கள விஜயங்கள், 03 தாவரச் சிகிச்சை நிலையங்கள் நடாத்தப்பட்டன. அத்துடன் இந்நிலையங்களுக்கு பயிர்ச் செய்கையுடன் சம்பந்தப்பட்ட வெவ்வேறு பிரச்சினைகளுடன் விஜயம் செய்த 130 விவசாயிகளுக்கு/ பயிர்ச் செய்கையாளர்களுக்கு அவர்களுடைய பிரச்சினைகள் தொடர்பான ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.

இந்நிலையத்தில் நகர விவசாய மாதிரி ஒன்றும் வீட்டுத் தோட்ட மாதிரி ஒன்றும் பராமரிக்கப் படுகின்றது. உலக சுற்றாடல் தினத்தையொட்டி நடாத்தப்பட்ட 'டில்லியின் நாகரிக வர்த்தக மையம்'' கண்காட்சி, மஹரகமவில் கமநல சேவைகள் அமைச்சினால் நடாத்தப்பட்ட கண்காட்சி, பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் CARP ன் விருது வழங்கல் வைபவத்திற்காக நடாத்தப்பட்ட கண்காட்சி, நெய்வளவில் NITA னால் ஒழுங்கு செய்யப்பட்ட கண்காட்சி என்பன இந்நிலையத்தால் நடாத்தப் பட்டவை ஆகும்.

2012 ஆம் ஆண்டிற்கான திட்டம்

பராம்பரிய தாவர வைரசியல்

- வாழையில் கொத்துநுனி வைரசிற்கான (BBTV) பல்முளைய எதிர்திரவ இழைய உற்பத்தி
- பப்பாசியில் வைரஸ், வைரஸ் போன்ற நோய்களை திரவ இழையவியல் நுட்பத்தைப் பயன்படுத்தி இனங்காணல்
- தென்னை தவிர்ந்த ஏனைய விவசாயப் பயிர்களில் பைற்றோபிளாஸ்மா நோயை இனங்காண, உள்ளூரில் தயாரிக்கப்பட்ட வெலிகம இலை வாடல் நோய்க்கான எதிர்த்திரவ இழையத்தைப் பயன்படுத்தல்.
- ELISA நுட்பத்தினைப் பயன்படுத்தி பூசணித் தாவரங்களின் கலப்பின விதைகளில் வித்தில் பிறந்த வைரசு நோய்களை இனங்காணல்
- திரவ இழையவியல் நுட்பத்தைப் பயன் படுத்தி பகுதி நுண் ஒட்டு நாரத்தையில் சித்தரசு ரிஸ்ரெஸ்சா (Tristeza) வைரசையும் சித்திரசு பச்சையாக்கும் பற்றீரியாவையும் இனங்காணல்
- அந்தூரியத்தில் வெளிறல் நோய்க்கான உள்ளூரில் தயாரிக்கப்பட்ட பல்முளைய வகை எதிர்த் திரவ இழையத்தின் வினைத் திறனை மதிப்பீடு செய்தல்
- தொகுதி எதிர்ப்புத் தன்மையை தூண்டு வதற்கு றைசோபற்றீரியாவை பிரயோகித்தல்
- கிரமமுறையிலான நோயாக்கிகளை சுட்டிக் காட்டலும் சோதனை அறிக்கையை விநியோகித்தலும்.

மூலக்கூற்று வைரசியல்

- பகுதி நுண் ஒட்டு நாரத்தையில் சித்தரசு Tristeza வைரசையும் சித்திரசு பச்சையாக்கும் பற்றீரியாவையும் திரவ இழையவியல் நுட்பத்தைப் பயன்படுத்தி சோதித்தல்.
- உருளைக்கிழங்கு செய்கை பண்ணப்படும் இடங்களில் உருளைக்கிழங்கு வைரசிற்கான (PVY) ஆய்வினை மேற்கொள்வதற்காக விருத்தி செய்யப்பட்ட RT-PCR நுட்பத்தைப் பிரயோகித்தல்.
- உருளைக்கிழங்கு இலைச்சுருளல் வைரஸ் மற்றும் உருளைக்கிழங்கு பயிர்ச் செய்கை யிலுள்ள PVX ஆகியவற்றை இனங்காணல்.
- சித்தரசு இனங்களில் வைரஸ், வைரொயிட் நோய்களை மீள் மொழிபெயர்ப்பு பொலிமரேசு சங்கிலித் தாக்கத்தின் மூலம் இனங்காண்பதுடன் பல்லின RT-PCR ஐ விருத்தி செய்தல்.
- பப்பாசியில் நோயாக்கிகளால் ஏற்படுத்தப்படும் நோய்களை இனங்காண்பதுடன் உணர் திறன்மிக்க அடையாளப்படுத்தும் நுட்பங்களை விருத்தி செய்தல்.
- ஏற்கனவே அடையாளப்படுத்தப்பட்ட வைரசை PCR மூலம் சோதித்தலும் பரம்பரையலகுத் தொடரை உறுதிப்படுத்தலும்.
- PCR ஐ அடிப்படையாகக் கொண்ட முறை மூலம் தென்னையில் இலை வாடல் நோய்க்கான விருந்து வழங்கியின் பரந்து பட்ட வீச்சினை அறிவதற்கான கற்கை.
- PCR முறைமூலம் கிரமமுறையில் வைரஸை சுட்டியிடலும் சோதனை அறிக்கைகளை விநியோகித்தலும்.

வைரஸ் புறக்கவசவியல்

- வெப்பத்தினால் பரிகரிக்கப்பட்ட இழைய வளர்ப்பு அன்னாசியை விவசாயிகளின் வயலில் (அறங்கல, வெலிசற, வட்டுவ) மதிப்பீடு செய்தலும் அன்னாசி வாடல் வைரஸ் நோயைக் கண்காணித்தலும்.
- இரசாயனம் அற்ற முறையைப் பயன்படுத்தி பூசணி வைரஸ் நோயை முகாமைத்துவம் செய்தல்

- புதிதாக வெளியிடப்பட்ட பப்பாசி இனத்தின் (MS100) வைரஸ் சகிப்புத்தன்மை சம்பந்தமான கள மதிப்பீடு

- பொதுவான வைரஸ் நோய்களை அதிகளவில் காவும் காவிகளை இனங்காணல் (பப்பாசியில் வளையப்புள்ளி நோய், வாழையில் கொத்துமுனை வைரஸ், வெண்டியில் நரம்பு வலை சித்திரவடிவ வைரஸ், மரவள்ளி சித்திரவடிவ வைரஸ் போன்றன)

- ஆய்வுகூட முறைகள் மூலம் நெமற்றோடாக்கள் வைரசுக்காவிகளாக உள்ளது என்பதை இனங்காணல்

- பயிர்செய்வோரிடையே வைரஸ் காட்டுபாட்டு தந்திரோபாயங்களைப் பரவச் செய்தல் (பப்பாசி வளையப்புள்ளி வைரஸ், வாழை கொத்துமுனை வைரஸ், பூசணி வைரஸ் நோய், மரவள்ளி சித்திரவடிவ வைரஸ், அத்துடன் அன்னாசி வாடல் வைரஸ்)

ஏனைய நோயாக்கி அங்கிகள்

பொருத்தமான இரசாயனங்களைப் பயன்படுத்தி பல்லாண்டுத் தாவரங்களில் பீடை, நோய்த் தாக்கங்களை கட்டுப்படுத்துவதற்காக மர உட்செலுத்திகளைப் பரிசோதித்தல்

- மூலிகைச் சாற்றைப் பயன்படுத்தி கறிமிளகாயில் அந்திரக்நோஸ் நோயைக் கட்டுப்படுத்தல்

- ஏனைய நோயாக்கி அங்கிகளை இனங் காணலும் பரிசோதனை அறிக்கைகளை விநியோகித்தலும்.

இழைய வளர்ப்பு

"கோழிக் கூடு" வாழை இனத்தின் நுண் இனப்பெருக்க முறைக்கான பொருத்தமான இறுதி அறிக்கையின் சுருக்கம் ஒன்றினை வெவ்வேறு வளர்ச்சி ஓமோன்களைத் திறமையுடன் கையாள்வதன் மூலம் இனங்காணல்

- நுண் இனப்பெருக்க முறைமூலம் தெரிவு செய்யப்பட்ட அந்தூரியம் இனங்களை பல்மடங்காக்கல் (Lady Jane, Kirimatiya தெரிவு போன்றன)

- நுண் இனப்பெருக்க முறை மூலம் பப்பாசிக்கான பொருத்தமான இறுதி அறிக்கையின் சுருக்கம் ஒன்றினை விருத்தி செய்தல்

- 20,000 இழைய வளர்ப்பு வாழைக்குட்டிகளை உற்பத்தி செய்தல், (அம்பன், கோழிக்கூடு, சீனிக்கதலி, நேத்ராம்பாலம், அங்கவியாறு, புளிக்கதலி) அத்துடன் 50,000 அன்னாசித் தாவரங்களை உருவாக்கல் (MG3, மொறிசியஸ்)

- நாரத்தை இனமான இந்துவில் பகுதி நுண் ஒட்டுமுறையும், வைரஸ், வைரஸ் போன்ற நோய்களை சுட்டியிடலும்.

- அன்னாசியில் MG3, இனத்தினது வெவ்வேறு இழையங்களிலிருந்து (இலைகள், தாவரத் துண்டம்) இழைய வளர்ப்பு மூலம் பெறப்பட்ட தாவரங்களின் வளர்ச்சி, விளைச்சல் செயற்திறன்களை களத்தில் மதிப்பீடு செய்தல்

- விவசாயிகளின் கள நிலைமைகளில் இழைய வளர்ப்பின் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட வாழை, அன்னாசி, தாவரங்களை மதிப்பீடு செய்தலும் வைரசிற்கான கட்டுபாட்டு முறைகளை நடைமுறைப்படுத்தலும்.

தொழில்நுட்பப் பரிமாற்றம்

- பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை மேற்கொள்ளல் (அலுவலகர்களுக்கான, விவசாய சம்மேளங்களுக்கான பயிற்சி, பல்கலைக்கழக / பாடசாலை / ஏனைய மாணவர்களுக்கான பயிற்சியும் அறிவு மேம்பாடும், அத்துடன் தாவரச் சிகிச்சை நிலையங்கள், களச் சோதனை, வானொலி

நிகழ்ச்சிகள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், கள முயற்சிகள்)

- வீட்டுத் தோட்டம், பயிர்ச் செய்கை நிலங்களுக்கான கள விஜயம்
- பத்திரிக்கையில் கட்டுரைகளைப் பிரசுரித்தல்.
- நகர விவசாயம், வீட்டுத் தோட்ட மாதிரிகள்.
- விசேட நிகழ்ச்சிகள் (மாதிரிக் கிராம முன்மாதிரிச் செய்கைகள்), சமூகத்தினை அடிப்படையாகக் கொண்ட விதை மற்றும் நடுகைப் பொருள் உற்பத்தி.
- PVIC நிலத்தில் (1.5Ac) மரக்கறிப் பயிர்ச் செய்கை ஊக்குவிப்பு.
- வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்.
- கண்காட்சி அலகினைப் பராமரித்தல்.

- தயகமவில் உள்ள மகிந்த ராஜபக்ஷ விளையாட்டுக் கட்டடத் தொகுதியில் விவசாய நிகழ்ச்சி.

உத்தியோகத்தர் பட்டியல்

பதவியணி	எண்ணிக்கை
ஆராய்ச்சி உத்தியோகத்தர் பொறுப்பதிகாரி	01
ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள்	05
விவசாய கண்காணிப்பு உத்தியோகத்தர்	01
நிகழ்ச்சிதிட்ட உதவியாளர்கள்	05
ஆராய்ச்சி உதவியாளர்கள்	04
விவசாயப் போதனாசிரியர்கள்	09
முகாமைத்துவ உதவியாளர்கள் சேவை	03
களஞ்சியப் பொறுப்பாளர்	01
சாரதி	02
கூலித் தொழிலாளர்கள்	03
கூலித் தொழிலாளர் (ஒப்பந்த அடிப்படை)	11
காவலாளி	02
மொத்தம்	**47**

2.2.2. பழப்பயிர்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் (FCRDC), ஹொரணை

பழப்பயிர்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் அடிப்படை நோக்கம் எமது நாட்டில் பழப்பயிர்களின் உற்பத்தித் திறனையும் மற்றும் உற்பத்தியையும் அதிகரிப்பதற்காக பொருத்தப்பாடுடைய தொழில்நுட்பங்களை விருத்தி செய்வதாகும். இந்நிலையமானது (FCRDC) தாழ்நில ஈரவலயத்திற்குப் (LCWZ) பொருத்தப்பாடுடைய பயிர்களில் விசேட கவனத்தைச் செலுத்துகிறது. தற்போதைய ஆய்வு நிகழ்ச்சியானது குறிப்பாக கூடிய விளைவு தரும் உயர் தர பயிர் இனங்களை விருத்தி செய்தல், முன்னேற்றகரமான பயிர் முகாமைத்துவ நடவடிக்கைகள், பயிர்பாதுகாப்பு, பயிர்ப்போசணை, சேதனப் பழப்பயிர்ச் செய்கை மற்றும் நடுகைப் பொருள் உற்பத்தி போன்ற பொருத்தப்பாடுடைய துறைகளில் கவனம் செலுத்தப்படுவதாக அமைகிறது. தாழ்நில ஈரவலயத்தில் உள்ள விவசாயிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக இந்நிலையமானது இப்பிர தேசத்திற்குப் பொருத்தமான மரக்கறிப்பயிர்கள் சம்பந்தமான ஆய்வு நடவடிக்கைகளிலும் ஈடுபடு கின்றது.

பாதீடு

அட்டவணை 2.2.2.1: வருடாந்தப் பாதீடு 2011 (ரூபா)

செலவு விடயம்	ஒதுக்கீடு	செலவு	செலவு%
மூலதனச் செலவு	930,000	1,428,179	154
மீண்டுவரும் செலவு	7,092,945	5,806,516	82
சேதனப்பசளை உற்பத்தியும் பாவனையும்	977,470	877,037	90
ஹொரணையில் அயனமண்டலப் பயிர்களிற்கான உயிர்ப்பல்வகைமைத் தோட்டத்தை நிறுவுதல்.	6,621,000	6,232,380	94
உயர் விளைச்சலும் நல்ல தரமும் உடைய பப்பாசி இனங்களை விருத்தி செய்தல்.	400,000	153,053	38
இழைய வளர்ப்பின் மூலம் முக்கியமான பயிர்களின் நடுகைப் பொருட்களை விருத்தி செய்தல்.	4,200,000	3,551,004	85
கலப்பின விதை விருத்தி (வெண்டி)	325,000	250,588	77
மாவில் விளைவு மற்றும் தரம் என்பவற்றை விருத்தி செய்தல்.	1,000,000	827,820	83
தோடை மற்றும் நாரத்தை என்பவற்றின் வர்க்கங்களையும் வேறுபட்ட முகாமைத்துவத்தையும் மதிப்பிடல்.	400,000	244,927	61
வர்த்தகப் பயிர்ச்செய்கைக்காக உன்னதமான தூரியன் வர்க்கங்களை விருத்தி செய்தல்.	300,000	195,813	65
உயர் விளைவு, நோய் சகிப்பு மற்றும் உவர் சகிப்பு என்பவற்றிற்காக வாழையை மதிப்பீடு செய்தல்.	100,000	89,483	89
மொத்தம்	**21,586,415**	**19,100,872**	**88**

முன்னேற்றம்

பயிர் மேம்பாடு

"சீத்தா (Sour – Sop) இன் முலவுயிருகு மதிப்பீடு

சீதாப் பழமானது கூடிய போசணைப் பெறுமான முள்ள நன்கு அறியப்பட்ட ஓர் பழமாகும். பழப் பயிர் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தில் சேகரிக்கப்பட்ட பேதங்களுள் மேன்மையான இயல்புகள் இனங்காணப்பட முடிந்தன. இதனால் உன்னதமான பேதங்களைச் தெரிவு செய்யும் நோக்குடன் 2007 ம் ஆண்டில் கற்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

2007-2011 காலப்பகுதியில் பத்து சீத்தா பேதங்களில் நான்கு மேன்மையான பேதங்கள் இனங்காணப்பட்டன. அவற்றுள் சுவையான சாற்றுப் பிடிப்பான சதையைக் கொண்ட உயர் தரமான கூடுதலான சீனி தேறும் வீதத்தைக் கொண்ட (Brix value) ஓர் பேதம் தெரிவு செய்யப்பட்டது. தெரிவு செய்யப்பட்ட பேதமானது அதன் 7 வருட வயதில் சராசரி விளைவாக 26 பழங்கள்/ மரம் (24.9 கி.கி) உற்பத்தி செய்யக் கூடியதாக இருந்தது.

"சிறந்த தரமான கூடிய விளைவுடைய பப்பாசி இனங்களை விருத்தி செய்தல்" எனும் கருத்திட்டத்தினால் நிதி வழங்கப் பட்ட நிகழ்ச்சித் திட்டம்.

பப்பாசி இனங்களை விருத்தி செய்தல்

சிறந்த தரமான கூடிய விளைவுடைய பப்பாசி இனங்களை விருத்தி செய்வது என்பது FCRDC, இன் பப்பாசி இனவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் பிரதான நோக்கமாகும். இரண்டிற்கும் அதிகமான கருத்திற் கொள்ளப்பட்ட இயல்புகளைக் காட்டிய எட்டு இனங்கள் வேறுபட்ட இடங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்டன. அவற்றின் விதைகளைப் பயன்படுத்தி 150 தாவரங்களைக் கொண்ட ஓர் அடிப்படைக் குடித்தொகை உருவாக்கப்பட்டது. இரண்டாம் சந்ததியை விருத்தி செய்வதற்கான தனியன்களைத் தெரிவு செய்வதற்காக இது உருவாக்கப்பட்டது.

"உயிர்ப் பல்வகைமையான பழத் தோட்டம்" கருத்திட்டத்தினால் நிதி வழங்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டம்

கலப்புப் பிறப்பாக்கப் பப்பாசியின் மதிப்பீடு

உள்ஞர்ப் பப்பாசி இனங்களைப் பயன்படுத்தி இரண்டு உள்ளகக் கலப்பின (CP-1, CP-13) பப்பாசி விருத்தி செய்யப்பட்டதுடன் இப்புதிய உள்ளகக் கலப்பினங்களையும் ரத்னாவையும் பயன்படுத்தி நான்கு உயர்கலப்புப் பிறப்பினங்கள் விருத்தி செய்யப்பட்டன. இந்நான்கு கலப்புப் பிறப்பினங்களும் மூன்று பெற்றோர்களுடனும் ஓர் கட்டுப்பாட்டு இனத்துடனும் (ரெட் லேடி) ஓர் மீளச் செய்யப்பட்ட பரீட்சார்த்தத்தினூடாக மதிப்பிடப்பட்டன. பெற்றோரைப் பிரதிபலித்த இரண்டு கலப்பினங்கள் சிறந்தவையாகத் தெரிவு செய்யப்பட்டன. விளைவு மற்றும் தரம் போன்ற இயல்புகள் ஒப்பீட்டளவில் பெற்றோர் மற்றும் கட்டுப்பாட்டு இனம் என்பவற்றை விட உயர்வானதாக இருந்தன. ஈரவலயத்தில் விளைவானது பெரும்பாலும் 50 கி.கி/ தாவரம்/ வருடம் ஆகவும் ஓர் பழத்தின் சராசரி நிறை 1.5 கி.கி. அளவும் இருந்தது. பழங்கள் நடுத்தரமான மென்மையான, சிவப்பு நிறமான சதையையும் உயர் சீனிதேறும் வீதத்தையும் (Brix value) கொண்டிருந்ததுடன் வெளித்தோலானது கொண்டு செல்லலுக்கு ஏற்ற போதியளவான தடிப்பையும் கொண்டிருந்தது. 2012ம் ஆண்டில் இலங்கையில் வேறுபட்ட விவசாய சூழலியல் பிரதேசங்களில் இனக்கலப்பின் நடத்தைகளை மதிப்பீடு செய்வதற்காக பெற்றோர் தாவரவம்சம் பெருக்கப்பட்டதுடன் கலப்பின உருவாக்கமும் மேற்கொள்ளப்பட்டது.

கொடித்தோடை வர்க்கங்களின் விருத்தி

கொடித்தோடையின் செயற்கையான வர்க்க விருத்தி என்பது கொடித்தோடை வர்க்கங்களை

விதை மூலம் விநியோகிக்கும் ஓர் வழி முறையாகும். இது வெட்டுத் துண்டங்களினூடாக பரம்பலடையும் வைரஸ் வட்டத்தை உடைப்பதற்கு உதவுவதுடன் வர்த்தக ரீதியான வர்க்கங்களில் விருப்பத்திற்குரிய இயல்புகளைச் சேர்ப்பதற்கும் உதவுகிறது. அதனால் FCRDC இல் கொடித் தோடை விருத்தி நிகழ்ச்சியானது செயற்கையான முறையில் கொடித்தோடை வர்க்கங்களை உருவாக்குவதற்கு கூடிய முயற்சியை வழங்கியது.

செயற்கை முறையிலான விதை உற்பத்தியில் முதலாம் சந்ததி 2011ம் ஆண்டு காலப்பகுதியில் நிறைவு செய்யப்பட்டதுடன் இரண்டாம் சந்ததி யானது மேலதிக விருத்தி மற்றும் பெருக்கம் என்பவற்றிற்காக ஸ்தாபிக்கப்பட்டிருந்தது.

மாவின் கலப்பினங்களை மதிப்பீடு செய்தல்

மாவின் கலப்பின விருத்தியானது தற்போது பயிரிடப்படுகின்ற வர்க்கங்களுடன் விருப்பத்திற் குரிய தரத்திற்கான இயல்புகளை சேர்க்கின்ற நோக்கத்துடன் 2007ம் ஆண்டு ஆரம்பிக்கப் பட்டது. பெற்றோர் தாவரங்களாக கறுத்தக் கொழும்பான், வெள்ளைக் கொழும்பான், விலாட் மற்றும் நமடொக்மாய் (Nama docmai) என்பன பயன்படுத்தப்பட்டன. இரண்டு கால போகங்களிற்கு இத்தாய்த் தாவரங்களின் பூக்களின் உயிரியல் கற்றறியப்பட்டது. இப்பெற்றோர்த் தாவரங்கள் இனங்கலக்கப்பட்ட துடன் ஏழு கலப்பின நாற்றுக்கள் உயிர்வாழ முடிந்ததுடன் தற்போது அவை தோட்டத்தில் மதிப்பீடு செய்யப்பட்ட வண்ணம் உள்ளன. இவை பல வருடங்களிற்கு தோட்டத்தில் பராமரிக்கப்பட வேண்டியுள்ளதால் நாற்றுக்களின் கலப்புப் பிறப்பு என்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும். அதனால் PGRC இன் ஒத்துழைப்புடன் கலப்புப் பிறப்பென்பது DNA பகுப்பாய்வின் மூலம் உறுதிப்படுத்தப்படும்.

வர்த்தகப் பயிர்ச்செய்கைக்கான உன்ன தமான தூரியன் வர்க்கங்களை விருத்தி செய்யும் நிகழ்ச்சி

உள்ளூர் தூரியன்களை சேகரித்தல், மதிப்பீடு செய்தல், மற்றும் தெரிவு செய்தல்.

68 வர்க்கங்களுள் உயர்வான 4 வர்க்கங்கள் விவசாயிகளின் பயிர்ச்செய்கைக்கு வெளியீடு செய்வதற்காக தெரிவு செய்யப்பட்டன. ஒட்டுத் தாவரங்கள் வயற் சோதனைக்காக உற்பத்தி செய்யப்படுகின்றன. மூன்று மூலவுயிருருக்கள் தெரிவு செய்யப்பட்டு FCRDC இன் கரு வள வங்கியில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன் இரண்டு மூலவுயிருருக்கள் ஸ்தாபிக்கப்பட இருக்கின்றன. ஆறு உயர் வர்க்க தூரியன்களின் இயல்புகளை மதிப்பிடுதல் நடைபெற்ற வண்ணமுள்ளது.

வர்த்தகப் பயிர்ச்செய்கைக்காக F_1 கலப்பின, தூரியன் விருத்தி

750 F_1 தூரியன் தோட்டத்தில் ஸ்தாபிக்கப்பட்டு ள்ளதுடன் 150 F_1 தூரியன்கள் நடுகை செய்யப்படவுள்ளன.

தேசிக்குடும்பப் பயிர் வர்க்கங்களினதும் வேறுபட்ட முகாமைத்துவ முறைகளின தும் மதிப்பீட்டு நிகழ்ச்சி

உள்ளூர் தேசியினங்களை சேகரித்தல், மதிப்பீடு செய்தல் மற்றும் தெரிவு செய்தல்.

மூன்று சிறந்த நாரத்தை வர்க்கங்கள் தெரிவு செய்யப்பட்டு வேறுபட்ட விவசாய சூழலியல் வலயங்களில் மதிப்பீட்டின் கீழ் உள்ளன.

- நான்கு நாரத்தை வர்க்கங்கள், இரண்டு புமிலோ வர்க்கங்கள். ஒரு திராட்சைப்பழ வர்க்கம் நான்கு எலுமிச்சை வர்க்கங்கள் என்பன வெவ்வேறு பிரதேசங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்டு களக் கருவள வங்கியில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

உயர் விளைவுடைய நல்ல தரமுடைய இனிப்புத் தோடை மற்றும் நாரத்தை என்பவற்றின் F_1 கலப்பின விருத்தி

150 இனக்கலப்பு மேற்கொள்ளப்பட்டு 50 F_1 கள் வெற்றிகரமாக கள மதிப்பீட்டில் இருந்தன.

உயர்விளைவுடைய நல்ல தரமான விகாரமுடைய தேசிக்குரும்ப நூற்றுக்கள் விருத்தி

விகாரப்படுத்தப்பட்ட F_1 சந்ததி கள மதிப்பீட்டின் கீழ் உள்ளது.

ஜப்பானில் இருந்து அறிமுகப்படுத்தப்பட்ட தோடை மற்றும் நாரத்தை ஆகியவற்றின் வர்க்கங்களின் மதிப்பீடு

நாட்டின் எட்டு வேறுபட்ட விவசாய சூழலியல் வலயங்களில் வர்க்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டதுடன் இசைவாக்கத்திற்காக அவை மதிப்பீடு செய்யப் படுகின்றன. மூன்று உன்னதமான நாரத்தை வர்க்கங்கள் வேறுபட்ட விவசாய சூழலியல் வலயங்களில் பரீட்சிக்கப்படுகின்றன.

குறைந்தளவிலான பயன்பாட்டில் உள்ள பழப்பயிர்களின் மூலவுயிருருச் சேகரிப்பு, பாதுகாப்பு, இயல்பறிதல் மற்றும் மதிப்பீடு

இந்நிகழ்ச்சியானது 2002ம் ஆண்டின் பிற் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டு 2008ம் ஆண்டு முடிவுறுத்தப்பட்டது. இதற்காக 3.73 ஹெக்டயர் பரப்பளவில் 303 தெரிவு செய்யப்பட்ட பயிர்கள் களக்கரு வள வங்கியில் (Field Gene Bank) ஸ்தாபிக்கப்பட்டன. இக்கருவள வங்கியானது 24 பெலியையும் 47 தேசியையும் 05 லாவுலையும் 04 லொவியையும் 32 பலாவையும் 17 வெரலுவையும் 22 உக்குரசவையும் 33 கொரக்காவையும் 13 கடுகுடாவையும் 35 தூரியனையும் 17 சபொடில்லாவையும் 14 அன்னமுன்னாவையும் 26 வக்ஸ் அப்பிளையும் 07 ஸ்ரோபரிக் கொய்யாவையும் 07 காட்டுக் கொய்யாவையும் கொண்டிருந்ததுடன் இயல் பறிதல் மற்றும் மதிப்பீடு செய்தல் என்பன உன்னத வர்க்கங்களை சிபார்சு செய்வதற்காக கண்டறியும் பொருட்டு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சபொடில்லா *(Manilkara zapota)*

FCRDC இல் சேகரிக்கப்பட்ட 17 தேர்வுக்குரிய தாவரங்களைக் கொண்டு 2007 ம் ஆண்டு பரிசோதனை ஆரம்பிக்கப்பட்டது. எல்லாத் தேர்வுத் தாவரங்கள் மற்றும் தாய்த் தாவரங்களிலும் வளர்ச்சித் தன்மை, விளைவு, பழத்தின் தரம், பருமன் வடிவம் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன. எல்லா (17) தேர்வுத் தாவரங்களுள்ளும் HOS 2, HOS 12, மற்றும் HOS 13 என்பன ஒப்பீட்டளவில் கூடிய விளைவையும் வீரியமான வளர்ச்சியையும் கொண்டிருந்தன. HOS 2 கூடுதலான பழப் பருமனுடன் 21° TSS (மொத்தமாக கரையும் திண்மம்) ஐயும் HOS 12 மற்றும் HOS 13 என்பன 20° மற்றும் 17° TSS என்பவற்றையும் முறையே சராசரிப் பருமனுடன் கொண்டிருந்தன. எல்லாப் பழங்களும் இனிப்புச் சுவை உடையன வாகவும் குறைவான அமிலத்தன்மை கொண்ட னவாகவும் இருந்தன. HOS 2, HOS 12, மற்றும் HOS 13 என்பன வெளியீட்டிற்காகப் பிரேரிக்கப் பட்டுள்ளன.

வெரலு *(Elaeocarpus serratus)*

விவசாயிகளின் தோட்டங்களில் இருந்து சேகரிக்கப்பட்ட 13 தேர்வுத் தாவரங்கள் களக் கருவள வங்கியில் ஆப்பொட்டு தொழில் நுட்பத்தின் மூலம் இனப்பெருக்கப்படுகிறது. 2003ம் ஆண்டு தொடக்கம் 2010ம் ஆண்டு வரை அவற்றில் வளர்ச்சித் தன்மை, விளைவு, பழத்தரம் மற்றும் பழத்தின் பருமன் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன. ஸ்தாபித்தலில் இருந்து மூன்றாம் வருடத்தில் காய்க்கத் தொடங்கியதுடன் HOW 3, 4, 5, 7, 12 மற்றும் 13 என்பன கூடிய விளைவைத் தரவல்லனவாகக் காணப்பட்ட அதே நேரம் HOW 19 என்பது நடுத்தரமானதாகவும் HOW 1 குறைவானதாகவும்

காணப்பட்டது. HOW 13, 7, 9 மற்றும் 5 என்பன ஏற்றுக்கொள்ளக் கூடிய நல்ல தரத்தைக் கொண்டிருந்தன. HOW 13 ஒப்பீட்டளவில் கூடுத லான மொத்தமாகக் கரையும் திண்மத்தையும் (TSS) குறைந்த அமிலத் தன்மையையும் கொண்டிருந்ததுடன் ஒப்பீட்டளவில் இனிப்பிற்கும் அமிலத்தன்மைக்கும் இடையிலான நல்ல சம நிலையையும் கொண்டிருந்தது. பழங்கள் நடுத்த ரப் பருமனுடையதாக காணப்பட்டன. HOW 7 ஆனது ஒப்பீட்டளவில் நடுத்தரப் பருமனுடைய பழங்களைக் கொண்டிருந்தது. இப்பழங்கள் நடுத்தர அமிலத் தன்மை, குறைந்தளவான இனி ப்பு என்பவற்றுடன் சீரான மேற்பரப்பு நிறத்தையும் கொண்டிருந்தது. HOW9 ஆனது சாதாரண இனி ப்பையும், குறைவான அமிலத் தன்மையையும் சராசரிப் பருமனையும் கொண்டுள்ளதுடன் ஏனைய தேர்வுத் தாவரங்களுடன் ஒப்பிடுகையில் மாப்பொருள் நிறைந்த சதையையும் கொண்டு ள்ளது. பழமானது கடும் நிறத்தைக் கொண்டு ள்ளதுடன் இதன் மேற்பரப்பு நிறமானது கூடுத லான அளவு சீரானதாகக் காணப்படுகிறது. HOW5 ஆனது ஒப்பீட்டளவில் பெரிய பழங்க ளைக் கொண்டிருப்பதுடன் இதன் மேற்பரப்பு சீரான நிறத்தைக் கொண்டது. அத்துடன் கூடிய சந்தைப் பெறுமானத்தையும் காட்டுகிறது. இது நடுத்தரமான புளிப்பையும் மாப்பொருளையும் கொண்டுள்ளதுடன் குறைந்தளவான மொத்த மாகக் கரையும் திண்மத்தையும் (TSS) கொண்டு ள்ளது. HOW 5, 7, 9 மற்றும் 13 ஆகியன வெளியீட்டிற்காக பிரேரிக்கப்பட்டுள்ளன.

கொரக்காவிற்கான முலவுயிருருச் சேகரிப்பு, பாதுகாப்பு, இயல்பறிதல் மற்றும் மதிப்பீடு செய்தல்

கொரக்காவின் 32 தேர்வுத் தாவரங்கள் களக் கருவள வங்கியில் ஸ்தாபிக்கப்பட்டன. மூன்று உன்னதமான தெரிவுகள் HOG-3, HOG-8, HOG-11 அடையாளங் காணப்பட்டு உத்தியோகபூர்வ வெளியீட்டிற்காக வர்க்க வெளியீட்டுக் குழுவிற்குக் கையளிக்கப்பட்டுள்ளன.

கலப்பின விதை விருத்தி நிகழ்ச்சி (வெண்டி)

தாழ்நில ஈரவலயத்திற்குப் பொருத்தமான இய ல்புகளைக் கொண்ட வெண்டிக் கலப்பினங்களை விருத்தி செய்தல்.

பதின்நான்கு உள்ளகக் கலப்பு வர்க்கங்களையும் அவற்றின் 91 கலப்பு சேர்க்கைகளையும் பாவித்து மேற்கொள்ளப்பட்ட கற்கையில் இருந்து நான்கு கலப்பு வர்க்கங்கள் தெரிவு செய்யப்பட்டன. இக்கலப்புச் சேர்க்கைகள் தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்கப் பரிசோதனையில் (NCVT) மதிப்பீடு செய்யப்பட்டது இடைவெப்ப மற்றும் ஈரவலயங்களில் இசைவாக்கத்திற்காக HB 100, HB 95, HB 93 ஆகிய கலப்பு வர்க்கங்கள் பரீட்சிக்கப்பட்டன.

விளைவு மற்றும் இலைச்சித்திர வடிவ வைரஸ் நோய்க்கு சகிப்புத் தன்மை என்பனவற்றின் அடிப்படையில் HB 100 மற்றும் HB 95 ஆகியன மேலதிக மதிப்பீட்டிற்காகத் தெரிவு செய்யப் பட்டிருந்தன.

பச்சை மிளகாய் வர்க்கங்களின் விருத்தி மற்றும் தூய்மைப் பராமரிப்பு

காரத்தன்மை மற்றும் வெளிப்புற இயல்புகளின் பிரகாரம் விவசாயிகளின் தெரிவான வரணிய (Varaniya) பச்சை மிளகாயின் 10 வகைகளில் இருந்து நான்கு வரணிய வகைகள் தெரிவு செய்யப்பட்டன. இந்நான்கு வகைகளும் தூய்மைப்படுத்தப்பட்டு விளைவிற்காக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன. வரணிய பச்சை வகை தெரிவு செய்யப்பட்டு விதை உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் 2011-2012 பெரும் போகத்தில் தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்கச் சோதனையிலும் (NCVT) உள்ளடக்கப்பட்டுள்ளது.

வாழை மூலவுயிருருவின் சேகரிப்பு, மதிப்பீடு, மற்றும் தெரிவு என்பவற்றினூடாக கூடிய விளைவு, நல்ல தரமுடைய வாழை வர்க்கங்களை விருத்தி செய்தல்

அம்பன் (11), கதலி (5), செவ்வாழை (5), சீனிக்கதலி (7) மற்றும் கப்பல் (5) என்பவற்றின் தெரிவு செய்யப்பட்ட வாழைகள் மேலதிக மதிப்பீட்டிற்காக FCRDC இல் ஸ்தாபிக்கப்பட்டது. சீனிக்கதலி (குழு1), பூவாழை, சுவந்தல், கப்பல் (குழு2) மற்றும் அம்பன், பின்வாழை (Bin) (குழு3) என்பவற்றின் மூன்று NCVT பரிசோதனை ஸ்தாபிக்கப்பட்டு மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாவின் விளைவு மற்றும் தரம் என்பவற்றை முன்னேற்றுவதற்கான நிகழ்ச்சி

மாவின் விளைவு மற்றும் தர முன்னேற்றம்

உன்னதமான தெரிந்தெடுக்கப்பட்ட மாவின் சேகரிப்பு மற்றும் தெரிவு என்பன FCRDC, ஹொரணையில் 2011ம் ஆண்டு ஆரம்பிக்கப் பட்டது. விவசாயிகளின் தோட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 25 தாய்த் தாவரங்களில் 4 உன்னத தெரிவுத் தாவரங்கள் இனங்காணப் பட்டன. அரச பண்ணையிலிருந்து 4 உன்ன தமான நடுகை வர்க்கங்கள் தெரிவு செய்யப்பட்டன. காணப்படுகின்ற மரங்கள் கத்தரிக்கப்பட்டு பசளையிடப்பட்டு தயார் செய்யப்பட்டுள்ளதுடன் மதிப்பீடும் மேற் கொள்ளப்பட்டு வருகிறது.

பயிர்ப் பாதுகாப்பு

பப்பாசியில் அறுவடைக்குப் பின்னரான பங்கசு நோயான அந்திரக்நோசு இன் கட்டுப்பாடு.

பப்பாசியில் அந்திரக்நோசு நோயின் நோய்க் காரணியாக கொலற்றோறிகம் குளஸ்போரி யொயிட் *(Colletotrichum gloeosporioides)* இனங்காணப்பட்டுள்ளது. பங்கசுவின் வளரும் இழையங்கள் உட்செல்வதைத் தடுப்பதைத் தெரிவு செய்வதற்காக பல பங்கசு நாசினிகள் மற்றும் மூலிகைச் சாறுகள் என்பன பரீட்சிக்கப்பட்டன. குளோறோத லொனில் / Daconil (Chlorothalonil) ஆனது கூடிய செயற்திறனுள்ள பங்கசு நாசினியாகத் தெரிவு செய்யப்பட்டது. ஏனைய பங்கசு நாசினிகளான காபென்டசய்ம் (Carbendazim) மற்றும் மங்கோசெப் (Mancozeb) என்பன அந்திரக் நோசுவை கட்டுப்படுத்துவதில் குறைந்த செயற்திறனுடையவை. செப்புப் பங்கசு நாசினிகள் பங்கசு வளர்ச்சியைத் தடுக்கும் திறன் கொண்டவை. ஆனால் இவை தாவர நஞ்சாக்கத்தை வெளிப்படுத்தின. அதாவது பப்பாசிப் பழத்தின் தோலில் எரிவு போன்ற தாக்கம் ஏற்பட்டது.

பங்கசு வளர்ச்சியை தடுக்கவல்லவற்றைத் தெரிவு செய்வதற்காக பல தாவரப் பிரிப்புக்கள் ஆய்வு கூடத்தில் மதிப்பீடு செய்யப்பட்டன. கறுவா எண்ணெய், மற்றும் கறுவா இலைச்சாறு என்பன பப்பாசியில் அந்திரக்நோசுவை கட்டுப்படுத்தும் செயற்திறன் மிக்க மூலிகைச் சாறாகத் தெரிவு செய்யப்பட்டன.

பங்கசுநாசினி மூலம் கொடித்தோடையில் பியூசாரியம் வாடலைக் கட்டுப்படுத்தல் (Fusarium wilt)

கொடிதோடையில் பின்நோக்கிப்படுதல் (Die-back) என்பது ஒரு பொதுவான பிரச்சினை என்பதுடன் அதன் நோயாக்கி பியூசாரிய இனப் *(Fusarium* spp) பங்கசுவாகும். இது கழுத்தழுகல் மற்றும் வேரழுகல் என்பவற்றை உருவாக்கும்.

பங்கசு இழைகளின் வளர்ச்சியை வினைத் திறனாகக் கட்டுப்படுத்தக் கூடிய பங்கசு நாசினியை இனங்காணுவதற்காக பல பங்கசு நாசினிகள் மதிப்பீடு செய்யப்பட்டன. பதினொரு பங்கசு நாசினிகளுள் காபென்டசயிம், பொலிக்கர், டகொனில், ரொப்சின் மற்றும் கோமாய் என்பன வினைத்திறனான கட்டுப் பாட்டினைக் காட்டியிருந்தன. புள்ளெட், இரேசர், கொப்பர் பங்கசு நாசினிகள், ரிடோமில்,

மங்கோசெப், சல்பர் என்பன பங்கசு வளர்ச்சியை கட்டுப்படுத்துவதில் குறைந்த செயற்திறனுடைய னவாக இருக்கின்றன.

தேசியில் பின்நோக்கிப்படுதலை கட்டுப்படு த்துவத ற்கான முகாமைத்துவ முறைகள்

பின்நோக்கிப்படுதலின் நோய்க்காரணியாக *Botr yodiploidia theobromae* எனும் பங்கசு இனங் காணப்படுகிறது. நோயைக் கட்டுப்படுத்து வதற்காக பதினொரு பங்கசு நாசினிகள் மதிப்பீடு செய்யப்பட்டன. அவையாவன காபென்டசயிம், டகோனில், மங்கோசெப், புள்ளெட், பொலிக்கர், ரொப்சின், றிடோமில் மற்றும் கோமாய் ஆகும். செப்புப் பங்கசு நாசினி, சல்பர் பங்கசு நாசினி மற்றும் இரேசர் என்பன நோயைக் கட்டுப்படுத்து வதில் குறைந்த செயற்திறன் உடையவை.

குறைந்த பயன்பாருடைய பழுப் பயிர் களின் நோய்க் காரணிகளை இனங் காணல்

பின்வரும் நோய்கள் மற்றும் அவற்றின் நோய்க்காரணிகள் அடையாளங் காணப்பட்டன. கொய்யாப்பழ அழுகல் *(Cylindrocladium scoparium)*, கொடிதோடைப் பழ அழுகல் மூன்று நோய்க்காரணிகளை *(Colletotrichum glocosporio ides, Botrydiploidia theobromae and Fusarium solani)* மற்றும் வெரலு அந்திரக்நோசு நோய் *(Colletotrichum gloeos- porioids)* என்பனவாகும்.

வேறுபட்ட கொய்யா வர்க்கங்களினது வேர்முடிச்சு நெமற்றோட்டுகளிற்கு எதிரான செயற்பாருகள் பற்றிய மதிப்பீடு

வேர்முடிச்சு நெமற்றோட்டு தொற்று என்பது கடந்த ஆண்டில் கொய்யாவில் காணப்பட்ட ஓர் பிரதான பிரச்சினையாகும். அதனால் வேர் முடிச்சு நெமற்றோட்டிற்கு எதிரான வேறுபட்ட கொய்யா வர்க்கங்களின் சகிப்பு மட்டம் பற்றிய மதிப்பீட்டிற்கான கற்கையொன்று மேற்கொள்ளப் பட்டது. ஹொரணை றோஸ் (HRO), லங்கா ஜெயன்ட் (LG), ஹொரணை ஸ்வீட் (SW), ரெட்ஜயன்ட் (RG), ஹொரணை வெள்ளை (HW), ஹொரணை ரெட் (HR), புபுது (PU), காந்தி (Ka) மற்றும் சபீடா ஆகிய ஒன்பது கொய்யா வர்க்கங்கள் மெலடோயின் இன *(Meloidogyne* spp) வேர்முடிச்சு நெமற்றோட்டி னால் உட்புகுத்தல் மேற்கொள்ளப்பட்டன. இலையில் ஏற்படும் அறிகுறி தோற்றுவதற்கான காலம் மற்றும் வேரினால் பிசின் வடியும் வீதம் என்பன அளவீடு செய்யப்பட்டன.

எல்லா வர்க்கங்களும் வேர்முடிச்சு நெமற்றோ ட்டினால் இலகுவாகப் பாதிக்கப்படக் கூடியன வாகக் காணப்பட்டன. ஆனால் காந்தி எனும் வர்க்கம் குறைபாட்டு அறிகுறியை காண்பிக்க மிகக்கூடிய காலத்தை (15 வாரங்கள்) எடுத்தது. அதே வேளை புபுது வர்க்கம் குறைந்த கால காலத்தில் (8/10 வாரம்) குறைபாட்டு அறிகுறி யைக் காட்டியது). வர்க்கங்கள் LG, HW மற்றும் Ka என்பன குறைந்த பிசின் அடர்த்தியைக் காட்ட (60%) வர்க்கங்கள் Sa, RG மற்றும் Hs என்பன கூடிய அடர்த்தியைக் காட்டின.

அன்னாசியில் வெண்மூட்டுப் பூச்சிக்கு எதிரான பிரித்தெடுப்பிகளின் (Extraction) மதிப்பீடு

அன்னாசியானது மிகவும் சுவையான ஓர் பழம். எனவே இது மிகக் கூடிய கேள்வியைக் கொண்டுள்ளது. எவ்வாறோ வெண்மூட்டுப் பூச்சியின் தொற்றலானது இதன் சந்தைக்கான அறுவடையை மோசமாகப் பாதிக்கிறது. அதனால் வெண்மூட்டுப் பூச்சிக்கு எதிராக நச்சுத்தன்மையற்ற உயிரியல் பிரித்தெடுப்பிகள் பரிசோதிக்கப்பட்டன. நீர்மூலம் மற்றும் எதைல் அற்கஹோல் மூலம் பிரித்தெடுக்கப்பட்ட முதிர்ந்த அன்னமுன்னா இலை, முதிராத அன்னமுன்னா இலை, சித்திரனெல்லா இலை, மற்றும் சித்திர னெல்லா வேர் என்பவற்றின் சாறுகள் ஆய்வுகூட நிபந்தனையில் வெண் மூட்டுப் பூச்சிக்கு பிரயோகிக்கப்பட்டு இறப்பு வீதம் மதிப்பிடப் பட்டது.

சித்திரனெல்லா இலையின் எதைல் அற்கஹோல் சாறு பிரயோகத்தை அடுத்து சித்திரனெல்லா இலையின் நீர்ச்சாறு பிரயோகம் கூடிய இறப்பு வீதத்தைக் (47.3%) காட்டியது. சித்திரனெல்லா இலையில் எதைல் அல்கஹோல் சாறு மற்றும் முதிராத அன்னமுன்னா இலையின் எதைல் அல்கஹோல் சாறு என்பன அவற்றின் நீர்ச்சாறுகளை விட குறைந்தளவான இறப்பு வீதத்தைக் காட்டின. ஆனால் சித்திரனெல்லா வேர் மற்றும் முதிர்ந்த அன்னமுன்னா இலை என்பன வேறுபட்ட வழியில் செயற்பட்டன. இவற்றின் எதைல் அல்ககோல் பிரிப்புக்கள் நீர்ப்பிரிப்புக்களிலும் பார்க்கக் கூடிய இறப்பு வீதத்தைக் காட்டின.

மண்போசணை முகாமைத்துவம்

கொடித்தோடையில் தண்டு புடைத்தல்

தண்டு புடைத்தல் என்பது நாற்றினாலும் கொடி தோடைத் தாவரத்தின் தண்டில் ஏற்படுத்தப் படுகின்ற பீடையின் பாதிப்பினாலும் அடையாளப்படுத்தப்படுகிறது.

இக்குறைபாட்டினால் தாக்கப்பட்ட பகுதிக்கு மேற்பட்ட தண்டுகள் நலிவுற்றும் இறந்தும் இருப்பது அவதானிக்கப்பட முடியும். பாதிக்கப்பட்ட வயலின் மண்ணில் கல்சியம் மற்றும் pH என்பன குறைவாக இருப்பது கண்டறியப்பட்டது.

சில இடங்களில் மண்ணின் இயல்பைப் பொறுத்து கூடுதலான கல்சியத்தின் பிரயோகம் அல்லது பொறெக்ஸ் (Borax) இன் இலைகளிற்கான விசிறல் என்பன இப்பாதிப்பினை தாமதப்படுத்தின. இக்குறைபாட்டைக் குறைப்பதற் காக இப்போசணைகளின் சரியான பிரயோகமுறை மேலும் பரிசோதிக்கப்பட்டு வருகிறது.

கொய்யா மற்றும் கொடிதோடை என்பவற்றில் கூட்டுப் பசளையுடன் இரசாயனப் பசளைப் பாவனை பற்றிய விவசாயிகளுக்கான செய்துகாட்டல்

முன்னைய பரிசோதனையில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பல்வேறுபட்ட கூட்டெரு மற்றும் இரசாயனப்பசளை என்பவற்றை பயன்படுத்திய கொய்யா மற்றும் கொடிதோடை துண்டங்கள் இரண்டு வேறுபட்ட இடங்களில் பராமரிக்கப் பட்டன. கொடிதோடைக்கு கூட்டுப்பசளை 10kg/ கொடி/ வருடம் என்ற அளவிலும் கொய்யாவிற்கு 20kg/ தாவரம்/ வருடம் என்ற அளவிலும் காய்க்கும் முதல் வருடத்திற்குப் பிரயோகிக்கப் பட்டது. இதன் போது விளைவில் மோசமான பாதிப்பு இன்றி சிபாரிசு செய்யப்பட்ட இரசாயனப் பசளையின் அளவினை 257kg ஆல் குறைக்கப்பட முடியும் என்பது சிறப்பாக செய்து காட்டப்பட்டது.

அன்னாசி, கொடிதோடை, மங்குஸ்தான், கொய்யா என்பவற்றின் விளைவு மற்றும் தரம் என்பவற்றில் இரசாயனப் பசளை, கூட்டுப்பசளை என்பவற்றின் ஒருங்கி ணைந்த தாக்கம்

கூட்டு பசளையானது 10 தொன்/ஹெக்டர்/வருடம் எனப் பிரயோகிக்கப்படும் போது இரசாயனப் பசளையின் பிரயோகத்தினை 25-50% வரை குறைக்கப்பட முடியும்.

மண்புழு வளர்ப்பு மற்றும் மண்புழு உரம் என்பவற்றிற்கான வேறுபட்ட சேதனப் பொருட்களின் தாக்கம் பற்றிய பரிசோதனை

குவியல் முறையிலான மண்புழு உரத் தயாரிப்பின் போது புல், சீமைக்கிழுவை மற்றும் வாழைத்தண்டு என்பன மாட்டுச் சாணத்துடன் ஒவ்வொன்றும் 1:1 எனும் விகிதத்தில் உள்ளபோது மண்புழு உரத்தில் உள்ள நைதரசன் வீதம் சீமைக்கிழுவைக்கு கூடுதலாக காட்டியது. புல் மற்றும் வாழைத்தண்டு என்பன அதனை அடுத்துக் காணப்பட்டன. தொட்டி முறை மண்புழு உரத்தின் நைதரசன் ஆனது குவியல் முறையுடன் ஒப்பிடக் கூடியதாக

இருந்தது. மண்புழு உரத் தயாரிப்பின் போது கழிவுகளின் உயரமானது 30%-50% குறைந்தது.

கொடித்தோடைக்கான சேதனப்பசளைப் பொதி விருத்தி

சிபாரிசு செய்யப்பட்ட இரசாயனப் பசளையுடன் ஒப்பிடும் போது வருடமொன்றில் 20 தொன்/ ஹெக்டர் எனும் அளவில் மண்புழு உரத்தையோ அல்லது அதே அளவில் நன்கு உக்கிய கோழி எருவையோ மூன்று தடவைகள் இடுவது கொடித்தோடையில் சேதனப் பழ உற்பத்திக்கு பொருத்தமானதாகக் காணப்படுகிறது.

கம்பஹா மாவட்டத்தில் ரம்புட்டான்/ அன்னாசிப் பயிர்ச்செய்கைத் தொகுதிக்காக மண் முகாமைத்துவ தகவல் தொகுதியை விருத்தி செய்தல்

64 ரம்புட்டான் செய்கையாளர்களிடம் சமூக பொருளாதாரப் புள்ளி விபரச் சேகரிப்பு மேற் கொள்ளப்பட்டது. பெறுபேறால் அவர்களின் பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் பற்றிய அறிவு மிகக் குறைவு என வெளிப்படுத்தப்பட்டது. 15 ரம்புட்டான் பழத் தோட்டங்களில் மேற்கொள்ளப் பட்ட மண் வளம் பற்றிய விபரச் சேகரிப்பானது அங்கு பொசுபரசு தேக்கம் காணப்படுவதாக வெளிப்படுத்தியது. மின்கடத்துத் திறன், pH, கிடைக்கக்கூடிய பொசுபரசு மற்றும் மாற்றீடு செய்யப்படக் கூடிய K, Ca என்பவற்றிற்கான மண் விபரணப் படம் தயாரிக்கப்பட்டது.

சேதனப்பசளை உற்பத்தி, பாவனை நிகழ்ச்சித் திட்டம்

உயர்தரக் கூட்டெரு உற்பத்தி

உயர்தரக் கூட்டெரு உற்பத்தி நிகழ்ச்சித் திட்டம் FCRDC ஹொரணையில் 2009ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதுடன் நுண்ணுயிர் வளம் நிறைந்த 3486 பொதிக் கூட்டெரு விவசாயிகளின் மத்தியில் பகிர்ந்தளிக்கப்பட்டது.

பயிர் முகாமைத்துவம்

கொய்யாவில் வேர்முடிச்சு நெமற்றோட்டுக்கு எதிரான பொருத்தப்பாடுடைய ஒட்டுக்கட்டையின் மதிப்பீடு

கடந்த அண்மைக் காலங்களில் கொய்யா என்பது இலங்கையில் ஓர் முன்னனி வர்த்தகப் பயிராக மாறியுள்ளது. மெலொய்டோயின் இன (*Meloidoigyne* Spp) வேர் முடிச்சு நெமற்றோட் டின் தொற்றலானது பயிர்ச்செய்கையின் ஓர் பிரதான அச்சுறுத்தல் என அறிக்கையிடப் பட்டுள்ளது. வேறுபட்ட இனப்பெருக்க முறை களான காற்றுப் பதிவைத்தல், நாற்று, துண்டு முளை ஒட்டு, மற்றும் அணையொட்டு என்பவற்றின் மூலம் இனப் பெருக்கப்பட்ட கொய்யாத் தாவரங்களுள் ஏற்பட்ட நெமற்றோட்டுத் தாக்கத்தில் ஓர் வேறுபாடு காணப்பட்டது. பதிவைத்தல் மூலம் பெறப்பட்ட தாவரங்களிலும் பார்க்க முளை ஒட்டு மற்றும் அணையொட்டு என்பவற்றின் மூலம் பெறப்பட்ட தாவரங்கள் கூடிய வீதத்தில் உயிர்வாழ்வது அவதானிக்கப்பட்டது. இது முளையொட்டு அல்லது அணையொட்டு என்பவற்றின் மூலம் பெறப்பட்ட தாவரங்களின் நன்கு விருத்தி அடைந்த ஆணிவேர்த் தொகுதியினால் ஆகும். மேலதிகமாக நெமற்றோட்டிற்கு எதிர்ப்புள்ள அல்லது சகிக்கும் இயல்புகளுள்ள ஒட்டுக் கட்டைகளை இனப்பெருக்க அலகுகளாக அடையாளம் காணுதல் முக்கியமான தொன்றாகும். வேறுபட்ட 74 தெரிவுத் தாவரங்களில் இருந்து விதைகள் சேகரிக்கப்பட்டு நாற்றுக்கள் உருவாக்கப்பட்டன. நாற்றுக்களுக்கு செயற்கை முறையில் நெமற்றோட்டு உட்புகுத்தப்படும்.

இரட்டை ஒட்டுக்கட்டையுள்ள மங்குஸ்தான் ஒட்டுத் தாவரத்தின் வளர்ச்சி மற்றும் செயற்பாடு என்வற்றிற்கான மதிப்பீடு

மங்குஸ்தான் தாவரத்தின் குறைந்தளவிலான விநியோகத்திற்கான பிரதான காரணம் அதன் மெதுவான பதிய வளர்ச்சியுடனான உற்பத்தி யற்ற நீண்டகாலமாகும் (8-10 வருடங்களாகும்). அவ்வாறான நிலையில் குறைந்த வளர்ச்சி

வீதத்தை வெற்றீட்டுவது அதன் மூலம் உற்பத்தித்திறனை அதிகரிப்பது போன்ற நோக்கங்களுடன் 2004ம் ஆண்டில் கற்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. ஸ்தாபித்ததன் பிற்பாடு 7ம் வருடத்தில் இரட்டை ஒட்டுக்கட்டையுள்ள ஒட்டுத் தாவரம் அறுவடை செய்யப்பட்டதில் ஒரு தாவரத்தில் 43 பழங்கள் இருந்தன. ஒட்டுத் தாவரங்களின் பதிய வளர்ச்சியில் ஓர் சரிவு காணப்பட்டது அவதானிக்கப்பட்டது. ஒட்டுத் தாவரங்களில் இதுவொரு பொதுவான பண்பாகும். பொதுவாகக் கிளைகள் இயற்கையாக அமையப் பெற்ற கிடையான கிளை விடும் இயல்பைக் காட்டின. இக்கிளைகளில் இருந்து எடுக்கப்படுகின்ற ஒட்டு முளைகள் மூலம் ஒட்டப்பட்ட தாவரக் கிளைகளும் இயற் கையான கிடையான கிளைவிடும் இயல்பைக் காட்டுகின்றன. இரட்டை ஒட்டுக்கட்டையைக் கொண்ட ஒட்டுத் தாவரத்தில் கிடையாக கிளை விடும் இயல்பானது அதன் ஆரம்ப வளர்ச்சிக் காலமான 3-4 வருடங்கள் வரை குறுக்கான இரண்டு தடிகள் மூலம் இலகுவாக பாதுகாக்கப்பட முடிந்தது. பிற்பாடு அது இயல்பாக வளர முற்பட்டது.

உயர்விளைவு, நோய் மற்றும் உப்புச் சகிப்புத்தன்மை என்பவற்றிற்காக தெரிவு செய்யப்பட்ட வாழையின் மதிப்பீட்டு நிகழ்ச்சி

NCVT பரிசோதனை ஸ்தாபிக்கப்பட்டு அதன் தரவுகள் சேகரிக்கப்படுகின்றன.

ரம்புட்டானின் வளர்ச்சி மற்றும் விளைவு என்பவற்றில் பயிரின் அடர்த்தி மற்றும் கத்தரிக்கப்படும் உயரம் என்பவற்றின் தாக்கம்

மல்வானை விசேடத்தில் இருந்து 36 தாவரங்கள் மூன்று வேறுபட்ட பயிர் அடர்த்தி {10m x 10m (சிபாரிசு), 10m x 7.5m, 10m x 0.5m} மற்றும் இரு வேறுபட்ட கத்தரித்தல் உயரம் {90cm (சிபாரிசு), 30cm}. இது வரையில் தாவரத்தின் உயரம், சடைப்பு மற்றும் விளைவு என்பனவற்றில் குறிப்பிடும்படியான வேறுபாடுகள் இல்லை. மதிப்பீடு தொடரப்படுகிறது.

ட்றகன் (Dragon) பழத்தின் கொடியின் வளர்ச்சி, விளைவு மற்றும் தரம் என்பவற்றில் ஓர் பயிற்றும் கம்பத்தில் வெட்டுத் துண்டங்களின் பருமன் மற்றும் எண்ணிக்கை என்பவற்றின் தாக்கம்

கொடியின் கூடுதலான வளர்ச்சி (கொடியின் உயரம்) 12-15 அங்குல வெட்டுத் துண்டங்களில் அவதானிக்கப்பட்டது.

நீளம் 12-15 அங்குலத்தையும், ஒரு கம்பத்திற்கு 4 துண்டங்களையும் கொண்டது கூடியளவான முதல்தர மற்றும் இரண்டாம்தர கிளை யுருவாக்கத்தைக் காட்டிய அதேவேளை மிகக் குறைவான கிளைகள் பரிகரணம் 1 இல் (3-4 அங்குல நீளம் மற்றும் 1 துண்டம்/கம்பம்) பதியப்பட்டது. பரிகரணங்களின் சொற்ப அளவிலானவை பழங்களைத் தந்தன. முடிவிற்கு வருவதற்கு முன்னர் இதன் முழுமையான காய்க்கும் பருவம் வரை பரிசோதனை தொடரப்படும்.

வட்டக்கத்தரியின் பயிர் முகாமைத்துவ கற்கைகள்

நாற்றுமேடையில் மிகக் குறைவான விதை முளைத்திறன் அவதானிக்கப்பட்டதால் பச்சை வீட்டுப் பரிசோதனையொன்று புதிய, 2 வார வயதுடைய மற்றும் ஒரு மாத வயதுடைய விதைகளைப் பாவித்து மேற்கொள்ளப்பட்டது. விதைகளில் உறங்கு நிலை அவதானிக்கப் படாததுடன் உயர் வெப்பநிலை நிபந்தனையில் (UV பரிகரிக்கப்பட்ட 1000 கேட்ச் பொலித்தீன்) வைக்கப்பட்ட நாற்றுக் கொல்கலன்கள் 100% முளைத்தலைக் கொடுத்தது.

பழவிருத்தி நடவடிக்கைகள்

நடுகைப்பொருள் உற்பத்தி

2011ம் ஆண்டில் 28034 அரும்பொட்டுத் தாவரங்களும், 1568 தண்டொட்டுத் தாவரங்களும், மற்றும் 2177 நாற்றுக்களுமாக ரம்புட்டான், மா, தூரியன், பலா, ஆனைக்கொய்யா, ஸ்ரார்ப்பழம், சபொடில்லா, காசீனியா, எலுமிச்சை, மங்குஸ்தான், ஜம்பு,

லொவி, அன்னமுன்னா, கொய்யா, தோடை, பெலி, வெரலு, நாரத்தை, கொடித்தோடை, ஸ்ரோபரி, என்பன எமது நிலையத்தினால் விற்பனை செய்யப்பட்டதுடன் நிகர இலாபமாக ரூபா 4,504,210.00 சம்பாதிக்கப்பட்டது.

இழைய வளர்ப்பு முறையினூடாக முக்கியமான பயிர்களின் தரமான நடுகைப் பொருட்களை விருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டம்

வாழையின் நுண் இனப்பெருக்கம்

வாழையின் பயிரிடும் வர்க்கங்களான கதலி, சீனிக்கதலி, நேத்திரம்பழம் போன்றவற்றின் நுண் இனப்பெருக்க முறைக்கான ஆரம்ப கட்ட முயற்சிகள் FCRDC இல் தற்போது முடுக்கி விடப்பட்டுள்ளது. 2011ம் ஆண்டு காலப்பகுதியில் அண்ணளவாக 1500 வாழைப் பயிர்கள் உற்பத்தி செய்யப்பட்டதுடன் அவற்றுள் பெரும்பாலானவை விவசாயிகள் மத்தியில் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. எட்டு மதிப்பீட்டுத் துண்டங்கள் விவசாயிகளின் தோட்டங்கள் மற்றும் ஆராய்ச்சி களங்கள் என்பவற்றில் இழைய வளர்ப்பு வாழைப் பயிர்களை மதிப்பீடு செய்வதற்கு ஸ்தாபிக்கப் பட்டுள்ளது.

மாவின் முளையப் பாதுகாப்பு

கலப்புப் பிறப்பு முளையப் பாதுகாப்புத் தொழில் நுட்பமானது விழுந்த அல்லது அறுவடை செய்யப்பட்ட முதிராத பழங்களில் வெற்றிகரமாக பயன்படுத்தப்பட்டது. எனவே உள்ளூர் மா வர்க்கங்களின் முளையப் பாதுகாப்பிற்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகளை விருத்தி செய்வதற்காக ஓர் ஆய்வு நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அடிப்படைக் கற்கைகள் 2011 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. எவ்வாறோ நிகழ்ச்சித் திட்டமானது கடைசிப்பருவ காலத்தில் பழங்களின் பற்றாக்குறை காரணமாக கைவிடப்பட்டது. அடுத்த பருவகாலத்தில் நிகழ்ச்சித் திட்டமானது தொடரப்படும்.

அயனமண்டலப் பழங்களின் உயிர்ப்பல்வகைமைத் தோட்டத்தை நிறுவுதல்

அண்ணளவாக 15 ஹெக்டயர் விஸ்தீரணமான நிலம் துப்பரவு செய்யப்பட்டதுடன் வாழை (661), மங்குஸ்தான் (40), மற்றும் மா (59) என்பன நடப்பட்டுள்ளன. அத்துடன் வயது முதிர்ந்த இறப்பர் தோட்டம் புதிய பயிர்ச்செய்கைக்காகப் பிடுங்கப்பட்டுள்ளது. கத்தரித்தல் முதிர்ந்த மாந்தோட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் களையானது மா, கொய்யா, வாழை மற்றும் மங்குஸ்தான் தோட்டங்களில் கட்டுப்படுத்தப் பட்டுள்ளது. மா, தூரியன் மற்றும் இழைய வளர்ப்பு வாழை மற்றும் றோஸ் அப்பிள் தோட்டங்களிற்கு பசளை இடப்பட்டது.

ரம்புட்டான் (7682), தூரியன் (1038), வெரலு (165), மா (428) மற்றும் பலா (1855) என்பவற்றின் அரும்பொட்டுத் தாவரங்கள் உற்பத்தி செய்யப்பட்டன.

வீட்டுத் தோட்டத்தை விருத்தி செய்தலும் பராமரித்தலும் மற்றும் விவசாயிகளிற்கும் பாடசாலைகளில் கல்விற்கும் சிறுவர்களிற்கும் வீட்டுத்தோட்டம் பற்றிய பயிற்சி வழங்கல்

பாடசாலைச் சிறுவர்களிற்கு வீட்டுத் தோட்டத்தின் பயன்பாடு பற்றிய செய்து காட்டல் போன்றவற்றிற்காக 2005ம் ஆண்டில் FCRDC ஹொரணையில் ஒர் வீட்டுத் தோட்டம் நிறுவப்பட்டது. 2011 இல் 3251 பாடசாலைச் சிறுவர்கள், 138 ஆசிரியர்கள் மற்றும் 69 வேறு நபர்கள் வீட்டுத் தோட்டத்திற்கு விஜயம் செய்ததுடன் வீட்டுத் தோட்டம் பற்றிய தமது அறிவை விருத்தி செய்து கொண்டனர்.

பயிற்சித் திட்டம்

பின்வரும் பயிற்சி நிகழ்ச்சிகள் 2011 இல் மேற்கொள்ளப்பட்டன.

- முப்பது பாடசாலைகளில் இருந்து 2951 பாடசாலைச் சிறுவர்கள் மற்றும் 179

ஆசிரியர்கள் நிலையத்திற்கு விஜயம் செய்தனர்

- 190 பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்களிற்காக ஓர் பயிற்சி நிகழ்ச்சி மேற்கொள்ளப்பட்டது.
- பழப்பயிர்ச்செய்கை, வீட்டுத்தோட்டம், இழைய வளர்ப்பு மற்றும் நாற்றுமேடை முகாமைத்துவம் என்பவற்றில் 726 பயிலுநர்களிற்காக பதினாறு பயிற்சி நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன.
- தம்பளு, ஹண்டுபெல்பொல, கும்புக்க, கலாபிட்டிய மற்றும் கொடிகமுக போன்ற இடங்களில் (175 பயனாளிகள்) மாதிரிக் கிராம நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் உயர்தர கூட்டெரு தயாரிப்புப் பற்றிய ஐந்து பயிற்சி நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டதுடன் நுண்ணங்கி வளமுள்ள கூட்டெருப் பொதிகளும் மா, ரம்புட்டான், தூரியான், பலா மற்றும் அகத்தி போன்ற 1325 தாவரங்களும் விநியோகிக்கப்பட்டன.
- வாழ்வெழுச்சித் திட்டத்தின் கீழ் 58 பயிற்சி நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டதுடன் நுண்ணங்கி வளமுள்ள கூட்டெருவும் பகிர்ந்தளிக்கப்பட்டது. (ஹொரணை பிரதேச செயலகப் பிரிவில் இருந்து 4200 பயனாளிகள்).
- ஹொரணை பிரதேசத்தில் இருந்து 50 கிராமங்களில் 2755 விவசாயிகளிற்கு பழச் செய்கை, நோய்பீடைக் கட்டுப்பாடு, மற்றும் பயிர் முகாமைத்துவம் என்பனவற்றில் புதிய தொழில்நுட்பம் பற்றிய பயிற்சி அளிக்கப்பட்டது.
- விவசாயிகள் மத்தியில் 1615 ஆலோசனை கையேடுகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

விவசாயிகளுக்கான ஆலோசனை நிகழ்ச்சித் திட்டம்

- விவசாயிகளிடமிருந்து 78 நோய் மாதிரிகள் சேர்க்கப்பட்டதுடன் விரிவாக்க உத்தியோக த்தர்களால் பரீட்சிக்கப்பட்டு நோயாக்கிகள் அடையாளம் காண்பதற்காக ஆய்வு கூட த்தில் வளர்க்கப்பட்டு அவற்றின் கட்டுப்பாட்டி ற்கான சிபார்சுகள் வழங்கப்பட்டன.
- விவசாயிகளால் சமர்ப்பிக்கப்பட்ட நோய் பீடைத்தாக்கம், ட்றகன் பழம், தூரியான், ரம்புட்டான், அன்னாசி மற்றும் மரக்கறி பயிர்ச்செய்கை என்பவற்றுடன் தொடர்பான 98 வயல் பிரச்சினைகளிற்குத் தீர்வு கொடுக்கப்பட்டது.

வெகுஜன ஊடகம்

FCRDC இன் உத்தியோகத்தர்கள் 09 தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் (மங்குஸ்தான், கொய்யா, தூரியான், நாரத்தை, ரம்புட்டான், வீட்டும் தோட்டம் மற்றும் கூட்டெரு தயாரிப்பு) நோய்பீடை மற்றும் பயிர்ச்செய்கை பற்றிய 04 வானொலி நிகழ்ச்சிகளிலும் பங்கு கொண்டனர்.

2012 ம் ஆண்டிற்கான திட்டம்

பயிர் விருத்தி

- மூலவுயிருருச் சேகரிப்பு, மதிப்பீடு மற்றும் தெரிவு என்பவற்றினூடாக உயர் விளைவு, நல்ல தரம் கொண்ட வாழை வர்க்கங்களை விருத்தி செய்தல்.
- மூலவுயிருருச் சேகரிப்பு, மதிப்பீடு மற்றும் தெரிவு என்பவற்றினூடாக உயர் விளைவு, நல்ல தரம் கொண்ட ஆனைக் கொய்யா வர்க்கங்களை விருத்தி செய்தல்.
- லாவுலுவின் மூலவுயிருருச் சேகரிப்பு, பாதுகாப்பு மற்றும் மதிப்பீடு செய்தல்.
- லொவியின் மூலவுயிருருச் சேகரிப்பு, பாதுகாப்பு மற்றும் மதிப்பீடு செய்தல்.

- முள்ளு அன்னமுன்னாவின் உன்னத விளைவுச் செயற்பாடு பற்றிய ஓர் கற்கை மேற்கொள்ளல்
- வெரலுவின் மூலவுயிருருப் பாதுகாப்பும் மதிப்பீடு செய்தலும்.
- சபோடாவின் மூலவுயிருருப் பாதுகாப்பும் மதிப்பீடு செய்தலும்.
- பலாவின் மூலவுயிருருப் பாதுகாப்பும் மதிப்பீடு செய்தலும்.
- தாழ்நில ஈரவலயத்தில் பயிர் செய்வதற்காக ஈரவலயத்தில் மாவின் மூலவுயிருருச் சேகரித்தல் மற்றும் பராமரித்தலுடன் நல்ல தரமுடைய "கிளிச்சொண்டன்" மா மற்றும் "பெட்டி" மா ஆகிய உள்ளூர் இனங்களைத் தெரிவு செய்தல்.
- ரம்புட்டானை சேகரித்தலும் மதிப்பீடு செய்தலும்
- FRCDC இல் காணப்படுகின்ற ரம்புட்டான் குடித்தொகையின் பண்பறிதல்.
- கொரக்காவைச் சேகரித்தலும் மதிப்பீடு செய்தலும்.
- 17 உக்குரசகளின் மூலவுயிருருக்களைப் பண்பறிதல்.
- கடுகுடா (Gaduguda) வின் மூலவுயிருருச் சேகரிப்பும் பண்பறிதலும்.
- கலப்பினக் கொய்யாத் தாய்த்தாவரத் தோட்டத்தின் பராமரிப்பு.
- வர்த்தகப் பயிர்ச்செய்கைக்காக உன்னத மான தூரியான் வர்க்கங்களைத் தெரிவு செய்தல்.
- கலப்புப் பிறப்பாக்கம் மூலம் உயர் விளைவு நல்ல தரமுடைய தூரியன் F_1 கலப்பு வர்க்கங்களை விருத்தி செய்தல்.
- தேர்வின் மூலம் உயர்விளைவு மற்றும் நல்ல தரமுள்ள நாரத்தை வர்க்கங்களை விருத்தி செய்தல்.
- கலப்புப் பிறப்பாக்கம் மூலம் உயர் விளைவு மற்றும் நல்ல தரமுடைய தோடை மற்றும் நாரத்தை வர்க்கங்களை விருத்தி செய்தல்.
- விகாரப்படுத்தப்பட்ட தோடை மற்றும் நாரத்தை என்பவற்றை மதிப்பிடுதல்.
- யப்பானில் இருந்து அறிமுகப்படுத்தப்பட்ட தோடை மற்றும் நாரத்தை என்பவற்றை மதிப்பிடுதல்
- எட்டு பெலி மூலவுயிருருக்களின் சேகரிப்பும் ஸ்தாபித்தலும்.
- ஐந்து பெலி மூலவுயிருருக்களின் பண்பறிதல்.
- வரணிய பச்சைமிளகாய் வர்க்கத்தின் விதை உற்பத்தியும் தூய்மைப் பராமரிப்பும்.
- வட்டக்கத்தரியின் கருமூலவுயிர்ச் சேகரிப்பும் பெருக்கமும்.
- பப்பாசி, கொடிதோடை மற்றும் மா என்பவற்றின் உயர்கலப்பு விருத்தி.
- உயர் விளைவு, நல்ல தரம் கொண்ட பப்பாசி வர்க்க விருத்தி.
- வெண்டியில் கலப்பின விதை விருத்தி ஆண்டு – 2012.
- வர்த்தகப் பயிர்ச்செய்கைக்காக உன்னத மான தூரியன் வர்க்கங்களை விருத்தி செய்தல்.
- உயர் விளைவு சிறந்த தரம் கொண்ட தேசிக்குடும்பப் பயிர் வர்க்கங்களை விருத்தி செய்தல்.
- காணப்படுகின்ற மூலவுயிருருக்களில் இருந்து நல்ல தரம் உயர் விளைவுடைய மாவின் மூலவுயிருருக்களை விருத்தி செய்தல்.

பயிர் முகாமைத்துவம்

- ட்றகன் பழத்தின் விளைவு, தரம் என்பவற்றில் நடுகைத் துண்டங்களின் எண்ணிக்கை மற்றும் பருமன் என்பவற்றின் தாக்கம் பற்றிய கற்கை.
- தாழ்நில ஈரவலயத்தில் ட்றகன் பழத்தின் செயற்பாட்டிற்கான மதிப்பீடு.
- ரம்புட்டானின் பகுதி நிரம்பல் பற்றிய கற்கை (அவதானம் சார்ந்த)
- மேலதிக வேர்த்தொகுதியை வழங்குவத னூடாக மங்குஸ்தான் ஒட்டுக்கன்று மற்றும் நாற்று என்பவற்றில் வளர்ச்சி அதிகரிப்பு.
- வேர்முடிச்சு நெமற்றோட்டிற்கு எதிரான ஒட்டுக்கட்டைத் தெரிவு.
- முள்ளு அன்னமுன்னா நாற்றில், பொருத்த மான கத்தரித்தல் மற்றும் பயிற்றுவித்தல் முறைகளை விருத்தி செய்வதனூடாக உற்பத்தித் திறனை விருத்தி செய்தல்.
- கொய்யாத் தாய்த்தாவரத் தோட்டத்தைப் பராமரித்தல்
- 25 வக்ஸ் அப்பிள் தெரிவுத் தாவரங்களை பராமரித்தல்.
- ரம்புட்டானுக்கான இலாபகரமான பயிர் முகாமைத்துவ நடவடிக்கைகளை விருத்தி செய்தல்.
- கொடி முகாமைத்துவத்தினூடாக கொடி தோடையில் தண்டு புடைத்தலைக் கட்டுப் படுத்தல்.
- ஒட்டப்பட்ட தூரியான் தெரிவுத் தாவரங் களின் கத்தரித்தலும் பயிற்றுவித்தலும்.
- வைரஸ் அற்ற தேசிப் பயிர்களின் (தோடை, நாரத்தை) தாய்த்தாவர விருத்தி.
- தேசிப் பயிர்களிற்கான வேறுபட்ட மூன்று ஸ்தாபித்தல் முறைகளையும் இரண்டு மரப் பராமரிப்பு முறைகளையும் பரீட்சித்தல்.
- தேசிப்பயிர்களிற்கான NCVT பரிசோதனை.
- வற்றாளையில் NCVT பரிசோதனை.
- மிளகாயில் NCVT பரிசோதனை.
- TC வாழையின் கள மதிப்பீடு.

பயிர்ப் போசணையும் சேதனப்பசு உற்பத்தியும்

- வேறுபட்ட கல்சிய அளவு மற்றும் பிரயோக முறை என்பவற்றுடன் கொடித்தோடையில் தண்டு புடைப்பு ஏற்படுவதை அளவிடுதல்.
- ரம்புட்டானில் ஏற்படுகின்ற பிசின் வடிதல் எனும் குறைபாட்டில் தெரிவு செய்யப்பட்டு பிரயோகிக்கப்படுகின்ற போசணைப் பொருட்களின் மதிப்பீடு.
- ட்றகன் பழத்தின் விளைவில் சேதனப் பசளையின் தாக்கம்.
- மங்குஸ்தானின் விளைவில் சேதன மற்றும் அசேதனப் பசளைகளின் ஒருங்கிணைந்த தாக்கம்.
- மண்புழுக் கூட்டெருவில் வேறுபட்ட சேதனப் பொருட்களின் தாக்கத்தை பரிசோதித்தல்.
- அன்னாசியின் விளைச்சலில் வேறுபட்ட செறிவுடைய மண்புழுத் திரவத்தின் தாக்கம் பற்றிய ஆரம்பக் கற்கை.
- வாழையில் பழம் வெடித்தலைக் குறைப்ப தற்கான கல்சியப் பிரயோக முறையை இனங்காணல்.
- இழையவளர்ப்புச் செய்யப்பட்ட வாழைக்கான பொருத்தமான பசளையிடல் நடவடிக்கை களை அடையாளங் காணல்.
- சேதனப் பசளையின் உற்பத்தியையும் பாவ னையையும் உயர்த்துதல்

தாவர நோயியல்

- வாழையின் சிக்காடோகா (Sigatoka) நோயைக் கட்டுப்படுத்த மூலிகைப் பதார்த்தங்கள், GRAS சேர்வை மற்றும் பங்கசு நாசினி என்பவற்றைத் தெரிந்தெடுத்தல்
- அந்திரக்நோசு மற்றும் பின்நோக்கிய இறத்தல் என்பவற்றுக்கான எதிர்ப்பு அல்லது தாங்கும் தன்மையுள்ள மாவின் மூலவுயிருருவைத் தெரிந்தெடுத்தல்.
- GRAS சேர்வை, மூலிகைச் சாறு மற்றும் பங்கசு நாசினி என்பவற்றினூடாக மாவின் பழ அழுகல் நோயைக் கட்டுப்படுத்தல்.
- GRAS சேர்வையின் மூலம் பப்பாசியின் பழ அழுகல் நோயைக் கட்டுப்படுத்தல்.
- GRAS சேர்வையின் மூலம் கொய்யாவின் பழ அழுகல் நோயைக் கட்டுப்படுத்தல்.

பூச்சியியல்

- தாவர ஒட்டுண்ணி நெமற்றோட்டிற்கு சகிப்புத் தன்மையுடைய பொருத்தமான ஒட்டுக்கட்டை பற்றிய கற்கை.
- தாவர ஒட்டுண்ணி நெமற்றோட்டிற்கு எதிரான வேறுபட்ட மண் திருத்த நடவடிக்கை கள் பற்றிய மதிப்பீடு.

இழைய வளர்ப்பு

- சிபாரிசு செய்யப்பட்ட வாழைகளின் நுண் இனப்பெருக்கம்
- மாவின் முளையப் பாதுகாப்பு.

சமூக பொருளாதாரம்

- FCRDC ன் 2011ம் ஆண்டிற்கான INFORM அறிக்கை தயாரித்தல்
- பழப்பயிர்களின் சமூகப் பொருளாதாரத் தகவல்களைக் கொண்ட தரவுத் தளத்தினை (Data Base) விருத்தி செய்தல்.

அபிவிருத்தி நிகழ்ச்சி

- ஸ்தாபிக்கப்பட்டுள்ள மாதிரி வீட்டுத் தோட்டத்தை விருத்தி செய்தலும் பராமரித்தலும்.
- ஹொரணையில் உயிர்ப் பல்வகைமை கொண்ட அயனமண்டலப் பழத் தோட்டத்தை ஸ்தாபித்தல்.

உத்தியோகத்தர் பட்டியல்

பதவியணி	எண்ணிக்கை
மேலதிகப் பணிப்பாளர்	01
ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள்	12
பொருளாதார உதவியாளர்	01
திட்ட உதவியாளர்கள்	06
அபிவிருத்தி உதவியாளர்	01
உதவிப் பணிப்பாளர்	01
ஆராய்ச்சி உதவியாளர்கள்	06
விவசாயப் போதனாசிரியர்கள்	14
பொது முகாமைத்துவ உதவியாளர் சேவை	07
சாரதி	03
களஞ்சியக் காப்பாளர்	01
காவலாளி	01
தாவர ஒட்டு வேலையாள்	01
தொழிலாளர்கள்	30
ஒப்பந்த தொழிலாளர்கள்	80
மொத்தம்	**165**

2.2.3 உணவு ஆராய்ச்சி பிரிவு (FRU), கண்ணொறுவை

உணவு ஆராய்ச்சிப் பிரிவானது பூங்கனியியல் பயிர் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிறுவனத்தின் (HORDI) நிர்வாகத்தின் கீழ் இயங்குகின்றது. இதன் முக்கிய இலக்கானது அறுவடைக்கு பிந்திய தொழில்நுட்ப ஆராய்ச்சி, உற்பத்திகளின் அபிவிருத்தி, பயிர் முன்னேற்ற நிகழ்ச்சி மூலம் பெறப்பட்ட மாதிரிகளின் தரமதிப்பீடு தொழில் நுட்ப மாற்ற செயற்பாடுகளை நடத்துதல் ஆகிய வற்றை உள்ளடக்குகின்றது.

பாதீடு

அட்டவணை 2.2.3.1 வருடாந்தப் பாதீடு -2011 (ரூ)

செலவு விடயம்	ஒதுக்கீடு	செலவீனங்கள்	செலவீன வீதம்
மூலதனம்	164,500	143,404	87
மீண்டுவரும் நிகழ்ச்சி திட்டங்கள்	1,552,505	1,353,198	87
பெறுமதி சேர்க்கை (பழங்கள், மரக்கறிகள், தானியங்கள் NARP)	1,000,000	253,140	25
விவசாய உற்பத்திகளின் சந்தையும் பெறுமதிச் சங்கிலி உருவாக்கமும் AWRN	4,000,000	2,878,254	72
மாதிரி கிராமங்கள் உருவாக்கம் AWRN	1,000,000	69,671	7
முயற்சியாண்மை அபிவிருத்தி	2,000,000	292,886	15
உள்ளூர் உணவு நுகர்ச்சியை அதிகரித்தல் AWRN	1,000,000	825,342	83
FRU ன் தொழிற்சாலை கட்டங்கள் திருத்துதல் AWRN	1,000,000	105,450	11
உணவு பதனிடுதல் தொழிற்சாலை உருவாக்குதலும் அதன் மூலம் விவசாயிகளின் வருமானத்தை கூட்டுதலும் - கொரியா திட்ட நிதியம்	3,600,000	667,966	19
மொத்தம்	**15,317,605**	**6,589,311**	**43**

முன்னேற்றம்

ஆராய்ச்சி

- மிளகாய், ஊறுகாய் செய்வதற்கான செய்முறை உருவாக்கப்பட்டுள்ளது. ஜல பீனோ மிளகாயானது உப்பு, வினாகிரி, சினி, ஆகியவற்றுடன் சேர்த்து வெற்றிகரமான ஊறுகாய் தயாரிக்கப் பட்டுள்ளது.
- பாண் தயாரிப்பிற்கு தேவையான அரிசி மாவை அடிப்படையாகக் கொண்ட ஆரம்பக் கலவை வெற்றிகரமாக உருவாக்கப் பட்டுள்ளது
- மங்குஸ்தானின் தோலை உரித்து உடனடி யாகப் பரிமாறுவதற்குரிய ஆராய்ச்சி அபிவிருத்தி செயற்பாடுகளில் முன்னேற்றம் உள்ளது.
- சுரைக்காய் சதையை பாவித்து சுரைக்காய் சார்ந்த இனிப்புகள் அறிமுகப்படுத்த ப்பட்டுள்ளது.
- பொட்டாசியம் மட்டத்தை மேம்படுத்தல் மூலமாக மாம்பழத்தில் நோய்களை கட்டுப படுத்தும் ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளது. இருமடங்கு பொட்டாசியம் சிபாரிசானது பூத்தலுக்கும், பழ உருவாக்கத்திற்கும் காரணமாக அமையும். பழத்தைப் பிடித்து வைத்திருக்கும் தன்மையும் முன்னேற்ற மடைந்துள்ளது. தோல், சதை ஆகிய வற்றின் நிறங்களின் உற்பத்தி முன்னேற்ற மடைந்துள்ளது.
- இருமடங்கு பொட்டாசியம் சிபாரிசானது ரெட்லேடி பப்பாசியில் அந்திரக்னோஸ், பியுசாரியம் அழுகல் உருவாக்கம் போன்ற வற்றை குறிப்பிடத்தக்களவு குறைத்துள்ளது. இந்த அவதானிப்பானது உட்புகுத்தப்பட்ட பழங்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
- இருமடங்கு அளவுடைய பொட்டாசியப் பிரயோகமானது அன்னாசியில் கபில நிறமடைவதைக் குறிப்பிடத்தக்களவு தடுக்கின்றது. இந்த கற்கையிலிருந்து உயர் மட்டமான யூரியா பாவனையானது உட்பகுதியில் கபில நிறமடைவதை கூட்டுகிறது.
- அறுவடைக்கு முன்னான நடவடிக்கை செயன்முறைகளானது இழையவளர்ப்பின் மூலம் உருவாக்கப்பட்ட வாழையில் அறுவடைக்கு பின்னான தரத்தினை மேம்படுத்தி அதிகரிக்க உதவுகின்றது.அதிக அளவுடைய பொட்டாசியமானது வாழையின் பருமனையும் முந்திய பூத்தலையும் அதிக ரித்துள்ளது. உரிய சிபாரிசுடன் உடைய தாவரங்களைப் பார்க்கவும் உயர் அளவுடைய பொட்டாசியம் பிரயோகித்த தாவரங்களானது வீரியமாகக் காணப்பட்டுள்ளது.
- முதிர்ந்த பருத்த "வெரலு" ஆனது உயர் அளவுடைய ஒட்சியேற்ற நிரோதிகளையும் "ஹன் வெரலு" ஆனது "மகா வெரலு" வை விட உயர் அளவுடைய ஒட்சியேற்ற நிரோத செயற்பாட்டையும் உடையது.
- பலாப்பழமானது உயர் ஒட்சியேற்ற நிரோதிகளை உடையது. விசேடமாக விதைக்கும் சதைக்கும் இடைப்பட்ட பகுதியில் காணப்படும் ஒட்சியேற்ற நிரோதி அதிக செயற்பாடு உடையது.
- கறிவேப்பிலையைப் பாவித்து உருவாக்கும் தேயிலைப் பைகளின் தொழில்நுட்பம் விருத்தி செய்யப்பட்டுள்ளது.

அபிவிருத்தி செயற்பாடுகள் :-

- "பதப்படுத்தும் தொழிற்சாலை உருவாக்கம் மூலம் விவசாயிகளின் வருமானத்தை மேம்படுத்துதல்" திட்டமானது கொரியா அரச நிதி மூலம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. சிறிய அளவிலான பதப்படுத்தும் தொழிற் சாலையானது குண்டசாலையில் நிறுவப் பட்டுள்ளது. இந்த பதப்படுத்தும் தொழிற்சாலையானது பதப்படுத்தும் பயிற்சிக்காகப் பாவிக்கப்படவுள்ளது.

- விவசாய உற்பத்திகளின் சந்தைப்படுத்தல், பெறுமதி சங்கிலி நிகழ்ச்சி உருவாக்கம் போன்றவற்றின் கீழ் 20 பயனாளிகள் கண்டுப்பிடிக்கப்பட்டுள்ளனர். பிளாஸ்டிக் தட்டுக்கள் (சுமார் 2000), நிறுக்கும் உபகரணங்கள், பெயர்ப் பலகைகள் போன்றன 50% மானியத்துடன் வழங்கப்பட்டுள்ன.
- உணவு ஆராய்ச்சிப் பிரிவு தொழிற்சாலை கட்டடமானது வெற்றிகரமாகத் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

பயிற்சி நிகழ்ச்சிகள்

- மொத்த விற்பனையாளர்கள், கொண்டு செல்பவர்கள், சேகரிப்பவர்கள், சில்லறை விற்பனையாளர்கள் போன்றவர்களுக்குப் பழங்கள், மரக்கறிகளின் அறுவடைக்கு பின்னரான இழப்புகள் பற்றிய பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டுள்ளது.
- 300 விவசாய டிப்ளோமா மாணவர்கள், 148 பல்கலைகழக மாணவர்கள், 150 தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்கள் ஆகியோர் அறுவடைக்கு பின்னான தொழில்நுட்பங்கள் உணவு பதனிடுதல் போன்றவற்றில் பயிற்றப்பட்டுள்ளனர்.
- உணவு பதனிடுதல் சம்பந்தமான 30 விதாதா நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளது.
- AGEDIS அனுசரணை பயிற்சிகள் - பழங்கள், மரக்கறி பதனிடுதல், அரிசி சார்ந்த உற்பத்திகள் சம்பந்தமான 02 பயிற்சி வகுப்புக்கள் தனியார் நிறுவனங்களில் இருந்து பங்கு பற்றியவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.
- 4 (125 பேர்) அரிசி சார்ந்த உற்பத்தி பொருட்கள், 55 (790 பேர்) பழங்கள், மரக்கறிகள் பதனிடுதல் போன்ற பயிற்சி நிகழ்ச்சிகளும்.

தொழில்நுட்பப் மாற்றம்

- கறிவேப்பிலையைப் பயன்படுத்தி, தேயிலை பை, உற்பத்தி தொழில்நுட்பமானது "சாம் உற்பத்தி", இலக்கம் - 05, இரத்னகிரிய, ஜனபதய, லிந்துலைற்கு கொடுக்கப் பட்டுள்ளது.
- FRU ஆனது தொடர்ச்சியாக ஆய்வுகூட வசதிகளை வழங்கிக் கொண்டிருக்கிறது. இந்த வருடத்தில் உடனடியாகப் பரிமாறும் பானங்கள், சட்னி, கோடியல், ஜேம், நீரகற்றப்பட்ட மரக்கறிகள், பேஸ்ட், பைட்ஸ், பிரஞ்ச் பிரைய் போன்றவற்றின் மாதிரிகள் தனியார் வளாகத்திலிருந்து பெறப்பட்டு ஆராயப்பட்டு பொருட்களின் தரம் உறுதி செய்யப்பட்டுள்ளது.
- மரக்கறிகளுக்கான 150 உணவு தரமதிப் பீட்டு அறிக்கைகளும், பழங்களுக்கான 60 அறிக்கைகளும், கிழங்குகளுக்கான 100 அறிக்கைகளும் இனவிருத்தியாளர்கட்கு வழங்கப்பட்டுள்ளது.

2012 ற்கான திட்டம்

ஆராய்ச்சி

- மங்குஸ்டீன் தோலைப் பாவித்து மங்குஸ்டீன் பானத்தின் அபிவிருத்தி.
- பப்பாசிப்பழத் தோல் அபிவிருத்தி. (Leather)
- Kesi-Pissan (cyclea burmanni) பழத்தை பாவித்து ஜெலி தயாரிப்பு.
- சுரைக்காயைப் பாவித்து செய்யப்படும் தின்பண்டங்களின் அபிவிருத்தி.
- அரிசிமாவைப் பாவித்து கேக்கலவையின் அபிவிருத்தி.
- சந்தையில் நுகரப்படும் பழங்களில் கல்சியம் காபைட் (CaC_2) பாவிக்கப்பட்ட பழங்களை கண்டுபிடிக்கும் முறையின் அபிவிருத்தி.
- வெவ்வேறான கீரை இன விதைகளை பாவித்து அரிசி சார்ந்த விஸ்கட்களையும் அவற்றின் போசணை தரங்களின் வித்தியாசங்களையும் அறிதலுக்கான அபிவிருத்தி.

- பழம் சார்ந்த அரிசி "வண்டப்பம்" ஆனது அரிசி மாவுடன் பாவித்தும் அதன் சேமிப்பு தொடர்பான கற்கையும்.
- டிரகன் பழத்திலிருந்து உருசியான உணவு உற்பத்திற்கான அபிவிருத்தி.
- வேறுபட்ட மரவள்ளி வர்க்கங்களை பயன்படுத்தி தரமான சவ்வரிசிற்கான கற்கை நெறி.
- தெரிவு செய்யப்பட்ட வற்றாளை வர்க்கங்களுக்கான பதப்படுத்தும் செயல்முறை வழங்குதல் தொடர்பான சேமிப்பு கற்கை நெறி.
- தெரிவு செய்யப்பட்ட குறைவான பாவனையுடைய கிழங்கு வகைகளின் சுவையினை அதிகரிப்பதற்கு வழங்கப்படும் வித்தியாசமான பதப்படுத்தல் செயன்முறைகள்.
- வெங்காய இலையில் இலகுவான பதப்படுத்தல் செயன்முறை சம்பந்தமான அபிவிருத்தி.
- சாதாரண சந்தை, உயர் சந்தை போன்ற வற்றில் உள்ள மரக்கறிகளின் இலகுவான பதப்படுத்தல் செயன்முறை தொடர்பான கணிப்பீடும், முன்னேற்றத்தை செய்தலும்.
- தெரியப்பட்ட இனங்களில் மிளகாய் தூளின் தரத்தை கூட்டுதல்.
- சுரைக்காயைப் பாவித்து உற்பத்தி பொருட்கள் அபிவிருத்தி (ரொபி, RTS).
- பப்பாசியில் அறுவடைக்கு பின்னான இழப்பை குறைத்தல். (அந்திரக்னோசு நோயை கட்டுப்படுத்தல்).

உத்தியோகத்தர் பட்டியல்

பதவியணி	எண்ணிக்கை
தலைவர்	01
ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள்	03
விவசாய போதனாசியர்கள்	03
ஆராய்ச்சி உதவியாளர்கள்	02
விவசாய கண்காணிப்பு உத்தியோகத்தர்கள்	01
நிகழ்ச்சிதிட்ட உதவியாளர்கள்	01
முகாமைத்துவ உதவியாளர்கள்	02
ஆய்வுகூட பதில் உதவியாளர்கள்	02
சாரதி	01
இயந்திர இயக்குனர்	01
மின்சார உதவியாளர்	01
தொழிலாளி	06
தொழிலாளி (ஒப்பந்தம்)	07
காவலாளி	02
மொத்தம்	**33**

2.2.4 பிராந்திய விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம் (RARDC), பண்டாரவெல

RARDC பண்டாரவெல ஆனது கடல் மட்டத்தி லிருந்து 1200m உயரத்தில் அமைந்துள்ளது. இது ஊவா வலயம், பலாங்கொடைப் பிரிவு, சப்பிரகமுவ மாகாணம் போன்றவற்றில் ஏதுவான தொழில்நுட்ப அபிவிருத்தி மூலம் விவசாய உற்பத்திகளைப் பெருக்குவதற்குப் பொறுப்பான மத்திய நாட்டு இடைவலயத்தின் முக்கிய ஆராய்ச்சி நிலையமாகும்.

இது ரகங்கலை, மதுறுகெட்டிய ஆகிய நிலையங்களில் 2 துணை நிலையங்களையும் அத்தோடு பிபிலை, முத்துகண்டிய ஆகிய இடங்களில் ஆராய்ச்சிப் பண்ணையையும் கொண்டுள்ளது.

பண்டாரவெல RARDC ற்குரிய ஆதிக்கப் பகுதியானது, விவசாயக் காலநிலை வலயங்களான IU_2 , IM_2 , IM_3 , WM_3 , IL_2 , WM_3 ஆகியவற்றை உள்ளடக்குகின்றது. இருந்தாலும் இந்த ஆராய்ச்சி நிலையத்தின் முக்கிய பங்கானது ஆராய்ச்சி நிகழ்ச்சிகளை முன்னெடுத்து செல்வதாகும். அத்தோடு இந்த நிலையமானது விவசாய அமைச்சின் நிதிஉதவியுடன் பல விவசாய அபிவிருத்தி நிகழ்ச்சிகளை நடத்துகின்றது. மாதிரிகிராம அபிவிருத்தி, சேதனப் பசளை உற்பத்தியும் விநியோகமும், பேரிக்காய், தோடை, ஆனைக்கொய்யா, மாம்பழம், உருளைக்கிழங்கு ஆகியவற்றிற்கான உயர்தர தாவரநடுகைப் பொருட்கள் உற்பத்தி போன்றன அதன் சில நடவடிக்கைகளாகும். இந்த நடவடிக்கைகளின் முக்கிய இலக்கானது விவசாய சமூகத்தில் உயர்தர தொழில் நுட்பங்களைப் பாவித்து விவசாய உற்பத்தியை அதிகரிப்பதாகும்.

பாதீடு

அட்டவணை 2.2.3.1 வருடாந்தப் பாதீடு –2011 (ரூ)

செலவு விடயம்	ஒதுக்கீடு	செலவீனங்கள்	செலவீன வீதம்
மீண்டுவரும் செலவு	8,235,028	7,383,696	90
மூலதனச் செலவு	6,395,223	3,296,790	52
திட்டங்கள் - RARDC பண்டாரவெல			
NARP – போஞ்சி	400,000	379,347	95
NARP – உருளைக்கிழங்கு	600,000	499,258	83
NARP – தோடை	200,000	192,846	96
NARP – பீடை மற்றும் நோய்	200,000	139,321	70
சேதனப்பசளை	900,000	749,386	83
மாதிரிக்கிராமம்	300,000	132,713	44
கலப்பின தக்காளி விதை உற்பத்தி	400,000	315,659	79
இழைய வளர்ப்பு	3,000,000	1,602,436	53
உற்பத்தியாளர் விதை உற்பத்தி	250,000	239,333	96
பழங்கள் தாவர நடுகைப் பொருள் உற்பத்தி	227,500	212,600	93
மரக்கறி உற்பத்தி	150,000	99,520	66
ARS மொனராகலை			
NARP - தோடை	250,000	210,225	84
NARP – வாழை	100,000	96,130	96
சேதனப்பசளை	600,000	450,308	75
மாதிரிக் கிராமம்	200,000	98,145	49
பழங்கள், தாவர நடுகைப் பொருள் உற்பத்தி	1,130,000	477,559	42
ARS ரகங்கலை			
சேதனப்பசளை	500,000	391,844	78
கலப்பின விதை உற்பத்தி	300,000	259,849	87
NARP – போஞ்சி (முன்னேற்றம்)	300,000	216,983	72
NARP – வாழை	50,000	34,187	68
NARP – தோடை	200,000	136,374	68
மாதிரி கிராமம்	100,000	95,661	96
மொத்தம்	**22,287,751**	**11,974,403**	**54**

முன்னேற்றம்

இந்த வருடத்திற்குரிய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான மீள் பார்வையானது மரக்கறி (போஞ்சி, கரட், கோவா, தக்காளி), உருளைக்கிழங்கு, உப வெப்ப, வெப்ப வலயத்திற்குரிய பழங்கள் (இனிப்புத் தோடை, மண்டரின், அப்பிள், பேரிக்காய், பீச்சஸ், ஸ்ரோபரி) மலரியல் தாவரங்களான (ரோஸ், ஜேபரா, கிரிசாந்திமம், அந்தூரியம், அஸ்ரா, மடொனலில்லி, கானேசன், சுப்பர்டெஸ்சி) ஆகியவற்றில் செலுத்தப்பட்டது.

பயிர் மேம்பாடு

- போஞ்சிக்குரிய வர்க்க மேம்படுத்தல் நிகழ்ச்சியானது உள்ஞர் மற்றும் வெளியூர் தெரிவுகளுடன் தொடரப்பட்டது. BN 16 (21.21 T / ha) இனங்களும் Bil – 1 (21.18 T/ha) ஆகியன சோதனை இனமான KWG (9.71T/ha) உடன் ஒப்பிடும் போது உயர் விளைச்சலைக் கொடுத்தது.
- 2011 வருடம் முழுவதும் கத்தரி, தக்காளி ஆகியனவற்றிற்கான தேசிய ஒருங்கிணைந்த வர்க்க சோதனை தொடரப்பட்டது.
- போஞ்சிக்கான மூலவுயிருருச் சேமிப்பு, மதிப்பீடு, சம்பந்தமான நிகழ்ச்சி ARS ரஹங்கலை உள்ஞர் விவசாயிகளிடம் இருந்து சேகரிக்கப்பட்ட 63 நீள் போஞ்சி தெரிவுகளில் இருந்து நடாத்தப்பட்டது. இவற்றுள் 8 சிறந்த பெறுபேற்றைத் தந்தன.
- உள்ஞர், ஜப்பான் தோடை, நாரத்தை வர்க்கங்கள் RARDC, பண்டார வெல, ARS மொனராகலை, ARS ரஹங்கல போன்றவ ற்றால் மதிப்பிடப்பட்டது. ஜப்பான் வர்க்கங்க ளான Nichini Nichigo, Nanken, Nichigo ஆகியன தரமான நல்ல பழங்களை உற்பத்தி செய்தது. இவற்றின் பெறுபேறு ஏனைய இடங்களை விட RARDC பண்டாரவெலவில் நன்றாக அமைந்தது.
- வெப்ப வலயத்திற்குரிய தாய்த்தாவர பழப் பயிர்களான அப்பிள், பீச்சஸ், பேரிக்காய் சைனிஸ் கொய்யா, நெக்ரரின், ஆனைக்கொய்யா, கரம்போல போன்றன. RARDC ன் ஆராய்ச்சி நிலையங்களில் பராமரிக்கப்படுகின்றது.
- போஞ்சிக்குரிய மூலவுயிருருச் சேமிப்பு மற்றும் மதிப்பீட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 140 தெரிவுகள் பதுளை, கண்டி, இரத்தினபுரி, மற்றும் மாத்தளை மாவட்டங்களில் இருந்து சேகரிக்கப்பட்டது.
- தக்காளியின் பத்தியா இனத்திற்குரிய பெற்றோர் தெரிவுகளின் விதை உற்பத்தி மேற்கொள்ளப்பட்டது. இவற்றுள் 722g பெண் ஆகவும் (P3) 591g ஆண் ஆகவும் காணப்பட்டது.

பயிராக்கவியல்

- சிறுபோகத்தில் RSC உருளைக்கிழங்கி லிருந்து அதாவது சோளம், உருளைக் கிழங்குடன் ஒருங்கிணைந்த பயிர்ச் செய்கை மூலம் உயர் விதைக் கிழங்கு பெறப்பட்டது. இரு பயிர்களும் ஒரே காலத்தில் நடுகை செய்யப்பட்டது.

தாவரப் பாதுகாப்பு

- ஆரம்பச் சோதனை முடிவு மூலம் பெறப்பட்ட திருப்திகரமான முடிவுடன் Hexaconazole 5%EC ஆனது போஞ்சி தாவரத்தில் தளிர் நோயை (Follar disease) கட்டுப்படுத்தும் ஒரு புதிய பங்கசு நாசினி யாகும் (துருநோய், கோண இலைப் புள்ளி, அந்திரக்னோசு). Tebucona zole, Clorotha lonil ஆகிய சிபாரிசு செய்யப்பட்ட இரசாயனங்களை விட புதிய மூலக் கூறானது நல்ல பலாபலன்களைக் காட்டியது.
- குறைந்த நஞ்சுடைய, சூழலுக்குப் பாதுகாப்பான, ஏற்றுக் கொள்ளக் கூடிய சேதன இரசாயனமான Kaligreen (பொட்டா

சியம் இருகாபனேற்று) ஆனது பொலித்தீன் கூடாரங்களில் வளர்க்கப்படும் தக்காளியில் இலை தளிர் நோயை கட்டுப்படுத்துவ தற்காக மதிப்பிடப்பட்டது. இது தாவர இலைகளில் நச்சுத் தன்மையைக் காட்டு கின்ற கந்தகத்தை விட சிறந்த பெறு பேற்றைத் தந்தது.

- சாதாரண சந்தையிலிருந்து பெறப்பட்ட கோவா வர்க்கங்களானது RARDC, பண்டார வெலயில் செயற்கை முறை மூலம் தடைக் கிருமிகளைப் புகுத்தியும், இயற்கை நோய் அமுக்கத்தின் கீழும் பக்ரீரியா நோய்க்கான *(Erwinia* cartovora, Xanthomonas campestris) எதிர்ப்புச்சக்தியானது மதிப்பிடப் பட்டுள்ளது. பரிசோதிக்கப்பட்ட தெரிவுகளில் நின்ஜா, சாமுராய் போன்றன இரு நோய்களுக்கும் சகிப்புத் தன்மையைக் காட்டின.

- ஒரு வர்த்தக வேம்பு கலவை நிம்பசிடையன் 1% (1ml / l) வேம்பு விதை நீர்ப்பிரித்தெடுப்பு ஆகியன சிபாரிசு செய்யப்பட்ட செயற்கை குளோபுளு அசோரோன் (1ml / l) இரசாயன த்துடன் கோவா மயிர்கொட்டி சிக்கலுக்காக மதிப்பிடப்பட்டது. வேம்புக் கலவையும் தொகுத்த இரசாயனமும் குறைவான பீடைத் தாக்கப் பதிவுகளை சம அளவில் தந்தது. (1.93 ஆனது 1-10 அளவு) ஏற்றுக் கொள்ளக்கூடிய கோவா பூவின் தலை (1.92Kg / தலை அளவு) அளவுடன் பிரதிபலித்தது.

- தனிப் பயிரச்செய்கையை விடவும் கோவாவானது லீக்ஸ் உடன் வரிசை ஊடுப் பயிர் செய்கையில் உயர் விளைச்சலை சோதனை முடிவுகள் மூலம் தந்துள்ளது. ஆயினும் எந்த ஊடுபயிர்ச் செய்கை முறைகளிலும் பீடைதாக்க குறைவு அவதானிக்கப்படவில்லை.

- 0.5 ம் 0.75 g/l புதிய பூச்சி நாசினி கலவை களான விர்ராகோ 40 WGR ம் புளுவென்டய மைட் 20 WG ம் போஞ்சியில் காய்துளைப்பானுக்கு எதிராக மதிப்பிடப் பட்டது. ஒப்பீட்டளவில் பரிகரிக்கப்பட்ட, பரிகரிக்கப்படாதவற்றில் இந்த இரண்டு இரசாயனங்களிலும் (நொவலுரோன் 100g /l EC 1 ml / l) குறைந்த பீடைத்தாக்கம் பதியப்பட்டது. எப்படியிருந்தும் உயர் அளவுப் பரிகரணம் குறைவான காய் விளைச்சலைக் கொடுத்தது.

பூங்கனியியல்

- CaCl2 ஐ பயன்படுத்திப் பழுத்தலைத் தாமதப்படுத்தும் செயற்பாடு பற்றிய ஓர் ஆய்வு கூடப் பரிசோதனை நடாத்தப்பட்டது. 4% - 6% ன் செறிவில் இரசாயனத்தின் அமுக்க வடிகட்டும் திறனில் (250 mm Hg ஆனது 120min) சிறந்த முடிவு பெறப்பட்டது.

இழைய வளர்ப்பு

- Ms ஊடகமானது 0.1 mg / l TDZ, 1 mg / l BAP உடன் வழங்கப்பட்டு ஸ்ரோபரி வர்க்க மான சண்ட்ரில் முறையே தண்டு மீள் உருவாக்கம், இனப்பெருக்குதல் ஆகிய வற்றின் சிறந்த ஊடகமாக மதிப்பிடப்பட்டது.

மலரியல்

30 x 10 cm ம் 20 x 10 cm தாவர இடைவெளியில் சுப்பர் டெய்சியில் உயர்ந்தளவில் பூ உற்பத்தி பெறப்பட்டது.

- நீர் உள் எடுத்தல், புதிய பூக்களின் நிறை, பூ விரியும் வீதம், ஆகியவற்றைக் கவனத்தில் கொண்டு $AgNO_3$, STS, சுக்ரோசு ஆகிய கரைசல்களில் சுப்பர்டெய்சியை பதப்படுத்தப் பொருத்தமானவை.

- பூத்தட்டின் 1வது, 2வது மகரந்த வளையத் தோற்றப்பாட்டிற்கு இடைப்பட்ட நிலையானது ஜேர்பரா பூக்களின் அறுவடைக்குப் பொறுத்தமான முதிர் நிலை ஆகும்.

விஷேட திட்டங்கள்

இந்த நிறுவனமானது ஆராய்ச்சி நடவடிக்கை களுக்கு மேலதிகமாக சில விஷேட திட்டங்களை நிலைய உத்தியோகத்தர்களால் நடாத்தி புதிய தொழிநுட்பங்களைப் பரப்பப்புகின்றது. இந்த நிகழ்ச்சிகளுக்கு விவசாய அமைச்சின் மூலம் நிதி ஒதுக்கப்பட்டிருப்பதுடன், இந்த திட்டத்தின் இலட்சியமானது ஊவா மாகாண விவசாய சமூகத்தின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதாகும்.

வேர்த்தண்டுத் துண்டம் மூலம் விதை உருளைக்கிழங்கு உற்பத்தி

- 34,000 ற்கு மேற்பட்ட சிறிய கிழங்குகள் உற்பத்தி செய்யப்பட்டு அவற்றுள் 28,000 ஊவா மாகாண விவசாய சமூகத்திற்கு விநியோகிக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சி யானது மிகவும் வெற்றிகரமாக உள்ளதுடன் மேலும் சில விவசாயிகள் ஆராய்ச்சி நிலையத்திலிருந்து சிறிய கிழங்குகளை வாங்குவதற்கு உத்தேசித்துள்ளனர். 60,000 ற்கும் மேற்ப்பட்ட RSC RARDC ல் காணப்படுவதுடன் சிறிய கிழங்குகள் உற்பத்தி செய்யப்பட்டு உற்பத்தியானது விவசாயிகளுக்கூடாக விநியோகிக்கப்பட்டும் மற்றும் பரிசோதனை நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படுகின்றது.

மாதிரிக் கிராம நிகழ்ச்சி

மூன்று மாதிரி கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டு மூலப் பொருட்கள் விநியோகிக்கவும் அது தொடர்பான தொழிநுட்பம் வழங்கப்படவும் மனித வளக்குறை காரணமாக இறுதியாக ஒரு கிராமம் தெரிவு செய்யப்பட்டு சில விவசாய உள்ளீடுகள், தொழிநுட்பங்களை அவர்களுக்கு ஒழுங்கான முறையில் வழங்கப்படுவதன் மூலம் உற்பத்தியை அதிகரிக்கும் அதே நேரம் பொருளின் தரமும் அதிகரிக்கச் செய்ய முடியும்.

தாவர நடுகைப் பொருள் உற்பத்தி

- 250 பேரிக்காய், ரகங்கலை தெரிவு ஒட்டுத் தாவரங்கள் விவசாயிகளிடையே பகிர்ந்தளி க்கப்பட்டுள்ளது. 1300 பேரிக்காய் ஒட்டுக் கட்டைகள் ஒட்டுத் தாவரங்கள் உற்பத்திக்காக RARDC ல் உள்ளது.
- தோடை நடுகைப் பொருள் உற்பத்தியும், தொடர்வதுடன் 100 ஆரோக்கியா வர்க்க ஒட்டுத் தாவரங்கள் உற்பத்தி செய்யப்பட்டு 500 விவசாயிகளுக்கு விற்கப்பட்டுள்ளது.
- 1200 அன்னாசி, தோடை ஒட்டுத் தாவரங்கள் உற்பத்தி செய்யப்பட்டு 200 தாவரங்கள் உல்பத்கம பூங்கனியியல் பண்ணைக்கு வழங்கப்பட்டுள்ளது.

சேதனப் பசளை உற்பத்தியும் பாவனையும்

- போஞ்சி, தக்காளி, தோடை ஆகிய வற்றுக்கான IPNS பொதி அபிவிருத்தி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மரக்கறிப் பயிர்களுக்கான ½ ஏக்கர் IPNS செய்து காட்டல் துண்டம் நிறுவப்பட்டது. சேதனப் பசளை உற்பத்தியானது தொடரப்படுவதுடன் 30.5 மெ. தொன் உற்பத்தி செய்யப்பட்டும் உள்ளது.

சேவைகள்:-

உற்பத்தியாளர் விதை உற்பத்தி

- DOA-SCS ஆனது நீள் போஞ்சி வர்க்கங்களின் கெப்பற்றிபொல நீலம் (154 Kg), லங்கா பட்டர் (60 kg), KWG (10 kg) ஆகியவற்றில் உற்பத்தியாளர் விதைகளை அத்தாட்சிப்படுத்தியும், பற்றை போஞ்சி வர்க்கங்களான சஞ்ஜய (61kg) வேட் (3kg) ஆகியவற்றில் உற்பத்தி செய்தும் உள்ளது.

மண் பரிசோதனை சார்ந்த பசளை சிபாரிசு நிகழ்ச்சி

200 ற்கும் மேற்பட்ட மாதிரிகள் பரிசோதிக்கப் பட்டு அதற்கேற்ப பசளை சிபாரிசும் வழங்கப் பட்டது.

தொழில்நுட்பப் பரிமாற்ற செயற்பாடுகள்

- ஊவா மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் நடைபெற்ற 04 PTWG கூட்டங்களில் RARDC உத்தியோகத்தர்கள் பங்குபற்றினர். அத்துடன் பருவத்திற்கு முன்னான பயிற்சி நிகழ்ச்சிகளில் விரிவாக்க உத்தியோகத்தர் களுக்கான தொழில்நுட்ப பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.
- மலர்த் தாவரங்கள், உருளைக்கிழங்கு, பேரிக்காய், ஆனைக் கொய்யா ஆகிய பயிர்ச் செய்கைகளுக்கான பல பயிற்சி வகுப்புக்கள் விவசாயிகளுக்காக நடத்தப் பட்டது. இவற்றுள் சில விவசாயிகளின் வயலிலேயே நடாத்தப்பட்டது.
- மரக்கறிகள், பழங்கள், உருளைக்கிழங்கு, மலர்த் தாவரங்கள் உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு, நோய் பீடை முகாமைத்துவம் சம்பந்தமான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளது.
- 1000 பாடசாலை மாணவர்களுக்கும், 150 விவசாயிகளுக்கும் பயிற்சி வகுப்புக்கள் வழங்கப்பட்டுள்ளது.

2012 ற்கான திட்டம்

மரக்கறிகள்:~

- பயற்றை மற்றும் நீள போஞ்சியில் NCVT ம் VAT ம்
- கடுகு தாவரத்தில் NCVT, VAT
- பொலித்தீன் கூடாரங்களிலுள்ள குடை மிளகாய் (Bell pepper) ற்கான சேதன வளர்ப்பு ஊடகம் பற்றிய கற்கை.
- DOA ஆல் அங்கிகரிக்கப்பட்ட கலப்பின தக்காளி மற்றும் கத்தரி ஆகியவற்றின் பெற்றோர் விதை பொருட்கள் உற்பத்தி
- "லங்கா கரட்" விதை மற்றும் வேர் உற்பத்திற்கான சிறந்த நடுகை அடர்த்தியைக் கண்டுபிடித்தல்.

விதை உற்பத்தி

- போஞ்சி தாவரத்தின் உற்பத்தியாளர் விதை உற்பத்தி (கெப்பற்றிபொல நீலம், பலாங்கொடை நீலம், லங்கா பட்டர், KWG, சஞ்ஜய, வேட்)

உருளைக்கிழங்கு

- வேர்த் தண்டு துண்டம் மூலம் தரமுடைய விதை உற்பத்தி.
- சீதாஎலியவுடன் சேர்ந்து NCVT , VAT சோதனைகள்.
- நீர் வேளாண்மை -விதை உருளைக்கிழங்கு உற்பத்திற்கான தொழில்நுட்ப அபிவிருத்தி யும் நடைமுறைப்படுத்தலும்.
- உருளைக்கிழங்கின் சிறிய கிழங்குகள் மற்றும் RSC ன் விளைச்சல் அதிகரிப்பி ற்கான தொழில்நுட்ப அபிவிருத்தி.

பூங்கனியியல்

- RARDC பண்டாரவெல ARS ரகங்கலை, ARS மொனராகலை போன்ற இடங்களில் தோடை, மண்டரின் ஆகியவற்றின் ஜப்பான் வர்க்கங்களின் மதிப்பீடு.
- வெப்பவலயப் பழங்களின் தாய் தாவரங்களின் பராமரிப்பு eg:- அப்பிள், பெயர்ஸ், பீச், சைனிஸ் கொய்யா, நெக்ரரின், ஆனைக் கொய்யா, கரம்பொல.
- தோடையின் ஒட்டுக்கட்டை வர்க்கங்களின் மதிப்பீடு.

- பேரிக்காய், பீச், ஆகியவற்றின் அறுவடைக்கு பின்னான சேமிப்புக் காலத்தைக் கூட்டுதல்.
- தோடையில் பூத்தூண்டல் பற்றிய கற்கை.

தாவரப் பாதுகாப்பு

- பழங்கள், மரக்கறிகள், உருளைக்கிழங்கு, பூக்கும் தாவரங்களில் நோய் பீடைகளுக்கான பங்கசு நாசினி, பூச்சி நாசினிகளைத் தெரிதல்.
- றோசா குலவகைகளில் சாம்பல் பூஞ்சண *(Brtrytis cinerea)* எதிர்ப்பிற்கான மதிப்பீடு.
- கோவா வர்க்கங்களின் மென் அழுகலின் நோய்க்கு *(Erwinia carotovora)* எதிரான ஆய்வுகூட மற்றும் கள மதிப்பீடு.
- தோடைகளுக்கான IPM பொதியின் அபிவிருத்தி.
- போஞ்சியில் வேர் முடிச்சிற்கான IDM பொதியை இனங்காணுதல்.
- பசளை மூலம் ஜேபராவில் சாம்பல் பங்கசு, தண்டு உடைதல் போன்றவற்றைக் கட்டுப்படுத்துதல்.
- மரக்கறி பீடைகளுக்கு எதிரான புதிய பூச்சிநாசினிகளைத் தெரிதல்.
- மரக்கறிப்பீடைகளுக்கெதிராக புதிய பூச்சி நாசினிகளின் தெரிவு.
- சேதனச் செய்கை கறிமிளகாயில் உறிஞ்சும் வகை பீடைகளின் (பனிப்பூச்சி) முகாமைத்துவம்.
- கோவாவில் பீடை தாக்கத்தில் வரிசை ஊடு பயிர்ச்செய்கையின் தாக்கம்.
- கறிமிளகாய், தக்காளி ஆகியவற்றில் மூலி கைச்சாறு, பாவனை மூடுபடையிடல் ஆகியவற்றின் மூலம் பீடைதாக்கத்தைக் குறைத்தல்.

மலரியல்

- ஜெபெரா தாவரத்தின் இனப்பெருக்கப் பகுதிகளின் மதிப்பீடு.
- கிரிசாந்தமம் தாவரத்தின் பூக்களின் தரத்தை அதிகரித்தல்.
- "சுப்பர் டெய்சி" யில் அறுவடைக்கு பின்னான தர முகாமைத்துவ அபிவிருத்தி.
- ரோசாத் தாவரத்தில் உயர் தரமான வெட்டுப் பூக்கள் உற்பத்திக்கு ஏதுவான தாவர அடர்த்தியை அறிதல்.

இழைய வளர்ப்பு

- வளர்ச்சி ஹோர்மோன்கள் மூலம் ஜேபரா தாவரத்தில் உறுஞ்சிகளின் உற்பத்தியை அதிகரித்தல்.
- ஒக்ஸ்-ஜ-டெய்சில் பூக்களின் தரத்தை அதிகரிப்பதற்கு இரசாயன மாற்றம், UV கதிர் பாவனை.
- உருளைக்கிழங்கு, அந்தூரியம், மடோனா லில்லி, ஜெபரா ஆகியவற்றின் நடுகைப் பொருள் உற்பத்தி.

மண் இரசாயனம்

- விதை உருளைக்கிழங்கு உற்பத்தியில் N,P,K பசளை மட்டங்களை தாபித்தல்.
- குறைவான வயதுடைய பூக்கோவா வர்க்கங்களுக்கு பசளை அளவுத் திட்டங்களை அபிவிருத்தி செய்தல்.
- பொலித்தீன் வீடுகளில் மண் பாவனையில் பயிரிடும் தாவரங்களுக்கான குறைவான செலவுடைய பசளைக் கலவை கணிப்பீடு.
- போஞ்சி, தக்காளி, தோடை ஆகியவற்றிற்கான IPNS.
- தோடையின் போசணைக் குறைபாடு அறிகுறி கட்டுப்பாடு.

- நீர் ஊடகவளர்ப்புக்கான முற்றாக கரையும் பசளை கலவை அபிவிருத்தி.

உத்தியோகத்தர் பட்டியல்

பதவியணி	எண்ணிக்கை
ஆராய்ச்சி உத்தியோக பொறுப்பதிகாரி	01
ஆராய்ச்சி உத்தியோகத்தர்	18
விவசாயக் கண்காணிப்பு உத்தியோகத்தர்	01
பொருளாதார உதவியாளர்	01
நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்	05
ஆராய்ச்சி உதவியாளர்	12
விவசாயப் போதனாசிரியர்	12
ஆய்வுகூட உதவியாளர்	02
பொது நிர்வாக உதவியாளர்	09
K.K.S	03
சாரதி	07
உழவு இயந்திர இயக்குனர்	03
தாவர ஒட்டுனர்	02
மேசன்	01
தச்சன்	01
காவலாளி	13
சுற்றுலா விடுதிக் காப்பாளர்	01
நிரந்தர ஊழியர்	83
ஒப்பந்த ஊழியர்	74
மொத்தம்	**249**

2.2.5 பிராந்திய விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம் (RARDC), மாக்காந்துறை

மாக்காந்துறையில் ஆமைந்துள்ள பிராந்திய விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையமானது. கம்பஹா, குருநாகல், புத்தளம் ஆகிய மாவ ட்டங்களின் விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவி ருத்தித் தேவைகளைப் பூர்த்தி செய்கி ன்றது. அத்துடன் கற்பிட்டி, வண்ணாத்திவில்லு ஆகிய இடங்களில் 2 விவசாய ஆராய்ச்சி நிலையங்க ளும், தபோவ, இகினிமிற்றியாவ, மற்றும் வாறியபொல ஆகிய இடங்களில் 3 அனுசரணை ஆராய்ச்சி அபிவி ருத்தி நிலையங்களையும் கொண்டுள்ளது. இப்பிரதேசம் பயிர் உற்பத்தியில் தன்னிறைவை அடைவதற்கு, தென்னை சார்ந்த பயிர்ச் செய்கைக்கான தொழில்நுட்பத்தை அபிவிருத்தி செய்து ஒருங்கிணைத்தலே, இந்நிலையத்தின் பிரதான ஆராய்ச்சி அபிவிருத்தி நடவடிக்கை களாகும்.

பாதீடு

அட்டவணை 2.2.5.1 வருடாந்தப் பாதீடு -2011 (ரூ)

செலவு விடயம்	ஒதுக்கீடு	செலவு	செலவு வீதம் %
மூலதனச் செலவு	3,045,226	1,077,156	35
மீண்டுவரும் செலவு	4,622,929	4,638,051	100
ஒருங்கிணைந்த தாவரப் போசணைத் தொகுதியை மேம்படுத்தலும் கூட்டுரம் தயாரித்தலும்	7,770,000	6,881,135	89
NARP	500,000	447,613	90
இழைய வளர்ப்புத் திட்டம்	2,000,000	1,517,465	76
பழ நடுகைப் பொருள் உற்பத்தி			
- அன்னாசி	330,000	327,651	99
- றம்புட்டான்	100,000	84,601	85
- கிழங்கு, வேர்ப்பயிர்கள்	70,000	36,000	51
மொத்தம்	**18,438,155**	**15,009,672**	**81**

முன்னேற்றம்

ஆராய்ச்சி

மண் விஞ்ஞானம்

- கூட்டெரு தயாரிப்பவர்களால் அனுப்பி வைக்கப்பட்ட 130 கூட்டெரு மாதிரிகளின் தரத்தை மதிப்பீடு செய்வதற்காக பகுப்பாய்வு செய்யப்பட்டது. அத்துடன் 117 கூட்டெரு மாதிரிகள் ஆராய்ச்சி செயற்பாடுகளுக்காகப் பகுப்பாய்வு செய்யப்பட்டன.
- மண் பகுப்பாய்வு மூலம் மண்ணைப் பரீட்சித்து, பசளையைச் சிபார்சு செய்ய 39 மண் மாதிரிகள் பெறப்பட்டன.
- 27 தாவர மாதிரிகளும், 96 நீர் மாதிரிகளும் பகுப்பாய்வு செய்யப்பட்டன.

வேர், கிழங்குப் பயிர்கள்

- மரவள்ளியின் விளைச்சலை 20% ஆல் அதிகரிப்பதற்கான ஓமோன் பரிசோதனை
- வற்றாளைப் பயிரில் நைதரசன், பொஸ்பரஸ், பொட்டாசியம் ஆகியவற்றை முறையே 60:140:120 என்ற விகிதத்தில் பிரயோகிக்கும் போது குறிப்பிடத்தக்க அளவில் விளைச்சல் அதிகரிப்புக் காணப்பட்டது.

மரக்கறிப் பயிர்கள்

- தெரிவு செய்யப்பட்ட மற்றும் உள்ளூர் பூசணி இனங்கள் தூய்மைப்படுத்தப்பட்டு உள்ளகக் கலப்பு குலவகை உற்பத்தி செய்யப்பட்டது.

  இரு உள்ளகக் கலப்பு குலவகையினை உப யோகித்து வெவ்வேறு வலயங்களில் தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்கப் சோதனை மேற்க்கொள்ளப்பட்டது.

மலர்ச் செய்கை

- அந்தூரியம் மலர் உற்பத்திக்குத் தேவையான மொத்த நைதரசன் தேவையைப் பூர்த்தி செய்ய நைதரசன் பசளையாக கலக்கப்படாத அமோனியம் சல்பேற் மட்டும் அல்லது கல்சியம் நைதரேற்று மட்டும் வழங்குவதிலும் பார்க்க, $N\text{-}NH_4^+$ இனையயும் $N\text{-}NO_3^-$ இனையும் முறையே 2:1 மற்றும் 1:2 ஆகிய விகிதங்களில் கொண்ட நைதரசன் பசளையைப் பாவிப்பது வினைத்திறனானது.

விதை நடுகைப் பொருள் உற்பத்தி

அட்டவணை 2.2.5.2 தாவர நடுகைப் பொருள் உற்பத்தி 2011

நிறுவனம்	தாவரத்தின் பெயர்	விற்கப்பட்ட தாவரங்களின் எண்ணிக்கை
(பி.வி.ஆ.அ.நி) மாக்காந்துறை	றகன் பழம்	878
	அந்தூரியம்	1020
	அன்னாசி	12400
	வாழை	959
வி.ஆ.நி கற்பிட்டி	மாதுளை	18321
	கொடிமுந்திரிகை	1705
	கொய்யா	2100

தொழில்நுட்பப் பரம்பல்

பயிற்சி நிகழ்ச்சிகள்

அட்டவணை 2.2.5.3 2011ல் நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை

நிகழ்ச்சித் தலைப்பு	நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை	பங்குபற்றியோரின் எண்ணிக்கை
கூட்டெரு தயாரிப்பு	189	11102
காளான் செய்கை	5	142
அன்னாசிச் செய்கை	5	220
மலர்ச் செய்கை	10	206
வீட்டுத் தோட்டம்	110	5500
கிழங்குப் பயிர்ச் செய்கை		பல்கலைக்கழக மாணவர் - 4 டிப்ளோமாதாரி – 2
றகன் பழம் மரக்கறி	10	100 பல்கலைக்கழக மாணவர்- 10 டிப்ளோமாதாரி -15 பாடசாலை மாணவர் - 100

ஆலோசனை சேவை

அட்டவணை 2.2.5.4 2011ல் வழங்கப்பட்ட ஆலோசனைகளின் எண்ணிக்கை

துறை	ஆலோசனைகளின் எண்ணிக்கை
கூட்டெரு	40
காளான் செய்கை	125
அன்னாசிச் செய்கை	60
மலர்ச் செய்கை	10
வீட்டுத்தோட்டம்	30
கிழங்குப் பயிர் செய்கை	5
றகன் பழம்	160
நோயியல்	75
பூச்சியியல்	20
நெல்	120
மரக்கறி	25
வாழை	760

2012 இற்கான திட்டங்கள்

இழையவளர்ப்பும் பழமர இனவிருத்தியும்

- அன்னாசி கலப்புப்பிறப்பாக்கத் திட்டம்
- மாதுளை கலப்புப்பிறப்பாக்கத் திட்டம்
- விகார மூலம் இனவிருத்தி- அன்னமுன்னா
- இழையவளர்ப்பு மூலம் வாழை, அன்னாசி ஆகியவற்றில் நடுகைப் பொருள் உற்பத்தி

பழப் பயிராக்கவியல்

- வாழையில் மூலவுயிருருச் சேகரித்தல், இயல்புகளை வர்ணித்தலும், மதிப்பிடலும்
- றகன் பழச் செய்கைக்கான மிக அனுகூல மான தாவர அடர்த்தியைக் கண்டுபிடித்தல்
- வாழை - வர்க்க மதிப்பீடு (சீனிக்கதலி)
- தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்க சோதனை – வாழை

பூச்சியியல்

- வாழையில் சேதன மற்றும் பாரம்பரிய பீடை முகாமைத்துவ ஒப்பீடு

மண் விஞ்ஞானம்

- மண், நீர், கூட்டெரு, மற்றும் தாவர மாதிரி பகுப்பாய்வு
- கற்பிட்டி தீபகற்பத்தில் மரக்கறி மற்றும் பழப்பயிர்ச் செய்கையில் பசளைப் பிரயோகம், நீர்பாசனத் தொழில்நுட்பம் தொடர்பான தகவல் திரட்டு (Survey)
- N,K யைச் சேர்க்கும் போது அன்னாசியின் பிரதிபலிப்பையும் அதன் அசேதன போஷ ணைத் தேவையையும் மதிப்பீடு செய்தல்
- கம்பஹா, குருநாகல் மாவட்டங்களிலுள்ள அன்னாசியின் மா, நுண் மூலகங்களுக்கான தகவல் திரட்டு (Survey)

இயற்கையால் அமைந்த மண்ணில் வேறுபட்ட பயிர் இடைவெளியை ஏற்படுத்தி அதிக தரமான உற்பத்திக்காக சிறந்த பயிர் போசணை முகாமைத்துவ பயிற்சியை அபிவிருத்தி செய்தல்

- தென்னையின் கீழ் கிளிரிசீடியா வேலி வரிசை பயிர்ச் செய்கையை மதிப்பீடு செய்தல்.
- மண்புழு உரத்தை பிரயோகித்து வல்லாரை அறுவடை உயர்வை மதிப்பீடு செய்தல்.
- வேறுப்பட்ட அளவிலுள்ள எப்பாவெல பாறை பொஸ்பேற்றிற்கு ஏற்ப கூட்டெருவின் தரத்தை மதிப்பீடு செய்தல்.

மரக்கறிப் பயிர்கள்

- கலப்பின பூசணியின் முதலாவது சந்ததியை உருவாக்குவதற்காக சிறந்த தாய்த் தாவரத்தை தெரிவு செய்ய உள்ளூர் பூசணியின் மூலவுயிருருவை மதிப்பீடு செய்தல்.
- பச்சை மிளகாய் வர்க்க விருத்தி.
- பச்சை மிளகாய் வர்க்கங்களை தூய்மைப் படுத்தல்.
- பாகல் வர்க்கத்தின் உற்பத்தியாளர் விதை உற்பத்தி.
- புடோல் வர்க்கத்தின் உற்பத்தியாளர் விதை உற்பத்தி
- தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்க சோதனை – கத்தரி
- தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்க சோதனை – கெக்கரி
- தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்க சோதனை – மிளகாய்

மலர்ச் செய்கை

- கூடாரங்களில் அந்தூரியச் செய்கைக்கான பசளைப் பாசன மதிப்பீடு.

- அந்தூரியம் வெட்டுப்பூக்களுக்கான மூலவுயிருருச் சேகரிப்பும் இனவிருத்தி நிகழ்ச்சியும்.
- Dracaena sanderiana இற்கு மண்புழு உரத்தை இடுவதனால் தாவர வளர்ச்சி மற்றும் நோயைக் குறைப்பதில் ஏற்படும் விளைவு

நோயியல்

- வைக்கோல் காளான் வளர்ப்பூடகமாக வாழையிலையைப் பாவிப்பதன் பொருத்தத் தன்மையைப் பரீட்சித்தல் (Volvariolla volvacea).
- சிப்பிக் காளான் வளர்ப்பூடகமாக வைக்கோலைப் பாவிப்பது பொருத்தமானதா என்பதை பரீட்சித்தல் (Pleurotus ostreatus).
- இஞ்சியில் பற்றீரியா வாடலைக் கட்டுப்படுத்துவதில் சுண்ணாம்பின் பிரயோகம்.

உத்தியோகத்தர் பட்டியல்

பதவியணி	எண்ணிக்கை
பிரதிப் பணிப்பாளர் (ஆராய்ச்சி)	01
ஆராய்ச்சி அலுவலர்	11
விவசாயக் கண்காணிப்பு அலுவலர்	02
நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்	04
விவசாயப் போதனாசிரியர்	23
ஆராய்ச்சி உதவியாளர்	06
பண்ணை எழுதுவினைஞர்	01
ஆராய்ச்சி உப உதவியாளர்	01
சாரதி	03
காரியாலய உதவியாளர்	01
மேசன்	01
காவலாளி	04
திருத்துனர் (இயந்திரம்)	01
நாற்று மேடை பராமரிப்பாளர்	01
விசேட தொழிலாளி	02
சுற்றுலா விடுதி பராமரிப்பாளர்	01
உழவு இயந்திர இயக்குனர்	03
சுத்திகரிப்பு தொழிலாளர்	01
நீர் பம்பி இயக்குனர்	01
புல் வெட்டுபவர்	01
மின் தொழிலாளி	02
தொழிலாளர்கள்	64
மொத்தம்	**121**

2.2.6 விவசாய ஆராய்ச்சி நிலையம் (ARS), சீதாஎலிய

சீத்தாஎலிய விவசாய ஆராய்ச்சி நிலையத்தின் ஆராய்ச்சி, அபிவிருத்தி நடவடிக்கைகள் உருளைக்கிழங்கு, மேலைத்தேய மரக்கறி வகைகள், தெரிவு செய்யப்பட்ட இடைவெப்ப வலயப் பழங்கள், மலர்ச் செய்கைப் பயிர்கள் என்பவற்றின் உற்பத்தித்திறனை அதிகரித்தலும் பாதுகாப்பு விவசாயத்திற்கான அடிப்படைத் தேவையை ஆராய்ச்சி செய்தல் என்பன ஆகும். அத்துடன் இந்நிலையம் தேசிய தேவைக்காக ஜெபரா (Gerbera), பேபிஸ் பிறத் (Baby's breath), ஸ்ரோபரி (Strawberry) உருளைக் கிழங்கு ஆகியவற்றிற்கான ஆரம்ப நடுகைப் பொருட்களின் உற்பத்தி என்பவற்றிக்கும் பொறுப்பாகவுள்ளது. மேலதிகமாக பல்வேறுப்பட்ட மாணவர்களுக்கும், கமக்காரர்களுக்கும், விரிவாக்க உத்தியோகத்தர்களுக்கும் அரச பண்ணைகளுக்கும் பயிற்சிகளையும் தொழில்நுட்ப ஆலோசனைகளையும் வழங்கிவருகின்றது.

பாதீடு

அட்டவணை 2.2.6.1 வருடாந்தப் பாதீடு -2011 (ரூ)

விடயம்	ஒதுக்கீடு	செலவீனங்கள்	செலவீன வீதம் %
மூலதனம்	1,187,220	1,182,510	100
மீண்டுவரும் செலவு	4,447,001	3,185,029	71
விதை உருளைக்கிழங்கு உற்பத்தியை அதிகரித்தல்	5,500,000	5,494,367	100
விதை உருளைக்கிழங்கு உற்பத்தித் தொழில்நுட்பத்தின் முன்னேற்றம்	1,100,000	674,234	61
உள்ளூர் நிலைமைகளில் புதிய உருளைக்கிழங்கு இனங்களின் அபிவிருத்தி	306,000	304,978	100
சித்திரஸ் இனங்களை மதிப்பீடு செய்தல்	100,000	85,904	86
கறுப்பு வெட்டு புழுவின் உயிரியல் கட்டுப்பாடு	200,000	161,093	81
முக்கிய பயிர்களின் நடுகைப் பொருட்களின் தரத்தை இழைய வளர்ப்பினூடாக உயர்த்தல்	3,100,000	1,600,077	52
சேதன பசளைகளின் உற்பத்தியும் பயன்பாடும்	1,250,000	1,002,311	80
மாதிரிக் கிராமம்	100,000	70,398	70
மொத்தம்	**17,320,221**	**13,760,901**	**79**

முன்னேற்றம்

ஆராய்ச்சி

பயிரரக்கவியல்

- 2010 / 2011 இல் வர்த்தக உருளைக் கிழங்கு இனங்கள் 20 இறக்குமதி செய்யப்பட்டு அவை நுவரெலியா, பதுளை மாவட்டங்களில் மதிப்பீடு செய்யப்பட்டு அவற்றுள் YP-03-107 டொலுக்கா (Toluka) ஆகிய இரு புதிய வர்க்கங்கள் மலை நாட்டு ஈரவலயத்திற்குப் பொருத்தமானவை என இனங்காணப்பட்டன.

- நீரியல் வளர்ப்பு முறையின் (Hydroponic) கீழ் பூரணமான போசணை ஊடகத்தைக் கையாள்வதன் மூலம் கோல்டன் ஸ்டார் (Goldon star) எனும் உருளைக்கிழங்கு வர்க்கத்தில் விதைகளை உற்பத்தி செய்ய முடியும்.

- மலைநாட்டு ஈரவலயத்தில் 2011 சிறுபோக காலத்தில் வெட்டுத்துண்ட முகிழத்தின் முன்னேற்றத்தை ஆராயும் போது எவ்வித குறிப்பிடத்தக்க வித்தியாசங்களும் முழுக் குமிழ், வெட்டுக் குமிழ் இடையில் காணப்படவில்லை.

- யாழ்பாண மாவட்டத்தில் ஆராய்ச்சி முகாமைத்துவத்தின் கீழ் கல்வைட் (Galwhite) ரெட்லாசோடா (Red la soda) ஆகிய இரு வர்த்தக இனங்கள் சிறந்தவை என இனம் காணப் பட்டது.

தாவர இனவிருத்தி

- தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்க சோதனையின் (NCVT) கீழ் 10 விருத்தி செய்யப்பட்ட உருளைக்கிழங்குக் குலவகைகள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- உள்ளூரில் விருத்தி செய்யப்பட்ட 2814 உருளைக்கிழங்கு குலவகைகளில் 189 குலவகைகள், பிந்திய வெளிறல் (Late blight) தூள் பொருக்கு (Powdery scab), பக்றீரிய வாடல் (Bacterial Wilt) என்பவற்றுக்காக தெரிவு செய்யப்பட்ட போதும் நோய் எதிர்ப்புத்தன்மையைக் காட்டவில்லை.

- உள்ளூரில் விருத்தி செய்யப்பட்ட 11 குல வகைகள் AMYT இன் கீழ் மதிப்பீடு செய்ய ப்பட்டன.

- உள்ளூரில் விருத்தி செய்யப்பட்ட 7 குல வகைகள் MYT இன் கீழ் மதிப்பீடு செய்யப் பட்டன.

இழைய வளர்ப்பு

- Limonium latifolium இன் நுண் இரு விருத்திக்காக ஒரு இறுதிச் சுருக்க அறிக்கை விருத்தி செய்யப் பட்டது.

- Gypsophila panicalate இன் பெரிய அளவிலான உற்பத்திக்காக ஓர் குறைந்த செலவிலான இறுதிச் சுருக்க அறிக்கை விருத்தி செய்யப்பட்டது.

தாவர நோயியல்

- அமிஸ்டார் (Amistar) புளுசீனம் (Fluazinam) என்பன உருளைக்கிழங்கில் பிற்றுகூற்று வெளிறலை வினைத்திறனானக் கட்டுப் படுத்துவதாகக் கண்டுபிடிக்கப்பட்டது.

- விவசாயிகளின் வயல் நிலைமைகளில் கீழ் உருளைக்கிழங்கில் பிற்கூற்று வெளிறல் நோயானது ரிடோமில்கோல்ட் (Ridomil Gold) எனும் புதிய பங்கசுநாசினியால் வினைத் திறனாகக் கட்டுப்படுகின்றது.

- புதிய உருளைக்கிழங்கு வர்க்கங்களான YP/07/03, Tioluka, Rosarma Ambition, YP/93/104 என்பவை பிற்கூற்று வெளிறலை சகித்து வளர்வதுடன் கூடிய விளைச்சளையும் விசிறல் நிலைமைகளில் தருகின்றது.

- Ziicchini இல் தூள் பூஞ்சணத்தை வினைத்திறனாக கட்டுப்படுத்துவது Futrifol கண்டறியப்பட்டது.

புதிய உருளைக்கிழங்கு குலவகை வேறுப்பட்ட நோய்களுக்கெதிராகத் தெரிவு செய்யப்பட்டன.

- பிற்கூற்று வெளிறலுக்கு எதிராக 150 குலவகைகள்

- தூள் பொருக்குக்கு (Powery scab) எதிரான 21 குலவகைகளும் இனங்களும்

- பக்றீரியா வாடலுக்கு எதிரான 18 குலவகைகள்.

பூச்சியியல்

- விவசாயிகளின் வயலில் Lirlomyza huidobre msis இன் குடம்பி நிலையை கட்டுப்படுத்து வதற்காக புதிதாக தயாரிக்கப்பட்ட அபாமக்ரின் செறிகுளம்பின் (EC) புதிய அளவீடு (Abamactin 36g/1)

- உருளைக் கிழங்கினைத் தாக்கும் வெண்ஈ, பனிப்பூச்சி கட்டுப்டுத்துவதற்கு தியாமிதொசாம் 75 (ஈரகுருனல்) W.G 50g /ha எனும் அளவில் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

- மரக்கறி இலைச் சுரங்கமறுப்பியின் Lirlomyza huidobremsis குடம்பியின் உயிரியல் பருவங்கள் ஆராயப்பட்டதுடன், 1வது, 2வது, 3வது குடம்பிப் பருவங்கள் விருத்தியடைய எடுக்கும் காலங்கள் அடையாளம் காணப்பட்டது.

  Agriotis ipsilon தாக்கத்தைக் கட்டுப்படுத்த குளோறன்றலிரி புறோல் (Chlorantran iliprole) 200g/l SC விற்டாகோ (Virtako) 20WG (ஈரக்குருனல்) சிறந்ததாகக் காணப்படுகின்றது.

மண் விஞ்ஞானம்

நீரியல் வளர்ப்பு முறைக்காக இரு புதிய சேர்மானங்கள் விருத்தி செய்யப்பட்டதுடன் அவை அல்பேட்ஸ் (Alberts) கரைசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது. இதில் ஒரு கரைசல் அப்ல் பேட்ஸ் (Alberts) கரைசலுடன் ஒப்பிடக்கூடியதாக இருந்தது. ஆனால் சிறுமாற்றங்கள் தேவைப்படுகின்றது.

மரக்கறிப் பயிர்கள்

- கோவா இனங்களான கிறீன் லேக் (Green lake) ஸ்கை லைன் (Sky line) பூரொன்கோ (Bronco) ஆகிய மூன்றும் மலைநாட்டு ஈரவலயத்தில் நன்றாக அடைவுகளைக் காட்டியதால் இறக்குமதி செய்வதற்காக சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

- மலைநாட்டு ஈரவலயத்தில் புதிய பீற்றூட் இனமான பிறிகொரஸ் (Bricores) நல்ல விளைச்சலைத் தந்ததுடன் நோய் பூச்சி பீடைக்கும் எதிர்ப்பு தன்மை காட்டியதால் இறக்குமதி செய்வதற்குச் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

- புதிய சலாது இனமான ருபெஸ் (Rubex) சிவப்பு லோலோ ரோசா வகை (Red lolo rosa type) ஒபல் (Opel) றெட் லோலா ரோசா வகை மாபிள் (marble), ஜேடே (Jade) ஆகியன மலைநாட்டு ஈரவலயத்தில் செய்கைப் பண்ணக்கூடியதாக இருந்ததால் இறக்குமதி செய்வதற்கு சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

அபிவிருத்தி நடவடிக்கைகள்:-

பயிராக்கவியல்

- 402, 330 எண்ணிக்கையிலான G_0 நுண் முகிழ்கள் உற்பத்தி செய்யப்பட்டதுடன் பொலித்தீன் (Polytunel) கூடாரம் திறந்த வயல்களிலும் விதை உற்பத்திக்காக

விவசாயிகளுக்கு 252, 330 விதைகள் வழங்க ப்பட்டது. மிகுதி 2012 இல் வழங்குவதற்காக களஞ்சியப்படுத்தப்பட்டது.

- IFAD நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 7 நீரியல் வளர்ப்பு அலகுகள், விவசாயிகளின் வயல் களில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

- சீத்தாஎலியாவில் SPMDC க்காக ஓர் காற்று வளர்ப்பு அலகு (aero ponic unit) $300m^2$ ல் அமைக்கப்பட்டுள்ளது.

- IFAD திட்டத்தின் கீழ் ஆராய்ச்சி நிலைய த்தில் ஓர் புதிய நீரியல் வளர்ப்பு அலகு $44m^2$ ல் அமைக்கப்பட்டுள்ளது.

இழைய வளர்ப்பு

நோய் அற்ற ஆய்வுகூட பயிர் உற்பத்தி

உருளைக்கிழங்கு

- முறைசார் விதை உருளைக்கிழங்கு உற்பத்தித் திட்டத்திற்காக 1906 எண்ணிக்கையான ஆய்வுகூட உற்பத்திக் (invitro) கிரனொலா (Granola) தாவரங்கள் வழங்கப்பட்டதுடன் பரிசோதனைக்காக மேலும் 2953 தாவரங்கள் வழங்கப்பட்டன.

ஸ்ரோபரி

ஆய்வுகூட உற்பத்தித் தாவரங்கள் (invitro) 432 வழங்கப்பட்டதுடன், நுவரெலியா பிராந்நிய விவசாயத் திணைக்களத்தின் ஊடாக 10,037 ஆய்வுகூட உற்பத்தி நடுகைப் பொருட்கள் நேரடியாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன. மேலும் 1121 ஆய்வுகள் நிலையத்தில் ஓடி உற்பத்திக்காகப் பன்படுத்தப்பட்டது.

பூங்கனியியல் பயிர்

தனியார் விவசாயிகளுக்காக (Private growers) 3430 பேபிஸ் பிறெத் உம், (Baby's brath) 3007 மெடோனா லீலீ (Madona lily) உம் 100 ஜெபரா தாவரங்களும் உற்பத்தி செய்யப்பட்டு வழங்கப்பட்டன.

பூச்சியியல்

அரச உருளைக்கிழங்கு விதை உற்பத்திப் பண்ணைகளிலிருந்து பெறப்பட்ட 1384 மண் மாதிரிகள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டன. இவற்றுள் PCN காணப்படவில்லை.

நோயியல்

- 1384 மண் மாதிரிகள் பக்றீரியா வாடலுக்காகப் பரீட்சிக்கப்பட்டன.

- 15 தாவர மாதிரிகள் பெறப்பட்டு நோய்கள் கண்டுபிடிக்கப்பட்டதுடன் சிபாரிசுகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன.

மண்ணியல்

பசளை சிபாரிசிற்கான மண் ஆராய்ச்சி,

PH – 242

பொசுபரசு (P) 99

பொட்டாசு (K) 99

60 மெ.தொ கூட்டெரு தயாரிக்கப்பட்டது.

தொழில்நுட்பப் பரம்பல்

விவசாயிகள்	200
விவசாயம் தொடர்பான உத்தியோகத்தர்கள்	250
பல்கலைகழக மாணவர்கள்	155
விவசாய டிப்ளோமா மாணவர்கள்	221
தொழில் பயிற்சி மாணவர்கள்	04
பாடசாலை ஆசிரியர்கள் (விவசாயம்)	67
பாடசாலை மாணவர்கள்	392

வேறு செயற்பாடுகள்

மாதிரிக் கிராம நிகழ்ச்சித்திட்டம்

காளான் வளர்ப்பு, பூங்கனியியல் பயிர்கள், உருளைக்கிழங்கு, ஸ்ரோபரி பயிர்ச் செய்கைகளுக்காக மீப்பிலிமானா (Meepilimana) ஜெயலங்க (Jayalanka) கட்டுமானா (Katumana) ஆகிய கிராமங்களிலிருந்து 64 விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டனர்.

2012 இற்கான திட்டம்

ஆராய்ச்சி

பயிராக்கவியல்

- நான்கு வர்த்தக உருளைக்கிழங்கு இனங்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.
- முன் அடிப்படை விதை உற்பத்திக்காகப் புதிய தொழில்நுட்பங்கள் விருத்தி செய்யப் பட்டன.
- வேறுபட்ட பரம்பரை விதை முகிழ்களுக்கும் நுண் முகிழ்களுக்குமான சேமிப்பு தொடர்பான கற்கை
- மலைநாட்டு ஈரவலயத்தில் உருளைக்கிழங்கு வெட்டு முகிழ்கள் செயற்திறன்.

தாவர இனவிருத்தி

- வெப்பத்தைச் சகிக்கும் தன்மையுடைய (heat tolarent) வர்த்தக இனங்களின் மதிப்பீடு
- பொருத்தமான இயல்புகளுக்கான புதிய உருளைக்கிழங்கு இனப்பெருக்க குல வகைகளின் மதிப்பீடு
- புதிய உருளைக்கிழங்கு வர்க்கங்களின் விருத்தி
- NCVT/ VAT

இழைய வளர்ப்பு

- பேரிக்காய்களிலும், சித்திரசுகளிலும், நடுகைப் பொருள் உற்பத்திற்கான கற்கை
- பக்றீரியா வாடலுக்கு எதிர்ப்புத்தன்மையுள்ள வர்க்கங்களை விருத்தி செய்வதற்காக உருளைக் கிழங்கில் விகார இனவிருத்தி.
- உருளைக்கிழங்கில் மகரந்த வளர்ப்பு

தாவர நோயியல்

- பக்றீரியா வாடல், பிற்கூற்று வெளிறல், தூள் பொருக்கு போன்வற்றிற்கான உருளைக் கிழங்கு இனத் தெரிவு
- பக்றீரியா வாடல், பிற்கூற்று வெளிறல், தூள் பொருகு போன்வற்றிற்காக உருளைக் கிழங்கு இனவிருத்தி, குலவகைத் தெரிவு
- குருசி பெரே பயிர்களில் *Xanthomanas* முகாமைத்துவம்
- பக்றீரியா வாடலுக்கான மண் மாதிரிப் பரிசோதனை
- அரச பண்ணைகளிலும், விவசாயிகளின் நிலங்களிலும் தூள் பொருக்கு நோயின் மதிப்பீடு
- சூச்சினிக்கான *(Zucchini)* இரசாயனத் தெரிவு
- ஆய்வுகூட வளர்ப்பு உருளைக்கிழங்கில் வைரசு அடையாளமிடல்.
- கோவாவில் Mycosphaerella விற்கான பங்கசு நாசினித் தெரிவு
- உருளைக்கிழங்கு நிலங்களில் *Ralstonia solanasarum* இன் பெருக்கம் தொடர்பில் கோழி எருவின் தாக்கம்.

பூச்சியியல்

- கறுப்பு வெட்டுபுழுவிற்கான உயிரியல் கட்டுபாடு
- *Diglyphus isaea* இன் மேலதிக வளர்ச்சியும் பாரிய அளவிலான வளர்ப்பும்
- அரச விதை பண்ணையில் PCN அவதானிப்பு
- Bt ஐ பயன்படுத்தி White grubs ற்கான உயிரியல் கட்டுபாடு
- DBM ற்கான உயிரியல் கட்டுபாடு

- கறுப்பு வெட்டுப் புழுவிற்கு எதிரான பூச்சிநாசினி தெரிவு
- உருளைக்கிழங்கில் உறிஞ்சுப் பீடைச் சிக்கலுக்கு எதிராக புதிய பூச்சிநாசினித் தெரிவு
- கொய்யாவில் வேர்முடிச்சு முகாமைத்துவம்

மண்ணியல்

- நீரியல் வளர்ப்பு காற்றோட்டமுள்ள வளர்ப்பு முறைகளுக்கான வித்தியாசமான போசணைச் சேர்க்கைகளின் பரிசோதனை
- நுண்ணங்கிகளின் செயற்பாட்டினாலும் போசணை முகாமைத்துவத்தாலும் விளைச்சல் அதிகரித்தல்.
- உருளைக்கிழங்கு உற்பத்திக்காக புதிய பசளைச் சேர்க்கைகளின் பரிசோதனை
- விளைச்சலிலும் வளர்ச்சியிலும் சரியான நேரத்தில் 'N' பயன்பாடு ஏற்படுத்தும் தாக்கம்
- மண் பாதுகாப்பும் நிலத்தின் முன்னேற்றமும்

மரக்கறிகள்

- கரட், பீற்றூட்டில் விதை உற்பத்தியும் தொழில்நுட்ப விருத்தியும்
- கரட், லீக்ஸ், கோவா என்பவற்றிற்கான அந்நிய மரக்கறிகளை மதிப்பிடுதல்
- லங்காபோல் (Lanka ball) முள்ளங்கியில் உற்பத்தியாளர் விதையுற்பத்தி

அபிவிருத்தி நடவடிக்கைகள்

பயிரியல்

- இரண்டு மில்லியன் முன் அடிப்படை விதை உற்பத்தியும் விவசாயிகளிடையே பகிர்ந்த ளிப்பும்.
- ஆராய்ச்சி நிலையத்தின் புதிய காற்றோட்ட வளர்ப்பு அலகு நிர்மாணம்.
- பண்ணைப் பிரிவில் நீரியல் வளர்ப்பு அலகு நிர்மாணம்.

இழைய வளர்ப்பு

- நோயற்ற ஆய்வுகூட தாய்த் தாவர உற்பத்தி.
- ஸ்ரோபரி இனமான சன்ட்லெர் (Chandler) இல் தரமான நடுகைப் பொருட்கள் உற்பத்தி
- பூங்கனியியல் பயிர்களான பேபீஸ் பிரீத் (Baby's breath) மொனடோனா, லல்லி, ஜெபரா, லெமோனியம் ஆகியவற்றின் சேகரிப்பும் பராமரிப்பும்.
- உருளைக்கிழங்கின் நோய் அற்ற நுண் முகிழ்கள் உற்பத்தி

உத்தியோகத்தர் பட்டியல்

பதவியணி	எண்ணிக்கை
ஆராய்ச்சி நிலையப் பொறுப்பதிகாரி	01
ஆராய்ச்சி உத்தியோகத்தர்	09
நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்	03
ஆராய்ச்சி உதவியாளர்	04
விவசாயப் போதனாசிரியர்	05
ஆராய்ச்சி உப உதவியாளர்	02
பொது முகாமைத்துவ உதவியாளர் சேவை	04
காவலாளி	01
தொழிலாளி	18
தொழிலாளி (அமைய)	39
மொத்தம்	**86**

2.2.7 விவசாய ஆராய்ச்சி நிலையம் (ARS), தெலிஜ்ஜவில

மாத்தறை தெலிஜ்ஜவிலவில் அமைந்துள்ள விவசாய ஆராய்ச்சி நிலையமானது கன்னொறு வையிலுள்ள HORID ன் கீழ் இயங்கும் ஒரு நிலையமாகும். தென் மாகாணத்திலுள்ள வயற் பிரச்சினைகளுக்குத் தீர்வாக தமது ஆராய்ச்சி நடவடிக்கைகளை அமுலாக்குவது இதன் பொறுப்பாகும்.

பழங்கள், மரக்கறிப் பயிர்களுக்கான (காளான், கிழங்குப்பயிர்) பயிராக்கவியல் தாவரப்பாதுகாப்பு ஆகியவற்றுக்காகவே கூடுதலான ஆராய்ச்சி மேற்கொள்ளப்படுகிறது. இத்துடன் மாதிரிக் கிராம அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் சேதனப் பசளையை உற்பத்தி செய்து பிரபல்யப்படுத்தல், தாவர நடுகைப் பொருள் உற்பத்தி மற்றும் பண்ணை அபிவிருத்தி ஆகியனவும் நடைமுறைப் படுத்தப்படுகின்றது.

பாதீடு

அட்டவணை 2.2.7.1 வருடாந்தப் பாதீடு -2011 (ரூ)

செலவு விடயம்	ஒதுக்கீடு	செலவு	செலவு வீதம்
மீண்டுவரும் செலவீனம்	3,247,222	3,205,315	99
மூலதனச் செலவீனம்	1,192,540	1,048,021	88
கருத்திட்டங்கள்:-			
சேதனப் பசளை உற்பத்தியும் உபயோகமும்	209,000	199,110	100
பழமர உற்பத்தி திட்டம்	600,000	594,286	99
மாதிரிக் கிராமத் திட்டம்	500,000	495,979	99
பண்ணை அபிவிருத்தியும் தாவர நடுகைப் பொருள் உற்பத்தியும்	2,379,000	2,333,562	98
மொத்தம்	**8,118,762**	**7,876,273**	**97**

முன்னேற்றம்

அன்னாசியில் களையைக் கட்டுப்படுத்தப் பொருத்தமான மூடுபயிர்களை அடையாளங் காணல்

வினைத்திறனான சூழலுக்குப் பாதகமில்லாத களைக் கட்டுபாட்டுத் தொழிநுட்பம் அறிமுகப் பட்டது. பொன்னாங்காணி ஒரு வினைத் திறனான மூடுபயிர் எனவும் மேலதிக வருமானத்தை ஈட்டலாம் எனவும் அறியப்பட்டதுடன் செய்முறைப் பிரச்சினைகளும், இந்த தொழில்நுட்ப விருத்தியுடன் அடையாளங் காணப்பட்டுள்ளது.

அன்னாசி வாடல் வைரசுவினால் பாதிக்கப்பட்ட நடுகைப் பொருட்களை வெப்பப் பரிகரணத்திற்கு உட்படுத்தி வெண் மூட்டுப் பூச்சியை அகற்றும் போது உண்டாகும் விளைவைப் பரீட்சித்தல்.

அன்னாசித் தண்டுறுஞ்சியை வெப்பப் பரிகரணத்திற்கு உட்படுத்திய போது வெண் மூட்டுப் பூச்சியோ, அல்லது வாடல் வைரசுவோ அற்ற நடுகைப் பொருள் பெறப்பட்டது. (60^0c ல்

3-4 நிமிடங்கள். இது (ஆய்வு கூடப் பரிசோதனை மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

அன்னாசி, வாழை ஆகியவற்றின் இலைப் பரப்பை மதிப்பீடு செய்வதற்கு இலை சிதைவடையாத முறையொன்றை விருத்தி செய்தல்

இலைக்கு எவ்வித சேதமும் இல்லாமல் அன்னாசி, வாழை ஆகியவற்றின் இலைப் பரப்பை மதிப்பீடு செய்ய ஒரு சிறந்த நிலையான புள்ளி விபரவியல் சார்பு விருத்தி செய்யப்பட்டது.

பிரதியீட்டுப் பயிர்ச் செய்கைக்காக Pieurotun spent காளான் வளர்ப்பூடகத்தை உபயோகிக்கும் சாத்தியம்.

Spent காளான் வளர்ப்பூடகத்தை 50% (W/W) பாரம்பரிய ஊடகத்துடன் சேர்க்கும் போது காளானின் அறுவடை 2 மடங்கால் அதிகரித்தது.

Pleurotun காளான் செய்கைக்காக 4 வித்தியாசமான கழிவுப் பொருட்களை பிரயோகிக்கும் சாத்தியம்

பாரம்பரிய காளான் வளர்ப்பூடகத்திற்கு உமியை சேர்க்கையில் ஊடகத்தின் உயிரியல் வினைத் திறன் அதிகரித்தது.

பியுசாரியம் (Furarium) வாடலுக்கு எதிர்ப்புத் தன்மையுள்ள வாழையை ஆய்வு கூட விகாரப் பிறப்பாக்க மூலம் விருத்தி செய்தல் (In- vitro mutagenesis)

அக்ரா வர்க்கம் பரிசோதனை மூலம் வளர்க்கப் பட்டது.

தும்பங்காய்க்கான நுண் இனப்பெருக்கம்

3 வர்க்கங்கள் 2 வளர்ப்பூடகத்தில் வளர்க்கப்பட்டன.

பயற்றை மற்றும் கத்தரிக்கான தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்கச் சோதனைத் திட்டங்கள்

வயல் மதிப்பீடுகள் தொடர்கின்றன.

விசேட கருத்திட்ட முன்னேற்றம்

பழ மர உற்பத்தி நிகழ்ச்சிகள்

- 8200 வாழை உறிஞ்சிகள் பாரம்பரிய முறை மூலம் உருவாக்கப்பட்டு திவி நெகும திட்டத்திற்கு விநியோகக்கப்பட்டது.
- ஏறக்குறை 47000 அன்னாசி உறுஞ்சிகள் உருவாக்கப்பட்டு. மாதிரிக் கிராம திட்டத்தின் கீழ் வரும் வாழைச் செய்கையாளருக்கும், விரிவாக்க பிரிவிற்கும் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க வழங்கப்பட்டது.

மாதிரிக் கிராமத் திட்டம்

- ஆறு கிராமங்கள் உருவாக்கப்பட்டன.
- 2 வர்த்தக ரீதியிலான நாற்று மேடைகளும், 2 வர்த்தக ரீதியிலான கூட்டெரு தயாரிக்கும் அலகுகளும் நிறுவப்பட்டன.
- ஏறக்குறைய 65 விவசாயிகளுக்கு நடுகைப் பொருட்களும் பிற உள்ளீடுகளும் வழங்க ப்பட்டன.
- 6 பயிற்சி வகுப்புக்கள் நடாத்தப்பட்டன.

சேதன உரம் உற்பத்தியும் உபயோகமும்

- ஏறக்குறைய 25 தொன் கூட்டெரு உருவாக்கப்பட்டது.
- 3 தொன் உட்புகுத்தி உருவாக்கப்பட்டு 400 பைகளில் 5 kg பகிர்ந்தளிக்கப்பட்டது.

பண்ணை அபிவிருத்தியும் விதை நடுகைப் பொருள் உற்பத்தியும்

விதை நடுகைப் பொருள் உற்பத்தி

அன்னாசி – 25000

கிரிஅல – 16000

வாழை – 10000

கொடித்தோடை – 1000

மரவள்ளி – 500m

இலைமரக்கறி – 250 g

- 1km நீளமான வேலி அமைப்பதற்குத் தேவையான பொருட்கள் வாங்கப்பட்டன
- 2000 பாக்கு மரங்கள் நடப்பட்டன
- 50 பலா ஒட்டுக் கன்றுகளும், 450 பலா நாற்றுக்களும் நடப்பட்டன
- 305 நோய்த் தாக்கத்திற்குட்பட்ட தென்னைகள் பிடுங்கப்பட்டன
- ஏறக்குறைய 1000 கைவிடப்பட்ட தென்னை மரங்களுக்கு உரம் இடப்பட்டது.
- 5ha பண்ணை நிலம் அபிவிருத்தி செய்யப்பட்டது.
- நாற்றுச்சாடியகமும் களஞ்சிய அறையும் பகுதியளவில் நிர்மாணிக்கப்பட்டது.
- காளான் உற்பத்தி அலகிற்கான களஞ்சிய அறையொன்று பகுதியளவில் நிர்மாணிக்கப்பட்டது.
- கிணறு தோண்டப்பட்டு நீர்ப்பாசனத்திட்டம் நிறுவப்பட்டது.

உட்கட்டமைப்பு அபிவிருத்தி

- கழிவறை நிர்மாண வேலைகள் பூரணப்படுத்தப்பட்டன.
- 2 வாகனங்கள் திருத்தப்பட்டன
- தொழிலாளருக்கான ஓய்வு அறை நிர்மாணம்
- LRC இடமிருந்து DOA காணியை வாங்கும் செயற்பாடு நிறைவு பெற்றது.
- பண்ணை நிலம் வாங்கியதன் பின்னர் முறை சார் திட்டத்தின் படி தயார் படுத்தப்பட்டது.

2012 இற்கான திட்டம்

வாழை, அன்னாசி, மா, கிரிஅல, தோடை, கொய்யா, குறைந்த பயன்பாடுடைய பழப் பயிர்கள் காளான் மற்றும் மரக்கறி ஆகிய வற்றிற்கான தொடர்ச்சியாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஆராய்ச்சித் திட்டங்கள்

- அன்னாசிக்கான வினைத்திறனான போசணை சேர்க்கையை உருவாக்கல்.
- வாழையில் உற்பத்தியையும், தரத்தையும் மேம்படுத்துவதற்கான போசணை (K) முகாமைத்துவம்.
- பியுசாறியம் (Fusarium) வாடலுக்கு சகிப்புத் தன்மையுள்ள வாழையை ஆய்வுகூட விகாரப் பிறப்பாக்கம் மூலம் உற்பத்தி செய்தல்.
- தும்பங்காய் நுண் இனப் பெருக்கம்.
- மரக்கறிப் பயிர்களுக்கான (NCVT) தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்க சோதனை.
- மரக்கறிப் பயிருக்கான இனவிருத்தித்திட்டம்.
- சிப்பிக் காளான் செய்கைக்காக பயன்படுத்த ப்பட்ட 4 ஊடகங்களைப் பரீட்சித்தல்.
- தாமதமாக விடுவிக்கப்படும் மூலகங்களைக் கொண்டு சிப்பிக்காளான் செய்கைக்கான ஊடகத்தை உருவாக்கல்.
- சிப்பிக் காளான் செய்கைக்காக வளர்ப்பூடக த்தை அனுகூலமானதாக்குதல்.

உத்தியோகத்தர் பட்டியல்

பதவியணி	எண்ணிக்கை
ஆராய்ச்சி நிலையப் பொறுப்பு அதிகாரி	01
ஆராய்ச்சி அலுவலகர்	02
விவசாயப் போதனாசிரியர்	06
ஆராய்ச்சி உதவியாளர்	02
ஆராய்ச்சி உப உதவியாளர்	01
திட்ட உதவியாளர்	03
பொது முகாமைத்துவ உதவியாளர்	03
சாரதி	02
காவலாளிகள்	04
சுத்திகரிப்பு தொழிலாளி	01
தொழிலாளி	04
தொழிலாளி (ஒப்பந்த)	35
மொத்தம்	**64**

2.2.8 விவசாய ஆராய்ச்சி நிலையம் (ARS), கிராந்துருகோட்டை

கிராந்துருகோட்டையிலுள்ள விவசாய ஆராய்ச்சி நிலையம் 1980ம் ஆண்டு இலங்கை மகாவலி அதிகார சபையினால் உருவாக்கப்பட்டது. இது விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி நடவடிக்கை களுக்குப் பொறுப்புடையதாகும். குறிப்பாக மகாவலி ''சீ'' வலயத்திலுள்ள விவசாயிகளின் பயிர் உற்பத்தியின் போது ஏற்படும் வயற் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக அமைக்கப்பட்டது. இந்நிலையத்தினால் முன்னெ டுக்கப்படும் ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்கு, மேலதிகமாக ஒரு கிரமமான பயிற்சித் திட்டத்தினையும், அலுவலர்கள், மாணவர்கள், விவசாயிகள் ஆகியோருக்கு நடாத்துகின்றது.

பாதீடு

அட்டவணை 2.2.8.1 வருடாந்தப் பாதீடு 2011 (ரூபா)

செலவு விடயம்	ஒதுக்கீடு	செலவு	செலவு%
மூலதனச் செலவு	2,566,243	2,238,813	87
மீண்டுவரும் செலவு	2,945,929	2,874,652	98
கருத்திட்டம்			
கலப்பினச் சோள விதை உற்பத்தி (சம்பத் வர்க்கம்)	300,000	275,880	92
சேதனப் பசளை உற்பத்தியும் அதனை மேம்படுத்தும் திட்டமும்	500,000	450,392	90
தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்கச் சோதனை – வாழை	50,000	49,667	99
NARP கருத்திட்டம் - தோடை	100,000	99,685	100
விதை நெல் உற்பத்தித் திட்டம் - Bg 250	400,000	359,294	90
விதை நெல் உற்பத்தித் திட்டம் - Bg 366	630,000	303,590	48
பப்பாசி விதை உற்பத்தித் திட்டம் (ரத்னா)	400,000	225,209	56
மாதிரிக்கிராமத் திட்டம்	100,000	63,544	64
மொத்தம்	**7,992,172**	**6,949,726**	**87**

முன்னேற்றம்

ஆராய்ச்சி

பழங்கள்

- உள்ளூர் மற்றும் அறிமுகப்படுத்தப்பட்ட தோடை இனங்களின் தொடர்ச்சியான வர்க்க மதிப்பீடு
- 7 உள்ளூர் இனங்கள் - 'ஆரோக்யா பிபில இனிப்பு, MKD, ரஹங்கல தெரிவு, HOCR 23, HOCR 2, HOCR 29.
- ஜப்பானிலிருந்து அறிமுகப்படுத்தப்பட்ட 8 இனங்கள் NCN, MYG, OTA, NAN, KYM, SRD, YSD.
- வேறுபட்ட அளவுகளிலுள்ள சேதன, அசேதனப் பசளைகளின் சேர்க்கைகளை பப்பாசி மற்றும் அன்னாசி ஆகியவற்றிற்கு இடும் போது அவற்றின் வளர்ச்சியில் ஏற்படும் தாக்கம்.
- **நெல் (NCRVT) – தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்கச் சோதனை – நெல்**

  2½ மாதம், 3 மாதம், 3½ மாதம், 4 மாதம், 4½ மாத வயதுடைய நெல் வர்க்கங்கள் 2011 ல் பரீட்சிக்கப்பட்டன.

மரக்கறிப் பயிர்

- பின்வரும் மரக்கறிப் பயிர்களுக்கு தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்கச் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

  கத்தரி – 05 இனங்கள்

  பயற்றை – 07 இனங்கள்

- நான்கு வெண்டி இனங்களில் வர்க்க இசைவாக்கச் சோதனை மேற்கொள்ளப் பட்டது.

விதை உற்பத்தித் திட்டம்

கலப்பினச் சோள விதை உற்பத்தி

கலப்பின சோள விதை உற்பத்தித் துண்டம் 1 ha ல் உற்பத்தி செய்த விதையில் 22kg விற்பனை செய்யப்பட்டதுடன் குறிப்பிட்ட அளவு பிராந்திய உதவிப் பணிப்பாளருக்கும் கையளிக்க ப்பட்டது. (பெல்வெஹர)

விதை நெல் உற்பத்தி

2011 ம் ஆண்டில் Bg 250 என்ற இனத்திலிருந்து 28.6 மெ.தொ. விதை நெல் உற்பத்தி செய்ய ப்பட்டது.

நடுகைப்பொருள் உற்பத்தி

அட்டவணை 2.2.8.2: 2011 ல் உற்பத்தி செய்யப்பட்ட நடுகைப்பொருட்கள்

பயிர்	இனங்கள்	உற்பத்தி
வாழை	சீனிக்கதலி, புளிக்கதலி, சாம்பல், கண்டுல கப்பல், ஏனைய இனங்கள்	683 உறிஞ்சிகள்
பப்பாசி	"ரத்னா"	499 சாடித் தாவரங்கள்
அன்னாசி	"மொறிஷியஸ்"	1452 சாடித் தாவரங்கள்
கிரிஅல	"இசுறு"	300 நாற்றுக்கள்
மரவள்ளி	"கிரிகவடி"/ யாழ்ப்பாண தெரிவு	518 m – தடிகள்
வற்றாளை	"கண்ணொறுவ சுது", றணபிம" அமா/ தவல	55 kg துண்டங்கள்
அம்பரல்லா	சோட்	10 சாடித் தாவரங்கள்
ட்றகன் பழம்		07 சாடித் தாவரங்கள்
கொடிதோடை		200 சாடித் தாவரங்கள்

கூட்டெரு உற்பத்தி , மேம்பாட்டுத் திட்டம்

41 மெ.தொ. கூட்டெரு தயாரிக்கப்பட்டது. 4000 kg உட்புகுத்திகளில் 1990kg விநியோகிக்கப் பட்டது. 398 பேர் பயிற்சி பெற்றனர்.

தொழில்நுட்ப விரிவாக்கல்

2011ம் ஆண்டுப்பகுதியில் பல பயிற்சித் நிகழ்ச்சிகள் கிராந்துருக்கோட்டை ARS இனால் நடாத்தப்பட்டது.

- மாதிரிக்கிராமத் நிகழ்ச்சிச் (02 நிகழ்ச்சிகள் 20 அங்கத்தவர்கள்).
- வாழை, அன்னாசிப் பயிர்களில் கலப்பினப் பயிர்ச்செய்கைக்கான தகவல்களைப் பெறுவ தற்காக 150 பாடசாலைச் சிறார்கள்/ விவசா யிகள்/ அரச அலுவலர்கள் ஆகியோர் நிலை யத்திற்கு வருகை தந்துள்ளனர்.

2012 ஆண்டிற்கான திட்டம்

- தெரிவு செய்யப்பட்ட மரக்கறிகளுக்கு தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்கச் சோதனை.
- தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட நெல் வர்க்கச் சோதனை.
- கிழங்குப் பயிர், மறுவயற் பயிர்களுக்கான தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட வர்க்கச் சோதனை.
- சேதனப்பசளை உற்பத்தியும் அதனை மேம்படுத்தும் திட்டங்களும்.
- பப்பாசி ‘‘ரத்னா’’ வர்க்கத்திற்கான அடிப்படை மற்றும் பதிவு செய்யப்பட்ட விதை உற்பத்தி.
- Bg 250, Bg 366 ஆகிய வர்க்கங்களுக்கான விதை நெல் உற்பத்தி.
- மரக்கறி/ பழங்கள், கிழங்குப் பயிர் ஆகியவற்றிற்கான விதை நடுகைப் பொருள் உற்பத்தி.
- பாடசாலைச் சிறுவர்கள், விவசாயிகள் ஆகி யோருக்கான விரிவாக்க, பயிற்சித் திட்ட ங்கள்.

உத்தியோகத்தர் பட்டியல்

பதவியணி	எண்ணிக்கை
ஆராய்ச்சி நிலையப் பொறுப்பதிகாரி	01
ஆராய்ச்சி அலுவலர்	04
விவசாயப் போதனாசிரியர்	06
ஆராய்ச்சி உதவியாளர்	02
ஆராய்ச்சி உப உதவியாளர்	02
முகாமைத்துவ உதவியாளர் Gr III	01
உழவு இயந்திர இயக்குனர்	01
களஞ்சியக் காப்பாளர்	01
காவலாளி	04
பயிற்றப்படாத தொழிலாளர் Gr III	26
தொழிலாளர் (ஒப்பந்த அடிப்படை)	27
மொத்தம்	**77**

2.2.9 பூங்கனியியல் ஆராய்ச்சிப் பகுதி (HRU), கன்னொறுவை

கன்னொறுவையிலுள்ள பூங்கனியியல் ஆராய்ச்சி பகுதி-2 ஆனது பழப்பயிர்களுக்கான விசேடமான ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையமாகும். இது பூங்கனியியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவனத் தினால் நிர்வகிக்கப்படுகின்றது.

இது கன்னொறுவை கட்டுகஸ்தோட்டை வீதியில் பேராதனை சந்தியிலிருந்து 2km தூரத்தில் HORDI யின் அண்மையில் அமைந்துள்ளது.

இந்த ஆராய்ச்சிப் பகுதியானது அமைந்துள்ள இடம் வரலாற்று புகழ் மிக்க கண்டிய மன்னனின் பூங்கனியியல் பூங்கா அமைந்த இடமாகும் இலங்கைத் தீவு முழுவதும் பிரித்தானிய ஆட்சிக்கு உட்பட்ட பின்னர் திரு ஸ்ரீ எட்வேட் பான்ஸ் ஆளுகையின் (1824-1831) கீழ் இப்பிரதேசம் அவருடைய தனிப்பட்ட பூங்கா ஆக விஸ்தரிக்கப்பட்டும் குதிரைகள் வளர்க்கும் லயமாகவும் பயன்படுத்தப்பட்டது. இவரால் 1916 வரை தொடர்ச்சியாக தேயிலை, இறப்பர், வாசனைத் திரவியப் பயிர்கள், புல் என்பன பயிர்ச் செய்கைப் பண்ணப்பட்டது.

முதலாவது விவசாய பணிப்பாளராக பொறுப் பேற்ற திரு R.L Lyne என்பவர் இப் பண்ணையை பொறுப்பேற்று இதனை விவசாய ஆராய்ச்சிப் பண்ணையாக மாற்றியமைத்தார். இதுவே 1912 ஆம் ஆண்டு புதிதாக ஆரம்பிக்கப்பட்ட விவசாயத் திணைக்களத்தின் பயிர் ஆராய்ச்சிப் பண்ணையாகும்.

இதன் பின்னர் தொடர்ந்து 100 ஆண்டுகளில் சில மீள்கட்டமைப்பு நிகழ்வுகள் நடைபெற்றது. இப்பண்ணை பூங்கனியியல் ஆராய்ச்சி நிலையத்தின் பழப்பயிர் ஆராய்ச்சி பண்ணையாக மாற்றப்பட்டது.

தற்பொழுது பூங்கனியியல் பகுதியானது (HRU-2) 25.2ha இக்கு பரவியுள்ளது. இப்பகுதியானது ஆராய்ச்சி அபிவிருத்தித் தொழில்நுட்பத்தைப் பின்வரும் பயிர்களுக்கு மேற்கொள்கின்றது. இதில் ரம்புட்டான், டூரியன், மா, இனிப்புத் தோடை, பலா, மண்டரீன், சபடில்லா, வாழை மற்றும் குறைந்த பயன்பாட்டுள்ள பல பழப் பயிர்களான ஜம்பு, மாசான், பெலி, வெறலு போன்றவற்றை உள்ளடக்கப்படுகின்றது.

வர்க்க விருத்தியும் உள்ளூர் வெளி நாட்டு வேறுபாடுகளின் தெரிவு மதிப்பீடு, இனப்பெருக்க தொழில்நுட்பம், நாற்றுமேடைப் பராமரிப்பு, மலர் செய்கை விஸ்தரிப்பு அதனுடைய முகாமைத் துவம், பூத்தலை தூண்டலும் பருவம் அற்ற காலங்களில் பழப்பயிர் உற்பத்தியும், உற்பத்தி திறனை அதிகரித்தல் போன்ற செயற்பாடுகள் நடைபெறுகின்றன.

பாதீடு

அட்டவணை 2.2.9.1 வருடாந்தப் பாதீடு -2011 (ரூ)

செலவு விடயம்	ஒதுக்கீடு	செலவு	செலவு வீதம்
மீண்டுவரும் செலவு	3,220,715	3,043,683	95
திட்டங்கள்:-			
மாங்காயில் விளைச்சல் தரத்தில் முன்னேற்றம்	425,000	343,546	81
மாதிரிக் கிராமத் திட்டம்	200,000	150,369	75
இழைய வளர்ப்புத் திட்டம் (வாழையும் அன்னாசியும்)	250,000	235,370	94
நடுகைப் பொருள் உற்பத்தி	470,000	301,382	64
SPMDC திட்டம்	183,000	185,804	102
SLUSA திட்டம்	250,000	183,324	73
தேசத்திற்கு மகுடம்	1,000,000	800,000	80
நூற்றாண்டு கொண்டாட்டம்	300,000	300,000	100
கூட்டெருத் திட்டம்	100,000	95,000	95
மொத்தம்	**6,398,715**	**5,638,478**	**88**

முன்னேற்றம்

ஆராய்ச்சி

சேகரிக்கப்பட்ட ஆனைக் கொய்யா மூலவுயிருருப் பராமரிப்பு

டூரியானின் சேகரிக்கப்பட்ட மூலவுயிருரு 'A' துண்டத்தில் 1.5 ஏக்கரில் விருத்தி செய்ய ப்பட்டது. புதிதாக வெளியிடப்பட்ட இனங்களும் (அம்பெடென்ன, கசுன்) வேறு சாதகமான தாவரங்களும் இந்த துண்டத்தில் பயிரிடப்பட்டது. இந்த துண்டமானது பராமரிப்பு இடர்பாடுகளை எதிர்நோக்கியதன் காரணம் களப் பணியாளர்கள் குறைவும், நீர்பாசன வசதியின்மையும், ஏனைய உள்ளீடுகளின் போதாமையும் ஆகும்.

இருப்பினும் முன்னேற்றமானது மிக மெதுவாக இருந்ததற்கான காரணம் களத்தில் பயிரிடப்பட்ட ஒட்டுத் தாவரங்களின் இழப்பினால் ஆகும்.

அட்டவணை 2.2.9.2 மூலவுயிருருத் தொருதியில் உள்ள வர்க்கங்களும் தெரிவுகளும்

தெரிவு இல	தெரிவும் பெயர்	தாவர எண்ணிக்கை	நிலை
D - 6	குசும்	12	4 மரக்கறி வீரியமாக வளர்ந்தது 2 இறந்த தாலும் அவை மீள நடுகை செய்யப்பட்டது
D - 11	அம்படெனத்	12	09 தாவரங்கள் வீரியமாக வளர்கிறது
D - 3	கன்னொறுவை 3	3	எல்லாம் வீரியமாக வளர்கிறது
D - 1	கன்னொறுவை 1	3	எல்லாம் வீரியமாக வளர்கிறது
D - 2	தெரிவு	2	எல்லாம் மெதுவாக வளர்கிறது
D - 5	தெரிவு	1	எல்லாம் மெதுவாக வளர்கிறது
D - 4	தெரிவு	4	ஆரம்ப வளரும் பருவத்தில், மெதுவாக வளர்கிறது
D - 31	தெரிவு	1	வளர்க்கின்ற பருவத்தில் மெதுவான வளர்ச்சி
D - 32	தெரிவு	1	இறந்து விட்டது
இரத்தினபுரி W	தெரிவு	6	வீரியமாக வளர்கிறது 2 புதிதாக நடப்பட்டது.

நிலை:- தொடர்ச்சியாக இப்பயிர்களை பராமரிப்பதன் நோக்கம் மேன்மையான இனங்களை எதிர்காலத்தில் தெரிவு செய்தல் ஆகும்.

சேகரிக்கப்பட்ட ஆனைக்கொய்யா மூலவுயிருருப் பராமரிப்பு

1987/88 இல் முதலாவது ஆனைக்கொய்யா மூலவுயிருருத் தொகுதி பூங்கனியியல் திட்டத்தில் (FAO/ DOA) ஸ்தாபிக்கப்பட்டது. இதில் பல பூச்சி பீடைகளால் தாக்கப்பட்டிருந்தது. இதற்கு புனருத்தாபனம் அல்லது மீளப் புதுப்பித்தல் வேண்டும். (அட்டவணை 2.2.9.3)

ஆனைக்கொய்யாவில் (Conventional) பதிய முறை இனப்பெருக்கத்தின் தொழில்நுட்பத்தை அதிகரித்தல்

ஆப்பு ஒட்டினை விளைத்திறனாக முன்னேற்றுவ தற்குத் தேவையான ஒரே மாதிரியான ஒட்டுக் கிளை மட்டுப்படுத்தப்பட்டுள்ளமை வர்த்தக ரீதி யில் பெரிய அளவில் நடுகைப் பொருள் உற் பத்தி செய்தலுக்கு ஓர் பிரச்சினையாக உள்ளது.

அவதானிக்கப்பட்ட கற்கைநெறியிலிருந்து தெரிய வருவது 1 மாத வயதுடைய, பொலித்தீன் பைகளில் வளர்க்கப்பட்ட ஒட்டுக்கட்டையில், நீளமான முதிர்ந்த முளைப்பாக தெரியும்

உபயோகிக்க க்கூடிய விளைத்திறனுள்ள அரும்பு கொண்ட ஒட்டுக்கிளை ஆப்பொட்டு மூலம் ஒட்டப்பட்டது. முதிர்ந்த ஒட்டுக்கிளை கிட்டத்தட்ட 5-10cm நீளமும், ஆப்பு ஒட்டிற்கு முன்பு உச்சி அகற்றப்பட்டிருக்கும் போது மிகவும் தகுதியா னதாகவும் இருக்கும். மீண்டுவரும் முறையான கற்கை அடுத்த வருடம் செய்வதற்கு திட்டமிடப்ப ட்டுள்ளது. 20 நாட்களின் பிறகு ஒட்டுதல் அவதா னிக்கப்பட்டதில் 85% வெற்றியளித்திருந்தது. இந்த முறையில் பயன்படுத்த முதிர்ந்த சிறு கிளை ஒட்டுக்கிளைகளுக்கு இளமையான ஒட்டுக்கட்டையும் பயன்படுத்த முடியும்.

பல்வேறுப்பட்ட இடங்களுக்காக (Surath) சூரத் எனும் புமெலோ (Pumello) வர்க்கத்தை பெருக் குதல்:~

கிட்டதட்ட 300 புமெலோ ஒட்டுத் தாவரங்கள் வழங்குவதற்கு தாயாராக உள்ளது. 25 ஒட்டுத் தாவரங்கள் தனிப்பட்ட நாற்று மேடைக்காரர்களி டையே தாய்த் தாவரங்களாக பகிர்ந்தளிக்கப் பட்டது.

அடுத்த 100 தாவரம் விருத்தி செய்யப்பட்டு ஆராய்ச்சிப் பகுதியின் எதிர்க்கால தேவைக்காக வும் ஏனையவை பலத்தரப்பட்ட இடங்களில் மதிப்பீடு செய்வதற்காகவும் ஒதுக்கப்பட்டது.

அட்டவணை 2.2.9.3 முலவுயிருருத் தொருதியில் உன்ன ஆனைக் கொய்யா வர்க்கங்கள்

வர்க்கம்		பயிர் எண்ணிக்கை	குறிப்பு
பூரேட்டா	(Fuerte)	6	மீளப்புதுபித்தல் தொடர்ச்சியான
டவர்	(Tower)		
பூத்	(Booth)	3	செயன்முறையாக இருத்தல்
சைமன்னஸ்	(Simonods)	6	பங்கசு தாக்கத்தினால் கீழ்வரும் மரங்கள்
பூத் 8	(Booth 8)	4	இறந்தன eg:- Phytopthora collar rot
சொகட்	(Choacat)	4	ஹாஸ் (Hass)- 10 ஒட்டு
மொனரோ	(Monroe)	4	புயூரேட் - 01 ஒட்டு
ஹாஸ்	(Hass)	2	சைமன்ட்ஸ்- 01 ஒட்டு
வெல்டின்	(Waldin)	4	டவர் - 01 ஒட்டு
ரீட்	(Reed)	7	கிட்டத்தட்ட 15 ஒட்டு ஹாஸ் இனம் (Hass)
புறூக்ஸ்லேட்	(Prooks' late)	4	வேறு ஒரு பகுதியில் விஸ்தரிக்கப்பட்டது.
பொலொக்	(Pollock)	5	புயூரேட், டெவர், ஹாஸ், பூத்-7, வெல்டிங்
நேபல்	(Nebal)	2	ஆகியவை வீரியமாக வளர்ந்ததுடன்
சீப்பரேட்	(Shephend)	4	கனிகளையும் கொண்டுள்ளது.
பின்ஸ்கேட்டன்	(Pinkerton)	4	
எறன்டனோல்	(Edranol)	4	
		2	

நல்ல இனங்களை தெரிவு செய்யும் நோக்குடன் இனங்கள் தொடர்ச்சியாக பராமரிக்கப்பட்டன.

இழைய வளர்ப்பில் நேத்திராம் பலம் வாழையின் வயல் செயற்திறன்

முதல் 4 மாத காலத்தில் இழைய வளர்ப்பு வாழை உறிஞ்சிகள் மெதுவானதும், வீரியம் குறைவானதுமான வளர்ச்சியைக் காட்டிய போதிலும் பாரம்பரிய உறிஞ்சிகள் வீரியமாக வளர்ந்தது. எப்படியிருந்த போதிலும் மரத்தின் உயரம், சுற்றளவு, தோன்றும் இலைகளின் எண்ணிக்கை என்பன இரண்டு பரிசோதனை களிலும் நட்டு 7 மாதத்தின் பின் ஒரே மாதிரியாக இருந்தது. குலைகளின் விளைச்சலும் ஒரே மாதிரியாக இரு பரிசோதனைகளிலும்

(5.975kg) இருந்தது. இழைய வளர்ப்பு தொழில் நுட்பம் ஆனது நெத்திராம் பழம் வாழையில் பெருக்கம் செய்வதற்கு ஏற்றதாகும். எப்படியிரு ந்த போதிலும் புதிய பரீட்சாத்த செய்முறை பாரம்பரிய செய்கையுடன் ஒப்பிடுவதற்காக ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

Longan இன் elite நடுகை வர்க்கத் தெரிவு *(Euphoria longana)*

இத்தேர்வு இனத்தின் பழம் பெரியது. (4.8 – 7gm) நல்ல தரமானது. 18-20 (brix value) இனிப்பு தன்மையைக் கொண்டது. இக்கற்கை தொடர்கிறது.

லொகான், வக்ஸ்அப்பின், லன்சோன் ஆகியவற்கான சரியான இனப்பெருக்கத் தொழில்நுட்பம்

லொகானுக்கான பதிய முறை இனப்பெருக்கம் தொடர்கிறது.

சாடிக்குரிய ஊடகம், கூட்டெரு, மணல் என்பன 1:1 எனும் விகிதத்தில் அமைவது வக்ஸ் அப்பிளின் தண்டுத் துண்டங்களிள் வேர் விடலுக்கு மிக நல்ல ஊடகமாகும். Lansone ஆப்பு ஒட்டு மூலம் வெற்றிகரமாக இனப்பெருக்கம் செய்ய முடியும்.

Ber *(Ziziphus mauritiana and Z jujube)*; நோய் பீடைகளுக்கான கற்கை

Ber இல் *Bactrocera pyrifoliae, Carponya versuvina* பழ ஈ இனமும் கண்டுபிடிக்கப்பட்டது.

அபிவிருத்தி வேலைகள்

பூங்கனியியல் ஆராய்ச்சி அலகு 2 மாதிரிக் கிராமங்களை கண்டி மாவட்டத்தில் பழப் பயிர்களுக்காக விருத்தி செய்துள்ளது.

அட்டவணை 2.2.9.4 மாதிரி கிராமம் விஸ்தரிப்பு

பிரதேச செயலகம்	வி. போ பிரிவு	கிராம சேவையாளர் பிரிவு	பயனாளிகள் எண்ணிக்கை	பழப்பயிர்	வழங்கப்பட்ட வேறு உதவிகள்
தெல்தெனிய	உடிஸ்பட்டுவ Udispattuwa	ரான்வல Ranwala	40 விவசாயக் குடும்பம்	நாரத்தை ரம்புட்டான் இனிப்புத் தோடை டூரியன் பலா மா	விவசாய தொழில்நுட்பமும் சிறு உபகரணங்கள் (செக்கடியஸ்) 70 பழைய மரங்கள் புனருத்தாபனம் செய்யப்பட்டது.
உடுநுவர Udunuwara	தலவத்துர Talawathura	வேகிரிய Wegiriya	40 விவசாயக் குடும்பம	நாரத்தை ரம்புட்டான் ஆனைக் கொய்யா பெலிரகன் மா, கொய்யா	162 ஒட்டுத் தாவரங்கள் ஒட்ட ப்பட்டது. விஸ்தரிக்கப்பட்டது. 20 பொருட்கள் பகிர்ந்தளிக்கப் பட்டது

வி.போ – விவசாயப் போதனாசிரியர்

நடுகைப் பொருள் உற்பத்தி:~

ஆராய்ச்சிப் பிரிவிலும், பண்ணைப் பிரிவிலும் நிறைய ஒட்டு பழப்பயிர்களும், நாற்றுக்களும்/ உறிஞ்சிகளும்/ வேர் துண்டங்களும் வேறுவேறாக உற்பத்தி செய்யப்பட்டன.

அட்டவணை 2.2.9.5 நடுகைப் பொருட்கள் உற்பத்தி

பயிர்	ஆராய்ச்சி பிரிவு	பண்ணைப் பிரிவு	மொத்தம்	குறிப்பு
ஆனைக்கொய்யா		1596		ஒட்டுக் கன்றுகள் நாற்றுக்கள் வேர்த் துண்டங்கள், பதியங்கள் என்பன உள்ளடக்கப்பட்டுள்ளது.
ரம்புட்டான்		8796		
டூரியன்		407		
மா		2247		
தேன் தோடை		203		
நாரத்தை		284		
ஏனையவை	2,600	13250		மாசான் (Masan) பெலி (beli) முக்கியமாக ஆராய்ச்சி நிலையங்களிலும், காரம்போல (Carambola) கொய்யா, பலா பண்ணைப் பிரிவிலும் உள்ளது. வேர் துண்டங்கலும் ஒட்டுக் கன்றும் அடங்கும்.
	3,200	26,783	29,983	

தொழில்நுட்பப் பரிமாற்றம்

நுகவல மத்திய கல்லூரியில் ஓர் பழப் பயிர் பூங்கா அமைக்கப்பட்டது. அதில் கிட்டத்தட்ட 55-50 பழப்பயிர் இனங்களும் 200 பயிர்களும் விருத்தி செய்யப்பட்டது.

கூட்டெரு உற்பத்தி நிகழ்ச்சி

கூட்டெரு உற்பத்தி நிகழ்ச்சியில் 10 தொன் கிடைக்கப் பெற்றது. அவை ஆராய்ச்சி பகுதிக ளுக்கு பயன்படுத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சி விரிவாக்கத்திற்காகத் தொடர்கிறது.

விரிவாக்க வேலைகளும் பயிற்சியும்

2011 இல் பின்வரும் பயிற்சி வகுப்புக்களும், நாற்று மேடை தொழில்நுட்பங்கள் பற்றிய பயிற்சியும் நடைபெறுகிறது.

- 2 பட்டதாரி மாணவர்கள் 6 மாத காலம்
- 2 டிப்ளோமா மாணவர்கள் 4 மாத காலம்
- 2000 பாடசாலை மாணவர்கள் - 1 நாள்
- பிராந்திய விவசாயத் திணைக்களங்களுக்கு விசேட பயிற்சிகள் - 60 (AI,SMO,AOO,& DD)
- விவசாயத் திணைக்கள உத்தியோகத்தர் களுக்கான பருவகால விசேட பயிற்சி - 350 (AI , AOO, DD)

- பருவக்கால பயிற்சிகள் :- 3 நிகழ்ச்சிகள் விவசாயத் திணைக்கள விரிவாக்க உத்தியோ கத்தர்களுக்காக நடைபெற்றது.
  i. வர்த்தக ரீதியிலான பழப்பயிர்ச் செய்கை, தொழில்நுட்பங்களும் வழங்கப்பட்டது.
  ii. பழப் பயிர்களின் உற்பத்தி திறனை அதிகரித்தல்
  iii. பருவமற்ற காலங்களில் பழப் பயிர்ச் செய்கை

- **விசேட பயிற்சி நிகழ்வுகள்:- 8 விசேட பயிற்சிகள் நடைபெற்றது. அவை பின்வருமாறு**

a) மத்திய மாகாணசபை விரிவாக்க உத்தியோ கத்தர்கள் (60 பேர்) பழப் பயிர்களுக்கான இலைப் போசணை திரவப் பசளை (Foliar) பிரயோகத்தின் வாய்ப்பு.

b) இலங்கையில் பழக் கைத் தொழிலில் வழங்கல்களினதும் வாய்ப்புக்களினதும் தற் போதைய நிலை: விவசாயத் திணைக்க ளத்தின் பங்களிப்பு: புதிதாக சேர்த்துக் கொள்ளப்பட்ட SLAS (4) உத்தியோகத்தர்க ளுக்காக நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டது.

c) வர்த்தக பூங்கனியியல் நாற்று மேடைகளில் பழப்பயிர் இனப்பெருக்கம் நாற்றுமேடை முகாமைத்துவம் என்பன உற்பத்தித்திறனை அதிகரிக்கின்றது. இரு நிகழ்வுகள் நாற்று மேடை காப்பாளருக்கும் நாற்றுமேடைக்கு பொறுப்பான உத்தியோகத்தர்களுக்கும் (விவசாயத் திணைக்கள பண்ணை, விதை அத்தாட்சிப்படுத்தும் சேவைகள்) நடை பெற்றது.

- ஒரு நாள் பயிற்சி வகுப்பு:- 6 பயிற்சி நிகழ்வுகள், பாடசாலை மாணவர்கள் ஆராய்ச்சி நிலையத்திற்குவருகை தந்த பொழுது நடைபெற்றது.

- 4 மாத காலத்தையுடைய தொழில் சார் பயிற்சி ஓர் பல்கலைகழக மாணவிக்கு நடைபெற்றது. அவர் எனது அவதானிப்பின் கீழ் வெளியக மேற்பார்வையாளராக ஆனைக் கொய்யாவில் முன்னேற்ற ஆராய்ச் சிகளை செய்தார்.

தொலைக் காட்சி நிகழ்ச்சி:-

3 தொலைக்காட்சி நிகழ்வுகள் பின்வரும் பகுதிகளில் நடை பெற்றது.

a) பழப் பயிர் நாற்று மேடை முகாமைத்துவத் தொழில்நுட்பம்

b) ரம்புட்டானில் கூடிய விளைச்சல் பெற கத்தரித்தலும் பழக்கப்படுத்தலும்

c) ஆனைக் கொய்யா உற்பத்தி: பயன்பாடும் வாய்ப்பும் முக்கியமான பகுதிகளும்

6 வானொலி நிகழ்ச்சிகள் பின்வரும் விடயங் களில் நடைபெற்றது.

தேசிய மட்டத்தில் / ஒரே காலத்தில் எல்லா சிங்கள வானொலிப் பிரிவுகளிலும் (Channel) செய்திகளில் காட்டப்பட்டது.

a) பருவம் அல்லாத காலத்தில் பழப்பயிர் உற்பத்தி:- வாய்ப்புக்களும் பொருத்தமான தொழில்நுட்பங்களும்

b) வீட்டுத் தோட்டங்களில் பழப் பயிர்களின் உற்பத்தித்திறனை முன்னேற்றுதல்

கரந்துரட்ட FM எசெவன நிகழ்ச்சி வெள்ளிக் கிழமையில்

a) வீட்டுத் தோட்டத்தில் பழப் பயிர்களின் உற்பத்தி திறனை அதிகரித்தல்

b) வீட்டுத் தோட்டத்தில் பழப் பயிர்களை வடிவ மைத்தல், ஒழுங்கமைத்தல், புனருத்தாபன தொழில்நுட்பங்கள்.

c) வீட்டுத் தோட்டப் பழப்பயிரில் ஏற்படும் பூத்தல், காய்த்தல், தொடர்பான பிரச்சினை கள்.

d) பழக் கிராமங்களின் பராமரிப்பு வழங்கலும், திருத்தங்களும்

பத்திரிகை:-

a) ஒரு கட்டுரை வெளியிடப்பட்டது :- வர்த்தக ரீதியிலான பப்பாசி பயிர்ச் செய்கை

விவசாய சஞ்சிகை / பத்திரிகை

கட்டுரைகள் 6 வெளியிடப்பட்டன.

a) வர்த்தக முறையான வாழைப் பயிர்ச் செய்கை
கொவிகெதர ஏப்பிரல்- யூன் 2011

b) பழமும் விதையும் ஆராய்ச்சித் தேவை
Ag Tec ,DOA, மாச் ஏப்ரல் -2011

விரிவாக்க புத்தக வெளியீடு 4 பதிப்பீடு செய்யப்பட்டது. விவசாயத் திணைக்களத்தின் வயல் அறிவுரைக் குறிப்பேடு

a) அன்னாசி , மா , பப்பாசி சித்திரசு

2012 ஆண்டுக்குரிய திட்டம்

ஆராய்ச்சி

- ஆனைக்கொய்யாவில் ஆப்பு (Wedge) ஒட்டுதலை முன்னேற்றல்.
- ரம்புட்டான், மா, ஆனைக் கொய்யாவில் பூத்தலைத் தூண்ட இரசாயனம் பாவித்தல்.
- நேத்திராம்பழ வாழையில் இழைய வளர் ப்பை மதிப்பிடல்.
- ஆனைக் கொய்யாவில் நவல் (Novel) தொழில்நுட்பத்தை பயன்படுத்தி பரம்பரை முன்னேற்றம்
- பலாவில் வித்தியாசமான ஒட்டு தொழில் நுட்பங்களின் தாக்கம்
- குறைவான பயன்பாட்டில் உள்ள சில பழமர இனங்களை வர்த்தக உற்பத்திக்காக முன்னேற்றுதல்
- தெரிவு செய்யப்பட்ட குறைவான பயன்பாட்டிலுள்ள பழப் பயிர்களின் இனப் பெருக்கத் தொழில் நுட்பங்களை விருத்தி செய்தல்
- பழப் பயிர் இனவிருத்திக்கு சாடியில் ஆரம்ப ஒட்டுக்களை விருத்தி செய்தல்
- ஆனைக்கொய்யா மா, ரம்புட்டானில் பழங்களில் விதையற்ற நாற்றுக்கள் உருவாக்கல் பற்றிய கற்கை
- அன்னாசியில் நிலத்தில் போடப்படும் பசளை க்குப் பதிலாக திரவப்பசளை விசிறலின் தாக்கம்.
- பப்பாசியில் வளையப்புள்ளி வைரசைக் கட்டுப்படுத்தி திரவப் பசளைப் பிரயோகம்.

உத்தியோகத்தர் பட்டியல்

பதவியணி	**எண்ணிக்கை**
நிலையப் பொறுப்பு ஆராய்ச்சி உத்தியோகத்தர்	01
ஆராய்ச்சி உத்தியோகத்தர்	01
நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்	01
விவசாயப் போதனாசிரியர்	05
பொது முகாமைத்துவ உதவியாளர்	01
பண்ணை எழுதுவினைஞர்	02
சாரதி	01
காவலாளிகள்	06
தாவர ஒட்டுனர்	02
மின் ஒட்டுனர்	01
உழவியந்திர இயக்குனர்	01
தொழிலாளி	15
தொழிலாளி (ஒப்பந்த)	44
மொத்தம்	**81**

2.3 நெல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம் (RRDI), பத்தலகொட

நெல் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிலையம் நாட்டின் நெல் உற்பத்தியில் தொடர்ச்சியாகத் தனது பங்களிப்பை மேற்கொண்டு வருகின்றது. உயர் விளைச்சல் தரும் புதிய இனங்களை அறிமுக ப்படுத்துகின்றது. நெல் உற்பத்திக்கு புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துவதன் மூலமும் விவசாயிகள் தாம் பயிரிடும் நெல் வர்க்கங்களின் சாத்தியமான விளைச்சலை பெற்றுக்கொள்ள உதவுகிறது. RRDI இல் மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சி அபிவிருத்தித் திட்டமானது உற்பத்திச் செலவைக் குறைத்து பண்ணை வருமானத்தை அதிகரிப்பதையும் தானிய தரத்தை விருத்தி செய்வதையும், நுகர்வோருக்கு நியாயவிலையில் நெல்லை வழங்குவதையும் நோக்காகக் கொண்டுள்ளது.

2011ம் ஆண்டுகளில் நமதுநாடு வெளிநாட்டு சந்தை வாய்ப்பிற்கான புதியதோர் அத்தியாய த்தினுள் நுழைந்தது. இலங்கை கடந்த சில வருடங்களாக நெல் ஏற்றுமதியில் ஈடுபட்டிருந்த போதும் அதன் ஏற்றுமதிக்கான திறன் ஆராயப்ப டவில்லை. 2009ம் ஆண்டில் 4,000 மெற்றிக் தொன்னாக இருந்த நெல் ஏற்றுமதியானது, 2010ம் ஆண்டில் 10,000 மெற்றிக் தொன்னாக அதிகரித்தது.

பாதீடு

அட்டவணை 2.3.1 வருடாந்தப் பாதீடு 2011 (ரூபா)

செலவு விடயம்	ஒதுக்கீடு	செலவு	செலவு %
மூலதன செலவினம்	32,548,601	9,627,818	30
நடைமுறைச் செலவினம்	29,555,800	27,613,024	93
விஷேட திட்டம்	152,000,000	7,319,451	5
வெளிநாட்டு நிதித் திட்டங்கள்			
களை விஞ்ஞானம் (IRRI)	300,000	228,900	76
பசுமை உயர்தர நெல் (GSR)	2,619,843	599,846	23
திட்டங்கள் (உள்நாடு)			
கலப்பின நெல் உற்பத்தி	2,700,000	1,954,642	72
சேதனப் பசளை	4,510,000	2,965,000	66
மாதிரிக் கிராமம்	300,000	263,533	88
NARP (மூழ்கடித்தல்)	2,000,000	1,600,215	80
NARP (உரப்பாவனை)	4,200,000	3,421,489	81
NARP (களைநெல்)	1,400,000	1,369,863	98
NARP (வரட்சி)	3,000,000	2,143,699	71
மொத்தம்	**235,134,244**	**59,107,479**	**25**

முன்னேற்றம்

நெல் இனவிருத்தித் திட்டம்

RRDI உம் அதன் உப நிலையங்களும் பாரம்பரிய மற்றும் கலப்பு இனவிருத்தி மூலம் தொடர்ச்சியாக அதன் நெல் இனவிருத்தியை மேற்கொண்டு வருகின்றது.

2011ம் ஆண்டில் அனேக உயிரியல் காரணிகளுக்கு எதிர்ப்புடைய இனங்களை விருத்தி செய்வதில் குறிப்பிடத்தக்களவு வெற்றி பெற்றது. ஆழமான நீரை, உவர்த்தன்மையை தகைப்பையும் தாங்கி வளரக் கூடிய பேதங்கள் இனங்காணப்பட்டு மேலதிக சோதனைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

புதிதாக சிபாரிசு செய்யப்பட்ட நெல் வர்க்கங்கள்

வர்த்தக ரீதியாக செய்கை பண்ணப்படுவதற்கு இரு புதிய நெல் வர்க்கங்கள் (BW 367, Ld 368) 2011ம் ஆண்டில் வெளியிடப்பட்டுள்ளன.

Bw 367

வெள்ளை சம்பா வர்க்கம், 3½ மாத வயதுப் பிரிவைச் சேர்ந்தது. குறுகிய வட்டவடிவமான நெல் மணிகளைக் கொண்டதும் ஈரவலயத்தில் 107 நாட்களில் முதிர்ச்சியடைவதுமான இவ்வர்க்கம் பொதுவாக நாடு முழுவதும் செய்கைபண்ணப்படுவதற்கு ஏற்றதாகும். இவ்வர்க்கத்தின் விளைச்சல் 7.9 தொ/ஹெ ஆகும். உடற்றொழிலியல் குறைபாடாகிய இரும்பு நஞ்சாதலுக்கு ஓரளவு எதிர்ப்புத்தன்மை வாய்ந்தது. ஏற்கனவே காணப்படும் சம்பா வர்க்கங்களை விட சாய்ந்து விழுதலுக்கு கூடிய சகிப்புத் தன்மை கொண்டது. கழுத்து எரிபந்தத்துக்கு சகிப்புத்தன்மையுடையது இயல்பு மற்றுமொரு சிறப்பியல்பாகும்.

Ld 368

இது 3½ மாத வர்க்கமாகும். ஈரவலயத்தில் 105 நாட்களில் முதிர்ச்சியடையும் இவ்வினம் நாடளாவிய ரீதியில் செய்கைபண்ணப்படுவதற்காக வெளியிடப்பட்டுள்ள குறுகிய வட்ட வடிவமான தானியங்களைக் கொண்ட சிவப்பு இன நெல்லாகும். இப்புதிய வர்க்கமானது நடைமுறையில் 7 தொ/ஹெ க்கு மேற்பட்ட விளைச்சலை தரும் ஆற்றலுள்ளது. அத்துடன் இலை எரிபந்தம், கழுத்து எரிபந்தம் ஆகிய நோய்களை எதிர்த்து வளரும் இயல்பையும், பற்றீரிய இலை வெளிறல், நெல் கொப்புள ஈ, கபிலநிற தாவரத் தத்தி ஆகியவற்றை ஓரளவு எதிர்த்து வளரும் இயல்பையும் கொண்டது. இது சாய்ந்து விழாத ஓர் வர்க்கமாகும். அத்துடன் நெல் மணிகள் நிறம் மாறாது.

4~4.5 மாத வயதுப் பிரிவுக்கான இனவிருத்தித் திட்டம்

2011ம் ஆண்டில் 55 வேறுபட்ட கலப்புகளின் சேர்க்கைகள் உற்பத்தியாக்கப்பட்டு 41 F1 குடித்தொகைகள் வெளிக்கள மதிப்பீட்டிற்காகத் தெரிவு செய்யப்பட்டன. இவற்றுள் 24 F1 குடித் தொகைகள் தொடர்ந்து முன்னெடுப்புக்களை மேற்கொள்வதற்காக தெரிவு செய்யப்பட்டன. அத்துடன் பதினேழு F2, பதின்மூன்று F3, பத்து F4 குடித்தொகைகள் முன்னைய கலப்புகளிலிருந்து தெரிவு செய்வதற்காகவும் மதிப்பீடு செய்வதற்காகவும் வெளிக்களத்தில் ஸ்தாபிக்கப் பட்டன. F5 சந்ததியிலிருந்து ஆரம்பித்து தொடர்ச்சியாக (F5, F6…) 1132 எச்சங்களைக் கொண்ட 43 முன்னேற்றகரமான குடித்தொகைகள் மேலதிக மதிப்பீட்டிற்கும் தெரிவுக்குமாக 2010/11 பெரும்போகத்திலும் 2011 சிறுபோகத்திலும் வெளிக்களத்தில் ஸ்தாபிக்கப்பட்டன. Bg 379-2 ஐ நியமமாகக் கொண்டு பதினெட்டு முன்னணிப் பேதங்களின் தானிய விளைச்சலும் தானியங்களின் தரமும் ஆரம்ப விளைச்சல் சோதனைகளிலும், பிரதான விளைச்சல் சோதனைகளிலும் மதிப்பீடு செய்யப்பட்டன.

3½ மாத வயதுப் பிரிவுக்கான இனவிருத்தித் திட்டம்

சில 3 ½ மாத நெல் வர்க்கங்களின் விளைச்சல் தரும் ஆற்றல் 4 மாத நெல்

வர்க்கங்களை ஒத்தது. அல்லது அவற்றை விட அதிகமாகும். RRDI இல் மேற்கொள்ளப்படும் நெல் வர்க்க முன்னேற்றத் திட்டமானது, உயர் விளைச்சலைத் தருவதும் சிறந்த தானிய இயல்புடையதும் உயிர், உயிரற்ற காரணிகளால் ஏற்படுத்தப்படும் தகைப்பிற்கு எதிர்ப்புத்தன்மை உடையதுமான 3½ மாத வயதுப் பிரிவு நெல் வர்க்கங்களை விருத்தி செய்வதை பிரதான நோக்கமாகக் கொண்டுள்ளது. 2011ம் ஆண்டில் 32 புதிய F1 கலப்புகள் உருவாக்கப்பட்டு அவற்றுள் 28 F1 சந்ததிகள் ஸ்தாபிக்கப்பட்டன. பதினான்கு F2 குடித்தொகைகள் ஒன்பது F3 குடித்தொகைகள், இரண்டு F4 குடித்தொகைகள் என்பன தனிப்படுத்துகைக் குடித்தொகைக ளிலிருந்து இனங்காணப்பட்டன. 19 கலப்புக ளிலிருந்து ஏறத்தாள 153 எச்சங்கள் மேலும் முன்னெடுத்துச் செல்வதற்காகத் தெரிவு செய்யப் பட்டன.

ஆரம்ப விளைச்சல் சோதனையிலிருந்தும் பிரதான விளைச்சல் சோதனையிலிருந்தும் பதினாறு முன்னனி பேதங்கள் தெரிவு செய்யப்பட்டு அவற்றின் விளைச்சல் தரும் ஆற்றல், நோய் பீடைகளுடனான எதிர்ப்பு, தானிய இயல்புகள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன. இவை Bg 357 மற்றும் Bg 358 இனங்களுடன் ஒப்பிடப்பட்டன. நான்கு முன்னனி பேதங்கள் சிறந்த பேதங்களாக தேசிய ஒருங் கிணைப்பு நெல் வர்க்க சோதனை (NCRVT) க்காக தெரிவு செய்யப்பட்டன. சிறந்த பேதமான Bg 3R ஆனது பெரிய அளவிலான வர்க்க ஒத்திசைவு சோதனையில் (Large Scale VAT) நாடு முழுவதும் பரீட்சிக்கப்பட்டு வருகிறது.

3 மாத வயதுப் பிரிவுக்கான இனவிருத்தித் திட்டம்

மழைவீழ்ச்சி ஒழுங்கற்றுக் காணப்படுவதனால் குறுகிய காலப்பயிர் விரும்பப்படுவதன் காரண மாக 3 மாத வயதுப் பிரிவையுடைய நெல் வர்க்கங்களின் முக்கியத்துவம் அதிகரித்துக் செல்கின்றது. எனவேதான் RRID யில் மேற்கொள்ளப்படும் இனவிருத்தித் திட்டங்கள் இந்த வயதுப் பிரிவுக்கு முன்னுரிமை வழங்குவதுடன், கபிலநிறத் தாவரத்தத்தி, நெல் கொப்புளஈ, பற்றீரிய இலைவெளிறல், எரிபந்தம் ஆகியவற்றுக்கு நீண்டகால எதிர்ப்புடையதும் தரமான தானியங்களைக் கொண்டதுமான உயர் விளைச்சலைத் தரக்கூடிய பேதங்களை இனங்கண்டு விருத்தி செய்கிறது.

2.5 மாத வயதுப் பிரிவுக்கான இனவிருத்தித் திட்டம்

கபிலநிறத் தாவரத்தத்தி, நெல் கொப்புளஈ, பற்றீரிய இலைவெளிறல், பனிப்பூச்சி ஆகியவ ற்றிற்கு எதிர்ப்புடையதும் உயர் விளைச்சலைத் தரும் ஆற்றலைக் கொண்டதுமான மிகவும் குறைந்த வயதுடைய வர்க்கங்களை விருத்தி செய்வதை இலக்காகக் கொண்ட இனவிருத்தித் திட்டத்தை RRID யானது 2011 இலிருந்து தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. 45 புதிய கலப்பு வர்க்கங்களை உருவாக்குவதற்காக விருத்தி செய்யப்பட்டன. பதினொரு தொகைக் குடித்தொகைகளும் 370 எச்சங்களும் மேலும் முன்னெடுத்துச் செல்லப்பட்டன. குறுகிய வட்டவடிவ மணிகளைக் கொண்ட முன்னைய 5 பேதங்களைப் பயன்படுத்தி ஆரம்ப விளைச்சல் சோதனைகள் ஸ்தாபிக்கப்பட்டன. (10-2891, 2902, 2881, 2884, 2913) மேற்குறிப்பிடப்பட்ட 5 வர்க்கங்களுள் 4 வெள்ளை நிற அரிசியையும் ஒன்று சிவப்பரிசியையும் கொண்டது. இவை Bg 250 ஐ நியமமாகக் கொண்டு பரிசோதிக்க ப்பட்டன. தேசிய ஒருங்கிணைந்த நெல் வர்க்க சோதனை (NCRVT) வர்க்க இசைவாக்க சோதனை (VAT), பெரிய அளவிலான வர்க்க இசைவாக்க சோதனை (LSVAN) திட்டங்களை மேற்கொள்வதற்காக சிறந்த பேதங்கள் (Bg 10-2907) தொடர்ச்சியாகப் பெருக்கப்படுகின்றன.

இனவிருத்திக் குடித்தொகைகளின் முன்னேற்றம்

விளைச்சல் தரும் ஆற்றலை அதிகரித்தல், பிரதான பீடைகளுக்கும் (கபில நிறத் தாவர த்தத்தி, நெல் கொப்புளஈ) நோய்களுக்கும் (எரிபந்தம், பற்றீரிய இலை வெளிறல்)

எதிர்ப்புத்தன்மை, மேம்பட்ட தானியங்களின் தரம், மாறுபட்ட சூழல் காரணிகளைத் தாங்கும் தன்மை ஆகிய நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு 2011 இல் அறுபது கலப்புகள் உருவாக்கப்பட்டன. இந்த 60 கலப்புகளுள் 48 F_1 குடித்தொகைகள் வெளிக்களத்தில் ஸ்தாபிக்கப்பட்டன. 13 குடித்தொகைகள் பரம்பரை விருத்திக்காகத் தெரிவு செய்யப்பட்டன. மேலும் 28 பெரும் குடித்தொகைகள் ஸ்தாபிக்கப்பட்டு F_5 சந்ததியிலிருந்து 22 கலப்புகள் தெரிவு செய்யப்பட்டன. ஏறத்தாள 812 எச்சங்கள் நோய் பீடை எதிர்ப்புக்காகவும் தானிய விளைச்சலுக்காகவும் மதிப்பீடு செய்யப்பட்டன.

ஆரம்ப விளைச்சல் சோதனைகளிலிருந்தும் பிரதான விளைச்சல் சோதனைகளிலிருந்தும் ஒன்பது சிறந்த பேதங்கள் அவற்றின் விளைச்சல் தரும் ஆற்றலுக்காகவும், தானியங்களின் தரத்திற்காகவும் கட்டுப்பாட்டு வர்க்கமாக Bg 300 உடன் சோதிக்கப்பட்டன. ஐந்து பேதங்கள் சிறந்த பேதங்களாகத் தெரிவு செய்யப்பட்டன.

மூன்று பேதங்கள் 2011 இல் தேசிய ஒருங்கிணைப்பு நெல் வர்க்க சோதனைக்காகத் தெரிவு செய்யப்பட்டன.

பாரம்பரிய வர்க்கங்களின் விகாரத்தினூடான முன்னேற்றம்

பாரம்பரிய வர்க்கங்களிலுள்ள சாய்தலுக்கு எதிர்ப்பான இயல்புகளையும், சிறந்த தானிய இயல்புகளையும் கண்டறிந்து அவற்றிலிருந்து சிறந்த பாரம்பரிய வர்க்கங்களை விருத்தி செய்வதை இந்த ஆராய்ச்சி நோக்காகக் கொண்டிருந்தது. முன்னர் காமா கதிர்வீச்சு மூலம் சுதுரு சம்பாவும், சுவந்த சம்பாவும் விகார மடையச் செய்யப்பட்டன. மாற்றத்துக்குள்ளான தொகுதி முறையைப் பயன்படுத்தி தொடர்ச்சியான தெரிவு மேற்கொள்ளப்பட்டன. SW 25, SSR 8, SSR 26 ஆகிய மூன்று முன்னேற்றப்பட்ட பேதங்களின் விதைகளைப் பெருக்கி தூய்மைப்படுத்தப்பட்டு 2011ம் ஆண்டில் இரு போகங்களுக்கு அவற்றின் விளைச்சல் சோதனைகள் அவதானிக்கப்பட்டன.

காட்டு நெல்லை (O.nivara) ஓ. சற்றைவாவுடன் (O.sativa) பரந்த அளவில் கலப்பினப் பிறப்பாக்கம் செய்தல்

முன்னர் கபில நிற தாவரத் தத்திக்கான எதிர்ப்பினத்தை உருவாக்குவதற்காக O.nivara வை (WR ac 04) பெண் பெற்றோராகவும், Bg 380 ஐ ஆண் பெற்றோராகவும் பயன்படுத்தி கலப்புப் பிறப்பாக்கம் மேற்கொள்ளப்பட்டது. தெரிவு செய்யப்பட்ட இரண்டு பேதங்கள் (WH 20 உம் WH 48 உம்) 3½ மாத விளைச்சல் சோதனையில் ஸ்தாபிக்கப்பட்டு பின்னர் அவை மேற்கொண்டு முன்னெடுக்கப்படும் விளைச்சல் மதிப்பீட்டுக்காகப் பெருக்கப்பட்டன.

முலவுயிருருப் பெருக்கமும், இயல்புகளை விபரித்தலும் பாதுகாத்தலும்

2011 இல் முன்னர் மேற்கொள்ளப்பட்டதைப் போன்று 1500 நெற் பேதங்கள் (பாரம்பரிய வர்க்கங்கள், அறிமுகப்படுத்தப்பட்ட வர்க்கங்கள், விருத்தி செய்யப்பட்ட வர்க்கங்கள் உள்ளடங்கலாக) பெருக்கப்பட்டு RRDI யில் குறுகிய கால பாதுகாப்பு அலகில் பாதுகாக்கப்பட்டன. அத்துடன் விவசாயிகள், பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழகங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகியோருக்கு அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க விதை மாதிரிகள் விநியோகிக்கப்பட்டன.

உயிர்த் தொழில்நுட்பம்

பிரபல்யமான உள்ளூர் நெல் வர்க்கங்களினுள் 'உப 1' பரம்பரை அலகையும் உவர்த்தன்மையைத் தாங்கி வளரும் இயல்பையும் சேர்ப்பதற்காக 2011 இல் தேசிய விவசாய ஆராய்ச்சி திட்ட (NARP) நிதியின் கீழ் மூலக்கூற்று சுட்டியின் உதவியுடன் பின்முகக் கலத்தல் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. வெள்ளப்படுத்தலுக்கும் வரட்சியையும் தாங்கும் தன்மைக்குரிய சில சுட்டிகள் இனங்காணப்பட்டு அவற்றைப் பயன்படுத்தி பல கலப்புகள் பெறப்பட்டுள்ளன. அவற்றுள் ஆறு கலப்புகள் வெற்றிய

ளித்துள்ளன. பிரபல்யமடைந்துள்ள வர்க்கங்க ளின் பற்றீரிய இலை வெளிறல் நோய்க்கான எதிர்ப்புத்தன்மையை மேம்படுத்துவதற்கான பின்முகக் கலத்தல் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. Bg 250/ IRBB, 60/Bg 250 இலிருந்து பின்முகக் கலப்பு 1 இன் முதலாம் சந்ததி (BCIF1) வயலில் வளர்க்கப்பட்டது.

2011 இல் Bg 250 இனதும் Bg 352 இனதும் விதை முளையங்களிலிருந்து பெறப்பட்ட வியத்த மடையாக கலங்களைப் பயன்படுத்தி வரட்சி, உவர்த்தன்மை சகிப்பு விகாரங்களை விருத்தி செய்யும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

வயதுப் பிரிவையும் சிறந்த பயிராக்கவியல் இயல்புகளையும் (தாவர வகை, மட்டங்கள் உருவாதல், தானிய வகை, விதை நிறம்) தெரிவு செய்வதற்காக தாவரங்கள் தனிவரிசை எச்சங்களாக (G1) வளர்க்கப்பட்டன. ஒத்த புணரி களில் மாறுபாடுகளைத் தூண்டி சுதுருசம்பா, றாதெல், சுதுஹீனட்டி, சுவந்தல் போன்ற பார ம்பரிய வர்க்கங்களில் குட்டையான இயல்பைத் தூண்டுவதற்காக மகரந்த வளர்ப்பு தொழில் நுட்பம் மேற்கொள்ளப்பட்டு வியத்தமடையாத கலங்களும் பெறப்பட்டன.

முளையக் காப்புடன் இணைந்த பரந்த கலப்புப் பிறப்பாக்கமானது காட்டு இனங்களில் உள்ள முக்கிய இயல்புகளை முன்னணியிலுள்ள நெல் வர்க்கங்களுக்கு மாற்றுவதற்கு ஓர் பயனுள்ள தொழில்நுட்பமாகும். எனவே 2011 இல் ஒ.சற்றவை / ஒ.றைசோமரிஸ் கலப்பிலிருந்து பெறப்பட்ட தனித்தாவரம் F_2 சந்ததி வரை முன்னெடுத்துச் செல்லப்பட்டது. மீள் இணைக்கப்பட்ட உள்ளகக் கலப்பு பேதங்கள் நெல் பனிப்பூச்சிக்கும் (டகனல/சுதுருசம்பா) நீர்த்தேக்கம் (Bg 300/ கொடஹீனட்டி), உவர்த் தன்மைக்குமான (At 354/ Bg 352) பிறப்பு ரிமையியல் படிப்புகளை மேற்கொள்வதற்கு பயன்படுத்தப்பட்டன.

கலப்பின நெல்

விளைச்சல் தரும் ஆற்றலை உயர்த்துவதையும் விளைச்சல் இடைவெளிகளைக் குறைப்பதையும் நோக்கமாகக் கொண்டு சாதாரண இனவிருத்தித் திட்டத்தை விடவும் மேலதிகமாக கலப்புப் பிறப்பாக்கம் ஓர் பிரதான தொழில்நுட்பமாகப் பயன்படுத்தப்படுகிறது. கலப்பின விதை உற்ப த்தியை மேம்படுத்துவதற்காக RRDI கலப்பின பல்லினவினத் தன்மைக்கான பல ஆராய்ச்சித் திட்டங்களை மேற்கொள்கின்றது.

3- 3½ மாத வயதுப் பிரிவின் கீழ் விருத்தி செய்யப்பட்ட சிறந்த இயல்புகளைக் கொண்டதும் உயர் விளைச்சலைத் தருவதுமான வர்க்கம் BgHR-8 இன் விதை உற்பத்தி 2011 இல் மேற்கொள்ளப்பட்டது. BgHR-8 ஐத் தவிர மேலும் விரைவாக முதிர்ச்சியடையும் புதிய கலப்பின நெல் இணைப்புகள் பதினைந்து RRDI யில் விருத்தி செய்யப்பட்டன. இவ்வர்க்கங்கள் கட்டுப்பாட்டு வர்க்கங்களை விட (Bg 357, Bg 300) அதிஉயர் விளைச்சலை நிரூபித்தன. தானிய இயல்புகளையும் நோய் பீடைகளுக்கான எதிர்ப்பியல்புகளையும் கருத்தில் கொண்டு மேல திக ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படும்.

கலப்பின நெல் உற்பத்தி திட்டத்தில் பெற்றோர் பேதங்களை (மீள் நிரப்பு வழி, குழியவுரு ஆண் மலட்டுத் தன்மை தாவரங்கள்) விருத்தி செய்தல் ஓர் முக்கியமான செயற்பாடாகும். குழியவுரு ஆண் மலட்டுத்தன்மை, மீள் நிரப்பு வழி பேதங்களை விருத்தி செய்வதற்காக புதிய சோத னைக் கலப்புகள் (325) மேற்கொள்ளப்பட்டு ள்ளன. இவற்றுள் 150 பேதங்கள் குழியவுரு ஆண் மலட்டுத்தன்மையை மேலும் விருத்தி செய்வதற்காக பின்முகக் கலத்தலுக்காக தெரிவு செய்யப்பட்டுள்ளன. பேதங்கள் தூய்மைப்படுத்தப் பட்டு தேவையான அளவு விதைகள் 2011 இல் உற்பத்தியாக்கப்பட்டன.

Bg 407 H இன் விதை உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு 2011 இல் 90Kg முதலாம் சந்ததி (F_1) விதைகள் அறுவடை செய்யப்ப ட்டன. கலப்பின நெற்செய்கையை பிரபல்யப்படு

த்துவதற்காகவும் செய்கையாளர்களிடமிருந்து கருத்துக்களை அறிந்து கொள்வதற்காகவும் இந்த விதைகள் உலர் வலயத்திலுள்ள திருகோணமலை, பொலநறுவை, அநுராதபுரம் ஆகிய மூன்று மாவட்டங்களைத் தெரிவு செய்து ஒரு மாவட்டத்திற்கு மூன்று விவசாயிகள் என்ற வீதத்தில் அவர்களுக்கு விநியோகிக்கப்பட்டன.

2011 இல் நான்கு இந்திய கலப்பின பேதங்கள் (CRH 501, CRH 502, PAC 832, Swarna 02) உயர் விளைச்சலைத் தரும் உள்ளகக் கலப்பு கட்டுப்பாட்டு வர்க்கங்கள் (Bg 300, Bg 357) உள்ளடங்கலாக இலங்கைக்குரிய கலப்பினங்களுடன் பரிசோதிக்கப்பட்டன. இவற்றுள் Swarna 02 என்ற வர்க்கமும் PAC 832 என்ற வர்க்கமும் மற்றைய இரு இந்திய வர்க்கங்களை விடவும் உயர் விளைச்சலைக் கொடுத்தன.

சிறந்த கலப்பின பேதங்களின் கரு விதை உற்பத்தி 2011 இல் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது. இயற்கையான அயன் மகரந்தச் சேர்க்கை மூலம் 300 கலப்புகள் உருவாக்கப்பட்டு அவற்றிலிருந்து 26 கி.கி. குழியவுரு ஆண் மலட்டுத் தன்மை விதைகள் பெறப்பட்டன. இயற்கை அயன் மகரந்தச் சேர்க்கை மூலம் 4A / 4B யில் 300 கலப்புகள் உருவாக்கப்பட்டு 4 கி.கி. மேற்குறிப்பிட்ட குழியவுரு ஆண் மலட்டுத்தன்மை விதைகள் பெறப்பட்டன. அத்துடன் 4A / SN 50 இணைகளைப் பயன்படுத்தி 250 கலப்புகள் மேற்கொள்ளப்பட்டு அவை கரு விதை உற்பத்திக்குப் பயன்படுத்தப்பட்டன.

நோய் முகாமைத்துவம்

நெல்மணிகள் நிறம் மாறுதலில் வேறுபட்ட பசளைகளின் தாக்கங்கள்

அனேக பங்கசு இனங்களால் ஏற்படுத்தப்படும் நெல் மணிகள் நிறம் மாறல் ஓர் பாரிய அளவிலான பிரச்சினையாக 2011 இல் இலங்கையில் உருவாகிக் கொண்டு வந்தது.

எனவே வெவ்வேறு உரப்பாவனைகள் நெல் மணிகள் நிறம் மாறுவதில் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்துகின்றன எனக் கண்டுபிடிப்பதற்காக பசளை இடாமையைக் கட்டுப்பாடாகக் கொண்டு சேதன உரப்பாவனை, அசேதன உரப்பாவனை, அசேதன உரம் + 25% சேதன உரப் பாவனை, 75% அசேதன உரம் + 25% அசேதன உரப்பாவனை, என்பன பரிசோதிக்கப்பட்டன. சேதனப் பசளைப் பாவனையுடன் ஒப்பிடுகையில் சிபாரிசு செய்யப்பட்ட அசேதன உரத்தின் 75% உம் 25% சேதன உரமும் கலந்து இடும் போது மணிகள் நிறம் மாறும் வீதம் குறைவாகக் காணப்பட்டது.

நெல் மணிகள் நிறம் மாறுவதையும் நெல் எரிபந்தத்தையும் கட்டுப்படுத்துவதில் ஒலிகோசிற்றோசன் (Oligochitosan) இன் தாக்கம்

சிற்றோசன் (Chitosan solution) கரைசலைப் பயன்படுத்தி இறால் கோதிலிருந்து கதிர்வீச்சு மூலம் தயாரிக்கப்பட்ட குறைந்த மூலக்கூற்றுத் திணிவுடைய ஓர் சேர்வையே ஒலிகோசிற்றோசன் ஆகும். இவ்விளைபொருளானது பயிர் வளர்ச்சியை அதிகரிப்பதிலும் விளைச்சலை அதிகரிப்பதிலும் வினைத்திறனாகத் தொழிற்படுகிறதேயன்றி, மணிகள் நிறம் மாறுவதைக் கட்டுப்படுத்துவதில் குறிப்பிடத்தக்களவு தாக்கத்தை ஏற்படுத்துவதில்லை. நெல் இலை எரிபந்தத்தைக் கட்டுப்படுத்தவதற்காக ஒலிகோசிற்றோசன் விதைப் பரிகரணமாகப் பயன்படுத்தப்பட்டது. ஒலிகோசிற்றோசனை பயன்படுத்தி விதைப்பரிகரணம் மேற்கொண்ட போது, அது நெல் இலை எரிபந்தத்தைக் கட்டுப்படுத்துவதில் குறிப்பிடத்தக்களவில் தாக்கத்தை ஏற்படுத்தவில்லை.

நெல் எரிபந்த எதிர்ப்பிற்கான தேர்வு

நெல் எரிபந்தமானது நெற்பயிருக்கு பாரிய சேதத்தை ஏற்படுத்தும் ஓர் பங்கசு நோயாகும். எனவே முன்னேற்றமடைந்த எச்சங்கள், சகல விளைச்சல் சோதனைகள், ஒருங்கிணைப்பு வர்க்க சோதனை, வர்க்க இசைவாக்க சோதனை உட்பட பிரவேசிப்புகள் அனைத்திற்கும் நெல் எரிபந்த நோய்க்கு எதிரான மேற்கொள்ளப்பட்டன. பிரவேசிப்புகளின் எண்ணி

க்கை 2010/2011 பெரும்போக த்தில் 1624 ஆகவும் 2011 சிறுபோகத்தில் 1502 ஆகவும் இருந்தன. இவற்றுள் தேர்வு மேற்கொண்ட போது 2010/2011 பெரும்போகத்தில் 1269 பிரவேசிப்புக ளும் 2011 சிறுபோகத்தில் 1277 பிரித்தெடுப்பு களும் நெல் இலை எரிபந்தத்திற்கு எதிர்ப்பு அல்லது ஓரளவு எதிர்ப்புடையதாக இனங் காணப்பட்டன.

பற்றீரிய வெளிறல் எதிர்ப்புத் தன்மைக்கான தேர்வு

பற்றீரிய இலை வெளிறலானது நெற் செய்கையில் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த ஓர் நோயாகும். இரசாயன முறையில் பற்றீரிய இலை வெளிறலைக் கட்டுப்படுத்துதல் இன்றைவரைக்கும் சாத்தியமற்றதாகும். எனவே, பற்றீரிய இலை வெளிறல் எதிர்ப்பிற்காக முன்னேற்றப்பட்ட பேதங்களை இனவிருத்தி செய்யும் போது மிகவும் வினைத்திறனானதும் சூழலுக்கு நட்பானதுமான முறை பின்பற்றப்படு கிறது. எல்லா விளைச்சல் சோதனைகளிலும், ஒருங்கிணைப்பு நெல் வர்க்க சோதனைகளிலும் பேதங்கள் பற்றீரிய இலை வெளிறல் நோய் எதிர்ப்புக்காக தேர்ந்தெடுக்கப்பட்டன. பரிசோதி க்கப்பட்ட பேதங்களின் எண்ணிக்கை 2010/2011 பெரும் போகத்தில் 138 ஆகவும் 2011 சிறுபோக த்தில் 137 ஆகவும் இருந்தது. பிரித்தெடுக்க ப்பட்ட பேதங்களுள் 2010/2011 பெரும்போகத்தில் 52 பேதங்களும் 2011 சிறுபோகத்தில் 48 பேதங்களும் எதிர்ப்பு அல்லது ஓரளவு எதிர்ப்பு டையவையாக இனங் காணப்பட்டன.

பீடை முகாமைத்துவம்

பீடை எதிர்ப்புக்கான தேர்வு

கபில தாவரத்தத்தியும் நெல் கொப்புள ஈயும் நெற்செய்கையில் அதி முக்கியம் வாய்ந்த பீடைகளாக விளங்குகின்றன. 2010/2011 பெரும்போகத்தில் 1513 பிரவேசிப்புகள் நெல் கொப்புள ஈக்கும் கபில தாவரத் தத்திக்குமான எதிர்ப்புத் தன்மைக்காக சோதிக்கப்பட்டன. 1023 பிரவேசிப்புகளும் 940 பிரவேசிப்புகளும் முறையே நெல் கொப்புளஈக்கும் கபில தாவரத் தத்திக்கும் எதிர்ப்பு அல்லது ஓரளவு எதிர்ப்புத் தன்மையுடையதாக இனங் காணப்பட்டன. 1323 பிரவேசிப்புகளுள், 706 பிரவேசிப்புகள் நெல் கொப்புள ஈக்கும் 555 பிரவேசிப்புகள் கபில தாவரதத்திக்கும் எதிர்ப்புடைய வர்க்கங்களாக 2011 சிறுபோகத்தில் இனங்காணப்பட்டன.

நெற்பீடைகளைக் கட்டுப்படுத்துவதற்கான புதிய பூச்சிநாசினிகள்

கபில தாவர தத்தியும் நெல் இலை மடிச்சுக்கட்டியும் நெற்பயிருக்கு கணிசமான அளவு விளைச்சலில் இழப்பை ஏற்படுத்து கின்றன. முலையூட்டிகளுக்கு குறைவான நச்சுத்தன்மையுடைய வேறுபட்ட தொழிற்படும் தன்மையுடைய பூச்சிநாசினிகளை மேற்குறிப்பிட்ட இரு பீடைகளுக்காக இனங்காணும் தேவைப்பாடு ஏற்பட்டது. தயாமீதொக்சாம் உம் குளொர ன்ரன்னிபுரோல் உம் கபில தாவர தத்திக்கும் நெல் இலை மடிச்சுக்கட்டிக்கும் எதிராக கூடிய வினைத்திறனாகத் தொழிற்படும் பூச்சி நாசினிக ளாக 2011 இல் இனங்காணப்பட்டன.

நெற்பீடைகளுக்கெதிரான உயிரியல் விளை பொருள் தேர்வு – ஒலிகோசிற்ரோசன்

2011 இல் ஒலிகோசிற்ரோசன் பீடைகளுக்கெ திராக சோதிக்கப்பட்டது. கபில தாவரத்தத்தி யையும் பனிப்பூச்சியையும் ஒலிகோசிற்ரோசன் 50 ppm செறிவில் வினைத்திறனாகக் கட்டுப்படு த்தியதாக அறியப்பட்டது.

களை முகாமைத்துவம்

களைநாசினிப் பிரயோகத்திற்காக தெளிகருவிகளுக்கும் நியம பீச்சு முனைகளுக்குமான மதிப்பீடு

நெல் வயல்களில் களைகளைக் கட்டுப்படுத்தும் போது களைநாசினிகள் வினைத்திறனாகத் தொழிற்படுவதற்கு பொருத்தமான தெளிகரு வியையும் பீச்சு முனையையும் தெரிவு செய்தல் அவசியமாகும். மூன்று வகையான நப்சக் தெளிகருவிகளும் (ஒசாத்து தெளிகருவி, சுவான் தெளிகருவி, ஹே தெளிகருவி) ஒரு வலுத் தெளிகருவியும் மூன்று வகை பீச்சு முனைகளும்

மதிப்பீடு செய்யப்பட்டன. மூன்று வகை நப்சக் தெளிகருவிகளிலும் ஒரே அளவான களைக்கட்டு ப்பாடு பயன்பாடு (70% - 80%) அவதானிக்க ப்பட்டது. ஆனால் ஒசாத்து தெளிகருவியில் தேவைப்பட்ட களைநாசினியின் அளவு குறை வாக இருந்தது. முளைத்தலுக்கு முன்னான, பின்னான களைநாசினிகளின் பயன்பாடு வலுத் தெளிகருவியில் மிகவும் குறைவாகக் காணப்ப ட்டது. மேலும், கூடிய களைக்கட்டுப்பாட்டு பயன்பாடு தட்டை வகையிலும் கூம்பு வடிவ பீச்சு முனையிலும் பார்க்க திசை மாற்றும் பீச்சு முனையில் காணப்பட்டது.

களை நெல்லின் ஒரு கதிரிலிருந்து பெறப்பட்ட சந்ததிகளின் உருவவியல் மாறுபாடு

உருவவியல் ரீதியில் களைநெல் செய்கை பண்ணப்படும் நெல்லை ஒத்தது. மாத்தளை மாவட்டத்திலுள்ள "ஹதமுன யாயா" (Hatha muna yaya) விலிருந்து மாதிரியெடுக்கப்பட்டு உருவவியல் ரீதியாக வேறுபட்ட ஏழு களை நெல்லின் கதிர்கள் RRDI இனால் உருவாக்க ப்பட்ட குணாதிசயங்களின் பட்டியலைப் (Characterization Catalogue) பயன்படுத்தி 2011 இல் இனங்காணப்பட்டன. தாவர இயல்புகளுடன் ஒப்பிடும் போது ஒரே கதிரிலிருந்து பெறப்பட்ட விதைகளிலிருந்து உருவான சந்ததிகள் மாறுபட்ட இயல்புகளைக் காட்டின. முடிவுகளை மேலும் விபரித்த போது கதிர்களினதும் தானிய ங்களினதும் இயல்புகளை அடிப்படை யாகக் கொண்டு களைநெல் 112 குழுக்களாகப் பிரிந்தன. களை நெல்லில் சிறுபூக்கள் விரிந்திரு க்கும் கால அளவு பயிர்ச்செய்கை நெல்லை விடவும் நீண்டதாகும். எனவே, அயன் மகரந்தச் சேர்க்கைக்கு இது அதிக சாத்திய த்தை ஏற்படுத்துகிறது. களைநெல்லில் அயன் மகரந்தச் சேர்க்கைக்கான சாத்தியக் கூறு அதிகமாகக் காணப்படுவதனால் களைநெல் அதிகமாகக் காணப்படும் நெல் வயல்களில் வேறு வர்க்க ங்களின் கலப்பு நெல் அதிகமாகக் காணப்படும்.

வேறுபட்ட ஈரப்பதன்களின் கீழ் களைகளும் போசணை அகத்துறிஞ்சலும்

நீரும் களைகளும் நெருங்கிய தொடர்புடை யவை. வேறுபட்ட ஈர நிலைமைகளின் கீழ் (மூழ்கடிக்கப்பட்ட, நிரம்பிய, மாறி மாறி ஈரப்படுத்தலும் உலர விடுதலும், 50% நிரம்பிய நிலை) களைவகைகளின் மாறுபாடுகளையும் நெற் பயிரின் வளர்ச்சியிலும் விருத்தியிலும் அவற்றின் தாக்கங்கள் பற்றியும் மதிப்பீடு செய்வதற்காக ஆய்வொன்று மேற்கொள்ளப் பட்டது. முடிவுகளைப் பார்க்கும் போது களைகளற்ற நிலைமையில் மாறி மாறி ஈரப்படு த்தலையும் உலர விடுதலையும் மேற்கொள்ளும் போது அதிக அளவில் N,P,K நெற் பயிரினால் அகத்துறிஞ்சப்பட்டு விளைச்சல் அதி உயர் வாகக் காணப்பட்டது. மாறி மாறி ஈரப்படுத்தி உலர விடும் போதும் 50% நிரம்பல் நிலை யிலும் புல் வகைக் களைகள் அதிகமாகக் காணப்பட்டது. அதே வேளையில் வெள்ளப்படு த்திய நிலையில் அகன்ற இலைக் களைகளும் கோரைகளும் அதிகமாகக் காணப்பட்டன. *Leptochloa chinersis, Ludwizia octovalvis, Monochoria vaginalis* ஆகியன வெள்ளப்படு த்திய நிலையிலும் நிரம்பிய நிலையிலும் பிர தான களைகளாகக் காணப்பட்ட அதே வேளை யில் பல்லாண்டுக்குரிய புல்வகைக் களைக ளான *Paspalum Spp, Chanadon dactylon, Isachne globosa* ஆகியன மாறி ஈரப்படுத்தி உலர விடும் நிலைமையில் பிரதான களை களாகக் காணப்பட்டன.

களைநெல்லுக்கும் பயிர்ச்செய்கை நெல்லுக்கும் இடையிலான போட்டித் தன்மை

களைநெல்லுக்கும் பயிர்ச்செய்கை நெல்லுக்கும் இடையேயான போட்டித் தன்மையை மதிப்பீடு செய்வதற்காக மாத்தறை மாவட்டத்திலிருந்து சேகரிக்கப்பட்ட கரிய நிற உமியைக் கொண்ட களை நெல்லுக்கும் பயிர்ச் செய்கை நெல் (Oryza sativa L.) வர்க்கமான Bg 379-2 க்கும் இடையேயான போட்டித் தன்மை பரிசோதிக்கப்பட்டது. சாடிப் பரிசோதனை

மேற்கொள்ளப்பட்டது. Bg 379-2 விதைகள் 15 சமீ இடைவெளியில் ஸ்தாபிக்கப்பட்டன. இவை பரிசோதனைக்கேற்ப ஒரு சாடிக்குள் 0, 1, 2, 3, 4, 5 என்ற எண்ணிக்கையில் களை நெல்லுடன் சேர்த்து வளர்க்கப்பட்டன.

களைநெல் அடர்த்தியானது Bg 379-2 இன் தாவர உயரம், இலை எண்ணிக்கை, மட்டங்களின் எண்ணிக்கை உலர் நிறை உற்பத்தி, விளைச்சல், விளைச்சல் கூறுகள் என்பவற்றில் குறிப்பிடத்தக்களவு தாக்கத்தை ஏற்படுத்தியது. களைநெல்லின் அடர்த்தி கூடியதாக (55 தாவரங்கள் / மீ^{2}) இருந்த போது Bg 379-2 இல் கட்டுப்பாடுடன் ஒப்பிடுகையில் தானிய விளைச்சலில் 78% குறைவாக இருந்தது. களைநெல்லின் அடர்த்தி 44, 33, 22, 11 தாவரங்கள் / மீ^{2} என்று காணப்பட்ட போது விளைச்சல் குறைவு முறையே 71%, 66%, 53%, 42% ஆக இருந்தது. Bg 379-2 என்ற பயிர்ச்செய்கை வர்க்கத்தின் வளர்ச்சியிலும் தானிய விளைச்சலிலும் கரிய நிற உமியை உடைய களைநெல் கடுமையான பாதிப்பை ஏற்படுத்தியதை இந்த முடிவுகளிலிருந்து தெளிவாக அறியப்படுகிறது. விவசாயிகளுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி நெல் வயல்களில் களை முகாமைத்துவத்தில் விவசாயிகளின் திறமையை மேம்படுத்துவதற்கு இந்த முடிவுகள் ஓர் அடித்தளமான தகவலை வழங்க முடியும். குறிப்பாகளை நெல்லை தடுப்பதற்கும் கட்டுப்ப டுத்தலுக்குமான செலவினங்களை நியாயப்படு த்தி வழிகாட்டுவதற்கு இந்த முடிவுகள் உதவு கின்றன.

இலங்கையில் ஈர விதைப்பு நெல் வயல்களில் களைநெல் முகாமைத்துவம் (NARP திட்டம்)

நெற் செய்கையில் நிலைபேறானதும் இலாபகர மானதுமான ஒருங்கிணைந்த களை நெல் முகா மைத்துவ அணுகுமுறையை விருத்தி செய்வதை இந்த ஆய்வு நோக்கமாகக் கொண்டிருந்தது. விவசாயிகளுக்கு களைநெல் முகாமைத்துவம் பற்றிய அறிவை வழங்குவதற்காக 25 விழிப்பு ணர்வு நிகழ்ச்சிகள் பத்து இடங்களில் நிகழ்த்தப் பட்டன: குருநாகல், புத்தளம், பொலன்னறுவை, அம்பாறை, இரத்தினபுரி, களுத்துறை, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, அநுராதபுரம் மாவட்டங்கள். குருநாகல், பொலன்னறுவை, அம்பாறை, இரத்தினபுரி, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை ஆகிய பிரதேசங்களில் களை நெல் செறிந்த நெல் வயல்களில் மொத்தம் 13 செய்துகாட்டல் சோதனைகள் நடாத்தப்பட்டன. குருநாகல், பொலன்னறுவை, அம்பாறை, இரத்தினபுரி, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை ஆகிய இடங்களிலுள்ள 13 செய்துகாட்டல் நெல் வயல்களில் இனங்காணப்பட்ட ஒருங்கிணைந்த கட்டுப்பாட்டு முறைகள் கடைபிடிக்கப்பட்டது. அவையாவன தரமான நிலப்பண்படுத்தல், களை விதைகளற்ற விதை நெல் பாவனை, முளைத்த லுக்கு முன்னான களைநாசினிப் (pretilachlor) (1.6 லீ/ஹெ) பிரயோகம், வெவ்வேறு பயிர் ஸ்தாபித்தல் முறைகள் (நாற்று நடுதல், நாற்று எறிதல், உருளை விதையிடு கருவியைப் பயன்படுத்தி வரிசை விதைப்பு, வீசி விதைத்தல்) அனைத்தும் செய்து காண்பிக்கப் பட்டன. ஒவ்வொரு சோதனை பிரதேசங்களிலும் இந்த வினைத்திறனான முகாமைத்துவ முறைகள் விவசாயிகளின் முறையுடன் ஒப்பிடப்பட்டன. மேற்குறிப்பிட்ட முகாமைத்துவ நடவடிக்கை களுடன் நாற்று நடுகை, நாற்று எறிதல், வரிசை விதைப்பு மேற்கொண்ட போது களைநெல்லின் முளைத்தலும் வளர்ச்சியும் வெகுவாகக் குறை ந்திருந்ததை இப்பரிசோதனை முடிவுகள் காட்டின. இதனால் களைநெல்லினால் ஏற்பட்ட விளைச்சல் இழப்பு விவசாயிகளின் வயலுடன் ஒப்பிடுகையில் குறைவாகவே காணப்பட்டது.

ஈர விதைப்பு சோதனையில் தேசிய ஒருங்கிணைப்பு களைநாசினி தேர்வுச் சோதனை (NCHST)

தொடர்ச்சியாக களைநாசினிகளை தீவிரமாக பயன்படுத்தும் போது களைகள் மீண்டெழும்பி கட்டுப்பாட்டு முறைகளைச் சகித்து வளர்கின்றன. எனவே பதிதாக அறிமுகப்படுத்தப்படும் களை நாசினிகள் அவற்றின் சிறந்த இயல்புகளுக்காக முன்கூட்டியே மதிப்பீடு செய்யப்படுதல் வேண்டும். 2011 இல் தேர்வுக்கு வரும் ஏழு களைநாசினி

கள் தாழ்நில நிலைமைகளின் கீழ் பரிசோதிக்கப் பட்டு (Butachlor, Propyrisulfuron, Bispyribac Sodium & Metamifop, Bensulturon Methyl + Bispyribac Sodium) அவற்றுள் நான்கு களை நாசினிகள் விவசாயியின் வயல்களில் பரீட்சார்த்த சோதனைக்காகத் தெரிவு செய்யப்பட்டன.

உலர் விதைப்புக்கான களைநாசினித் தேர்வு

ஏற்கனவே சிபார்சு செய்யப்பட்ட எட்டு களை நாசினிகள் உலர் விதைப்பில் சோதிக்கப்பட்டன. அவற்றுள் பின்வருவன உலர் விதைப்புக்காகத் தெரிவு செய்யப்பட்டன. 3,4-DAP ஐத் தொடர்ந்து MCPA, Clincher ஐத் தொடர்ந்து MCPA, Solito.

மண் விஞ்ஞானம்

உவர் சகிப்பு நெல்

உவர் சகிப்பு நெல் வர்க்கங்களை விருத்தி செய்தல் 2003 இல் ஆரம்பிக்கப்பட்டு, தற்போது 17 பேதங்கள் இனங்காணப்பட்டுள்ளன. புத்தளம், பொலனறுவை மாவட்டங்களில் விவசாயிகளின் வயல்களில் உவர் நிலைமையின் கீழ் உயர் விளைச்சலைக் (7 தொ/ஹெ) கொடுத்த Bg 11-139, Bg 5-110 ஆகிய உவர் சகிப்பு பேதங்கள் 2011 இல் நாடளாவிய ரீதியில் வேறுபட்ட சூழல் நிலைமைகளின் கீழ் மேற்கொள்ளப்பட்ட தேசிய ஒருங்கிணைப்பு நெல் வர்க்க சோதனை (NCRVT) திட்டத்திற்கு அறிமுகப்படுத்தப்பட்டன.

இரசாயன பசளைக்கு தாண்டற்பேறு

வளம் குறைந்த நிலைமைகளின் கீழ் வெற்றிகர மாக வளரும் பயிர்களிலிருந்து விருத்தி செய்யப் பட்ட நெல் வர்க்கங்கள் குறைந்த ளவிலான இரசாயனப் பசளை பிரயோகத்துடன் செய்கை பண்ணப்படலாம். முன்னர் மேற்கொள்ள ப்பட்ட ஆய்வுகளின் படி Bg 352, Bg 358, Bg 305, At 353, At 362, Bg 379-2, முருங்கைக்காயன், சுதுஹீனட்டி, H_4, H_7, H_{10} ஆகிய நெல் வர்க்கங்கள் வளம் குறைந்த நிலைமைகளின் கீழ் செய்கைபண்ணப்படுவதற்கு பொருத்தமான வையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டன. 2011 இல் குறைவான பொசுபரஸ் நிலைமைகளின் கீழ் மேற்குறிப்பிட்ட வர்க்கங்கள் எவ்வாறு செயற்படு கிறது என்பதை பிரித்தறிவதற்காக சோதனைகள் ஆரம்பிக்கப்பட்டு, தற்போது அவை தொடரப்படு கின்றன.

உள்ளூர் நிலைமைகளின் கீழ் பொட்டாசியம் பசளைப் பிரயோகத்திற்கு நெற்பயிர் குறைவான தூண்டற்பேறுடையதாகக் காணப்படுகின்றது. முந்திய போக வைக்கோலை மீண்டும் வயலு க்கு வழங்கி அத்துடன் விவசாய திணைக்கள த்தின் சிபார்சின் அரைப்பங்கு பொட்டாசியத்தை மாத்திரம் கதிர் அரும்பும் நிலையில் இடும் போது விவசாயத் திணைக்களத்தின் சிபார்சுக்க மைய பொட்டாசியத்தை அடியுரத்திலும் கதிர் அரும்பும் நிலையிலும் இடப்பட்ட வயலின் தானிய விளைச்சலுக்கு சமனான அளவு விளைச்சலைக் கொடுத்ததாக 2011 இல் RRDI இல் மேற்கொள்ளப்பட்ட நீண்டகால சோதனைக ளிலிருந்து பெறப்பட்ட இரண்டாம், மூன்றாம் போக முடிவுகள் வெளிப்படுத்தியுள்ளன. 2011 இல் NARP திட்டத்தின்கீழ் களுத்துறை, பொலநறுவை, குருநாகல், அம்பாந்தோட்டை ஆகிய நான்கு மாவட்டங்களில் 37 இடங்களில் மேற்கொள்ளப்பட்ட சோதனைகளில் முதலாம் போக முடிவுகள் மேற்குறிப்பிடப்பட்ட கண்டுபிடிப்பு க்களை உறுதிப்படுத்தியுள்ளன. நீண்டகால தாக்கங்களை உறுதிப்படுத்துவதற்காக எல்லா இடங்களிலும் ஆய்வுகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. 2011 இல் NARP திட்டத்தின் கீழ் களுத்துறை, பொலனறுவை, குருநாகல், அம்பாந்தோட்டை மாவட்டங்களில் 37 இடங்க ளில் மேற்கொள்ளப்பட்ட சோதனைகள் எல்லா இடங்களிலும் இலை நிற அட்டையைப் பயன்படு த்தி நைதரசன் பசளை இடும் போது விளைச்ச லில் குறைவு ஏற்படாது 25-33% நைதரசன் பசளையைக் குறைத்து இடுவதற்கு உதவுகிற தென்பதை வெளிப்படுத்தியுள்ளன. மேலும், விவசாயத் திணைக்களத்தின் தற்போதைய சிபாரிசிற்கமைய பசளை இடப்பட்ட வயலுடன் ஒப்பிடும் போது இலை நிற அட்டையை அடிப்படையாகக் கொண்டு பசளை இடும் போது

5% விளைச்சல் அதிகரித்ததாக பொலனறுவை மாவட்டத்தில் அவதானிக்கப்பட்டுள்ளது. RRDI இல் நீண்டகால பசளைப் பிரயோக சோதனைகள் மண் வளப் பரிசோதனைக்காக 2011 இல் மேற்கொள்ளப்பட்டன. மண்வள மேம்பாட்டை நெல் விளைச்சலுடன் பார்க்கும் போது இரசாயனப் பசளையையும் சேதன உரத்தையும் பிரித்துப் பயன்படுத்துவதை விட இரண்டையும் சேர்த்து இடுவது சிறந்ததென இந்த ஆய்வு வெளிப்படுத்துகிறது. இரசாயனப் பசளையை அல்லது சேதன உரத்தை ஒவ்வொரு போகத்திற்கும் மீண்டும் மீண்டும் இட்டு வந்தாலும் மண் வளம் நீண்ட காலத்திற்கு ஒரு குறித்த மட்டத்திற்கு மேல் கட்டியெழுப்பப் படுவதில்லை. எப்படியிருப்பினும் ஒவ்வொரு போகத்திலும் சேதன உரத்தையும் இரசாயன உரத்தையும் சேர்த்து இடுவதன் மூலம் மண் வளத்தை சிறந்த மட்டத்தில் வைத்திருக்கலாம் என நிரூபிக்கப்பட்டுள்ளது.

வெவ்வேறு முறைகளில் பொசுபரசு பசளையை இடும்போது அதன் நீண்டகால தாக்கத்தை அவதானிப்பதற்காக RRDI யில் ஓர் நீண்டகால பரிசோதனை அமைக்கப்பட்டுள்ளது. 2011 இல் சேகரிக்கப்பட்ட 4ம் போகத்துக்குரிய மாதிரிகள் பொசுபரசு பரிகரிக்கப்படாத துண்டங்களுக்கும் பொசுபரசு பரிகரிக்கப்பட்ட துண்டங்களுக்கும் இடையே குறிப்பிடத்தக்க அளவு விளைச்சலில் வேறுபாடு இருந்ததை வெளிப்படுத்தின. 4ம் போகத்திற்குப் பின்னர், ஒன்றுவிட்ட ஒரு போகம் பொசுபரசு பரிகரிக்கப்பட்ட துண்டங்களுக்கும், ஒவ்வொரு போகமும் பொசுபரசு பரிகரிக்கப்பட்ட துண்டங்களுக்கும் இடையே குறிப்பிடத்தக்களவு விளைச்சலில் வேறுபாடு அவதானிக்கப்பட வில்லை. இதே போன்ற பரிசோதனைகள் ஒன்றுவிட்ட ஒரு போகத்தில் மேற்கொள்ளப்படும் பொசுபரசு பசளைப் பிரயோகம் தானிய விளைச்சலில் ஏற்படுத்தும் பாதிப்பை அறிவத ற்காக 2011 இல் NARP திட்டத்தின் கீழ் பொலநறுவை, குருநாகல், களுத்துறை, அம்பாந்தோட்டை ஆகிய நான்கு மாவட்டங்க ளில் 37 இடங்களில் அமைக்கப்பட்டன. முதலாவது போக முடிவுகள் பொசுபரசு பசளை இன்மையின் காரணமாக விளைச்சலில் கணிசமான அளவு குறைவு ஏற்பட்டதை வெளிப்படுத்தியது. ஒன்றுவிட்ட ஒரு போகம் பொசுபரசு பசளைப் பிரயோகம் விளைச்சலில் குறைவை ஏற்படுத்தாது ஆனால் பொசுபரசு பசளையை மீதப்படுத்துகிறது என முடிவுகள் சுட்டிக்காட்டின. மேலதிக விபரங்களை உறுதி ப்படுத்துவதற்காக பரிசோதனைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றன.

மந்தமாக அல்லது மெதுவாக விடுவிக்கப்படும் பசளைகளின் அறிமுகம், நெல் வயல்களில் பசளை வீண் விரயமாவதைக் குறைப்பதற்கான மாற்றுவழிகளுள் ஒன்றாகத் திகழ்கின்றது. 2011 இல் வெவ்வேறு சிறிய சேர்க்கைகளாக N, P, K பசளைகள் பச்சை வீட்டு நிலைமைகளின் கீழ் RRDI யில் பரிசோதிக்கப்பட்டன. இப்படியான வெவ்வேறு சேர்க்கைகளுள் நைதரசனையும் ஐயும் பொட்டாசியத்தையும் கொண்ட ஒரு சேர்க்கை சிறந்ததாகக் காணப்பட்டது. சிறப்பாகக் காணப்பட்ட சேர்க்கைகள் 2011/12 பெரும்போக த்தில் வயல் நிலைமைகளின் கீழ் பரிசோதி க்கப்பட்ட போது குறைந்த பசளைப் பிரயோக த்தில் அதிகரித்த தானிய விளைச்சலைக் கொடுப்பதில் நைதரசன் சேர்க்கைகளை விடவும் பொட்டாசியம் சேர்க்கைகள் சிறந்ததாகக் காணப்படுவதாக முடிவுகள் வெளிப்படுத்தின.

நீர் முகாமைத்துவமும் புவியியல் தகவல் தொகுதியும்

நீர் பற்றாக்குறைவான நிபந்தனையின் கீழ் நெற் பயிரின் அவதி அவத்தையின் போது பொட்டாசியம் கிடைக்கும் தன்மையில் வைக்கோலின் தாக்கம்

பெரும்பான்மையான நெற்செய்கை சூழல்களில் பயிரின் அவதி அவத்தைகளின் போது நிலவும் நீர்ப்பற்றாக்குறையே குறைந்த உற்பத்திக்கான பிரதான காரணங்களுள் ஒன்றாகும். பூக்கும் காலத்திலும், பூத்தலுக்கு ஒரு வாரம் முன்னரும் பின்னருமான காலத்திலும் நிலவும் நீர்ப் பற்றாக்குறை விளைச்சலை அதிகம் பாதிப்பதாக 2011 இல் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள்

வெளிப்படுத்தின. மேலும், நீர்ப்பற்றாக்குறை நிலவும் போது பயிரால் பொட்டாசியம் அகத்து றிஞ்சப்படும் அளவும் மட்டுப்படுத்தப்படுவதாக அவதானிக்கப்பட்டது. உற்பத்தியின் தரத்தையும் அளவையும் தீர்மானிக்கும் பல முக்கியமான உடற்றொழிலியல், உயிர் இரசாயனவியல் தொழிற்பாடுகளைத் தீர்மானிக்கும் பிரதான மூலகமாக பொட்டாசியம் தொழிற்படுகிறது. எனவேதான் குறைந்த அளவிலான பொட்டாசியம் ஒரு கதிரிலுள்ள சிறு பூக்களின் எண்ணிக்கை, ஒரு தாவரத்திலுள்ள கதிர்களின் எண்ணிக்கை, நிரம்பிய மணிகளின் நூற்றுவீதம், 1000 மணிகளின் நிறை என்பவற்றைக் குறைவடையச் செய்கிறது. எனவே, நெற் பயிரின் வளர்ச்சிப் பருவத்தின் அவதி நிலைகளில் சரியான நீர் மட்டத்தைப் பேணுதல் முக்கியமானதென்று முடிவுகள் பரிந்துரைக்கின்றன. மண்ணில் நீர் கிடைக்கும் தன்மையைப் பாதுகாப்பதற்கு இலகுவில் கிடைக்கக் கூடிய பொருளான வைக்கோலைப் பயன்படுத்தலாம். எனவே நெற் பயிரின் அவதி அவத்தைகளின் போது நீர்ப்பற்றாக்குறைவான நிபந்தனைகளின் கீழ் பொட்டாசியம் கிடைக்கும் தன்மையில் வைக்கோலின் தாக்கத்தைத் தீர்மானிப்பதற்காக இவ்ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இரண்டு பிரதான பரிகரணங்களையும் இரண்டு உப பரிகரணங்களையும் உள்ளடக்கி ஓர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. வளர்ச்சிப் பருவம் முழுவதும் நீர்ப்பற்றாக்குறை இன்மையும், பிரதான அவதி அவத்தையில் நீர்ப்பற்றாக்குறையும் பிரதான பரிகரணங்களாகக் கொள்ளப்பட்டன. NP மாத்திரம், NPK, வைக்கோலுடன் NPK, வைக்கோலுடன் NP ஆகியன நான்கு உப பரிகரணங்களாக எடுக்கப்பட்டன.

முடிவுகளின்படி, நீர்ப்பற்றாக்குறை நிலவாத போது நான்கு பசளைப் பரிகரணங்களிலும் விளைச்சலில் குறிப்பிடத்தக்களவு வேறுபாடு காணப்படவில்லை. நீர்ப்பற்றாக்குறை நிலவிய போது நான்கு பசளை மட்டங்களிலும் குறிப்பிடத்தக்க அளவு விளைச்சல் வேறுபாடு அவதானிக்கப்பட்டது. உச்ச விளைச்சலாக வைக்கோலுடன் NPK பயன்படுத்திய போது 5.1 தொ/ஹெ பதிவு செய்யப்பட்டதுடன், குறைந்த விளைச்சலாக NP பயன்படுத்திய போது 3.4 தொ/ஹெ ஆகப் பெறப்பட்டது. எனவே, அவதி அவத்தைகளில் நீர்ப்பற்றாக்குறை நிலவும் போது பொட்டாசியத்துக்கும் வைக்கோலுக்கும் விளைச்சல் தூண்டற்பேறு குறிப்பிடத்தக்க அளவு இருந்தது அவதானிக்கப்பட்டது.

குருநாகல் மாவட்டத்தில் நீர்ப்பாசன, மானாவாரி நெல் வயல்களை அடையாளப்படுத்தல்

பொருத்தமான நெல் வர்க்கங்களை அறிமுகப்படுத்தி சிறந்த முகாமைத்துவ நடவடிக்கைகளை மேற்கொண்டு அம்மாவட்டத்தில் நிலவும் விளைச்சல் வேறுபாட்டைக் குறைப்பதை நோக்காகக் கொண்டு NARP திட்டத்தின் கீழ் நீர்ப்பாசன, மானாவாரி நெல் வயல்களை அடையாளப்படுத்தும் ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டது. 55 கமநல சேவை நிலையங்களுள் 12 கமநல சேவை நிலையங்களில் உள்ள நீர்ப்பாசன, மானாவாரி நெல் வயல்களின் எல்லைகள் மிகத் திருத்தமான வரைபடங்களில் 2011 இல் அடையாளப்படுத்தப்பட்டன. அதன் பின்னர் மகனேரிய, இப்பாகமுவ, அளவ்வை ஆகிய கமநல சேவை நிலையங்களிலுள்ள நெல் வயல்கள் மானாவாரி நெல்வயல், சிறு நீர்ப்பாசன நெல்வயல், பாரிய நீர்ப்பாசன நெல் வயல் என இவ் வரைபடங்களில் அடையாளப்படுத்தப்பட்டன. இத்திட்டத்தின் அடுத்த கட்டமாக, தெரிவு செய்யப்பட்ட மூன்று கமநல சேவை நிலையங்களில் மானாவாரி நெல் வயல்களுக்கு நீர் கிடைக்கும் தன்மையைத் தீர்மானிப்பதற்காக மழைவீழ்ச்சி தரவுகளும் மண்ணின் பௌதீக இயல்புகளும் பகுப்பாய்வு செய்யப்படும்.

பயிராக்கவியல்

ஈரப்பதன் எல்லைப்படுத்தும் சூழலுக்கான வர்க்க மதிப்பீடு

ஈரப்பதன் எல்லைப்படுத்தும் நிபந்தனைகளுக்குப் பொருத்தமான வர்க்கங்களை தெரிவு செய்வது முக்கியத்துவம் வாய்ந்ததாகும். 2011 இல் சர்வதேச நெல் ஆராய்ச்சி நிலையமும் விவ

சாயத் திணைக்களமும் இணைந்து மேற்கொண்ட ஆராய்ச்சித் திட்டத்தின் கீழ் முன்னைய வருட த்தில் உலர் நிபந்தனைகளுக்காக தெரிவுக்கு உட்படுத்தப்பட்ட பின்னர், தெரிவு செய்யப்பட்ட பதினேழு நெல் வர்க்கங்கள் காற்றுள்ள உலர் நிபந்தனைகளின் கீழ் மதிப்பீடு செய்யப்பட்டன. DSN 11, DSN 22, DSN 37, DSN 56 ஆகியன ஈரப்பதன் மட்டுப்படுத்தப்பட்ட நிபந்தனைகளில் நன்றாக வளர்ந்தன.

முன்னர் வரட்சியைத் தாங்கும் தன்மைக்காக இனங்காணப்பட்ட இரு வர்க்கங்களான CNI 9024 உம் CNI 9028 உம் 2011ம் ஆண்டில் இடை வலயத்திலுள்ள விவசாயிகளின் வயல்க ளில் அவற்றின் ஒத்திசையும் தன்மையையும் விவசாயிகளால் ஏற்றுக்கொள்ளப்படும் தன்மை யையும் அறிவதற்காக பரிசோதிக்கப்பட்டன. அவை ஒத்திசைவாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்ட தாகவும் காணப்பட்டன.

தேசிய ஒருங்கிணைப்பு நெல் வர்க்க சோதனை திட்டம் (NCVRT)

2011ம் ஆண்டில் தேசிய ஒருங்கிணைப்பு நெல் வர்க்க சோதனை திட்டம் 3, 3½ மாத வகுப்பு வர்க்கங்களுடன் தொடரப்பட்டது. ஒன்பது புதிய 3 மாத பேதங்களும் எட்டு புதிய 3½ மாத பேதங்களும் எட்டு அமைவிடங்களில் நியம ஒப்பீட்டு வர்க்கங்களுடன் இனவிருத்தியாளரின் முழுமையான முகாமைத்துவ நிபந்தனைகளின் கீழ் பரிசோதிக்கப்பட்டன.

கீழ் வரும் பேதங்கள் வர்க்க ஒத்திசைவு சோதனை (VAT) திட்டத்தின் கீழ் விவசாயிகளின் வயல்களின் பரிசோதிப்பதற்காக தெரிவு செய்யப்பட்டன.

Bg 5-110 - உவர்த்தன்மையைத் தாங்கும் 3½ மாத பேதம்

Bg 11-139 - உவர்த்தன்மையைத் தாங்கும் 3½ மாத பேதம்

Bg 8-2398 - ஓரளவு பெரிய தானியத்தைக் கொண்ட 3½ மாத பேதம்

வர்க்க ஒத்திசைவு சோதனை (VAT) திட்டம்

At 7-800, At 6-631, BW 5-1621, Bg 7-997, Bg 6-1350 ஆகிய ஐந்து முன்னணிப் பேதங்களின் ஒத்திசையும் தன்மையை அறிவதற்காக 2011 ஆம் ஆண்டில் உலர், இடை, ஈர வலயங்களிலுள்ள 75 க்கும் மேற்பட்ட இடங்க ளில் அவை பரிசோதிக்கப்பட்டன. பரிசோதி க்கப்பட்ட பேதங்களுள் At 7-800 (வெள்ளை, 3 மாதம்) நியம கட்டுப்பாட்டு வர்க்கங்களை விட சிறந்ததாகக் காணப்பட்டது.

பெரிய அளவிலான வர்க்க ஒத்திசைவு சோதனைத் திட்டம் (LSVAT)

2011ம் ஆண்டில் At 4-486 (3 மாத, வெள்ளை நிற, ஓரளவு பெரிய தானியம்), At 6-650 (3½ மாத சிவப்பு சம்பா), Ld 3-6-12 (3½ மாத வெள்ளை சம்பா) ஆகிய மூன்று புதிய முன்ன ணிப் பேதங்கள் விவசாயிகளால் ஏற்றுக்கொள்ள ப்படும் தன்மையை அறிவதற்காக விவசாயிகளின் வயல்களில் பெரிய துண்டங்களில் பரிசோதிக்க ப்பட்டன. மூன்று பேதங்களும் சிறப்பாகக் காணப்பட்டன. சிறிய அளவு விதைப் பொதிகள் விவசாயிகள் மத்தியில் விநியோகிக்கப்பட்டு அவற்றை பிரபல்யப்படுத்தி விவசாயிகளிடமிருந்து கருத்துக்கள் பெறப்பட்ட பின்னரே தேசிய மட்டத்தில் வெளியிடப்படும்.

ஒருங்கிணைந்த தாவர போசணைத் தொகுதியும் சேதன உர உற்பத்தியும் ஊக்குவிப்பு திட்டமும்

சேதன உரங்களைப் பயன்படுத்தும் போது அவை அசேதனப் பசளைகளின் பயன்பாட்டு வினைத்திறனை அதிகரிப்பதுடன் மேலதிக அளவிலான பிரதான போசணை மூலகங்க ளையும் மண்ணுக்கு வழங்குகின்றன. இச்செயற் பாட்டின் காரணமாக நெல் விளைச்சலில் பாதிப் பேற்படாதவாறு அசேதனப் பசளைகளின் அள வைக் குறைக்க முடிகிறது. 2011ம் ஆண்டில் இரு போகங்களுக்கு அசேதன, சேதன பசளை களின் வெவ்வேறு சேர்க்கைகளைப் பயன்படுத்தி ஆய்வு மேற்கொள்ளப்பட்ட போது 4 தொ/ஹெ

வைக்கோலும் 2 தொ/ஹெ கூட்டெருவும் இரசாயனப் பசளையுடன் சேர்த்து பயன்படுத்த ப்பட்டபோது பசளைப் பயன்பாட்டு வினைத்திறன் அதிகரித்ததுடன் தாழ்நாட்டு இடை வலய நெற்செய்கையில் விளைச்சலைப் பாதிக்காது 25% ஆன இரசாயன பசளைகளைக் குறைத்து இட முடியும் என முடிவுகள் சுட்டிக்காட்டின.

மேலும் இப்பரிசோதனை பெரிய அளவிலான துண்டங்களில் மேற்கொள்ளப்பட்ட போது 85% ஆன இரசாயன பசளையைக் குறைவாக இட்ட போதும் விளைச்சல் பாதிக்கப்படவில்லை என அறியப்பட்டது.

நெற்தானிய விளைச்சலில் வெவ்வேறு அளவிலான கூட்டெருவின் தாக்கம்

கூட்டெருவின் அளவும் அது இடப்படும் நேரமும் விவசாயிகள் பயிரின் விளைச்சலை அதிகரிப்ப தற்கு உதவுகிறது. சேதன உரங்களின் போசணை விடுவிக்கும் ஆற்றலும் கூட்டெருப் பாவனைக்கான உணர்திறனும் நெற் பயிரில் குறிப்பாக சேதன விவசாயத்தின் கீழ் அறியப்படவில்லை. எனவே, தாழ்நாட்டு ஈரவலய நெற்செய்கையிலிருந்து உயர் விளைச்சலைப் பெறுவதற்காக தேவையான கூட்டெருவின் அளவையும் பொருத்தமான கால அட்டவ ணையைத் தீர்மானிப்பதற்காகவும் 2011 இல் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. சேதன முறையில் செய்கைபண்ணப்படும் பயிருக்கு ஒரு ஹெக்டய ருக்கு 2, 4, 6, 8, 10 தொன்கள் என்ற வீதத்தில் கூட்டெரு இடப்பட்டு பரிசோதிக்க ப்பட்டது. (முழுவதும் இடப்பட்டது, அடியுரமாக மாத்திரம் இடப்பட்டது, அடியுரமாகவும் மட்டம் உருவாகும் நிலையிலும் சமபகுதிகளைப் பிரித்து இடப்பட்டது). முடிவுகளின்படி, தானிய விளை ச்சல் கூட்டெருப் பாவனையுடன் அதிகரித்ததுடன் ஒரே தரத்தில் முழு அளவு இடப்பட்டதைப் பார்க்க பிரித்து இடப்பட்டது சிறந்ததாகக் காணப்பட்டது.

கூட்டெரு உற்பத்தியும் ஊக்குவிப்பும்

2011 இல் வைக்கோல், புற்கள், மரக்கறிக் கழிவுகள், கிளிசிறிடியா, செஸ்பானியா, வாழை, பாறை பொசுபேற்று மற்றும் பண்ணையில் கிடைக்கப்பெறும் பிற தாவர மீதிகள் என்பவ ற்றைப் பயன்படுத்தி 191 தொன் கூட்டெரு உற்ப த்திக்காக தரமான உட்புகுத்திகள் உற்பத்தி செய்யப்பட்டு கூட்டெரு தயாரிப்பில் பயன்படுத்து வதற்காக விவசாயிகளிடையே விநியோகிக்கப் பட்டது. அந்த ஆண்டு 3.75 ஏக் கிளிசிறிடியா தோட்டம் ஸ்தாபிக்கப்பட்டு அத்துடன் 2.5 ஏக் பழைய தோட்டம் பராமரிக்கப்பட்டது. 250 கி.கி செஸ்பானியா விதைகளும் 240 கி.கி. சணல் விதைகளும் உற்பத்தி செய்யப்பட்டு, பசுந்தாட் பசளை ஊக்குவிப்பு திட்டத்தின் கீழ் 50 கி.கி செஸ்பானியா விதைகள் விதையுற்பத்திக்காக விவசாயிகளிடையே விநியோகிக்கப்பட்டன. வெவ்வேறு விகிதங்களில் சேதனப் பொருட்க ளைப் பயன்படுத்தி முப்பது வேறுபட்ட கூட்டெரு க்கள் தயாரிக்கப்பட்டு, அவற்றின் போசணை உள்ளடக்கங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டன. எட்டு வகைகள் நியம அளவினுள் இருந்ததாக அறியப்பட்டது. இந்த சேதனப் பொருட்களும் கலவை விகிதங்களும் கூட்டெரு தயாரிப்பில் ஈடுபடும் விவசாயிகளுக்கு சிபார்சு செய்யப்பட்ட முடியும். 2011 இல் விவசாயிகள், மாணவர்கள், உத்தியோகத்தர்கள் உட்பட 3000 பேருக்கு சேதனப் பசளை உற்பத்தி பற்றியும் அதன் பயன்பாடு பற்றியும் பயிற்சி வழங்கப்பட்டது. செஸ்பானியா விதைகள் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

உற்பத்தியாளர் விதை உற்பத்தி

தேசிய விதை நெல் உற்பத்தித் திட்டத்திற்கு பிறப்புரிமையியல் தூய்மையானதும் தரமானது மான விதைகள் வழங்கப்படுதலை உறுதி செய்வதற்காக சிபார்சு செய்யப்பட்ட எல்லா வயதுப் பிரிவு நெல் வர்க்கங்களின் உற்பத்தி யாளர் விதை உற்பத்தி தொடரப்பட்டது.

அட்டவணை 2.3.2: 2010/2011 பெரும்போகத்திலும் 2011 சிறுபோகத்திலும் உற்பத்தி செய்யப்பட்ட உற்பத்தியாளர் விதை கி.கி

விதை வகுப்பு/ வர்க்கம்	உற்பத்தியாளர் விதை (கி.கி)		மொத்தம்
	2010/2011 பெரும்போகம்	2011 சிறுபோகம்	
5-6 மாதம்			
Bg 3-5	40	-	40
Bg 745	40	-	40
4 மாதம்			
Bg 379-2	160	120	280
Bg 450	120	80	200
Bg 403	100	-	100
Bg 454	-	40	40
Bg 406	60	160	220
3.5 மாதம்			
Bg 94-1	80	160	240
Bg 352	80	260	340
Bg 357	80	60	140
Bg 358	140	280	420
Bg 359	160	200	360
Bg 360	60	140	300
Bg 366	200	160	360
3 மாதம்			
Bg 300	140	240	380
80 நாட்கள்			
Bg 250	40	40	80

தாழ்நாட்டு ஈர வலய நெல் உற்பத்தியை அதிகரித்தல்

நெல் உற்பத்தியை மேம்படுத்தி விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கும் நோக்குடன் விவ சாய அமைச்சின் விசேட வழிகாட்டலின் கீழ் 2011ம் ஆண்டில் விசேட திட்டமொன்று தாழ் நாட்டு ஈரவலய மாவட்டங்களில் (களுத்துறை, காலி, மாத்தறை, கம்பஹா, கொழும்பு, இரத்தினபுரி, கேகாலை) ஆரம்பிக்கப்பட்டது. மாகாண விவசாய திணைக்களமும் விவசாயத் திணைக்களம் சார்ந்த நிறுவனங்களும் இணை ந்து இத்திட்டத்தை மேற்கொண்டன.

அப்பிரதேச விவசாயிகள் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினைகள் ஆரம்ப குழு கலந்துரையாட ல்களின் போது உரிய பங்காளர்களிடையே இடம் பெற்றது. இது தொடர்பாக ஆரம்ப ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்படும் விவசாய திணைக்க ளத்தின் இயற்கை வள முகாமைத்துவ நிலைய த்தினால் நில இயல்பு ஆய்வொன்று மேற்கொ ள்ளப்படும்.

தொழில்நுட்பப் பரம்பல்

தொழில்நுட்பத்தைப் பரப்பும் செயற்பாடு சம்பிரதாய பூர்வமாக RRDI யின் "நெல்

உற்பத்தி தொழில்நுட்ப பயிற்சி நிலையத்தில்" ஆரம்பித்து வைக்கப்பட்டது. நிரூபிக்கப்பட்ட தொழில் நுட்பங்கள் தொடர்பான விழிப்புணர்வு திட்டங்களும் முழு நாள் பயிற்சியும் உரிய பங்காளர்களுக்கு 2011 இல் வழங்கப்பட்டது. 2011 இல் வெளிக்கள விரிவாக்க உத்தியோக த்தர்கள், விவசாயிகள், விவசாய ஆசிரியர்கள், பல்கலைக்கழக, மாணவர்கள், பாடசாலை மாணவர்கள், தனிப்பட்ட பங்கேற்பவர்கள் ஆகியோருக்காக மொத்தமாக 4192 பயிற்சிகள் நடாத்தப்பட்டன. 809 பாடசாலை மாணவர்கள் பயிற்சிகளில் பங்குபற்றினர். 288 பல்கலைக்கழக மாணவர்களுக்கும் 57 விவசாய பாடசாலை மாணவர்களுக்கும் ஆராய்ச்சி ஆய்வுக் கட்டுரையை நிறைவு செய்வதற்கு பயிற்சி வழங்கப்பட்டது. அனேக ஆராய்ச்சி விரிவாக்க கலந்துரையாடல்களும் விவசாய திணைக்கள விரிவாக்க உத்தியோகத்தர்களும் ஏனைய திணைக்கள அமைச்சு உத்தியோகத்த ர்களும் பங்குபற்றும் பருவகால கூட்டங்களும் 2011 இல் நடைபெற்றன. மிக முக்கியமாக தனியார் பிரிவைச் சேர்ந்த உத்தியோகத்தர்களு க்கான பயிற்சிகள் 105 மேற்கொள்ளப்பட்டன. பயிற்சி நிலையத்தையொட்டிய விடுதிக் கட்டட திறப்பு விழாவிற்கு மேன்மை தங்கிய விவசாய அமைச்சரும் பிற உத்தியோகத்தர்களும் விவசா யிகளும் பங்குபற்றியதை முன்னிட்டு ஓர் வயல் விழா ஒழுங்கமைக்கப்பட்டது. இதில் RRDI யின் ஆராய்ச்சி அபிவிருத்தி நடவடிக்கைகள் நடா த்திக் காண்பிக்கப்பட்டன.

மாதிரிக் கிராமத் திட்டம்

மாதிரிக் கிராமத் திட்டம் 2010 இல் ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் 2011 இல் விவசாய திணைக்களத்தின் விசேட ஒதுக்கீடு கிடைக்கப் பெற்றதனால் மேலும் மூன்று கிராமங்களுக்கு (அதல்ல, பக்மீவவ, மனபக) விஸ்தரிக்கப்பட்டது. விவசாயிகளின் பண்ணை வருமானத்தை அதிகரி க்கும் அதே வேளையில் விவசாயிகளுக்கு துரித கதியில் தொழில்நுட்பங்களைப் பரப்புவதை இத்திட்டம் நோக்கமாகக் கொண்டிருந்தது. 2010/2011 பெரும்போகத்திலும் 2011 சிறுபோக த்திலும் 3 கிராமங்களில் வெளிக்கள செய்முறை களை ஸ்தாபித்தலின் மூலமாக RRDI தெரிவு செய்யப்பட்ட நெல் தொழில்நுட்பங்களை (பரசூட் முறை, ஒருங்கிணைந்த தாவரப் போசணை முகாமைத்துவம், பூச்சிய நிலப்பண்படுத்தல், பெரிய அளவிலான வர்க்க ஒத்திசைவு சோதனை, வர்க்க ஒத்திசைவு சோதனை) பரப்பி யது. விவசாயிகளால் விதை உற்பத்தியை மேற் கொள்வதற்காக விதைப் பெருக்கத் திட்டமொ ன்றும் மேற்கொள்ளப்பட்டது.

நெல் ஆராய்ச்சி நிலையம், அம்பலாந்தோட்டை

அம்பலாந்தோட்டை நெல் ஆராய்ச்சி நிலையம் இருப்பதன் பிரதான நோக்கங்களாவன: திருந்திய சிவப்பரிசி வர்க்கங்களை உருவாக்குதல், உவர் சகிப்பு வர்க்கங்களை உருவாக்குதல், உயர் விளைச்சல் தரும் குறுகிய வயதுடைய வர்க்க ங்களை உருவாக்குதல் ஆகும். இவற்றுடன் சிறந்த தானிய இயல்புகளும் நோய் பீடைக ளுக்கு எதிர்ப்புத் தன்மையும் சேர்க்கப்படுகிறது.

வர்க்க முன்னேற்றம்

கலப்புப் பிறப்பாக்கமும் தெரிவுத் திட்டமும்

மேற்குறிப்பிடப்பட்ட நோக்கத்திற்காக 100 கலப்புகள் அவ்வருடத்தில் மேற்கொள்ளப்பட்டன. ஏறத்தாள 106 தொகைக் குடிகள் மதிப்பீடு செய்யப்பட்டு 87 மேலதிக மதிப்பீட்டிற்காக தெரிவு செய்யப்பட்டன. F5 சந்ததியிலிருந்து ஆரம்பிக்கப்பட்டு ஏறத்தாள 1474 எச்சங்கள் ஸ்தாபிக்கப்பட்டு அவற்றுள் 221 எச்சங்கள் மேலதிக மதிப்பீட்டிற்காகவும் விளைச்சல் சோதனைகளுக்காகவும் தெரிவு செய்யப்பட்டன.

விளைச்சல் மதிப்பீடு

ஏறத்தாள 26 பேதங்கள் ஆரம்ப விளைச்சல் சோதனைகளுக்காக (PYT) தெரிவு செய்யப்பட்டு அவற்றுள் 16 பேதங்கள் பிரதான விளைச்சல் சோதனைகளுக்காக ஆரம்ப விளைச்சல் சோதனைகளிலிருந்து இவ்வருடம் தெரிவு செய்யப்பட்டன.

தேசிய ஒருங்கிணைப்பு நெல் வர்க்க சோதனைத் திட்டம் (NCRVT)

புதிதாக விருத்தி செய்யப்பட்ட ஆறு பேதங்கள்: At 08-593, At 08-617, At 08-648, At 09-854, At 09-861, At 09-1078 மேலும் மதிப்பீடு செய்யப்பட்டன.

1. At 08-593 - 3 மாத, சிவப்பு, பாஸ்மதி வகை பேதம்
2. At 08-617 - 3 மாத, வெள்ளை நீண்ட நடுத்தர தானிய வகை பேதம்
3. At 08-648 - 3 மாத, சிவப்பு, நீண்ட ஒடுங்கிய தானிய வகை பேதம்
4. At 09-854 - 3 மாத, வெள்ளை, சிறிய வட்ட வடிவ தானிய வகை பேதம்
5. At 09-861 - 3 மாத, வெள்ளை, சிறிய வட்ட வடிவ தானிய வகை பேதம்
6. At 08-1078 - 3½ மாத, சிவப்பு, நடுத்தர பெரிய தானிய வகை பேதம்

வர்க்க இசைவாக்கச் சோதனை திட்டம் (VAT)

வர்க்க ஒத்திசைவு சோதனைகள் மாத்தளை, அம்பாந்தோட்டை மாவட்டங்களில் 11 அமைவிடங்களில் இரு போகங்களில் மேற்கொள்ளப்பட்டன. வர்க்க ஒத்திசைவு சோதனைத் திட்டத்தில் புதிதாக விருத்தி செய்யப்பட்ட மூன்று பேதங்கள் மேலும் மதிப்பீடு செய்யப்பட்டன.

- At 07-800 - 3 மாத, வெள்ளை, நடுத்தர பெரிய தானிய வகை பேதம்
- At 07-695 - 3½ மாத, வெள்ளை, சிறிய வட்ட வடிவ தானிய வகை பேதம்
- At 06-631 - 3½ மாத, வெள்ளை, சிறிய வட்ட வடிவ தானிய வகை, நறுமணம் கொண்ட, சுவையான பேதம்

பேரிய அளவிலான வர்க்க ஒத்திசைவு சோதனை திட்டம் (LSVAT)

ஒரு புதிய சிறந்த பேதம் At 05-1382 வர்க்க ஒத்தசைவு சோதனையிலிருந்து மேலும் பரந்த அளவிலான வர்க்க ஒத்திசைவு சோதனைக்காக தெரிவு செய்யப்பட்டது. புதிதாக விருத்தி செய்யப்பட்ட இரண்டு பேதங்கள் At 06-650, At 06-486 என்பன மேலும் மதிப்பீடு செய்யப்பட்டன.

உற்பத்தியாளர் விதை உற்பத்தி

தேசிய விதை நெல் உற்பத்தித் திட்டத்திற்காக பின்வரும் அளவுகளில் உற்பத்தியாளர் விதைகள் At 306, At 307, At 308, At 353, At 362 உற்பத்தி செய்யப்பட்டன.

அட்டவணை 3: 2010/2011 பெரும்போகத்திலும் 2011 சிறுபோகத்திலும் உற்பத்தி செய்யப்பட்ட உற்பத்தியாளர் விதைகள் (Kg)

வர்க்கம்	அளவு (Kg)		மொத்தம்
	2010/2012 பெரும்போகம்	2011 சிறுபோகம்	
At 362	100	160	340
At 308	40	100	140
At 307	-	140	140
At 353	20	20	40
At 306	-	40	40
At 405	120	-	120

தானியத்தின் தரம் தொடர்பான ஆராய்ச்சி

கிடைக்கும் போசணைப் பதார்த்தங்களை சேர்த்துக் கொள்வதை நோக்காகக் கொண்டு நாளாந்த நுகர்வில் ஆரோக்கிய உணவாக முளைகட்டிய சிவப்பரிசியைச் சேர்த்துக் கொள்வதை அறிமுகப்படுத்துவதற்காக சுவை உணர்திறன் ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டது. குற்றிய அரிசியுடன் வேறுபட்ட விகிதங்களில் முளைகட்டிய சிவப்பரிசியைச் சேர்ப்பதற்கான

சாத்தியக்கூறை அறிவதற்காக இரு சிவப்பரிசி வர்க்கங்களையும் (At 361/ At 362) இரு வெள்ளையரிசி வர்க்கங்களையும் (At 307/ At 308) கொண்டு பரிசோதனைகள் மேற்கொள்ள ப்பட்டன. சிவப்பரிசி, வெள்ளையரிசி என்பவற் றுக்கு முளைக்க வைப்பதற்குக் கொடுக்கப்பட்ட கால அளவு முறையே 24, 28 மணித்தியா லங்களாகும். பொதுவாக முளைகட்டிய அரிசியை ஏற்றுக் கொள்ளும் தன்மை அதிகமாகக் காணப்பட்டது. முளைகட்டிய அரிசியை குற்றிய அரிசியுடன் கலப்பதற்கு சிறந்த விகிதமாக சிவப்பரிசி 1:6 உம் வெள்ளை அரிசி 1:7 உம் ஆக அறியப்பட்டது. இந்த முடிவுகளிலிருந்து தினசரி போசாக்குத் தரத்தை அதிகரித்து அரிசி நுகர்வோரின் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதில் முளைகட்டிய அரிசியை நாளாந்த உணவில் சேர்ப்பதை ஓர் சாத்தியமான ஓர் தெரிவாகக் குறிப்பிடலாம்.

ஜெலற்றினாக்கும் வெப்பநிலையையும் சோறு சமைப்பதற்கு சேர்க்கப்படும் நீரின் அளவையும் அடிப்படையாகக் கொண்டு சில நெல் வர்க்க ங்களின் சமையல் நடத்தையை மதிப்பீடு செய்வதற்கான ஆய்வொன்று மேற்கொள்ளப் பட்டது. தாழ் ஜெலரினாக்கும் வெப்பநிலை, நடுத்தர ஜெலரினாக்கும், உயர் ஜெலரினாக்கும் வெப்பநிலை ஆகிய 3 ஜெலரினாக்கும் வெப்பநிலை வகுப்புகளை உள்ளடக்கிய ஆறு நெல் வர்க்கங்கள் தெரிவு செய்யப்பட்டன. நீரின் அளவு அதிகரித்த போது சமைத்த சோறின் நிறை, அகத்துறிஞ்சப்பட்ட நீரின் நிறை, நிறை அதிகரிப்பு வீதம், சமைப்பதற்கு செலவாகிய நேரம் என்பனவும் அதிகரித்தன. நீர் அகத்து றிஞ்சப்படுதலிலும் சமைக்கும் போது ஏற்படும் நிறை அதிகரிப்பு வீதத்திலும் ஜெலரினாக்கும் வெப்பநிலை செல்வாக்கு செலுத்துகிறது.

நெல் ஆராய்ச்சி நிலையம், சம்மாந்துறை

இலங்கையின் கிழக்குப் பிரதேச நெற் செய்கை யின் தேவைகளை நிறைவேற்றுவ தற்காக சம்மாந்துறையிலுள்ள நெல் ஆராய்ச்சி நிலையம் ஸ்தாபிக்கப்பட்டது. நெல் விளைச்சலை அதிகரி ப்பதற்கு பொருத்தமான பயிராக்கவியல் பொதி களை விருத்தி செய்வதும் பொருத்தமான சிறந்த முன்னணிப் பேதங்களை தெரிவு செய்வதும் இந்த ஆராய்ச்சி நிலையத்தின் பொறுப்பாகும். 2011 இல் ஆராய்ச்சி வயல்களிலும் விவசாயி களின் வயல்களிலும் தேசிய ஒருங்கிணைப்பு நெல் வர்க்க சோதனை, வர்க்க ஒத்திசைவு சோதனை, பெரிய அளவிலான வர்க்க ஒத்தி சைவு சோதனை ஆகிய நெல் ஒத்திசைவு சோத னைகள் மேற்கொள்ளப்பட்டன.

தொழில்நுட்பத்தைப் பரப்புதல்

நெல் தொழில்நுட்பத்தை பரப்புவதை நோக்கா கக் கொண்டு விவசாயிகள், மாணவர்கள், தனியார் துறை பங்கேற்பாளர்கள் ஆகியோரு க்காக மூன்று பயிற்சித் திட்டங்கள் நடாத்தப் பட்டன. சேதன உற்பத்தித் திட்டத்தின் கீழ் 11 பயிற்சி நிகழ்ச்சிகள் 820 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு பங்கேற்றவர்களுக்கு கூட்டெரு தயாரிப்பதற்கு கூட்டெரு வளர்ப்பூடகம் வழங்கப் பட்டது. அப்பிரதேசத்தில் களைநெல் பிரச்சினை யைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டு விழிப்புணர்வுப் பட்டறைகளும் வெளிக்கள பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டன. மாகாண விவசாயத் திணைக்களத்துடன் இணை ந்து 2011 சிறுபோகத்தில் மூன்று விழாக்களை அட்டாளச்சேனை, புதங்கல, மல்வத்தை ஆகிய இடங்களில் நடாத்தியது.

சேதனப் பசளை உற்பத்தியும் ஊக்குவிப்புத் திட்டமும்

இத் திட்டத்தின் கீழ் 15,000 கி.கி. கூட்டெரு தயாரிக்கப்பட்டது. 1600 மேட்டுநில பசுந்தாட் பசளை நடுகைத் தடிகள் சீமைக் கிழுவை, அகத்தி பராமரிக்கப்பட்டன.

2012 ஆம் ஆண்டிற்கான வேலைத்திட்டம்

உயர் விளைச்சல் தரும் வர்க்கங்களை விருத்தி செய்து, நாடு நெல் உற்பத்தியில் தன்னிறை வைக் காண்பதற்கான முயற்சிகளை RRDI தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றது. உற்பத்தி முன்னேற்ற இனவிருத்தித் திட்டங்கள் நெற் தரத்தை மேம்படுத்தும் ஆராய்ச்சிக்கு விசேட

முக்கியத்துவம் வழங்கிய படி முன்னெடுக்க ப்படும். வாசனை, மென்மைத் தன்மை, நீண்ட மெல்லிய தானிய வகை ஆகிய இயல்புகள் சராசரி நுகர்வோரால் விரும்பப்படுவதுடன் சந்தையில் உயர் விலையையும் பெறுகிறது. சில தெரிவு செய்யப்பட்ட இனங்களைக் கொண்டு நெற்தர திட்டங்கள் மேற்கொள்ளப்படும் (ஜஸ்மின் நெல், பாஸமதி 370, பாஸ்மதி 217, பாஸ்மதி 9-95, பாஸ்மதி லமோ, பாஸ்மதி சீரக சம்பா, சுவந்தர், ராதல், சுதுரு சம்பா, KDML 105, At 405, At 306, At 362, Bg 300, Bg 352, Bg 357, Bg 359, Bg 360, Bg 94-1, IR 07A127).

தெரிவு செய்யப்பட்ட பாரம்பரிய நெல் வர்க்கங்கள் 2012 இல் தூய்மைபடுத்தப்பட்டு எண்ணிக்கையில் அதிகப்படுத்துவதற்காக திட்ட மிடப்பட்டுள்ளது. ஏனெனில் ருசியாலும் தேசிய பெறுமதியினாலும் அவற்றின் கேள்வி அதிகரி த்துச் செல்கிறது.

எப்படி இருப்பினும் போதியளவு தரமான விதைகளை கண்டுபிடிப்பது தற்போதைய பிரச்சி னையாக உள்ளது. எனவே தெரிவு செய்யப்பட்ட பாரம்பரிய வர்க்கங்களைத் தூய்மைப்படுத்துதல் RRDI யில் மேற்கொள்ளப்படும். (Sudu heenati, Dostora heenati, Swandal, Kurulu thuda, Rathdel, Herath banda, Sulai, Pachcha perumal, Kalu heenati, Weda heenati).

தற்போது நடைமுறையிலுள்ள ஆராய்ச்சித் திட்டங்களை பொருத்தமான மாற்றங்களுடன் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வர்த்தக விதை நெல் உற்பத்தித் திட்டம் புதிய உறுதி மொழிகளுடன் தொடரப்படும். மேன்மை தங்கிய விவசாய அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க தாழ்நாட்டு ஈரவலயத்தில் உற்பத்தியை அதிகரிப்பதற்காக புதிய வேலைத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. அத்துடன் தாழ்நாட்டு ஈரவலயத்தில் சேதன நெற்செய் கையை அதிகரிப்பதற்கான வேலைத் திட்டம் ஒன்றும் உள்ளது. தொழில்நுட்பத்தை பரப்புதலும் ஆதார அமைப்புக்களின் விருத்தியும் மேலும் வலுவூட்டப்படும்

சர்வதேச நெல் ஆராய்ச்சி நிலையத்துடன் IRRI இணைந்து மேற்கொள்ளப்படும் கூட்டான ஆரா ய்ச்சிகள் பல்லின சூழல் சோதனை (MET) ஊடாக மேலும் வலுப்படுத்தப்படும். பல்லின சூழல் சோதனைத் திட்டமானது GR:SP யின் கீழ் IRRI யால் நிதி வழங்கப்படும் ஒரு வேலைத் திட்டமாகும். இனவிருத்தி பேதங்களை நியமித்த லிலும், முன்னெடுத்தலிலும், கைவிடுதலிலும் உகந்த நடைமுறையை விருத்தி செய்வதையும் மூலவுயிர் பரிமாற்றத்தை எளிதாக்குவதையும் இந்த ஆராய்ச்சி பிரதான நோக்கமாகக் கொண்டது.

உத்தியோகத்தர் பட்டியல்

பதவியணி	எண்ணிக்கை
பணிப்பாளர்	01
பதில் பணிப்பாளர்	01
உதவிப் பணிப்பாளர்	01
ஆராய்ச்சி உத்தியோகத்தர்	28
விவசாய உத்தியோகத்தர்	01
விவசாய பொருளியலாளர்	01
விவசாயக் கண்காணிப்பு உத்தியோகத்தர்	01
திட்டமிடல் உதவியாளர்	04
விவசாயப் போதனாசிரியர்	21
ஆராய்ச்சி உதவியாளர்	11
ஆராய்ச்சி உப உதவியாளர்	03
ஆய்வுகூட உதவியாளர்	06
சாரதி	09
காவற்காரர்	13
ஊழியர்	70
ஊழியர் (அமையத்துக்குரிய)	143
மொத்தம்	**314**

2.3.1 பிராந்திய விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம் (RARDC), போம்புவளை

போம்புவெல பிராந்திய விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையமும் அதன் இரு உப நிலையங்களான பெந்தோட்டை, லபுதுவ ஆகியனவும் தாழ்நாட்டு ஈரவலயத்திலுள்ள களுத்துறை, கொழும்பு, கம்பஹா ஆகிய மாவட்டங்களிலும் காலி, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களின் சில பகுதிகளிலும் நெல் உற்பத்தித்திறனை அதிகரிக்கும் நோக்கில் தொழில்நுட்பங்களை உருவாக்கி பரப்புகின்றன. போம்புவல பி.வி.ஆ.அ.நி உயர்விளைச்சலைக் கொண்ட, குறிப்பாக இரும்பு நஞ்சாதலிற்கு சகிப்புத் தன்மை கொண்ட நெல் வர்க்கங்களை உருவாக்குவதில் தீவிரமாகவுள்ளது. அதே நேரத்தில் லபுதுவ விவசாய ஆராய்ச்சி நிலையம் பிரதானமாக சிவப்பு நிற சுற்றுக்கனியத்தைக் கொண்ட சம்பா வகை நெல் வர்க்கங்களை உருவாக்குவதில் ஈடுபட்டுள்ளது. பெந்தோட்டை விவசாய ஆராய்ச்சி நிலையம் வெள்ள அபாயம், அதிகளவு உப்புத்தன்மை என்பவற்றைக் கொண்ட பிரதேசங்களிற்குரிய நெல் வர்க்கங் களைத் தேர்ந்து அபிவிருத்தி செய்கின்றது.

பாதீடு

அட்டவணை 2.3.1.1: வருடாந்தப் பாதீடு- 2011 (ரூபா)

செலவு விடயம்	ஒதுக்கீடு	செலவு	செலவு வீதம்
மூலதனம்	5,042,492	4,942,952	98
நடைமுறைச் செலவு	11,182,000	10,493,146	94
திட்டம்			
சேதனப் பொருளின் உற்பத்தியும், மேம்படுத்தலும்	850,000	735,442	87
மாதிரிக் கிராம நிகழ்ச்சித் திட்டம்	300,000	157,576	53
மொத்தம்	**17,374,492**	**16,329,116**	**94**

முன்னேற்றம்

வர்க்க முன்னேற்றம்

3 1/2 மாத வயதுடைய, வெள்ளை நிற சுற்று க்கனியத்தைக் கொண்ட புதிய சம்பா நெற்பேத மொன்று (BW 04-992) 2012 ஜனவரியில் நடை பெறவிருந்த வர்க்க வெளியீட்டுக் குழுவிடம் பிரேரிக்கப்பட்டது. இன்னுமொரு 3 1/2 மாத வய துடைய சிவப்புநிற சுற்றுக்கனியத்தைக் கொண்ட (BW 05-16210) வர்க்கமொன்று NVAT திட்டத்தில் பரிசோதிக்கப்பட்டது. பின்வரும் 6 முன்னேற்ற மான பேதங்கள் NCRVT க்கு பிரேரிப்பதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளன.

குறிப்பு

NCRVT - தேசிய ரீதியில் ஒருங்கைக்க ப்பட்ட நெல் வர்க்கப் பரிசோதனை

NVAT - தேசிய ரீதியில் ஒருங்கமைக்க ப்பட்ட வர்க்கப் பரிசோதனை

அட்டவணை 2.3.1.2: NCRVT க்கு தெரிவு செய்யப்பட்ட முன்னேற்றமான 6 நெற்பேதங்கள்

பேதம்	இயல்புகள்	வயது (மாதம்)
BW 03-1198	சிவப்பு, இடைத்தர நீளமானது	3½
BW 09-906	சிவப்பு, நீளமானது	3½
BW 09-840	சிவப்பு, இடைத்தரமானது, உருண்டை	3½
BW 07-676	வெள்ளை, இடைத்தரமானது	3½
BW 09-1125	சிவப்பு, இடைத்தரம், உருண்டை	3
BW 09-1127	வெள்ளை, இடைத்தரம், உருண்டை	2½

மேற்குறிப்பிட்ட எல்லா பேதங்களும் இரும்பு நஞ்சாதலிற்கும், நோய், பீடைகளிற்கும் சகிப்புத்தன்மை யுடையவையாகும்.

உற்பத்தியாளர் விதை உற்பத்தி

பின்வரும் அளவுகளில் BW வர்க்க உற்பத்தி யாளர் விதை உற்பத்தி செய்யப்பட்டது.

BW 272-6b	30 kg
BW 363	20 kg
BW 361	60 kg
BW 363	20 kg
BW 364	40 kg

பயிராக்கவியல்

கலப்பின நெல்லின் நேரடி விதைப்பு

புதிய தொழில்நுட்பமாகச் சிபாரிசு செய்யப்படு வதற்கு முன்னர் கலப்பின நெல் விதையை 30 kg/ha எனும் வீதத்தில் தாழ்நில ஈரவலய நிபந்தனைகளின் கீழ் நேரடியாக விதைத்தல் தற்போது விவசாயிகள் மட்ட சோதனையிலு ள்ளது. பூச்சியப் பண்படுத்தலை தாழ்நில ஈரவலயத்திலுள்ள புதையக்கூடிய மண்ணில், நெல்லை உற்பத்தி செய்வதற்கான ஒரு முறை யாகப் பயன்படுத்துவதற்கான ஆராய்ச்சி மீண்டும் மீண்டும் உற்சாகமூட்டும் பெறுபேறுகளைக் காட்டியுள்ளதுடன் இத் தொழில்நுட்பமும் விவசா யிகள் மட்ட சோதனை நிலையிலுள்ளது. நெல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையத்தால் (RRDI) ஒருங்கிணைக்கப்பட்ட மீண்டும் மீண்டும் மேற்கொள்ளப்பட்ட ஒருங்கிணைக்கப்பட்ட தாவர போஷணைத் தொகுதிப் (IPNS) பரிசோதனை யில் பெறப்பட்ட பெறுபேறுகள், மணல் கலந்த களி மண் நிலங்களில் இரசாயனப் பசளைப் பிரயோகத்தை 25% ஆல் குறைக்கப்படலாமெனக் காட்டியுள்ளது.

NCRVT, NCVATT நிகழ்ச்சிகள்

இந்நிகழ்ச்சி 2 1/2, 3, 3 1/2 மாத (சம்பா நீளமான, இடைத்தரமான மணிகள்) வயதுப் பிரிவுகளில் மேற்கொள்ளப்பட்டது. மொத்தமாக 24 பிரேரணைகள் (அகில இலங்கை ரீதியாக) மதிப்பிடப்பட்டன. வர்க்க இசைவாக்கப் பரிசோ தனை (VAT) நிகழ்ச்சியில் மொத்தமாக 6 முன்னேற்றகரமான பேதங்கள், (அகில இலங்கை ரீதியாக) கொழும்பு, கம்பஹா, களுத்துறை, காலி மாவட்டங்களில் சோதிக்கப்பட்டது. இவற் றுள் AT 07-695 (3 1/2 மாத, சம்பா), BW 05 - 16213 (3 1/2 மாத சிவப்பு நாடு) ஆகி யவை முன்னேற்றகரமாக இருந்ததுடன் விவசா யிகளின் பாராட்டையும் பெற்றன.

களை விஞ்ஞானம்

இரசாயனக் களை முகாமைத்துவம்

ஈர விதைப்பு மேற்கொள்ளப்பட்ட வயல்களில் இவ்வருடம் பல களைநாசினிகள் தேர்ந்தெடுக்க ப்பட்டன. உற்சாகமூட்டும் பெறுபேறுகள் 3 களை நாசினிகளில் பெறப்பட்டன.

ஒருங்கிணைந்த களை முகாமைத்துவம்

நடைமுறையிலிருக்கும் ஆராய்ச்சியில் ஓர் ஒருங்கிணைந்த களை முகாமைத்துவப் பொதியை உருவாக்குவதில் பல பயிர் உற்பத்தி முறைகள் சோதிக்கப்பட்டன. விதைத்தலிற்கு சற்று முன்னர் அல்லது பின்னர் வைக்கோலை பத்திரக்கலவையாகப் பயன்படுத்தும் போது களைகள் வினைத் திறனாக குறிப்பாக பயிரின் ஆரம்ப நிலைகளில் கட்டுப்படுத்துவது அவதா னிக்கப்பட்டது. மரச்சீவல்கள் விதைத்தவுடன் பயன்படுத்தப்பட்ட போதிலும் ஒத்த பெறுபேறுகள் பெறப்பட்டன. "பரசூட்" முறையில் உருவாக்கப் பட்ட ஒரு பயிரில் இவ்விரு பொருட்களும் நடுகைக்கு முன்னர் பத்திரக் கலவையாகப் பயன்படுத்தப்படலாம். பத்திரக்கலவையினூடு எழும் களைகளை அகற்றல் இம்முறையின் வினைத்திறனை அதிகரிக்கும்.

பூச்சியியல்

பூச்சிகளை தேர்ந்தெடுக்கும் நிகழ்ச்சி

கபில தாவரத்தத்தி, இலை மடிச்சுக்கட்டி ஆகிய வற்றைக் கட்டுப்படுத்துவதற்கான ஒரு புதிய இர சாயனம் Virtako 40 WG (தயமெதொக்சாம் 20 + குளோரன்றனிலிப்புறோல் 20) இப்பீடைகளிற்கு மிக வினைத்திறனானதாகக் காணப்பட்டுள்ளது. வழமையான தேர்ந்தெடுக்கும் நிகழ்ச்சியில் கொப்புள ஈ இற்கான 20 இனவிருத்தி பேதங்க ளும், கபிலத் தாவரத் தத்திக்கான 07 பேத ங்களும் பச்சைவீடு, வயல் ஆகிய இரு நிபந்த னைகளின் கீழும் அடையாளம் காணப்பட்டு ள்ளது. இன்னொரு தேர்ந்தெடுக்கும் சோதனை யில் 26 ஒருங்கிணைக்கப்பட்ட நெல் வர்க்கச் சோதனை பிரேரணைகள், நெல் கொப்புள ஈ, (RGM), கபில தாவரத் தத்தி என்பவற்றிற்கு தேர்ந்தெடுக்கப்பட்டன. இவற்றுள் 11 வர்க்கங்க ளில் மீண்டும் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சேதனப்பொருளின் உற்பத்தி, பயன்பாடு ஊக்குவிப்புக்காக, 30 தொன்களிற்கு மேற்பட்ட நெல் கொப்புள ஈக்கு ஓரளவு எதிர்புடையவை யாகவும் (MR) அதேநேரம் இரண்டு வர்க்கங்கள் ஓரளவு தொடக்கம் (MR) எதிர்ப்புடையவையாகக் (R) காணப்பட்டன.

நோயியல்

நெல் எரிபந்தத்திற்கான வர்க்கத் தேர்வு

நெல், வளர்ச்சி பிரதான நெல் நோய்களின் முகாமைத்துவம் என்பவற்றில் கதிர்வீச்சிற்குட் படுத்தப்பட்ட Chitosan உருவாக்கங்களின் தாக்க ங்களை மதிப்பிடுவதற்காக ஒரு விஷேட செயற் திட்டம் (விவசாயம், சூழல் கதிர்வீச்சிற்கான பல் பகுதிய கதிர்வீச்சுச் செயன்முறை) மேற்கொள்ள ப்பட்டது. இத்துடன் நெல் எரிபந்த நோய்க்கான 72 BW பேதங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வழமை யான ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டம் மேற்கொள்ள ப்பட்டது. இவற்றுள் 56 பேதங்கள் எரிபந்த நோய்க்கு எதிர்புடையவை.

மண் விஞ்ஞானம்

இப்பிரிவு 283 மண் மாதிரிகளையும், 33 கூட்டெரு மாதிரிகளையும் 2011 இல் பகுப்பாய்வு செய்தது. இதைத் தவிர வழமையான ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டங்களும் மேற் கொள்ளப்பட்டன.

விவசாயிகளின் வயலில் வினைத்திற னான பசளைப் பாவனைத் தொழில்நுட்ப ங்களிற்கான இசைவாக்கச் சோதனை (NARP)

ஒரு பருவகாலப்பகுதியில் (சிறுபோகம்) மேற் கொள்ளப்பட்ட NARP செயற்திட்டத்தின் கீழ், தாழ்நில ஈரவலயத்திற்கான பசளைத் தேவை சம்பந்தமாக பெறுமதிமிக்க அறிவு பெறப்பட்டது.

கணிசமான அளவு N, P, K பசளைகள் தாழ்நில ஈரவலயத்தில் குறைக்கப்படலாமெனக் கூறுவத ற்கான அறிகுறிகள் உள்ளது. மீண்டும் இச்செயன் முறைகள் பரிசோதிக்கப்படுகின்றன.

சேதனப் பதார்த்த உற்பத்தி, பயன்பாட்டு மேம்பாடு

601 பங்காளர்களிற்கு பதின்மூன்று பயிற்சி வகுப்புகளும், 03 வயல் விழாக்களும் மேற்கொள்ளப்பட்டன. அத்துடன் விவசாயத் திணைக்களத்தின் சிபாரிசு செய்யப்பட்ட பசளை யின் 10% ஐ சேதனப் பசளையினால் ஈடுசெய்வத ற்கான பெரியளவிலான இரு செயன்முறை துண்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

மாதிரிக்கிராம நிகழ்ச்சித் திட்டம் 2011

புதிய தொழில்நுட்பத்தை (தாழ்நில ஈரவலய த்திற்கு பொருத்தமான வர்க்கங்கள்) பரப்புவத ற்கான மாதிரி கிராம நிகழ்ச்சித் திட்டம் தொட க்கி வைக்கப்பட்டு, 56 விவசாயிகளிடையே 18 புசல் BW வர்க்கங்கள் (BW 361, BW 363, BW 364, BW 272-6b, BW 04-992, BW 05-1621) விநியோகிக்கப்பட்டன. 200 புசல் விதை நெல் உற்பத்தி செய்யப்பட்டு பங்கிடப்பட்டது. BW வர்க்கங்களைப் பயன்படுத்துவதற்கான முக்கிய த்துவம் பற்றி விவசாயிகளிற்கு அறிவூட்டுவ தற்காக இரண்டு வயல் விழாக்கள் நடாத்தப் பட்டன.

நெல் ஆராய்ச்சி நிலையம், லபுதுவ

தாழ்நில ஈரவலயத்தின் தென்பகுதியிலுள்ள உயர் திறனுடைய நெல் வயல்களிற்கான சிவப்பு சம்பா வர்க்கங்கள், உயர் விளைச்சலைக் கொண்ட நெல் வர்க்கங்கள் என்பவற்றிற்கான தொழில்நுட்பங்களை அபிவிருத்தி செய்வதற்கு லபுதுவவிலுள்ள நெல் ஆராய்ச்சி நிலையம் பொறுப்பாகவுள்ளது. இந் நிலையம் தாவர பாது காப்பு தொடர்பாகவும் ஆராய்ச்சி நடவடிக்கை களை மேற்கொள்கின்றது.

நெல் இனவிருத்தி

புதிய வர்க்கங்களின் அபிவிருத்தி

வர்க்கம் Ld 3-12-50, (3 1/2 மாத, சிவப்பு சம்பா) வர்க்க வெளியீட்டு சபைக்கு பிரேரிக்கப்பட்டு ள்ளது. ஒரு வர்க்கம் Ld 3-6-12, (3 1/2 மாத, வெள்ளை சம்பா) பெரிய அளவிலான வர்க்க இசைவாக்கச் சோதனையிலும் (LSVAT), இரு வர்க்கங்கள் (Ld 7-6-2, (3 1/2 மாத வெள்ளை நீளம்) Ld 8-6-7 (3 1/2 மாத சிவப்பு குட்டை/ வட்டம்) தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட நெல் வர்க்கச் சோதனையிலும் (NCRVT) ஒரு வர்க்கம் DUS சோதனையிலுமுள்ளது. (Ld 1-5-15, 3½ மாத, வெள்ளை சம்பா).

உற்பத்தியாளர் விதை உற்பத்தி

பின்வரும் அளவுகளில் உற்பத்தியாளர் விதை உற்பத்தி செய்யப்பட்டது.

Ld 365 – 140kg

Ld 408 – 21.5kg

தாவரப் பாதுகாப்பு

சர்வதேச நெல் ஆராய்ச்சி நிலையம் (IRRI) பிலிப்பைன்ஸ், இலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட 100 சர்வதேச பற்றீரிய இலை வெளிறல் (BLB) எதிர்ப்பு வர்க்கங்களுள், 05 பேதங்கள் இலங்கை நிலைமைகளின் கீழ் சிறப்பானவையாகக் காணப்பட்டன. மூலிகை எண்ணெய் சோதனை நிகழ்ச்சித் திட்டத்தில் இரு எண்ணெய்கள் நெல் பனிப்பூச்சி, நெல் மூட்டுப்பூச்சியைக் கட்டுப்படுத்து வதற்காக மேலும் சோதனை மேற்கொள்ள இனங்காணப்பட்டுள்ளது.

களை விஞ்ஞானம்

04 சிறப்பியல்புகளைக் கொண்ட களைநாசினிக ளும், 04 உற்பத்தி முறைகளும் தேசிய ஒருங்கிணைக்கப்பட்ட களைநாசினி தேர்ந்தெடுப்பு சோதனையிலும், NARP செயற்திட்ட நடவடி

க்கைகளிலும் முறையே அடையாளம் காணப்ப ட்டுள்ளன.

விரிவாக்கம்

வழமையான விரிவாக்க செயற்பாடுகளைத் தவிர களைநெல் பற்றி இரு வயல் விழாக்கள் விவசாயிகளின் வயலில் மேற்கொள்ளப்பட்டன.

விவசாய ஆராய்ச்சி நிலையம், பெந்தோட்டை

வெள்ளத்தை சகிக்கும் வர்க்கங்களை தேர்ந் தெடுக்கும் நிகழ்ச்சித்திட்டம் தொடரப்பட்டது. களுத்துறை, கம்பஹா மாவட்டங்களில் குறிப் பிட்ட விவசாய நிலைமைகளின் கீழ் IRRI இனால் தெரிவு செய்யப்பட்ட ஐந்து பேதங்கள் (IR 119, Sub சம்பா Mashuri, sub 1 IR 64, சுவர்ணா Sub 1, IR 7f 290) ஆகியவை. Bg 96-741, BW 364, Bg 357, Bg 5R என்பவற்றுடன் சோதிக்கப்பட்டன. பெறுபேறுகள் வெளிநாட்டு நெல் வர்க்கங்களிலும் Bg 96-741 உம் Bg 364 உம் நன்றாகத் தொழிற்பட்டதைக் காட்டியது. NCRVT, NVAT நிகழ்ச்சித் திட்டங்களும் விவசாயிகள் வயலைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வயல் நிபந்தனைகளின் கீழ் தொடரப்பட்டன.

சேதனப்பசளை உற்பத்தி மேம்படுத்தல் நிகழ்ச்சித் திட்டம்

இச்செயற்திட்டத்தின் கீழ் 15,000 kg கூட்டெரு தயாரிக்கப்பட்டது. மேல்நாட்டு பசுந்தாட்பசளை தாவரங்க ளிற்கான (கிளிரிசிடியா, கத்துரு) 1600 நடுகைத் தடிகள் பராமரிக்கப்பட்டன.

தொழில்நுட்பப் பரம்பல்

கருத்தரங்கு நிகழ்ச்சித் திட்டம் 2011, RARDC போம்புவெல

மொத்தமாக 44 கருத்தரங்கு நிகழ்ச்சிகள் இவ்வ ருடத்தில், இந்நிலையத்தில் மேற்கொள்ளப் பட்டன.

RARDC , போம்புவெலவில் சேதனப் பொருளின் உற்பத்தி பயன்பாடு என்பவற்றிற்கான ஊக்கு விப்பு செயற்திட்டத்தின் கீழ் மொத்தமாக 601 பயிற்சியாளர்கள், (விவசாயத் திணைக்கள உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள்) கூட்டெரு உற்பத்தி பயன்பாடு பற்றி பயிற்றுவிக்க ப்பட்டனர். இதைத் தவிர 124 பயிற்சியாளர்கள் நெற்பயிர்ச்செய்கையின் வேறுபட்ட நிலைகள் பற்றி இவ்வருடத்தில் பயிற்றுவிக்கப்பட்டனர். அத்துடன் RARDC போம்புவலயிலுள்ள ஆரா ய்ச்சி உத்தியோகத்தர்களால் புதிய தொழில்நு ட்பங்களிற்கான இரண்டு தொலைக்காட்சி நிக ழ்ச்சிகளும் நான்கு வானொலி நிகழ்ச்சிகளும் அபிவிருத்தி செய்யப்பட்டன. இந்நிலையத்தில் சேதனப் பொருள் செயற்திட்டத்தின் கீழ் மூன்று வயல் விழாக்களும், விவசாயிகள் வயலில் (மாதிரிக் கிராமம்) இரு வயல் விழாக்களும் மேற்கொள்ளப்பட்டன. இந்நிலையம் 5 கண்காட்சி களில் பங்குபற்றி இருப்பதுடன் அவை களுத்துறை மாவட்ட கமக்கார அமைப்புக்களில் ஆற்றலை 12 தடவைகளில் பிரதிநிதித்துவப்படு த்துவதாகவும் அமைந்திருக்கின்றது.

2012 ஆம் ஆண்டிற்கான திட்டம்

நடைமுறையிலுள்ள ஆராய்ச்சித் திட்டங்கள்

சரியான மாற்றங்களுடன் தொடர்ச்சியாக நடை பெறவுள்ள இத்திட்டத்தின் கீழுள்ள வர்த்தக ரீதி யான விதைநெல் உற்பத்தி தொடர்ந்து புதுப்பி க்கப்படவுள்ளது.

LCWZ ல் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கு கௌரவ விவசாய அமைச்சின் தலையீட்டுடன் புதிய திட்டங்கள் வரையப்பட்டது.

அத்துடன் boggy நிலத்தில் ஆராய்ச்சி நெல் உற்பத்திக்கு திட்டம் தீட்டப்பட்டது. அத்துடன் இவ்வலயத்தில் சேதன நெற்பயிர்ச்செய்கையை அதிகரிப்பதற்கு திட்டம் இடப்பட்டது.

RRDI பத்தலகொடையில் தொழில்நுட்பங்களை பரப்புவதலும் உட்கட்டமைப்பு அபிவிருத்தியும் தொடர்ந்து வலுப்படுத்தப்பட்டது

உத்தியோகத்தர் பட்டியல்

பதவியணி	எண்ணிக்கை
உதவிப் பணிப்பாளர்	01
ஆராய்ச்சி உத்தியோகத்தர்	13
விவசாய உத்தியோகத்தர்	01
விவசாயக் கண்காணிப்பு உத்தியோகத்தர்	04
நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்	08
விவசாயப் போதனாசிரியர்	14
ஆராய்ச்சி உதவியாளர்	12
பண்ணை முகாமையாளர்	01
காவலாளி	05
சுகாதாரத் தொழிலாளி	01
தொழிலாளி (தரம் 11)	26
தொழிலாளி (தரம் 111)	08
தொழிலாளி (தற்காலிகம்)	53
மொத்தம்	**147**

3.1 விதை அத்தாட்சிப்படுத்தல் பயிர்ப் பாதுகாப்பு நிலையம் (SCPPC), கன்னொறுவை

(SCPPC) என்பது விதை அத்தாட்சிப்படுத்தல் சேவை (SCS) பயிர்ப் பாதுகாப்பு (PP), தேசிய தாவர தடுப்புக்காப்பு சேவை (தே.தா.த.கா.சே.) பீடைகொல்லிப் பதிவாளர் (ROP), தாவர பிறப்பு ரிமை மூலவள நிலையம் PGRC என்பவற்றின் கேந் திர நிலையமாகும். விவசாயிகளுக்கு உயர்தர விதைகளையும் நடுகைப் பொருட்க ளையும் வழங்குதல், தாவரப் பாதுகாப்பு, விவசாயப் பீடைநாசினிகளைக் கட்டுப்படுத்தல் போன்ற பரந்தளவிலான சேவைகளை வழங்குவதுடன் உணவுப் பயிர்களின் தாவரப் பிறப்புரிமை மூல வளங்களைப் பாதுகாப்பதுடன் தாவரப் பாதுகாப்பு முதலிய நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றது. (SCPPC) பின்வரும் சட்டங்களை அமுல்படுத்துவதில் பொறுப்பாக உள்ளது.

- 1999 ம் ஆண்டின் 35ம் இலக்க தாவர பாதுகாப்புச் சட்டம்.
- 1980 ம் ஆண்டின் 33ம் இலக்க பீடைநாசினி கட்டுப்பாட்டுச் சட்டம்.
- 2003ம் ஆண்டின் 22ம் இலக்க விதைச்சட்டம்.

மேலும் தேசிய தாவரப் பாதுகாப்பு அமைப்பு தொடர்பான நடவடிக்கைகளின் விசாரணை மையமாகவும் தொழிற்படுகின்றது.

பாதீடு

அட்டவணை 3.1.1 வருடாந்தப் பாதீடு 2011 (ரூபா)

செலவு விடயம்	ஒதுக்கீடு	செலவு	செலவு %
மூலதனம்	33,051,000	4,670,288	75
மீண்டுவரும் செலவுகள்	45,598,000	1,375,607	91
மொத்தம்	**78,649,000**	**6,045,895**	**84**

முன்னேற்றம்

இறக்குமதி அனுமதிகள்

2011ம் ஆண்டில் பின்வரும் பொருட்களுக்கான இறக்குமதி அனுமதிப் பத்திரங்கள் விநியோகிக் கப்பட்டுள்ளன.

அட்டவணை 3.1.2: இறக்குமதி அனுமதிப் பத்திர விநியோகம் – 2011

அனுமதிப் பத்திர வகை	தொகை
மரக்கறிப் பயிர் விதை	979
புதிய பழங்கள்	686
தாவரம், தாவரப் பாகங்கள்	618
தாவர உற்பத்திகள்	263
விதை உருளைக்கிழங்கு	33
விலங்குணவு	135
மலர்வகை-சமயக் கிரியைகளுக்காக	20
மனித நுகர்வுக்கான பொருட்கள்	54
உயிரியல் முகவர் அமைப்புக்கள்	02
மொத்தம்	**2790**

விதை உருளைக்கிழங்கு இறக்குமதி

அட்டவணை 3.1.3 விதை உ.கி. இறக்குமதி 2011

நாடு	இ.ம.செய்யப்பட்ட அளவு (மெ. தொ)	விடுவிக்கப்பட்ட அளவு (மெ. தொ)	ஆய்வு கூட பரிசோதனை/ தொகை
நெதர்லாந்து	700	700	50
அமெரிக்கா	75	75	05
பிரான்ஸ்	23	23	10
ஜேர்மன்	50	50	01
மொத்தம்	**848**	**848**	**66**

இறக்குமதி செய்யப்பட்ட விதை உருளைக் கிழங்கு தொகையில், இருபது புகுமிடப் பரிசோத னைக்குட்படுத்தப்பட்டதுடன் அவற்றில் எதுவும் நிராகரிக்கப்படவில்லை. ஒவ்வொரு இ.ம. செய்ய ப்பட்ட தொகையிலுமிருந்து பெறப்பட்ட மாதிரிகள் பிந்திய கட்டுப்பாடு கள நிலையங்களில் (சீதா எலிய) இறக்குமதிக்குப் பின்னான பயிர்பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காகப் பயிரிடப்பட்டன.

மரக்கறிப் பயிர் மற்றும் பழ இன விதைகளின் இறக்குமதி

அட்டவணை 3.1.4 இல் 2011ம் ஆண்டில் மரக்கறிப்பயிர் பழ இன விதைகளின் இறக்கும திக்காக விநியோகிக்கப்பட்ட 979 இறக்குமதி அனுமதிப் பத்திரங்கள் மூலமாக இ.ம. செய்ய ப்பட்ட மொத்த அளவு காண்பிக்கப்பட்டுள்ளது. மரக்கறிப் பயிர் விதைகளின் இறக்குமதி தொட ர்பான தகவல்களைப் பெற்றுக் கொடுப்பதற்காக தேசிய தரவுத்தளம் அபிவிருத்தி செய்ய ப்பட்டுள்ளது. இதன் மூலம் 2004ம் ஆண்டு முதல் கடல்மார்க்கமாகவும், ஆகாய மார்க்கமா கவும் இறக்குமதி செய்யப்பட்ட உண்மை விதைகளின் இறக்குமதிக்காக விநியோகம் செய்யப்பட்ட இறக்குமதி அனுமதிப் பத்திரங்கள் தொடர்பான தகவல்களை மிக இலகுவாக பெற்றுக்கொள்ளக் கூடியதாக உள்ளது.

அட்டவணை 3.1.4 மரக்கறிப் பயிர் மற்றும் பழ இன விதைகளின் இறக்குமதி – 2011

பயிர்வகை	புகுமிடமும் - அளவும் (கி.கி)		மொத்த அளவு (கி.கி)
	விமான நிலையம்	துறைமுகம்	
சாத்தாவாரி	0.98		0.98
போஞ்சி		247750.5	247750.5
பீற்றூட்	5.00	20583.1	21083.08
குடைமிளகாய்	6.0		6.0
பாகற்காய்	282.02	3666.5	3948.52
நாடங்காய்	0.01		0.01
கோவா	493.08	1563.9	2056.98
கரட்	55.5	40531.7	40,587.20
கோலிப்ளவர்	47.5	208.8	256.30
செலரி		3.0	3.0
மிளகாய்	510.16		510.16
சீனக்கோவா		45.0	45.0
சீனக்கேல்		266.0	266.0
சீன முள்ளங்கி		1160.0	1160.0
வெள்ளரிக்காய்	1494.8	4583.7	6078.48
கத்தரி	63.02	697.5	760.53
கங்குன்		655.0	655.0
முள்ளங்கி	1200	2110.0	3310.0
லீக்ஸ்	165	11080.0	11245.0
சலாது	0.5	315.0	315.5
பயற்றை		15662.0	15662.0
பீர்க்கங்காய்	410	5385.65	5795.65

சோளம்	154	790450.0	790604.0
மெயோன்		50.07	50.7
வெண்டி	535.07	603.00	1138.07
வெங்காயம்	5668	3300	8968
பக்சொய்		30.00	30.0
பப்பாசி		15.03	15.03
பாஸ்லி	1.5		1.5
மிளகு	857.17	7662.01	8519.18
பூசணி	1428	9801.24	11229.24
ராபு	202	17212.35	17414.35
புடலங்காய்		3.00	3.0
ஸ்குவஸ் (துபாய் பூசணி)		5975.00	5975.0
ஸ்வீட்கோன்	24	4.00	28.0
தக்காளி	377.08	1164.57	1541.65
டர்னிப்	3		3.0
வத்தகை	673.36	11478.28	12151.64
சுசினி	2.5		2.5
மொத்த அளவு (kg)	**15,154.24.**	**1,200,715.87**	**1,215,870.11**

1999ம் ஆண்டின் 35ம் இலக்க தாவர பாதுகாப்பு சட்டம் தொடர்பான புதிய விதிகள்

1999ம் ஆண்டின் 35ம் இலக்கத் தாவரப் பாதுகாப்பு சட்டம் தொடர்பான புதிய விதிகள் சட்டவரைஞரிடம் கையளிக்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பான நடவடிக்கைகள் தற்போது இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளன.

பிந்திய தடுப்புக்காப்புப் பரிசோதனை

அனுமதிச் சீட்டு வழங்குதலை தீர்மானிக்கு முன் இரு பிந்திய தடுப்புக்காப்பு பரிசோதனைகள் செய்யப்படுகின்றன.

அட்டவணை 3.1.5 பிந்திய தடுப்புக்காப்புப் பரிசோதனை

இடம்	வகை
ஜா-எல	விலங்குணவாக கோதுமையை தொகையாகப் பரிகரணம் செய்யும் வசதிகள்
வெலிமடை நுவரெலியா	இறக்குமதி செயயப்பட்ட விதை உருளைக் கிழங்குகள் உருளைக் கிழங்கு பயிரிடப்படும் களங்களில் பயிரிடப்படட்டன.

ஏற்றுமதிக்கான அத்தாட்சிப்படுத்தல்

மினுவாங்கொடை, தம்புள்ள, வெலிமடை, மீரிகம, பன்னல போன்ற பகுதிகளில் அமைந்துள்ள தாவரம், தாவரப் பாகங்களை ஏற்றுமதி செய்யும் கம்பனிகளின் சூழல் மற்றும் ஏற்றும திக்காக தயார் செய்யும் நடவடிக்கைகள் போன்றன பரீட்சிக்கப்படுகின்றன.

ஊடக நிகழ்ச்சிகள்

விதைச் சட்டத்தை செயற்படுத்துமுகமாக, டிசெம்பர் 18-25 வரையிலான காலப்பகுதி ஊடக வாரமாக அறிமுகப்படுத்தப்பட்டு வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகைகள் மூலமாக பின்வரும் நிகழ்ச்சிகள் நடத்தப் பட்டன.

தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

கொவி பிமட்ட அருனலு
மிஹிகத தினுவோ
சிறு விளம்பரங்கள்

வானொலி நிகழ்ச்சிகள் - இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம்

மஹ கெதரின் கொவி கெதரட
கொவிதனட்ட பெயக்
கலவிட
அஸ்வென்ன – அறுவடை
வயம்ப வீட்டுத் தோட்டம்
ருஹசனு (Ruhuna) வீட்டுத் தோட்டம்

போஸ்டர்கள்

2 வகையான 6000 போஸ்டர்கள்

செய்திப் பத்திரிகைகள்

லங்காதீப, ரிவிர போன்ற பத்திரிகைகளில் விதைச் சட்டம் தொடர்பான செய்திகளும், விளம்பரங்களும்;

(தாவரத் தடுப்புக்காப்பு தொடர்பான ஊடக நிகழ்ச்சிகள்) கமத (ஸ்வர்ணவாஹினி) ரன்அடுவ (ஐரிஎன்) போன்ற நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து தாவரத் தடுப்புக்காப்பு தொடர்பான ஊடக நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.

களப் பரிசோதனை

நுவரெலியா பகுதியில் உருளைக்கிழங்குப் பயிர்ச்செய்கையில் தடுக்கப்பட்ட பீடைகளை கண்டறிவதற்கான களப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. இத்தரவுகளின் அடிப்ப டையில் எதிர்காலத்தில் பீடைப் பாதுகாப்பு நிக ழ்ச்சித் திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன. புத்தளம் பகுதியில் இறக்குமதி செய்யப்பட்ட வெளிக்கள (exvitro) தேக்கு பயிர்ச்செய்கை க்கான களப் பரிசோதனைகளும் மேற்கொள்ள ப்பட்டன.

ஏற்றுமதி குறுக்கீடுகள்

கடைப்பிடிக்கப்பட வேண்டிய தாவர சுகாதார முறைகளை சரியான முறையில் கடைபிடிக்காத காரணத்தினால் குறிப்பிட்ட 10 நாடுகளில் ஏற்றுமதிக் குறுக்கீடுகள் பதிவு செய்யப்பட்டன. 2010-ம் ஆண்டுடன் ஒப்பிடும் போது இது 23% வீழ்ச்சியாகும். எதிர்காலத்தில் தடுப்புக்காப்பு வழிமுறைகளை சரியாக கடைபிடிக்குமாறு சகல ஏற்றுமதியாளர்களும் அறிவுறுத்தப்பட்டனர்.

ஏற்றுமதி குறுக்கீடு தொடர்பான புலன் விசாரணை

இலங்கை பிரிமா நிறுவனத்தினால் ஏற்றுமதி செய்யப்பட்ட கோதுமைக்கு வியட்நாம் தடுப்பு க்காப்பு அதிகார சபையினால் விதிக்கப்பட்ட தடை சம்பந்தமாக விரிவான புலன் விசார ணைகள் மேற்கொள்ளப்பட்டன. திருகோண மலைப் பகுதி தானியங்களை அரித்துண்ணும் வண்டுகளின் (Trogoderma granarium) தாக்க த்தினால் பீடிக்கப்பட்டிருந்தது. உற்பத்தி செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்ற பல்வேறு ஸ்தானங்களிலிருந்தும் மாதிரிகள் பெறப்பட்டு கட்டுநாயக்காவில் அமைந்துள்ள தேசிய தாவர தடுப்புக் காப்பு நிலையத்தில் பரிசோதிக்கப்பட்டு, அறிக்கைகள் பெறப்பட்டன. இதன் மூலம் வியட்நாமிற்கு அனுப்பப்படுகின்ற கோதுமையில் தொழிற்சாலை முதல் இலங்கையிலிருந்து விடு விக்கப்படுகின்ற ஸ்தானம் வரையிலான எந்த வொரு இடத்திலும் தொற்றுதலுக்குட்படலாம் என்ற உண்மை நிரூபணமானது.

அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் அங்கீகாரம் பெற்ற புகையூட்டல் திட்டத்தினை (AFAS) அமுல்படுத்துதல்

AFAS எனும் பயிற்சி திட்டம் இலங்கையில் அமுல்படுத்தப்படும் போது இலங்கையில் புகையூட்டம் தொடர்பான நடவடிக்கைகளின் தரம் மேலும் வலுப்படும் என்பதில் எவ்வித ஐயமு

மில்லை. இப்பயிற்சித் திட்டத்தின் முக்கிய குறிக்கோளானது மீதைல் புரோமைட் புகையூ ட்டல் நடவடிக்கைகளை தடைகள் எதுவுமின்றி சரியான முறையில் செய்வதற்குத் தேவையான பயிற்சியை தடுப்புக் காப்பு அலுவலர்களுக்கு பெற்றுக் கொடுப்பதாகும். குறிப்பாக இலங்கை யிலும் அவுஸ்திரேலியாவிலும் புகையூட்டல் செயற்பாடுகள் பொதுவாகக் கடைபிடிக்கப்படும் போது, இப்பயிற்சியானது அவற்றின் வர்த்தக நடவடிக்கைகளை வசதிபடுத்தும். அண்மைக் காலங்களில் அவுஸ்திரேலிய ஏற்றுமதியில் ஏற்ப ட்ட குறுக்கீடுகளையும் குறைத்துக் கொள்ள இப்பயிற்சி வழிசெய்யும்.

இதன் முதற் கட்டமாக விவசாயத் திணைக்க ளத்தின் பல்வேறு பிரிவுகளையும் சேர்ந்த 25 அலுவலர்கள் தடுப்புக்காப்பு நோக்கங்க ளுக்கான மீதைல் புரோமைட் பாவனைத் தொடர்பில் அவுஸ்திரேலிய தடுப்புக்காப்பு புலன் விசாரனை சேவையின் தரக்கட்டுப்பாடு சம்பந்த மான விரிவான பயிற்சியை பெற்றுக் கொண்ட னர். அப்பிரிவுகளாவன விதை அத்தாட்சிப்படு த்தலும் தாவரப் பாதுகாப்பும், தேசிய தாவரத் தடுப்புக்காப்புச் சேவை, விமான நிலையம், துறைமுகம் போன்ற நுழைவிடங்களில் அமை ந்துள்ள தாவர தடுப்புக்காப்பு அலகுகள், பீடை நாசினி பதிவாளர், உள்ளக பயிற்சி நிறுவனம் கண்ணொறுவை, அங்குணகொல பெலஸ்ஸ போன்றவை ஆகும். அத்துடன் புகையூட்டம் சம்ப ந்தமான நடவடிக்கை களில் ஈடுபடும் 25 தனியார் துறையினருக்கும் இப்பயிற்சி வழங்கப்பட்டது.

2011 மார்ச் மாதம் புகையூட்டம் சம்பந்தமான சுற்றுலாப் (visit) பயிற்சியினைத் தொடர்ந்து 2011 மே மாதம் DAFF உயிரியல் காப்பாளர் AFAS இன் கணக்காய்வுப் பயிற்சியை வழங்கவென கொழும்பு வந்தடைந்தனர். இப்பயிற்சி மூன்று நாட்கள் நடத்தப்பட்டதுடன் இதில் விவசாயத் திணைக்களத்தின் 20 அலுவலர்கள் பங்கு பற்றினர். இப்பயிற்சியினை தொடர்ந்து DAFF உயிரியல் காப்பும் இலங்கை விவசாயத் திணை க்களமும் ஒன்றாகச் சேர்ந்து கொழும்பிலுள்ள புகையூட்டல் சம்பந்தமான கம்பனிகளுக்கான கணக்காய்வு ஆலோசனை களை வழங்கினர்.

உள்ளூர் தானிய உற்பத்தியை ஊக்குவித்தல்

உள்ளூர் உற்பத்தி உயர்வாக உள்ள காலப்பகுதியில் சோளத் தானிய விதைகளின் இறக்குமதியை கட்டுப்படுத்துவதன் மூலம் உள்ளூர்த் தானிய உற்பத்தியை அதிகரிப்ப தற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இறக்குமதி அனுமதிப் பத்திரம் வழங்கப்படும் போது விவசாய அமைச்சின் ஒத்துழைப்பும் பெற்றுக் கொள்ளப்பட்டது.

கருத்தரங்குகள் / விழிப்புணர்ச்சி நிகழ்ச்சிகள் / தாவர தடுப்புக் காப்பு தொடர்பான பயிற்சிகள்

தாவரத் தடுப்புக்காப்பு தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், 60 சுங்க அதிகாரிகளுக்கும், தடுப்புக்காப்பு அதிகாரிகளுக்கும் நடாத்தப்பட்டன. இது நடத்தப்பட்டதன் நோக்கம் தடுப்புக்காப்பு அதிகாரிகளுக்கும், சுங்க அதிகாரிகளுக்கு மிடை யிலான புரிந்துணர்வை மேம்படுத்துவதாகும். புதிதாக நியமனம் செய்யப்பட்ட 32 விவசாயப் போதனாசியர்களுக்கும் தாவரத் தடுப்புக்காப்பு தொடர்பான பயிற்சி வழங்கப்பட்டது. அங்குண கொல பெலஸ்ஸ எனும் இடத்தில் அமைந்துள்ள உள்ளகப் பயிற்சி நிறுவனத்தில் குண்டசாலை விவசாயப் பாடசாலை, பல்கலைகழக மாணவ ர்கள் 40 பேர் பயிற்றுவிக்கப்பட்டனர்.

நுவரெலியாவில் உருளைக்கிழங்கு பயிர்ச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளினதும், அம்பேவலயில் ஒப்பந்த அடிப்படையில் செய்கை பண்ணுவோரினதும் களங்களில் விதை அத்தா ட்சிப்படுத்தலும் தாவரப் பாதுகாப்பு நிலையம், துறைமுகம் விமான நிலையம் ஆகிய புகுமிட ங்களில் அமைந்துள்ள தடுப்புக்காப்பு சேவையில் அலுவலர்கள் 26 பேர் உருளைக் கிழங்கு பீடை தொடர்பான மதிப்பீட்டினை மேற் கொண்டனர். இப்பயிற்சியில் களத்தில் உருளைக் கிழங்கினை பயிரிட்டது. முதல் அறுவடை செய்யும் வரையி

லான வளர்ச்சிப் பருவங்கள், உற்பத்திப் படிநிலைகள் என்பவற்றை நேரடியாக அவதானித்து பரிசீலிக்கும் வாய்ப்பைப் பெற்றுக் கொண்டனர்.

2012ம் ஆண்டிற்கான திட்டங்கள்

- தாவரம், தாவரப் பாகங்களை பாதுகாப்பான முறையில் ஏற்றுமதி, இறக்குமதி செய்வதற்கு தேவையான வசதிகளை வழங்கும் சட்டதிட்டங்களை அமுல்படுத்துதல்.
- உயர்தர விதைகள், நடுகைப் பொருட்களின் உற்பத்தி தொடர்பான திட்டங்களையும், கொள்கை தீர்மானங்களையும் உருவாக்குதல்.
- உள்நாட்டில் விதை சம்பந்தமான வியாபாரத்தை அபிவிருத்தி செய்தல்.
- உள்ளூரில் தரமான தாவர நடுகைப் பொருட்களின் உற்பத்தியை அபிவிருத்தி செய்தல்.
- தேசிய தாவர சுகாதாரத் தேவைகளை வலுப்படுத்தல்.
- தொழில்நுட்பத் தேவைகளின் தரத்தை உயர்த்துதல்
- சட்ட நடவடிக்கைகளைப் பொருத்தமான தாகவும் உகந்ததாகவும் மாற்றுதல்.
- மிகவும் சாமர்த்தியமானதும், பாதுகாப்பானதுமான பீடைக்கட்டுபாட்டு உபாயங்களை உயர்த்துதல்.

உத்தியோகத்தர் பட்டியல்

பதவியணி	எண்ணிக்கை
பணிப்பாளர்	01
ஆராய்ச்சி அலுவலர்	01
விவசாய அலுவலர்	02
நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் விவசாயம்	03
விவசாயப் போதனாசியர்	02
நிருவாக அலுவலர்	01
பொதுமுகாமைத்துவ உதவியாளர் சேவை	12
களஞ்சியப் பொறுப்பாளர்	01
அலுவலக வேலை உதவியாளர் (KKS)	02
சாரதி	03
ஊழியர் (நிரந்தரமற்ற)	02
ஊழியர் (ஒப்பந்த)	04
மொத்தம்	**34**

3.1.1 விதை அத்தாட்சிப்படுத்தல் சேவை (SCS), கன்னொறுவை

விதை அத்தாட்சிப்படுத்தல் சேவை மூலமாக விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்ற விதை மற்றும் நடுகைப் பொருட்களின் தரத்தை பேணுதல், உறுதி செய்தல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பாதீடு

அட்டவணை 3.1.1.1 வருடாந்தப் பாதீடு 2011 (ரூபா)

செலவு விடயம்	ஒதுக்கீடு	செலவு	செலவு%
மீண்டுவரும் செலவு	18,530,000	16,910,000	91
மூலதனம்	3,440,000	12,300,000	92
திட்டங்கள் - விதை உற்பத்திக் கிராமங்கள்	3,190,000	840,000	26
விதைச் சட்டம்	20,000,000	15,500,000	78
மொத்தம்	**55.16**	**45.55**	**83**

முன்னேற்றம்

- விதை உற்பத்திக்கான நெல் வயல்கள் 6364 ஹெக், வயற்பயிர் 581 ஹெக், மரக்கறிப் பழப்பயிர் 126 ஹெக் உருளைக்கிழங்கு 76 ஹெக், பரிசிலிக்கப்பட்டன.
- 7999 மெ.தொ விதை நெல்லிலிருந்து 13234 மாதிரிகளும், 216 மெ.தொ வயற் பயிர்கள், 27 மெ.தொ மரக்கறி விதை மற்றும் 312 மெ.தொ விதை உருளைக்கிழங்கு மாதிரிகளும் பரிசோதனை செய்யப்பட்டன.
- 240 அத்தாட்சிப்படுத்தப்பட்ட தாவரப் பாகங்களை உற்பத்தி செய்யும் பூங்கனிப் பயிர் நாற்று மேடைகளின் பரிசீலனையும், பதிவும் மற்றும் 260,048 ஒட்டுதல் செய்யப்பட்ட பழ மரக்கன்றுகளின் சுட்டி இடல் மூலம் தரத்தை நிர்ணயம் செய்தலும்
- 13 நெல் , 19 வயற் பயிர்கள், 10 மரக்கறிப் பயிர் வர்க்கங்கள் DUS பரிசோதனை மூலமாக தரமுயர்த்தப்பட்டன.
- அரிசி, வயற்பயிர்கள், மரக்கறிப் பயிர்கள், உருளைக்கிழங்கு என்பவற்றின் பிந்திய கட்டுபாட்டு மாதிரிகள் 526 Pc-1, Pc-4 ஆகியவை கன்னொறுவை, சீதாஎலிய, மகாஇலுப்பள்ளம ஆகிய இடங்களில் அமை ந்துள்ள பிந்திய களப் பரிசோதனை நிலைய ங்களில் பரிசோதிக்கப்பட்டன.
- விதை சட்டத்தின் கீழ் 918 புதிய மற்றும் 410 மீள் புதுப்பித்தல்களும் செய்யப்பட்டன.

- விதைச் சட்டத்தின் கீழ் 604 அரச ஊழியர்களும் விதை உற்பத்தியாளர்களும் பயிற்று விக்கப்பட்டனர்.

- விதைச் சட்டத்தின் கீழ் வெற்றிகரமான முறையில் 15 வானொலி / தொலைக்காட்சி நிகழ்ச்சிகளும் 5 விளம்பரங்களுடன் கூடிய ஊடக வாரம் ஒன்றும் செய்து முடிக்கப்பட்டது.

- 'திவிநெகும" நிகழ்சித் திட்டத்திற்கு தேவையான பழப்பயிர்களைப் பெற்றுக் கொடுப்பதற்கான வேலைதிட்டம் ஒன்று வெற்றிகரமாகச் செய்து முடிக்கப்பட்டது. இலங்கையின் அனைத்து மாவட்டங்களையும் பிரதிநிதித்துவப்படுத்து முகமாக சுமார் 250 தனியார் நாற்று மேடை உரிமையாளர்கள், விவசாயத் திணைக்களம், 'ஹதபிம" அதிகார சபை ஆகியவற்றின் விதை மற்றும் நடுகைப் பொருட்களை உற்பத்தி செய்யும் பண்ணைகள், 9 மாகாணங்களையும் சேர்ந்த திட்டமிடல் பணிப்பாளர்கள் 4 மாவட்டச் செயலாளர்கள், 9 மாகாணப் பணிப்பாளர்கள் பங்குபற்றினர், இந்நிகழ்ச்சியின் போது "10 மில்லியன் வீட்டுத் தோட்ட செய்கைக்கான விதை மற்றும் நடுகைப் பொருட்களை வழங்குவதற்கான தேசிய வேலைத் திட்டம்" எனும் பெயரில் புத்தகம் மற்றும் இறுவெட்டு என்பன வெளியிடப்பட்டன.

- 'விதை உற்பத்திக் கிராமம்" எனும் நிகழ்ச்சியின் கீழ் 119 மெ.தொ அரிசி 1.6 மெ. தொ வயற்பயிர்கள் 1.9 மெ.தொ மரக்கறிப் பயிர்களை பிரதிநிதித்துவப்படுத்து முகமாக 337 ஹெக் நெல் 100 ஹெக் வயற்பயிர்கள், 14 ஹெக் மரக்கறிப் பயிர் நிலங்கள் என்பன பதிவு செய்யப்பட்டன.

- வி.அ.சே தலைமை அலுவலகம், அனைத்து பிராந்திய அலுவலகங்கள் மற்றும் 4 விதை பரிசோதனை ஆய்வுகூடங்களுக்கும் இணையத் தள வலையமைப்பு வசதி பெற்றுக் கொடுக்கப் பட்டுள்ளது.

- வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு தரவு களை எளிதாகவும் சரியாகவும் கையாளக் கூடிய வகையில் விதை ஆய்வு கூடங்களுக் கென ஒரு மென் பொருள் (Software) அறிமுகப்படுத்தப்பட்டது. சரியான தரவுத்தளம் மற்றும் ஆய்வுகூட அறிக்கைகளைத் திருத்தமான முறையில் வெளியிடவும் இது ஏதுவாக அமைந்துள்ளது.

விதை நெல் அத்தாட்சிப்படுத்தல்

2011 ஆண்டின் விதை நெல் உற்பத்திக்காக 6364 ஹெக் நிலம் பதிவு செய்யப்பட்டது. இதில் 69% மானவை தனியார் துறையினருக்குரியது. அத்தாட்சிப்படுத்திய விதை நெல் உற்பத்தி செய்யும் வெவ்வேறு நிலையங்கள் பதிவு செய்யப்பட்டதுடன் அவற்றில் உற்பத்தி செய்யப்பட்ட நெல் இனங்கள் அட்டவணை 3.1.1.2 இல் தரப்பட்டுள்ளன. 2010ம் ஆண்டிலும் பார்க்க 2011ம் ஆண்டில் 38% அதிகரிப்பு காணப்பட்டது. இதற்கான காரணம் பல்வேறு நிலையங்களும் ஒன்றாக சேர்த்து விதை நெல் உற்பத்தியில் ஈடுபட்டமை ஆகும்.

அட்டவணை 3.1.1.2 2010 / 2011 ம் ஆண்டுகளில் விதை நெல் உற்பத்திக்காகப் பதிவு செய்யப்பட்ட நிலப்பரப்பு

நிலையம்	விதை வகை	2010		2011		
		பதிவு செ.ப நிலம் (ஹெ)	பரிசீலிக்கப்பட்டவை (ஹெ)	பதிவு (ஹெ)	பரிசீ (ஹெ)	ஏற்றுக்கொள்ளப்பட்ட %
ஆராய்ச்சி நிலையங்கள்	உற்பத்தியாளர் (Breeder)	5.2	5.2			
அரசாங்கப் பண்ணைகள்	அத்திவாரம்	53	42	65	47	98
	பதிவு செய்யப்பட்டவை	459	431	618	369	100
	அத்தாட்சிப்படுத்தியது I	132	106	299	212	100
	அத்தாட்சிப்படுத்தியது II	3.5	3.5	53	43	100
ஒப்பந்த விதை உற்பத்தியாளர்	பதிவு செய்யப்பட்டது	12	12	31	25	100
	அத்தாட்சிப்படுத்தியது I	598	551	759	543	99
	அத்தாட்சிப்படுத்தியது II	74	67	120	75	100
தனியார் துறை	பதிவு செய்யப்பட்டது	29	27	420	138	97
	அத்தாட்சிப்படுத்தியது I	3416	2974	3459	2131	99
	அத்தாட்சிப்படுத்தியது II	422	371	540	307	98
மொத்தம்		**5203.7**	**4589.7**	**6364**	**3890**	

2011 ஆண்டில் மொத்தம் 7999 மெ.தொ விதை நெல் உற்பத்தி செய்யப்பட்துடன் ஆய்வுகூடப் பரிசோதனையில் 3869 மெ.தொ எதிர்பார்க்கப் பட்ட தரத்தை கொண்டிருந்தன.

(அட்டவணை 3.1.1.3) விவசாயத் திணைக்களத்தின் ஒப்பந்த விதை உற்பத்தி யாளர் 3140 மெ.தொ (39%) தனியார் துறை 4857 மெ. தொ. (61%) விதை நெல்லை உற்பத்தி செய்தனர்.

அட்டவணை 3.1.1.3 2010 / 2011 ம் ஆண்டுகளில் பரிசோதிக்கப்பட்ட விதை நெல்லின் அளவும் எதிர்பார்க்கப்பட்ட வீதமும்.

உற்பத்தி செய்யப்பட்ட இடம்	2010		2011	
	பரிசோதிக்கப்பட்ட அளவு (மெ. தொ)	ஏற்றுக் கொ. பட்ட %	பரிசோதிக்கப்பட்ட அளவு (மெ. தொ)	ஏற்றுக் கொ. பட்ட %
ஆராய்ச்சி நிலையங்கள்	3.7	79		
அரசாங்கப் பண்ணைகள்	2672	92	2480	90
ஒப்பந்த விதை உற்பத்தியாளர்	1476	95	661	85
தனியார் துறை	6969	71	4858	23
மொத்தம்	**11127.7**		**7999**	

மறு வயற் பயிர் விதைகளை அத்தாட்சிப்படுத்தல்

பதிவு செய்யப்பட்ட மொத்த மறு வயற்பயிர் விதை உற்பத்தி நில அளவு 581 ஹெக். அவற்றுள் 66% ஒப்பந்த அடிப்படையிலாகும். வயற் பயிர்களாவன சோளம், பயறு, நிலக் கடலை, எள்ளு, கௌபீ, குரக்கன், உளுந்து, சோயா அவரை துவரம் பருப்பு ஆகியன அட்டவணை 3.1.1.4 இல் வெவ்வேறு நிலையங்களுடாக உற்பத்தி செய்யப்பட்ட வயற்பயிர் விதைகளின் அளவும், வெவ்வேறு விதை வகைகளும் காண்பிக்கப்பட்டுள்ளன. 2010ம் ஆண்டினை விட பதிவு செய்யப்பட்ட நிலப்பரப்பு 16% அதிகரிப்பைக் காட்டுகிறது.

அட்டவணை 3.1.1.4: 2010/2011 ம் ஆண்டுகளில் மறு வயற்பயிர் விதை உற்பத்தியின் நிலப்பரப்பு

உற்பத்தி செய்த இடம்	விதை வகை	2010		2011		
		பதிவு செ.ப நிலப்பரப்பு (ஹெ)	பரிசீலிக்கப்பட்ட நி.ப. (ஹெ)	பதிவு செ.ப. (ஹெ)	பரிசீ. நி.ப.(ஹெ)	ஏற்றுக்கொள்ளப்பட்ட அளவு %
ஆராய்ச்சி நிலையங்கள்	உற்பத்தியாளர் விதை	2.8	2.7			
அரசாங்கப் பண்ணைகள்	அடிப்படை	33.2	30	12	9.3	100
	பதிவு செய்யப்பட்ட விதை	17	14.6	32.5	16.3	100
	அத்தாட்சிப்படுத்தியது I	7.9	7.9	35.7	13.2	100
	கலப்பினம்			0.75	0.75	100
ஒப்பந்த விதை உற்பத்தியாளர்	அடிப்படை	0.9	0.9	1.0	1.0	100
	பதிவு	58	53.8	75.0	56.5	100
	அத்தாட்சிப்படுத்தியது I	328	306	355.9	178.8	100
	அத்தாட்சிப்படுத்தியது II	49.8	46	36.6	18.0	93
தனியார் துறை	அடிப்படை	2.0	2.0	10.5	7.8	100
	பதிவு			12.7	3.8	100
	அத்தாட்சிப்படுத்தியது I	21	20.4	8.7	4.9	100
	அத்தாட்சிப்படுத்தியது II	0.8	0.8	0.4	0.4	100
மொத்தம்		**521.4**	**485.1**	**581.8**	**310.8**	

2011-ம் ஆண்டில் மொத்த மறு வயற்பயிர் விதை உற்பத்தி 216 மெ.தொ. அவற்றுள் 89% அத்தாட்சிப்படுத்தப்பட்டவை ஆகும். வெவ்வேறு இடங்களில் உற்பத்தி செய்யப்பட்ட விதைகளில் ஆய்வு கூடப் பரிசோதனைக்குட்படுத்தப்பட்ட அளவும், ஏற்றுக் கொள்ளப்பட்ட வீதங்களும் அட்டவணை 3.1.1.5 இல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 3.1.1.5 2010 / 2011 ம் ஆண்டுகளில் பரிசோதனை செய்யப்பட்ட மறு வயற்பயிர் விதைகளின் அளவு

பெறப்பட்ட இடம்	2010		2011	
	பரிசோதனை செய்யப்பட்ட அளவு (மெ. தொ)	ஏற்றுக் கொள்ளப்பட்ட %	பரிசோதிக்கப் பட்ட அளவு (மெ. தொ)	ஏற்றுக் கொள்ளப் பட்ட %
ஆராய்ச்சி நிலையங்கள்	1.9	98		
அரசாங்கப் பண்ணைகள்	22.1	78	27.4	88
ஒப்பந்த விதை உற்பத்தியாளர்	236.9	96	168.1	90
தனியார் துறை	6.6	85	20.8	93
மொத்தம்	**267.5**		**216.3**	

மரக்கறிப் பயிர் விதைகளின் அத்தாட்சிப்படுத்தல்

மரக்கறிப் பயிர் விதை உற்பத்தியில் பதிவு செய்யப்பட்ட நிலப்பரப்பு 126 ஹெக்டயர் ஆகும். அவற்றுள் 54% தனியார் துறையினராகும். அட்டவணை 3.1.1.6 இல் விதை பெறப்பட்ட வெவ்வேறு இடங்களும் பெறப்பட்ட விதை வகை, நிலப்பரப்பு என்பனவும் காட்டப்பட்டுள்ளன. தக்காளி, வெண்டி, மிளகாய், புடலங்காய், போஞ்சி, கத்தரி, பாகல், முள்ளங்கி, பீர்க்கு, கறிமிளகாய், பயற்றை, வெள்ளரி, வட்டக்காய், கீரை (amaranthus) மரக்கறிக் கௌபீ, சிறகவரை, வத்தகை, பப்பாசி போன்ற பயிர்களே விதை உற்பத்தியில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 3.1.1.6: 2010/ 2011 ம் ஆண்டுகளில் மரக்கறிப் பயிர் விதை உற்பத்தி செய்யப்பட்ட நிலப்பரப்பு (ஹெக்.)

உற்பத்தி செய்யப்பட்ட இடம்	விதை வகை	2010		2011		
		பதிவு செ.ப நிலப்பரப்பு (ஹெ)	பரிசீலிக்கப்பட்ட நிலப்பரப்பு (ஹெ)	பதிவு செ.ப.நிலப்பரப்பு (ஹெ)	பரிசீலனை செ.ப. நிலப் பர.(ஹெ)	ஏற்றுக் கொள்ளப்பட்ட %
ஆராய்ச்சி நிலையங்கள்	உற்பத்தியாளர்	1.4	1.3	0.2	0.2	100
அரசாங்கப் பண்ணைகள்	அடிப்படை	23.5	21.3	6.7	5.1	100
	தரப்படுத்தப்பட்டது (Standard)	27.1	26	26.0	23.0	100
	கலப்பினம்			0.24	0.24	100
ஒப்பந்த அடிப்படை	அடிப்படை	2.8	1.7	0.2	0.2	100
	தரப்படுத்தப்பட்டது	53.9	49.4	21.5	14.0	100
தனியார் துறை	தரப்படுத்தப்பட்டது	88.5	74.2	71.4	51.5	100
மொத்தம்		**197.2**	**170.2**	**126.3**	**94.3**	

அட்டவணை 3.1.1.7: 2010 / 2011 ம் ஆண்டுகளின் மரக்கறிப் பயிர் விதை உற்பத்தி

உற்பத்தி செய்யப்பட்ட இடம்	2010		2011	
	பரிசோதனைக் குட்படுத்திய அளவு (மெ. தொ)	ஏற்றுக் கொள்ளப்பட்ட %	பரிசோதனைக்குட் படுத்திய அளவு (மெ. தொ)	ஏற்றுக் கொள்ளப் பட்ட %
ஆராய்ச்சி நிலையங்கள்	0.4	82	0.027	100
அரசாங்கப் பண்ணைகள்	9.4	99	5.6	95
ஒப்பந்த அடிப்படை	24.2	84	7.05	91
தனியார் துறை	36.2	68	15.86	96
மொத்தம்	**70.2**		**28.54**	

இவ்வாண்டின் மொத்த மரக்கறிப் பயிர் விதை உற்பத்தி 28.5 மெ.தொ ஆகும். அவற்றுள் 27 மெ.தொ அத்தாட்சிப்படுத்தப்பட்டன. அட்டவணை 3.1.1.7 இல் பரிசோதனை செய்யப்பட்ட அளவும், ஏற்றுக்கொள்ளப்பட்ட வீதங்களும் உற்பத்தி செய்யப்பட்ட பல்வேறிடங்கள் தொடர்பான தகவல்களும் தரப்பட்டுள்ளன.

விதை உருளைக் கிழங்கினை அத்தாட்சிப்படுத்தல்

அட்டவணை 3.1.1.8 இல் வெவ்வேறு வகையான விதை உருளைக் கிழங்குகளும் அவை பயிரிடப்பட்ட நிலப்பரப்பும் தரப்பட்டுள்ன. விதை உருளைக்கிழங்கு பயிரிடப்பட்ட நிலப்பரப்பு 72 ஹெக் ஆகும். அவற்றுள் 312 மெ.தொ. பிரபல்யமான வகை Granola என்பதாகும். இது அத்தாட்சிப்படுத்தப்பட்டது. இத்துடன் 76355 சிறிய கிழங்குகள் விஷேட விதை உற்பத்தித் திட்டத்தின் கீழ் பொலிதீன் கூடாரங்களில் பயிரிடப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்பட்டன.

அட்டவணை 3.1.1.8 : 2010/ 2011 ம் விதை உருளைக் கிழங்கு செய்கை பண்ணப்பட்ட நிலப்பரப்பு

செய்கைபண்ணப்பட்ட இடம்	விதை வகை	2010		2011	
		பதிவு செ.ப நிலப்பரப்பு (ஹெ)	எதிர்பார்க்கப் பட்ட நிலப் பரப்பு (ஹெ)	பதிவு செய்யப்பட்ட நிலப் பரப்பு (ஹெ)	எதிர்பார்க்கபட்ட நிலப் பரப்பு %
அரசாங்கப் பண்ணைகள்	முன் அடிப்படை	0.10	0.10	0.12	0.08
	அடிப்படை	13.28	12.28	43.01	41.81
	அத்தாட்சிப்படுத்தியது	25.87	24.01	10.23	10.23
தனியார் துறை	அத்தாட்சிப்படுத்தியது	13.00	12.90	19.35	18.83
	மொத்தம்	**52.25**	**49.29**	**72.71**	**70.95**

விதைப் பரிசோதனை

விவசாயத் திணைக்களத்தின் பேராதனை, மஹஇலுப்பள்ளம, அளுத்தறம, படஅத்த எனுமிடங்களில் அமைந்துள்ள விதைப் பரிசோதனை ஆய்வு கூடங்களில் மொத்தம் 12,234 விதை மாதிரிகள் தர அத்தாட்சிப்படுத்தலுக்காக பரிசோதனைக்குட்படுத்தப்பட்டன.

தாவர நடுகைப் பொருட்களை அத்தாட்சிப்படுத்தல்

அரச, தனியார் துறையைச் சேர்ந்த பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்ட மொத்தம் 60,048 பழ மரக் கன்றுகள் அத்தாட்சிப் படுத்தப்பட்டு சுட்டிகள் ஒட்டப்பட்டன.

அட்டவணை 3.1.1.9 இல் 2010 ஆம் ஆண்டினை விட 22% அதிகரிப்பைக் காட்டுகிறது.

அட்டவணை 3.1.1.9 : 2010/ 2011 ம் ஆண்டுகளில் ஒட்டுதல் முலம் உற்பத்தி செய்யப்பட்ட பழ மரக் கன்றுகள்

பழவகை	அத்தாட்சிப்படுத்தப்பட்ட எண்ணிக்கை	
	2010	2011
ஒட்டு - மா	99,565	146,979
ஒட்டு - ரம்புட்டான்	63,960	27,116
ஒட்டு - தோடை	30,572	82,162
நாரத்தை	6,854	-
ஆனைக்கொய்யா	580	918
தூரியன்	304	282
பலா	441	2,591
மொத்தம்	**202,276**	**260,048**

நாற்றுமேடைகளைப் பதிவு செய்தல்

2011-ம் ஆண்டில் 240 நாற்று மேடைகள் பதிவு செய்யப்பட்டன.

தாய்த்தாவரங்களை அத்தாட்சிப்படுத்தல்

மா, ரம்புட்டான், சித்திரசு, பேரிக்காய், தூரியன், பலா ஆகியவற்றின் மொத்தம் 1307 தாய்த் தாவரங்கள் தெரிவு செய்யப்பட்டு பதிவு செய்யப் பட்டன.

அட்டவணை 3.1.1.10 2010/2011ம் ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்ட தாய்த் தாவரங்களின் எண்ணிக்கை

வகை	பதிவு செய்யப்பட்ட தொகை
ஒட்டு - மா	450
ஒட்டு- ரம்புட்டான்	357
சித்திரசு	415
பேரிக்காய்	77
தூரியன்	01
பலா	12
மொத்தம்	**1307**

பிந்திய கட்டுப்பாட்டுப் பரிசோதனை

526 விதை மாதிரிகளை மதிப்பீடு செய்வதற்காக பிந்திய கட்டுப்பாட்டு பரிசோதனைகள் நடாத்தப் பட்டன. அவை விவசாயத் திணைக்களத்தினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட விதை மாதிரிகளும் வெவ்வேறு இனங்களை சேர்ந்த இறக்குமதி செய்யப்பட்ட விதை மாதிரிகளுமாகும்.

அட்டவணை 3.1.1.11 இல் வெவ்வேறு பயிர்களில் நடத்தப்பட்ட பிந்திய கட்டுப்பாட்டு பரிசோதனைகளின் எண்ணிக்கை தரப்பட்டுள்ளன.

அட்டவணை 3.1.1.11 பிந்திய கட்டுப்பாட்டு பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை

பயிர் வகை	பரீட்சிக்கப்பட்ட மாதிரி தொகை
நெல்	165
மறு வயற் பயிர்கள்	189
மரக்கறிப் பயிர்	165
பழவகை	07
மொத்தம்	**526**

வேறுபாடானவை, சீரானவை, உறுதியானவை சம்பந்தமான பரிசோதனை (DUS)

கன்னொறுவையில் அமைந்துள்ள பிந்திய கட்டுப்பாட்டுக் களத்தில் 13 நெல் இனங்கள் (BW 04-992, At 676, Ld 3-6-12, BG 3R, At O6-631, BG-465, பொகுறு சம்பா, Ld 1-5-15, CIC 3-1, Bg 5-15-31, BG 4-2236, Bg 11-139, Bg 5-110), 14 மரக்கறிப் பயிர் இனங்கள், 19 ஏனைய வயற் பயிர்கள் என்பன பரிசோதனைக குட்படுத்தப்பட்டன. 2011 ம் ஆண்டினுள் 8 நெல் வகை, 8 மரக்கறிப் பயிர் மற்றும் 5 மறு வயற்பயிர்களின் (OFC) DUS பரிசோதனைகள் செய்து முடிக்கப்பட்டன.

அட்டவணை 3.1.1.12: செய்யப்பட்ட Dus பரிசோதனைகளின் எண்ணிக்கை.

பயிர்வகை	நடத்தப்பட்ட பரிசோதனை எண்ணிக்கை	நடத்தி முடிக்கப்பட்ட எண்ணிக்கை
நெல்	13	8
ஏனைய வயற் பயிர்கள்	19	5
மரக்கறிப் பயிர்கள்	14	8
மொத்தம்	**46**	**21**

விதைச் சட்டத்தை அமுல்படுத்துதல்

இலங்கையின் விவசாயத்துறையின் இன்றியமை யாத துறையான விதை தொழிற்துறையைப் பாதிக்கக் கூடிய குறைபாட்டு நடவடிக்கைகளால் விவசாயிகளும், விதைப் பரிகரிப்பாளர்களும் பாதிக்கப்படாது பாதுகாக்கும் வகையில் 2003ம் ஆண்டின் 22ம் இலக்க விதைச்சட்டம் 2008 ம் ஆண்டு முதல் அமுல்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வாண்டினுள் விதைச் சட்டத்தின் கீழ் 918 விதைப் பரிகரிப்பாளர்களும், 418 மீளப் புதுப்பி த்தல்களும் பதிவு செய்யப்பட்டுள்ளனர். விதைச் சட்டத்தை சீர்குலைக்கும் வகையில் நடந்து கொண்ட 12 முறைப்பாடுகள் விசாரணைக்குட்ப டுத்தப்பட்டதுடன் விதை பரிகரிப்பாளருக்கெதி ராக அவசியமான நடவடிக்கைகளும் எடுக்கப் பட்டுள்ளன. இலங்கையின் விதைத் தொழிற் துறையைப் பாதுகாக்கும் முகமாக 15 பரிசீல ணைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் அவசியமான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன.

ஊடக வாரமாக பிரகடனப்படுத்தப்பட்ட ஒரு வார காலத்தினுள் 5 பத்திரிகை விளம்பரங்களும் (லங்காதீப-3, ரிவிர-1, தினகரன்-1) 4 தொலை க்காட்சி நிகழ்ச்சிகளும் (ரூபவாஹினி-3, ஸ்வர்ண வாஹினி-1) 2 தொலைக்காட்சி விளம்பரங்களும் (ரூபவாஹினி 30 செக்கன்கள 21 முறை, ஸ்வர்ணவாஹினி 30 வினாடிகள் 14 முறை) வானொலி விளம்பரங்கள் (சிற்றி F.M 30 வினாடிகள்/ 28 முறை, வர்த்தக சேவை 30 விநாடிகள் / 28 முறை, ரன் F.M 30 வினாடிகள்/ 40 தடவை, நெத் F.M 30 வினாடிகள்/ 65 தடவை, லக்ஹன்ட 30 வினாடிகள்/ 15 தடவை, சிரி F.M 30 வினாடிகள்/ 15 தடவை, சக்தி F.M 30 வினாடிகள்/ 14 தடவை, சிரச F.M 10 தடவை) விதைச் சட்டத்தை தெரியப்படுத்தவ தற்காக நடத்தப்பட்டன.

ஆராய்ச்சியும், அபிவிருத்தியும்

பின்வரும் துறைகளில் ஆராய்ச்சிக் கற்றல்கள் நடைபெற்றன.

- மரக்கறிப் பயிர் விதைகளை பொதியிடல் செய்யும் போது காலாவதியாகும் திகதியை கண்டுபிடித்தல்.
- பழப்பயிர்களை அத்தாட்சிப்படுத்தும் களப் பரிசோதனைகளின் போது நாளாந்தம் எதிர் கொள்ளும் பிரச்சினைகள்
- இறக்குமதி செய்யப்பட்ட விதைத் தொகையில் இருக்கக்கூடிய அபாயகரமான காரணிகளை கண்டறிதல்.
- வெவ்வேறு பொதியிடும் மூலப் பொருட்களி னூடாக கடத்தப்படுகின்ற ஈரலிப்பு வீதம் பற்றிய கற்கை.

பயிற்சி நிகழ்ச்சிகள்

தரமான விதைகள் மற்றும் நடுகைப் பொருட்களை உற்பத்தி செய்வது தொடர்பில் அறிவை மேம்படுத்து முகமாக அரச அலுவலர்கள் மற்றும் விதை பரிகரிப்பாளர் களுக்கான பயிற்சிகள் நடத்தப்பட்டன.

அட்டவணை 3.1.1.13 பயிற்றுவிக்கப்பட்ட பயிற்சியாளர்கள்.

பயிற்சி நெறி	பயிற்றுவிக்கப் பட்டோர்
விதை உற்பத்தி செய்யும் விவசாயிகள்/நாற்றுமேடை யாளர்கள்	60
அரச அலுவலர்கள்	544
மொத்தம்	**604**

விதை அத்தாட்சிப்படுத்தல் சேவையின் தகவல் தொகுதி

நாடு பூராவும் அமைந்துள்ள 22 வி.அ.சே. பிராந்திய நிலையங்கள், 4 விதைப் பரிசோதனை ஆய்வுகூடங்கள், 4 பிந்திய கட்டுப்பாட்டு களங்கள் என்பவற்றிலிருந்து தரவுகளைப் பெற்று வினைத்திறனாகவும் எளிதாகவும் தகவல்களை முகாமைத்துவம் செய்யும் நோக்குடன் விதை அத்தாட்சிப்படுத்தும் தரவுத்தளம் விருத்தி செய்யப்பட்டு தொடர்ந்தும் நடத்தப்பட்டு வருகிறது. அது மட்டுமன்றி தலைமை அலுவ லகம், பிராந்திய அலுவலகங்கள், ஆய்வு கூடம் மற்றும் பிந்திய கட்டுப்பாட்டு களங்களை சேர்ந்த சகல தர ஊழியர்களினதும் தனிப்பட்ட விபரக் கோவையைக் கொண்ட தரவு மையம் ஒன்றும் புதிதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

2012-ம் ஆண்டிற்கான திட்டங்கள்

- தேசிய விதை நெல் தேவையின் 31% வீதத்தினை அத்தாட்சிப்படுத்தப்பட்ட விதை நெல் வழங்குவதற்கான அதிகாரத்தை அளித்தல்.
- விதை மூலம் பரவும் நோய்க்காரணிகளைக் கண்டு பிடிப்பதற்கான புதிய விதை சுகாதார பரிசீலிப்பு அலகு ஒன்றினை ஸ்தாபித்தல்
- விதைப் பரிகரிப்பாளர்களால் எதிர்நோக்கப் படுகின்ற அறுவடைக்குப் பிந்திய நடவடிக்கைகளான விதைப் பொதியிடல், களஞ்சியப்படுத்தல் மற்றும் காலாவதியாகும் திகதியை தீர்மானித்தல் போன்ற நடவடிக்கைகளின் போது ஏற்படும் பிரச்சினைகளை ஆராய்ச்சி செய்வதற்கான அலகு ஒன்றினை ஸ்தாபித்தல்.
- களை விதைகளின் தொற்றுகையை கண்டு பிடித்தல், இப்புதிய தாவரங்களால் சூழலில் ஏற்படுத்தப்படக் கூடிய அபாயகரமான தன்மையின் அளவை மதிப்பீடு செய்தல், தீங்கானதும் ஆக்கிரமிப்புச் செய்யக் கூடிய வையான களைகளைப் பற்றிய கற்கை இறக்குமதி செய்யப்படுகின்ற விதைகளுடன் ஆக்கிரமிப்புக் களைகளும் உட்பிரவேசிப் பதை தடுத்தல் போன்ற நடவடிக்கைக ளுக்காக களை விஞ்ஞான அலகு ஒன்றினை ஸ்தாபித்தல்.
- விதை அத்தாட்சிப்படுத்தல் தொடர்பான எமது நிகழ்ச்சிகளை பொதுமக்களுக்கு எளிதான முறையிலும், வினைத்திறனான முறையிலும் அறிவித்தல்களை பரவச் செய்து விழிப்புணர்வை ஏற்படுத்து முகமாக விதை அத்தாட்சிப்படுத்தல் சேவையின் இணையத் தளத்தினை வடிவமைத்தல்.
- நாட்டினுள் உயர்ரக விதைகள் மற்றும் நடுகைப் பொருட்கள் கிடைக்கத்தக்கவாறு அரசாங்கத்திற்கும் தனியார் துறையின் விதைப் பரிகரிப்பாளர்களுக்குமிடையிலான விதை உற்பத்தி செயற்பாடுகளை சீர்படுத்தி குறைபாடுகள் ஏற்படா வண்ணம் பாதுகாத்துக் கொள்வதற்கான விதைச் சட்டத்தினை அமுல்படுத்தல்
- உயர்ரக விதைகள், மற்றும் நடுகைப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கு தேவை யான அறிவுறுத்தல்கள் தயாரிக்கப்பட்டு அனைத்து விதைப் பரிகரிப்பாளர்களுக்கும் கிடைக்கச் செய்தல்.
- ஒவ்வொரு போகத்தின் போதும் விதை உற்பத்தியாளர் பெயர்பட்டியல் தாவர நடுகைப் பொருட்கள் உற்பத்தியாளர் பெயர் பட்டியல் என்பனவற்றை தயாரித்து விநியோ கித்தல்
- விதைப் பரிகரிப்பாளர்களுக்கென பயிர்கள் சம்பந்தமான அறிவுறுத்தல்களை வெளியிடல்

- விதைச் சட்டத்தில் புதிதாக திருத்தப்பட்ட சட்டங்கள், நியமங்கள் போன்றவற்றை இறுதியாகத் தீர்மானித்து வெளியிடல்
- புதிதாக பரந்தனில் விதைப் பரிசோதனை ஆய்வுகூடமும் காரியாலயக் கட்டிடம் என்பனவும் குண்டசாலை, மாத்தறை, யாழ்ப்பா ணம், கரடியனாறு எனுமிடங்களில் விதை அத்தாட்சிப்படுத்தல் சேவையின் பிராந்திய அலுவலகக் கட்டிடமும், கரடியனாறு, பட அத்த எனுமிடங்களில் பிந்திய கட்டுப்பாட்டு பரிசோதனைக் களங்களையும் அமைத்தல்
- அனைத்து விதை அத்தாட்சிப்படுத்தல் சேவையின் அலகுகளையும் உபகரணங்கள், மற்றும் ஊழியர்கள் மூலம் வலுவடையச் செய்தல்.

உத்தியோகத்தர் பட்டியல்

பதவியணி	**எண்ணிக்கை**
பிரதிப் பணிப்பாளர்	01
ஆராய்ச்சி அலுவலர்	02
விவசாய அலுவலர்	09
விவசாயகண்காணிப்பு உத்தியோகத்தர்	04
நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்	03
விவசாயப் போதனாசிரியர்	102
ஆராய்ச்சி உதவியாளர்	01
ஆராய்ச்சி துணை உதவியாளர்	04
பொது முகாமைத்துவ உதவியாளர் சேவை	09
சாரதி	14
மின்சாரவியலாளர்	01
காவல்காரர்	16
சிற்றூழியர்	65
சீட்மென் (seedman)	01
சுத்திகரிப்பாளர்	01
மொத்தம்	**243**

3.1.2 தாவரப் பாதுகாப்புச் சேவை (PPS), கன்னொறுவை

விவசாயிகளின் விளைநிலங்களில் பயிர்களைத் தாக்குகின்ற பீடைகளைச் சூழலுக்குப் பொருத்த மான முறையிலும், பொருளாதாரத்திற்கு தாக்குப் பிடிக்கக் கூடிய வகையிலும், நடைமுறையில் சாத்தியமானதுமான கட்டுபாட்டு முறைகளைச் சீர்படுத்தி மேம்படுத்துகின்ற பொறுப்பு தாவர பாதுகாப்பு சேவையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இப்பரந்த நோக்கானது, ஒன்றிணைந்த பீடைக் கட்டுபாட்டு (IPM) முறைகளை அமுல்படுத்தி, கண்காணிப்புச் செய்து, மதிப்பீடு செய்தல் மூலமாகவும் தற்போது நடைமுறையிலுள்ள பீடைக்கட்டுப்பாட்டு முறைகளை மேம்படுத்து வதன் மூலமும், மண் மற்றும் விதைகளை புகையூட்டம் செய்தல், எமது பயிர் நிலங்க ளையும் நீர் நிலைகளையும், ஆக்கிரமிப்புச் செய்யக்கூடிய, பிறநாடுகளைச் சேர்ந்தவையும், வெறுக்கத் தக்கனவுமான களைகளைக் கட்டுப்ப டுத்தல் போன்ற முறைகளைக் கடைப்பிடிப்பதன் மூலமும் தாவரப் பாதுகாப்பு சேவையின் இலக்கா னது அடையப்படுகிறது.

இவை தவிர வீட்டில் காணப்படும் பீடைகள் மற்றும் அவற்றின் தாக்கங்களைக் கட்டுப் படுத்தக்கூடிய ஆலோசனைகளை வழங்குவதும் தாவரப் பாதுகாப்புச் சேவையினால் மேற் கொள்ளப்படுகிறது. இந் நடவடிக்கைகள் யாவும் நடைமுறைப்படுத்தப்படுகின்ற 1999ம் ஆண்டின் 35ஆவது இலக்க தாவரப் பாதுகாப்பு சட்டத்தினுள் உள்ளடக்கப்பட்டுள்ள நடவடிக்கை களாகும். இவற்றிற்கு மேலதிகமாக விவசாயிகளின் களங்களில் நவீன விவசாய இரசாயனங்களை கையாளும் முறைகளை ஆரம்பித்து வழிநடத்திக் காட்டுவதன் மூலம் 1981ம் ஆண்டின் பீடைப் பாதுகாப்பு சட்டத்தை அமுல் செய்வ திலும் பங்காற்றுகிறது.

பாதீடு

அட்டவணை 3.1.2.1 வருடாந்தப் பாதீடு 2011 (ரூ)

செலவு விடயம்	ஒதுக்கீடு	செலவு	செலவு%
மீண்டும் வரும் செலவுகள்	1,822,000	1,696,522	93
மூலதனம்	2,045,000	1,832,842	90
மாதிரி கிராமங்கள்	100,000	73,872	74
நெற் செய்கை அபிவிருத்தி (IPM)	140,000	97,863	70
மொத்தம்	**4,107,000**	**3,701,099**	**90**

முன்னேற்றம்

ஒன்றிணைந்த பீடைக்கட்டுப்பாட்டு முறையை தரமுயர்த்தல் (IPM)

இப்பகுதியின் கீழ் தாவரப் பாதுகாப்புச் சேவை நெல், மரக்கறிப்பயிர் மற்றும் இலைக்கறிப் பயிர்களில் ஒன்றிணைந்த பீடைக்கட்டுப்பாட்டு முறையை அமுல்படுத்துகின்றது.

நெல்லில் ஒன்றிணைந்த பீடை முகாமைத்துவம்

கண்டி, மொனராகலை, களுத்துறை ஆகிய மாவட்டங்களை சேர்ந்த 70 விவசாயத் திணைக்கள அலுவலர்களுக்கு போகங்களின் போது வழக்கமாக பயிற்சிகள் நடத்தப் படுகின்றன.

மரக்கறிப் பயிர்களில் ஒன்றிணைந்த பீடைக்கட்டுபாட்டு முறை

இலங்கையின் முக்கியமான மரக்கறிப் பயிர்க ளைத் தாக்கும் பீடைகளைக் கட்டுப்படுத்தப் பாவிக்கப்படும் விவசாய இரசாயனங்களின் அள வைக் குறைத்து சரியான உபாய மார்க்க ங்களை மேலும் தரம் உயர்த்துவதற்கான நிகழ் ச்சித் திட்டங்களை PPS அமுல்படுத்துகின்றது. இந்நிகழ்ச்சித் திட்டம் IPM இன் ஓர் அம்சமான, விவசாய இரசாயனங்களுக்குப் பதிலாகத் தாவர ங்களையும், உயிரியல் கட்டுப்பாட்டு முறைக ளையும் பாவிக்கும் முறையை மேலும் தரமுயர்த் துவதாகும். இப்பகுதியின் கீழ் 2011ம் ஆண்டில் பின்வரும் நடவடிக்கைகள் செய்து முடிக்கப் பட்டுள்ளன.

விவசாயத் திணைக்கள அலுவலர்களுக்கான மரக்கறி பயிர்களில் IPM பயிற்சிகள்

- திருகோணமலை மாவட்ட பயிற்சி நிலைய த்தில் மரக்கறிப்பயிர்களில் IPM தொடர்பான 3 நாள் பயிற்சி நடைபெற்றது. திருகோண மலை மாவட்டத்தை சேர்ந்த 44 விரிவாக்க அலுவலர்கள் இப்பயிற்சியைப் பெற்றுக் கொண்டனர்.
- மட்டக்களப்பு மாவட்டத்தில் தாவர பாதுகாப்பு சேவையினால் நடத்தப்பட்ட இதே பயிற்சியில் 39 அரச அலுவலர்கள் கலந்து கொண்டனர்.
- வடக்கு கிழக்கு மாகாணங்களைத் தவிர்ந்த ஏனைய அனைத்து மாகாணங்களையும் சேர்ந்த 54 விரிவாக்க அலுவலர்கள் கன்னொறுவையில் நடத்தப்பட்ட IPM பயிற்சியில் கலந்துக் கொண்டனர்.
- தென் மாகாணத்தை சேர்ந்த 52 விரிவாக்க அலுவலர்கள் அங்குணகொலபெலஸ்ஸவின் உள்ளகப் பயிற்சி நிலையத்தில் நடைபெற்ற பயிற்சியின் போது பயிற்றப்பட்டனர்.

விவசாயிகளுக்கான மரக்கறிப் பயிர்களில் IPM பயிற்சிகள்

- கொத்மலை பகுதியில் 50 விவசாயிகள் பயிற்றப்பட்டனர்
- தாவரப் பாதுகாப்புச் சேவையின் வழி காட்டலின் கீழ் நவகத்தேகம, வீரகெடிய, கிராந்துருகோட்டை ரன்கின்த மற்றும் தெஹிஅத்தக்கண்டியப் பகுதிகளை சேர்ந்த 450 கெர்கின் பயிர்ச்செய்கையில் ஈடுபட் டுள்ள விவசாயிகள் IPM பயிற்சிகளில் கலந்து கொண்டனர்.

இலைக்கறிப் பயிர்களில் IPM

இலைக்கறிப் பயிர்களில் IPM மேலும் விரிவாக ஆராயப்படுகின்றது. கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த கீரை பயிரிடுவோருக்கு விஷேடமாக நெமற்றோடு கட்டுப்பாடு தொடர்பான தொழில் நுட்ப உதவிகள் வழங்கப்படுகின்றன. இப்பகுதியின் கீழ் வல்லாரை, பொன்னாங்காணி போன்ற கீரைச் செய்கையில் நெமற்றோடு கட்டுப்பாடு, சிற்றுண்ணிக் (Mites) கட்டுப்பாடு, சரியான விகிதத்திலான இரசாயனப் பசளை மற்றும், உரப்பாவனை தொடர்பான பயிற்சி களும், விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டன.

மீடை நாசினிகளின் முன்னோடி மட்ட அளவினைத் தீர்மானிக்கும் பரிசோதனை

விவசாயிகளின் விளை நிலங்களில் சாமர்த்திய மான தொழிற்பாட்டினைக் காட்டக் கூடிய பிரயோகிக்கப்பட வேண்டிய குறிப்பிட்ட இரசாயன ங்களின் அளவினை தீர்மானிக்கும் பரிசோத னைகள் மேற்கொள்ளப்பட்டன.

இப்புதிய இரசாயன வகைகள் ஏற்கனவே சிபார்சு செய்யப்பட்டிருந்தவைகளையும் விட குறைந்த செறிவுகளில், சரியான இலக்கை அடையக் கூடிய அனுகூலம் வாய்ந்தவையாகும்.

நெற்பயிரில் களைகளைக் கட்டுப்படுத்தக் கூடிய விவசாய இரசாயனங்கள்

- Fenoxyprop – p – ethyl 169g / EC ஈரவலய நெல் வயல்களில் புற்களைக் கட்டுப்படுத்து வதற்காக ஏற்கனவே சிபாரிசு செய்யப்பட்டி ருந்த Fenoxyprop – p – ethyl (Rice Star) எனும் இரசாயனத்திற்கு பிரதியீடாக அறிமுக ப்படுத்தப்பட்டுள்ளது.
- Metami fop 10 EC- ஈரவலய வயல் நிலங்க ளில் ஆண்டுப் புற்களைகளை அழிப்பதற் கென சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.
- Mefenacet + Bensulfuron Methyl (Bencinate 53 WP) ஈரநில நெல் வயல்களில் புற்கள், செடிகள், அகன்ற இலைகளை ஒரே அடியில் அழிக்கக் கூடிய களைநாசினி யாகும்.
- Metsulfuron Methyl 20% WP) ஈரநில நெல் வயலில் செடிகள், அகன்ற இலைக்களை களைக் கட்டுப்படுத்தவென சிபாரிசு செய்ய ப்பட்டுள்ளது.
- Bispyribac Sodium 20% WP (Kensolo) நெற்செய்கையில் செடிகள், அகன்ற இலைக் களைகளைக் கட்டுப்படுத்துவதற்கென ஏற்க னவே சிபாரிசு செய்யப்பட்டிருந்த Bispyribac Sodium (Nominee) ற்குப் பதிலாக சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

சோளச் செய்கையில் களைக்கட்டுப்பாடு

- Topramazone – சோளச் செய்கையில் ஓராண்டு களைகளைக் கட்டுப்படுத்துவ தற்கென (Post emergent) களைகள் முளைத்த பின் பிரயோகிக்கப்பட வேண்டிய களை நாசினியாகும். வினைத்திறனான பிரயோகிக்கும் வீதம் (100 Ml / ha) (100 மி.லீ./ ஹெக்.) விதை விதைக்கப்பட்டு 15 நாட்களின் பின் விசிறப்படல் வேண்டும்.
- Diuron 80% WP - அன்னாசிச் செய்கையில் எல்லாவிதமான களைகளையும் கட்டுப்படுத்த வென ஏற்கனவே சிபாரிசு செய்யப்பட்டிருந்த Diuron 80% WP என்பதற்கான பிரதியீடாகும்.

உயிரியல் கட்டுப்பாட்டு நிகழ்ச்சி

தாவரப் பா.சே. (PPS) வேண்டுகோளுக்கிணங்க, தேவைப்படுகின்ற போது ஆக்கிரமிப்புச் செய்யக் கூடிய நீர்க் களைகளைக் கட்டுப்படுத்துவ தற்கான உயிரியல் கட்டுப்பாட்டு அலகுகளை தன்வசம் பரிபாலனம் செய்து வருகிறது.

சல்வீனியா (Salvinia molesta) வைக் கட்டுப் படுத்துவதற்கான உயிரியல் கட்டுப்பாட்டு முறை.

சல்வீனியாவைக் கட்டுப்படுத்துவதற்கான உயிரியல் கட்டுப்பாட்டு அலகான Cyrtobagus salviniae வடமத்திய மாகாணத்திலுள்ள 5 குளங்களுக்கும், குருநாகல் மாவட்டத்திலுள்ள 5 குளங்களுக்கும், பொலன்னறுவை மாவட்டத்தி லுள்ள 2 குளங்களுக்கும், மாத்தளை மாவட்டத்திலுள்ள 3 குளங்களுக்கும், கண்டி மாவட்டத்தில் 2 குளங்களுக்கும் இடப் பட்டுள்ளன. இந்நிகழ்ச்சியுடன் சேர்ந்து விவசாயிகளுக்கும் கள உத்தியோகத்தர்களு க்குமான (Fieldofficers) விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும், செய்து காண்பித்தல் (Demonstration) நிகழ்ச்சிகளும் நடாத்தப்பட்டன.

ஆற்றுவாழையின் (Water hyacinth) உயிரியல் கட்டுப்பாடு

Eichornia crassipes கட்டுப்படுத்தும் Neochetina bruchi மற்றும் Neochetina eichchorniae எனும் உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணி அநுராதபுரம், மாத்தளை மற்றும் குருநாகல் மாவட்டங்களை சேர்ந்த 6 குளங்களில் அறிமுகப்படுத்தப்பட்டன.

புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட/ ஆக்கிரமிப்பு பீடைகளின் கட்டுப்பாடு

கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த மாகம்மன, வெல்மில்ல போன்ற பகுதிகளில் பப்பாசிச் செய் கையை தாக்கும் வெண்மூட்டுப் பூச்சி (Mealy bug) யைக் கட்டுப்படுத்தும் முறை தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.

கொய்யாச் செய்கையில் அந்தினைக் (Guava moth) கட்டுப்படுத்தல்

தா.பா.சே. வடமத்திய மாகாணத்தைச் சேர்ந்த 25 கொய்யாப் பழச் செய்கையாளர்களுக்கு "கொய்யா அந்து" இனை இனம் காணலும், கட்டுப்படுத்தலும்'' தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடாத்தியது.

வாழையில் வெண்மூட்டுப் பூச்சியைக் கட்டுப்படுத்தல் (Dysmicocus neobrevipus)

- வடமத்திய மாகாணத்தின் மாகாணங்களு க்கிடையிலான பகுதியைச் சேர்ந்த 38 விரிவாக்க அலுவலர்கள் வாழையில் வெண்மூட்டுப் பூச்சியைக் கட்டுப்படுத்துவது தொடர்பான பயிற்சியில் கலந்து கொண்டனர்.
- வடமத்திய மாகாணத்தில் 65 விவசாயிகளு க்கு இப்பயிற்சி வழங்கப்பட்டது.
- அநுராதபுர மாவட்டத்தின் 45 அரசாங்க அலுவலர்களுக்கு இது சம்பந்தமான விழிப்புணர்வு நிகழ்ச்சி நடாத்தப்பட்டது.
- அநுராதபுர மாவட்டத்தைச் சேர்ந்த 19 உதவி விவசாயப் பணிப்பாளர்களுக்கும் இவ்விழிப்புணர்வு நிகழ்ச்சி நடாத்தப்பட்டது.

ட்ரெஜன் (Dragon Fruit) பழத்தில் ஏற்படும் நோய்கள்

- வடமத்திய மாகாணத்தைச் சேர்ந்த 23 dragon fruit செய்கையாளர்கள், நாற்று மேடை உரிமையாளர்கள் இப்பழச் செய்கையில் ஏற்படும் நோய்களைக் கண்டறிதலும், கட்டுப்படுத்தலும் தொடர்பான பயிற்சியை பெற்றுக் கொண்டனர்.
- அநுராதபுர மாவட்டத்தைச் சேர்ந்த 45 விவசாயத் திணைக்கள அலுவலர்கள் இப் பழமரத் தண்டில் ஏற்படும் புள்ளி நோயை கண்டறிதலும், கட்டுப்படுத்தலும் தொடர்பான பயிற்சியை பெற்றுக் கொண்டனர்.

வித்துக்களுக்கு புகையூட்டம் செய்தல்

PPS (தா.பா.சே.) முக்கிய நடவடிக்கைகளில் ஒன்றான வித்துக்களுக்குப் புகையூட்டம் செய்யும் முறை SPMDC மற்றும் தனியார் துறையினரின் வேண்டுகோளுக்கிணங்க செய்யப்பட்டது.

2011 ம் ஆண்டில் பின்வரும் தொகையான வித்துக்கள் அரசாங்கப் பண்ணைகளில் புகையூட்டம் செய்யப்பட்டன.

வித்துக்களின் வகை	அளவு (மெ.தொ.)
விதை நெல்	903
நுகர்வுக்கான நெல்	408
ஏனைய வயற்பயிர் விதைகள் (சோளம் / கௌபீ)	07
மரக்கறி விதைகள்	0.30

வீட்டுப் பீடைகளின் கட்டுப்பாடு

பெரும்பாலான நெற்செய்கையாளர்கள் தமது வயல்களிலே கொறித்துண்ணும் பிராணிகளைக் கட்டுப்படுத்துவதில் பெரும் பிரச்சினைகளை எதிர் நோக்கி வருகின்றனர். தா.பா.சே. இவ்வாண்டில் 6 பெரிய அளவிலான பண்ணைகளில் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க எலித்தொல்லையைக் கட்டுப்படுத்துவதில் வெற்றி கரமான பங்களிப்பை ஆற்றியுள்ளது. கொழும்பு, களுத்துறை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 60 நெல் விவசாயிகளும், போம்புவெல ஆராய்ச்சி

நிலையத்தைச் சேர்ந்த 30 ஆராய்ச்சி அலுவல ர்களும் பயிற்றுவிக்கப்பட்டனர்.

வேறு நடவடிக்கைகள்

- வடமத்திய மாகாணத்தில் கொய்யாப் பழச் செய்கையில் வேர் முடிச்சு நெமற்றோடு களின் தாக்கம் கண்டறியப்பட்டு கட்டுப்படு த்தப்பட்டது. அத்துடன் அப்பகுதியைச் சேர்ந்த 55 தொழில்நுட்ப அலுவலர்களு க்கும் இப்பயிற்சி வழங்கப்பட்டது.
- 85 கொய்யாப் பழச் செய்கையாளர்கள், மற்றும் நாற்றுமேடை உரிமையாளர்களும் இது சம்பந்தமான பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டனர்.

தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

- கொய்யாப்பழச் செய்கையில் வேர்முடிச்சு நெமற்றோட்டுக்களின் தாக்கம் ''கொவி பிமட அருணலு'' - இலங்கை ரூபவாஹினி.
- ''மரக்கறிப் பயிர்ச்செய்கையில் IPM – வீர கெடியவில்'' - இலங்கை ரூபவாஹினியில் ஒளிபரப்பப்பட்டது.
- ''Dragon பழத்தில் ஏற்படும் நோய்களை கட்டுப்படுத்தல்'' எனும் நிகழ்ச்சி.
- ''ITN இல் நச்சுத் தன்மைகள் அற்ற விவசாயம்'' எனும் நிகழ்ச்சி ஒலிபரப்ப ப்பட்டது.

2012 ம் ஆண்டின் திட்டங்கள்

- தாவரப் பாதுகாப்பு சட்டத்தை அமுல்படு த்துதல்
- நெற்செய்கையில் IPM இனை தரமுயர்த்தல்
- மரக்கறிச்செய்கையில் IPM இனை தரமுயர்த்தல்
- இலைக்கறிச் செய்கையில் IPM இனை தரமுயர்த்தல்
- மாவட்ட ரீதியில் கண்டறியப்படுகின்ற நெல் மற்றும் மரக்கறிப் பயிர்களின் பீடைத் தாக்கம், நெல் வயல்களில் எலியைக் கட்டுப்படுத்தல் போன்றவை சம்பந்தமான தரவு வங்கியை அபிவிருத்தி செய்தல்.
- ஆக்கிரமிப்பு நீர்க்களைகளை உயிரியல் முறையில் கட்டுப்படுத்தல்.
- விவசாய நிலங்களை ஆக்கிரமித்துள்ள வெளிநாட்டுக் களைகளை கட்டுப்படுத்தல்.
- களை கொல்லிகளின் முன்னோடி மட்ட அளவு அறிதல் சம்பந்தமான பரிசோத னைகள்.
- வித்துக்களின் புகையூட்டம்.
- மாதிரிக் கிராமங்களை ஸ்தாபித்தல்.
- அரசாங்க கட்டிடங்களில் கறையானைக் கட்டுப்படுத்தல் போன்ற விஷேட நடவடிக்கைள்.
- கன்னொறுவை விவசாயப் பூங்காவில் ஒரு நிரந்தர கண்காட்சிக் கூடத்தை அமைத்தல்.

உத்தியோகத்தர் பட்டியல்

பதவியணி	எண்ணிக்கை
பிரதிப் பணிப்பாளர்	01
விவசாய அலுவலர்	03
ஆராய்ச்சி அலுவலர்	01
நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்	01
விவசாயப் போதனாசிரியர்	08
பொது முகாமைத்துவ உதவியாளர் சேவை	04
சாரதி	04
களஞ்சி வேலையாட்கள்	01
பாரஊர்தி சுத்தப்படுத்துனர்	01
வேலையாட்கள்	05
மொத்தம்	**29**

3.1.3 தேசிய தாவரத் தடுப்புக்காப்பு சேவை (NPQS), கட்டுநாயக்க

நாட்டின் விவசாய மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏனைய கைத்தொழிற் துறைகளை அபிவிருத்தி செய்யுமுகமாக ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்யப்படுகின்ற தாவரங்கள் மற்றும் தாவரப் பாகங்கள் பீடைகள் அற்றவையாயிருப்பதை உறுதி செய்யும் பொறுப்பு தாவரத் தடுப்புக்காப்புச் சேவைக்கு உரித்தானதாகும். இதனை அடையுமுகமாக தடுப்புக்காப்புச் சேவையின் நடவடிக்கைகள் ஆராய்ச்சி, மற்றும் சேவைகள் தழுவியதாக உள்ளன.

தாவரத் தடுப்புக் காப்புச் சேவையானது, தேசிய ஆராய்ச்சி நிறுவனம், பல்கலைக் கழகங்கள், விவசாயத் திணைக்களத்தின் ஏனைய நிறுவனங் கள் மற்றும் மத்திய நிலையங்களுடன் சேர்ந்து தாவரத் சுகாதாரத்தை அத்தாட்சிப்படுத்தல், ஏற்றுமதி, இறக்குமதி செய்யப்படுகின்ற தாவரங்கள் மற்றும் தாவரப் பாகங்களின் பரிசீலனை பரிகரணம் தடுத்து வைக்கப்பட்டுள்ள மாதிரிகளை பரிசீலனை செய்தல், தாவரத் தடுப்புக்காப்புச் சம்பந்தமான சகலவித அறிவூட்டல் பயிற்சிகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை ஆர்வம் உள்ள மக்களுக்குப் பரவச் செய்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. 2011ம் ஆண்டில் பொருளாதார தொழில்நுட்ப, சேவைகள் மூலமாக அடையப் பட்ட இலக்குகள் காண்பிக்கப்பட்டுள்ளன.

பாதீடு

அட்டவணை 3.1.3.1 வருடாந்தப் பாதீடு 2011 (ரூபா)

செலவு விடயம்	ஒதுக்கீடு	செலவு	செலவு %
மூலதனம்	6,811,000	3,410,038	50
மீண்டு வரும் செலவுகள்	6,208,000	5,431,464	87
NARP திட்டங்கள்	3,000,000	650,069	22
மொத்தம்	**16,019,000**	**9,491,571**	**59**

முன்னேற்றம்

தாவரத் தடுப்புக்காப்புச் செயற்பாடுகள்

அட்டவணை 3.1.1.2 இல் தாவரத் தடுப்புக்காப்புச் செயற்பாட்டுப் பிரிவினரால் 2011ம் ஆண்டில் மேற்கொள்ளபட்ட நடவடிக்கைகள் நிரற்படுத்தப்பட்டுள்ளன.

நடவடிக்கை	வளர்ச்சி
குறுக்கீட்டுப் பதிவுகள்	301
அனுப்பப்பட்ட குறுக்கீட்டு (interception) அறிக்கைகள்	297
பதிவு செய்யப்பட்ட பரிசீலனைகள்	689
உட்புகுமிடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட அறிக்கைகள்	677
பரிசீலனை செய்யப்பட்ட தும்பினாலான பொருட்கள்	159
பரிசீலனை செய்யப்பட்ட தும்புப் பொருட்களுக்கான அறிக்கைகள்	144
பதிவு செய்யப்பட்ட பரிசிலனைக்காக கையளிக்கப்பட்ட மாதிரிகள்	27
வழங்கப்பட்ட தாவரச் சுகாதாரச் சான்றிதழ்கள்	03
அழிக்கப்பட்ட கேள்விக்குறியான ஒப்படைப்புகள் (Consignments)	1102

இந் நடவடிக்கைகள் தவிர்ந்த தாவரத் தடுப்புக் காப்புச் செயற்பாடு சம்பந்தமான தாவரத் தடுப்பு க்காப்பு நடவடிக்கைகள் மற்றும் வழிமுறைகள் பற்றி 14 உணர்வாற்றல் பயிற்சிகள் இப்பிரிவினால் நடாத்தப்பட்டுள்ளன.

பூச்சீயியல்

ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்வதற்கென ஒப்படைக்கப்படுபவைகளில் நோயாக்கிகளுக்கான பரிசீலனை.

ஏற்றுமதி

- தாவர ஒட்டுண்ணி நெமற்றோடு (Plant Parasitic nematodes) பரிசீலனைக்காக 10593 அலங்காரத் தாவர மாதிரிகள் அலங்காரத் தாவரங்களை ஏற்றுமதி செய்யும் 15 நாற்று மேடைகளிலிருந்து பெறப்பட்டன. அவற்றுள் 403 மாதிரிகளில் ஒட்டுண்ணி நெமற்றோடுகள் கண்டு பிடிக்கப்பட்டன.
- 5026 அலங்காரத் தாவரங்கள் மற்றும் ஸ்ரோபெரி மாதிரிகள் பூச்சிப்பீடை, சிற்றுண்ணிப் (Mites) பீடைகளுக்காகப் பரிசோதிக்கப்பட்டன. அவற்றுள் தொற்றுகள் எதுவும் கண்டுப் பிடிக்கப்படவில்லை.
- 79 ஏற்றுமதி செய்யப்படுகின்ற தும்புப் பொருட்களின் மாதிரிகள் 13 தும்புக் கைத்தொழிற்சாலையிலிருந்து பெறப்பட்டு பூச்சிப் பீடைகள், சிற்றுண்ணி மண் உயிரிகள் மற்றும் தாவர ஒட்டுண்ணி நெமற்றோடுகளுக்காகப் பரீட்சிக்கப்பட்டன. அவற்றுள் எவையும் தொற்றுதலுக்கு உட்பட்டிருக்க வில்லை.
- பீடைக் கண்காணிப்பு நிகழ்ச்சியை மேலும் வசதியாக்கு முகமாக 157 வேறு விஷேட மாதிரிகள் அலங்காரத் தாவர ஏற்றுமதியா

ளர்களால் சமர்ப்பிக்கப்பட்டு, தாவர ஒட்டுண்ணி நெமற்றோடு மற்றும் பூச்சிப்

இறக்குமதி

- துறைமுக்கத்தில் இறக்குமதி செய்யப்பட்ட 76 உருளைக்கிழங்கு மாதிரிகள் பரிசீலிக்க ப்பட்டன. இம்மாதிரிகள் பூச்சிப்பீடைகள் மற்றும் தாவர ஒட்டுண்ணி நெமற்றோடுக ளுக்காகப் பரீட்சிக்கப்பட்டன. ஆனால் தொற்றுக்கள் எவையும் கண்டு பிடிக்கப்பட வில்லை.
- 359 இறக்குமதி செய்யப்பட்ட தாவரப் பாகங்களான, கலப்பினச் சோளம், நிலக் கடலை, மரமுந்திரிகை, Sphagnum peat moss, வெங்காயக் குமிழ்கள், நொதிக்கப் பட்ட கொக்கோ விதைகள், பூச்சிப் பீடைகள் சிற்றுண்ணிகள் தாவர ஒட்டுண்ணி நெமற்றோடுகளுக்காகப் பரீட்சிக்கப்பட்டன. அவற்றுள் 07 மாதிரிகளில் சாதாரண களஞ்சியப் பீடைகள் இருப்பது கண்டு பிடிக் கப்பட்டது. இதற்கு மேலதிகமாக இந்தோனே ஸியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவை Aracerus fasciculatus (Betel nut weevil) எனும் வெற்றிலை வண்டினால் பீடிக்கப்பட்டி ருந்தமை கண்டுப் பிடிக்கப்பட்டது.

பயிற்சிகள்

பூச்சியியல் பிரிவின் கீழ் பெரும்பாலான பல்கலைக்கழக மாணவர்கள் தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களும் பயிற்றுவிக்கப்பட்டனர்.

நோயியல்

ஏற்றுமதி, இறக்குமதி செய்யப்படுபவைகளில் நோயாக்கிகளுக்கான பரிசோதனை

ஏற்றுமதி

அலங்காரத் தாவரங்கள் மற்றும் தும்பு

2098 மாதிரிகள் பரீட்சிக்கப்பட்டதுடன் பின்வரும் ஒட்டுண்ணிகள் கண்டுபிடிக்கப்பட்டன. Mucor sp. Aspergillus sp. Fusarium sp. Thelaviopsis paradoxoa Macrophomina sp. Rhizopus sp. Xanthomonas sp. இவற்றுள் Thelaviopsis paradoxa தாவர தடுப்புக் காப்பின் முக்கிய பீடையாகக் கருதப்பட்டது.

பீடைகளுக்காகப் பரிசோதிக்கப்பட்டன.

இழைய வளர்ப்புத் தாவரங்கள்

69 பரிசீலனைகளில் 1,350,547 தாவரங்கள் பரீட்சிக்கப்பட்டன. தொற்றுதலுக்குள்ளாக்கப் பட்டிருந்த கொள்கலன்கள் பரிசீலனையின் போது நிராகரிக்கப்பட்டதுடன், தரமான உற்பத்திக்கு அவசியமான ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.

இறக்குமதி

- **விதை உருளைக் கிழங்கு**

77 விதை உருளைக்கிழங்கு மாதிரிகள் பரீட்சிக்கப்பட்டதுடன் பின்வரும் ஒட்டுண்ணிகள் கண்டுபிடிக்கப்பட்டன. Silver scurf, common scab, softrot, Black scurf, Netted scab, மற்றும் Erwinia Carrotovora தாவரத் தடுப்பு ஒட்டுண்ணிகள் எதுவும் கண்டு பிடிக்கப்படவில்லை.

வித்துக்களும் ஏனைய தாவரப் பாகங்களும்

- 379 மாதிரிகள் பரீட்சிக்கப்பட்டதுடன் அவற்றில் எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை.

கையளிக்கப்பட்ட மாதிரிகளின் பரீசிலனை

12 மாதிரிகள் பரீட்சிக்கப்பட்டு ஆலோசனை களும், கண்டு பிடிப்புகளும் பொறுப்பாளர்களிடம் கையளிக்கப்பட்டன.

பயிற்சிகள்

3 பயிற்சிகளும் 5 பயிற்சிப் பட்டறைகளும் நடாத்தப்பட்டன. டிப்ளோமா கற்கைநெறி மற்றும் உயர் தரங்களை சேர்ந்த 2 தொகுதி மாணவ ர்கள் மேற்பார்வைச் செய்யப்பட்டனர்.

ஆராய்ச்சி நிகழ்ச்சிகள்

T. paradoxa வைக் கட்டுப்படுத்தும் வெப்ப நிலையைக் கண்டறியும் ஆராய்ச்சி மேற்

கொள்ளப்பட்டது. முடிவு உகந்த வெப்பநிலை 70^0C நேரம் 5 நிமிடங்கள்

களை விஞ்ஞானம்

ஏற்றுமதி இறக்குமதி செய்யப்படுபவைகளில் களைகளின் தொற்றுகை

ஏற்றுமதிகள்

கொக்கோ விதைகளின் 155 மாதிரிகள் பரீட்சிக்கப்பட்டதுடன் 41இல் உயிருள்ள களை வித்துக்கள் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டன.

இறக்குமதிகள்

37 மாதிரிகள் பரீட்சிக்கப்பட்டதுடன் அவற்றுள் 5இல் தொற்றுதல் கண்டுபிடிக்கப்பட்டது. வெங்காய விதை மாதிரியில் Parthenium hysterophorus எனும் களை விதை இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

பயிற்சிகள்

களை விஞ்ஞானப் பரிவில் பல்கலைக்கழகம், தொழில்நுட்பக் கல்லூரிகள், மற்றும் பாடசாலை மாணவர்கள் அனேகர் பயிற்றுவிக்கபட்டனர்.

ஆராய்ச்சி நிழ்ச்சிகள்

சாமர்த்தியமான முறையில் வித்துக்களின் உயிர் தன்மையை அழிக்கும் காரணிகளை (வெப்ப நிலை / நேரம்) தரமுயர்த்தும் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

உசாத்துணை சேகரிப்புகளின் பராமரிப்பு

- 44 புதிய களை இனங்கள் சேகரிக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்டு, நிலைப்படுத்தப்பட்டுள்ளன.
- 14 வகையான புதிய களை இன வித்துக்கள் சேகரிக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டுள்ளன.

பரிகாரத் தொழில்நுட்பம்

வர்த்தகப் புகையூட்டல்

- NPQS இல் மீதைல் புரோமைட்டினைப் பாவித்து தாவரங்கள் மற்றும் தாவர பாகங்களை ஏற்றுமதி செய்யும் பல்வேறு கம்பனிகளின் 214 மாதிரிகள் புகையூட்டம் செய்யப்பட்டன.
- பல்வேறு வகை மலர்களின் 13 மாதிரிகள், 2 ஏலக்காய் மாதிரிகள், 2 வித்துக்கள் மற்றும் உலர்த்தப்பட்ட மூலிகைகளின் மாதிரிகள், ஒரு கிறிஸ்மஸ் மரம் போன்றவை விமான நிலையத்தில் அமைந்துள்ள தாவர தடுப்புக் காப்பு அலகில் தடுக்கப்பட்டு இறக்குமதியாளரிடம் கையளிக்கப்பட முன்னர் புகையூட்டம் செய்யப்பட்டன.

அட்டவணை 3.1.1.3 2011 ம் ஆண்டில் கட்டுநாயக்க NPQS இல் செய்யப்பட்ட வர்த்தகப் புகையூட்டல் பற்றிய விபரங்கள்

பொருள் வகை	புகையூட்டல்களின் எண்ணிக்கை
தும்பு மற்றும் தும்பினாலான பொருட்கள்	100
மரம், மரத்திலான பொருட்கள்	29
ஜேர்பரா	07
மலர்கள்	21
உலர்த்தப்பட்ட மூலிகைகள்	28
வித்துக்கள்	02
வாசனைத் திரவியங்கள்	10
வேறு பொருட்கள்	17
மொத்தம்	**214**

தடுப்புக் காப்புச் சேவை பரிகரிப்புக்களைப் மேற்பார்வை செய்தல்

அத்தாட்சிப்படுத்தல் நோக்கம் காரணமாக ஏற்றுமதியாளர்களின் வேண்டுகோளின் பேரில் பரிகாரத் தொழில்நுட்ப பிரிவைச் சேர்ந்த அலுவலர்கள் மரத்தினாலான பொதியிடும் காரணி மீது தனியார் துறையினரால் மேற் கொள்ளப்பட்ட 37 புகையூட்டல் நிகழ்ச்சிகளை மேற்பரிசோதனை செய்தனர்.

2012ம் ஆண்டிற்கான திட்டங்கள்

ஏற்றுமதித் தரமுடைய தாவரங்கள் மற்றும் தாவரப் பாகங்களின் தரமேம்பாடு

- ஏற்றுமதியாளர்களின் நாற்றுமேடை பரிசீலனை.
- தாவர மற்றும் தாவரப் பாகங்களை ஏற்றுமதி செய்யும் கைத்தொழிற்சாலை களை பரிசீலனை செய்தல்.
- விவசாயத்துறை சார்ந்த ஏனைய ஏற்றுமதிகளின் பரிசீலனை (தனிப்பட்ட, இழையவளர்ப்புத் தாவரப் பரீசிலனை)
- விவசாயத் துறை சார்ந்த ஏனைய ஏற்றுமதிகளின் பரிசீலனை (தனிப்பட்ட இழைய வளர்ப்பு தாவரப் பரிசீலனை)
- மாதிரிகள் பெறல்.
- ஆவணங்கள் பரீட்சித்தல்.
- தாவர நோயாக்கிகளின் ஆய்வு கூடப் பரிசோதனை.
- தாவரப் பூச்சியினங்களுக்கான ஆய்வு கூடப் பரிசோதனை
- தாவர நெமற்றோடுகளுக்கான ஆய்வு கூடப் பரிசோதனை
- தாவரக் களைகளுக்கான ஆய்வுகூடப் பரிசோதனை.
- இறுதி பரிசீலனை அறிக்கையை சமர்பித்தல்

இறக்குமதி செய்யப்படுகின்ற விதை உருளைக்கிழங்குகளின் தரத்தை ஆராய்ந்து கண்டுபிடித்தல்

- விதை உருளைக் கிழங்குகளில் புகுமிடப் பரிசோதனை
- மாதிரிகள் பெறல்.
- ஆவணங்களைப் பரிசீலித்தல்
- தாவர நோயாக்கிகளின் ஆய்வு கூடப் பரிசோதனை
- தாவரப் பூச்சியினங்களுக்கான ஆய்வு கூடப் பரிசோதனை
- தாவர நெமற்றோடுகளுக்கான ஆய்வு கூடப் பரிசோதனை
- இறுதிப் பரிசீலனை அறிக்கையை சமர்ப்பித்தல்

இறக்குமதி செய்யப்படுகின்ற தாவர மற்றும் தாவரப் பொருட்களின் தரத்தை ஆராய்ந்து கண்டு பிடித்தல்

- புகுமிடப் பரிசோதனை.
- மாதிரிகள் பெறல்.
- ஆவணங்களைப் பரீட்சித்தல்
- NPQS புகுமிடங்களினால் மாதிரிகளுக்கான சீட்டினை (receipt) வழங்கள்.
- தாவர நோயாக்கிகளுக்கான ஆய்வு கூடப் பரிசோதனை
- தாவர பூச்சியினங்களுக்கான ஆய்வு கூடப் பரிசோதனை
- நெமற்றோடுகளுக்கான ஆய்வு கூடப் பரிசோதனை
- களைகளுக்கான ஆய்வு கூடப் பரிசோதனை
- பரிசீலிப்புக்கான அறிக்கைகளை வழங்கல்
- பரிசீலிப்புக்கான இறுதி அறிக்கைகளை வழங்கல்
- விடுவித்தல்.
- பரிகார சிபாரிசுகள்
- மீள் ஏற்றுமதி அல்லது அழித்தல்

இறக்குமதி செய்யப்படுகின்ற வித்துக்கள், பழங்கள் மற்றும் மரக்கறிகளின் தரத்தை ஆராய்ந்து கண்டறிதல்.

- புகுமிடப் பரிசோதனைகள்
- மாதிரிகள் பெறல்
- ஆவணங்களைப் பரீட்சித்தல்
- NPQS ற்கு புகுமிடங்களினால் மாதிரிக்கான பற்றுச்சீட்டினை வழங்கல்.
- தாவர நோயாக்கிகளுக்கான ஆய்வு கூடப் பரிசோதனை
- தாவரப் பூச்சியினங்களுக்கான ஆய்வு கூடப் பரிசோதனை
- நெமற்றோடுகளுக்கான ஆய்வு கூடப் பரிசோதனை
- களைகளுக்கான ஆய்வு கூடப் பரிசோதனை
- பரிசீலிக்கப்பட்டவைகளின் ஆய்வு கூட அறிக்கையை கையளித்தல்
- ஆய்வு கூட இறுதிப் பரிசோதனை அறிக் கையை கையளித்தல்
- விடுவித்தல்
- பரிகாரச் சிபாரிசு மீள் ஏற்றுமதி அழித்தல்

தாவர சுகாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்யாத இறக்குமதிகளைத் தடுத்தல்

- ஆவணங்களைப் பரீட்சித்தல்
- மாதிரிகள் பெறல்
- தடுக்கப்பட்ட தாவரங்களில் நோயாக்கிகளு க்கான பரிசீலனை.
- தடுக்கப்பட்ட தாவரங்களில் பூச்சிப் பீடைகளுக்கான பரிசீலனை.
- தாவர ஒட்டுண்ணி நெமற்றோடுகளுக்கான பரிசீலனை.
- களைகளுக்கான பரிசோதனை
- பரிசீலிக்கப்பட்டவைகளின் இறுதி ஆய்வு கூட அறிக்கையை கையளித்தல்
- விடுவித்தல்.
- பரிகாரச் சிபாரிசுகள்
- மீள் ஏற்றுமதி அல்லது அழித்தல்

உட்பிரவேசித்ததன் பின்னரான தடுப்புக்காப்பு

- களப் பரிசோதனை
- தாவரங்களை விவசாயத் திணைக்கள வளாகத்தினுள் வைத்திருத்தல்
- அறிக்கைகளும் விதந்துரைத்தல்களும்
- இறுதி கட்ட அறிக்கையை கையளித்தல்

ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்யப்படுகின்ற தாவரங்கள் மற்றும் தாவரப் பாகங்களில் காணப்படுகின்ற பீடைகளை அழிக்கும் சிகிச்சை முறைகள்.

- NPQS இல் புகையூட்டம் செய்தல்.
- NPQS இற்கு வெளியில் நடாத்தப்படுகின்ற புகையூட்டல்களை மேற்பரிசீலனை செய்தல்.
- புகையூட்டல் அறிக்கையினை சமர்ப்பித்தல்

உசாதுணை சேகரிப்புகளின் பராமரிப்பு

- களை மற்றும் களை வித்து இனங்கள்
- பூச்சிகள்
- நோய்வாய்ப்பட்ட மாதிரிகள்
- உயிருள்ள நீர்த் தாவரங்கள்.

பயிற்சிகளும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும்

- பயிற்சிகள்
- டிப்ளோமா மற்றும் உயர்தர மாணவர்களை மேற்பார்வை செய்தல்.
- விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்
- பயிற்சிப் பட்டறைகளை நடாத்துதல்.
- கருத்தரங்குகள்.

தடுப்புக் காப்பு தொடர்பான ஆராய்ச்சிகள்

- பீடை ஆய்வு
- பீடை அச்சுறுத்தல்களை ஆய்வு செய்தல்
- களைக் கட்டுப்பாட்டு ஆராய்ச்சி
- நோயியல் ஆராய்ச்சி
- பூச்சியியல் ஆராய்ச்சி
- தடுப்புக்காப்புப் பரிகாரங்கள் தொடர்பான ஆராய்ச்சி

தாவர நூற்றுமேடைகளின் பதிவுகள்

- தூர நாடுகளுக்கு தாவரங்களை ஏற்றுமதி செய்தல்.
- களப் பரிசோதனை
- கணக்காய்வு.
- அறிக்கைகளை சமர்ப்பித்தல்.

வழங்கப்படும் பரிகாரங்களின் வசதியை மதிப்பீடுதல்

- பகுதிகளை மேற்பரிசோதனை செய்தல்.
- கணக்காய்வு
- தாவரச் சுகாதார சான்றிதழ்களை வழங்கல்.

உத்தியோகத்தர் பட்டியல்

பதவியணி	எண்ணிக்கை
பிரதிப் பணிப்பாளர்	01
ஆராய்ச்சி அலுவலர்	08
விவசாய அலுவலர்	04
நிர்வாக அலுவலர்	01
விவசாய கண்காணிப்பு உத்தியோகத்தர்	08
நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்	06
ஆராய்ச்சி உதவியாளர்	05
விவசாயப் போதனாசிரியர்	12
பொது முகாமைத்துவ உதவியாளர் சேவை	09
சாரதிகள்	04
மின்னியலாளர்	01
விஷேட வேலையாள்	01
வேலையாட்கள்	05
ஒப்பந்த வேலையாட்கள்	04
காவற்காரர்	02
KKS (அலுவலக உதவியாளர்)	03
மொத்தம்	**67**

3.1.4 பீடைநாசினிகள் பதிவாளர் அலுவலகம் (ROP), பேராதனை

பீடைநாசினிப் பதிவாளர் அலுவலகத்தின் அடிப்படை நோக்கமானது, சட்ட ரீதியான உடன்படிக்கையொன்றாக காணப்படுகின்ற 1980ம் ஆண்டின் 33ம் இலக்கப் பீடைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தை நிறைவேற்று அதிகாரம் கொண்டதாக அமுல்படுத்துவதாகும். பீடைநாசினிப் பதிவு என்பது பீடை நாசினிகளின் வாழ்க்கைச் சக்கரத்தில் நாட்டிற்கு இறக்குமதி செய்யப்ப ட்டது முதல் சந்தைப்படுத்தல் வரையிலான காலப்பகுதியில் பயிர்களைப் பரிகாரம் செய்வத ற்காகப் பாவிக்கப்படுகின்ற பீடை நாசினிகளை முகாமைத்துவம் செய்வது முக்கியமானதாக கருத ப்படுகின்றது. இவ்வருடத்தினுள் 69 புதிய பதிவுகளும் 182 மீள் பதிவுகளும் செய்து முடிக்கப்பட்டதுடன் அவை சர்வதேச வழிகாட்ட ல்களையும் பரீட்சார்த்த ஒப்பந்தங்களை உறுதிப் படுத்துவதுடன் பாதுகாப்பு, வினைத்திறன் சூழலு டனான தாக்கம் என்பவற்றுடன் ஏற்றுக்கொள்ளப் படக் கூடியனவாகவும் இருந்தன. பதிவுகள், மீள் பதிவுகள் என்பவற்றின் மூலமாக 3.8 மில்லியன் ரூபாய் இறைவரியாகப் பெறப்பட்டன. நாட்டினுள் கொண்டு வரப்படும் பீடைநாசினிப் பொருட்களின் குறிப்பிட்ட சில தரங்களை உறுதி செய்யும் ஒப்பந்தங்களின் அடிப்படையிலேயே இறக்குமதி க்கான அனுமதிக் கட்டளைகள் விநியோகம் செய்யப்படுகின்றன. மேற்கூறப்பட்ட காலப்பகுதி யினுள் 376 வகையானவை இறக்குமதி செய்ய ப்பட்டதுடன் அவற்றுள் 1534 சேர்க்கை மாதிரிகள் சந்தைப்படுத்தப்படு முன் பகுத்தாய்வு செய்யப்ப ட்டன. பீடைநாசினிகளின் சட்ட திட்டங்கள் தொட ர்பான அறிவினை வழங்கும் எமது சாமர்த்தி யமான வெளிப்புற நடவடிக்கைகளின் கீழ் 32 விற்பனையாளர்களுக்கான பயிற்சிகளும், 07 அலுவலர்களுக்கான பயிற்சிகளும் நடாத்த ப்பட்டன. 354 பீடைநாசினி தொடர்பான சுட்டிகள் அனுமதிக்கப்பட்டதுடன் 193 விளம்பரங்களும் களத்திலே சாமர்த்தியமான முறையில் அறிவுறு த்தல்களை பரிமாற்றம் செய்யவும், முகாமைத் துவம் செய்யவும் பாவிக்கப்பட்டன.

பாதீடு

அட்டவணை 3.1.4.1 வருடாந்தப் பாதீடு – 2011 (ரூபா)

செலவு விடயம்	ஒதுக்கீடு	செலவு	வருமானம்	செலவு%
மூலதனம்	3,830,000	3,368,490	-	88
மீண்டுவரும் செலவு	3,303,000	2,760,579	-	54
பதிவு, மீளப்பதிவு கட்டணங்கள்			3,121,150	-
வினியோகஸ்த்தர் சான்றிதழ் கட்டணம்			7,408,500	-
மொத்தம்	**7,133,000**	**6,129,029**	**3,862,000**	**88**

முன்னேற்றம்

பீடைநாசினிகளைப் பதிவு செய்தல்

இவ்வாண்டினுள் இதன்மூலம் பெறப்பட்ட இறைவரி மொத்தம் 3,121,150 ரூபாய்களாகும். பதிவினை மேலும் செவ்வையாக்கு முகமாக தீர்மானங்களை மேற்கொள்வதில் விரிவான பங்க ளிப்பினைப் பெற்றுக் கொள்ளல் பீடைநாசினி தொடர்பான விவகாரங்களுடன் நேரடியாகவோ அன்றேல் மறைமுகமாகவோ தொடர்புபட்ட அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களிலிருந்து தேர்ச்சி பெற்றோரின் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் பீடைநாசினிப் பகுதியின் உப குழுக்கள் (உதாரணம்: விவசாய இரசாயன உபகுழு, உள்ளூர் மற்றும் பொதுசன சுகாதாரம் சம்பந்தமான உபகுழு, கைத்தொழில் தொடர்பான உபகுழு) PeTAC (பீடைநாசினி தொழில்நுட்ப ஆலோசனைக்குழு) எனும் பெயரில் உருவாக்கம் பெற்றன.

பீடைநாசினிகளின் மீள் பதிவுகள்

ஒரு பொருளின் பதிவானது 3 வருடங்களுக்கே செல்லுப்படியாகும். அதன் பின் அப்பதிவானது புதிய தராதரங்கள், கண்டு பிடிப்புகள் மற்றும் பாதுகாப்பான பிரயோகிக்கும் முறைகள் ஆகிய காரணங்களுக்காக மீண்டும் மதிப்பீடு செய்யப் படுகின்றன. இவ்வாண்டினுள் இது தொடர்பான 182 விண்ணப்பங்கள் பரிகரணம் செய்யப்பட்டன. இம்முறை மூலம் 910,000 ரூபாய்கள் இறை வரியாகப் பெறப்பட்டன. பீடைநாசினிகளை மீள் பதிவு செய்தல் தொடர்பான புதிய தீர்மானமாக 2000ம் வருடத்திற்கு முன்னர் பதிவு செய்யப்பட்ட அனைத்து பீடை நாசினிப் பொருட்களும் அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட பாதுகாப்பு முறைகளுக்கிணங்க மீண்டும் புதிய பதிவுகளை மேற்கொள்ள வேண்டும் என அறிவிக்கப்பட்டது.

பொருளை மதிப்பீடு செய்தலும் புதிய மூலக் கூறுகளைப் பதிவு செய்தலும்

பாதுகாப்பானதும், சூழலுக்குத் தீங்கு விளை விக்காததுமான பீடைநாசினிகள் அடையாளம் காணப்பட்டு உள்நாட்டில் விற்பனை செய்யப்பட முன்னர் களங்களில் பரீட்சிக்கப்பட்டு தரப்படுத்த லுக்குட்படுகின்றன. இதனால் தீங்கு விளை விக்கக் கூடிய, சந்தையில் விற்பனை செய்ய ப்படுகின்ற பீடை நாசினிகளை கண்டறிவது சுலபமாகின்றது. பீடைநாசினிப் பதிவுகள் சம்ப ந்தமான ஆவணங்கள் சாமர்த்தியமான வையும், தகுந்த தரவுகளை கொண்டவையுமாக இருக்கத்தக்கவாறு கருத்தரங்குகள் போன்ற பல படிமுறைகள் மூலம் பீடைநாசினிப் பதிவு செய்முறை அறிமுகப்படுத்தப்படுகின்றது. இதன் அனுகூலமானது சாமர்த்தியமான பீடைநாசினி மதிப்பீடு பற்றிய அறிவு வெவ்வேறு நெறிமுறை கள் என்பவற்றைப் பகிர்ந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது. 69 இற்கும் மேற்பட்ட சூத்திரங்கள் தரமுயர்த்தப்பட்டதுடன் அவற்றுள் 3 பதிவு செய்யப்பட்டன.

1. Penoxsulam 24%
2. Metamipo
3. Flucetosulfuron

இறக்குமதி அனுமதிகள்

இம்முறை மூலம் இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் தேவைப்படுகின்ற சரியான தரத்தில் பேணப்படுதலை உறுதி செய்வதும், சரியான மூலத்திலிருந்து இறக்குமதி செய்யப்படுவதை உறுதிப்படுத்தலும், தேவைக்கதிகமாக இறக்கு மதி செய்வதைக் கட்டுப்படுத்தலையும் உறுதி செய்கின்றது. இவ்வாண்டினுள் இறக்குமதி அனு மதிப்பத்திரங்கள் வழங்கப்பட முன்னர் இறக்கு மதியாளர்களால் சமர்ப்பிக்கப்பட்ட 740 தரச் சான்றிதழ்கள் கையளிக்கப்பட்டதுடன் அவை மதிப்பீடும் செய்யப்பட்டன.

விளம்பரப் பொருட்கள், (Advertising materials) சுட்டிகள் போன்றவற்றை காட்சிப்படுத்தல்

சுட்டிகளை அங்கீகரித்தலானது சரியான தகவல்கள் இறுதியாளரான பாவனையாளரைச் சென்றடைவது உறுதிப்படுத்தப்படுகிறது. இம்முறையை மேலும் விரிவுபடுத்துமுகமாக அனைத்து விவசாய பீடைநாசினிகளினதும் சுட்டிகளின் உள்ளடக்கமானது அபிவிருத்தி செய்யப்பட்டு அவை தரமுயர்த்தப்பட்டுள்ளது. இவ் வருடத்தினுள் 350 சுட்டிகள் 190 விளம்பரங்கள் என்பன காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. பீடைநாசினிகளுக்கான சிபாரிசு வழங்களில் அண்மைக் காலத்தில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டதனால் பீடைநாசினிகளுக்கான சுட்டி அனுமதிகளில் செய்யப்பட்ட திருத்தங்கள் இவ்வாண்டில் 2 மடங்காக அதிகரித்தன. அதற்கிணங்க பீடைநாசினி சுட்டிகளில் பாவனையாளருக்கான அதிக நட்புறவுப் பாவனை முறைகள் அளவிடைப் (dossagesection) பகுதியில் தரப்பட்டுள்ளன.

களக் கட்டாயப்படுத்தல் (Field enforcement)

பீடைக்கொல்லிகளைப் பதிவு செய்யும் அலுவலகம், மாகாண, மாகாணங்களுக்கிடையிலான, மகாவலி அதிகார சபையின் கள அலுவலர்களை ஒன்றிணைத்து பீடைகொல்லி வினியோகிஸ்தர்களை அத்தாட்சிப்படுத்தும் திட்டத்தினை களத்தில் கட்டாயப்படுத்தி செய்து வருகிறது. இச்சட்டத்தின் கீழ் பீடைநாசினி வினியோகிஸ்தர்களின் விநியோகிக்கும் நிலையங்களைப் பதிவு செய்யும் ஒரு நாள் வகுப்புகள், 32 நடத்தப்பட்டன. பீடைநாசினி விநியோக அத்தாட்சிப் பத்திரங்கள் தகுந்த காரணங்களுக்காக ரத்துச் செய்யப்பட்டாலன்றி 1 வருட காலத்திற்குச் செல்லுபடியாகும். இவ்அத்தாட்சிப்பத்திர விநியோகத்தின் ஒழுங்கமைப்புத் தேவையாக பணம் அற விடப்படுகின்றது. இதன் மூலம் பெறப்பட்ட இறை வரி 740,850 ரூபாய்களாகும்.

பயிற்சி மற்றும் விழிப்புணர்வு திட்டங்கள்

அரச அலுவலர்களுக்கும் (07) பீடைநாசினி வினியோகிஸ்த்தர்களுக்குமான (32) பல பயிற்சி வகுப்புகள் நடாத்தப்பட்டன. 2011ம் ஆண்டில் 1470 பயிற்சிச் சான்றிதழ்களும் 1347 விநியோகச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

ஆய்வுகூட நடவடிக்கைகள்

பீடைநாசினிச் சூத்திரத்தை பகுப்பாய்வு செய்தல்

சூழலில் ஏற்படுத்தப்படும் தாக்கம், மனித சுகாதாரத்தில் ஏற்படும் தாக்கம் என்பன பீடைநாசினியின் வினைத்திறனையும் அதன் தரத்தையும் தீர்மானிப்பதில் முக்கிய பங்காற்றுகின்றன. அனைத்துப் பதிவு செய்யப்பட்ட பீடைநாசினிகளும், சர்வதேச முகவர்களான FAO, WHO என்பவற்றின் பௌதீக இரசாயன தராதரங்களை உறுதிப்படுத்த வேண்டும். அதற்கிணங்க இங்கு நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் உறுதித்தன்மையை உறுதி செய்பவை மாத்திரம் விற்பனைக்காக அனுமதிக்கப்படுகின்றன. 2011ம் ஆண்டில் 376 பகுதிகளிலிருந்து 1534 சூத்திரங்கள் பகுத்தாய்வு செய்யப்பட்டதுடன். 859,455.00 கிலோ கிராமும், 5275914.8 லீற்றர்களும் விற்பனைக்காக அனுமதிக்கப்பட்டன.

விஷேட நடவடிக்கைகள்

COP சட்டத்தின் 26ம் பகுதியின் பிரமாணங்கள்

மஹிந்த சிந்தனையும் தூரநோக்கும் (பக்க எண்-50) என்பதில் அதி மேதகு ஜனாதிபதியினால் வலியுறுத்திக் கூறப்பட்டுள்ள விடயமான நாடு பூராகவும் காணப்படும் பீடைநாசினி விற்பனை நிலையங்களில் சரியான முறையில் பயிற்றப்பட்ட விற்பனை உதவியாளர்கள், தொழில்நுட்ப உதவியாளர்கள் நியமிக்கப்படுவதை வலியுறுத்துவதும், நாட்டினுள் பாதுகாப்பானதும், வினைத்திறனானதுமான பீடைநாசினிப் பாவனையை உறுதிப்படுத்தும் சமூகப் பொறுப்புகளை அடையாளம் காணலும். 1980 ம் ஆண்டின் 33ம் இலக்க COP சட்டத்திற்கிணங்க 2011ம் ஆண்டின் ஜூலை 23ம் திகதி முதல் (மேலதிக வர்த்தமானி இல

1716/23- 2011 ஜூலை 23ம் திகதி) அமுலுக்கு வருமாறு விவசாய இரசாயன விற்பனை உதவி யாளர் தொழில்நுட்ப உதவியாளர் நியமனங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

மாகாண விவசாயத் திணைக்களத்தின் ஏற்பா ட்டில் தேசிய கைத்தொழில் பயிற்சி அதிகார சபை (NAITA) யின் மேற்பார்வையின் கீழ் சர்வ தேச தரப்படுத்தல் தொடர்பான ஒரு பயிற்சி வகுப்பு நடாத்தப்படுகின்றது. இதன்போது 6 மாத கால தொடரான பயிற்சியை வெற்றிகரமான முறையில் பூர்த்தி செய்யும் பயிற்சியாளர் ஒருவருக்கு சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ள ப்பட்டதும், தேசிய கைத்தொழில் தகைமைகள் (National Vocational Qualification system) தரம் iv எனும் சான்றிதழுக்குச் சமமான சான்றிதழ்க ளும் வழங்கப்படுகின்றன. பயிற்சியாளர்களைப் பயிற்று வித்தல் (TOT) எனும் பயிற்சித் திட்டம் விவசாயத் திணைக்களத்தின் விரிவாக்கல் சேவைப் பிரிவினால் தயாரிக்கப்பட்டு பாதுகாப்பா னதும் வினைத்திறனுடையதுமான பீடைநாசினி விநியோகம் தொடர்பான விஷேட நிபுணத்துவம் பெற்றவர்களின் ஆலோசனையுடன் 11 பயிற்சி களும் நடாத்தி முடிக்கப்பட்டன.

மத்திய, சப்ரகமுவ, கிழக்கு, வடகிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களை சேர்ந்த மாகாண விவசாயப் பணிப்பாளர்கள், மாகாண விவசாய அமைச்சின் செயலாளர்கள் போன்றோருடன் இந் நிகழ்ச்சியை அமுல்படுத்துவது தொடர்பான ஆரம்பக் கலந்துரையாடல்கள் நடைபெற்றன.

பீடைநாசினித் தொழில்நுட்ப ஆலோசனை குழுவின் உறுப்பினர்களை நியமித்தல்

மேற்படி குழுவின் செயற்பாடுகளை செம்மையாக நடத்திச் செல்லவென கௌரவ விவசாய அமைச்சரினால் மேலும் 5 புதிய உறுப்பினர்கள் 1720/34 ஆம் இலக்க 25.08 2011ம் திகதிய வர்த்தமானியின் மூலம் நியமிக்கப்பட்டனர். மேற்படி குழுவின் முக்கிய கடமையானது, பீடைநாசினி தொடர்பான சட்டதிட்டங்கள் தொடர்பான அவசியமான ஆலோசனைகளை வழங்குவதாகும். அத்துடன் மேலும் அரச, பகுதி அரச நிறுவனங்களைச் சேர்ந்த 15 வெளிக்கள அலுவலர்களும் பீடைநாசினி சம்பந்தப்பட்ட விடயங்களுக்கென நியமிக்கப்பட்டுள்ளனர்.

நாட்டினுள் பீடைநாசினிகளை இறக்கு மதி செய்தல், விநியோகித்தல் விற்பனை செய்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள தனியார் மற்றும் கூட்டு றவு நிலையங்களை ஏற்றுக் கொள்வதற் கான வழிகாட்டல்கள்

இலங்கையினுள் புதிய பீடைநாசினிப் பதிவுக ளைச் செய்ய நாடியுள்ள கம்பனிகளை ஏற்றுக் கொள்வது தொடர்பாக அவசியமான ஆரம்ப வேண்டுகோளுக்கிணங்க புதியவழிகாட்டல்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தில் இணைந்து கொள்ள ஆசையும் ஆர்வமும் உடையவர்கள் தமது நிறுவனத்தின் கட்டமைப்பு தொடர்பான பூரண விபரங்களை பரிசீலனைக்காக சமர்ப்பிக்கு மாறு வேண்டப்படுகின்றனர். பீடைநாசினி பதிவா ளர், பீடைநாசினித் தொழில்நுட்ப மற்றும் ஆலோ சனை குழுவின் ஆலோசனைகளுடன் விண்ணப்ப தாரரின் கோரிக்கையை ஏற்றுக்கொள்வதா? மறுப்பதா என முடிவு செய்வர். இவ்வழிகா ட்டல்கள் பீடைநாசினித் தொழில்நுட்பம் மற்றும் ஆலோசனை சேவைக் குழுவினரால் நிரூபனம் செய்யப்பட்டுத் துரிதமாகச் செயல்படுத்தப்படும் வகையில் அமுல் செய்யப்படும்.

விவசாய இரசாயன உபகுழுக்களை நியமித்தல்

COP சட்டத்தின் கீழ் மூன்றுவகை பீடைநா சினிகளான விவசாயப் பீடைநாசினிகள், வீடுறை பீடை நாசினிகள், கைத்தொழிற்துறை பீடை நாசினிகள் ஆகிய மூவின பீடைநாசினிகளின் பதிவினை சீர்படுத்துமுகமாக மூன்று உப குழுக்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளன.

வர்த்தகப் பெயர்களுக்கான புதிய கொள்கை

வர்த்தகப் பெயர்களின் பெருக்கமும் அதனால் விவசாயிகளிடையே ஏற்பட்டுள்ள மனக் குழப்ப

த்தையும் கருதி அனைத்து வகை விவசாயப் பீடைநாசினிகளினதும் வர்த்தகப் பெயர்கள், பொதுப் பெயர் மற்றும் கம்பனி பெயர்களால் வழங்கப்படல் வேண்டும் என்ற புதிய கொள்கை அமுல்படுத்தப்பட்டது. இதன் மூலம் விவசாயிகள் பீடைநாசினிகளைத் தெரிவு செய்யும் போது சரியான முடிவினை எடுப்பர் என எதிர்பார்க்க ப்படுகிறது.

அலக்ளோரை (Alachlor) தடை செய்தலும், Rotterdam மாநாட்டின் கீழ் ஏனைய பீடைநாசினிகளுக்கான தீர்மானமும்

றொடர்டாம் மாநாட்டின் இணைப்பு 111 இன் கீழ் பீடைநாசினியாகப் பதிவு செய்யப்பட்டுள்ள அலக்ளோர் எனும் விவசாய இரசாயனம், பீடைநாசினித் தொழில்நுட்ப ஆலோசனைக் குழுவினரால் தடை செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே தடை செய்யப்பட்டதும், நாட்டினுள் தற்போது பாவனையில் இல்லாததுமான பல பீடைநாசினிகளுக்கு உடன்பாடு இல்லை (Noconsent) எனும் தீர்மானமும் எடுக்கப்பட்டது. அவையாவன, aldrin, DNOC உப்புகள், எதிலீன் ஒட்சைட், எதிலீன் டைகுளோரைட், மொனொகுரோடபஸ், பரதியோன், ட்றைபீயூடைல் டின் சேர்வைகள், அல்டிகாப், என்டோ சல்பான், பெனோமைல் (7% ற்கு மேல்), காபோபியூரான் (10% மேல்) திராம் (15% ற்கு மேல்).

பீடைநாசினிகளில் காணப்படும் நச்சுத்தன்மை வாய்ந்த பார உலோகங்கள், ஆசினிக்

பீடைநாசினிகளில் காணப்படும் ஆசனிக் கலந்த சேர்வைகள் சூழலில் விடப்படுவதனால் அண்மைக் காலங்களில் ஏற்பட்டுள்ள கலவரமான நிலையின் விளைவாக இறக்குமதி செய்யப்படும் தொழில்நுட்பக் கலப்படப் பொருட்களின் மீது கடுமையான சட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றன. இந்நடவடிக்கையின் போது ஒன்பது பார உலோகங்களான இரசம், ஆசனிக், குரோமியம், கட்மியம், ஈயம், நிக்கல், கோபாற்று, வெள்ளீயம், தலீலியம் மற்றும் சயனைட் போன்வற்றுக்காக பீடைநாசினிகள் பரிசீலிக்கப்படுகின்றன.

கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்தும் பீடைநாசினிகள் கண்காணிப்பின் ஆரம்பம்

ஜெனிவாவில் அமைந்துள்ள ரொடர்டாம் மாநாட்டு செயலகத்துடன் ஒன்றிணைந்து விவசாயிகளின் களங்களிலும், வைத்தியசாலைகளிலும் மேற்கொள்வதற்கான வியூகமும், வினைத்திறனுடையதுமான ஒரு கற்கை நிகழ்ச்சியை வடிவமைத்தல் தொடர்பான கலந்துரையாடல்கள் வேலைத்திட்டங்கள் என்பன 2011ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்டன. பீடை நாசினி பதிவாளரின் நெறிப்படுத்தல் அதிகாரத்திற்கிணங்க கடுமையான தீங்கு விளைவிக்கும் பீடைநாசினிகள் தொடர்பான முடிவுகளை மேற்கொள்ளும் போது, மருத்துவ ஆய்வுகள் மூலம் எதிர்பாராத நஞ்சுகள் என உறுதிப்படுத்துகின்ற தரவுகள், விளக்கமான பதிவுகள் (Records) என்பன மூலம் பீடைநாசினிப் பதிவாளர் சரியாக நெறிப்படுத்தப்படுவார் என திட்டமிடப்பட்டது.

அனுராதபுரம், குருநாகல், ஹம்பாந்தோட்டை மற்றும் நுவரெலியா மாவட்டங்களைச் சேர்ந்த பீடைநாசினிப் பாவனையால் பாதிக்கப்பட்ட நோயாளர்கள் மற்றும் விவசாயிகள் போன்றோருக்கிடையே ஆரம்ப கற்கைகள் (Pilot studies), தெற்காசிய நச்சுத்தன்மை சிகிச்சை முறை ஆராய்ச்சி நிலையம் மற்றும் ரொடர்ராம் மாநாட்டின் மூலமாக வடிவமைக்கப்பட்டன.

வெற்று பீடைநாசினி கொள்கலன்களின் முகாமைத்துவம்

விவசாயிகளின் களங்களில் விடுவிக்கப்படுகின்ற சில்லறை கொள்கலன்கள்

பீடைநாசினிப் பதிவாளர் அலுவலகமும், சுற்றாடல் அமைச்சும் கூட்டாகச் சேர்ந்து Polluter Pay Principle எனும் மாறுதல் நடைபெறும் காரணிகள் மற்றும் சுற்றுப் புறங்களிலிருந்து வெற்றுக் கொள்கலன்களை சேகரிப்பதற்கான உபாய மார்க்கங்

களை விருத்தி செய்யும் ஆரம்ப நிகழ்ச்சிகளை ஆரம்பித்தன. இது வயல்களில் விடுவிக்கப்படு கின்ற வெற்றுப் பீடைநாசினி கொள்கலன்களின் மூலம் சுகாதாரத்திற்கும், சூழலுக்கும் ஏற்படுத்தப் படுகின்ற அசௌகரியங்களை குறைப்பதற்கான உபாயங்களை அமுல்படுத்தும் அடிப்படை உடன்படிக்கையின் ஓர் பகுதியாகும். இவ்விடயத் தில் அக்கறையும் கரிசனையும் கொண்ட பங்கு தாரர்களோடு கலந்துரையாட வென 5 கூட்டங் கள் நடாத்தப்பட்டு அதில் பின்வருவனவற்றுக் கான அனுமதிகளும் பெறப்பட்டன.

- வெற்றுக் கொள்கலன்களை அழிப்பதற்கான தீர்மானத்தின் அவசியம்
- கண்ணாடி மற்றும் பிளாஸ்டிக் கொள்கல ன்களை மீள்சுற்சி செய்தல், அல்லது முற்றாக அழித்தல் தொடர்பான தொழில் நுட்ப வசதிகளைப் பற்றி ஆராய்தல்.
- சமூகத்திலுள்ள அனைத்து தரப்பினரும் இதைப் பொறுப்பாகக் கொள்ளல்.

ஆரம்ப கலந்துரையாடல்கள், உத்தேசிக்கப்பட்ட இந்நடவடிக்கைகளை பொதுமக்கள் அறிந்து கொள்ளும் தன்மையைப்பற்றி விளங்கிக் கொள்வதற்கு தூண்டுதலாய் அமைந்தன. கமக்காரர்கள், பீடைநாசினி விற்பனையாளர்கள் விநியோகஸ்தர் மற்றும் பொதுமக்கள் என்போரைக் கொண்டு வெவ்வேறு ஆய்வுகள் (Survey) நடாத்தப்பட்டன.

கைத்தொழில் மட்டத்தில் தொகையாக விடுவிக்கப்படு கின்ற கொள்கலன்கள்

பீடை நாசினி தொழிற்துறையில் பீடைநாசினித் தொற்றுதலுக்குள்ளாக்கப்பட்ட வெற்றுக் கொள்க லன்களின் தேக்கமானது பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. திறந்த வெளிகளில் குவிக்க ப்படுகின்ற வெற்றுக் கொள்கலன்களின் தவறான பிரயோகம் சூழலுக்கும், பொதுமக்களின் சுகாதா ரத்திற்கும் ஊறுவிளைவித்தல் தொடர்பான பல்வேறு முறைப்பாடுகள் எழும் வாய்புண்டு. பீடைநாசினி கொள்கலன்களிலுள்ள மீள் சுழற்சி செய்யப்பட்ட உயர் அடர்த்தியுள்ள பொலி எதி லீன் பிளாஸ்டிககிலிருந்து பீடைநாசினிகள் கசிவது தொடர்பான கருதுகோள்களும் உள் ளன. இது பொதுமக்கள் சுகாதாரம் அதனைத் தொடர்ந்து இறுதியாக தயாரிக்கப்பட வேண்டிய உற்பத்திப் பொருளின் மீதும் தீவிரமாக தங்கி யுள்ளது. தொற்றுதலுக்குள்ளாக்கப்பட்ட பிளாஸ் டிக் கொள்கலன்களை உயர் வெப்ப நிலையில் எரித்தலே தற்போதுள்ள வசதியான அழிக்கும் முறையாகும். தற்போது இதற்குப் பரிகாரமாக பீடைநாசினிப் பதிவாளர் அலுவலகம் வெற்றுக் கொள்கலன்களை அகற்றுவதற்கான முகாமைத் துவ உபாயமாக அரசாங்க, நகரசபை மற்றும் கிராமிய அரசுகள் மூலம் நடைமுறைப்ப டுத்தப்பட்டு வருகின்ற குப்பைகூழங்களை சேகரிக்கும் திட்டத்தில் மீள்சுழற்சி செய்யப்பட்ட பிளாஸ்டிக் கொள்கலன்கள் பாவிக்கப்படுவதுடன் இரும்பு உற்பத்தியில் கரைப்பானாக உருக்கினா லான பீப்பாய்களை பாவிக்கும் முறையை நடைமுறைப்படுத்தி உள்ளது. சுகாதாரத்தையும் சுற்றுப்புறச் சூழலையும் பாதுகாக்கும், கிடைக்கக் கூடிய அனைத்து வழிமுறைகளும் தொடர்ச்சி யாக அவதானிக்கப்படுகின்றன.

அட்டவணை 3.1.4.2: 2011ம் ஆண்டின் முன்னேற்ற நடவடிக்கைகள்

உப நடவடிக்கைகள்	வருடாந்தப் பௌதீக இலக்கு	அடையப் பெற்றவை	வீதம் (%)
தெரிவு (Screening) செய்யப்பட்ட பின் பதிவுக்காக ஏற்றுக் கொள்ளப்பட்ட விண்ணப்பங்களும், ஒதுக்கீடு செய்யப்பட்ட விண்ணப்ப எண்ணிக்கையும்	150	288	119
உண்மையான பதிவு விண்ணப்பங்களின் மதிப்பீடு	60	69	112
மூன்றாம் நபர் பதிவு விண்ணப்பங்களின் மதிப்பீடு	140	73	67
மீள் பதிவு விண்ணப்பங்களின் மதிப்பீடு	140	182	101
உள்ளூர் மாதிரிகளின் தரவு மதிப்பீடு	30	39	173
இறக்குமதி அனுமதிகள்	1300	1231	136
பீடைநாசினி தரச்சான்றிதழ்களின் மதிப்பீடு	1300	740	91
அனுமதிக்கான சுட்டிகளைத் தெரிவு செய்தல்	700	354	75
அனுமதிக்கான விளம்பர மாதிரிகளின் தெரிவு	225	193	86
கைத்தொழிற்சாலை பரிசீலனை	12	08	67
அனுமதிக்கப்பட்ட மீள்பொதிசெய்யும் வசதிகள் மற்றும் களஞ்சியங்களின் பரிசீலனை	02	13	650
புகையூட்டம் செய்வதற்கான இடங்கள் மற்றும் வீடுறை பீடைகளின் கட்டுப்பாட்டு முறைகளின் பரிசீலனை	12	14	117
தடுப்புக்காப்பு, மற்றும் பொதிகளைக் கப்பலில் இருந்து இறக்குவதற்கு முன்னரான பரிகரிப்பு நடவடிக்கைகளுக்குடன் CH_3 Br இனைப் பெற்றுக் கொள்வதற்கான அனுமதிகள்	50	58	116
கட்டுப்பாடு செய்யப்பட்ட பீடைநாசினிகளை கொள்வனவு செய்வதற்காக அதிகாரமளிக்கப்பட்ட நிறுவனங்களுக்கு அனுமதி வழங்குதல்.	100	35	35
விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளத் தகுதியானவையா எனக் கண்டறிவதற்கான பரிசோதனை அறிக்கையைப் பெற்றுக் கொள்வதற்காக MRI, ITI போன்றவற்றுக்காக அனுப்பப்பட்ட மாதிரிகள்	25	25	100
கொண்டுவரப்பட்ட பொருட்களின் மாதிரிகள் தரப் பரிசோ தனை செய்யப்பட்டு பொதியிடலுக்காக வழங்கப்பட்ட அனுமதிகள்	700	376	54
விற்பனை நிலையங்களின் பரிசீலனை	40	85	213

செய்தி மடல்களின் வெளியீடுகள்	04	00	00
அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்புகள்	05	07	14
பாடசாலை மாணவர்களுக்கான கருத்தரங்குகள்	08	01	13
வினியோகத்தர்களுக்கான பயிற்சி வகுப்புகள்	26	32	123
வினியோகத்தர்களுக்கான பயிற்சிச் சான்றிதழ்கள்	1050	1470	139
வினியோகத்தர்களுக்கான சான்றிதழ்கள்	2000	1347	67
கள முறைப்பாடுகள் (Field Complaints)	10	20	200
சட்ட நடவடிக்கைகள் (Prosecution)	04	00	00
தொழிநுட்ப ஆலோசனைக்குழு கூட்டங்கள்	06	03	50
சூத்திரங்களின் பகுப்பாய்வு	700	1534	219
மீதிகளின் (Residue analysis) பகுப்பாய்வு	210	00	00
தரத்தை உறுதிப்படுத்துவதற்காக ROP யினால் பெற்றுக் கொள்ளப்பட்ட மாதிரிகள்	12	03	25
உபயோகமற்ற தொகைகளை (obsolete stocks) அகற்றுதல்	04	01	25
உள்ளக மற்றும் திணைக்களங்களுக்கிடையிலான அமைப்பு கூட்டங்களில் சேவை வழங்கிய அல்லது கலந்து கொண்ட தொழில்நுட்ப வல்லுனர்கள், அங்கத்தவர்கள், வளவாளர்கள்.	31	35	113
ஏனைய நிறுவனங்களின் அழைப்பின் பேரில் கலந்து கொண்ட வளவாளர்கள்	10	21	210
இறக்குமதிப் புள்ளிவிபர பரம்பல்களின் தொகுப்பும் சேர்க்கையும் (மத்திய வங்கி, பல்கலைக்கழகங்கள், ஆராய்ச்சி நிலையங்கள், அரச நிறுவனங்கள்)	40	16	40
கள ஆய்வு முதலான ஏனைய நடவடிக்கைகள்	04	00	00

2012ம் ஆண்டிற்கான திட்டங்கள்

தொழில்நுட்ப வே லைத்திட்டம் ~ 2012

நிகழ்ச்சி : பீடைநாசினிப் பதிவு

இல	நடவடிக்கை / விடயம்	ஆண்டு பௌதீக இலக்கு	காலாண்டுக்கான திரட்டிய பௌதிக இலக்கு				எதிர்பார்க்கப்பட்ட அனுகூலங்கள்
			1st	2nd	3d	4th	
1	தெரிவு செய்யப்பட்ட பின் பதிவுக்காக ஏற்றுக் கொள்ளப் பட்ட விண்ணப்பங்களும் ஒதுக் கீடு செய்யப்பட்ட விண்ணப்ப ங்களின் எண்ணிக்கையும்	30	05	15	25	30	கொண்டு வரப்படுகின்ற பொருள் எமது சூழல் நிபந்தனைளின் கீழ் பாவிக்கப்படும் போது தீங்கான விளைவுகளை ஏற்படுத்தாமலும் விவசாயத் துறையில் உள்ளீடுகளுக்கான செலவினத்தை குறைத்தலும்
2	உண்மையான பதிவுக்கான விண்ணப்பங்களின் மதிப்பீடு	30	05	15	25	30	
3	மூன்றாம் நபர் பதிவுக்கான விண்ணப்பங்களின் மதிப்பீடு	140	35	70	105	140	
4	மீள்பதிவுக்கான விண்ணப்பங்க ளின் மதிப்பீடு	140	35	70	105	140	
5	உள்நாட்டில் பரிசோதனை க்கான தரவுகளின் மதிப்பீடு	30	05	15	25	30	மனிதனுக்கும் சூழலுக்கும் தீங்கு பயக்காத சேர்மானங்களை விடுவிப்பு செய்தல்
6	வழங்கப்பட்ட இறக்குமதிக் கான அனுமதிகள்	1400	300	550	1000	1400	சரியான மூலத்திலிருந்து இறக்குமதி செய்வதை உறுதிப்படுத்தலும், அளவுக்கதிகமாக இறக்குமதி செய்வதை தடுத்தலும்
7	பீடைநாசினி தரச் சான்றிதழ்களின் மதிப்பீடு						FAO இன் நியம ங்களுக்கு உட்பட்ட தரமான பீடைநாசினிகளை இறக்குமதி செய்தல்.

8	அனுமதிக்காக தெரிவு செய்யப்பட்ட சுட்டிகள்	750	100	300	500	750	சரியானதும், பாது காப்பானதுமான பாவனைக்காக சரியான தகவல்களை விவசாயிகளுக்கும் ஏனைய அங்கீகாரம் பெற்றோருக்கு வழங்கல்.
9	அனுமதிக்காக தெரிவு செய்யப்பட்ட விளம்பரங்கள்	250	50	100	200	250	
10	கைத்தொழிற்சாலைகளின் பரிசீலனை	12	3	6	9	12	கைத்தொழிற்சாலைக ளின் சரியான தரம் பின் பற்றப்படுவதை உறுதி செய்தல்
11	அனுமதிக்கப்பட்ட மீள் பொதி செய்யும் வசதிகள் மற்றும் களஞ்சியங்களின் பரிசீலனை	2	1	2	2	2	பொருளின் தரத்தை பேணுமுகமாக பொதி செய்யும் நடவடிக்கை கள் சரியான முறையில் நடை பெறுவதை கண் காணிப்பு செய்தல்
12	புகையூட்டம் செய்யும் இடங்கள் மற்றும் வீடுறை பீடைகளின் கட்டுப்பாட்டு முறையை பரிசீலனை செய்தல்.	30	5	10	20	30	புகையூட்டம் செய்தலை வழக்கப்படுத்தலும் ஏற்று மதி நிராகரிக்கப்படு வதை தவிர்த்தலும்
13	பீடைக் கட்டுப்பாட்டு முறைகளைப் பதிவு செய்தல்	30	5	10	20	30	நிபுணத்துவம் அற்ற நபர்கள் பீடைக் கட்டுப் பாட்டு முறைகளில் ஈடு படுவதை தடுத்தலும் தேர்ச்சி பெற்றவர்கள் மூலம் செய்வதை வழக்கப்படுத்தலும்
14	தடுப்புக்காப்பு; கப்பலில் இருந்து இறக்குவதற்கு முன்னரான பரிகரிப்பு நடவடிக்கைகளுக்கு $CH_3 Br$ பெற்றுக் கொள்வதற்கான கணக்கீட்டு அடிப்படையிலான அனுமதிகள்	60	15	30	45	60	
15	விற்பனை நிலையங்களில் பரிசீலனை	140	30	75	110	140	கலப்படம் செய்தல் போலியான உற்பத்திப் பொருட்கள் என்பவற்றை தடுத்தல்

16	விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்கான பரிசோதனை அறிக்கைகளைப் பெற்று கொள்வதற்கான MRI/ITI என்பவற்றுக்கு கையளிக்கப்பட்ட மாதிரிகள்	25	7	15	20	25	சந்தையில் தரமான பொருட்கள் கிடைப்பதை உறுதி செய்தல்
17	கொண்டு வரப்பட்ட பொருட்களின் தரப்பரிசோதனையின் பின் பொதி யிடலுக்காக அனுமதிக்கப் பட்டவை	800	200	400	650	800	
18	ஊடக நிகழ்ச்சிகள் i. F.V ii வானொலி iii அச்சிடப்பட்டவை	2 6 4	- 2 2	1 4 2	1 5 3	2 6 4	பயிற்றுவிப்பாளர்களை பயிற்றுவிப்பதுடன், சமுதாயத்தின் விழிப்புணர்வை விருத்தி செய்தல்
19	தொழில்நுட்ப உதவியாளர்களின் பயிற்சி, விவசாய இரசாயன விற்பனை நிலையங்களை அத்தாட்சிப்படுத்தல்	25	5	10	20	25	
20	விழிப்புணர்வு கண்காட்சி நிகழ்ச்சிகள்	4	1	2	3	4	
21	வினியோகத்தர்களை பயிற்றுவிக்கும் வகுப்புகள்	30	5	12	24	30	பீடைநாசினிகள் அத்தாட்சிப்படுத்தப்பட்ட விற்பனவு நிலையங்கள் மற்றும் பயிற்று விக்கப்பட்ட வினியோகத்தர்களால் மட்டும் விநியோகிப்பதை உறுதிப்படுத்தல்
22	வினியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட பயிற்சி சான்றிதழ்கள் வழங்குதல்	1100	200	500	850	1100	
23	வினியோகத்தர்களை விநியோக சான்றிதழ்	2000	500	1000	1500	2000	
24	கள முறைப்பாடுகள்	4	0	1	2	4	சட்டத்தின் விதிகள் பிரமாணங்களுக் கெதிராக நடந்து கொள்ளும் நபர்க ளுக்கு சட்ட நடவ டிக்கை எடுத்தல்
25	சட்ட நடவடிக்கைகள்	2	0	1	2	2	
26	தொழில்நுட்ப ஆலோசனை குழுக் கூட்டங்கள்	6	2	3	5	6	COP சட்டம் தொடர்பான சகல நடவடிக்கைகளி லும் பதிவாளருக்கு ஆலோசனை வழங்கல்

27	PeTAC யின் தீர்மானங்களை கைத்தொழிற்சாலை பிரதிநிதிகளுக்கு தெரிவிப்பதற்கான கூட்டங்கள்	6	2	3	5	6	கைத்தொழிற்சாலைகளில் பீடை நாசினி பாவனை, சிபாரிசு தொடர்பான நடவடிக்கைகளை ஆராய்தல்
28	மூன்று உப குழுக்களினதும் பீடைநாசினி உப குழுக்கூட்டங்கள்	9	3	6	9	9	சுகாதரம், பொதுச் சுகாதாரம் மற்றும் வீடுறை பீடைகளை கட்டுப்படுத்தும் பகுதிகளில் பீடைநாசினிப் பாவனை சிபாரிசு தொடர்பான விடயங்களை ஆராய்தல்
29	சூத்திரங்களைப் பகுப்பாய்வு செய்தல்	800	150	350	625	800	பீடைநாசினியின் தரத்தை ஆராய்ச்சி செய்தலும் உணவு மற்றும் நீரூடன் கலக்கப்படுகின்ற மீதிகளை ஆராய்தலும்
30	பீடைகொல்லிகளில் காணப்படும் மாசுக்களை கண்டறிய எழுத்தமான பரிசோதனை	12	4	8	12	12	
31	MRLS இனை பிறப்பிப்பதற்கான பகுப்பாய்வு						உணவுப் பொருட்களில் கலக்கப்படுகின்ற மீதியின் அளவை உறுதி செய்தல்
32	தாக்குப்பிடிக்கும் தன்மையை விருத்தி செய்வதை கண்காணிப்பு செய்தல்						தாக்குப் பிடிக்கும் தன்மையின் அபிவிருத்தி, உணவுப் பொருட்களில் காணப்படும் இலக்கு அற்ற பிற விளைவுகளை அடையாளம் காணலும், அவற்றை குறைப்பதற்கான நிகழ்ச்சிகளை வடிவமைத்தலும்
33	பீடைநாசினிகளின் இலக்கு அற்ற பிற விளைவுகள்						
34	வெற்றுக் கொள்கலன்களை அகற்றுவதற்கான திட்டங்களை அமுல் செய்வதும் அபிவிருத்தி செய்தலும்	2	1	1	2	2	சூழலில் ஏற்படும் தொற்றுகையை குறைத்தல்

35	திணைக்களத்தினுள்ளும், திணைக்களங்களுக்கிடையிலானவையுமான கூட்டங்களில் நிபுணத்துவமிக்க/ அங்கத்தவராக/ வளவாளராக கலந்து கொண்டு வழங்கிய சேவைகள்	27	5	12	19	27	சுகாதாரத்திற்கும் சூழலுக்கும் ஏற்படுத்தப்படும் பீடைநாசினி தொடர்பான விளைவுகளை குறைத்தல்
36	ஏனைய நிறுவனங்களின் அழைப்பின் பேரில் கலந்து கொண்ட வளவாளர்கள்	10	2	5	8	10	
37	இறக்குமதி புள்ளி விபரங்களைத் திரட்டலும் தொகுத்தலும் (மத்திய வங்கி, பல்கலைக்கழகங்கள், ஆராய்ச்சிகள், அரச நிறுவனங்கள் போன்றவை).	40	10	20	30	40	
38	பீடைகொல்லி மற்றும் உயிர் கொல்லிகளை பதிவு செய்தல், புதிதாக இத்துறையில் பரிகரிப்பாளராக இணையும் இறக்குமதியாளர்களுக்கு மீள திருத்தியமைக்கப்பட்ட வழிகாட்டிகளை வெளியிடுதல்	4	1	2	3	4	
39	ஏனைய நடவடிக்கைகள்	4	1	2	3	4	

உத்தியோகத்தர் பட்டியல்	
பதவியணி	**எண்ணிக்கை**
பீடைநாசினிப் பதிவாளர்	01
பிரதி பீடைநாசினிப் பதிவாளர்	00
உதவி பீடைநாசினிப் பதிவாளர்	00
ஆராய்ச்சி அலுவலர்	04
விவசாய அலுவலர்	01
விவசாயப் போதனாசிரியர்	06
ஆராய்ச்சி உதவியாளர்	04
விவசாயக் கண்காணிப்பு உத்தியோகத்தர்	02
நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் (விவசாயம்)	02
சட்ட அலுவலர்	00
ஆராய்ச்சி உப உதவியாளர்	01
பொது முகாமைத்துவ உதவியாளர் சேவை	06
சாரதி	02
காவலாளி	02
ஒப்பந்த வேலையாட்கள்	02
KKS	01
வேலையாள்	02
மொத்தம்	**36**

3.1.5 தாவரப் பிறப்புரிமை மூல வள நிலையம் (PGRC), கன்னொறுவை

தாவர பிரப்புரிமை மூலவள நிலையமானது நிகழ்கால மற்றும் எதிர்கால சந்ததியினரின் நன்மைக்காக நாட்டினுள் காணப்படும் உணவுப் பயிர்களின் பிறப்புரிமை வளங்களைப் பாதுகாப்பதும், அதன் பாவனையை தரமுயர்த்துவதற்கான நிகழ்ச்சித் திட்டங்களையும், நடவடிக்கைகளையும் அமுல்படுத்துவதற்கும் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. இதனை அடைவதற்காக PGRC யானது உணவுப் பயிர்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏனைய தாவர வர்க்கங்களைப் பற்றிய ஆய்வுகளை நடத்துவதுடன், அவற்றை சேகரித்தல், அறிமுகப்படுத்தல், பாதுகாத்தல், மதிப்பீடு செய்தல், அவற்றை ஆவணப்படுத்தல் போன்ற நடவடிக்கைகளிலும் ஈடுபடுகின்றது.

பாதுகாத்தல், பயன்படுத்தல், நிறுவனமாக்கல் தாவரக் கருமூலவள கொள்ளவை கட்டியெழுப்புதல் தொடர்பான 20 நடவடிக்கைகளுக்கான தகவல் சேகரிப்பு நிகழ்ச்சிகளை PGRC ஒன்றிணைக்கின்றது.

பாதீடு

அட்டவணை 3.1.5.1 வருடாந்தப் பாதீடு 2011 (ரூபா)

செலவு விடயம்	ஒதுக்கீடு	செலவுகள்	செலவு%
மீண்டு வரும் செலவுகள்	10,746,000	10,099,211	94
மூலதனம்	3,480,000	2,765,849	79
திட்டங்கள்			
FAO-NISM GPA திட்டம்	2,139,960	2,085,932	97
மொத்தம்	**16,365,960**	**14,950,992**	**91**

மூலவுயிருரு பரிசோதிப்பும், சேகரிப்பும்

PGRC யின் ஆய்வுப் பகுதியானது, அனைத்துப் பயிர் வகைகளினதும் காட்டினங்கள் (Wild relatives) உட்பட அனைத்துப் பாரம்பரிய வர்க்கங்கள் பற்றி ஆய்வினையும் அவற்றைச் சேகரிக்கும் நடவடிக்கைகளையும் வெவ்வேறு நிகழ்ச்சிகளின் கீழ் தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகிறது. களத்தில் மேற்கொள்ளப் பட்ட 4 ஆய்வு வேலைகளின் போது மொத்தமாக 194 மாதிரிகள் பெறப்பட்டன. அவையாவன, யாழ்ப்பாண மாவட்டம் (81 மாதிரிகள்) திருகோணமலை மாவட்டம் (36 மாதிரிகள்) மொனராகலை மாவட்டத்தின் இரு வேலை திட்டங்கள் (77மாதிரிகள்). மொனராகலை மாவட்டத்தில் “மாதிரி கிராமம்” நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 36 மாதிரிகளும், PGRC யின் மதிப்பீட்டுக் களம், மற்றும் தாவர வீடு (Plant house) போன்றவற்றிலிருந்து 28 தாவர பிறப்புரிமை வளங்களும், உப மாதிரிகளாக சேகரிக்கப்பட்டன. FCRDI மகா இலுப்பள்ளம, RARDC போம்புவில, ஆகிய இடங்களிலிருந்து மொத்தமாக 12 மாதிரிகளும் பெறப்பட்டன.

ICRISAT யிலிருந்து அறிமுகப்படுத்தலுக்கென மொத்தம் 37 மாதிரிகளும், இந்தியா (நிலக் கடலையின் 25 மாதிரிகளும்) CYMMIT மெக்ஸிகோ (சோளத்தின் 6 மாதிரிகளும்) FCRDI இந்தோனேசியா (சோளத்தின் 6 மாதிரி களும்) மகாஇலுப்பள்ளமவில் அமைந்துள்ள FCRDI மூலமாக பெறப்பட்டன. பதிய முறை இனப்பெருக்க அலகுகள் களமரபணு வங்கி (Field Gene bank) மற்றும் உள்ளகக் காப்பகங்க ளுக்கு (in-vitro Conservation) கையளிக்கப் படும் வரை தற்காலிகமாக களத்திலும் (Field) தாவர வீடு (Plant house) களிலும் நடப்படு கின்றன. சேகரிக்கப்பட்ட வித்துமாதிரிகள் வெளி க்களக் காப்பக (Ex-situ Conservation) மரபணு வங்கிகளுக்கு அனுப்பப்படுகின்றன.

கடவுச் சீட்டுத் தரவு

PGRC யின் தரவுகள் முகாமைத்துவ அலகிற்கு மொத்தமாக 80 நுழைவுக் கடவுச்சீட்டு தரவுகள் அனுப்பப்பட்டுள்ளன.

பண்ணையில் வைத்து பாதுகாத்தலும் (on farm Conservation) மாதிரிக் கிராம நிகழ்ச்சியும்

PGRC யின் ஆய்வுப் பகுதியானது மொனரா கலை மாவட்டத்தில் மாதிரிக் கிராம நிகழ்ச்சி யின் மூலம் பண்ணையில் வைத்து பாதுகா க்கும் முறையை செய்து காட்டியது. இதற்காக படல்கும்புர AI பிரிவில் மீகஹயாய எனும் கிராமமும், சியம்பலாண்டுவ AI பிரிவில் கல முன மற்றும் துன்வெனிகம்மானய எனும் கிராமங்களும் தேர்ந்தெடுக்கப்பட்டன. பாரம்பரிய தாவர வர்க்கங்களும் மற்றும் ஏனைய தாவரப் பாகங்களும் வழங்கப்பட்டு 31 வீட்டுத் தோட்ட ங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. அலுவலர்களுக்கும், விவசாயிகளுக்கும் என விடய நிபுணர்களால் பயிற்சிகளும், இரு கள நிகழ்ச்சிகளும் (Field days) நடத்தப்பட்டன.

வித்துப் பொருட்களைப் பாதுகாத்தல்

2011ம் ஆண்டில் மரபணு வங்கியில் 95 புதிய தெரிவுகளும் 191 பெருக்கமடையச் செய்யப்பட்ட மாதிரிகளும் பாதுகாக்கப்பட்டன. ஆண்டிறுதியில் மொத்தமாக 12,907 மாதிரிகள் மரபணு வங்கி யில் காணப்பட்டன. அட்டவணை 3.1.5.2 மரபணு வங்கியின் நிலைமையைக் காட்டுகின்றது.

அட்டணை 3.1.5.2 மரபணு வங்கியில் பாதுகாப்பில் இருப்பனவற்றின் நிலைமை

பயிர் வகை	தெரிவுகளின் எண்ணிக்கை
அரிசி மற்றும் அதனுடன் தொடர்புடையவை	4538
ஏனைய தானியங்களும் அதனுடன் தொடர்புடைய இனங்களும்	1640
அவரை இனத் தானியங்களும் அதனுடன் தொடர்புடைய இனங்களும்	2038
அவரை மரக்கறி வகை	1300
சொலனேசியே வகை மரக்கறிகளும், சுவையூட்டிகளும் அதனுடன் தொடர்புடைய இனங்களும்	1206
குக்கர்பிற்றேசியே மரக்கறிகள்	777
பிரசிகேசியே (Brassicaeeae) மரக்கறி இனங்கள்	31
எலியம் (Allium) வகை	20
ஏனைய மரக்கறிகள்	371
இலை மரக்கறிகள்	166

வேர் மற்றும் கிழங்கு வகை.	09
கடுகு, அதனுடன் தொடர்புடைய இனங்கள்	124
எண்ணெய்ப் பயிர்கள்	431
நார்ப் பயிர்கள்	66
மூலிகைத் தாவரங்கள்	27
பழங்கள்	163
மொத்தம்	**12907**

மூலவுயிருருவின் விநியோகம் (Distribution of germ plasm)

பல்வேறு வகை பயிர் வர்க்கங்களின் 913 தெரிவுகள் உள்நாட்டின் ஆராய்ச்சி நிறுவன ங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் (NGO) விவ சாயிகள், பல்கலைக்கழகங்கள் போன்றவற்றின் வேண்டுகோளுக்கிணங்க விநியோகம் செய்யப் பட்டுள்ளன.

வெளிநாடுகளிலிருந்து மூலவுயிருரு வினை இறக்குமதி செய்தல்

ஆராய்ச்சி நோக்கங்களுக்காக அங்குணகொல பெலஸ்ஸவில் அமைந்துள்ள GLORDC யின் வேண்டுதலின் பேரில் நிலக்கடலையின் (Arachis hypogae) 25 தெரிவுகள் ICRSAT இந்தியாவி லிருந்து இறக்குமதி செய்யப்பட்டன.

கடுகின் (Brassica junceaL) 26 தெரிவுகள் அவுஸ்திரேலியாவின் உஷ்ன வலய களப் பயிர் சேகரிப்பு நிறுவனத்திற்கு ஏற்றுமதி செய்யப் பட்டது.

வித்துக்களின் நடத்தை பற்றிய ஆராய்ச்சி

உயிரணு வங்கியில் காணப்படுகின்ற உயிர்ப் பான நிலையிலுள்ள தெரிவுகளின் வாழ்தகவை கணிப்பீடு செய்வதற்காக 1989- ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியான பல பரிசோதனைகள் செய்யப்பட்டதுடன் 2943 தெரிவுகள் வாழ்தக வினைக் கண்டறிவதற்காக பரீசிலிக்கப்பட்டன. இப்பரிசோதனைகளின் இறுதி முடிவாக நெல், பாசிப்பயறு போன்றவற்றின் வாழ்தகவு, முளைக்கும் போதுள்ள வாழ்தகவு நிலையை ஒத்திருந்தன.

மாதிரி கிராம நிகழ்ச்சி

கண்டியிலுள்ள Castle Milk மற்றும் நியன்கம எனும் இரு கிராமங்களிலும் மாதிரி வீட்டுத் தோட்டங்கள் நிர்மாணிக்கப்பட்டன. ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் தலா 05 விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டனர். 05 பாரம்பரிய மரக்கறி வகை கள் பயன்படுத்தப்பட்டன. கொள்ளு (Macrotyloma Uniflorum) வில்வெட் பீன் (Mucuna pruriens) லிமா பீன் (Phaseolus lunatus) Hyacinth bean (Lablab purpureus) வாள்போஞ்சி (Canavalia gladiate) சிறகவரை (Psopho carpus tetragonolobus) உள்ளூர் பூசணிக்காய் (Cucurbita moschata) நைமிரிஸ் (Capsicum frutescens) ஆகிய பயிர்களை அனைத்து 10 விவசாயிகளும் வெற்றிகரமாக செய்கை பண்ணி முடித்தனர்.

மூலவுயிருருக்களின் பெருக்கம், மதிப்பீட்டுப் பிரிவு

10 தக்காளி, 106 புடலங்காய், 102 கத்தரி சேர்க்கைகள் இயல்பாய்வு படுத்தப்பட்டுள்ளன. வழிகாட்டி நூலை வெளியிடுவதற்குத் தேவை யான சகல நடவடிக்கைகளும் செய்து முடிக்கப் பட்டுள்ளன. நெல் (31) பூசணிக்காய் (11) வெள்ளரி (26) கௌபீ (42) கடுகு (4) ஆகிய

தெரிவுகள் பெருக்கமடையச் செய்து மீள புதுப்பிக்கப்பட்டு பாதுகாப்பில் வைப்பதற்காக மரபணு வங்கியில் கையளிக்கப்பட்டன.

30 வற்றாளைத் தெரிவுகள் இயல்பாய்வு செய்யப்பட்டுள்ளதுடன் BT-4 தெரிவுகள் சிறந்தவையாக அடையாளம் காணப்பட்டு ள்ளன. Sclerotium rolfsii யிற்கு எதிராக 30 கௌபீத் தெரிவுகள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன. நுண்ணங்கிகளுக்கு எதிராக வீரியமானவை யென பரிசோதனைகளின் பெறுபேறாக சேர்க்கை 008366, 008390, 008847, 009155, 009542 என்பனவும் C (2009-03-152, C (2009-03-33 ஆகிய இரு சேகரிப்புகளும் கண்டறியப்பட்டன.

மரபணு அடிப்படையை (Genetic base) மேலும் விரிவாக்கம் செய்வதற்காக பின்வரும் கலப்புகள் செய்யப்பட்டன. Memordica dioica X M Charantia மற்றும் பரஸ்பரமானவை. Memordica dioica பெண் தாவரமாக பாவிக்கப்பட்ட போது F_1 வித்துக்களைப் பெறக் கூடியதாக இருந்தது. எப்படி இருப்பினும் வித்துக்கள் உறங்கு நிலையை காண்பித்ததுடன் F_1 தாவரங்களைப் பெற்றுக்கொள்ள உறங்கு நிலையை கலைப்ப தற்காக பரிகாரங்கள் செய்யப்பட்டன. பாகல் தாய் தாவரமாக பாவிக்கப்பட்ட போது மகரந்தச் சேர்க்கையின் 8 நாட்களின் பின்னர் முளையச் சிதைவு அவதானிக்கப்பட்டது. கருப் பாதுகாப்பு தொழினுட்ப முறை மூலம் F_1 தாவரங்களைப் பெற்றுக் கொள்வதற்கான முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன. வெண்டித் தாவரத்தின் மரபணு அடிப்படையை விரிவாக்கும் முகமாக “ஹரித” எனும் வர்க்கம் காட்டு இனமான (Wild variety) Abelmoschus anguloses எனும் இனத்துடன் கலப்புச் செய்யப்பட்டு F_1 வித்துக்கள் பெறப் பட்டன.

தாவர பிறப்புரிமை மூலவள தகவல் முகாமைத்துவ தொகுதி PGR தரவுத்தளம்

PGR தரவுத்தளமானது தற்சமயம் தரவு 12778 தெரிவுகளின் கடவுச்சீட்டுத் தரவுகளையும் நெல், சோளம், விரல் தினை (பின்கர்மில்லற்) நரிவால் தினை (Foxtail மிலெற்) சோளப்பயிர், கௌபீ, பாசிப்பயறு, உளுந்து, சோயா போஞ்சி, துவரம் பருப்பு, நிலக்கடலை, போஞ்சி, சிறகவரை, நீண்ட போஞ்சி (yard longbean) கத்தரி, தக்காளி, கறிமிளகாய், வெண்டி, பூசணி, பீர்க்கு, பாகல், கீரை புடலங்காய், கடுகு, எள்ளு போன்ற பயிர்கள் உள்ளிட்ட 25 வகைப் பயிர்களின் இயல்பாய்வுத் தரவுகளையும் கொண்டுள்ளது.

FAO திட்டத்தின் 'ஆசியாவிலே தாவர பிறப்புரிமை வளங்களின் உறுதியான பாவனையும், கொள்ளளவு விருத்தி மற்றும் பிராந்திய ஒத்துழைப்புடன் காப்பகங்களின் தரத்தை உயர்த்துதல் எனும் வேலைத் திட்டம் (GCP/ RAS/ 240/ JPN)

இத்திட்டமானது இலங்கையில் இரண்டாவது தடவையாகவும் அமுல்படுத்தப்பட்டுள்ளது. இத் திட்டத்திற்கான தரவுகளைத் திரட்டும் பணி 2011ம் ஆண்டிலே ஆரம்பிக்கப்பட்டது. GPA யிற்கே (Global Plan of Action) உரித்தான நடவடிக்கைகள் பற்றிய தகவல்கள், இத் திட்டத்துடன் சம்பந்தப்பட்ட ஆர்வமும் ஆசையும் கொண்ட 29 நிறுவனங்களிடமிருந்து சேகரிக்கப் பட்டன. அவை விவசாயத் திணைக்களம், ஏற்றுமதி விவசாயத் திணைக்களம், மாகாண விவசாயத் திணைக்களம், (வட மாகாணம்) தேயிலை ஆராய்ச்சி நிலையம், இறப்பர் ஆராய்ச்சி நிலையம், மர முந்திரிகை ஆராய்ச்சி நிலையம், பனை அபிவிருத்தி சபை, CIC விவசாய வியாபார நிலையம், இலங்கை பசுமை ஒன்றியம் என்பவற்றை உள்ளடக்கியிருந்தது.

உயிரியல் தொழில்நுட்பம்

கபில நிறத்தத்தி (BPH) களுக்கெதிராக நெல்லின் மூலவுயிருருவில் காணப்படும் எதிர்ப்புத்தன்மையை பகுப்பாய்வு செய்தல் Analysis of resistance of rice germ plasm for brown plant Hopper (BPH)

இதன் நோக்கமானது நெல்லின் மூலவுயிருருவில் கபில நிறத் தத்தி (BPH) இன் தாக்கத்திற்கு எதிரான வீரியமான பரம்பரைய லகை கண்டறிந்து மதிப்பீடு செய்து அவற்றை BPH ன் தாக்கத்திற்கு எதிரான வீரியமான வர்க்கங்களை விருத்தி செய்வதற்காக பாவிப்ப தாகும். இக்கற்கையின் போது 64 நெல்லின் மூலவுயிருருக்களைத் தெரிவு செய்ததுடன் அவற்றுள் 37-55 நலிவுடையவை எனவும் 19 MR (ஓரளவு வீரியமானவை) எனவும் சேர்க்கை இல 3177, RR (உயர் வீரியமுடையது) எனவும் அறியப்பட்டது. இப்பரிசோதனையின் பெறு பேறுகள் எதிர்காலத்தில் வீரியமுள்ள பரம்பரை யலகுகளின் மூலக்கூற்று இயல்பாய்விற்கு (Molecular characterization) அடிப்படையாக அமைந்துள்ளன. எதிர்காலத்தில் BPH இன் தாக்கத்திற்கெதிராக தெரிவை மேற்கொள்வதற்கு (Screening) 70 புதிய நெல் தெரிவுகள் களத்தில் ஸ்தாபிக்கப்பட்டு பெருக்கமடையச் செய்யப்படு கின்றன.

வெளி நடு, உள்நாட்டில் உள்ளகக் கலப்பின விருத்தி சோளங்களிடையிலான பிறப்புரிமை உறவு முறை பற்றிய கற்கை

இக்கற்கையானது, உள்நாட்டிலும் CIMMYT யின் மூலவுயிருருவிலிருந்து தெரிவு செய்யப்ப ட்ட 37 உள்ளகக் கலப்பினப்பினப் பேதங்களிற் inbred lines) கிடையில் தொடரப்பட்டது. DNA பிரித்தெடுப்பு நிறைவேற்றப்பட்டு SSR குறியீட்டா ளரைப் பயன்படுத்திச் செய்யப்படும் மூலக்கூற்று பல்வகைமையை (Molecular diversity) ஆராய்ச்சி செய்வதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. நன்கு வீரியமுடைய கலப்பின வர்க்கங்களை விருத்தி செய்வதற்காக மூலக்கூற்றுப் பல்வகை மையை அடிப்படையாகக் கொண்டு நெருங்கிய தொடர்பற்ற பெற்றோர் தாவரங்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

ராம்பூர் வெங்காய வர்க்கம், உள்நாட்டு மரக்கறிப் பயிர்களான தக்காளி கத்தரி மற்றும் சோளத்தின் 3 வித்துத் தொகைகளின் பிறப்புரிமை தூய்மையை கண்டறியும் பரிசோதனையின் நெறிமுறை அபிவிருத்தி

PCR பெருக்கப்பரிசோதனை செய்யப்பட்ட 10 RAPD முதன்மைகளில் ராம்பூர் வெங்காயத்தின் 3 தொகை வித்துக்களின் DNA களுக்கிடையே வேறுபாடான உருவ அமைப்பு (Polymorphism) காணப்பட்டது. பெருக்கம் செய்யப்பட்ட தொகு திகளின் பகுப்பாய்வின் போது ராம்பூர் ரோஸ் வர்க்கத்தின் 2 மாதிரிகளின் பிறப்புரிமை இடை வெளி குறைவாகவும் ராம்பூர்ரோஸ், ராம்பூர் சிவப்பு (Rampur rose, Rampur red) எனும் வர்க்கங்களின் பிறப்புரிமை இடைவெளி அதிக மாகவும் இருப்பது கண்டறிப்பட்டது. இப்பகு ப்பாய்வின் போது, குறித்த இம்மூன்று வர்க்கங்க ளிற்கிடையிலும் தனித்தனியான உயர் பிறப்பு ரிமை வேறுபாடு இருப்பது காண்பிக்கப்பட்டதுடன் அவை தூய்மையற்ற வர்க்கங்கள் எனவும் கண்டறியப்பட்டது. ராம்பூர் வெங்காயத்தின் தூய் மையை பரிசோதிப்பதற்காக இவ்விரு முதன்மை களும் பாவிக்கப்பட்டலாம்.

இரு கலப்பின தக்காளியின் பெற்றோர் தாவர த்தினதும் F_1 கலப்பின சந்ததியினதும் DNA க்கள் 20 SSR முதன்மைகளுடன் PCR பகுப்பா ய்வு செய்யப்பட்டு தெரிவு செய்யப்பட்டது. பெற்றோர்களுக்கிடையிலும், F_1 கலப்பினத்திலும் எவ்வித பல்லுரு மாற்றங்களும் (Poly morphism) காண்பிக்கப்படவில்லை.

கலப்பினக் கத்தரித் தாவரத்தின் உள்ளகக் கலப்பின பெற்றோர் தாவரங்கள், மற்றும் உள்ளகக் கலப்பின F_1 சந்ததி தாவரங்களைக் கொண்ட பெருந்தொகையான மாதிரிகளின் DNA பிரித்தெடுப்பு செய்யப்பட்டது. PCR பகுப் பாய்விற்காக SSR முதன்மையிலிருந்து தகவல் கள் பெற்றுக் கொள்ளப்பட்டன. எதிர்காலத்தில்

பகுப்பாய்வு செய்வதற்குத் தேவையான நெறி முறை அபிவிருத்திக்கு (Polymorphic) பல்லுரு மாற்ற முதன்மைகள் தெரிவு செய்யப்பட்டன. சோளத் தாவரத்தின் கலப்பின வர்க்கமான "சம்பத்" தின் F_1 சந்ததியினதும் பெற்றோர் தாவரத்தினதும் DNA யுடன் 10 SSR முதன்மை களும் பாவிக்கப்பட்டு PCR பகுப்பாய்வு செய்யப் பட்டது. கலப்பினம், மற்றும் இரு பெற்றோர்க ளிற்கிடையிலான 2 முதன்மைகள் பல்லுரு மாற்றம் உடையனவாக இருப்பது பெறுபேற்றின் மூலம் தெரிய வந்தது. " சம்பத்" கலப்பின வர்க்கத்தின் தூய்மையைப் பரிசோதிக்கும் சோத னையின் நெறிமுறை அபிவிருத்திக்காக இவ்விரு முதன்மைகளும் தெரிவு செய்யப்பட்டன.

PGR இல் வற்றாளைக் கிழங்கு, உருளைக்கிழங்கு, இராசவள்ளிக்கிழங்கு மற்றும் வாழை இனங்களின் உள்ளக, மற்றும் தாவர வீட்டு காப்பகங்கள்

இப்பிரிவில் இராசவள்ளி (Dioscorea) இனத்தின் 60 தெரிவுகள் உள்ளக நிலையில் ஆய்வு கூடம் மற்றும் சாடிகளில் தாவர வீட்டிலும், வற்றாளை யின் 104 தெரிவுகள் உள்ளக நிலையிலும், 114 சேர்க்கைகள் தாவர வீடுகளில் சாடித் தாவரமாக வும், உருளைக்கிழங்கின் 15 தெரிவுகள் மற்றும் வாழையின் 7 தெரிவுகள் உள்ளக நிலையிலும் பேணப்படுகின்றன. இம்மூலவுயிர்ருருக்கள், வேண்டுதலின் பேரில் இனவிருத்தி நிகழ்ச்சிக்காக வழங்கப்பட்டுள்ளன.

இனிப்புத் தோடை , வாழை இனங்களில் நோய் அற்ற நடுகைப் பொருட்களின் உற்பத்தி

றப்லெமன் (Roughlemon) மற்றும் பிலிப்பைன் சிவப்பு எலுமிச்சை (Philippine red lime) போன் றவற்றின் வித்துக்கள் பல்வேறு பாகங்களி லுமிருந்து சேகரிக்கப்பட்டு, இனிப்புத் தோடை யில் (Grafting) ஒட்டுதலுக்காக சேமிக்கப்படு கின்றன. எதிர்கால நிகழ்ச்சிகளில் ஒட்டுக் கட்டைத் தாவரத்திற்குரிய விதைகளைப் பெற்றுக் கொள்வதற்காக ஏறக்குறைய 20 ரம்லெமன் தாவரங்கள் களத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. ரப்லெமன் புளித்தோடை, பிலிப்பைன் சிவப்பு எலுமிச்சை மற்றும் லீமா எலுமிச்சை போன்வ ற்றின் உள்ளக நுண் ஒட்டுதல் மற்றும் பகுதி நுண் ஒட்டுதல் மூலமும் ஒட்டுதல் முளை செய்யப்பட்ட 75, 118 ஒட்டுக்கட்டைகள் ஒட்டப் பட்டன. வலிமைபடுத்தல் காலநிலைக்குப் (Acclimatization) பழக்கப்படுத்தல் போன்ற நிலைமைகளில் இவற்றுள் 78 தாவரங்கள் காணப்படுகின்றன.

வாழையின் 10 வர்க்கங்களைச் சேர்ந்த 92 தாவரங்கள் பல்வேறு பாகங்களிலிருந்து சேகரி க்கப்பட்டு தாய்த் தாவரங்களாக உபயோகப்படு த்தவென ஆராய்ச்சிக் களத்தில் ஸ்தாபிக்கப்பட்டு ள்ளன. புலதிசி, கன்டுல, சீனி, எம்பன் ஆகிய வாழை இனங்களின் உள்ளக வளர்ப்பு ஆரம்பிக் கப்பட்டுள்ளது. அவை உப வளர்ப்புக்குட்படுத்தல் பெருக்கமடையச் செய்தல், வன்மையாக்கல் மற்றும் காலநிலைக்குப் பழக்கப்படுத்தல் போன்ற நோக்கங்களுக்காக பாவிக்கப்படவுள்ளன. 2011 ஆம் ஆண்டின் இறுதியில் இவ் உள்ளக வளர்ப்புக்களில் 12 வேர்கொள்ளும் நிலையிலும், 17 வலிமைபடுத்தல் நிலையிலும், 152 தாவரப் பாகங்கள் காலநிலைக்குப் பழக்கப்படுத்தும் நிலையிலும் காணப்பட்டன. PGRC யின் ஆராய் ச்சிக் களத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த 220 இழைய வளர்ப்புத் தாவரங்களுள் 186 தாவர ங்கள் ஏற்கனவே விநியோகம் செய்யப்பட்ட துடன், 133 தாவரங்கள் விநியோகத்திற்குத் தயாராக உள்ளன. அத்துடன் நுண் இனப்பெ ருக்க முறை மூலம் நோய்கள் அற்ற தாவர ங்களை உற்பத்தி செய்வதற்கான பரிசோதனை களும் நெறிமுறையினை மிகச் சிறந்த முறைக்கு கொண்டு வருதல் போன்ற நடவடிக்கைகளும் நடாத்தப்படுகின்றன.

பயிற்சிகளும், விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும்

2011ஆம் ஆண்டில் ஆராய்ச்சிப் பகுதியானது நில அளவைத் திணைக்களம், வனவிங்குகள், தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம் என்பவற் றுடன் சேர்த்து "மூலவுயிருருவைக் காப்பதற்கு GIS நுட்பத்தை பாவித்தல்" எனும் தலைப்பில் அலுவலர்களுக்கான ஒரு பயிற்சியை நடாத் தியது. இப்பயிற்சி நிகழ்ச்சியின் போது, உட்புற மற்றும் வெளிப்புறக் காப்பகங்கள் GIS

தொழில்நுட்பங் கள், காடுகளின் வகைகளின் வெளிப்படுத்துகை யாக இருந்தது. ஆராய்ச்சிப் பகுதியானது ஏனைய பகுதிகளின் உதவியுடன் பல்கலைகழக மாணவர்கள், ஆசிரியர்கள், நிறுவனத்தின் பயிற்சியாளர்கள், விவசாயிகள் போன்றோருக்கான 25 விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், பல்வேறு பாடசாலைகளுக்காக 40 நிகழ்ச்சிக ளையும் நடத்தியது.

உயிரியல் தொழில்நுட்பம் சம்பந்தமான உள்ளீர்ப்புப் பயிற்சியில் விவசாய டிப்ளோமா பாடநெறியை பயிலும் 3 மாணவர்களும் , 4 பல்கலைக்கழக மாணவர்களும் கலந்து கொண்ட னர். ஆராய்ச்சித் திட்டங்கள் (research projects) போன்ற நீண்ட கால பயிற்சியை 3 பட்டபின் படிப்பு மாணவர்களும், 4 பல்கலைக்கழக மாணவர்களும் பெற்றுக் கொண்டனர். அனுரா தபுரத்திலுள்ள ரஜரட்டைப் பல்கலைகழகத்தின் விவசாய பீடத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் மற்றும் பட்டப்பின்படிப்பு மாணவர்கள் மற்றும் 120 பட்டப்படிப்பு மாணவர்களும் கலந்து கொண்ட உயிரியல் தொழில்நுட்பம் மற்றும் PGR சம்பந்தமான ஒரு முழு நாள் நிகழ்ச்சி ஒன்றை யும் இப்பகுதி நடத்தியது.

அத்துடன் 189 ஆசிரியர்கள் அடங்கிய 3 குழுக்கள், 13 விரிவுரையாளர் அடங்கிய 3 குழுக்கள், 1492 பாடசாலை மாணவர்களைக் கொண்ட 32 குழுக்கள், விவசாயக் கல்லூரிக ளின் 07 மாணவர் குழுக்கள், பல்கலைகழக ங்களின் 07 மாணவர் குழுக்கள் , 02 விவசாயக் குழுவினர் மற்றும் ஏனையோரைக் கொண்ட 10 குழுக்கள் போன்றோருக்கு செய்து காண்ப்பித்தல் நடவடிக்கைகளையும் நடத்தியது.

மதிப்பீடு செய்யும் பகுதியின் தலைவரின் கண்காணிப்பின் கீழ் இரு பல்கலைக்கழக மாண வர்கள் தமது பட்டப்படிப்பிற்கான ஆராய்ச்சி நிகழ்ச்சியை செய்து முடித்தனர்.

2012ம் ஆண்டிற்கான திட்டங்கள்

- தாவரப் பிறப்புரிமை மூல வளங்களின் பரிசோதிப்பு சேகரிப்பு போன்ற நடவடிக்கை களை தொடர்ந்து மேற்கொள்ளல்
- பரிசோதிப்பு, சேகரிப்புப் பகுதி போன்றவற்றி லிருந்து பெறப்படும் வித்து மாதிரிகளை பரிகரிப்புச் செய்து பாதுகாத்தல்
- பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளவற்றின் வாழ் தகவைக் கண்டறிவதற்கான பரிசோதனை களைத் தொடர்தல்
- தாவரப் பிறப்புரிமை மூலவளங்களை உள்ளகக் காப்பகங்களில் பாதுகாத்தல்.
- தாவர பிறப்பரிமை மூலவளங்களை இயல்பு படுத்தல்.
- பெருக்கமடையச் செய்தல் மற்றும் மீள இளமையாக்குதல்.
- தற்போதுள்ள தரவு முகாமைத்துவ அமைப் பை மேலும் விருத்தி செய்வதும் பராமரித்த லும்
- தாவரப் பிறப்புரிமை மூலவளங்களின் மூலக் கூற்று இயல்பாக்கம்
- மூலக்கூற்று தொழில்நுட்பத்தைப் பாவிப்பதன் மூலம் தாவரப் பிறப்புரிமை மூலவளங்களை தாவர விருத்திக்காகப் பாவித்தல்
- பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை தொடர்ந்து நடத்தல்.

உத்தியோகத்தர் பட்டியல்

பதவியணி	எண்ணிக்கை
பிரதிப் பணிப்பாளர்	01
ஆராய்ச்சி அலுவலர்	09
நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்	02
விவசாயப் போதனாசிரியர்	03
ஆராய்ச்சி உதவியாளர்	04
ஆராய்ச்சி உப உதவியாளர்	05
பொது முகாமைத்துவ உதவியாளர் சேவை	07
களஞ்சியக் காப்பாளர்	01
அலுவலக ஊழியர்	01
சாரதி	03
பாரஊர்தி சுத்தமாக்குபவர்	01
மின்னியலாளர்	03
சுற்றுலா விடுதிக் காப்பாளர்	01
காவலாளி	05
சினிமா இயந்திர இயக்குனர்	01
தொழிலாளர் (தரம் - I)	13
தொழிலாளர் (தரம் - II)	06
தொழிலாளர் (ஒப்பந்த)	19
மொத்தம்	**85**

3.2 விதைகள்மற்றும்நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி நிலையம் (SPMDC), பேராதனை

விவசாய விளைவுகளை அதிகரிப்பதற்கும் உற்பத்திச் செலவைக் குறைப்பதற்கும் உயர்தர விதை மற்றும் நடுகைப்பொருட்களின் பாவனை மிக முக்கியமானதாகக் காணப்படுகின்றது. நாடு முழுவதிலும் விதையுற்பத்தி மற்றும் விதை விநியோகத்தில் விதைகள் மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி நிலையம் முக்கிய பங்குவகிக்கின்றது. உள்ளூரில் சிபாரிசு செய்யப்பட்ட அனைத்து நெல், மறுவயற் பயிர்கள், மரக்கறிகள், உருளைக்கிழங்கு, தரமான நடுகைப்பொருட்கள் என்பவற்றை உற்பத்தி செய்து விநியோகிப்பது மிகமுக்கியமான சவாலாக விதைகள் மற்றும் நடுகைப்பொருட்கள் அபிவிருத்தி நிலையத்திற்குத் தற்பொழுது காணப்படுகிறது.

விதைகள் மற்றும் நடுகைப்பொருட்கள் அபிவிருத்தி நிலையத்தின் கீழுள்ள 18 அரச விதை உற்பத்திப் பண்ணைகளிலும் விதைகள் மற்றும் நடுகைப்பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. மேலும் நெல், மறுவயற்பயிர், மரக்கறி வகைகளின் சிபாரிசு செய்யப்பட்ட விதையுற்பத்தியானது தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தக் கமக்காரர்களினூடாக மேற்கொள்ளப்படுகிறது.

பாதீடு

அட்டவணை 3.2.1:2011 வருடாந்தப் பாதீடு (ரூபா)

செலவு விடயம்	மொத்த ஒதுக்கீடு	செலவு	செலவு%
மூலதனம்	35.323	29.058	82
நடைமுறைச் செலவு	46.301	44.585	96
விசேட நிகழ்ச்சித் திட்டங்கள்			
விதையுற்பத்தியும் கொள்வனவும்	486.3	473.4	97
சமுதாயம் சார்ந்த விதையுற்பத்தி	5.0	4.61	92
கூட்டெரு உற்பத்தி	6.0	5.05	84
கலப்பினச் சோள விதையுற்பத்தி	1.05	1.05	100
கலப்பின மரக்கறி விதையுற்பத்தி	0..375	0.293	78
விதை உற்பத்திப் பண்ணைகளை மீள ஆரம்பித்தல் - பரந்தன், முருங்கன் (JICA)	100.0	97.7	98
விரைவுபடுத்தப்பட்ட விதைப்பண்ணை அபிவிருத்தித் திட்டம்	200.0	85.0	43
மொத்தம்	**895.3**	**740.7**	**83**

முன்னேற்றம்

விதைநெல் உற்பத்தியும், வழங்கலும்

அரச விதை உற்பத்திப் பண்ணைகளில் அடிப்படை விதை நெல் உற்பத்தி

சிபாரிசு செய்யப்பட்ட 28 நெல் இனங்களின் அத்திவார, பதிவு செய்யப்பட்ட விதை நெல் வகுப்புகள், 7 அரச விதை உற்பத்திப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்டது. 2011 ஆம் ஆண்டில் 112,794 புசல் (2,312.3 தொன்) பதிவு செய்யப்பட்ட விதைநெல் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. 2010ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 7.17% அதிகமாகும். அரச விதையுற்பத்திப் பண்ணைகளில் அடிப்படை விதைநெல் உற்பத்தி செய்யப்படாத வயல் நிலங்களில் 14,617 புசல் (299.7 தொன்) சிபாரிசு செய்யப்பட்ட விதைநெல் 2011இல் உற்பத்தி செய்யப்பட்டது.

அட்டவணை 3.2.2: 2011 ஆம் ஆண்டில் அரச விதையுற்பத்திப் பண்ணைகளில் அடிப்படை விதை நெல் உற்பத்தி

விதைப்பண்ணை	பெரும்போகம்(தொன்) 2010/2011			சிறுபோகம்(தொன்) 2011			மொத்தம் (தொன்)		
	FSP	RSP	CSP	FSP	RSP	CSP	FSP	RSP	CSP
அளுத்தறம	11.0	111.2	7.5	18.2	116.7	31.1	29.2	227.8	38.6
அம்பலாந்தோட்டை	1.9	57.3	5.2	3.0	70.9	14.1	4.9	128.1	19.3
பட்டாத்தை	5.2	29.6	13.0	1.5	6.1	2.1	6.6	35.7	15.1
கந்தளாய்	6.4	102.0	9.8	12.6	246.5	2.6	19.0	348.5	12.4
மகாஇலுப்பள்ளம	15.0	258.2	17.9	24.2	391.6	0.5	39.2	649.8	18.3
மல்வத்தை	3.3	60.5	14.0	5.2	108.7	66.6	8.5	169.1	80.6
பொலநறுவை	9.2	218.6	31.8	11.3	399.8	0.7	20.5	618.4	32.6
முருங்கன்	0.9	42.0	-	-	-	-	0.9	42.0	-
பரந்தன்	2.4	36.1	5.8	4.7	47.6	-	7.1	83.7	5.8
கரடியனாறு	-	4.3	36.1	-	4.7	40.5	-	9.0	76.6
மொத்தம் (தொன்)	**55.3**	**919.7**	**141.2**	**80.6**	**1392.5**	**158.4**	**136.0**	**2312.3**	**299.7**
மொத்தம்	**2699**	**44865**	**6889**	**3933**	**67929**	**7728**	**6632**	**112794**	**14617**

*FSP - அத்திவார விதையுற்பத்தி

*RSP - பதிவு செய்யப்பட்ட விதையுற்பத்தி

*CSP - சிபாரிசுசெய்யப்பட்ட விதையுற்பத்தி

ஒப்பந்தக் கமக்காரர்களினூடாக சிபாரிசு செய்யப்பட்ட விதை நெல் உற்பத்தி

இத்திட்டத்தின் கீழ் விதை நெல் உற்பத்தியானது விதை நடுகைப்பொருள் அபிவிருத்தி நிலைய த்தினால் 2010/2011 காலபோகம் மற்றும் 2011 சிறுபோகம் என்பவற்றிற்குமாக 70,000 புசல் இலக்காக நிர்ணயிக்கப்பட்டு மேற்கொள்ளப் பட்டது. (ஒரு போகத்திற்கு 35,000 புசல் விதை நெல் அட்டவணை 3.2.3 காட்ட ப்பட்டவாறு 9 பிராந்திய விதை நடுகைப்பொருள் அபிவிருத்தி நிலையத்தினால் 2011 ஆம் ஆண்டில் கொள் வனவு செய்யப்பட்டது.

அட்டவணை 3.2.3 (1) சிபாரிசு செய்யப்பட்ட விதை நெல் கொள்வனவு

உதவி	கொள்வனவு செய்யப்பட்ட அளவு			
விவசாயப் பணிப்பாளர் பிராந்தியம்	2010/11 பெரும்போகம் (தொன்)	2011 சிறுபோகம் (தொன்)	மொத்தம் (தொன்)	மொத்தம் (புசல்)
அளுத்தறம	121.8	201.8	323.6	15785
அம்பாறை	153.4	186.6	340.0	16584
பட்டஅத்தை	25.7	103.4	129.1	6297
கந்தளாய்	78.0	203.3	281.2	13718
மகாஇலுப்பள்ளம	147.8	112.4	260.2	12691
நிக்கரவெட்டிய	108.9	147.2	256.2	12496
பெல்வெஹர	146.6	138.9	285.5	13927
பொலநறுவை	62.9	208.3	271.3	13233
கிளிநொச்சி	15.4	11.4	26.8	1308
வவுனியா	20.3	-	20.3	991
மொத்தம் (தொன்)	**880.7**	**1313.4**	**2194.1**	
மொத்தம் (புசல்)	**42962**	**64068**		**107030**

அவசரகால விதை நெல் வழங்கல் திட்டம்

2011 இல் விதைகள் மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி நிலையத்தினால் விசேட மாக நடைமுறைப்படுத்தப்பட்ட அவசரகால விதை நெல் கொள்வனவுத் திட்டத்தின் கீழ் 236,195 புசல் விதை நெல் கொள்வனவு செய்ய ப்பட்டு 2010 / 2011 காலபோகத்தில் வெள்ள அனர்த்தத்திற்குட்பட்ட விவசாயிகளுக்கு 2011 சிறுபோகம் மற்றும் 2011/2012 காலபோகம் என்ப வற்றில் பயிர் செய்வதற்காக இலவசமாக வழங்கப்பட்டது.

அட்டவணை 3.2.4 (1) அவசரகால விதை நெல் கொள்வனவு

உதவி	கொள்வனவு செய்யப்பட்ட அளவு			
விவசாயப் பணிப்பாளர் பிராந்தியம்	2010/11 பெரும்போகம் (தொன்)	2011 சிறுபோகம் (தொன்)	மொத்தம் (தொன்)	மொத்தம் (புசல்)
அளுத்தறம	234.9	37.1	272.0	13268
அம்பாறை	556.1	698.4	1254.5	61195
பட்டஅத்தை	5.4.5	10.9	515.4	25142
கந்தளாய்	261.5	353.1	614.6	29981
மகாஇலுப்பள்ளம	292.9	254.7	547.6	26712
நிக்கரவெட்டிய	240.0	202.4	442.4	21581
பெல்வெஹர	91.2	157.8	249.0	12146
பொலநறுவை	205.7	192.1	397.8	19405
கிளிநொச்சி	62.1	143.3	205.4	10019
வவுனியா	105.5	213.3	318.8	15551
கொழும்பு	24.5	-	24.5	1195
மொத்தம் (தொன்)	**2578.9**	**2263.1**	**4842.0**	
மொத்தம் (புசல்)	**125800**	**110395**		**236195**

வர்த்தக ரீதியாக நெற்செய்கையில் தரமான விதை நெல் பாவனையை அதிகரிப்பதற்காக தனியார் நிறுவனங்களை உள்ளடக்கிய பல்வேறுபட்ட நிறுவனங்களுடனான பங்களிப்புடன் இணைந்த தரமான விதை நெல் உற்பத்தித் திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன. இத்திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட விதை நெல் வழங்கப்பட்டு விவசாயத் திணைக்களத்தின் விதை அத்தாட்சிப்படுத்தும் சேவையின் உதவியுடன் சிபாரிசு செய்யப்பட்ட விதை நெல் உற்பத்தி செய்யப்பட்டது. மேலும் தரமான விதை நெல் உற்பத்தியை உறுதிப்படுத்துவதற்காக துணைநிலை விதைப்பண்ணைத் திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட விதைநெல் வழங்கப்பட்டது.

பல்வேறுபட்ட அரச தனியார் நிறுவனங்களினால் உற்பத்தி செய்யப்பட்ட சிபாரிசு செய்யப்பட்ட விதை நெல் அளவுகள் அட்டவணை 3.2.5 இல் தரப்பட்டுள்ளது. தனியார் நிறுவனங்களால் உண்மையில் உற்பத்தி செய்யப்பட்ட விதை நெல்லின் அளவு அட்டவணையில் தரப்பட்ட அளவிலும் அதிகமாகும். ஏனெனில் சில தனியார் கம்பனிகள் திணைக்கள விதை அத்தாட்சிப்ப டுத்தல் திட்டங்களின் கீழ் பங்குகொள்வதில்லை. அவை தமக்கென சொந்தமான தரக்கட்டுப்பாட்டு முறைகளைக் கைக்கொள்கின்றனர். திணைக்கள த்தின் கீழான சிபாரிசு செய்யப்பட்ட விதை நெல்லாக 17,624.18 தொன் (931,362 புசல்) 2010 இல் உற்பத்தி செய்யப்பட்டது. (அட்டவணை 3.2.4) இது மொத்த விதை நெல் தேவையில் 17% ஆகும். 2010ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1.37% அதிகரிப்பு காணப்பட்டது. சிபாரிசு செய்யப்பட்ட விதை நெல் பாவனை ஏறத்தாள மொத்த விதை நெல் தேவையில் 15% ஆகக் காணப்படுவது திருப்திகரமான நிலையாகும்.

அட்டவணை 3.2.5 இணைந்த சிபாரிசு செய்யப்பட்ட விதை நெல் உற்பத்தித் திட்டம் – 2011

நிறுவனம்	காலபோகம் 2010/11		சிறுபோகம் 2011		வருடம் 2011		உற்பத்தி	
	விவசாயத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட விதை நெல் லின் அளவு (தொன்)	சிபாரிசு செய்யப்பட்ட நிலத்தின் அளவு (ஏக்)	வி.தி. னால் வழங்கப்பட்ட விதை நெல் லின் அளவு (தொன்)	சிபாரிசு செய்யப்பட்ட நிலத்தின் அளவு (ஏக்)	வி.தி.னால் வழங்கப்பட்ட விதை நெல் லின் அளவு (தொன்)	சிபாரிசு செய்யப்பட்ட நிலத்தின் அளவு (ஏக்)	தொன்	புசல்
விவசாயத் திணைக்களம்							2194.60	107030
மாகாணம்	69.97	1547.5	63.84	1331.5	133.8	2879.0	3836.27	187135
இடை மாகாணம்	41.33	716.0	34.71	687.0	76.03	1403.0	1869.50	91195
கமநலசேவை	37.08	691.8	3.10	74.6	40.18	766.4	1021.23	49816
மகாவலி	29.79	723.6	14.80	326.0	44.59	1049.6	1398.59	68224
கூட்டுறவுச்சங்கம்	10.95	245.5	7.71	314.2	18.66	559.7	745.80	36381
விவசாய அமைப்பு	119.47	2091.5	75.46	2476.7	194.93	4568.2	6087.13	296933
தனிப்பட்ட விவசாயிகள்	39.98	754.9	20.97	463.5	60.95	1218.4	1623.52	79196
தனியார் கம்பனிகள்	22.49	478.4	60.41	1108.7	82.90	1587.1	2114.81	103162
ஏனையவை	5.45	139.1	10.39	204.3	15.58	343.4	457.58	22321
மொத்தம்	**376.50**	**7388.30**	**291.39**	**6986.50**	**667.89**	**14374.8**	**19154.42**	**934362**

விதைநெல் வழங்கல்

விதைநெல் உற்பத்தி மற்றும் வர்த்தகப் பயிர்ச்செய்கைக்காக விவசாயத் திணைக்களம் 2011 இல் வழங்கப்பட்ட விதை நெல் விபரங்கள் அட்டவணை 3.2.6 இல் தரப்பட்டுள்ளது. கடந்த போகத்தில் உற்பத்தியாளர் விதை மூலம் பெறப்பட்ட அத்திவார விதையை உபயோகித்து அரச விதை உற்பத்திப் பண்ணைகளில் பதிவு செய்யப்பட்ட விதை உற்பத்தி செய்யப்பட்டது. ஒப்பந்தக் கமக்காரர், தனியார் கமக்காரர் மற்றும் தனியார் நிறுவனங்களுக்குப் பதிவு செய்யப்பட்ட விதை நெல் வழங்கப்பட்டு சிபாரிசு செய்யப்பட்ட விதை நெல் உற்பத்தி செய்யப்பட்டது. 2011 இல் மொத்த பதிவு செய்யப்பட்ட விதை நெல் வழங்கல் 1,984.4 தொன் (96,802 புசல்) ஆகும். சிபாரிசு செய்யப்பட்ட விதைநெல் வழங்கல் 2,197.9 தொன் (107,215 புசல்) ஆகும்.

அட்டவணை 3.2.6: விவசாயத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட விதைநெல் அளவுகள் (மெ.தொன்)

போகம்	திட்டம்	அத்தி வாரம்	பதிவு செய்யப் பட்டது	உப மொத்தம்	சிபாரிசு செய்யப் பட்டது	மொத்தம்	
						(தொன்)	(புசல்)
சிறுபோகம் 2011	அரசபண்ணை	22.45	23.84	46.29	0.08	46.37	2262
	ஒப்பந்தக்கமக்காரர்	1.68	54.00	55.68	12.14	67.81	3308
	தனியார்	1.46	395.94	397.39	49.08	446.47	21779
	விரிவாக்கம்	2.50	348.36	350.86	1120.10	1470.96	71754
	மொத்தம் (மெ.தொன்)	**28.09**	**822.13**	**850.22**	**1181.39**	**2031.61**	**99103**
	மொத்தம் (புசல்)	**1370**	**40104**	**41474**	**57629**	**99103**	
காலபோகம் 2011/12	அரசபண்ணை	21.63	14.80	36.41	0.12	36.53	1782
	ஒப்பந்தக்கமக்காரர்	2.58	85.44	88.03	0.68	88.70	4327
	தனியார்	1.76	326.95	328.72	29.50	358.22	17474
	விரிவாக்கம்	1.19	735.13	736.32	986.21	1722.53	84026
	மொத்தம் (மெ.தொன்)	**27.16**	**1162.31**	**1189.47**	**1016.51**	**2205.98**	**107609**
	மொத்தம் (புசல்)	**1325**	**56698**	**58023**	**49586**	**107609**	
விதைநெல் வழங்கல் (2011)	அரசபண்ணை	44.08	38.62	82.70	0.21	82.90	4044
	ஒப்பந்தக்கமக்காரர்	4.26	139.44	143.71	12.81	156.52	7635
	தனியார்	3.22	722.89	726.11	78.58	804.69	39253
	விரிவாக்கம்	3.69	1083.49	1087.18	2106.31	3193.49	155780
	மொத்தம் (மெ.தொன்)	**55.25**	**1984.44**	**2039.69**	**2197.91**	**4237.60**	**206712**
	மொத்தம் (புசல்)	**2695**	**96802**	**99497**	**107215**	**206712**	

மறுவயற் பயிர்களின் உற்பத்தியும் வழங்களும்

10 மறுவயற் பயிர்களின் 30 இனங்கள் உபயோகிக்கப்பட்டு இவற்றின் 4 வகையான வகுப்பு (அத்திவாரம், பதிவு செய்யப்பட்ட, சிபாரிசு செய்யப்பட்ட, வர்த்தக) விதைகளும் 2011 இல் உற்பத்தி செய்யப்பட்டன.

அடிப்படை விதை (அத்திவாரம் மற்றும் பதிவு செய்யப்பட்ட) உற்பத்தி

இவ்வருடம் அரச விதை உற்பத்திப்பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்ட அத்திவார விதைகள் மற்றும் ஒப்பந்தக் கமக்காரர் திட்டத்தின் கீழ் உற்பத்தி செய்யப்பட்ட பதிவு செய்யப்பட்ட விதைகள் பற்றிய விபரம் அட்டவணை 3.2.7 இல் தரப்பட்டுள்ளது. 2011 ஆம் ஆண்டில் 85,520 கிலோ அடிப்படை விதைகள் (அத்தி வாரம் மற்றும் பதிவு செய்யப்பட்டவிதைகள்) உற்பத்தி செய்யப்பட்டது. இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 33% அதிகமாகும் (64,369 கிலோ) அதில் பிரதானமான அனைத்துப் பயிர்களினதும் அடிப்படை விதைகள் அதிகளவில் உற்பத்தி செய்யப்பட்டன. (கௌபீ, உழுந்து, எள், பயறு, சோளம், குரக்கன்) மிளகாய், சோயா மற்றும் நிலக்கடலை விதை உற்பத்தி இதனுள் உள்ளடக்கப்படவில்லை. இவ்வில க்கை அடைவதற்கு ஒப்பந்த அடிப்படையிலான பதிவு செய்யப்பட்ட விதை உற்பத்தி திட்டம் பெரிதும் பங்காற்றியது.

சிபாரிசு செய்யப்பட்ட விதை உற்பத்தி

ஒப்பந்தக் கமக்காரர் திட்டத்தினூடாக சிபாரிசு செய்யப்பட்ட மறுவயற் பயிர் விதைகள் பிரதான மாக உற்பத்தி செய்யப்பட்டன. இருந்த போதிலும் கலப்பினச் சோள வர்க்கமாகிய சம்பத் பிரதானமாக மகாஇலுப்பள்ளம, அளுத்தறம, பட்டா அத்த, அரச விதை உற்பத்திப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்டது. 321.5 தொன் சிபாரிசு செய்யப்பட்ட மறுவயற் பயிர் விதைகள் கடந்த ஆண்டில் மொத்தமாக உற்பத்தி செய்யப்பட்டது. இது 2010 இல் உற்பத்தி செய்யப்பட்ட விதைகளுடன் ஒப்பிடுகையில் 14.71% அதிகமாகும். (அட்டவணை 3.2.8) இவ் இலக்கு ஒப்பந்தக் கமக்காரர் திட்டத்தின் கீழான பயறு மற்றும் நிலக்கடலைச் செய்கையை விரிவுபடுத்தியமை யால் பிரதானமாக அடையப்பட்டது. எனினும் ஒப்பந்த அடிப்படையிலான மிளகாய் விதை உற்பத்தியில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கை அடைய முடியவில்லை. வளர்ச்சி மற்றும் அறுவடைக்காலங்களில் நீடித்த பொருத்தமற்ற காலநிலை காரணமாக இந்நிலை பிரதானமாக ஏற்பட்டது. மேலும் நாட்டில் அதிகரித்த பச்சை மிளகாய் விலை காரணமாக மிளகாய் விதை உற்பத்தியில் ஈடுபட்ட விவசாயிகள் தமது விளைவை பச்சை மிளகாயாக விற்றுவிட்டனர். பசுந்தாட் பசளையாக உபயோகிக்கப்படும் சணலின் வர்த்தக விதை உற்பத்தி மட்டுப்படு த்தப்பட்ட அளவில் அரச விதை உற்பத்திப் பண்ணையிலும், ஆராய்ச்சி நிலையங்களிலும் பயன்படுத்துவதற்காக உற்பத்தி செய்யப்பட்டது.

2011 இல் மறுவயற் பயிர் விதை வழங்கல்

2011 இல் வழங்கப்பட்ட அடிப்படை (அத்திவாரம் பதிவு செய்யப்பட்ட) மற்றும் சிபாரிசு செய்யப் பட்ட விதைகளின் அளவுகள் அட்டவணை 3.2.9 இல் தரப்பட்டுள்ளது. 2011 இல் மொத்தமாக வழங்கப்பட்ட விதைகளின் அளவு ஏறத்தாழ 268 தொன் ஆகும். இது கடந்த ஆண்டு வழங்கப் பட்ட விதைகளிலும் பார்க்க சிறிதளவு அதிகமா கும். கடந்த 26 வருட கால வழங்கலுடன் ஒப்பிடுகையில் 2011ன் வழங்கல் உயர்ந்ததாகும்.

அட்டவணை 3.2.7: 2011 இல் மறுவயற் பயிர்களின் அடிப்படை விதை உற்பத்தி

பயிர்	அத்திவாரம்			பதிவு செய்யப்பட்டது							
	அரசபண்ணை			அரசபண்ணை			ஒப்பந்தக்கமக்காரர்			மொத்தம்	மொத்த அடிப்படை விதை உற்பத்தி
	கால போகம் 2010/ 2011	சிறு போகம் 2011	மொத்தம்	கால போகம் 2010/ 2011	சிறு போகம் 2011	மொத்தம்	கால போகம் 2010/ 2011	சிறு போகம் 2011	மொத்தம்		
உழுந்து	268	1106	1374	187	1235	1422	313	18761	19074	20496	21870
மிளகாய்விதை	109	226	335	-	-	-	-	-	-	-	335
கௌபீ	1540	274	1814	2279	787	3066	977	3059	4036	7102	8916
எள்ளு	253	-	253	148	527	675	306	779	1084	1759	2012
பயறு	162	310	472	674	666	1340	203	16168	16371	17711	18183
நிலக்கடலை	346	751	1097	1387	1071	2458	85	540	625	3083	4179
குரக்கன்	408	-	408	1586	687	2273	885	-	885	3158	3565
சோளம்விதை*	121	1189	1310	1414	3618	5032	2037	9373	11410	16442	17752
சோயா	67	665	732	432	447	879	2098	5000	7098	7976	8708
மொத்தம்	**3274**	**4521**	**7795**	**8106**	**9038**	**17144**	**6902**	**53681**	**60582**	**77726**	**85521**

* அயன் மகரந்தச் சேர்க்கைக்குரிய வர்க்கங்கள்

அட்டவணை 3.2.8 : 2011 இல் ஒப்பந்தக்கமக்காரர் திட்டத்தின் கீழான சிபாரிசு செய்யப்பட்ட மற்றும் வர்த்தக விதை உற்பத்தி

பயிர்	ஒப்பந்தக்கமக்காரர்							அரசபண்ணை							
	காலபோகம் 2010/11			சிறுபோகம் 2011				காலபோகம் 2010/11			சிறுபோகம் 2011				
	சிபாரிசு	வர்த்தகம்	மொத்தம்	சிபாரிசு	வர்த்தகம்	உப மொத்தம்	மொத்தம்	சிபாரிசு	வர்த்தகம்	மொத்தம்	சிபாரிசு	வர்த்தக	மொத்தம்	உப மொத்தம்	மொத்தம்
உழுந்து	7474	1908	9381	8420	4662	13081	22462	0	0	0	0	0	0	0	22462
மிளகாய்விதை	0	0	0	437	112	549	549	0	0	0	0	0	0	0	549
கௌபீ	4050	676	4726	6048	1060	7107	11833	0	0	0	0	0	0	0	11833
எள்	672	0	672	2785	1025	3810	4482	149	0	149	0	0	0	149	4631
பயறு	3891	1683	5573	77202	94684	171886	177459	8	283	291	606	0	606	897	178356
நிலக்கடலை	5592	2242	7834	18016	20939	38955	46788	0	231	231	0	0	0	231	47019
குரக்கன்	774	544	1318	399	0	399	1717	1398	117	1515	0	0	0	1515	3232
சோளம் (opv)	15059	899	15957	11991	0	11991	27948	0	0	0	0	0	0	0	27948
சோளம் (சம்பத்)	0	0	0	0	0	0	0	2865	0	2865	0	0	0	2865	2865
சோயா	6318	0	6318	13768	0	13768	20086	0	0	0	0	0	0	0	20086
சணல்	-	-	-	-	-	-	-	0	315	315	0	2269	2269	2584	2584
அகத்தி	-	-	-	-	-	-	-	0	0	0	0	0	0	0	0
மொத்தம்	**43830**	**7952**	**51782**	**139066**	**122482**	**261548**	**313326**	**4420**	**946**	**5366**	**606**	**2269**	**2875**	**8241**	**321567**

அட்டவணை 3.2.9: 2011 இல் மறுவயற் பயிர் விதை வழங்கல்

பயிர்	2011 சிறுபோகம்						2011/12 காலபோகம்						வருடம் 2011					
	உற்பத்தியாளர்	அடிப்படை	பதிவுப்பட்ட	சிபாரிசு செய்யப்பட்ட	வர்த்தக	மொத்தம்	உற்பத்தியாளர்	அடிப்படை	பதிவுப்பட்ட	சிபாரிசு செய்யப்பட்ட	வர்த்தக	மொத்தம்	உற்பத்தியாளர்	அடிப்படை	பதிவுப்பட்ட	சிபாரிசு செய்யப்பட்ட	வர்த்தக	முழு மொத்தம்
உழுந்து	37	957	655	1176	1415	4240	18	242	7376	14031	1640	23306	55	1198	8031	15206	3056	27546
மிளகாய்	3	143		0		146	2	68		5		75	6	210	0	5	0	221
கௌபீ	6	511	5234	2199	3284	11234	79	725	2559	2302	1031	6696	85	1235	7794	4501	4315	17931
எள்	0	78	1153	3846	535	5611	0	18	126	1388	901	2432	0	95	1278	5234	1436	8043
பயறு	51	491	606	14236	12104	32487	60	156	6135	30782	50801	87935	111	647	11741	45018	62905	120421
நிலக்கடலை	154	589	1710	5826	2610	10889	167	2049	1617	18983	15761	38577	321	2638	3326	24809	18371	49465
குரக்கன்	0	41	455	343	117	957	6	56	750	1059	3	1874	6	97	1206	1403	120	2831
சோளம் (opv)	0	430	3143	3739	0	7312	3	349	3944	16364	1040	21699	3	780	7087	20103	1040	29012
சோளம் (சம்பத்)				16		16				3664		3664	0	0	0	3680	0	3680
சோயா	35	453	1895	3426	14	5823	11	89	845	358	0	1302	46	542	2740	3784	14	7125
சணல்					1896	1896					563	563					2459	2459
அகத்தி					0	0					0	0					0	0
மொத்தம்	**287**	**3692**	**19850**	**34806**	**21975**	**80610**	**346**	**3751**	**23352**	**88935**	**71739**	**188122**	**633**	**7443**	**43202**	**123741**	**93715**	**268733**

மரக்கறி விதை உற்பத்தியும் வழங்கலும்

அடிப்படை விதை உற்பத்தி

இந்நாட்டில் விவசாயத் திணைக்களத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட 18 பயிர்களுக்குரிய 50 இன மரக்கறிகள் பயிரிடப்பட்டன. அடிப்படை விதை உற்பத்தி 7 அரச விதை உற்பத்திப் பண்ணைகளில் மேற்கொள்ளப்பட்ட விபரம் அட்டவணை 3.2.10 இல் தரப்பட்டுள்ளது. இவ் ஆண்டிற்கான மொத்த மரக்கறி விதை உற்பத்தியானது கடந்த ஆண்டு உற்பத்தியை விட குறைவாகும். 2011 இல் நிலவிய பொருத்தமற்ற காலநிலை மற்றும் போதியளவு மரக்கறி விதைக் கையிருப்பு காரணமாக மரக்கறி விதையுற்பத்தித் திட்டங்கள் மட்டுப்படுத்தப்பட்டமை காரணமாக இக்குறைவு ஏற்பட்டது.

அட்டவணை 3.2.10: 2011 இல் அரச பண்ணைகளில் அடிப்படை மரக்கறி விதை உற்பத்தி

பயிர்	உற்பத்தி அளவு (கிலோ)		
	காலபோகம் 2010/2011	சிறுபோகம் 2011	மொத்தம்
போஞ்சி	1629.7	371.1	2000.8
பாகல்	-	74.4	74.4
கத்தரி	18.1	53.95	72.1
புசிற்றா	-	10.6	10.6
பயற்றை	129.5	6.8	136.3
வெண்டி	-	240.9	240.9
புடோல்	186.9	23.2	210.1
சிறகவரை	21.2	-	21.2
தக்காளி	3.8	69.8	73.55
கறிமிளகாய்	-	37.6	37.6
பூசணி	7.2	-	7.2
முள்ளங்கி	57.2	-	57.2
சுண்டங்கத்தரி	2.97	-	2.97
கீரை	-	191.8	191.8
மொத்தம்	**2056.52**	**1080.15**	**3136.67**

அட்டவணை 3.2.11: 2011 இல் விவசாயத் திணைக்களத்தினால் உற்பத்தி செய்யப்பட்ட நியம மரக்கறி விதைகள் (கி.கி)

பயிர்	அரசபண்ணை			ஒப்பந்தக்கமக்காரர்			முழு மொத்தம்
	கால போகம் 2010/11	சிறு போகம் 2011	மொத்தம்	கால போகம் 2010/11	சிறு போகம் 2011	மொத்தம்	
போஞ்சி	-	-	-	6435	446	6881	6881
பாகல்	90.3	125.8	216.1	102.1	278.4	380.5	596.6
கத்தரி	174.0	178.3	352.3	-	-	-	352.3
புசிற்றா	407.8	119.1	526.9	124.0	129.2	253.2	780.1
கறிமிளகாய்	109.2	308.1	417.3	-	15.5	15.5	432.8
கெக்கரி	13.7	53.2	66.9	28.5	65.9	94.4	161.3
பீர்க்கு	264.0	7.5	271.5	138.5	-	138.5	410.0
பயற்றை	658.5	143.5	802.0	304.0	607.6	911.6	1713.6
வெண்டி	549.9	1600.1	2150.0	-	1044.0	1044.0	3194.0
பசளி	86.1	90.0	176.1				176.1
புடோல்	25.9	334.5	360.4	48.6	339.0	387.6	748.0
வத்தகை	10.3	-	10.3	-	20.1	20.1	30.4
தக்காளி	5.3	22.3	27.6	-	-	-	27.6
கீரை	39.3	-	39.3	-	-	-	39.3
சிறகவரை	569.8	-	569.8	90.5	408.8	499.3	1069.1
முள்ளங்கி	-	44.9	44.9	128.4	-	128.4	173.3
மொத்தம்	**3004.1**	**3027.3**	**6031.4**	**7399.6**	**3354.5**	**10754.1**	**16785.5**

நியம மரக்கறி விதை உற்பத்தி

அரச மரக்கறி மற்றும் தனியார் நிறுவனங்கள் விதை உற்பத்தியில் ஈடுபடுகின்றனர். 2011 இல் விதைகள் மற்றும் நடுகைப்பொருட்கள் அபிவிருத்தி நிலையத்தினால் அரச விதை உற்பத்திப் பண்ணைகளிலும் ஒப்பந்தக் கமக்காரர் திட்டத்திலும் உற்பத்தி செய்யப்பட்ட மரக்கறி விதைகளின் விபரம் அட்டவணை 3.2.11 இல் தரப்பட்டுள்ளது. 2011 இற்கான மொத்த உற்பத்தியளவு கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் மிகக் குறைவாகும். (ஏறத்தாழ 5%) இதன் குறைவும் அடிப்படை விதைக் குறைவை ஒத்ததாகவே காணப்பட்டது. குறைந்தளவிலான போஞ்சி விதைக் கொள்வனவு காரணமாக ஒப்பந்தக் கமக்காரர் திட்டத்தில் மரக்கறி விதைக் கொள்வனவு கணிசமான அளவு குறைவடைந்தது.

கலப்பின மரக்கறி விதை உற்பத்தி

இரு இன கத்தரி, இரு இன தக்காளிகளுக்குரிய F_1 கலப்பின விதைகள் அரச விதை உற்பத்திப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்டது. (அட்டவணை 3.2.12) குண்டசாலை, அம்பேபுஸ்ஸ, அளுத்தறம ஆகிய இடங்களில் கத்தரியும், குண்டசாலை பண்ணையில் தக்காளி விதையும் உற்பத்தி செய்யப்பட்டது. கலப்பினத் தக்காளி விதை உற்பத்தி ஏறத்தாழ 2010 ஆம் ஆண்டை ஒத்ததாக காணப்பட்டதுடன் கத்தரி கலப்பின விதை உற்பத்தி சிறிதளவு அதிகரித்தும் காணப்பட்டது.

அட்டவணை 3.2.12 அரச பண்ணைகளில் கலப்பின மரக்கறி விதையுற்பத்தி

பயிர்	காலபோகம் 2010/11	சிறுபோகம் 2011	மொத்தம்
தக்காளி	4.0	8.18	12.18
கத்தரி	16.7	28.03	44.73
மொத்தம்	**20.7**	**36.21**	**56.91**

மரக்கறி விதை வழங்கல்

விவசாயத் திணைக்கள விற்பனை நிலையங்களினூடாகவும் பதிவு செய்யப்பட்ட முகவர் அமைப்புக்களினூடாகவும் மரக்கறி விதைகள் விநியோகிக்கப்பட்டது. முகவர் அமைப்புக்களினுள் கமநல கேந்திர நிலையம், கூட்டுறவுச் சங்கங்கள், விவசாய அமைப்புக்கள், மாகாண விவசாயத் திணைக்களங்கள் மற்றும் பதிவு செய்யப்பட்ட தனியார் வியாபார நிறுவனங்கள் என்பன அடங்கும். விவசாயத் திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்ட மரக்கறி விதைகளின் விபரம் அட்டவணை 3.2.13 இல் தரப்பட்டுள்ளது. நியம மரக்கறி விதை விநியோகத்தில் முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் சிறிதளவு அதிகரிப்பும் அடிப்படை மரக்கறி விதை விநியோகத்தில் குறிப்பிடத்தக்களவு குறைவும் காணப்பட்டது.

அட்டவணை 3.2.13 2011 இல் விவசாயத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட மரக்கறி விதைகள் (கிலோ)

பயிர்	வழங்கப்பட்ட அளவு (கிலோ)						
	அடிப்படை		நியம				முழு மொத்தம்
	சிறு போகம் 2011	கால போகம் 2011/12	மொத்தம்	சிறு போகம் 2011	கால போகம் 2011/12	மொத்தம்	
கீரை	1.45	0.75	2.2	180.83	21.42	202.25	204.45
போஞ்சி	1105.50	320.0	1425.50	9144.79	6422.70	15567.49	16992.99
பாகல்	85.65	38.30	123.95	224.87	189.95	414.82	538.77
கத்தரி	1.45	1.90	3.35	56.01	38.37	94.38	97.73
புசிற்றா	95.60	205.0	300.60	668.85	323.72	992.57	1293.17
கறிமிளகாய்	5.05	5.93	10.98	214.47	155.08	369.55	380.53
கெக்கரி	6.10	8.00	14.10	174.70	211.70	386.40	400.50
பீர்க்கு	14.70	22.80	37.50	391.60	381.28	772.88	810.38
பயற்றை	146.90	137.00	283.90	1389.11	650.00	2039.11	2323.01
வெண்டி	106.50	176.75	283.25	215.07	821.45	1036.52	1319.77
பூசணி	112.35	3.78	116.13	3.06	-	3.06	119.19
முள்ளங்கி	36.50	6.50	43.00	139.15	206.50	345.65	388.65
புடோல்	119.68	79.25	198.93	530.28	451.05	981.33	1180.26
பசளி	3.15	2.00	5.15	124.75	253.11	377.86	383.01
வெள்ளரி	-	0.20	0.20	21.30	28.60	49.90	50.10
தக்காளி	38.78	7.86	46.64	215.36	21.85	237.21	283.85
சிறகவரை	69.00	38.00	107.00	849.21	349.23	1198.44	1305.44
மொத்தம்	**1948.36**	**1054.02**	**3002.38**	**14543.41**	**10547.43**	**25090.84**	**28093.22**

விதை உருளைக்கிழங்கு உற்பத்தியும் வழங்கலும்

காலபோகம் - 2011 இல் "கிறனொல" இன உருளைக்கிழங்கின் முன் அடிப்படை விதை (G_o), அடிப்படை விதை (G_1, G_2, G_3) மற்றும் சிபாரிசு செய்யப்பட்ட விதைகள் முறையே 0.75 தொன், 78.26 தொன், 23.42 தொன் உற்பத்தி செய்யப்பட்டது. "டிசைறி" இனத்தில் மொத்தமாக 5.03 தொன் அடிப்படை விதைகள் உற்பத்தி செய்யப்பட்டது.

சிறுபோகம் 2011 இல் "கிறனொலா" இன உருளைக்கிழங்கின் முன் அடிப்படை விதை, அடிப்படை விதை மற்றும் சிபாரிசு செய்யப்பட்ட விதைகள் முறையே 0.62 தொன், 284.14 தொன், 126.23 தொன் உற்பத்தி செய்யப்பட்டது.

2011 இல் 518.4 தொன் உருளைக்கிழங்கு விதைகள் உற்பத்தி செய்யப்பட்டதுடன் 422.93 தொன் சிபாரிசு செய்யப்பட்ட உருளைக்கிழங்கு விதைகள் விநியோகிக்கப்பட்டன.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் விளைச்சலில் 1.4% அதிகரிப்பு 2011 இல் அவதானிக்கப்பட்டு ள்ளது. இவ் விரைவான விளைவு அதிகரிப்புக்கு சரியான காலத்தில் பயிர்ச் செய்தமையும், அதிகளவிலான சேதனப் பசளைப் பாவனையே காரணமாகும்.

மேலும் முன் அடிப்படை விதைகள் குறைவா கவே காணப்பட்ட போதும், இவை குறிப்பிட த்தக்களவு அதிக எண்ணிக்கையான விதை முகிழ்களைக் கொண்டிருந்தது.

அட்டவணை 3.2.14: 2011 இல் உற்பத்தி செய்யப்பட்ட முன் அடிப்படை (முச), அடிப்படை (G_1, G_2, G_3) விதை உருளைக்கிழங்கு (தொன்)

இனம்	முன் அடிப்படை விதை			அடிப்படை விதை		
	கால போகம் 2010/2011	சிறு போகம் 2011	மொத்தம்	கால போகம் 2010/2011	சிறு போகம் 2011	மொத்தம்
கிறனொல	0.75	0.62	1.37	78.26	284.14	362.40
டிசைறி	-	-	-	5.03	-	5.03
மொத்தம்	**0.75**	**0.62**	**1.37**	**83.29**	**284.14**	**367.43**

அட்டவணை 3.2.15 2011 இல் உற்பத்தி செய்யப்பட்ட சிபாரிசு செய்யப்பட்ட விதை உருளைக்கிழங்கு (மெ.தொன்)

இனம்	கால போகம் 2010/2011	சிறுபோகம் 2011	மொத்தம்
கிறனொல	23.42	126.23	149.65
மொத்தம்	23.42	126.23	149.65

அட்டவணை 3.2.16 2011 இல் உற்பத்தி செய்யப்பட்ட சிபாரிசு செய்யப்பட்ட விதை உருளைக்கிழங்கு (மெ.தொன்)

இனம்	2011 சிறு போகம்	2011/2012 பெரும் போகம்	மொத்தம்
கிறனொல	128.38	294.55	422.93

நடுகைப்பொருட்கள் உற்பத்தியும் வழங்கலும் - 2011

உறிஞ்சிகள், வேர்ந்தண்டுத்துண்டம், நாற்றுக்கள், ஒட்டுத் தாவரங்கள் ஆகிய தரமான நடுகைப் பொருட்களை SPMDC உற்பத்தி செய்து நாட்டின் பழப் பயிர்களின் நடுகைப்பொருள் தேவையை 2011ல் பூர்த்தி செய்துள்ளது. இதற்காக SPMDC ன் பண்ணைகளிலும் HORDI ன் 8 பண்ணைகளிலும் உற்பத்தி நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. இதன்படி 20 பழப்பயிர்களின் 30 வர்க்கங்களுக்கான 2,30,000 தாவரங்கள் உற்பத்தி செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

அட்டவணை 3.2.17 2011 ல் விவசாயத் திணைக்களப் பண்ணைகளில் நடுகைப் பொருள் உற்பத்தியும் வழங்கலும்

பயிர்	உற்பத்தி	வழங்கல்
ஒட்டுத்தாவரங்கள்		
ஆனைக்கொய்யா	11,203	7,698
பெலி	1,151	948
டூரியன்	7,764	8,289
கொய்யா	753	448
பலா	8,590	5,108
உக்குரச	439	384
எலுமிச்சை	2,200	2,103
மா	162,825	130,351
நாரத்தை	1,715	1,637
மங்குஸ்தீன்	470	67
தோடை	6,504	6,123
றம்புட்டான்	51,352	38,103
சபோடில்லா	1,053	702
ஸ்ரார்புறுட்	1,609	1,191
ஏனையவை	9,951	16,808
உபமொத்தம்	**267,579**	**219,960**
வேர்த்துண்டங்கள்		
திராட்சை	196	658
ஜம்பு	2,277	1,837
மாதுளை	1,020	854
லெமனின்	5,169	2,164
றகன் பழம்	3,413	1,446
ஏனையவை	12,417	9,021
உபமொத்தம்		
நாற்றுக்கள்		
அம்றெல்ல	16,104	11,154
ஸ்ரார் புறுட்	2,044	1,115
பப்பாசி	8,946	10,301
மாதுளை	32,932	18,293
கொய்யா	5,432	5,016
அகத்தி	2,692	1,590
மங்குஸ்தான்	3,786	2,390
எலுமிச்சை	18,809	10,163
மிற்றி முருங்கை	15,936	3,341
அனோடா	1,008	800
கொடித் தோடை	5,404	4,851
ஏனையவை	21,175	11,778
உப மொத்தம்	13,4268	80,792
மொத்தம்	**426,339**	**316,732**
மரக்கறிச் சாடிகள்	**60,674**	**60,549**

அட்டவணை 3.2.18 ஏனைய உற்பத்திகள்

உற்பத்திகள்	அளவுகள்
வாழைப்பழம்	27408.4
மாம்பழம் (kg)	5562.5
பப்பாசிப்பழம் (kg)	1857.8
திராட்சை (kg)	24.7
அன்னாசி (kg)	92.7
கொய்யா (kg)	198.5
றம்புட்டான் (kg)	648.0
நுகர்வு உருளைக்கிழங்கு (kg)	84282.5
நுகர்வு மரக்கறி (kg)	73126.7
மரவள்ளி (kg)	504.0
தேங்காய் (Nuts)	24510.0
செவ்விளநீர் (Nuts)	3923.0
விலங்குற்பத்தி	
பால் (லீ)	31935.0
தயிர் (கப்)	1341.0
கூட்டெரு (kg)	673000.0
நுகர்வு மறுவயற் பயிர்	
சோளம் (kg)	2033.4
பச்சை சோளப்பொத்தி (No.)	2565.0
செத்தல் மிளகாய் (kg)	596.5
பயறு (kg)	468.4
கௌபீ (kg)	1589.2
எள் (kg)	449.5
சோயா (kg)	510.0
குரக்கன் (kg)	1304.0
உழுந்து (kg)	669.9
நிலக்கடலை (kg)	1202.0

முற்பணக்கணக்கு நிலைமை – 2011

விதை மற்றும் நடுகைப்பொருட்கள் உற்பத்தியானது முற்பணக் கணக்கின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. கடந்த வருடத்திற்கான முற்பணக் கணக்கு நிலைமை அட்டவணை 3.2.18 இல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை 3.2.19: முற்பணக்கணக்கு நிலைமை (ரூபா)

பண்ணை	வருமானம்	செலவீனம்
அளுத்தறம	6,347,974.28	32,401,476.71
அம்பலாந்தோட்டை	1,443,866.75	9,489,056.57
பட்டஅத்த	1,240,043.13	26,002,035.69
கந்தளாய்	1,442,985.80	20,854,087.05
மகாஇலுப்பள்ளம	13,581,685.81	55,989,144.14
மல்வத்த	1,432,883.60	19,994,031.38
பொலநறுவை	6,740,386.11	38,250,988.99
அம்பேபுஸ்ஸ	4,132,580.39	14,921,154.30
குண்டசாலை	3,308,134.40	15,260,136.72
மீடீனியா	1,758,294.50	11,329,124.91
பீதுருதலகல	4,421,907.00	16,127,695.83
சீதாஎலிய	2,101,619.90	22,147,141.80
உடரடெல	1,018,915.00	10,285,817.92
மீபிலிமான	1,757,455.00	10,622,928.29
கரடியனாறு	-	8,.034,407.98
கந்தப்பொல	810,693.60	11,661,484.21
முருங்கன்	256,554.54	2,614,786.25
பரந்தன்	260,607.40	4,321,496.05

உத்தியோகத்தர் பட்டியல்

பதவியணி	எண்ணிக்கை
பணிப்பாளர்	01
உதவிப் பணிப்பாளர்	01
பிரதிப் பணிப்பாளர்	14
விவசாய உத்தியோகத்தர்	10
கணக்காளர்	01
விவசாயப் போதனாசிரியர்	114
பண்ணை இயந்திரப் போதனாசிரியர்	01
விவசாயக் கண்காணிப்பு உத்தியோகத்தர்	03
நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்	02
நிர்வாக உத்தியோகத்தர்	01
பொது முகாமைத்துவ உதவியாளர் சேவை	87
பண்ணை எழுதுநர்	18
சாரதி	43
உழவு இயந்திர ஓட்டுநர்	15
மின்னியல் வல்லுனர்	03
பொறி இயக்குநர்	09
மேசன்	01
தச்சுத்தொழிலாளி	04
மரக்கன்று ஒட்டுநர்	03
சுற்றுலா விடுதிப் பராமரிப்பாளர்	03
அலுவலக உதவியாளர்	05
களஞ்சிய உதவியாளர்	10
காவலாளி	59
பாரஊர்தி உதவியாளர்	09
களஞ்சியத் தொழிலாளி	01
துப்பரவுத் தொழிலாளி	04
தொழிலாளி தரம் iii	377
மொத்தம்	**803**

3.3. சமூக பொருளாதாரத் திட்டமிடல் நிலையம் (SEPC), பேராதனை

சமூக பொருளாதார ஆய்வு மற்றும் விவசாய கொள்கைப் பகுப்பாய்வுகளை மேற்கொள்வது இந்நிலையத்தின் பிரதான செயற்பாடாக அமைவ துடன், விவசாயப் புள்ளி விபரத் தகவல்களை வழங்குவதற்காக இந்நிலையத்தில் புள்ளி விபர அலகொன்று நடாத்தப்பட்டு வருகின்றது. அது மட்டுமன்றி விவசாயத் திணைக்களத்தினால் செயற்படுத்தப்படுகின்ற உள்நாட்டு, வெளிநாட்டு நிதி ஒதுக்கீட்டுச் செயற்திட்ட நடவடிக்கைகள் இந்நிலையத்தினால் செயற்படுத்தப்பட்டு வருகி ன்றது.

பாதீடு

அட்டவணை இலக்கம் 3.3.1. வருடாந்தப் பாதீடு – 2011 (ரூ)

செலவு விடயம்	நிதி ஒதுக்கீடு	செலவு	செலவு %
மூலதனம்	3,243,450	1,897,137	58
மீண்டுவரும் செலவு	3,239,000	3,091,818	95
மொத்தம்	**6,482,450**	**4,988,955**	**77**

முன்னேற்றம்

கற்கைகள்

பயிர் உற்பத்தியின் செலவும் வருமானமும்

2009/2010 பெரும்போகத்திற்கும் 2010 சிறு போகத்திற்குமான நெல் மற்றும் மேலதிக உணவுப்பயிர்கள், வேர் மற்றும் தண்டுப் பயிர் மேலும் காய்கறிகளுக்கான வருமானமும் செலவும் பற்றிய கற்கைத் தகவல்கள் முறையே 2011 பெப்ரவரி, ஆகஸ்ட் மாதங்களில் வெளியிட ப்பட்டது. சாதாரண விளைச்சல், மொத்த, தேறிய வருமானம், மொத்த ஓரலகு செலவு மற்றும் பண்ணை பற்றிய தரவுகள் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் புதிய நெல் வர்க்கங்களை இசைவாக்கத்திற்குட்படுத்தல்

நெல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தினால் புதிதாக வெளியிடப்பட்ட நெல் வர்க்கங்களின் பதிலீட்டு வீதம் தொடர்பான RRDI இன் தரவுத்தள தகவல்களின் உதவியுடன் விவசாயிகளின் விடயங்களில் ஓர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. முறையே Bg 94-1, Bg 300 மற்றும் Bg 352 1970, 1980 மற்றும் 1990 ஆம் ஆண்டு முதல் பாவனையிலுள்ளவை என்றும் Bg 358, Bg 359 உம் Bg 362 பரவலாக பயிரிடப்படும் புது வர்க்கங்கள் எனவும் தரவுகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. முன்னேற்றப்பட்ட பழைய வர்க்கங்களின் மற்றும் பாரம்பரிய வர்க்கங்களின் செய்கையானது குறிப்பிடத்தக்க வீழ்ச்சி அடைந்ததுடன் 1960 ஆம் ஆண்டுகளின்

மத்தியில் வெளியான புதிய திருந்திய நெல் வர்க்கங்கள் பிரபல்யமாக பயிரிடப்பட்டது. கால த்துடன் புதிய வர்க்கங்களின் பதிலீட்டுக் காலம் குறைவடைந்ததுடன் புதிதாக வெளியிடப்பட்ட நெல் வர்க்கங்களின் குறைந்த இசைவாக்க வீதத்துடன் பதிலீட்டுக் காலம் தற்போது 16 வருடங்களாகக் காணப்படுகின்றது. நெல் இன விருத்தி ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கம் தொடர் பான தற்போதைய முயற்சிகளுக்குத் தொடர்ச் சியான ஆதரவையும் தைரியத்தையும் வழங்கு வதற்கு கொள்கைத் திட்டமிடலாளர்கள் ஊக்கு விக்கப்படுவதுடன் விவசாயிகளுக்கு விதைகள் பெற்றுக் கொள்ளவும் புதிய நெல் வகைகள் தொடர்பான தகவல்களை வழங்குவது தொடர் பிலும் அதிக கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

இலங்கையின் குளிர் களஞ்சியப்படுத்தலின் தேவையை மதிப்பிடுதல்

காலத்திற்கு காலம் சந்தைக்கு விநியோகிகப்படு கின்ற மேலதிக காய்கறிகளைப் பாதுகாக்கும் நோக்குடன் குளிரூட்டல் களஞ்சிய வசதியை ஸ்தாபிப்பதில் தற்போது அவதானம் செலுத்தப் பட்டுள்ளது. குளிரூட்டல் களஞ்சிய வசதியின் மூலம் விவசாய உற்பத்தியின் ஆயுட் காலத்தை நீடிக்க முடியுமென்றாலும் இலங்கையைப் பொறுத்தவரை வெப்ப வலயப் பழங்கள் மற்றும் காய்கறிகள் விசேடமாக வெப்ப வலய காய்கறிகளின் குளிர் களஞ்சியப்படுத்தும் காலம் மிகவும் குறுகியதாக இருப்பது சவாலாக உள்ளது. கடந்த கால அனுபவத்தின்மூலம் இலங்கையில் குளிர் களஞ்சிய முறையை ஸ்தாபித்தல் முற்றிலும் தோல்வி கண்டது. குளிர் களஞ்சியத்தை தாபிப்பதன் அவசியத்தை பூர்த்தி செய்வதற்கு ஈரவலயப் பழங்களும் காய்கறிக ளும் களஞ்சியப்படுத்துவதன் தொழிநுட்பத் திறனுடன் பொருளாதார திறனை மதிப்பிடுவதற்கு வரவு செலவு அனுகூலத்தை பகுப்பாய்வு செய்ய வேண்டியுள்ளது.

அரிசியின் தரம் பண்பு பற்றிய நுகர்வோரின் விருப்பம் : இணைந்த பகுப்பாய்வு

வருடாந்த சாதாரண தனிநபர் அரிசிப் பாவனை 110kg ஆகும். தற்போது இலங்கையில் அரிசி உற்பத்தியானது தன்னிறைவு அடைந்துள்ளது. அதேவேளை வருமானம் உயர்வடைந்ததுடன் நகரமயமாக்கல் போன்ற இலங்கை சமூகத்தில் நடந்த கட்டமைப்பு வேறுபாடுகள் அரிசியின் தரம் தொடர்பாகக் கவனம் செலுத்துகிறது. இதனால் ஒருங்கிணைப்பு செயல்முறையை அடிப்படை யாகக் கொண்டு அரிசியின் பல்வேறு தரம், குணம் என்பன விருப்பத்தில் ஆதிக்கம் செலுத்து வது தொடர்பாக ஆராயப்பட்டது. அரிசியின் வகை, நிறம் மற்றும் தூய்மை ஆகியன முக்கிய மானவை, விலை முக்கியம் குறைந்தது என்று ANOVA பெறுபேறு மூலம் தெளிவாக்கப்பட்டது. அரிசியின் வகையை தெரிவு செய்வதில் மிக முக்கியமான பண்பாக அரிசியின் தூய்மை காணப்படுகின்றது.

இலங்கையில் உள்ள பருவகால விலை மாறுபாடும் அரிசி சந்தையின் ஒருங்கிணைப்பும்

நுகர்வோர் விலை ஏற்ற இறக்கமில்லாமல் உத்தரவாத விலையில் காணப்படுவதையே விரும்புவர். இலங்கையில் அரிசிச் சந்தை ஒருங்கிணைப்பு மட்டமானது அரிசியின் வாராந்த விலையை பயன்படுத்தி அறியப்பட்டது. இக் கற்கையின் பெறுபேற்றின் மூலம் பரந்த சந்தை ஒருங்கிணைப்பு காணப்படுவதாகவும் விலை சமிக்ஞையை பெற்றுக் கொடுக்க திறமையாக செயல்படுத்தப்படுவதாகவும் தெளிவுப்படுத்தப் பட்டுள்ளது.

விவசாயத் தொழில் பற்றிய இளைஞர்களின் கருத்து : பொலன்னறுவை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட விடய ஆய்வு

பயிர்ச்செய்கை மேற்கொள்வதன் பெறுமதி பற்றிய இளைஞர்களின் கருத்து, விவசாய நடவடிக்கையில் ஈடுபடுவதுப்பற்றி அவர்களைத் தூண்டுகின்ற சாதகங்களும் விவசாயத்துறையில் ஈடுபடுவதுக்கு அவர்கள் காட்டும் விருப்பத்தை அறிந்து கொள்வதற்குமான கற்கையொன்று 2011 ஆம் ஆண்டு பொலன்னறுவை மாவட்டத்தில் முதல்தர ஆய்வினை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டது. 15-29 வருட வயதுடைய இளைஞர் யுவதிகளைக் கொண்ட மாதிரியின் மொத்தப்பருமன் 144 ஆகும். பயிர்ச்செய்கை யாளராகுவதற்கு விருப்பம், தற்போது காணப்ப டுகின்ற விவசாய நிலங்கள், சிறப்பு தேர்ச்சி மற்றும் பயிற்சிகளின் மூலம் தூண்டப்படுவதால் தொழில் பயிற்சி வேலைத்திட்டம், குறிப்பிட்ட விவசாய விரிவாக்கல் வேலைத்திட்டம் நன்கு திட்டமிடப்பட்ட விவசாய நிலக்கொள்கைகள் ஆகியன இளைஞர்களை உள்ளீர்க்கச் சிபாரிசு செய்யப்பட்டன.

தோடை (சிற்ரசு) பயிர்ச்செய்கைப் பற்றிய கண்ணோட்டம்

"பிபில மற்றும் மொனராகலை மாவட்டங்களில் தோடைப் பயிர்ச்செய்கையை முன்னேற்றுதல்" எனும் தொனியில் 2006 - 2008 காலப்பகுதியில் செயற்படுத்தப்பட்ட செயற்திட்டத்தின் ஆரம்ப மூன்று ஆண்டுகளில் விவசாயத்துறை சார்ந்த முன்னேற்ற அறிக்கை பற்றி உணர்ச்சி பூர்வமான பகுப்பாய்வும் பேரின பொருளாதார நிலை மாற்றங்களின் வேறுபாட்டை மதிப்பிடுதலும் வறுமை ஒழிப்பிற்கான தேசிய இலக்கு தொடர்பாக முக்கிய பங்களிப்புக்களின் மாற்றம் தொடர்பாகவும், மேலும் அந்நிய செலாவணி, சேமிப்பு தொடர்பாக வெளிவாரியான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இயற்கை மற்றும் செயற்கைப் பசளையை பிரயோகிக்கும் அளவு, நிழல் தடை, கத்தரித்தலும் பயிற்றுவித்தலும் பயிரின் இசைவாக்கத்தில் ஒப்பிட்டளவில் குறைந்தளவில் காணப்பட்டன. செயற்திட்டங்கள் மூலம் அதிகரித்த உற்பத்திகள், மேலும் அண்மைக் காலப்பகுதியில் ஏற்பட்ட தோடைப் பயிர்ச்செய்கை நிலத்தின் தேசிய ரீதியிலான அதிகரிப்பு மூலம் பண்ணை மட்ட விலை குறைவடைந்தது. செயற்திட்டமானது சந்தைப்படு த்தல் ஒருங்கிணைப்பு உர மானியம் வழங்குவ தற்கான சாத்தியப்பாடுகளைக் கொண்டிருக்கு மாயின் விவசாயிகளின் வருமானத்தை உயர்த்து வதற்கும், வறுமை ஒழிப்பதற்கும் அந்நிய செலாவணி சேமிப்பை உறுதிப்படுத்தவும் முடிந்திருக்கும்.

பயிர்த்துறை வரவு செலவுத்திட்டம் (நெல், ஏனைய வெளிக்களப் பயிர்களும் காய்கறி பயிர்களும்)

தெரிவு செய்யப்பட்ட பழப் பயிர்கள் (தோடை, எலுமிச்சை, வாழை, கொடித் தோடை, அன்னாசி, ரம்புட்டான், பப்பாசி, மர முந்திரிகை, கொய்யா, மாதுளை, டிரகன்புரூட், பேரிக்காய், மா, நாரத்தை) மற்றும் பூஞ்செடிகள் (அந்தூ ரியம், அல்ஸ்டோமெரியா, ஜேபெரா, கானேசன், மற்றும் மடோனா, லிலி) ஆகியவற்றின் வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதோடு, அவ் அறிக்கை வெளியிடப்படவுள்ளது. சிபாரிசு செய்ய ப்பட்ட தொழிநுட்பத்தின் ஊடான இப்பயிர்களின் வர்த்தகப் பயிர்ச்செய்கையின் வரவு செலவு ஆய்வு, இதற்குள் உள்ளடக்கப்படும். உள்ளீட்டு அளவு, செலவு, வருமானம், வரவு செலவு விகிதம் மற்றும் தற்போதைய தேறிய பெறுமதி போன்ற புதிய பொருளாதார தகவல் முன்வை க்கப்பட்டுள்ள தோடு பழப் பயிர்ச்செய்கைக்காக வரவு செலவு விகிதங்கள் கீழே அடைப்புக்கு றிக்குள் காட்டப்பட்டுள்ளது. தோடை (3.59), எலுமிச்சை (2.25), வாழை – எம்பன் (3.59), கொடி தோடை (1.92), அன்னாசி (4.4), ரம்புட்டான் (5.9), பப்பாசி (1.3), மர முந்திரிகை (1.9), மாதுளம் (6.6) டிரகன்புரூட் (16.74), பேரிக்காய் (5.98), மா (1.69)

வெளியீடுகள்

அக்ஸ்டாட் (AgStat) – 2011

உணவு பயிர்ச்செய்கைப் பற்றிய முக்கிய தகவல் கள் அடங்கிய விவசாயப் புள்ளி விபரங்களைக் கொண்ட கையேடு தயாரிக்கப்பட்டு 2011 ஆகஸ்ட் மாதத்தில் வெளியிடப்பட்டுள்ளதோடு சமூக பொருளாதாரத் தரவுகள், நிலத்தை உபயோகிக்கும் முறை, பயிர்ச்செய்கைப் பரப்பு, உற்பத்தி, மற்றும் ஏற்றுமதியும், இறக்குமதியும், தனி நபர் அளவு, மொத்த மற்றும் சில்லறை விலை போன்ற தகவல்கள் இவ் அக்ஸ்டட் 2011,. VIII ஆவது தொகுதியில் உள்ளடக்கப்பட்டு ள்ளது.

பயிர் எதிர்வுகூறல்

பயிர் எதிர்வு கூறல் என்பது ஒரு மாதாந்த வெளியீடு ஆகும். இது நெல், ஏனைய வெளிக் களப் பயிர் மற்றும் காய்கறி பயிர்ச்செய்கையின் மாதாந்த முன்னேற்றத்தைக் கண்காணிக்கின்றது. பயிர்ச்செய்கையில் உற்பத்தி மட்டம் பற்றிய முன்னறிவிப்பை முன்வைத்தல். முன்னறிவிப்பு செய்த உற்பத்தி, உற்பத்தியின் வலய மட்டப் பகிர்ந்தளிப்பு அறுவடை செய்யும் காலம், சீரற்ற காலநிலை நிகழ்வுகள், பீடைகள் நோய் பற்றிய தற்போதைய நிலமைக்கேற்ற தகவல்கள் இவ் அறிக்கையில் வழங்கப்படும்.

ஏற்பாடு செய்யப்பட்ட செயலமர்வுகளும் மாநாடுகளும்

விவசாயக் கொள்கை ஆராய்ச்சி பற்றிய உயர்மட்ட திறனை முன்னேற்றுவதற்கு சர்வதேச செயலமர்வு பேண்தகு விவசாயத்தினூடான வறுமை ஒழிப்பு நிலையத்துடன் (CAPSA) இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டது. இச் செயலமர்வுக்கு சுமார் 30 பேர் பங்குபற்றினர் (28 உள்ளூர் பங்கேற்பாளர்களும் 2 வெளிநாட்டின ரும்) 2011 நவம்பர் மாதம் 14-18 ந் தினங்களில் பேராதனை பல்கலைக்கழகத்தில் விவசாய பீடத்தின் சபையரங்கில் நடைபெற்றது.

ஏனைய நடவடிக்கைகள்

மாதிரி கிராம வேலைத்திட்டம்

சமூக பொருளாதார திட்டமிடல் நிலையம் கிராகம கமநல சேவைப் பிரிவிற்கான இபுல்மல்கம மற்றும் கிராகம ஆகிய கிராமங்களில் ‘‘மாதிரிக் கிராம வேலைத்திட்டம்’’ ஒன்றை நடாத்தியது. கிராம அபிவிருத்திகாக கிராமங்கள் பார்வையிடப்பட்டு SWOT பகுப் பாய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வேலைத் திட்டத்திற்காக இபுல்மல்கம கிராமத்திலிருந்து விவசாயி 15 பேரும் கிராகம கிராமத்திலிருந்து 13 பேரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

- விவசாய அமைச்சின் நிதி ஒதுக்கீடு மூலம் ‘‘இயற்கை உரப் பாவனையும் உற்பத்தியை மேலோங்கச் செய்தலும்’’ செயற்திட்டத்தை ஒருங்கிணைக்கும் செயற்பாடு மேற்கொள்ள ப்பட்டு விவசாயத் திணைக்களத்தின் நிறுவன ங்கள் மற்றும் மத்திய நிலையங்கள் மூலம் செயற்படுத்தப்பட்டது.
- விவசாய திணைக்களத்தின் ஒழுக்காற்று குழு கூட்டத்தை ஒருங்கிணைத்தல்

அட்டவனை 3.3.2: வெவ்வேறு பிரிவுகளின் கீழ் உள்ள செயற்திட்டங்களின் எண்ணிக்கை

பிரிவுகள்	எண்ணிக்கை
சமூக பொருளாதார ஆய்வு	12
விவசாயக் கொள்கை ஆய்வு	06
உற்பத்தியும் சந்தைப்படுத்தலும்	05
விவசாய தகவல்களை சேகரித்தல் பகுப்பாய்வு செய்தல் வெளியிடல்	07
செயற்திட்டத்தைக் கையாளுதலும் திட்டமிடலும்	04
மனித வள அபிவிருத்தி	02
சிறப்பு நிகழ்ச்சி	01
சிறிய அளவிலான செயற்திட்டம்	01
மொத்தம்	**38**

உத்தியோகத்தர் பட்டியல்

பதவியணி	எண்ணிக்கை
பணிப்பாளர்	01
உதவிப் பணிப்பாளர்	01
விவசாயப் பொருளியலாளர்	11
விவசாயப் கண்காணிப்பு அதிகாரி	01
பொருளியல் உதவியாளர்	09
நிகழ்ச்சி திட்ட உதவியாளர்	05
விவசாயப் போதனாசிரியர்	02
முகாமைத்துவ உதவியாளர் சேவை	08
சாரதி	05
பணியாட்கள்	03
அலுவலக உதவியாளர்	01
மொத்தம்	**47**

3.4 முன்னேற்றக் கண்காணிப்பு மதிப்பீட்டுப் பிரிவு (PMEU), பேராதனை

முன்னேற்றக் கண்காணிப்பு மதிப்பீட்டுப் பிரிவு, விவசாயத் திணைக்களத்தின் சகல பிரிவுகளாலும் மேற்கொள்ளப்படும் செயலாற்றுகை தொடர்பான அறிக்கையை தயாரிப்பதோடு வருடாந்த செயற்பாட்டுத் திட்டம் வருடாந்த செயலாற்றல் அறிக்கை, மாதாந்த முன்னேற்ற அறிக்கை, விவசாய அமைச்சும் ஏனைய நிறுவனங்களுக்குமான ஏனைய அறிக்கைகளை தயாரிக்கும் பொறுப்பை ஏற்றுள்ளதோடு விவசாயத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்படும் பணிகளை ஒழுங்கமைப்பதற்காக முன்னேற்ற மீளாய்வு கூட்டங்களையும் நடாத்துகின்றது.

பாதீடு

அட்டவணை 3.4.1. வருடாந்தப் பாதீடு 2011 (ரூபா)

செலவு விடயம்	நிதியொதுக்கம்	செலவு	செலவு%
மூலதன செலவு	651,000	331,523	51
மீண்டுவரும் செலவு	1,293,315	896,102	69
மொத்தம்	**1,944,315**	**1,227,632**	**63**

முன்னேற்றம்

செயற்பாட்டுத் திட்டத்தை தயாரித்தல்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளின் கீழ் 2011 ஆம் ஆண்டுக்கான செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டது.

- மூலதனச் செலவு
- மீண்டு வரும் செலவு
- விவசாயத் திணைக்களத்தால் நிதியுதவியளிக்கப்பட்ட விஷேட கருத்திட்டங்கள்
- விவசாய அமைச்சினால் நிதியுதவியளிக்கப்பட்ட விஷேட கருத்திட்டங்கள்
- விவசாயத் திணைக்களத்தின் தொழில்நுட்பச் செயற்திட்டங்கள்
- விவசாயத் திணைக்களத்தின் பெறுகைத் திட்டம்.

மூலதனம் மற்றும் மீண்டுவரும் செலவுகளின் முன்னேற்றத்தைக் கண்காணித்தல்

2011 ஆம் ஆண்டில் மூலதன வேலைகளினதும் மீண்டுவரும் செலவினதும் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் தொடர்பான பணிகள் தொடர்ச்சியாக மதிப்பிடப்பட்டன. சகல மூலதன, மீள்வரும் செலவீனங்களிற்காக மாதாந்த முன்னேற்ற அறிக்கைகளும் தயாரித்து விவசாய அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டன.

அட்டவணை இல 3.4.2

2011 ஆம் ஆண்டில் விவசாயத் திணைக்களத்தின் முன்னேற்ற சாராம்சம்

செலவுத் தலைப்பு	நிதியொதுக்கம்	செலவு	செலவு%
மூலதனம்	193.7	116.7	60
மீண்டுவரும் செலவு	1765.2	1666.4	94
விவசாயத் திணைக்கள செலவுத் தலைப்பின் கீழ் மேற்கொள்ளப்படும் கருத்திட்டங்கள்	884.8	685.4	77
அமைச்சுச் செலவுத் தலைப்பின் கீழ் மேற்கொள்ளப்படும் கருத்திட்டங்கள்	615.59	441.97	72
மொத்தம்	**3459.29**	**2910.47**	**84**

விஷேட கருத்திட்டங்களின் முன்னேற்றத் தைக் கண்காணித்தல்

விவசாயத் திணைக்களச் செலவுத் தலைப்பின் கீழ் மேற்கொள்ளப்படும் விஷேட கருத்திட்டங்கள்

விவசாயத் திணைக்கள செலவுத் தலைப்பின் கீழ் மேற்கொள்ளப்படும் 12 விஷேட கருத்திட்ட ங்களின் முன்னேற்றக் கண்காணிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. பௌதீக நிதி முன்னேற்ற ங்கள் உள்ளடக்கப்பட்டு மாதாந்த அறிக்கை தயாரிக்கப்பட்டு விவசாயத் அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. விவசாயத் திணைகளத்தின் செலவுத் தலைப்பின் கீழ் உள்ள விஷேட கரு த்திட்டங்களின் நிதி முன்னேற்றம் அட்டவணை இல 3.4.3. இல் காட்டப்பட்டுள்ளது.

கருத்திட்டம்	நிறுவனம்	நிதி ஒதுக்கு ரூபா. மில்லியன்	செலவு ரூபா மில்லியன்	செலவு%
உயர் கலப்பின விதைகளை உருவாக்குதல்	பூங்கனியியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம்/வயற்பயிர், ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம்/நெல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம்	9.3	8.1	87
நடுகைப் பொருட்கள் உற்பத்தி செய்வதற்காக இழைய வளர்ப்பு ஆய்வுகூட வசதிகள்	பூங்கனியியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம்	20.0	13.9	69
சிறு அளவிலான விவசாய ஆராய்ச்சிகள்	பூ.க.ஆ.அ.நி/நெ.ஆ.அ.நி	6.2	6.0	97
உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி	நெல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம்	49.0	9.4	40
ஊடக செயற்திட்டம்	கருத்திட்டப் பயிற்சி நிலையம்	20.0	19.9	99
விவசாயக் கல்லூரிகளின் பண்ணை அபிவிருத்தி செயல் திட்டம்	கரு.பயிற்சி நிலையம்	17.0	15.7	92
பயிற்சியளித்தல் திறன் விருத்தி	க.ப.நி	10.0	9.7	97
விவசாயத் தொழில்நுட்பங்கள் பூங்காக்கள்	க.ப.நி	4.5	4.2	34
விவசாயத் திணைக்களத்தின் வருடாந்த மாநாடு	க.ப.நி	2.5	2.15	86
விதை விற்பனையும் கொள் வனவும்	விதை நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி நிலையம்	452.0	452.0	100
துரித விதைப்பண்ணை அபி விருத்தி வேலைத்திட்டம்	விதை நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி நிலையம்	200.0	152.0	76
சமூக அடிப்படையிலான விதை உற்பத்தி வேலைத் திட்டம்	விதை நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி நிலையம்	20.0	8.64	43
விதைச் சட்டத்தை நடை முறைப்படுத்தல்	விதை அத்தாட்சிப்படுத்தல் சேவை	15.0	10.8	54
இலங்கை அமெரிக்க மூலவுயிருரு அபிவிருத்தி நிகழ்ச்சி	தாவரக் கருமூலவளங்கள் நிலையம்	4.3	1.1	26
தேசிய விவசாயக் கொள்கையை நடைமுறைப்படுத்தல் (NARP)		50.0	34.5	69

அமைச்சுச் செலவுத் தலைப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்ட விஷேட கருத்திட்டங்கள்

விவசாய அமைச்சின் செலவுத் தலைப்பின் கீழ் நடைமுறைப்படுத்தபடும். 25 விஷேட கருத்திட்டங்களின் முன்னேற்றம் கண்காணிக்கப்பட்டு பௌதீக, நிதி முன்னேற்றங்கள் உள்ளடக்கிய மாதாந்த அறிக்கை அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. அமைச்சின் செலவுத் தலைப்பின் கீழ் உள்ள விஷேட கருத்திட்டங்களின் நிதி முன்னேற்றம் தொடர்பாக அட்டவணை 3.4.4 இல் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை 3.4.4 செலவுத் தலைப்பு

நடைமுறைப்படுத்தப்படும் விஷேட கருத்திட்டங்கள் முன்னேற்றம்:-

கருத்திட்டம்	நிறுவனம்	ஒதுக்கீடு ரூ.மில்.	செலவு ரூ.மில.	செலவு %
சேதனப்பசளை உற்பத்தியும் பயன்பாடும்	கருத்திட்ட பயிற்சி நிலையம்	41.07	32.07	78
	பூங்கனியியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம்	7.50	6.43	88
	பிராந்திய விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம்/ மாக்கந்துரை	8.0	3.77	47
	பிராந்திய விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம்/ பண்டாரவளை	0.90	0.58	64
	விவசாய ஆராய்ச்சி நிலையம்/சீதாஎலிய	1.15	1.0	87
	விவசாய ஆராய்ச்சி நிலையம்/ தெலிஜ்ஜவில	0.20	0.2	100
	பழப்பயிர்கள் அபிவிருத்தி நிலையம்	0.97	0.8	82
	நெல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம்	5.0	2.83	73
	சமூக பொருளாதார திட்டமிடல் நிலையம்	1.50	0.24	29
	விதை நடுகைப்பொருள் அபிவிருத்தி நிலையம்	6.0	3.07	51
	பழப்பயிர்கள் ஆராய்ச்சி அபிவிருத்திப் பிரிவு	2.0	1.13	64
	GLORDC	1.0	0.86	86
மரக்கறிச் செய்கை FTF	விரிவாக்கல் பயிற்சி நிலையம்	1.61	0.80	50
சோளச் செய்கை	விரிவாக்கல் பயிற்சிப் பிரிவு	0.36	0.27	75
பெரிய வெங்காய விதை உற்பத்தி	விரிவாக்கல் பயிற்சிப் பிரிவு	8.53	6.38	75
காணி அபிவிருத்தி விவசாயக் கல்லூரிகள்	விரிவாக்கல் பயிற்சிப் பிரிவு	0.50	0.45	89
ஊடக நிகழ்ச்சித்திட்டம்	விரிவாக்கல் பயிற்சிப் பிரிவு	10.0	9.15	92
நுண் நீர்ப்பாசனம்	விரிவாக்கல் பயிற்சிப் பிரிவு	9.0	7.66	85
போகங்களின் இடை பருவத்தில் தானியச் செய்கை	விரிவாக்கல் பயிற்சிப் பிரிவு	13.0	12.06	93

மாதிரிக் கிராமங்கள்	விரிவாக்கல் பயிற்சிப் பிரிவு	28.10	16.6	59
	பூங்கனியியல் பயிர் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம்	4.70	1.55	33
	நெல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம்	1.20	0.95	79
	வயற்பயிர் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம்	0.70	0.07	10
	விதை அத்தாட்சிப்படுத்தல் பயிர் பாதுகாப்பு நிலையம்	0.70	0.22	31
	இயற்கை வள முகாமைத்துவ நிலையம்	0.30	0.1	33
	சமூகப் பொருளாதார திட்டமிடல் நிலையம்	0.20	0.1	49
தேசிய விவசாயிகள் வாரம்	விரிவாக்கல் பயிற்சிப் பிரிவு	5.13	5.13	100
வேறு வயற்பயிர் செய்கைகள்	விரிவாக்கல் பயிற்சிப் பிரிவு	6.61	2.9	44
பருவமற்ற சின்ன வெங்காய/பெரிய வெங்காய உற்பத்தி	விரிவாக்கல் பயிற்சிப் பிரிவு	4.07	2.46	60
நெல் உற்பத்தித் திறனை மேம்படுத்தல்	விரிவாக்கல் பயிற்சிப் பிரிவு	1.0	0.88	88
வவுனியா விவசாயக் கல்லூரி	விரிவாக்கல் பயிற்சிப் பிரிவு	8.0	6.63	83
வவுனியா விவசாயக் கல்லூரி நீர் வழங்கல் வசதிகள்	விரிவாக்கல் பயிற்சிப் பிரிவு	1.5	1.44	96
வவுனியா விவசாயக் கல்லூரி – நூதன சாலை	விரிவாக்கல் பயிற்சிப் பிரிவு	0.82	0.82	100
காணி அபிவிருத்தி	வயற்பயிர் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம்	2.0	1.8	90
	அவரைத் தானியங்கள் எண்ணெய்ப் பயிர் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம்	3.0	2.8	99
விவசாய உற்பத்திகள் விற்பனை	உணவு ஆராய்ச்சி அலகு	4.0	3.0	75

விவசாய தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி	உணவு ஆராய்ச்சி அலகு	2.0	0.3	0.1
உள்நாட்டு உணவுகள் பாவனையை மேம்படுத்தல்	உணவு ஆராய்ச்சி அலகு	1.0	0.3	83
தொழிற்சாலைகளை அபிவிருத்தி செய்தல்	உணவு ஆராய்ச்சி அலகு	1.0	0.83	11
விதை நெல் உற்பத்தி	விவசாய ஆராய்ச்சி நிலையம்/ கிராந்துருகோட்டை	0.40	0.11	100
உயிர் பல்வகைத் தன்மைப் பூங்கா	பூங்கனியியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம்	6.62	0.4	86
மஹிந்த ராஜபக்ஷ விளையாட்டுத் திடல் தொகுதி	பூங்கனியியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம்	0.15	4.19	73
பாராளுமன்ற சூழல்	விரிவாக்கல் பயிற்சிப் பிரிவு	0.20	0.11	95
விதை உருளைக் கிழங்கு உற்பத்தி	பூங்கனியியற் பயிர் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம்	5.37	0.19	93
பழப்பயிர் நடுகைப் பொருள் உற்பத்தி	பூங்கனியியற் பயிர் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம்	10.0	4.6	69
ஆராய்ச்சிப் பண்ணை அபிவிருத்தி செய்தல் செய்தல்	பூங்கனியியற் பயிர் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம்	5.0	6.89	79
மண் பாதுகாப்புச் சட்டத்தை நடைமுறைப்படுத்தல்.	இயற்கைவள முகாமைத்துவ நிலையம்	2.70	1.53	40
மழை நீர் கருத்திட்டம்	இயற்கைவள முகாமைத்துவ நிலையம்	1.81	1.09	49
சமூக அடிப்படையிலான விதை உற்பத்திக் கிராமம்	விதை நடுகைப்பொருள் அபிவிருத்தி நிலையம்	20.0	0.89	24
பரந்தன்/முருங்கன் பண்ணை அபிவிருத்தி பாதுகாப்பு நிலையம்	SPMDC விதை நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி நிலையம்	100.0 231.8	48.5 209.26	49 90

பழக்கன்றுகளை உற்பத்தி செய்தல்	விவசாய ஆராய்ச்சி நிலையம்/ தெலிஜ்ஜவில	2.38	1.9	90
தரிசு நில பயிர்ச் செய்கை	அவரைத் தானிய எண்ணெய்ப் பயிர் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம்	4.0	2.04	62
	பழப்பயிர் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம்	7.38	6.83	93
	HDTI	1.0	0.46	46
	மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையம் பொலன்னறுவை	0.2	0.2	100
	சேவைக் காலப் பயிற்சி நிலையம் அங்குணுகொலபெலஸ்ஸ	1.6	0.04	2
நீர்ப்பாசனத்தை மேம்படுத்தல் விவசாயக் கட்டுரைகள்	பண்ணை இயந்திரமயமாக்கல் பயிற்சி நிலையம்	1.4	0.04	100
	விவசாயக் கல்லூரி/அங்குணகொல பெலஸ்ஸ	1.4	1.4	100
"தேசத்திற்கு மகுடம்" கொடுப்பணவுகள்	கட்புல செவிப்புல நிலையம்	1.4	1.4	100
காணி அபிவிருத்தி படஅத்த	விவசாயப் பூங்கா	0.38	0.38	100
"திவிநெகும"	கருத்திட்டப் பயிற்சிப் பிரிவு	6.88	2.57	37
மொத்தம்		**615.59**	**441.97**	**72**

2012 ஆம் ஆண்டுக்கான திட்டம்

- விவசாயத் திணைக்களத்தின் நிகழ்ச்சித் திட்டங்களுக்காக செயற்பாட்டுத் திட்டங் களைத் தயாரித்தல்
- மூலதன மற்றும் மீள்வரும் செயற்பாடு களிலும் விஷேட கருத்திட்டங்களினதும் முன்னேற்றத்தை வழிநடத்தல்
- விவசாயத் திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றல் அறிக்கையினைத் தயாரித்தல்
- மத்திய வங்கி அறிக்கை, வரவு செலவு த்திட்ட உரை என்பவற்றுக்கான தகவல் களை வழங்குதல்
- ரூபா 50 மில்லியனுக்கு மேற்பட்ட கருத்தி ட்டங்களின் முன்னேற்ற அறிக்கையினை தயாரித்தல்.

விவசாயத் திணைக்களத்தின் சாதனைகள்

பாராளுமன்ற வரவு செலவுத் திட்ட உரைக்குத் தேவையான விடயங்களை முன்னேற்ற அறிக்கையில் உள்ளடக்குவதற்காகவும் மத்திய வங்கி அறிக்கையில் உள்ளடக்குவதற்காகவும் 2011 ஆம் ஆண்டுக்குரிய செயலாற்றல் அறிக்கை அமைச்சிற்கும் மத்திய வங்கிக்கும் வழங்கப்பட்டது.

வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2010 ஆம் ஆண்டுக்கான விவசாயத் திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றல் அறிக்கையினை தயாரித்து அதனை பாராளுமன்றம் உரிய அமைச்சுக்கள், பல்கலைக்கழங்கள், நூலகங்கள், அத்துடன் உரிய ஏனைய நிறுவனங்களுக்கும் வழங்கப்பட்டது.

ஏனைய அறிக்கைகள்

"மஹிந்த சிந்தனையின் கீழ் மேற்கொள்ளப்படும் வேலைகளினதும் மொத்த மதிப்பீட்டு செலவாக ரூபா 50 மில்லியனுக்கு மேற்பட்ட கருத்திட்ட ங்களின் முன்னேற்ற அறிக்கை தயாரிக்கப்பட்டு விவசாய அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

உத்தியோகத்தர் பட்டியல்

பதவியணி	எண்ணிக்கை
பிரதிப்பணிப்பாளர்	01
மொழி பெயர்ப்பாளர்	02
நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்	02
விவசாயப் போதனாசிரியர்	01
பொது முகாமைத்துவ உதவியாளர் சேவை	02
சாரதி	03
K.K.S	01
தொழிலாளி	03
காவலாளி	01
மொத்தம்	**17**

3.5 இயற்கைவள முகாமைத்துவ நிலையம் (NRMC) பேராதனை

இயற்கை வள முகாமைத்துவ நிலையமானது நீர் நில வளங்களை விஞ்ஞான ரீதியாகவும் உயர் பயனைப் பெற்றுக் கொள்வதன் மூலமும் தேசிய உற்பத்தியின் அளவை அதிகரித்து பேண்தகு நிலையில் சூழலுக்கு மிகக் குறைந்த ளவு பாதிப்பை ஏற்படுத்தும் நோக்கத்தையும் அடிப்படையாகக் கொண்டது. இந்நிலையத்தின் செயற்பாடுகளாக பின்வருவனவற்றைக் கூறலாம். அதாவது நீர், நிலவளங்களின் பாதுகாப்பு தொடர்பான ஆராய்ச்சியில் ஈடுபடல், நீர்வள முகாமைத்துவம், காணிப் பொருத்தப்பாடு தொடர் பான மதிப்பீடு, பயிர் முகாமைத்துவம், விவசா யக் காலநிலை மற்றும் வானிலை தொடர்பான மாற்றங்களை அறிக்கைப்படுத்தல் நிலத்தின் உற்பத்தித் திறனை அதிகரித்தல், நீர், நில தரத்தினை அதிகரித்தல், களத்தின் நீர்ப்பாசன முகாமைத்துவம் போன்றனவாகும். ஏனைய கட மைகளாவன நாட்டின் விவசாய வானிலை வலையமைப்பை பேணுதலும் அவதானித்தலும் மண்பாதுகாப்புச் சட்டங்களை அமுல்படுத்தல், தொழில்நுட்பப் பரவலாக்கம், பாடரீதியான தொழில்நுட்ப அறிவை, விவசாயிகளுக்கு வழங்குதல். பல்வேறு அபிவிருத்தி செயற்திட்ட ங்களில் சூழல் பாதிப்பு தொடர்பான அணுகு முறையை மேற்கொள்ளல் என்பனவாகும்.

பாதீடு

அட்டவணை 3.5.1: வருடாந்த பாதீடு – 2011 (ரூபா)

செலவு விடயம்	ஒதுக்கீடு	செலவு	செலவு %
மூலதனம்	3,965,000	1,904,604	48
மீண்டுவரும் செலவு	2,545,000	2,112,304	83
செயற்திட்டம்			
மழைநீர் சேகரிப்பு செயற்திட்டம்	1,810,000	1,039,141	57
மண்காப்பு சட்டங்களை அமுல்படுத்தல்	2,700,000	1,871,414	69
NARP	3,400,000	3,205,384	94
மாதிரிக் கிராமம்	300,000	128,075	43
வரி புவுதுவ	100,000	35,264	36
கலு கங்கை (மகாவலி H வலயம்)	77,297	77,298	46
ஹொரனை பழத்தோட்ட நிர்மானம்	121,000	146,620	86
மொத்தம்	**15,071,273**	**10,520,603**	**70**

முன்னேற்றம்

ஆராய்ச்சி

பயிர்ச்செய்கை போக இயல்புகளை இனங்காண் பதன் மூலம் நிச்சயமற்ற காலநிலை மாற்ற ங்களுக்கு இசைவாக்கமடையக் கூடிய நெற்செய் கையை மேற்கொள்ளல்.

விவசாயமானது கடுமையான நிச்சயமற்ற கால நிலை மாற்றங்களைக் கொண்டது. அத்தோடு விவசாயிகள் காலநிலையின் நிச்சயமற்ற தன்மையோடு இணைந்து செயற்படும் இசைவாக்கத்தை கொண்டவர்களாக காணப்படல் வேண்டும். எனவே பிரதானமாக நெற்செய்கை நடைபெறும் இடங்களான உலர், இடை வலயப் பிரதேசத்தின் மழைவீழ்ச்சியின் பருவகால இயல் புகளை அடையாளங்காண்பதற்கு கற்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டது. பருவகால மழை வீழ்ச்சி யின் பரம்பல் மற்றும் பெரும்போக, சூழலியல் சிறுபோக கால அளவு என்பன வாராந்த மழைவீழ்ச்சித் தகல்கள் மூலம் தீர்மானிக்க ப்பட்டது. அத்தோடு இந்த பருவகாலத்தில் காண ப்பட்ட உலர் கிழமைகளும் இனங்காணப்பட்டது.

பருவகால இயல்புகளை கருத்திற்கொண்டு ஒவ்வொரு உலர், இடை, விவசாய சூழலியல் வலையங்களிலும் பயிரிடப்படுகின்ற குறுகிய கால நெற்பயிர்களுக்கான பயிர் நாட்காட்டி தயார் செய்யப்பட்டது.

பெரும்போக, சிறுபோக மழைவீழ்ச்சியில் உயர்ந்தளவிலான வேறுபாடுகள் காணப்பட்டதாக கற்கை அறிக்கை காட்டுகிறது. சிறுபோக மழை வீழ்ச்சியானது உலர் வலயத்தில் உயர்ந்தள விலான வேறுபாடுகளைக் கொண்டு காணப் பட்டது. அத்துடன் மழைக் கால அளவு பருவ மழை தொடங்கியதிலிருந்து 4 கிழமைகளை விட அதிகமாகக் காணப்படவில்லை என எதிர்வு கூறப்பட்டது. அனேகமாக உலர் வலயத்தில் காணப்படுகின்ற விவசாயச் சூழலியல் வலைய ங்களிலும், இடை வலையத்தில் உள்ள சில விவசாயச் சூழலியல் வலையங்களிலும் இடை வலையத்தில் உள்ள சில விவசாயச் சூழலியல் வலையங்களிலும் சிறுபோக மழைவீழ்ச்சியில் குறிப்பிட்ட அளவு வேறுபாடுகள் காணப்பட வில்லை.

அனைத்து வயல் நிலங்களிலும் பேண்தகு பயிர்ச்செய்கைக்குத் தேவையான அளவு நீர் பெரும் போகத்தில் காணப்பட்டது. பயிர்ச் செய்கை நாட்காட்டி தயார்படுத்தப்பட்டது. இது விவசாய நடவடிக்கைகளைக் காட்டும் ஒரு கருவியாகவும் காணப்படுகின்றது. அதாவது இதன் மூலம் ஆரம்ப நிலப்பண்படுத்தல் முதல் இறுதி அறுவடை, அடுத்த பயிர்ச்செய்கை வட்டம் முதலான தகவல்கள் அடங்கியிருக்கும். சில தகவல்களைக் கொண்டு நீர்ப்பாசன முகாமையாளர்கள், நீர்தேங்கு குளங்களில் இருந்து நீர்விநியோகம், நீர்ப்பாசனப் பிரச்சினை களை பெரிய அளவிலான பிழைகள் இல்லாமல் தீர்த்துக் கொள்ள முடியும். அத்தோடு விவசாயச் சூழலியல் வலயத்துக்குப் பொருத்தமான தரமான தனித்துவமான நெல்வர்க்க விதை களைக் குறிப்பிட்ட நடுகைக் காலத்தில் பெற்றுக் கொள்ள உதவும். அது மட்டுமல்லாது மழையை நம்பிய மேட்டு நில விவசாயச் செய்கை தொடர்பான தீர்மானங்களை எடுப்பதற்கு உத வும் கருவியாகவும் காணப்படுகின்றது.

உலர் காலங்களில் விவசாயச் சமூகத்திற்கு குறைந்தளவு நீர்த்தேவையும் பேண்தகு நெற் செய்கையை மேற்கொள்வதற்கான விழிப்புணர் வையும் புதிய முறைகளையும் பயிர்ச்செய்கை போகத்தின் போது ஏற்படும் தேவைகளை நிறைவு செய்து கொள்ளவும் உதவுகிறது. எப்படியாக இருப்பினும் குறிப்பிட்ட கால இடை வெளியில் பரிசீலனை செய்து பயிர்ச்செய்கை நாட்காட்டியை மீளப்புதுப்பித்தல் சிபாரிசு செய்ய ப்படுகின்றது.

DL 1a விவசாய சூழலியல் வலையத்தில் இடைப்போகச் செய்கைக்கு பொருத்தமான பிரதேசத்தை இனங்காணல்

அதிகரித்து வரும் உணவுக்கான கேள்வியை நிறைவு செய்ய நிலங்களின் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கு உயர் விளைச்சலைத் தரும்

வர்க்கங்களைப் பயிரிடுவதன் மூலமும் சிறந்த பயிராக்கவியல் நடவடிக்கைகளை மேற்கொள்வ தன் மூலமும் பெற்றுக் கொள்ள முடியும். இருப்பினும் இவ்அணுகுமுறைகளை முன்ன தாகவே நாட்டின் பல பிரதேசங்களில் செய்து வந்துள்ளனர். எனவே நில உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கு வெவ்வேறு அணுகுமுறைகளை மேற்கொள்ள வேண்டும்.

விவசாய சூழலியல் வரைபடமானது நாட்டின் சில பிரதேசங்களில் நல்ல மண் ஈரலிப்புடன் குறிப் பிட்ட மழைவீழ்ச்சியையும் இரண்டு பயிர்ச் செய்கை போகங்களுக்கு இடையில் பெற்றுக் கொள்கின்றதோடு இடைப் பயிர்ச்செய்கைக்கு பொருத்தமான இடமாகக் காணப்படுகின்றது. DL1a விவசாயச் சூழலியல் வலயத்தில் மீதமாக வுள்ள மண் ஈரலிப்பு, மழைவீழ்ச்சி ஆகியவற்றை குறுகிய கால வாழ்க்கை வட்டம் உடைய பயிர் களை இருபோகச் செய்கைகளுக்குமிடையே பயிர் முன்னேற்றம் DL1a இல் அருகில் உள்ள 15 இடங்களிலும். வாராந்த மழைவீழ்ச்சி தொடர்பான தகவல்கள் பகுத்தாராயப்பட்டு 6ம் கிழமை மற்றும் சிறுபோக, பெரும்போகத்திற்கும் பிந்தியபோக இடைக்காலமாக 32ம் கிழமை யானது பெரும்போக, சிறுபோகத்தில் பயிரற்ற காலமாக காணப்பட்டது.

50% நிகழ்தகவுள்ள வாராந்த மொத்த மழை வீழ்ச்சியானது கணக்கிடப்பட்டு DL1a விவசாய சூழல் வலயத்தில் போக இடைக்காலத்தை அறிவதற்கும் போக இடைப்போகத்திற்கு பொரு த்தமான பிரதேசத்தை அறிவதற்கும் பயன் படுத்தப்படுகின்றது. போக இடைப்போகத்திற்குரிய காலத்தை Arc.uiew 3.29 எனும் மென்பொரு ளைப் பயன்படுத்தி அறியலாம்.

வெவ்வேறு ஈரலிப்பு நிலைமையில் இலங்கையின் இடை நாட்டின் ஈரவலயத்தில் இரண்டு வாழை வர்க்கங்களின் வளர்ச்சியும் விளைச்சலும் தொடர்பான மதிப்பீடு

வெவ்வேறு மழைவீழ்ச்சிப் பரம்பலும் மண் கிடைப்படத்தில் வெவ்வேறு ஈரலிப்பு சேமிப்பும் வெவ்வேறு வாழை வர்க்கங்களின் வளர்ச்சி விளைச்சல் என்பவற்றிற்குக் காரணமாக அமைகின்றது.

WM 2b விவசாயச் சூழல் வலையத்தில் கண்ணொறுவ பிரதேசத்தில் வண்டல் மண்ணில் வெவ்வேறு ஈரலிப்பு நிலைகளில் இரு வாழை வர்க்கங்களின் வளர்ச்சி, விளைச்சல் தொடர்பாக மதிப்பிடுவதற்கு களப் பரிசோதனை மேற்கொள் ளப்பட்டது. இவ்வாழை வர்க்கங்கள் அவதானிக்க ப்பட்டு தகவல்கள் திரட்டப்பட்டது. இதன்போது தாவரத்தின் வளர்ச்சி, தோற்றம், பழங்களின் வெளித்தோற்றம், அறுவடைக் காலம், வாழைச் சீப்பின் நிறை, பழத்தின் நீளம், சுற்றளவு அத்து டன் நீர்ப்பாசனத்தின் விளைவு, நீர் வடிகால் தேவை என்பவற்றின் பாதிப்பை மதிப்பிடப்பட்டு வேர்வலயம் நீர்ச்சமநிலை என்பன மதிப்பிடப் பட்டது. தகவல்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு அறிக்கை தயார்படுத்தப்படுகின்றது.

மண் ஈரப்பதன் சேமிப்பு மற்றும் இதன் பரம்பல் என்பவற்றின் மீது மழைநீர் சேகரிப்பு முறைமையின் பாதிப்பு தொடர்பான கற்கை

உலர் வலயத்தில் மழைநீர் சேகரிப்பு நிலமைகளினால் மண் ஈரப்பதன் சேகரிப்பினை அதிகரித்தல் தரைக்கீழ் நீர் மீள்நிரம்பல் என்ப வற்றின் மீது மழைநீர் சேகரிப்பு முறைகளின் பாதிப்பு பற்றி ஆராயப்பட்டது. இவ் ஆராய்ச்சி யானது 2010 பலுகஸ்வெவ எனும் இடத்தில் குறுவில செயலகப் பிரிவில் தொடரப்பட்டது. இது DL1b விவசாயச் சூழலியல் வலைய நிலைக ளைக் கொண்டதும் பிரதான மண் வகையாக செங்கபில மண்ணையும் கொண்ட பிரதேசமாகும்.

2011ம் ஆண்டு சிறுபோகத்தில் (yala) பெறப்பட்ட தரவுகளில் இருந்து மழைநீர் சேகரிப்பு முறைகள் மண் ஈரப்பதன் சேமிப்பில் முதல் 75cm ஆழத்திற்கு கடுமையான மழை நிபந்தனைகளின் போது முக்கியத்துவம் அற்றதாகக் காணப்பட்டது. ஈரப்பதனின் வேறுபட்ட பரம்பல், மண் பக்கப் பார்வை ஆழத்தில் முக்கியத்துவம் அற்றதாகக் காணப்பட்டது.

சிறிய அளவிலான மழையின் போது (RF > 10mm) ஈரப்பதன் சேமிப்பு, மற்றும் அதன் பரம்பலானது முதல் 25 cm மண் ஆழத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட வெவ்வேறு மழைநீர் சேகரிப்பு முறைமைகளினால் பாதிப்படைய வில்லை. எனினும் எதுவித முறைமைகளும் பின்பற்றப்படாத நிலங்களுடன் ஒப்பிடுகையில், 15-50mm மழையின் போது 85% மேற்பட்ட சீரான மண் ஈரப்பதன் பரம்பலும், மண் ஈரப்பதன் சேமிப் பும் சமவுயரக் கோடுகள் மற்றும் படியமைப்பு டைய மண்ணில் அதிகமாகக் காணப்பட்டது.

பயிர் உற்பத்தித் திறனில் மழைநீர் சேகரிப்பு செயற்பாடுகளின் பாதிப்பு பற்றிய கற்கை

குறைந்தளவு மழைவீழ்ச்சி கிடைக்கும் பகுதிக ளில் பயிர் விளைச்சலில் மழைநீர் சேகரிப்பு செயற்பாடுகளின் தாக்கத்தினை அளவு ரீதியாக கண்டறியவென இக்கற்கையானது வடிவமைத்து முன்னெடுக்கப்பட்டது. கடந்த 2010-2011 பெரும் போகத்தில் சேகரிக்கப்பட்ட தரவுகள் அப்போக த்தில் பெய்த கடும் மழை காரணமாக பாதிக்கப் பட்டது.

வவுனியா மாவட்டத்தில் பயிர்ச்செய்கை யில் ஆழம் குறைந்த நிலக்கீழ் நீர் தொடர்பான மதிப்பீடு

வவுனியா மாவட்டத்தில் பயிர் உற்பத்தியில் ஆழம் குறைந்த நிலக்கீழ் நீரின் அளவு, பண்புரீதியான பாதிப்பினை மதிப்பிடவென 2010-2011 பெரும்போகத்தில் இத்தரவுச் சேகரிப்பானது மேற்கொள்ளப்பட்டது. நீர் மாதிரியானது ஒரு பிரதேச செயலகப் பிரிவில் இருந்து சேகரிக்க ப்பட்டதுடன் பகுப்பாய்வானது முன்னேற்றத்தில் உள்ளது. இந்நிகழ்ச்சியானது ஏனைய பிரதேச செயலகப் பிரிவுகளிலும் 2012 ல்லும் தொடரப் படும்.

வீட்டுத்தோட்டத்தில் மரக்கறிச் செய்கை க்கான பயிர்ச்செய்கைக் கட்டமைப்புக்க ளின் விருத்தி

இடம், ஒளி, ஈரப்பதன் சிறிய விலங்குகளின் பாதிப்பு காரணமாக வீட்டுத்தோட்டத்தில் மரக்க றிச் செய்கையானது மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. ஒரு மரக்கறி வளர்ப்புக்குரிய கட்டமைப்பானது விருத்தி செய்து பரீட்சிக்கப்பட்டது. இக்கட்டமை ப்பானது 32 சாடிகளை 3 மட்டங்களில் தாங்கக் கூடியது. கீழ், மத்தி, மேல் ஒட்டுகளில் கீரைப்பயிர்கள் பயிரிடப்பட்டு அவற்றின் செயலாற்றுகை மதிப்பிடப்பட்டது. ஒரு சாடிக்கு 82g மற்றும் ஒரு தட்டுக்கு 2.6kg எனும் அளவில் மரக்கறி விளைச்சல் பெறப்பட்டது. இலையின் விளைச்சலானது மேல் தட்டில் உயர்வாகவும் இடைத்தட்டில் இடைநிலையில் கீழ் தட்டில் குறைவாகக் காணப்பட்டது. நிழலின் விளைவே இதற்கான காரணமாகும்.

உலர் வலயத்தில் சிறுகுளத் தொகுதிக ளில் மண் சோதனைக்காக யாய அணுகு முறையைப் பாவித்தல்

முக்கியமான மண் காரணிகளைச் சோதித்தறிவ தற்கும் பயிர்ச்செய்கைக்கான சிபாரிசுகளை மேற்கொள்வதற்கும் யாய முறை தொடரப் பட்டது. இம்முறையானது மேலும் விருத்தி செய்யப்பட்டது. நெற் செய்கைக் காணிகளுக்கு மரதன்கல்ல கிராமத்தில் குறுலுவெவ பகுதியில் செயற்படுத்தப்பட்டது. 0-20cm ஆழத்தில் 90m இடைவெளிகளில் மொத்தமாக 30 மாதிரிகள் சேகரிக்கப்பட்டன. இம்மாதிரிகளானது pH, மின்கடத்துத் திறன், கிடைக்கக் கூடிய P, பரிமாற்றக் கூடிய K, Mg, Ca, கிடைக்கக் கூடிய Zn, Ca, S என்பவற்றிற்காகச் சோதிக்கப்பட்டன. இவை ஒரு வரைபடமாக தயாரிக்கப்பட்டன. இவ்வரைபடத்தில் இருந்து கிராமத்தின் யாயத்

தொகுதிகளுக்கு இரு வகையான பசளைச் சிபாரிசுகளை உயர் மற்றும் தாழ் பகுதிகளுக்கு விருத்தி செய்யும் சாத்தியப்பாட்டைக் காட்டியது. வயலின் உயர் நிலப்பகுதிகள் zn க்கான மட்டுப்படுத்தலையும் தாழ் பகுதிகளில் P க்கான மட்டுப்படுத்தலையும் வெளிக்காட்டின. மேலதிகமாக தாழ்நிலப்பகுதிகள் Ca, Mg உயர்ந்தளவில் காட்டியதுடன் மண் சவர்த்தன்மையையும் காட்டியது.

மண்சரிவு காரணமாக வெளிக்காட்டப்பட்ட மேற்பரப்பின் பாதுகாப்பு முறை ஒன்றின் விருத்தி

மண்சரிவு காரணமாக வெளிக்காட்டப்பட்ட மேற்பரப்பினை பாதுகாப்பது தொடர்பான பொருத்தமானதும் குறைந்த செலவினதுமான முறை ஒன்று தற்போது இலங்கையில் இல்லை. ஒரு செலவு குறைந்த முறையொன்று விருத்தி செய்யப்பட்டு 2010ம் ஆண்டு நிலச்சரிவு நடைபெற்ற பேராதனை நகர்ப்பகுதியில் பரீட்சிக்கப்பட்டது. இச்செலவு குறைந்த முயானது பின்வருவனவற்றை உள்ளடக்குகிறது. 15cm ஆழத்திற்கு வளர்ப்பூடகத்தினை வெட்டு முகப்பரப்பில் இட்டு காவலிடல். வளர்ப்பூடகத்தின் மேல் வைக்கோல் மூடுபடையில் கம்பி வலையினைப் பயன்படுத்தி வளர்ப்பூடகத்தினையும் மூடுபடையினையும் மேற்பரப்பின் மீது பதித்தல். படர்ந்து செல்லக் கூடிய தாவரங்களை வளர்ப்பூடகத்தின் மீது வளர்த்தல். மூடு தாவரத்தினை பசளை, நீர் இட்டு முகாமைத்துவம் செய்தல். அறிமுகப்படுத்தப்பட்ட இம்முறையானது வெற்றிகரமானதாகக் காணப்பட்டது. இப்பரீட்சிப்பு 2011ம் ஆண்டிலும் பேணப்பட்டது.

நீர்ப்பாசன மற்றும் களைக்கட்டுப்பாடு என்பனவே இந்நில மேற்பரப்பினை பாதுகாப்பதற்கும், பேணுவதற்கும் மேற்கொள்ள வேண்டிய பிரதான நடவடிக்கைகளாகும்.

அபிவிருத்தி

வட்டப்பொல, பானபொக்கே மற்றும் யக்கல கிராமங்களில் மாதிரிக்கிராம அபிவிருத்தித் திட்டம்

வட்டப்பொல, பானபொக்கே மற்றும் யக்கல கிராமங்களில் மாதிரிக் கிராம அபிவிருத்தித் திட்டம் 2010ல் ஆரம்பிக்கப்பட்டு 2011 இலும் தொடரப்பட்டது. வட்டப்பொல, பானபொக்க பிரதேசத்தில் ரம்புட்டான், பலா மரக்கன்றுகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. மண்பாது காப்பு, காளான் உற்பத்தி, வீட்டுத்தோட்டம் தொடர்பான பயிற்சி வழங்கப்பட்டது. கூட்டெருகளத்தில் செய்து காட்டப்பட்டது. நீர் வடிப்பு மற்றும் நீர் வடிந்து செல்லும் குழிகளின் உருவாக்கம் அத்துடன் தரமான விதை நெல்லும் வழங்கப்பட்டது.

மரதங்களப் பிரதேசத்தில் விவசாயிகள் வெற்றிலை, மிளகுச் செய்கை, மிளகாயில் பீடை முகாமைத்துவம், ஏற்றுமதி விவசாயப் பயிர்ச் செய்கை, உரச் சிபாரிசுகளுக்காக மண் பரிசோதனை, மண் பாதுகாப்பு, கூட்டெருத் தயாரிப்பு மற்றும் உத்தரவாதப்படுத்தப்பட்ட விதை உற்பத்தி என்பவற்றில் பயிற்சி அளிக்கப்பட்டது. அத்துடன் தரமான விதை நெல்லும் வழங்கப்பட்டது.

தொழில்நுட்பப் பரம்பல்

மண் மற்றும் நீர்ப்பாதுகாப்பு அவற்றுடன் தொடர்புடைய பயிற்சிகள்

மண் பாதுகாப்பு மற்றும் நீர்நிலை முகாமைத்துவம் ஆகிய பயிற்சிகள் கேகாலை மாவட்ட விவசாயப் போதனாசிரியர்களுக்கு வேகொல்ல பண்ணையில் வழங்கப்பட்டது. அத்துடன் இலங்கை புகையிரதக் கம்பனிகளுக்கு மாவில் மடயில் பயிற்சி வழங்கப்பட்டது. இவை இரண்டும் தலா 5 நாட்களைக் கொண்ட பயிற்சியாகக் காணப்பட்டது.

- கண்ணொறுவ மற்றும் கொத்மலையைச் சேர்ந்த தனிப்பட்ட விவசாயிகளுக்கு மண்பாதுகாப்பு, நீர்நிலை முகாமைத்துவமும்

என்ற மூன்றுநாள் என்ற பயிற்சிகள் இரண்டு வழங்கப்பட்டது.

- இலங்கை ஹதபிம தொழில்நுட்ப அதிகார சபை அலுவலர்களுக்கு 2 நாள் பயிற்சி நிகழ்ச்சி நடாத்தப்பட்டது.
- கம்பொல, நுகேவெல, முருத்தலாவ, மீபிலி மான, இம்புள்கொடயகம, உக்குவெல்ல மற்றும் கண்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த கள உத்தியோகத்தர்கள், விவசாயிகள், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு ஒரு நாள் பயிற்சி நிகழ்ச்சிகள் 28 நடாத்தப் பட்டது.
- UNDP திட்டத்தில் மகவ வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு பயிற்சி நிகழ்ச்சி நடாத்தப்பட்டது.
- கண்ணொறுவை சேவைக்கால பயிற்சி நிலையத்தில் 100 ஆசிரியர்களுக்கு இலங் கையின் மண் வகைகள் தொடர்பான பயிற்சி வழங்கப்பட்டது.
- IFAD திட்டத்தில் தொலுவ பிரதேச செயலகத்தில் உள்ள கிராமங்களில் பயிற்சி நிகழ்ச்சி நடாத்தப்பட்டது. (5 நிகழ்ச்சிகள், 65 அலுவலர்கள்). ரஜரட்ட பல்கலைக் கழகத்தின் விவசாய பீட மாணவர்களுக்கு மழைநீர் சேகரிப்பு தொடர்பான பயிற்சி நிகழ்ச்சி நடாத்தப்பட்டது (27 மாணவர்க ளுக்கு). வீட்டுத்தோட்டங்களில் மண் ஈரலிப்பை பாதுகாத்தல் தொடர்பான 2 பயிற்சிகள் விவசாயத் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டது. (65 அலுவலர்கள்).

பயிற்சி பட்டறைகள்

- "நகர சமூகத்திற்கு நீர்" எனும் தொனிப் பொருளில் உலக நீர் தினத்திற்கான பயிற்சி பட்டறையானது 23 பங்குனி 2011 இல் கண்ணொறுவ சேவைக்கால பயிற்சி நிறுவன த்தில் வெற்றிகரமாக நடாத்தப்பட்டது. இந்நிகழ் வில் 128 பேர் பங்கேற்றனர்.
- உலக சுற்றாடல் தினம் 6 ஆணி 2011 இல் உளவட்டுன கோவில் புத்தளவில் 78 விவசா யிகள் அரச உத்தியோகத்தர்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்பு டன் நடைபெற்றது.
- 34 விவசாயத் திணைக்கள அலுவலர்களுக்க மழைநீரால் போசிக்கப்படும் மேட்டுநில விவசாயத்தினை மேம்படுத்துவதற்கு நிலக்க ட்டமைப்புக்களை ஏற்படுத்துதல் தொடர்பில் 2 பயிற்சிப் பட்டறைகள் நடாத்தப்பட்டது.
- மண் பாதுகாப்புச் சட்டம் தொடர்பான பயிற்சிப் பட்டறை ஒன்று கண்ணொறுவ சேவைக்கால பயிற்சி நிலையத்தில் பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த 56 அலுவல ர்களின் பங்களிப்புடன் நடைபெற்றது.
- நீர்சேகரிப்பும் கிணற்று நீர்ப்பாசனமும் எனும் தலைப்பில் வடமேல் மாகாண விவசாயத் திணைக்கள விரிவாக்கல் உத்தியோகத்த ர்கள், விவசாயிகளுக்கு (40) குருநாக லையில் பயிற்சிப் பட்டறை ஒன்று நிகழ்த்தப்பட்டது.

மண் மற்றும் நீர்ப்பாதுகாப்பு தொடர்பான செய்து காட்டல்கள்

கண்ணொறுவையில் மண் பாதுகாப்பு தொடர் பான செய்துகாட்டலைப் பேணல், கண்ணொ றுவை விவசாயத் தொழில்நுட்பப் பூங்காவில் உள்ள மண் பாதுகாப்புச் செய்து காட்டல் பகுதியில் களைகட்டல், பாதுகாப்பு கட்டமை ப்புக்களில் மண் அகற்றல், உயிரினவியல் கட்டமைப்புக்களை மீள் நிரப்புதல் பயிராக்க வியல் கட்டமைப்புக்களை பேணல் என்பன 2011 இல் நிறைவு செய்யப்பட்டது.

மண் பாதுகாப்பு செய்து காட்டல் (வேறு இடங்களில்)

அநுராதபுர மாவட்டத்தில் யக்கல கிராமத்திலும் கண்டி மாவட்டத்தில் வட்டப்பொல, பானபொக்கே கிராமங்களிலும் மண் பாதுகாப்பு தொடர்பான செய்து காட்டல் தொடர்ந்தும் பேணப்பட்டது.

வானொலி நிகழ்ச்சிகள்

